ஓம்.

ஸ்ரீசுவாமி தயானந்தசரஸ்வதியாரின்

சத்தியார்த்தப் பிரகாசம்

(உண்மைநெறி விளக்கம்)

17899

முதற்பாகம்.

மொழிபெயர்ப்பு ஆசிரியர்

எம். ஆர். ஜம்புநாத ஐயர்

ஸ்ரீதயானந்தரின் ஜீவியசரித்திர சுருக்கம்

அன்னார் கொள்கை என்னும் நூலை ஆக்கியோன்.

சுதேசமித்திரன் ஆசிரியரும்

இந்திய சட்டசபை அங்கத்தினருமான

ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமிஐயங்கார் அவர்களின்

முன்னுரை.

ஆர். நடேச ஐயர், பி. ஏ.

ஆரியபுத்தகாலயம்

14, பள்ளியப்பன் தெருவு, சௌகார்ப்பேட்டை

சென்னை.

1925.

உரிமைபதிவு செய்தது.]

[இருபாகங்களின் விலை ரூ. 4

எனது அன்னையின்
பாதகமலங்களில் அளிக்கிறேன்.

PRINTED AT THE 'VAVILLA' PRESS, MADRAS.

அட்டவணை.

		பக்கங்கள்.
1.	சுவாமி விரஜானந்தரின் சித்திரப்படம்.	
2.	சுவாமி தயானந்த சரஸ்வதியாரின் சித்திரப்படம்.	
3.	சுவாமி சிரத்தானந்தரின் பொதுவுரை.	v
4.	ஸ்ரீ. ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின் முன்னுரை.	vii—viii
5.	மொழிபெயர்ப்பாசிரியரின் நூன்முகம்.	ix—x
6.	நூலாசிரியரின் முகவுரை	xi—xvi
7.	முதல் அத்தியாயம்	1—29
8.	இரண்டாவது அத்தியாயம்	30—41
9.	மூன்றாவது அத்தியாயம்.	42—87
10.	நான்காவது அத்தியாயம்.	88—138
11.	ஐந்தாவது அத்தியாயம்.	139—154
12.	ஆறாவது அத்தியாயம்.	1—43
13.	ஏழாவது அத்தியாயம்	44—78
14.	எட்டாவது அத்தியாயம்.	79—107
15.	ஒன்பதாவது அத்தியாயம்.	108—135
16.	பத்தாவது அத்தியாயம்.	136—152

FOREWORD.

BY

Sri Swami Shraddhanand Ji Maharaj

The name of Rishi Dayananda, the great all-round reformer and the moulder of the present activities in India, is a household word not only in the land of his birth, but in the whole of the civilised world. His teachings are contained in the SATYARTH PRAKASH-an encyclopaedic work of religious information and definition of true Dharma. That book deserves to be translated in all languages of India in the first instance and of the world afterwards.

Mr M. R. JAMBUNATHAN has rendered great public service in giving a Tamil translation of the same to the central portion of the Madras Presidency. It is a pity that Rishi Dayananda had no time to tour throughout Madras on his religious mission as he was enabled to do in the Punjab, the United Provinces, Bengal, Bombay and Poona. It is now the duty of his disciples to promulgate his teachings in places where the darkness of blind faith still rules supreme.

I hope the Tamil speaking portions of Madras will appreciate the Translator's services and will enable him to continue his well begun work.

DELHI,
Feb. 1925.

SHRADDHANAND SANYASI

INTRODUCTION

BY

M. R. Ry. A. RANGASWAMI IYENGAR Avl.,

B. A., B. L.

Editor "SWADESAMITRAN"

(Tamil Daily & English Weekly)

AND

Member, Legislative Assembly, Delhi.

In undertaking the introduction of this Magnum Opus of Swami Dayanand Saraswati to the Tamil World I am performing a function which is superfluous in many senses, but is perhaps necessary in one sense. That is, that the wholly rationalistic view of the Vedic religion which Swami Dayananda Saraswati inculcated incessantly during his life has formed the basis of an exposition of Hindu religion that would be a useful solvent at the present time in the variety of doctrinal and communal differences that abound in South India. The **Satyarth Prakash** will present to the Aryans and Dravidians of the South a view of the ancient religion of this land, free on the one hand from the animistic practices of ancient customs that have formed accretions of the Hindu faith in the South, and on the other hand free from the elaborate ritual and ceremonial combined with doctrinal and caste prejudice, that have marred the philosophic and spiritual beauty of the Aryan faith, and that stand in the way of the full natural development of the national and social structure of the land. The way by which Swami Dayananda, the great Vedic scholar and the renowned austere sanyasin, was able to cut through the mass of bigoted faiths and traditions and the array of elaborate sophisms and dreary discussions, is indicated by him in the simple words of his Introduction as follows :-

"I have expounded truth as truth and error as error. The exposition of error in place of truth and of truth in place of error does not constitute the unfolding of truth."

With this beacon light for his guide, **Swami Dayananda** has examined in the **Satyarth Prakash**, the fundamental principles of Vedic or Aryan religion and of the other great reilgions; and the impartiality and honesty with which he has performed his task is indicated by him in the same Introduction in the following words;-

"We have incorporated in this book whatever is true in all religions and in harmony with their highest teachings, but have refuted whatever is false in them. We have exposed to the view of men-learned or other wise-all evil practices whether resorted to secretly or openly. This will help our readers to discuss religious questions in a spirit of love and embrace the one true religion. Though we were born in Aryavarta (India) and still live in it, yet just as we do not defend the evil doctrines and practices of the religions prevailing in our own country, on the other hand expose them properly, in like manner we deal with alien religions. We treat the foreigners in the same way as we treat our own countrymen in recognition of common humanity. It behoves all the rest to act like wise. Had we taken the side of one of the prevailing religions of India we would have but followed (blindly) the example of sectarians who extol defend and preach their own religion and decry, refute and check the progress of other creeds. In our opinion however such things are beneath the dignity of man.

Should a man act like an animal which when strong oppresses the weak and even puts them to death, he is more an animal than a man. He alone can fitly be called a man who being strong protects the weak. He that injures others in order to gain his own selfish ends can only be called a big animal."

It is unncessary to say that the Swami beleived in the religion of the Vedas, but that has not meant in his case the denunciation of other faiths. While he has subjected the Vedic religion as developed in the Puranas and Tantras and other like books to a rational and destructive criticism, which bigots might deem merciless if not profane, he has not hesitated to accept truths found imbedded in the Buddhist and Jain religions as well as in the Christian and Mohamedan religions merely because he was not a beleiver in any of these religions taken as a whole. On such a rational basis Swami Dayananda Saraswati examines and lays down the truth of the Aryan faith as he understood it not only in

relation to man's spiritual needs but also to his material and moral needs in the world into which he is brought into being. Indeed, the religious books of the Vedas as of the Hindus treat all parts of a man's life as well as of cosmogony as inter-related. He therefore deals with the life of a typical Arya or Hindu as he deduces it from the true and sound maxims of the Vedas and the Smrithies wherever they are applicable.

The ordinary Aryan's life of the four ashrams of Brahmacharya, Grihasta, Vanaprastha and Sanyasa, the basis of the Rajadharma or the science of government, the doctrines laid down as to the knowledge of Godhead and the means of attaining thereto, and the steps by which the knowledge that dispels ignorance can be used to attain emanciption from the bondage by which through ignorance and sin we are kept in the toils of Samsara, are all dealt with in the first ten chapters with a simplicity and directness and yet withal free from the cobwebs of intellectual wristling and superstitious reverence, that ought to be welcome to many an enquiring mind in South India at the present moment.

It is this that makes the work of my friend Mr. **M. R. Jambunathan** particularly welcome and I would commend it to the Tamil Nadu with all sincerity and humility.

MADRAS,
June 1925.

A. RANGASWAMI IYENGAR.



சுவாமி விரஜானந்தர்

(தயானந்தரின் ஞானாசிரியர்)



சுவாமி தயானந்த சரஸ்வதி

1824—1883

நந்தலைவர்

ஸ்ரீ சுவாமி சிரத்தானந்தருடைய

பொதுவுரை.

எல்லாத் துறைகளிலும் பெருஞ்சீர்த்திருத்தக்காரராயும், தற்கால இந்திய ஊக்கங்களுக்கு ஓர் உருவத்தை அளித்தவராயுமிருக்கிற ரிஷி தயானந்தருடைய திருநாமத்தைத் தான் பிறந்த தேசத்தில் மாத்திரமேயல்லாமல் நாகரிகம் பரவியுள்ள நாடுகள் முழுதிலும் உள்ளோர் யாவரும் அறிவர். அவரது போதனைகளனைத்தும், சமயாசாரங்களெல்லாம் அடங்கியுள்ள பெருங்களஞ்சியமாயும், சத்திய தர்மத்தினுடைய தத்துவங்களை விளக்குகிறதாயும் உள்ளது இச்சத்தியார்த்தப் பிரகாசமேயாகும். பொதுவாக உலகத்தின்கண்ணுள்ள, பாஷைகள் அனைத்திலும், சிறப்பாக நம் நாட்டு பாஷைகளிலும் இப்பெருநூல் மொழிபெயர்க்கத்தக்க நூலாகும்.

ம-ா-ா-ஸ்ரீ எம். ஆர். ஐய்புநாத ஐயர் அவர்கள் சென்னை இராஜதானியின் மத்தியபாகங்களின் உபயோகத்திற்காக, இதனுடைய மொழிபெயர்ப்பொன்றை யளிப்பதினால் பெரும் பொதுநன்மையைச் செய்தவராகிறார். பாஞ்சாலம், ஐக்கியமாகாணங்கள், பீகார், வங்காளம், பம்பாய், புனா முதலான தேசங்களில் மதவிஷயமாய்ச் சுற்றுப்பிரயாணம் செய்ததுபோல், சென்னை முழுவதிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்ய ரிஷி தயானந்தருக்கு அவகாசமில்லாது போனது வருந்தத்தக்கதே. அஞ்ஞான இருள் இன்னும் தன்னதிகாரத்தை நடத்திவரும் நாடுகளில் அப்பெரியாரின் போதனைகளைப் பிரசுரஞ்செய்தல் அவருடைய சீடர்களின் கடமையாகும்.

தமிழர்களனைவரும் இந்நூலை மொழிபெயர்த்தோரின் ஊழியத்தை ஏற்க வேண்டுமென்பதும் அவர் ஆரம்பித்திருக்கும் இந்நற்காரியம் இனிது முடிவு பெற வேண்டுமென்பதும் எனது விருப்பமாகும்.

டில்லி,
பிப்ரவரி, 1925.

சிரத்தானந்த சன்னியாசி.

சுதேசமித்திரன் ஆசிரியரும்

இந்திய சட்டசபை அங்கத்தினருமான

ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின்

முன்னுரை

சுவாமி தயானந்த சரஸ்வதியாரின் நூற்கள் பலவற்றில் சிறப்புற்றோங்கும் இச்சத்தியார்த்தப் பிரகாசத்தை அறிமுகம் செய்துவைக்கையில் தமிழுலகத்திற்கு அதிகவேலையைப்பலவகையில் செய்தவனாகின்றேன். ஆயினும் ஒரு வகையில் இது அவசியமாகிறது. தன் வாழ்நாள் முழுவதும் சுவாமிகள் இடைவிடாது புகட்டியுள்ள வேதங்களின் உண்மைத் தத்துவம், இத்தென்னாட்டில் மலிந்து கிடக்கும் பற்பல கொள்கை வேற்றுமை, செய்கை வேற்றுமை, வகுப்பு வேற்றுமை, ஆகியவற்றைத் தீர்க்கவல்லது. ஹிந்து தர்ம விளக்கத்திற்கு அடிப்படையாயும் ஆதாரமாயுமுள்ளது. இத்தென்னாட்டில் ஹிந்து மதத்தினிடைப் புகுந்து பரவிக்கிடக்கும் பழைய பழக்க வழக்கம், மூடபக்தி, பொய்யாசாரம் இவைகளிலிருந்து தனியாயும், நாட்டின் சமூகமுன்னேற்றம் அறிவுமுதிர்ச்சி, இவைகளினுடைய இயற்கையான பரிபூரண வளர்ச்சிக்குத் தடையாயும், ஆரியர்களுடைய நம்பிக்கை, தத்துவஞானம் பரமார்த்திக அழகு ஆகியவற்றைப் பழுதாக்கினதாயும், பிரயாசையுடன் ஆக்கவும்பட்டுள்ள சடங்கு ஆசாரமுறை, முதலியவைகளுடன்கூட கொள்கை வேற்றுமை, ஜாதிக்குலைவு ஆகியவைகளிலிருந்து விலகினதாயுமுள்ள, இந்நாட்டுப் புராதன சமயாசாரத்தைத் தென்னாட்டு ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் சத்தியார்த்தப்பிரகாசம் விளக்குவதாகும். பிடிவாதக்காரர்கள் சம்பிரதாயத்தை அனுஷ்டிக்கிறவர்கள் இவர்களுடைய கொள்கைகள், சுற்றுச் சுழலான சொற்புரட்டுகள், விஷயம் புரியாதவாதானு வாதங்கள் ஆகிய குவியல்களிலிருந்து, வைதிகப் பேரறிவாளரும் துறவிபெரியாருமான சுவாமி தயானந்த சரஸ்வதி தன் வழியை எவ்விதம் தேடினாரென்பது மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டுள்ள அன்னாரின் முகவுரையிலிருந்தே நன்கு விளங்கும்:—

> இந்நூலை ஆக்கியதின் நோக்கம் உண்மையை உலகிலுள்ளோர்க்கு விளக்கிக்காட்டவேண்டுமென்பதே. பொய்யைப் பொய்யென்றும், மெய்யைமெய்யென்றும் விளக்கியுள்ளோம். உண்மையைஉள்ளவாறே பேசுவதும் எழுதுவதும் நம்புவதுமேசத்தியமாகும்.

இவ்வொளியை முன் வைத்துக் கொண்டு சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் ஆரிய அல்லது வைதிக சமயம், மற்றுமுள்ள பெருஞ் சமயங்கள், இவைகளின் தத்துவங்களை ஆராய்ந்திருக்கிறார். பக்ஷபாத மில்லாமல் நல்லெண்ணத்துடன் தன் கடமையை எவ்விதம் அன்னார் செவ்வனே செய்து முடித்திருக்கிறாரென்பதையும் அம்முகவுரையிலேயே காணலாம்.

> எல்லாச் சமயத்தினிடத்துள்ள நூற்களை ஆராய்ந்து, அவைகளிற்புதைந்து கிடைக்கும் சத்தியவாக்கியங்களை எடுத்துக்கொண்டும், சத்தியவிரோதமானவைகளைக் கண்டித்தும் உள்ளோம். இந்நூலின்சிறப்பானமற்றொருநோக்கம் என்னவெனின், பலமதங்களிலும், வெளிப்படையாகவும் மறைவாகவும் சந்திரனிடைக்களங்கம்போல் இருக்கும் சத்தியமதத்திற்கு விரோதமான பொய்த் தத்துவங்களை, மனவளர்ச்சிபெற்ற அறிஞருக்கும் மனவளர்ச்சி பெறாத சாதாரண ஜனங்களுக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டுவதே யாகும். நாம்பிறந்ததும் வளர்ந்ததும் இவ்வாரியவர்த்தமே (இந்தியா). எனினும், இந்நாட்டிலுள்ள நூல்களில் புதைந்து கிடக்கும் குற்றங்

களை எவ்வாறு பட்சபாதமில்லாது எடுத்துக்காட்டிக் கண்டித்துள்ளோமோ அதே போல் பிறமதநூல்களிலிருக்கும் குற்றங்களையும், குறைகளையும், அசத்தியமான தத்துவங்களையும் எடுத்துக்காட்டிக் கண்டித்துள்ளோம். எமது மதம் என்று யாம் விடுத்திலோம். சிலரைப்போல் பிறமதமென்று தூற்றியுமிலோம். எம்மதமாயினும் உண்மை யுண்மையே. பக்ஷபாதத்துடனிருப்பது மனிதத்தன்மையாகாது.

மிருகமானது பலங்காரணமாக எப்படி பலக்குறைவான மிருகங்களைத்துன்புறுத்தி யும் கொன்றும் விடுகிறதோ, அப்படியே மனித சரீரத்தையடைந்ததின் பலனாக அதை ஓர் ஆதாரமாகவைத்துக்கொண்டு, ஒருவன் தீச்செயல்களில் பிரவேசிப்பானே யானால் அவன் மனிதனாகமாட்டான். மிருகமேயாவான். பலமுள்ளகாலத்தில் பல மற்றவைகளைக்காப்பாற்றுகிறவனே உண்மையான மனிதனாவான். பேராசையினால் மற்றவர்களுக்குத் தீங்கு இழைக்கிறவனை மிருகங்களிலும் இழிந்தவன் என்றே கொள்ளல் வேண்டும்.

வேதங்கள் விதிக்கும் சமயத்தையே சுவாமிகள் நம்பினார் எனக் கூற வேண்டியது அனாவசியம் அன்றோ? இந்நம்பிக்கையின் ஆதரவைக்கொண்டு பிறமதங்களைத் தூஷித்தார் என்று அன்னார் விஷயத்தில் சொல்லுவதற்கியலாது. பிடிவாதக்காரர்கள், கருணையற்றது அல்லது அபசாரமானதெனச் சொல்லக்கூடியவாறு, புராணங்கள், தந்திரங்கள், முதலானவைகளிலிருக்கும் வண்ணம் வைதிக தர்மத்தை அவர் அறிவிற்கேற்றவாறு மறுத்திருந்தபொழுதிலும், பொதுவாகக் கூறுமிடத்து இவைகளொன்றிலும் மொத்தமாக அவர் நம்பாமலிருந்தபொழுதிலும், சமணம், பவுத்தம், கிறுஸ்து, மகம்மதிய ஆகிய மதங்களில் புதைந்து கிடைக்கும் உண்மைகளை ஏற்றுக்கொள்ள அவர் தயங்கவில்லை. இவ்வாறு அறிவை ஆதரவாகக்கொண்டு சுவாமி தயானந்த சரஸ்வதி மனிதனுடைய பரத்திற்கு மாத்திரமே யல்லாது, இவ்வுலக நன்மையான வைதிக லௌகிக மேன்மைக்கும் ஏற்றவாறு ஆரியக் கொள்கைகளை ஆராய்ந்து விளக்கியுள்ளார். மனித வாழ்க்கையின் அம்சங்கள் பலவற்றையும் உலகப்படைப்பு, காப்பு, அழிப்பு ஆகியவற்றையும் ஒன்றையொன்று தழுவினவென்றே ஹிந்துக்களுடைய வேதங்கள் எடுத்துரைக்கின்றன. ஆகவே வேதங்களினுடைய உண்மைத்தவங்களிலிருந்தும், கூடினவரையில் ஸ்மிருதிகளிலிருந்தும், ஆரிய அல்லது ஹிந்துவினுடைய வாழ்க்கையின் தர்மத்தைக் குறித்துள்ளார். பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய ஆரியர்களுடைய வாழ்க்கை தர்மம், இராஜதர்மம் அல்லது அரசிறை, பிரம்மம், பிரம்மஞானம், இவைகளை அடையும் வழி, நம்மை சம்சார சாகரத்தில் உழலச்செய்யும் அவித்தை, பாபம், ஆகிய பந்தங்களிலிருந்து மீறி, அவித்தையை அகல ஓட்டி, முக்தியை அடையவேண்டிய அறிவைப் பெறுவதற்கான வழிகள், இவைகளைக்குறித்து முதல்பத்து அத்தியாயங்களில், மூடபக்தி, நாவன்மையை கொண்டு ஏமாற்றல், இவைகளினால் பாதிக்கப்படாமல் தெளிவாகவும் நேராகவும் விளக்கிக் காட்டியுள்ளார். இது தற்காலத்திய தென்னிந்திய விசாரணைக்காரர்களுக்கு மிகவும் உபயோகமாகும்.

இக்காரணங்களே, எனது நண்பர் ஸ்ரீமான் எம். ஆர். ஜம்புநாதன் அவர்களை இவ்வூழியத்தை ஏற்குமாறு செய்தது; எனவே இது வரவேற்கத்தக்கது- இதனைத் தமிழ் நாட்டார் அறிந்து உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு பேராவலுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்

ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார்

மொழிபெயர்ப்பாசிரியரின்

நூன்முகம்.

சத்திய நூற்களில் சிறந்ததும், ஜனங்களின் மரியாதையைக் கவர்ந்ததும் **வேதமே.** இவ்வேதத்தின் தத்துவத்தை ஜனங்கள் மறந்து வருகின்றனா. அவர் களின் மனத்திடைப் புராணங்கள் புகுந்திருக்கின்றன. என்றாலும் வேதத்தை ஜனங்கள் புண்ணிய நூலாகக்கருதுகின்றனர். வேதத்திடைக்கிடக்கும் சத்தியப் பொருள் நாளுக்குநாள் மறைந்துவருகிறது. உரையாசிரியர்களென்போர் தங்களுக்குத் தோன்றியவாறு புதுப்பொருள் கொடுத்துள்ளார்கள். எனவே இத்தெய்விக நூல் அறியாமையின் பயனால் தாழ்ந்த நிலைக்கு வந்துளது. சுவாமி **தயானந்தர்** கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் வடநாட்டில் தோன்றி மறைந்தனர். அப்பெரியார் வேதத்தைப் பழைய நிலைக்குக்கொண்டு வரவும் இந்நாட்டின் நாகரிகம் **மீண்**டும் சத்தியத்தில் வளரவேண்டியும் மெய்ப்பொருள் இன்னதென்றும் பொய்ப்பொருள் இன்னதென்றும் விளக்ககூடிய ஞானத் தை யளிக்கும் சத்தியார்த்தப் பிரகாசம் என்னும் இந்நூலை ஜனங்களுக்கு வழங்கியுள்ளார். இதைத் தமிழ்நாட்டார் படித்தறிதல் அவசியமாகும். நாட் டினிடை நிறைந்திருக்கும் பொய் மதங்களையும், தத்துவங்களையும் அசத்தியங் களையும் அறியாமையையும் களையவே இப்புது நூல் ஆக்கப்பட்டது. இது பத்தொன்பது பதிப்புகளைக் கண்டுளது. அறுபதினாயிரம் பிரதிகள் வடநாட்டில் இதுவரை பரவியுள்ளது. தற்காலம் வட இந்திய ஹிந்து சமுகத்தினரிடம் சாதிச்சண்டை, மதச்சண்டை என்பது கிடையாது. ஆங்கிலம் கொஞ்ச மும் அறியாத சுவாமிகளால் தாபிக்கப்பட்ட ஆரிய சமாஜத்தின் கொள் கையும் இதுவே யாகும். ஏதோ துரதிருஷ்டவசத்தினால் பெரும் பான்மை யோர்கள் இத்தென்னாட்டில் **ஆரிய** என்னும் பதத்தையே வெறுக்கிறார்கள். சரித்திர சம்பந்தமான நம்முடைய ஏற்றத்தாழ்வு களுக்கெல்லாம் இப்பதத் தினால் குறிக்கப்படும் ஜனங்களையே காரணமென்று கருதுகிறார்கள். பிராமண ரல்லாதார்களுள் இவ்வாரிய பதத்தின் உண்மை அர்த்தத்தை அறிந்து அதைப் பரவச்செய்கிற வெகு சிலருள் டாக்டர் வரதராஜுலு நாயுடுவைக் குறிக்கவேண் டும். இந்நூலாசிரியர் கூறும் வண்ணம் கற்றோர்கள், வித்வான்கள், சிறந்தகுண முடையவர்கள், ஆகியவர்களையே வேதங்கள் **ஆரியர்** என்று போற்றுகின்றன. இதற்கு மாறினவர்களை **அநாரியர்**களென்கிறது. எனவே ஆரிய பதம் ஒரு வகுப் பையோ அல்லது ஒரு கூட்டத்தையோ குறிக்காது.

இந்நூலை மொழிபெயர்க்குங்கால் எனக்குப் போதிய ஊக்கமும் உதவி யும் தந்த காலஞ்சென்ற சித்தாந்த சரபம் ஸ்ரீ கலியாணசுந்திர யதீந்தரர் அவர்களுடைய பாதங்களில் எனது வணக்கத்தைச் செலுத்துகிறேன். ஸ்ரீமதி பரோபகாரிணி சபையினர், இதனை மொழிப்பெயர்த்துப் பிரசுரஞ்செய்ய

அனுமதி தந்தார்கள் என்பது குறிக்கத்தக்கதே. மகாத்மா ஹன்ஸ் ராஜர், ராவ் பகதூர் ஆனந்த ஸ்வரூபர் ஆகியவர்கள் இவ்வேலையை முடிக்கும் வழியில் ஊக்கமளித்தனர். சுவாமி சிரத்தானந்தர் அவர்கள், இதனை வெளிக்கொண்டு வருவதற்கு அதிகம் உதவியுள்ளாரென்பது மிகையாது. ஆகவே அவர் பால் எனது வணக்கத்தையும் அன்பையும் அளிக்கிறேன். இதை அச்சிட்டு வெளிக் கொண்டு வருவதற்கு பொருள் உதவி செய்த ஸ்ரீசுவாமிகளுக்கும் ஸ்ரீமான் மாணிக்ஜீ, பி. சர்மா அவர்களுக்கும் எனது நன்றியறிதலைச்செலுத் துகிறேன். அச்சுக்காப்பிகளைப் பார்ப்பதில் எனக்குப் பெரும் உதவியை அளி த்த ஸ்ரீமான்களான கே. ராஜகோபாலாசாரியார், சு. பெருமாள் பிள்ளைமுதலி யோர்களுக்கும் ஸ்ரீமான் அம்பாலாலுக்கும் எனது வந்தனத்தை யளிக்கிறேன. இந்நூலுக்கு முன்னுரைத் தந்து வேண்டிய ஊக்கம் அளித்து உதவிய சுதேச மித்திரன் ஆசிரியா ஸ்ரீமான். ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்கட்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். அவர் பால் எனது அன்பைச் செலுத்துகிறேன். இப்புத்தகத்தைக் காலதாமத மன்னியில் வெளியிட அச்சுக்கூடத்தார் கூட்டு றவு தந்தது குறிக்கத்தக்கதே.

இம்மொழி பெயர்ப்பு பலவருட வேலை. இந்நூலின் கருத்துகளையும் ஆசிரியரது பொருளையும் தழுவியே மொழிப்பெயர்த் துள்ளேன். தமிழ் நாட்டார்க்குப் புதிய உணர்ச்சியையும் வாழ்க்கையில் தூய்மையையும் ஆழ் ந்து நோக்குந் தன்மையையும் இந்நூல் தருமாயின், எனது வேலைப் பயனைத் தந்தது என்று கருதுவேன். நான் விரும்பும் கைம்மாறும் அதுவே.

நூலி லிருக்கும் சிறு குற்றங்குறைகளை நீக்கிக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

பஞ்சவடி, கோதாவரிக்கரை
இரக்தாக்ஷி, கார்த்திகை
பௌர்ணமி (1924)

எம். ஆர். ஜம்புநாதன்

சச்சிதாநந்தேசுவராய நமோ நமஹ:

முகவுரை.

சத்தியார்த்தப் பிரகாசம் என நாமம் புனைந்த இந்நூலின் முதற் பதிப்பை ஆக்கத்துவக்குங்கால் எமக்கு ஒரு நூலை ஹிந்திபாஷையில் ஆக்கப் போதியபழக்கம் இல்லை. எமது தாய் பாஷையோ குஜராத்தி; பேசுவதும் பழகுவதுமோ சம்ஸ்கிருதம். பெரும்பான்மையோரான நம்மக்கள் இந்நூலைப் படித்தறியவேண்டி ஹிந்திபாஷையில் ஆக்கத்துணிந்தனம். எனவே சிறு பல இலக்கியப் பிழைகள் நூலிற் புகுவது இயல்பேயாகும். இரண்டாம் பதிப்பைத்துவக்குங்கால் எமக்கு ஹிந்தி பாஷையில் போதிய பழக்கம் ஏற்படவே இந்நூலினிடம் புகுந்துள்ள சிறு பிழைகளைக் களைந்துள்ளோம். பொருள் வேற்றுமையில்லாது இலக்கியத்தையும் இலக்கணத்தையும் ஒட்டி அவசியமான சில திருத்தங்களையும் செய்துள்ளோம்.

இந்நூலில் 14 அத்தியாயங்கள் அடங்கி இருக்கின்றன. முதல்பத்து முற்பகுதியும், மீதியாகிற நான்கும் பிற்பகுதியுமாகிறது. ஏதோ சில காரணங்களினால் முதற்பதிப்பில் சேர்க்கப்படாத கடைசி இரண்டு அத்தியாயங்களும் "என் நம்பிக்கைகளின் விவரம்" என்பதையும், இப்பதிப்பில் சேர்த்துள்ளோம்.

அத்தியாயம்	1-ல்	ஈசுவரனுடைய ஓங்காராதி நாமங்களின் விளக்கம்.
அத்தியாயம்	2-ல்	குடும்பக்கல்வி.
அத்தியாயம்	3-ல்	கல்விமுறை.
அத்தியாயம்	4-ல்	கிரகஸ்தாசிரமம்.
அத்தியாயம்	5-ல்	வானப்பிரஸ்த சந்நியாசாசிரம விதிகள்.
அத்தியாயம்	6-ல்	இராஜதர்மம்.
அத்தியாயம்	7-ல்	கடவுளும், வேதமும்.
அத்தியாயம்	8-ல்	ஜகத்தினுடைய ஆக்குதல், அளித்தல், அழித்தல்.
அத்தியாயம்	9-ல்	வித்தை அவித்தை, பந்தம், மோக்ஷம்.
அத்தியாயம்	10-ல்	ஆகாரம்—விரும்பத்தகுந்தது, தகாதது. ஆசாரம்—வேண்டியது விலக்கப்படவேண்டியது
அத்தியாயம்	11-ல்	இந்திய நாட்டிலிருக்கிற பற்பலமதம் கொள்கை இவைகளுடைய ஆராய்ச்சி.

அத்தியாயம் 12-ல் சாரவாகம், பௌத்தமதம், சமணமதம், இவைகளைப் பற்றியது.
அத்தியாயம் 13-ல் கிறுஸ்துவர்களுடைய மதவிஷயம்.
அத்தியாயம் 14-ல் மகம்மதியர்களுடைய மத விஷயம்.

நூலின் முடிவில் நம்மால் ஆதரிக்கப்படும் வைதிக தர்மத்தின் விசேஷ வியாக்கியானத்தை அப்படியே வரைந்துள்ளோம்.

இந்நூலை ஆக்கியதின் நோக்கம் உண்மையை உலகிலுள்ளோர்க்கு விளக்கிகாட்டவேண்டுமென்பதே. பொய்யைப்பொய்யென்றும், மெய்யைமெய் யென்றும் விளக்கியுள்ளோம். உண்மையை உள்ளவாறே பேசுவதும் எழுது வதும் நம்புவதுமே சத்தியமாகும். ஒருசிலர் பொய்யைமெய்யாகவும், மற்ற மதங்களுடைய மெய்யைப் பொய்யாகவும் காட்ட முயலுகிறார்கள். அறிஞர் களின் கடமையாதெனில் உள்ளதைஉள்ளவாறே மேற்கோள்களின் துணை யைக் கொண்டு சத்தியத்தை நிரூபித்துக்காட்டுவதேயாகும். பின்னர்ஜனங்கள் தாமாகவே நன்மை தீமைகளை அறிந்து சத்தியத்தைக் கிரகித்து பொய்களைக் களைந்து ஆனந்தத்தை அடைதல் கூடும்.

மானிட ஆத்மாவிற்குச் சத்தியாசத்தியத்தைப் பகுத்துத்தெரிந்துகொ ள்ளசக்தியிருந்தபோதிலும், சுயநலம், சண்டித்தனம் துராக்கிரகம் அவித்தை முதலான தோஷங்களினால் சத்தியத்தை விட்டு அது அசத்தியத்தின் வயமா கிறது. இந்நூலை எழுதுங்கால் நாம் இவைகளினால் பாதிக்கப்படவில்லை. மற் றவர்களுடைய மனதைப் புண்படுத்துவதோ நோகச்செய்வதோ நம்முடைய நோக்கமில்லை. எம்மனிதருக்கும் கஷ்டத்தையோ துக்கத்தையோ உண்டு பண்ணக்கூடிய தாத்பரியத்தை யுடைய வார்த்தைகள் யாதொன்றையும் மறைத்தோ பகிரங்கமாகவோ இந்நூலில் நாம் புகுத்தவில்லை. சத்தியாசத்திய த்தை யாவருமறிந்து சத்தியத்தைத் தழுவி அசத்தியத்தை ஒழிக்கவேண்டும். இதனாலேயே மனிதனுக்கு மேன்மையும் பெருமையும் உண்டாகின்றது. சத் தியாசத்திய உபதேசம் இருந்தாலொழிய மானிடவர்க்கம் மேல் எழமுடியாது. நல்ல எண்ணத்துடன் இந்நூலின் கண்ணுள்ள அச்சுப்பிழையையோ, வாசகப் பிழையையோ, அல்லது இலக்கியப்பிழையையோ யாராவது எமக்கெடுத்துக காட்டினால் நாம் அதை வந்தனத்துடன்ஏற்றுக்கொள்வோம். இந்நூலைத்தூற்ற வேண்டுமென்ற வெண்ணத்துடனிருப்பின் நம்மால் ஏற்றுக்கொள்ள முடி யாது. ஒவ்வொருமதத்திலும் அறிஞர்கள் இருக்கின்றார்கள். எம்மதத்தி னரும் பிறமதங்களைத் தூற்றாமலும் மதங்களில்காணும் சத்தியத்தை எடுத்துக் கொண்டு, சத்தியமற்றதைத் தள்ளி, உலகக்ஷேமத்தை கோருவாரேயானால் உலகத்திற்கு க்ஷேமம் அதிகமேற்படும். அதை விடுத்து அறிவை, மதத்தூற் றல் முதலிய செயல்களில் உபயோகப்படுத்துபவர்கள் உலகிற்கு என் நன்மை யையும் செய்தோராகார். அவர்களது கூற்று பாமரஜனங்களின் மனதில் கொதிப்பை உண்டுபண்ணும். இதனால் துக்கம் கஷ்டம் முதலானவைப்பெரு கின்றன. பெருகவே மனிதஜாதியின் சுகத்திற்குக் கேடுவிளைகிறது. அழி வும் ஏற்படுகிறது.

இந்த அழிவினுல் சுயநலமுள்ளோருக்கு நன்மையும் மற்றவர்களுக்குத் தீமையும் துக்கமும் ஏற்படுகின்றன. மேலும் ஜனங்களுக்கு உபகாரம் செய்ய வேண்டிய வெண்ணத்துடன் எவரேனும் முன்வரின் அவருடையவேலைக்குச் சுயநலபிரியர்களுடைய செய்கைகளினுல் இடுக்கண்கள் உண்டாகின்றன.

"**सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः**" என்கிற ஆன்றேர் மொழிப்பிரகாரம் சத்தியமே வெல்லும். அசத்தியம் அழியும். சத்தியத்தினுலேயே வித்வான்களுடைய வழிவெளிச்சமாகிறது. இவ்வுறுதியைக்கைக்கொண்ட பெரியோர்கள் பரோபகாரம் செய்வதிலிருந்தும் சத்திய நெறியிலிருந்தும் ஒருபொழுதும் பிறழமாட்டார்கள். கீதையில் கூறியவாறு **यत्तदग्रे विषमिव परिणामेऽमृतोपमम्** வித்தையைக் கற்கவும் தர்மத்தை அறியவும்வேண்டி ஒருவன் ஆரம்பிக்குங்கால் அவை விஷத்தைப் போலவும், விஷமொக்குமெனின் முடிவில் அதற்கு மருந்து போலவும் ஆகும். எனவே இதைப்படிப்போரும், கேழ்ப்போரும் துவக்கத்திலேற்படும் சிரமத்தை பார்க்காது இந்நூலைப்படித்து, அதன் மூலம் ஏற்படும் உண்மைகளை அறிதல் வேண்டும் என்னும் எண்ணமே இந்நூலையாக்கத் தூண்டிற்று.

பொய்ச் சமயத்தினிடத்துள்ள நூற்களை ஆராய்ந்து, அவைகளிற் புதைந்து கிடைக்கும் சத்திய வாக்கியங்களை எடுத்துக்கெண்டும் சத்திய விரோதமானவைகளைக் கண்டித்தும் உள்ளோம். இந்நூலின் சிறப்பான மற்றொரு நோக்கம் என்னவெனின், பலமதங்களினும், வெளிப்படையாகவும் மறைவாகவும் சந்திரனிடைக்களங்கம்போல் இருக்கும் சத்தியத்திற்கு விரோதமான பொய்த்தத்துவங்களை, மனவளர்ச்சிபெற்ற அறிஞருக்கும் மனவளர்ச்சி பெருத சாதாரண ஜனங்களுக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டுவதே யாகும். நாம்பிறந்ததும், வளர்ந்ததும் இவ்வாரியவர்த்தமே. எனினும், இந்நாட்டிலுள்ள நூல்களில் புதைந்து கிடக்கும் குற்றங்களை எவ்வாறு பட்சபாதமில்லாது எடுத்துக்காட்டிக் கண்டித்துள்ளோமோ அதே போல் பிறமதநூல்களிலிருக்கும் குற்றங்களையும், குறைகளையும், அசத்தியமானதத்துவங்களையும் எடுத்துக்காட்டிக் கண்டித்துள்ளோம். எமது மதம் என்று யாம் விடுத்திலோம். சிலரைப்போல் பிறர்மதமென்று தூற்றியுமிலோம். எம்மதமாயினும் உண்மை யுண்மையே. பக்ஷபாதத்துடனிருப்பது மனிதத் தன்மையாகாது. மிருகமானது பலங்காரணமாக எப்படி பலக்குறைவான மிருகங்களைத் துன்புறுத்தியும் கொன்றும் விடுகிறதோ அப்படியே மனிதசரீரத்தை யடைந்ததின் பலனுக அதை ஓர் ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒருவன் தீச்செயல்களில் பிரவேசிப்பானேயானுல் அவன் மனிதனுகமாட்டான்; மிருகமேயாவான். பலமுள்ளகாலத்தில் பலமற்றவைகளைக் காப்பாற்றுகிறவனே உண்மையான மனிதனுவான். பேராசையினுல் மற்றவர்களுக்குத் தீங்கு இழைக்கிறவனே மிருகங்களினும் இழிந்தவன் என்றே கொள்ளல் வேண்டும்.

முதற்பதினேரு அத்தியாயங்களில் ஆரியவர்த்தத்தின்கண்ணுள்ள பல்வேறு சமயங்களிலுமுள்ள பெரும் விஷயங்களை விளக்கியுள்ளோம். இங்ஙனம்

வெளியிட்டுள்ள விஷயங்கள் வேதங்களின் ஆதரவைப் பெற்றவைகள். எனவே அவைகளை அங்ஙனமே அங்கீகரித்துள்ளோம். இடையில், பயிரினிடைத் தோன்றும் களைகளெனத் தோன்றியிருக்கும், புராணம் மந்திரம், தந்திரம் முதலிய போலிப்புரட்டுக்கள் விலக்கவேண்டியவைகளாகும். இவைகள் வேத சம்மதத்தைப் பெருதவைகள். பன்னிரண்டாவது அத்தியாயத்தில் சாரவாகம் சமணம், பௌத்தம் முதலான மதங்களைப்பற்றி வரைந்துள்ளோம். சாரவாகமானது பௌத்தமதத்துடன் பலவிதத்தில் அநீசுவரவாதக் கொள்கைகளைக் கொண்டதாயிருக்கிறது. பொய்களைப்பரப்பும் அத்தகைய மதம் தற்காலம் மறைந்துள்ளது, எனினும் என்றும் ஜனங்களிடன் பரவாது அதைத் தடுத்தல் அவசியமாகும். இல்லையேல் அது கேட்டை விளைக்கும். தீபவம்சம் பௌத்தமத சங்கிரகம், சர்வதர்சன சங்கிரகம், முதலான பழய நம்பத்தகுந்த நூற்களைக்கொண்டே மேற்கோள்களுடன் பௌத்தமதத்தைக் கண்டித்திருக்கிறோம். நமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட சமண நூற்களாவன:—

மூலசூத்திரங்கள் நான்கு:—(1) ஆவசியக சூத்திரம். (2) விசேஷ ஆவசியக சூத்திரம். (3) தசவைகாலிக சூத்திரம். (4) பாட்சிக சூத்திரம்.

அங்கங்கள் பதினொன்று:— (1) ஆசாரங்க சூத்திரம். (2) சுகுடாங்க சூத்திரம். (3) தாணுங்க சூத்திரம். (4) சமவாயாங்க சூத்திரம். (5) பகவதீ சூத்திரம். (6) ஞாதாதர்மகதா சூத்திரம். (7) உபாசகத்சா சூத்திரம். (8) அந்தகடதசா சூத்திரம். (9) அனுத்தரோவாயீ சூத்திரம். (10) விபாக சூத்திரம். (11) பிரச்சன வியாகரண சூத்திரம்.

உபாங்கம் பன்னிரண்டு:—(1) உபவாயி சூத்திரம். (2) ராயபசேனி சூத்திரம். (3) ஜீவாபிகம சூத்திரம். (4) பன்னவணு சூத்திரம். (5) ஜம்பூத்வீபபன்னதி சூத்திரம். (6) சந்தபன்னதீ சூத்திரம், (7) சூரபன்னதீ சூத்திரம். (8) நிரியாபலீ சூத்திரம். (9) கப்பியா சூத்திரம். (10) கபவடீசய சூத்திரம். (11) பூப்பியா சூத்திரம். (12) புஷ்ய சூலியா சூத்திரம்.

கல்பசூத்திரங்கள் ஐந்து:— (1) உத்தாரத்தியயன சூத்திரம், (2) நிசீத சூத்திரம். (3) கல்ப சூத்திரம். (4) வியவஹார சூத்திரம். (5) ஜீதகல்ப சூத்திரம்.

சேதங்கள் ஆறு:—(1) மகாநிசீத பிரகத்வாசன சூத்திரம். (2) மகாநிசீத லகுவாசனு சூத்திரம். (3) மத்யமவாசனு சூத்திரம். (4) பிண்ட நிருக்தி சூத்திரம். (5) ஓத நிருக்தி சூத்திரம். (6) பர்யூஷாண சூத்திரம்.

பயன்னு சூத்திரங்கள் பத்து:—(1) சதுச்சாரண சூத்திரம். (2) பஞ்சகாண சூத்திரம். (3) தந்துலவையாளிக சூத்திரம். (4) பக்திபரிஞ்ஞான சூத்திரம். (5) மகாப்ரத்தியாக்கியான சூத்திரம். (6) சந்தா விஜய சூத்திரம். (7) கனிவிஜய சூத்திரம். (8) மரணசமாதி சூத்திரம். (9) தேவேந்திரஸ்தமன சூத்திரம். (10) சம்சார சூத்திரம்—நந்தீ சூத்திர, யோகத்துவார சூத்திரமும் பிரமாணமாய் போற்றப்படுகின்றது.

பஞ்சாங்கம் ஐந்து :—(1) முன்சொன்ன எல்லா நூற்களுடைய உரை (2) நிருக்தி. (3) சரணீ. (4) பாஷ்யம்—இவையெல்லாம் அவயவமெனப்படு கின்றது. இந்த அவயவங்களோடு மூலகிரந்தங்களுஞ் சேர்ந்து பஞ்சாங்க மென்று சொல்லப்படும். இதில்டூனேடிர்கள் அவயவங்களைக் கொள்ளு கிறதில்லை. இதுவுமன்றி சைனர்களால் கருதப்படும் பல பின்ன கிரந்தங்க ளும் இருக்கின்றன.

பன்னிரண்டாவது அத்தியாயத்தில் விவரமாய் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறோம். புனருக்த தோஷமென்கிற, கூறியது கூறியல் குற்றம் சமண புத்தங்களில் நிறைந்து கிடக்கின்றன. வெளியானதும், சயினரல்லா தவர்களிடமிருக்கிறதுமான, சைனக்கிரந்தங்களை அம்மதத்தவர் தங்களு டையதென ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. இம்மாதிரியான சமணர்களுடைய நம் பிக்கை நகைக்கதக்கதேயாம். ஏனெனில் சிலரால் நம்பப்பட்ட நூல்கள், வேறு சிலரால் நிராகரிக்கப்பட்டபோதிலும் பிரமாண மற்றது என சொல்லி விட இயலாது. அவர்களில் சிலர் ஒரு நூலை நம்பாமலிருந்தாலும் சரி, நம்புகிறதில்லையானலும் சரி, நம்பாவிட்டாலும் சரி அது அவர்களுடைய தன்றெனக் கூறமுடியாது. சமணர்களாலோ அல்லது அவர்களைச் சார்ந்த வர்களாலோ நம்பப்படாத புத்தகம் மேற்கண்ட ஜாப்தாவிலொன்றுமில்லை. சமணர்களில் பலர் ஒரு நூலைப் பூரணமாக நம்பினபொழுதிலும், பகிரங்கமான சம்வாதங்களில் அதை நிராகரிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கிரந்தங் களை இரகசியமாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்ற மதத்தியவர்க ளுக்குத் தங்கள் புத்தகங்களைக் கொடுக்கிறது மில்லை. படிக்கிறதுமில்லை. கற்பிக்கிறது மில்லை. ஏனென்றால் தங்களால் காட்டுவதற்கு யோக்கிய மில் லாதவும் காப்பாற்றவுமுடியாததுமான அவ்வளவு அசம்பவங்களால் அவர் களின் கிரந்தங்கள் நிறைந்திருக்கின்றன. பொய் நம்பிக்கைக்கு விரோதமாக ஒருவர் பேசும்பட்சத்தில், அப்பொய்யை விட்டு விடுவதே அதற்குத்தக்க பதி லாகும்.

பதிமூன்றாவது அத்தியாயத்தில் கிறுஸ்துவ மதத்தைப்பற்றியும் அம்மத த்தின் தர்ம நூலெனக்கருதும் பைபிளைப்பற்றியும் விரிவாய் ஆராய்ச்சி செய் துள்ளோம். அடுத்த அத்தியாயத்தில் மகம்மதிய மதத்தைப்பற்றி எடுத்துக் காட்டியுள்ளோம். அவர்கள் குர் ஆனைத் தங்களது ஆதி புத்தமாகக்கொள்ளு கிறார்கள். அந்நூலையும் ஆராய்ந்துள்ளோம். கடைசியில் வைதிக தர்மத் தின் கொள்கைகளின் உண்மைகளைச் சுருக்கமாக வரைந்திருக்கிறோம். எவர் நூலை ஆக்கியோனுடைய மனதிற்கு விரோதமான மனதுடன் படிக்கிறார்களோ அவருக்கு உண்மை புலனாகாது. ஒரு விஷயத்தின் பொருளை அறிய வழி நான்குண்டு. (i) ஆகாங்கைக்ஷ (ii) யோக்கியதை (iii) ஆசக்தி (iV) தாத்பரி யம்.

பேசுகிறவர் அல்லது கிரந்தகர்த்தா இவர்களுடைய மனோவெண்ணத்திற் கேற்ப அறிவதே " ஆகாங்கைக்ஷ " யாம். (i) தெளிப்பதற்கு ஜலம் எப்படி

உசிதமாயிருக்கின்றதோ அப்படியே நம்முடைய எண்ணங்களைத் தெரிவிக்கும் ஏற்ற சொற்களுக்கு யோக்கியதை என்று பெயர். (iii) சந்தர்ப்பத்திலிருந்து வேறுபடுத்தி இணைபிரியாமல் பேசுவதும் படிப்பதும் ஆசத்தியாம் (iv) எந்த எண்ணத்துடன் பேசுகிறரோ அதே எண்ணத்துடன் அதையறிதலே தாத்பரியமாம்.

சிலர் பக்ஷபாதம், பிடிவாதம், காரணமாகக் கர்த்தாவினுடைய எண்ணத்திற்கு விரோதமாகப்பொருள் செய்யமுயலுகிறார்கள். சத்திய சாஸ்திரங்களின் ஆராய்ச்சியில் பக்ஷபாதமாய்ப் பேசுகிறவர்கள் பாபிகளே ஆவார்கள். நாம் புராணம், சமணகிரந்தம பைபிள் குர் ஆன் இவற்றைப் பக்ஷபாதத்தோடு நோக்காமல் குணத்தைத் கிரகித்தும் குற்றங்களைக்களைந்தும், பலருக்குப் பிரயோஜனப்படுமாறு விளக்கியுள்ளோம். எல்லோரும் இதைப் பின்பற்றுதலே நலமாகும். சத்தியா சத்தியங்களை அறிய எண்ணாது பக்ஷபாத எண்ணத்தோடு நூற்களுக்குப்பொருள்தர வரும் ஒருவன் அறிஞனாகமாட்டான். அறிவிலிகள் நாம் தொகுத்துள்ள இந்நூலை எவ்விதமாவது கொள்ளட்டும். அறிஞர்கள் இந்நூலைப்படித்து உள்ளதை உள்ளவாறே தெரிந்து கொண்டால் எமது எண்ணம் சித்திபெற்றதாகும். அறிஞர்கள் சத்தியத்தை அங்கீகரித்து அதனால் நாம் எடுத்த வேலையை முடித்துவைப்பார்களென்னும் நம்பிக்கை கொண்டு இந்நூலை உலகிற்கு அளிக்கின்றனம். அச்சமின்றி உண்மையை விளக்குவதே மனிதனது முதல் வேலையாகும். சர்வாத்மாவாயும் சர்வாந்தர்யாமியாயும் சச்சிதானந்தமுமான பரமாத்மாவுடைய கிருபையினால் இவ்வெண்ணம் நாட்டில் பரவி எந்நாளும் நிலை நிற்குமாக!

अलमतिविस्तरेण बुद्धिमद्वरशिरोमणिषु புத்திமான்களுக்கு ஒரே வார்த்தை போதுமானது.

உதயபுரம் 1939ஆம்
விக்ரம சகாப்தம்
பாத்ரபத சுக்ல பக்ஷம்
(கி. பி. 1882).

(சுவாமி) தயானந்த சரஸ்வதி

சச்சிதானந்தேச்வராய நமः.

சத்தியார்த்தப் பிரகாசம்.

முதல் அத்தியாயம்.

ओम् शन्नो मित्रः शं वरुणः शन्नो भवति अर्य्यमा ।
शन्न इन्द्रो बृहस्पतिः शन्नो विष्णु रुरुक्रमः ॥
नमो ब्रह्मणे नमस्ते वायो त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि । त्वामेव प्रत्यक्षं ब्रह्मवदिष्यामि ऋतं वदिष्यामि । सत्यं वदिष्यामि तन्मामवतु तद्वक्तारमवतु । अवतुमां अवतुवक्तारं ओं शान्तिश्शान्तिश्शान्तिः ॥१॥

அர்த்தம்:—(ஓம்). இந்த ஓங்காரசப்தம் பரமேஸ்வரனுடைய சர்வோத்தமமான பெயர். ஏனென்றால் இதில் "அகர உகர மகர"என்று மூன்று அட்சரங்கள் சேர்ந்து (ஓம்) என்கிற சமுதாயத்தை அடைகிறது. இந்த ஒரு நாமத்திலிருந்து பரமேச்வரனுக்கு அனேகவிதமான நாமங்கள் உண்டாகின்றன. அதாவது "அ" காரத்திலிருந்து "விராட்" அக்னி, விச்வாதி முதலியவைகளையும் "உ" காரத்திலிருந்து ஹிரணியகர்பம், வாயு, தேஜசாதிகளையும் "ம" காரத்திலிருந்து ஈச்வரன் ஆதித்தியன் ப்ராக்ஞாதி நாமவாசகங்களையும் அறிந்துகொள்ளவேண்டியது. வேதாதி சத்யசாஸ்திரங்களில் இங்ஙனமே தெளிவாகக்கூறப்பட்டிருக்கிறது. சொல்லுமிடங்களுக்கு தக்கவாறு எல்லாநாமங்களும் பரமேச்வரனுடையனவே.

வினா:—விராட் ஆதி நாமங்கள் பரமேச்வரனைக்காட்டிலும் பின்ன அர்த்த வாசகங்களுக்கு ஏனிருக்கக்கூடாது. பிர்மாண்டத்திற்கும், ப்ருதிவியாதி பூதங்களுக்கும், இந்திராதி தேவதைகளுக்கும், வைத்யசாஸ்திரத்தில் சுக்கு முதலிய ஔஷதங்களுக்கும் இந்நாமம் இருக்கின்றதா இல்லையா?

விடை:—இருக்கின்றது. ஆனால்பரமாத்மாவைத்தான் குறிக்கின்றது.

வினா:—இந்நாமங்கள் தேவதைகளைமாத்திரம் குறிக்கின்றதா இல்லையா?

விடை:—இல்லை. அப்படி கிரஹிப்பதற்கு பிரமாணம் யாது?

வினு:—தேவதைகள் எல்லாவற்றிற்கும் பிரசித்தமாயும் உத்தமமாயு இருக்கிறபடியினுல் இதை நான் கிரஹிக்கிறேன்.

விடை:—என்ன பரமேச்வரன் சுப்ரஸித்தரா? அவரைவிட உத்தம யாவரேனும் உண்டோ? இந்நாமத்தைப் பரமேச்வரனுக்கு ஏன் அளிக்க லாகாது. பரமேச்வரன் சுப்ரசித்தராயும் அவருக்குத் துல்யமா யாருமில் லாதபடியால் அவரைவிட உத்தமமாய் எது இருக்ககூடும். ஆகையினுல் தாங்கள் இப்படிச்சொல்வது சத்யமில்லை. ஏனென்றுல் தாங்கள் இப்படிச் சொல்வதினுல் பற்பல தோஷங்கள் உண்டாகின்றன. “ उपस्थितं परित्यज्यानुपस्थितं याचत इति बाधितन्यायः ” ஒருவன் மற்றொருவனுக்கு போஜனமளித்து உண்ணவேண்டும் என்றுவிரும்பிக்கூறவும்அதைவிட்டுவிட்டு அடையமுடியாத போஜனத்திற்கு இங்குமங்கும் திரிதலே பாதாதி நியாயமாகும். ஏனென்றுல் சமீபத்திலுள்ளதும் அடையக்கூடியதுமானபதார்த்தங்களைவிட்டுவிட்டுதூரத் திலுள்ளதும் அடையக்கூடாததுமான பொருளை அடைய சிரமப்படுகிறுன். எப்படி அவன் கார்யம் புத்தி யற்றதாயிருக்கிறதோ அதேமாதிரி நீர் சொல்லு வதும் கற்பனையே. ஏனென்றுல் தாங்கள் விராடாதி நாமங்களுக்குப் பிரசித்த பிரமாண சித்த பரமேச்வர பிரமாண்டாதி உபஸ்தித அர்த்தங்களை விட்டு விட்டு அசம்பவ, அனுபஸ்தித தேவாதிகளைக் கிரகிக்க சிரமப்படுகிறீர். இதற்கு ப்ரமாணமும்யுக்தியும் ஒன்றுமில்லை. ப்ரகரணனுகூலப்பிரகாரம் அந்தந்த விடத்தில் அர்த்தம் உரைப்பது உசிதம். எப்படியென்றுல், ஒரு எஜமானன் தன்னுடையசேவகனைப்பார்த்து हे भृत्य त्वं सैंधवमानय அதாவது நீ சைந்த வத்தை கொண்டுவா என்றுல், அவன் சமயம் பிரகரண முதலியவைகளை யோசிப்பது அத்யா வசியமாகும். ஏனென்றுல் “சைந்தவம்” என்பத ற்குக்குதிரை என்றும், உப்பு என்றும், இரண்டுபொருள்உண்டு. எஜமானன் வெளியில் போகும் சமயத்தில் “குதிரையையும்” உண்ணும் சமயத்தில் “உப்பையும்” கொண்டுபோவது உசிதமாகும். வெளியில் போகும் சமயத் தில் “உப்பையும்” போஜனசமயத்தில் குதிரையையும் கொண்டுபோனுல் எஜமானன் கோபமடைந்து, ஹே! நிர்புத்தி புருஷா! கமனசமயத்தில் உப்பை யும் போஜன சமயத்தில் “குதிரை” யையும் கொண்டுவந்து நிறுத்தினுல் என்ன பிரயோசனம் என்று உறுமி நீ ப்ரகரணனுகூலப்ரகாரம் யோசனை செய்யவில்லை என்றும், எந்தச் சமயத்தில் எதேது கொண்டுவர வேண்டு மென்றும், நீ இப்படி செய்தால் என் எதிரில் வரவேண்டியதில்லை என்றும் ஆக்ஞாபிப்பார். ஆகையினுல் இதிலிருந்து என்ன தெரிந்துகொள்ளுகிறு மென்றுல், எந்தந்த இடத்தில் எப்படி கிரகிக்கவேண்டுமோ அப்படிக்கிரகிக்க முயலவேண்டும். தாங்களும் இன்னும் மற்ற எல்லோரும் அங்ஙனமே ஏற்றுக்கொள்ளல் அவசியமாகும்.

ஓங்காராதி நாமங்கள்பரமாத்மாவையே குறிப்பிடுகிறதைக்காண்பிப்பதற்கு இப்பிரமாணங்களை எழுதுவதின் நோக்கம் என்னெனின், இவ்வுலகில் தரித்திர

னுக்கு 'தனபதி' என்று நாமம் இருப்பதுபோல் பரமேச்வரனுக்கு அர்த்த மில்லாத நாமம் ஒன்றும் கிடையாது. மேலும் இந்நாமங்கள் கௌணிகங் களேயோ, கார்மிகங்களேயோ, சுவபாவிகங்களேயோ, நிருபிக்கிறது.

இப்பொழுது ஓங்காராதி நாமங்கள் அடியில் வருமாறு அர்த்தமா கின்றன.

மந்திரார்த்தங்கள்.

1. ओ३म् सम्ब्रह्म । अवतीत्योम् । आकाशमिव व्यापकत्वात् स्वम् । सर्वे भ्यो ब्रह्मत्वाद् ब्रह्म । யஜு- 40 மன் 17.

ரக்ஷிப்பதால் (ஓம்) என்றும், ஆகாசம்போல் வியாபித்திருக்கிறபடியி னால் 'ஸ்வம்' எனவும், எல்லாவற்றையும்விட உன்னதமா யிருக்கிறபடியினால் பிரம்மாவெனவும் ஈச்வரனின் நாமங்களாகும்.

2. ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत ॥ சாந்தோக்யம்.

எக்காலமும் அழியாதிருப்பவர் பெயரே "ஓம்" அவரே உபாசனைக்குரி யார். அவரைத் தவிர வேறுயாருமில்லை.

3. ओमित्येतदक्षरमिदꣳसर्वं तस्योपव्याख्यानम् ॥ மண்டூக்ய உபநிஷத்.

எல்லா வேதாதி சாஸ்திரங்களில் பரமேச்வரனுடைய பிரதானமானவும், உண்மையானவும் நாமம் "ஓம்" ஒன்றே. மற்றையதெல்லாம் கௌணிகநாமங்கள்

4. सर्वे वेदा यत्पदमामनन्ति तपाँसि सर्वाणि च यद्वदन्ति । यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदँ सङ्ग्रहेण ब्रवीम्योमित्येतत्.

கடோபநிஷத் 7. 15.

எல்லா வேதங்களும் சம்ஸ்ததர்மானுஷ்டான ரூபதபஸ் சரணாதிகள் எவ ரைக்குறித்து செய்யப்பட்டு கௌரவப்படுத்துகின்றதோ எவரை எண்ணிப் பிரமசரியாதி ஆச்ரமங்கள் ஆசரிக்கப்படுகின்றதோ அவருடைய திருநாமமே ஓம்.

5. प्रशासितारं सर्वेषामणीयांसमणोरपि । रुक्माभं स्वप्नधीगम्यं विद्यात्तं पुरुषं परम् ॥

மனு. அத்தியாயம் 12 சுலோ. 122.

எல்லோருக்கும் குருவாயும், சூட்சமத்தைவிட சூட்சமமாயும், சுவயம் ப்ரகாச ஸ்வரூபமாயும் ஆத்ம புத்தியினால் அறிய யோக்கியமாயுமிருக்கிற அவரையே பரம புருஷரென்று அறியவேண்டும்.

6. एतमेके वदन्त्यग्निं मनुमन्ये प्रजापतिम् । इन्द्रमेके परे प्राणामपरे ब्रह्मशाश्वतम् ॥

சுலோ 123.

சுயம்பிரகாசராயிருப்பதினால் அக்னியென்றும், விக்ஞான ஸ்வரூபரா யிருக்கிறபடியினால் மனுவென்றும் எல்லோரையும் ரட்சிப்பதாலும் பரம

ஐசுவரியவானயிருப்பதாலும் இந்திரன் என்றும், எல்லாவற்றிற்கும் ஜீவன் மூலமாயிருப்பதினுல் பிராணன் என்றும், நிரந்தர வ்யாபகராயிருக்கிறபடியினுல், பிரம்மாவென்றும், பரமேச்வரனுக்கு பெயர்கள்.

7. स ब्रह्मा स विष्णुः स रुद्रस्स शिवस्सोऽक्षरस्स परमः स्वराट् ।
स इन्द्रस्स कालाग्निस्स चन्द्रमाः ॥ கைவல்யோபநிஷத்.

ஜகத்தை செய்கிறதினுல் பிரம்மாவென்றும், ஸர்வத்ர வ்யாபகராயிருப்பதினுல் விஷ்ணுவென்றும், துஷ்டர்களைத் தண்டித்துத் துக்கிக்கச்செய்கிறபடியினுல் ருத்திரனென்றும், எல்லோருக்கும் சுபத்தைக்கொடுத்து மங்களகரமாயிருக்கிறபடியினுல் சிவன் என்றும், சர்வ வியாபியாயும், அவினுசியாயும் இருப்பதால் "அக்ஷர்" என்றும், சுவயம் ப்ரகாச சுவரூபராயிருக்கிறபடியினுல் ச்வராட் என்றும், பிரளயகாலத்தில் யாவற்றிற்கும் காலனுயும் காலனுக்கு அக்கினி போலிருப்பதினுல் காலாக்கினியென்றும் அவரின் பெயர்கள்.

8. इन्द्रं मित्रं वरुणमग्निमाहुरथो दिव्यस्स सुपर्णो गरुत्मान् ।
एकं सद्विप्रा बहुधा वदन्त्यग्निं यमं मातरिश्वानमाहुः ॥

ரிக் மண்டலம், 1, 22, 64.

எந்த ஏக அத்விதீயமான சத்தியபிரம்மவஸ்து இருக்கின்றதோ அதற்கே இந்திராதி நாமங்கள்.

द्युषु शुद्धेषु पदार्थेषु भवो दिव्यः शोभनानि पर्णानि पालनानि कर्माणि वा यस्य सः । योगुर्वात्मा स गरुत्मान् । यो मातरिश्वा वायुरिव बलवान् स मातरिश्वा ॥

ப்ரகிருத்தியாதி எல்லா திவ்யபதார்த்தங்களிலும், இன்னும் அது சம்பந்தமான யாவற்றிலும் வியாபித்திருக்கிறபடியினுல், அவருக்கு இந்திரன் என்று பெயர். (2) அவருடைய காப்பாற்றுதல் உத்தமமாயிருக்கிறபடியினுலும், காரியங்கள் பரிபூரணமாயிருப்பதாலும் அவருக்கு "சுபர்ணன்" என்று பெயர். (3) அவருடைய ஆத்மா (சுவரூபம்) மகத்தாயிருக்கிறபடியினுல் "கருத்மான்" என்று பெயர். (4) வாயுவைவிட அனந்தமான சக்தியை உடையவனுகையால் "மாதரீசுவ" என்று பெயர். இவ்விதம் பரமேச்வரனுக்குத் திவ்யன், சுபர்ணன், கருத்மான், மாதரீசுவர், என்பனபெயர்கள், மீதிப்பெயர்கள் இனி விவரிக்கப்படும்.

9. भूरसि भूमिरस्यादितिरसि विश्वधाया विश्वस्य भुवनस्य धर्त्री ।
पृथिवीं यच्छ पृथिवीं दृँह पृथिवीं मा हिँसीः
भवन्ति भूतानि यस्यां स भूमिः ॥ யஜுர்வேதம் அத்தியாயம் 31.

சகலஜீவராசிகளும் தன்னிடத்திலிருக்கிறபடியினுல் ஈச்வரனுக்கு "பூமி" என்று பெயர். இதிலிருக்கும் ஈச்வரனின் இதர நாமங்கள் பின்னர் விவரிக்கப்படும்.

10. इन्द्रो महना रोदसी पप्रयच्छव इन्द्रः सूर्य्य मरोचयत ।
इन्द्रेह विश्वा भुवनानि योमिर इन्द्रे स्वानास इन्द्रः ॥

சாமவே, 7, 3. 8. 16. 2. 3. 2.

இந்தப்பிரமாணத்தினால் ஈச்வரனுக்கு "இந்திரன்" என்கிற பெயர் ஸ்தாபிதமாகிறது.

11. प्राणया नमो यस्य सर्वमिदं बशे । यो भूतः सर्वस्य ईश्वरो यस्मिन् सर्वं प्रतिष्ठतम् ॥

அதர்வ. காண் II. அத. 2. சூக்தம் 2. மந். I.

எப்படி ப்ராணவ சத்தினால் எல்லா இந்திரியங்களும் இருக்கின்றனவோ அப்படியே யாவத்துலகமும் தெய்வத்தினுடைய வசத்திலிருக்கின்றது. (அதர்வ வேதம். II. வது காண்டம், இரண்டாவது அத்தியாயம், 2-வது சூக்தம் முதல் மந்திரம்.)

அக்கினியாதி நாமங்களின் சிறப்புப்பொருள்.

மேற்கண்ட பிரமாணங்களின் உண்மைப்பொருள் மூலம், பரமேச்வரனுனுடைய நாமங்கள், சித்தாந்தங்களுடன் நிருபிக்கப்படுகின்றன. ஏனென்றால் 'ஓம்' அக்னி முதலான நாமங்கள் சரியாய்ப்பேசும்பக்ஷத்தில் வ்யாகரணம் நிருக்தம் பிராமணம் சூத்ரம் ரிஷிமுதலிய வியாசரணங்களிலும் கிரந்தங்களிலும் சொல்லிய வண்ணம் கடவுளையே குறிக்கின்றது. ஆகையினால் இவ்வர்த்தங்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்படவேண்டியது அவசியமாகும். "ஓம்" இது கேவலம் பரமாத்மாவினுடைய பெயரே. ஆனால் அக்னியாதி நாமங்கள் பிரகரண விசேஷ நியமகாரக சந்தர்ப்பங்களில் பரமேச்வரனை கிரஹிக்கவேண்டும். அதாவது எவ்வெவ்விடத்தில் ஸ்துதி, பிரார்த்தனை, உபாசனை, சர்வக்ஞ, வியாபக, சுத்த சனாதன சிருஷ்டி கர்த்தா ஆதிவிசேஷணங்கள் எழுதியிருக்கின்றதோ அவ்வவ்விடத்தில் பரமேச்வரனையே விளக்குகின்றது.

அக்கினியாதி நாமங்களின் பொதுப்பொருள்.

ஆனால் அடியில்வரும் ப்ரகரணங்களிலும்

ततो विराडजायत विराजो अधि पुरुषः ।
श्रोत्राद्वायुश्च प्राणश्च मुखादग्निरजायत ।
ततो देवा अजयन्त । पश्चात् भूमिमथोपुरः ॥ யஜுர்வேதம் அ. 31.

तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः । आकाशात् वायुः । वायोरग्निः ।
अग्नेरापः । अद्भ्यः पृथिवी । पृथिव्या ओषदयः । ओषधीभ्योन्नम् ।
अन्नाद्रेतः । रेतसः पुरुषः । स वा एष पुरुषोन्नरसमयः ॥

தைத்திரேயோபநிஷத்தில் பிர்மானந்தவல்லி பிரதமானுவாகம் வசனம், இந்தப் ப்ரமாணங்களில் 'விராட்' புருஷ தேவ, ஆகாச, வாயு, அக்னி, ஜலம், பூமி ஆதிநாமங்கள் லௌகிகபதார்த்தங்களையே காட்டுகின்றன.

ஏனென்றால் எவ்வெவ்விடத்தில் உற்பத்தி ஸ்திதி பிரளயம் அல்பக்ஞம்—திர்டம் திர்சிய ஆதிவிசேஷணங்கள் எழுதியிருக்கின்றதோ அவ்வவ்விடத்தில் பரமேச்வரனைக் காட்டவில்லை. ஏனென்றால் அவர் உற்பத்தி வியவஹாரங்களிலிருந்து வேறாக யிருக்கின்றார். மேல்சொன்ன மந்திரங்களில் உற்பத்தியாதி வியாபாரங்களிருக்கின்றன. இதனால் இந்த "விராடாதி" நாமங்கள் பரமாத்மாவை காண்பிக்காமல் உலகத்தின் இயற்கைப்பதார்த்தங்களைக் காண்பிக்கின்றன. ஆனால் சர்வக்ஞாதி விசேஷணங்கள் எங்கே குறிப்பிட்டிருக்கின்றதோ அங்கே பரமாத்மாவையும் எங்கெங்கே இச்சை துவேஷம் பிரயத்தினம் சுகம் துக்கம் அல்பக்ஞாதி முதலிய விசேஷணங்கள் வருகிறதோ அங்கே "ஜீவனை"யே அர்த்தமாக்குகின்றது. இங்ஙனம் எல்லாவிடத்திலேயும் தெரிந்துகொள்ளவேண்டியது. ஏனென்றால் பரமேச்வரனுக்கு ஜன்மமும் மரணமும் எப்பொழுதும் கிடையாது. அதனாலே விராட்டாதி நாமங்கள் சன்மாதி விசேஷணங்களினாலே ஜகத்தில் ஜட சீவாதி பதார்த்தங்களாலேயே கிரஹிக்க வேண்டியது உசிதமாகும். கடவுளைக் காண்பிக்கவில்லை. எந்தப்பிரகாரம் விராட்டாதி நாமங்களால் பரமேச்வரனைக் கிரஹிக்கவேண்டியது என்பதை அடியிலிருந்து தெரிந்துகொள்வோம்.

பரமேச்வரனுடைய சத நாமங்கள்.

1. விராட்.—'ராஜ்' என்னும் தாதுவுடன், (வி) உபஸர்கபூர்வகமும் (க்யப்) ப்ரத்யமும் சேர்ந்து 'விராட்' (ப்ரகாசிக்கிறவர்) சப்தம் சித்தமாகிறது.

यो विविधं नाम चराचरं जगद्राजयति स विराट् ।

எவர் பல விதமாய் ஜகத்தைப் பிரகாசிக்கச்செய்கிறாரோ, அவருக்கே விராட் என்ற பெயர். ஆகையினால் இது பரமேச்வரனைத்தான் குறிக்கிறது.

2. அக்னி.—அக, அகி, இண், (கத்யர்த்தக சலனத்தைக் குறிப்பிடுகிற) தாதுக்கள். இவைகளிலிருந்து "அக்னி" (பூஜிக்கத்தகுந்த) சப்தம் சித்தமாகிறது.

योऽञ्चति अच्यतेऽगत्यङ्गत्येति सोऽयमग्निः ।

ஞானஸ்வரூபராயும், சர்வக்ஞராயும், எல்லாம் அறிந்தவராயும், அடைகிறதற்கும், பூஜிப்பதற்கும் எவர் யோக்யமோ அவருக்கே 'அக்னி' என்று பெயர். ஆகையினால் இந்நாமமும் பரமேச்வரனையே குறிக்கிறது.

3. விஸ்வன்.—"விஸ்" என்னும் தாதுவுடன், (வ) ப்ரத்யயம் சேர்ந்து 'விஸ்வ' (ஸ்தலம் அல்லது கர்த்தா) சப்தம் உண்டாகிறது

विशन्ति प्रविष्टानि सर्वाण्याकाशादीनि भूतानि यस्मिन् यो वाऽकाशादिषु सर्वेषु भूतेषु प्रविष्टः स विश्व ईश्वरः ।

அவரிடத்தில் ஆகாசாதி சமஸ்த பூதங்கள் ப்ரவேசிப்பதுமல்லாமல், இவைகள் எல்லாவற்றிலும் அவர் வியாப்தமடைந்து விளங்குகிறபடியினால்,

அந்தப்பரமேச்வரனுக்கே 'விஸ்வன்' என்று பெயர். இத்யாதி நாமங்களும் ஓங்காரத்திலிருக்கும் 'அ' காரத்திலிருந்து வெளியாகிறது.

ஹிரண்ய கர்பன்.—அய்த்ரேயம், ஷட்பாத்.

ज्योतिर्वै हिरण्यं तेजो वै हिरण्यं

योहिरण्यानां सूर्यादीनां तेजसां गर्भ उत्पत्ति निमित्त मधिकरणं स हिरण्यगर्भः ।

அவனால் சூர்யாதி தேஜஸுகள்ள லோகங்கள் உற்பத்தியடைந்து அவருடைய ஆதாரத்தினால் நிலை நிற்கிறது. அதுவுமன்றியில் சூர்யாதி தேஜஸ்வரூப பதார்த்தங்களுக்கு உத்பத்தி நிவாசஸ்தானம் அவரே. இதற்கு கீழ்க்கண்ட யஜுர்வேதப்ரமாணம்.)

हिरण्यगर्भः समवर्तताग्रे भूतस्यजातः पतिरेक आसीत् ।

स दाधार पृथिवीं ध्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम ॥

இத்யாதி விடங்களில் பரமேச்வரனுக்கே ஹிரண்ய கர்பம் என்று பெயர்.

5. வாயு.—'வ' என்னும் தாதுவிலிருந்து 'வாயு' (அலைகிறது) சப்தம் சித்தமாகிறது.

वा गतिगन्धनयोः गन्धनं हिंसनम् ।

यो वाति चराऽचरञ्जगद्धरति बलिनां बलिष्ठः स वायुः ।

சராசரமான ஜகத்தைத்தரித்து, ஜீவனுடையதாகச்செய்து ப்ரளயிக்கச்செய்கிறவராயும், பலவான்களுக்கெல்லாம, பலவந்தருமாயிருக்கிற அந்தப் பரமேஸ்வரனுக்கு "வாயு" என்று பெயர்.

6. தேஜஸ்.—'தஜ' என்னும் தாதுவிலிருந்து 'தேஜஸ்' சப்தம் சித்திக்கிறது. இதே தாதுவுடன் நாமப்ரத்யயம் சேர்ந்து தேஜஸ் சப்தம் சித்தமாகிறது.

तिजनिशानै तेजः ।

ஸ்வயம் ப்ரகாச்சராயும், சூர்யாதி லோகங்களை ப்ரகாசிக்கச்செய்கிற அந்த பரமேஸ்வரனுக்குத் 'தேஜஸ்' என்றும் பெயர். ஷை நாமங்கள் ஓங்காரத்திலிருக்கும, 'உ' காரத்தினால் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

7. ஈச்வரன்.—'ஈஷ்' என்னும் தாதுவுடன் 'வர' ப்ரத்யயம் சேர்ந்து 'ஈசவர' (ஆளுகிறவர்) சப்தம் சித்தமாகிறது.

ईश ऐश्वर्ये य इष्टो सर्वैश्वर्यवान् वर्त्तते स ईश्वरः ।

சத்யவிசார சீல ஞானமுடையவராயும், அனந்த ஐஸ்வர்யவானுயுமிருக்கிற அந்தப் பரமாத்மாவுக்கே ஈஸ்வரன் என்று பெயர்.

8. ஆதித்யன்.—'தோ' என்னும் தாதுவுடன் (அ) உபஸர்கமும் (தி) ப்ரத்யயமும் சேர்ந்து 'அதோதி' என்பது 'அதிதி' என்பதாகமாறி 'ஆதித்ய' சப்தம் (அபாயமின்மை, அழிவின்மை) சித்தமாகிறது.

अदिति दो अवखण्डने न विद्यते विनाशो यस्य सो यमदितिः अदितिरेव ऽदित्यः ।

எவருக்கு எந்நாளும் அழிவில்லையோ, அவருக்கே ஆதித்யன் என்று பெயர். இந்த குணம் பரமேச்வருக்கே உரியதாகையினால் அவருக்கே 'ஆதித்யன்' என்று பெயர்.

9. ப்ராக்ஞன்.—'ஞ' என்னும் தாதுவுடன் 'ப்ர' உபஸர்க்கமாய் நாம ப்ரத்யயத்துடன் 'ப்ராக்ஞ' (எல்லாம் அறிகிறவன்) சப்தம் சித்திக்கிறது.

ज्ञा अवबोधने यः प्रकृष्टतया चराऽचरस्य जगतो व्यवहारं जानाति सः प्राज्ञः । प्रज्ञ एव प्राज्ञः ।

நிர்ப்ராந்தராயும், ஞானயுக்தராயும், சகல சராசர ஜகத்தினுடைய வியவ காரங்களனைத்தும், உள்ளதை, உள்ளவாறே அறிகிறஅந்தப்பரமேச்வரனுக்கே, ப்ராக்ஞன் என்று பெயர்.

இவ்விடத்தில் ஓங்காரத்திலிருக்கும், அ, உ, ம், என்னும் மூன்று சப்தங் களினால் காட்டப்பட்டிருக்கிற மூன்று குணங்களே, சொல்லப்பட்டிருக்கிறது. அதேமாதிரி அவைகளி லிருந்தே வேறு நாமங்களையும் அறிந்து கொள்ள வேண்டியது.

शन्नो मित्रः शं वरुणः शन्नो भवति अर्य्यमा ।
शन्न इन्द्रो बृहस्पतिः शन्नो विष्णु रुरुक्रमः ॥
नमो ब्रह्मणे नमस्ते वायो त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि । त्वामेव प्रत्यक्षं ब्रह्मवदिष्यामि ऋतं वदिष्यामि । सत्यं वदिष्यामि तन्ममवतु तद्वक्तारमवतु । अमतुमां अवतुवक्तारं ओं शान्तिश्शान्तिश्शान्तिः ॥१॥

இந்த மந்திரத்திலிருக்கிற மித்ராதி நாமங்கள் பரமேச்வரனையே குறிக்கின்றன. ஏனென்றால் ஸ்துதி, ப்ரார்த்தனை உபாஸனை முதலானதுகள் சிரேஷ்டர்களைக் குறித்தேச் செய்யவேண்டும். எவர் குணகர்ம ஸ்வபாவங்களிலும், சத்யா சத்ய வியவகாரங்களிலும் எல்லாரைக்காட்டிலும் அதிகமோ, அவரையே சிரேஷ்டர் எனவேண்டும். அத்தகைய சிரேஷ்டர்களில் அத்யந்த சிரேஷ் டர் பரமேச்வரனே. அவருக்கு நிகராய் யாரும் முன் இருந்ததுமில்லை. இப் பொழுதுமில்லை. இனிமேல் இருக்கப்போகிறதுமில்லை. அவருக்கு நிகராய் யாருமில்லையாதலால், அவரைவிட வேறு பெரியவர் யார் இருக்கக்கூடும். சத்யம், நியாயம், தயை, சர்வசாமர்த்யம், சர்வக்ஞத்வம், முதலான யாவத் அனந்த குணங்களும், ஜகதேகரக்ஷகராகிய பரமேச்வரனுக்கு இருப்பதுபோல் வேறு சாதாரணமான ஜடபதார்த்தங்களுக்காவது, ஜீவன்களுக்காவது இல்லை. எப் பதார்த்தம் சத்யமோ அதனுடைய குணகர்மஸ்வபாவங்களும் சத்தியமே. ஆகையினால் பரமேச்வரனைக்குறித்தே ஸ்துதிப்ரார்த்தனை உபாசனைகள் செய்ய வேண்டியது மனிதர்களுக்கு யோக்யமானவை. அவருடைய பின்னங்களுக்கு

ஒருகாலும் பூஜை செய்யலாகாது. பிரம்மா, விஷ்ணு, மகாதேவன் என்னும் நாமங்களையுடைய கற்றுணர்ந்த புராதன ரிஷிகளும், வித்வான்களும், தைத்யதானவாதி நிக்ருஷ்ட மனிதர்களும், அந்நிய சாதாரண மனிதர்களும் பரமேச்வரனையேவிஸ்வாசித்து அவரைக்குறித்தேஸ்துதி, பிரார்த்தனை, உபாசனைச் செய்தார்கள். அவருடைய பின்னங்களைக்குறித்துச் செய்யவில்லை. அப்படியே நாம் எல்லோரும் செய்யவேண்டும். இந்த விஷயத்தைப்பற்றி விவரமாய், உபாசனைகள், பக்தி, இவைகளைப் புகட்டும் பகுதியில் விரித்துரைக்கப்படும்.

வினா.—மித்திராதி நாமங்களினால், சிநேகிதர்களையோ, அல்லது (வ்யவஹாரங்களில் பிரசித்தி பெற்றிருக்கும்) இந்திராதி தேவதைகளையோ அறிய வேண்டும்.

விடை.—இவ்விதம் இதை அறிவது தகுதியல்ல. ஏனென்றால் ஒருவனுடைய சிநேகிதன், மற்றொருவனுக்குச் சத்ருவாயும், வேறு ஒருவனிடத்தில் அலக்ஷ்யமுள்ளவனுயுமிருப்பதைப் பார்க்கிறோம். ஆகையினால் மித்திரன் வார்த்தையினால் சாதாரண சிநேகிதன் என்றாகாது. அது பரமேச்வரனையே குறிக்கிறது. பரமேச்வரனே, உலகம் யாவற்றிற்கும் நிச்சயமான மித்திரன். ஒருவருக்கும் ஒருவரையும் உதாசினம் செய்பவரில்லை. இதனால் பின்னமாயிருக்கப்பட்ட எந்த ஜீவனும் ஒரு நாளும் இம்மாதிரியிருக்கமுடியாது. ஆகையினால் பரமாத்மாவையே அறியவேண்டும். இலௌகீகார்த்தத்தில் மித்ராதிசப்தம் சிநேகிதாதி மனிதர்களைக்காட்டுகிறது.

10. **மித்திரன்.**—'இமித்' தாதுவுடன் 'க்த்ர' ப்ரத்யயமடைந்து 'மித்திர' சப்தம் சித்தமாகிறது.

(ञिमिदा स्नेहने) "मेद्यति स्निह्यति स्निह्यते वा स मित्रः"

அவர் எல்லோரையும் நேசிக்கிறார். எல்லோராலும் நேசிப்பதற்கு அருகராயிருக்கிறார். ஆகையினால் அந்தப்பரமேச்வரனுக்கே மித்திரன் என்று பெயர்.

11. **வருணன்.**—"வ்ரி" என்னும் தாதுவுடன் 'உனன்' ப்ரத்யயமடைந்து 'வருண' சப்தம் சித்திக்கிறது.

(वृञ् वरणे, वर ईप्सायाम्)

"यः सर्वान् शिष्टान्मुमुक्षून्धर्मात्मनो वृणोत्यथवा यः शिष्टैर्मुमुक्षुभिर्धर्मात्मभिर्व्रियते वर्य्यते वा स वरुणः परमेश्वरः"

அவர் ஆத்மயோகிகளையும், வித்வான்களையும் முக்திக்கு இச்சிக்கிறவர்களையும், தர்மாத்மாக்களையும், ஏற்றுக்கொள்ளுகிறார். மேலும் சிஷ்டர்களாலும், முமுக்ஷுர்களாலும், தர்மாத்மாக்களாலும், கிருஹிக்கப்படுகிறார். ஆகையினால் பரமேச்வரனுக்கே வருணன் என்று பெயர்.

12. **அர்யமா.**—'ரி' தாதுவுடன், 'யத்' 'த்' ப்ரத்யயம் சேர்ந்து 'அர்ய' சப்தமுண்டாகிறது. 'அர்ய' பூர்வகமாயும், 'ம' தாதுவுடன் 'கனின்' ப்ரத்யயமடைந்து 'அர்யமா' சப்தம் சித்தமாகிறது.

(ऋ गतिप्रापणयोः) (माङ् माने)

"योऽर्यान् स्वामिनो न्यायाधीशान् मिमीते मान्यान् करोति सोऽर्यमा"

சத்திய நியாயம்செய்யும் மனிதர்களை, பெருமைப்படுத்துகிறவரும், பாபம் புண்ணியம் செய்கிறவர்களுக்கு, பாப புண்ணியங்களுடைய பலங்களுக்குத் தகுந்த ப்ரகாரம், நியாயம் செய்கிறவருமா யிருக்கிறபடியினால் அந்தப் பர மேச்வரனுக்கே 'அர்யமா' என்று பெயர்.

13. இந்திரன்.—"இதி" என்னும் தாதுவுடன் 'ர' ப்ரத்யயமடைந்து 'இந்திர' சப்தம் சித்தமாகிறது.

"य इन्दतिपरमैश्वर्यवान् भवति स इन्द्रः परमेश्वरः"

அவர் அகில ஐஸ்வர்ய யுக்தனாயிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு 'இந்திரன்' என்று பெயர்.

14. பிரகஸ்பதி.—"ப" (காப்பாற்று) என்னும் தாதுவுடன் "பிரக" என்னும் ப்ரத்யயம் சேர்ந்து "த"காரலோபமடைந்து 'ச' காரம் சேர்ந்து 'பிரகஸ்பதி' சப்தம் சித்தமாகிறது.

"यो बृहतामाकाशादीनां पतिः स्वामी पालयिता स बृहस्पतिः"

பெரியோர்களுக்கெல்லாம், பெரியவராயும், உயர்ந்தவர்களுக்கு, உயர்ந்தவரா யும், ஆகாசாதி பெரும் பிரம்மாண்டங்களுக்குச், சுவாமியாயுமிருப்பதால் பர மேச்வரனுக்கு "பிரகஸ்பதி" என்றும் பெயர்.

15. விஷ்ணு.—"விஷ்" (பரவுகிறது) என்னும் தாதுவுடன் "நு" ப்ரத்யயமடைந்து விஷ்ணு சப்தம் சித்தமாகிறது.

"वेवेष्टि व्याप्नोति चराचरं जगत् स विष्णुः"

சராசர முழுவதிலும் பரவியிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு விஷ்ணு என்று பெயர்.

16. உருக்கிரமா.—

"उरुर्महान् क्रमः पराक्रमो यस्य स उरुक्रमः"

அனந்த பராக்கிரம யுக்தமாயிரு கிறபடியினால் பரமேச்வரனுக்கு உருக்கிரமா என்று பெயர். எப்பரமாத்மா (உருக்ரம:) பெரும்பராக்ரமத்துடன் கூடின வராயும் (மித்ர:) எல்லோருக்கும் சிநேகிதராயும் அவிரோதியாயுமிருக்கிறாரோ, அவர் (சம்) சுகத்தை அளிப்பவர். (வருண:) சர்வோத்தமமானவர் (சம்) சுகஸ்வரூபரானவர். (அர்யமா) நீதிபதியானவர். (சம்) சர்வ வல்லமையுள்ள அவர் (இந்த்ர:) எந்த சகல ஐச்வர்யவானும் (சம்) சகல ஐச்வர்யத்தை யளிக்கிறவரும் (பிரகஸ்பதி:) எல்லாவற்றினுடைய அறிவைப்புகட்டுகிறவரும் (சம்) வித்யாப்ரதரும் (விஷ்ணு:) எல்லாவற்றிலும் வ்யாபகராய் பரமேச்வர ராயிருக்கிறவருமான அவர் (ந:) எங்களுக்குக் கல்யாண காரணத்தை (பவது) உண்டாக்கட்டும்.

17. பிரம்மா.—(ப்ரஹ், ப்ருஹ்) இந்த தாதுவிலிருந்து பிரம்ம சப்தம் உண்டாகிறது. எல்லாவற்றையும்விட உயர்ந்தவராய் எல்லாவற்றிற்கு முயர்ந்த அனந்தவல்லமையுடன் கூடினவராயு மிருப்பதால் அந்தப் பிரம்மத்தை நமஸ்காரம்செய்கிறேன். (त्वमेव प्रत्यक्षं ब्रह्मासि) ஹே பரமேச்வரா! தாங்களே அந்தர்யாமி ரூபத்துடன் விளங்குகிற பிரத்யக்ஷ பிரமம். (त्वमेव प्रत्यक्षं ब्रह्म वदिष्यामि) நான் உங்களையே ப்ரத்யக்ஷபிரம்ம என்று சொல்லுகிறேன். ஏனென்றால் தாங்கள் எல்லா ஜகம் முழுவதிலும் வியாபித்து எல்லாவற்றிற்கும் நித்யத்வத்தைக் கொடுத்திருக்கிறீர். (ऋतं वदिष्यामि) தங்களால் அளிக்கப்பட்ட வேதத்துடன்கூடின உண்மையான கட்டளைகளை எல்லோரின் பொருட்டு உபதேசமும் உபதேசித்து நானும் ஆசரணை செய்கிறேன். (सत्यं वदिष्यामि) எண்ணம், செய்கை நடத்தைமுதலானவைகளில், சத்தியத்தையே பின் பற்றுவேன். (तन्मामवतु) அப்படியே தாங்கள் என்னைக்காப்பாற்ற வேண்டியது (तद्वक्तारमवतु) அப்படியே தாங்கள் சன்மார்க்க ஒழுக்கத்தில் தவருத என்னை ரக்ஷிக்கவேண்டும். அதினால் தங்களுடைய ஆக்ஞைகளில் என்னுடைய புத்தி ஸ்திரமடைந்து அதிலிருந்து ஒருபொழுதும்மாருது. ஏனென்றால் தங்களுடைய ஆக்ஞை எதுவோ அதுவே தர்மம். அதற்கு விருத்தமாயிருக்கிறது அதர்மமேயாம். (अवतुमां अवतुवक्तारं) இரண்டு தடவை வாசகங்களைச் சொல்லியிருப்பதினால் அர்த்தம் அதிகமாகிறது. எப்படி என்றால் "कश्चित् कश्चित् प्रति वदति त्वं ग्रामंगच्छ गच्छ" இதில் வினைச்சொல்லை இரு தடவை உச்சரிப்பதால் "நீ சீக்கிரமாய் கிராமம்போ" என்பது ஊர்ஜிதமாகிறது.

அப்படியேஇவ்விடத்திலும். தாங்கள் என்னை அவசியம் ரக்ஷிக்கவேண்டிய தர்மத்தைக், கைக்கொண்டு அதர்மத்தைத் தள்ளச் செய்யவேண்டும். இத்தகைய கிருபையை எனக்கு அளிக்கவேண்டும். அதை நான் எப்பொழுதும் வெகுவாய்க்கருதுவேன். (ओं शान्तिः शान्तिः शान्तिः) மூன்று விதமான துக்கம் இவ்வுலகத்திலிருக்கிறது. ஒன்று "அத்யாத்மிகம்" "அவித்தை" "ராகம்" "துவேஷம்" மடத்தனம், ஜ்வர முதலான, சரீரம் ஜீவன் இவைகளைப்பற்றின துக்கங்கள்.—இரண்டாவது "அதிபௌதிகம்" சத்ரு, புலி, பாம்பு முதலானவைகளினால் உண்டாகிறது.—மூன்றாவது "அதிதைவிகம்" அதாவது அதிக மழை அதிக சீதளம், அதிக உஷ்ணமுள்ள மனது, இந்திரியங்களுடைய அசாந்தி, இவைகளினால் உண்டாகிறது. இந்த மூவ்விதமான துக்கங்களை எங்களிடமிருந்து விலக்கிக் கல்யாண காரகங்களாயுள்ள கர்மங்களில் எப்பொழுதும் செல்லச்செய்யவேண்டும். ஏனென்றால் தாங்கள் கல்யாண ஸ்வரூபர். உலகம் முழுவதிற்கும் கல்யாணத்தைக் கொடுப்பவர். இதனாலேயே தாங்கள் தங்களுடைய ஸ்வய கருணையினால் எல்லா ஜீவன்களுடைய ஹிருதயத்திலும் பிரகாசிக்கிறீர். ஆனதுபற்றி

எல்லா ஜீவன்களும் தர்மங்களை ஆசரணைசெய்து அதர்மங்களைவிட்டுத் துக்கத்தினின்று விலகிப் பரமானந்தத்தில் அமரட்டும்.

18. சூரியன்.—

"सूर्य्य आत्मा जगतस्तस्थुषश्च"

யஜுர்வேத மந்திரம். உலகம் அதாவது சேதன பிராணிகளுக்கும், ஜங்கமமாவது, இங்குமங்கும் திரிகிறவைகளுக்கு, तस्थुषः "தஸ்துஷ:' அப்பிராணி அதாவது தாவர ஜட ப்ருத்வியாதிகள் முதலானவைகள் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயும், ஸ்வப்ரகாச ஸ்வரூபராயுமிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்குச் சூர்யன் என்று பெயர்.

19. பரமாத்மா.—"அத்" (வ்யாபிக்கிறது) என்னும் தாதுவிலிருந்து "ஆத்மா" என்னும் சப்தம் சித்த மாகின்றது.

"योऽतति व्याप्नोति स आत्मा" "परश्चासावात्मा च य आत्मभ्यो जीवेभ्यः सूक्ष्मेभ्यः परोऽतिसूक्ष्मः स परमात्मा"

எல்லா ஜீவாதி ஜீவனிலும் நிரந்தரமாய், பரவியிருக்கப்பட்டது ஆத்மா. சகல ஜீவன்களைக்காட்டிலும், மேம்பட்டவராயும், ஜீவப்ரகிருதி ஆகாசம், இவைகளைவிட அதிசூக்ஷ்மராயும், எல்லாஜீவன்களுக்கும் அந்தர்யாமியாயுயிருக்கிற ஆத்மா ஈச்வரனைபடியினாலே அவருக்கே "பரமாத்மா" என்றுபெயர்.

20. பரமேச்வரன்.—சாமர்த்தியமாய் உள்ளவருக்கு ஈச்வரன் என்று பெயர்.

"यः ईश्वरेषुसमर्थेषु परमः श्रेष्ठः स परमेश्वरः"

சமர்த்தர்களுக்கு (ஈச்வரன்) சமர்த்தனும், அவருக்கு நிகராய் ஒருவருமில்லாதபடியினால் அவருக்கு "பரமேச்வரன்" என்று பெயர்.

21. சவிதா.—"சு" (உண்டாக்கிறது) என்னும் தாதுவுடன் 'தா' ப்ரத்யயம் சேர்ந்து "சவிதா" சப்தம் சித்தமாகிறது.

(षुञ् अभिषवे, षूङ् प्राणिगर्भविमोचने) "अभिषवः प्राणिगर्भविमोचनं चोत्पादनम्। यश्चराचरं जगत् सुनोति सूते वोत्पादयति स सविता परमेश्वरः"

எல்லா ஜகத்தையும் உற்பத்தி செய்கிறபடியினால் பரமேச்வரனுக்கு "சவிதா" என்று பெயர்.

22. தேவன்.—

(दिवु क्रीडाविजिगीषाव्यवहारद्युतिस्तुतिमोदमदस्वप्नकान्तिगतिषु)

திவ (விளையாட்டு, விருப்பம், சபிக்க, வேலை, பிரகாசிக்கச்செய்ய, துதிக்க, தண்டிக்க, தூங்க,) தாதுவிலிருந்து 'தேவ' சப்தம் சித்தமாகிறது.

"கிரீடா" மாசற்ற உலகத்திற்கு விளையாட்டுச்செய்கிறவராயும்

"விஜிகீஷா" தார்மிகர்களை ஜெயிக்கிறதிற்கு இச்சை இருக்கிறவராயும்.

"வ்யவஹார" எல்லா சேஷ்டைகளுக்குச் சாதனோபசாதனங்களைக் கொடுக்கிறவராயும்

(த்யுதி) ஸ்வயம் பிரகாச ஸ்வரூபராயும், எல்லாவற்றையும் பிரகாசம் செய்கிறவராயும்,

(ஸ்துதி) துதிக்கயோக்கியராயும்

"மோத" ஆனந்த ஸ்வரூபராயும், மற்றவர்களுக்கு ஆனந்தம் கொடுக்கிறவராயும்

"மத" மதோன்மத்தத்தை யழிக்கிறவராயும்

"ஸ்வப்ன" எல்லாருடைய சுபசயனத்திற்கு இரவையும் பிரளயத்தையும் உண்டுபண்ணுகிறவராயும்

"காந்தி" எல்லோருடைய ஆசைக்குப்பாத்திரமாயும்

"கதி" ஞானஸ்வரூபராயுமிருக்கிறார். இதனாலேயே அப்பரமேச்வரனுடைய பெயர் "தேவர்"

"यो दीव्यति क्रीडति स देवः"

தன்னுடைய ஸ்வயரூபத்தில் மகிழ்ச்சியுள்ளவர். அல்லது ஒருவருடைய சகாயமின்றியும் சுய ஸ்வபாவத்தினால் எல்லா ஜகத்தையும் செய்து எல்லாக்கிரீடைகளுக்கும் ஆதாரமாயுள்ளவர் எவரோ அவரே தேவர்.

"विजिगिषते स देवः" எல்லாவற்றையும் ஜெயிக்கப்பட்டவர், அதாவது ஒருவராலும் ஜயிக்கக் கூடாதவராயும்

"व्यवहारयति स देवः" நியாய அநியாயங்களை அறிந்து கற்பிப்பவராயும்

"यश्चराचरं जगत् द्योतयति" எல்லா வற்றையும்விட ஒளியாயும்,

"यः स्तूयते स देवः" சகலமனிதர்களுடைய துதிக்கு ஏற்றவராயும் எவருடைய நிந்தைக்கும் சரியில்லாதிருக்கிற அவர்தான் "தேவர்"

"यो मोदयति स देवः" ஸ்வயம் ஆனந்த ஸ்வரூபராய் சகலருக்கும் ஆனந்தம் அளித்து இன்பம்துன்பம் கொஞ்சமேனுமில்லாத அவர் எவரோ.

"यो माद्यति स देवः" எக்காலமும் மக்களைச் சந்தோஷிக்கச்செய்து துக்கத்திலிருந்து தனியாய் நிற்பவர் எவரோ அவரே தேவர்.

"यः स्वापयति स देवः" பிரளய சமயத்தில் எல்லா ஜீவன்களுக்கும் சாந்தம் கொடுப்பவர் எவரோ

"यः कामयते काम्यते वा स देवः" எவருடைய கார்யமெல்லாம் உண்மையோ சிஷ்டர்கள் எல்லாம் எவரை அடைவதற்கு நற்காரியம் செய்கிறார்களோ

"यो गच्छति गम्यते वा स देवः" எல்லாவற்றிலும் பரவியும் அறிகிறதற்கும் யோக்யமுள்ளவர் எவரோ அந்தப் பரமேச்வரனுடைய பெயரே "தேவர்"

23. குபேரன்.—"க்வி" தாதுவிலிருந்து "குபேர" சப்தம் சித்தமாகிறது.

यः सर्वं कुवतिस्वव्याप्त्याच्छादयति स कुवेरो जगदीश्वरः

தான் சிருஷ்டி அனைத்திலும் வியாபித்திருப்பதால் பரமேச்வரனுக்குக் குபேரன் என்று பெயர்.

24. பிருதிவீ.—(ப்ரத்விஸ்தாரே) இந்த தாதுவிலிருந்து பிருத்வீ சப்தம் சித்தமாகிறது.

यः पृथते सर्वजगद्विस्तृणाति स पृथिवी

படைத்தும், படைப்பை, விஸ்தரித்துமிருப்பதால் பரமேச்வரனுக்கு "ப்ருதிவீ" என்று பெயர்.

25. ஜல.—(ஜல தாதனே) இந்த தாதுவிலிருந்து ஜல சப்தம் சித்தமாகிறது.

जलति घातयति दुष्टान्, संघातयति—अव्यक्तपरमाणवादीन् तद् ब्रह्म जलम्

துஷ்டர்களை அழித்தும், அணுக்களை பிரித்தும், சேர்த்தும், மாற்றியும் ஒன்றுகச்செய்தும், வருகிறபடியினால் பரமாத்மாவுக்கு "ஜல" மென்று பெயர்.

26. ஆகாஷ.—(காச்ரு தீப்தௌ) இந்த தாதுவிலிருந்து ஆகாஷ் சப்தம் சித்தமாகிறது.

यः सर्वतः सर्वं जगत् प्रकाशयति स आकाशः

எல்லா வழியிலும் அவர் ஜகத் ஒளியாயிருப்பதால் அவருக்கு "ஆகாஷ்" என்று பெயர்.

27. "அன்ன".—(அதபக்ஷணே) இந்த தாதுவிலிருந்து "அன்ன" சப்தம் சித்தமாகிறது.

28. அன்னுத்.— 29. அத்த.—

अद्यतेऽत्ति च भूतानि तस्मादन्नं तदुच्यते ॥

अहमन्नमहमन्नमहमन्नम् । अहमन्नादोऽहमन्नादोऽहमन्नादः

தைத்ரேய உபநிஷத், 2 அநுவாகம். 11.

अत्ताचराचरग्रहणात् ॥

வேதாந்த தர்சனே, பா 2 சூத்ரம் 9 11.

சகல சராசரங்கள் அவரிடத்தில் அடங்கியிருப்பதாலும் எல்லோரிலும் யோக்யரானபடியினுலும், சராசர ஜகத்திற்கு முக்யாதாரமாயிருப்பதாலும்

பரமேச்வரனுக்கு அன்ன, அன்னாத், அத்த, என்று மூன்று பெயர்கள் உண்டு. ஆகவே உபநிஷத்தில் அவர் நாமம் மும்முறை கூறப்படுகிறது. "குலார்" அத்திப்பழத்தினுள் கிருமிகள் உற்பத்தியாகி, வசித்து, எங்ஙனம் அழிகிறதோ அங்ஙனமே பரமேச்வரனிடத்தில் ஜகமும்.

30. வசு.—(வசநிவாஸே) இந்த தாதுவிலிருந்து "வசு" சப்தம் சித்திக்கிறது.

वसन्ति भूतानि यस्मिन्नथवा यः सर्वेषु वसति स वसुरीश्वरः

எவரிடத்தில் சகல ஆகாசாதி பூதங்கள் வசிக்கின்றனவோ, எவர் அவை எல்லாவற்றிலும் வசிக்கிறாரோ, அவருக்கே "வசு" என்று பெயர்.

31. ருத்ரன்.—(ருதிர் அச்ரு விமோசனே) இந்த தாதுவுடன் "ணிச்" ப்ரத்யயமாகிறபடியினால் "ருத்ர" சப்தம் சித்தமாகிறது.

यो रोदयत्यन्यायकारिणो जनान् स रुद्रः

துஷ்க்கர்மங்கள் செய்கிறவர்களை அழச்செய்கிறவர் எவரோ அவர் பெயரே ருத்ரன்.

यन्मनसा ध्यायति तद्वाचा वदति यद्वाचा वदति तत्
कर्मणा करोति यत् कर्मणा करोति तदभिसम्पद्यते ॥

இது யஜுர்வேத பிராமணத்தினுடைய வசனம். மனிதன் மனவெழுச்சி பேச்சாக வெளிவருகிறது. அங்ஙனம் வெளிவரும் வார்த்தைகள் செயலாகமாறுகிறது. துஷ்ட கர்மங்களைச்செய்யும் ஜீவன் ஈஸ்வரனுடைய நியாயாவஸ்தையை ஒட்டி துக்கத்தை அடைந்து வியசனப்படுகிறான். பின்னர் செயல் நிகழ்சிக்கு ஏற்ப, பலன் ஏற்படுகிறது. இங்ஙனம் அழச்செய்கிறபடியினால் அவருக்கு ருத்ரன் என்று பெயர்.

32. நாராயணன்.—ஜலத்திற்கும், ஜீவனுக்கும் "நாரா" என்று பெயர். அயனம்" என்றால் நிவாசஸ்தானம்.

आपो नारा इति प्रोक्ता आपो वै नर सूनवः ।
ता यदस्यायनं पूर्वं तेन नारायणः स्मृतः ॥ மனு, I-10

எல்லா ஜீவன்களிடத்திலும் வ்யாபகமாயிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு நாராயணன் என்று பெயர்.

33. சந்திரன்.—"சதி" என்னும் தாதுவிலிருந்து "சந்திர" சப்தம் (அனந்தம்) உண்டாகிறது.

यश्चन्दति चन्दयति वा स चन्द्रः

ஆனந்த ஸ்வரூபராய், எல்லாவற்றிற்கும் ஆனந்தத்தைக் கொடுக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு "சந்திரன்" என்று பெயர்.

34. மங்களம்.—"மகி" தாதுவுடன் "அல்" ப்ரத்யயம் சேர்ந்து மங்கள சப்தம் சித்தமாகிறது.

यो मङ्गति मङ्गयति वा स मङ्गलः

எவர் மங்களஸ்வரூபராய், எல்லா ஜீவன்களுடைய மங்களத்திற்குங் காரணமாயிருக்கிறாரோ அவருடைய பெயரே "மங்களம்"

35. புத்தன்.—புத், (அறிய) என்னும் தாதுவிலிருந்து புத்த சப்தம் சித்தமாகிறது.

यो बुध्यते बोधयति वा स बुधः

ஸ்வயம் போதஸ்வரூபராயும், எல்லா ஜீவன்களுடைய போதத்திற்குங்காரணமாயிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்குப் புத்தன் என்று பெயர்.

பிரகஸ்பதியின்—அர்த்தம் முன்னமே கூறப்பட்டுள்ளது.

36. சுக்கிரன்.—"சு" (சுத்தம் செய்ய) என்னும் தாதுவுடன் "க்ர" பிரத்யயமாய் "சுக்கிர" சப்தம் சித்தமாகிறது.

यः शुच्यति शोचयति वा स शुक्रः

எவர் அத்யந்த பவித்ரரும், எவருடைய சங்கத்தினால் ஜீவன்களுக்கு பரிசுத்தமும் உண்டாகிறதோ அந்த ஈச்வரனுக்கே சுக்கிரன் என்றும் பெயர்.

37. சனைச்சர்.—"சர்" (வியாபிக்க) சர கதிபக்ஷணயோ: என்னும் தாதுவுடன் "சனை" ப்ரத்யயமடைந்து "சனைஸ்சர்" சப்தம் சித்தமாகிறது.

यः शनैश्चरति स शनैश्चरः

தனது தன்மையால் எங்கும வியாபித்து பராக்கிரமும், கருணையும் உள்ளவராய் இருப்பதால் பரமேச்வரனுக்குச் சனைஸ்ச்சரன் என்று பெயர்.

38. ராகு.— "ரஹா" என்னும் தாதுவிலிருந்து ராஹு சப்தம் சித்தமாகிறது.

यो रहति परित्यजति दुष्टान् राहयति त्याजयति वा स राहुरीश्वरः

எவர் ஏகாந்தஸ்வரூபராயும், எவருடைய ஸ்வரூபத்தில் வேறு கலப்புப் பொருள் இல்லையோ, எவர் துஷ்டர்களைவிட்டு மற்றவர்களைக் காப்பாற்றுகிறாரோ, அவருக்கே இந்தப்பெயர். ஆகையினால் பரமேச்வரனுக்கே "ராகு" என்று பெயர்.

39. கேது.—"கித்" தாதுவிலிருந்து "கேது" சப்தம் சித்தமாகிறது.

यः केतयति चिकित्सति वा स केतुरीश्वरः

எல்லாஜகத்திற்கும் நிவாசஸ்தானமாயும், ரோகிகளையும், முமுக்ஷுகர்களையும், முக்திசமயத்தில் விடுவிக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு "கேது" என்று பெயர்.

40. யக்ஞ.—"யஜ" தாதுவிலிருந்து யக்ஞ சப்தம் உண்டாகிறது.

यज्ञो वै विष्णुः பிராம்மண கிரந்த வாக்கியம்

यो यजति विद्वद्भिरिज्यते वा स यज्ञः

அவர் ஜகத்தின் பதார்த்தங்களைச் சம்யுக்தம் செய்கிறபடியினாலும், வித்வான்களுக்கெல்லாம் பூஜ்யராயிருக்கிறபடியினாலும், பிரம்மா முதல் எல்லா ரிஷிகளினாலும் பூஜிக்கப்படுகிறபடியினாலும், அந்தப் பரமேச்வரனுக்கே "யக்ஞன்" என்று பெயர். அவர் சர்வாந்தர வ்யாபகர்.

41. ஹோதா:—ஹு (கொடுக்க) என்னும் தாதுவுடன் 'த்' ப்ரத்யயமடைந்து "ஹோதா" சப்தம் சித்தமாகிறது.

हु दानादनयोः, आदाने चेत्येके ॥ यो जुहोति स होता

அவர் ஜீவன்களுக்குக் கொடுக்கவேண்டிய யோக்யமான பதார்த்தங்களைத் தருகிறபடியினாலும், கிரஹிப்பதற்கு யோக்யமானதைக் கிரஹிக்கிறபடியினாலும், அந்தப்பரமேச்வரனுக்கே "ஹோதா" என்று பெயர்.

42. பந்து:—"பந்த" (கட்டுகிறது) என்னும் தாதுவுடன் "உ" ப்ரத்யயம் சேர்ந்து "பந்து" சப்தம் சித்தமாகிறது.

यः स्वस्मिन् चराचरं जगद् बध्नाति बन्धुवद्धर्मात्मनां सुखाय सहायो वा वर्त्तते स बन्धुः

சகல லோகாந்திரங்களையும் தன்னுடைய நியமனத்தினால் கட்டுப்படுத்தி அவைகள், தங்களுடைய மண்டலங்களிலிருந்தும், நியமங்களிலிருந்தும் எல்லை கடக்காமல் வைத்திருக்கிறார். சகோதரனைப்போல் துணையாயிருந்து பரமேச்வரன் ப்ரத்வ்யாதி லோகங்களைத்தரித்து ரக்ஷித்து சுகத்தைத்தருகிறபடியினால் ஈச்வரனுக்குப் பந்து வென்று பெயர்.

43. பிதா.—"பா" (காப்பாற்ற) என்கிற தாதுவுடன் "தா" ப்ரத்யயம் சேர்ந்து "பிதா" சப்தம் உண்டாகிறது.

पा रक्षणे ॥ यः पाति सर्वान् स पिता

எல்லாவற்றிற்கும், ரக்ஷகராய், எங்ஙனம் தகப்பனானவர் தன் குழந்தைகளின்பேரில் எப்பொழுதும் தயை கொண்டு அவர்களுடைய மேன்மையை விரும்புகிறாரோ அங்ஙனமே பரமேச்வரன் எல்லா ஜீவன்களுடைய மேன்மையை விரும்புகிறார். ஆதலால் பரமேச்வரனுக்கு "பிதா" என்று பெயர்.

44. பிதாமஹ.—

यः पितॄणां पिता स पितामहः ॥

பரமேச்வரன் பிதாக்களுக்குப் பிதாவாயிருக்கிறபடியினால், "பிதாமஹ" என்று பெயர்.

45. ப்ரபிதாமஹ—

यः पितामहानां पिता स प्रपितामहः ॥

பிதாவினுடைய பிதாக்களுக்குப்பிதாவாயிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்கே " ப்ரபிதாமஹ " என்று பெயர்.

46. மாதா.—" மா " என்னும் தாதுவுடன் " தா " ப்ரத்யயம் சேர்ந்து " மாதா " சப்தம் சித்தமாகிறது.

यो मिमीते मानयति सर्वाञ्जीवान् स माता ॥

பூர்ண தயையுடன் தாயாரானவள் தன் சந்ததிகளுடைய சுகத்தையும், உன்னத ஸ்திதியையும் விரும்புகிறதுபோல் பரமேச்வரன் சகல ஜீவன்களுடைய விருத்தியை விரும்புகிறபடியினால் " மாதா " என்று பெயர்.

47. ஆசார்ய".— " சர் " என்னும் தாதுவிடன் " ஆ " உபசர்கபூர்வகமும், " ய " ப்ரத்யயமும் சேர்ந்து " ஆசார்ய " சப்தம் சித்தமாகிறது.

चरगतिभक्षणयोः। य आचारं ग्राह्यति सर्वा विद्या वा बोधयति स आचार्य ईश्वरः

சத்யாசாரம் செய்கிறவரிடத்தில் அன்புள்ளவராயிருக்கிறபடியினாலும், எல்லா வித்தைகளுடைய ப்ராப்திக்குக் காரணமாயிருக்கிறபடியினாலும், பரமேச்வரனுக்கு " ஆசார்ய " என்று பெயர்.

48. குரு.—" க்ரி " என்னும் தாதுவிலிருந்து " குரு " சப்தம் உண்டாகிறது.

गृ शब्दे। यो धर्म्यान् शब्दान् गृणात्युपदिशति स गुरुः ॥

स पूर्वेषामपि गुरुः कालेनानवच्छेदात् ॥

(யோக சாஸ்திரம் சமாதி பாதம் 26)

சத்ய தர்ம பரிபாதக சகலவித்யாயுக்த வேதங்களை உபதேசிப்பவரும், சிருஷ்டியினாதியில் அக்னி, வாயு, ஆதித்யன், அங்கிரா, பிரம்மாதி குருவுக்குக் குருவாயும், நாசமென்பதை எந்நாளும் அடையாதவராயுமிருக்கிற அந்தப் பரமேச்வரனுக்கே " குரு " என்று பெயர்.

49. அஜ.—" அஜ " என்னும் தாதுவிலிருந்து இச்சப்தம் வருகிறது.

अज गतिक्षेपणयोः, जनी प्रादुर्भावे। योऽजति सृष्टिं प्रति सर्वान् प्रकृत्यादीन् पदार्थान् प्रक्षिपति जानाति वा कदाचित् न जायते सोऽजः

எவர் எல்லா பிரகிருதியுடைய அவயவ ஆகாசாதி பூதப்பிரமாணங்களை வேண்டியவாறு சேர்த்துச் சரீரத்துடன் ஜீவனை சம்பந்தம்செய்து ஜன்மத்தை அளிக்கிறாரோ, எவர் எப்பொழுதும் ஜன்மத்தை எடுக்கிறதில்லையோ, அந்த ஈச்வரனுக்கே " அஜ " என்று பெயர்.

50. பிரம்மா.—" ப்ரஹ " என்னும் தாதுவிலிருந்து " பிரம்மா " சப்தம் சித்தமாகிறது.

बृहि वृद्धौ। योऽखिलं जगन्निर्माणेन बृंहति वर्द्धयति स ब्रह्मा ॥

சம்பூர்ண ஜகத்தை ஆக்கி விருத்திசெய்கிற அப்பரமேச்வரனுக்கே பிரம்மா வென்று பெயர்.

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म ॥

(தைத்ரேய உபநிஷத்) பரமேச்வரனுக்கு சத்யம், ஞானம், அனந்தம், என்றும் பெயர்கள் உண்டு.

51. "சத்ய".—

सन्तीति सन्तस्तेषु सत्सु साधु तत्सत्यम् ॥

எப்பொருள்களிருக்கின்றனவோ அவைகள் யாவற்றிலும் "ஸாது" உண்மையான உருவமாய் அமைந்திருக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு "சத்ய" என்று பெயர்.

52. ஞான.—

यज्जानाति चराऽचरं जगत्तज्ज्ञानम् ॥

சகல சராசர ஜகத்தை அறிகிறபடியினால் பரமேச்வரனுக்கு "ஞான" மென்று பெயர்.

53. அனந்த.—

न विद्यतेऽन्तोऽवधिर्मर्यादा यस्य तदनन्तम् ।

எவருக்கு அந்தம், அவதி, மரியாதை, அதாவது நீளம், அகலம், சிறியது, பெரியது, என்ற பரிமாணங்களில்லையோ அந்தப் பரமேச்வரனுக்கே "அனந்த" என்று பெயர்.

54. அனாதி.—"தோ" என்னும தாதுவுடன் "அண்" உபசர்க பூர்வகம் சேர்ந்து "அனாதி" சப்தம் சித்தமாகிறது.

डुदाञ् दाने । यस्मात् पूर्वं नास्ति परं चास्ति स आदिरित्युच्यते, न विद्यते आदिः कारणं यस्य सोऽनादिरीश्वरः ॥

அவருக்கு முன் யாருமில்லை. அவர் யாரையும் மிந்தியவர். எல்லோரும் அவரைத் தொடருகிறவர்களே. ஆகையினால் அந்த ஈச்வரனுக்கே அனாதி என்று பெயர்.

55. ஆனந்த்.—"னந்த்" என்னும் தாதுவுடன் "ஆ" ப்ரத்யயம் சேர்ந்து "ஆனந்த" சப்தம் சித்தமாகிறது.

आनन्दन्ति सर्वे मुक्ता यस्मिन् यद्वा यः सर्वाञ्जीवानानन्दयति स आनन्दः ॥

எந்த ஆனந்த ஸ்வரூபத்தில் முக்த ஜீவன்கள் ஆனந்தமடைகிறார்கள், தர்மாத்மா முதலான ஜீவன்களுக்கு எவர் ஆனந்தம் அளிக்கிறாரோ அந்தப் பரமேச்வரனுக்கே "ஆனந்தம்" என்று பெயர்.

56. ஸத்.—"அஸ்" என்னும் தாதுவிலிருந்து "ஸத்" (இருப்பவை) சப்தம் சித்தமாகிறது.

अस भुवि । यदस्ति त्रिषु कालेषु न बाध्यते तत्सद् ब्रह्म ॥

69. தேவி.—

ब्रह्म चितिरीश्वरश्चेति ॥

"தேவ" சப்தத்திற்கு எவ்வளவு அர்த்தம் கண்டோமோ அவ்வளவு அர்த்தம் இதற்கும் கொள்ளவேண்டும். பரமேச்வரனின் நாமங்கள் மூன்று பால்களால் குறிக்கப்பட்டிருக்கிறது. ஈச்வரனைக்குறிக்கவேண்டியிருந்தால் "தேவ" சப்தத்தை உபயோகிக்கிறோம். "சித்" (பெண்பாலை) குறிக்கவேண்டியிருந்தால் தேவி சப்தத்தை உபயோகிக்கிறோம். ஆகையினால் "தேவி" என்பது பரமேச்வரனின் பெயரே.

70. சக்தி.—"சக்" (வல்லமை) என்னும் தாதுவிலிருந்து "சக்தி" சப்தம் சித்தமாகிறது.

शक्लृ शक्तौ । यः सर्वं जगत् कर्तुं शक्नोति स शक्तिः॥

இப்பூலோக முழுவதையும் சிருஷ்டிக்க வல்லமையுள்ளவராகையினால் பரமேச்வரனுக்கு "சக்தி" என்று பெயர்.

71. ஸ்ரீ:.—"ச்ரி" சேவிக்க என்னும் தாதுவிலிருந்து "ஸ்ரீ" சப்தம் சித்தமாகிறது.

श्रिञ् सेवायाम् । यः श्रीयते सेव्यते सर्वेण जगता विद्वद्भिर्योगिभिश्च स श्रीरीश्वरः ॥

அவரையே சமஸ்த ஜகமும், மேதைகளும், யோகிகளும், பணிகிறார்கள். ஆகையினால் பரமேச்வரனுக்கு ஸ்ரீ என்று பெயர்.

72. லக்ஷ்மீ.—"லக்ஷ்" (பார், அடையாளம்,) என்னும் தாதுவிலிருந்து (லக்ஷ்மி) சப்தம் சித்தமாகிறது.

लक्ष दर्शनाङ्कनयोः । यो लक्षयति पश्यत्यङ्कते चिह्नयति चराचरं जगदथवा वेदैराप्तैर्योगिभिश्च यो लक्ष्यते स लक्ष्मीः सर्वप्रियेश्वरः ॥

சராசரமான சர்வஜகத்தைப் பார்க்கிறார். அவைகளுக்கு உருவத்தை ஏற்படுத்துகிறார். மேலும், சரீரத்திற்கு, கண் மூக்கு முதலானவைகளையும், மரங்களுக்கு இலை, பல, மூலங்களையும், கருப்பு, செகப்பு வெண்மை நிறங்களையும், பூமியிலும், ஜலத்திலும் இருக்கிற மண்களுக்கும், கற்களுக்கும, சூர்ய சந்திராதிகளுக்கும், உருவத்தை ஏற்படுத்தி, அடையாளங்களைச் செய்கிறார். சகல பிரகாசங்களைவிட ஒளியில் சிறந்தவராயும், வேதாதி சாஸ்திரங்களுக்கும், தர்மாத்மாக்களுக்கும், ஞானிகளுக்கும், யோகிகளுக்கும், பார்ப்பதற்கு யோக்யமாயிருக்கிறார். ஆகையினால் அந்தப் பரமேச்வரனுக்கே "லக்ஷ்மி" என்று பெயர்.

73. சரஸ்வதி.—("ஸ்ரு கதௌ") "ஸ்ரு" (போவதற்கு) என்னும் தாதுவுடன் "ஸரஸ்" என்றாகிறது. "வத்" "ஙீ" என்னும் ப்ரத்யயங்களுடன் சரஸ்வதி சப்தம் சித்தமாகிறது.

सरोविविधं ज्ञानं विद्यते यस्यां चितौ सा सरस्वती ॥

அவருக்கு பற்பல விக்ஞானம் முதலானதும், சப்த, அர்த்த, சம்பத்தினுடைய உண்மை ஞானமமுமிருக்கிறபடியினால், "சரஸ்வதி" என்று பெயர்.

74. சர்வசாக்ஷிமான்.—

सर्वाः शक्तयो विद्यन्ते यस्मिन् स सर्वशक्तिमानीश्वरः ॥

தன் கார்யங்களைச்செய்வதில், பரமேச்வரன் அன்னிய சகாயத்தைக்கோருகிற தில்லை. தன் வல்லமையினால் தன்னுடைய சகல கார்யங்களையும் தானாகவே பரிபூர்ணம் செய்துகொள்ளுகிறார். ஆகையினால் பரமேச்வரனுக்குச் "சர்வ சாக்ஷிமான்" என்று பெயர்.

75. நியாயகாரி.—"நி" (அடைதவற்கு) "க்ரி" (செய்வதர்க்கு) என்னும் தாதுக்களுடன் "இன்" ப்ரத்யயமடைந்து "நியாயகாரி" என்னும் சப்தம் சித்திக்கிறது.

णीञ् प्रापणे । प्रमाणैरर्थपरीक्षणं न्यायः ।

पक्षपातरहित्याचरणं न्यायः ।

न्यायं कर्त्तुं शीलमस्य स न्यायकारीश्वरः ॥

நியாய சாஸ்திரத்திற்கு வாத்யாயன மகரிஷி செய்திருக்கும் பாஷ்யத்திலிருந்து மேற்சொன்ன வாக்யம். ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களினால் சத்யமாய்த் தரிசிக்கிறதிற்கும், பக்ஷபாதமின்றி ஆசரணை செய்யப்படுகிறதிற்கும் "நியாயம்" என்று பெயர். பக்ஷபாதமன்றி தர்மப்ரகாரம் நியாயம் செய்வது அவருடைய இயற்கையாகையினால், பரமேச்வரனுக்கு "நியாயகாரி" என்று பெயர்.

76. தயாளு.—

दय दानगतिरक्षणहिंसादानेषु

दयते ददाति, जानाति, गच्छति, रक्षति, हिनस्ति, यया सा दया

बह्वी दया विद्यते यस्य स दयालुः परमेश्वरः ॥

"தய" (அடைவதற்கு, காப்பாற்றுவதற்கு, கொடுப்பதற்கு, ஹதம், சய்வதற்கு, வாங்கிக்கொள்ளுவதற்கு) என்னும் தாதுவுடன் "ளு" ப்ரத்யயஞ் சேர்ந்து "தயாளு" சப்தம் சித்தமாகிறது.

அபயம் கொடுக்கிறவராயும் சத்யாசத்தியத்தையும், சகல வித்தைகளையும் அறிகிறவராயும், சமஸ்த ஸஜ்ஜனங்களை ரக்ஷிக்கவராயும், துஷ்டர்களை தக்கவாறு தண்டிக்கிறவராயுமிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்குத் தயாளு என்று பெயர்.

77. அத்வைத.—

द्वयोर्भावो द्विता द्वाभ्यामितं द्वीतं वा सैव तदेव वा द्वैतम्, न विद्यते द्वैतं द्वितीयेश्वरभावो यस्मिंस्तदद्वैतम् ॥

த்வைதத்திலிருந்து பரமேச்வரர் ஒருவரே வேருயிருக்கிறபடியினுலும், மனித னுக்கு மனிதன் துணையாயிருப்பதுபோல் பரமேச்வரனுக்கு யாரும் இல்லா திருப்பதினுலும் மனிதனுடைய யோசனுசக்திக்கு எதிராய் யோஜனு சக்தியற்ற கல், மண், மரம், முதலான ஜட பதார்த்தங்கள் இருப்பதுபோல் அவருக்கு எதிராய்ஒன்றும் இல்லாமலிருக்கிறபடியினுலும், மனிதனுக்குக் கண் மூக்கு முதலான அவயவ ரூபபேதங்கள் பின்னமாயிருப்பதுபோல் அவருக்கு இல்லா தயடியினுலும் பரமேச்வரனுக்கு "அத்வைதன்" என்று பெயர். ஆகையினுல் பரமேச்வரன் அத்வைத தன்மையினுல் விளங்குகிருர்.

78. "நிர்குணம்"

சத்துவம், ராஜசம், தாமசம், உருவ வறிவு, சுவையறிவு, பரிசவறிவு, முதலான ஜடகுணங்களிலிருந்தும், அவித்தை, அல்பக்ஞதை, ராகம், தவேஷம், முத லான ஜீவராசிகளுடைய குணங்களிலிருந்தும் வேருயிருக்கிறபடியினுல் பரமேச்வரனுக்கு "நிர்குணன்" என்று பெயர். உபநிஷத்துக்களும் இதை சித்தாந்தம் செய்கின்றன. உதாரணமாக.

गण्यन्ते ये ते गुणा वा यैर्गणयन्ति ते गुणाः, यो गुणेभ्यो निर्गतः स निर्गुण ईश्वरः ॥

अशब्दमस्पर्शमरूपमव्ययम्॥

கடோபநிஷத். பரமேச்வரன். சப்த, ஸ்பர்ச, ரூபாதி குணங்களிலிருந்து வேருயிருக்கிருர்.

79. "சகுணம்"—

यो गुणैः सह वर्त्तते स सगुणः ॥

எல்லாவற்றினுடைய ஞானத்தை உடையவராயும் சர்வசுகியாயும், பரிசுத்த ராயும், அனந்த குணங்கள் அவரிடத்தில் இருக்கிறபடியினுலும் பரமேச்வரனு க்குச் "சகுணன்" என்று பெயர்.

(ग) கந்தாதி குணங்களைக் கொண்டிருக்கிறபடியினுல், பூமியை (சகுண) மென்றும், இச்சாதி குணங்கள் இல்லாதபடியினுல் பூமியை (நிர்குண) என் றும் சொல்லப்படுகிறது. அது போலவே, பரமேச்வரனுக்கு "சகுணன்" என் றும்" "நிர்குணன்" என்றும் பெயர்கள் உண்டு. ஜீவாதிகுணங்களினுல் அடை யக்கூடாதவராயிருப்பதினுல், பரமேச்வரனுக்கு "நிர்குணன்" என்றும் சர்வக் ஞாதிகுணங்களைக்கொண்டிருக்கிறபடியினுல் "சகுணரென்றும்"பெயர்களாகும். எப்படி சேதனகுணங்களிலிருந்து வேருகயிருந்தால் ஜடபதார்த்தங்களை "நிர் குண" மென்றும் தன்குணங்களோடு சேர்ந்திருந்தால் "சகுண" மென்றும் சொல்லுகிருேமோ அப்படியே ஜடகுணங்களிலிருந்து வேருகயிருப்பதினுல் ஜீவனை "நிர்குணன்" என்றும், இச்சாதி தன் குணங்களோடு கூடி யிருப்பதினுல் "சகுணன்" என்றும் சொல்லுகிருேம். அப்படியே பரமேச்வர னுக்கும்.

80. அந்தர்யாமி :—

अन्तर्यन्तुं नियन्तुं शीलं यस्य सोऽयमन्तर्यामी

சமஸ்தமான பிராணி, அப்ராணி, ரூபத்திற்கும், ஜகம்யாவற்றிற்கும், தலைவராய் எல்லாவற்றையும் நியமிக்கிறவர். ஆகையினால் பரமேச்வரனுக்கு "அந்தர்யாமி" என்று பெயர்.

81. தர்மராஜ :—

यो धर्मे राजते स धर्मराजः

தர்மம் எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்கிறவராயும், அதர்மத்தை அழித்து தர்மத்தையே பக்ஷபாதமின்றி நிலைநிறுத்துகிறவராயுமிருக்கிற படியினால் பரமேச்வரனுக்கு "தர்மராஜா" என்று பெயர்.

82. எமன்:—"யம்" (அடக்க) என்னும் தாதுவிலிருந்து "எம" சப்தம் சித்தமாகிறது.

यमु उपरमे । यः सर्वान् प्राणिनो नियच्छति स यमः

சமஸ்த பிராணிகளுடைய கர்மபலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாட்டைச் செய்கிறவராயும், சமஸ்த அநியாயங்களிலிருந்து வேறானபடியினாலும் பரமேச்வரனுக்கு "எமன்" என்று பெயர்.

83. பகவான்:—"பாஜ்" என்னும் தாதுவிலிருந்து "பாக்" என்னும் சப்தமும், "பாக்" என்னும் சப்தத்திலிருந்து "பகவான்" சப்தமும் சித்தமாகிறது.

भज सेवायाम् । भगः सकलैश्वर्य्यं सेवनं वा विद्यते यस्य स भगवान् ॥

சகல ஐஸ்வரியங்களுக்கு ஈச்வரனும், பூஜிப்பதற்கு யோக்யமாயுமிருக்கிறபடியினால் பரமேச்வரனுக்கு "பகவான்" என்று பெயர்.

84. மனு :—

मन ज्ञाने । यो मन्यते स मनुः ॥

"மன்" (யோசனைசெய்ய) என்னும் தாதுவிலிருந்து "மனு" சப்தம் சித்தமாகிறது. விக்ஞான சீலராயும், பூஜை செய்வதற்கு அவர் ஒருவரே அருகராயுமிருக்கிறபடியினால் "பரமேச்வரனுக்கு" "மனு" என்று பெயர்.

85. புருஷ :—(ப்ருபாலன கரணயோ:)

पॄ पालनपूरणयोः । यः स्वव्याप्त्या चराऽचरं जगत् पृणाति पूरयति वा स पुरुषः॥

இந்த தாதுவிலிருந்து "புருஷ" சப்தம் சித்தமாகிறது. ஜகமுழுவதும் பரமேச்வரன் பூர்ணமாயிருக்கிறார். ஆகையினால் அவருக்கே "புருஷ" என்று பெயர்

86. விச்வம்பர் :—"ப்ரி" (போஷிக்க, பிடிக்க) என்னும் தாதுவுடன் "விச்வ" உபசர்கமாய் "விஸ்வம்பர" சப்தம் சித்தமாகிறது.

डुभृञ् धारणपोषणयोः । यो विश्वं बिभर्त्ति धरति पुष्णाति वा स विश्वम्भरो जगदीश्वरः ॥

பரமேச்வரன் ஜகத்தைத்தரித்துப் போஷிக்கிறூர். ஆகையினுல் அவருக்கு விச்வம்பர் என்று பெயர்.

87. "காலன்":—"கால்" (எண்ண) என்னும் தாதுவுடன் "அ" ப்ரத்யயமடைந்து "கால" சப்தம் சித்தமாகிறது.

कल संख्याने । कलयति संख्याति सर्वान् पदार्थान् स कालः ॥

ஜகத்தினுடைய சகல பதார்த்தங்களையும், ஜீவன்களையும், எண்ணுகிறூர். ஆகையினுல் பரமேச்வரனுக்கு "காலன்" என்று பெயர்.

88. சேஷ:—

शिष्लृ विशेषणे । यः शिष्यते स शेषः

ஜகத்தினுடைய உத்பத்திக்கப்புறமும், ப்ரளயத்திற்கப்புறமும், மீதியாய் பரமேச்வரன் இருப்பதினுல் அவருக்கு "சேஷ" என்று பெயர்.

89. ஆப்தன்:—"ஆப்" (பரவ) என்னும் தாதுவுடன் "த" ப்ரத்யயமாய் "ஆப்த" சப்தம் சித்தமாகிறது.

आप्लृ व्याप्तौ । यः सर्वान् धर्मात्मन आप्नोति वा सर्वैर्धर्मात्मभिराप्यते छलादिरहितः स आप्तः

சத்யோபதேசம் செய்கிறவராயும், சகலவித்யா யுக்தராயும், சகலதர்மாத்மாக்களால் அடையக்கூடியவராயும், சகல தர்மாத்மாக்களால் துதிப்பதற்கு யோக்யமாயும், கபடம், பொய், முதலானவைகளிலிருந்து வேறுயிருக்கிறபடியினுலும் பரமேச்வரனுக்கு "ஆப்த" என்று பெயர்.

90. "சங்கரன்:—"க்ரி" (செய்வதற்கு) என்னும் தாதுவுடன் "சம்" (நல்லது) என்பது உபசர்கமடைந்து "அ" ப்ரத்யயமும் சேர்ந்து "சங்கரன்" என்னும் சப்தம் சித்தமாகிறது.

डुकृञ् करणे । यः शङ्कल्याणं सुखं करोति स शङ्करः

நல்லதைச் செய்து எல்லோருக்கும் கல்யாண குணங்களையும், சுகங்களையும், கொடுக்கிறபடியினுல் பரமேச்வரனுக்குச் சங்கரன் என்று பெயர்.

91. மகாதேவன்:—"தேவ" சப்தத்துடன் "மகத்" உபசர்க்கமாவதினுல் "மகாதேவ" சப்தம் சித்தமாகிறது.

यो महतां देवः स महादेवः ॥

தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவராயிருப்பதினுல் பரமேச்வரனுக்கு "மகாதேவன்" என்று பெயர். எப்படியென்றுல், மேதைகள் யாவர்க்கும் பெரியவராயும் சூர்யாதி பிரகாசங்களுக்கும் ஒளி தருபவர்.

92. ப்ரியன்:—

प्रीञ् तर्पणे कान्तौ च । यः पृणाति प्रीयते वा स प्रियः ॥

"ப்ரீ" (திருப்தியடைவது) என்னும் தாதுவிலிருந்து "ப்ரிய" சப்தம் சித்தமாகிறது. சமஸ்த தர்மாத்மாக்களேயும், முமுக்ஷுகர்களேயும், சிஷ்டர்களேயும், திருப்தி செய்வதும் அன்றி எல்லாருடைய பிரியத்திற்கும் பாத்திரமாயிருக்கிறார். ஆகையினால் பரமேச்வரனுக்கு "பிரிய" என்று பெயர்.

93. ஸ்வயம்பூ :—

भू सत्तायाम् । यः स्वयं भवति स स्वयम्भूरीश्वरः ॥

"பூ" (இருப்பதற்கு) என்னும் தாதுவுடன் "வயம்" (தானகவே) உபஸர்கமாய் "ஸ்வயம்பூ" சப்தம் சித்தமாகிறது. தனக்குத் தானும் ஆக்கப்படாதவராயும் இருப்பதால் பரமேச்வரனுக்கு "ஸ்வயம்பூ" என்று பெயர்.

94. கவி :—

कु शब्दे । यः कौति शब्दयति सर्वा विद्या स कविरीश्वरः ॥

"கு" (உபதேசிக்க, சப்திக்க) என்னும் தாதுவிலிருந்து கவி சப்தம் சித்தமாகிறது. வேதங்களால் எல்லாவிதமான வித்தைகளேயும் உபதேசித்து, தானும் அவைகளே யறிந்திருப்பதினால் பரமேச்வரனுக்கு "கவி" என்று பெயர்.

95. சிவன்:—

शिवु कल्याणे । बहुलमेतन्निदर्शनम् ॥

"சிவ" (மங்களகரமான) என்னும் தாதுவிலிருந்து சிவ சப்தம் சித்தமாகிறது. கல்யாண ஸ்வரூபராய், கல்யாண குணங்களே உடையவராய், கல்யாணத்தையே செய்கிறார். ஆகையினால் பரமேச்வரனுக்கு "சிவன்" என்று பெயர்.

இதற்கு முந்தி பரமேச்வரனின் ஐந்து நாமங்களேயும் (ஓம், திவ்விய, சுபர்ன, கருத்மான், மாதரீச்வான்) விவரிக்கபட்டிருக்கின்றன. இப்பொழுது மீதியான தொண்ணூற்றைந்து நாமங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படியாக அந்தப்பரமேச்வரனுடைய நூறுநாமங்களும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளன்னியில், இன்னும் கணக்கற்ற நாமங்கள் பரமேச்வரனுக்கிருக்கின்றன. எம்மாதிரி பரமேச்வரனுடைய குண கர்ம ஸ்வபாவங்கள், எண்ணிறந்தவைகளோ, அப்படியே அவைகளேக் குறிக்கின்ற நாமங்களும் எண்ணிறந்தவைகளே. அவைகள், ஒவ்வொன்றும், அவருடைய குணகர்ம ஸ்வபாவமொன்றைக் குறிகின்றது. ஆகையினால் இப்பொழுது என்னால் எழுதப்பட்டது சமுத்திரத்திற்கு ஒரு துளியை ஈடுவது போலிருக்கிறது. ஏனென்றால் வேதாதி சத்யசாஸ்திரங்களில் பரமேச்வரனுடைய குணகர்ம ஸ்வபாவங்கள் கணக்கற்றதாய் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளேப் படிப்பதும், போதிப்பதும், மனதைத் தெளிவாக்குகின்றது. வேதாதி சாஸ்திரங்களேப் படிக்கிறவர்களுக்கு அன்னிய பதார்த்தங்களுடைய ஞானமும் உண்டாகிறது.

வினு.—இதர நூலாசிரியர்கள், கிரந்தத்தின் முதலிலும், மத்தியிலும், முடிவிலும், மங்களாசரணம் எழுதுகிறார்களே, நீங்கள் ஏன் அப்படிச் செய்யவில்லை ?

விடை.—அப்படிச் செய்வது சரியல்ல. எப்படி என்றால் ஆரம்பம், நடுவு, முடிவுகளில், மங்களாசரணம் எழுதினால் அந்த இடங்கள் தவிர மற்ற இடங்களில் எல்லாம் அமங்களம் குடிகொண்டிருக்கும். அதற்கு "சாங்கிய சாஸ்திரத்தினுடைய" சித்தாந்தம்.

मङ्गलाचरणं शिष्टाचारात् फलदर्शनाच्छ्रुतितश्चेति ॥

நியாயமாய், பக்ஷபாதமின்றிச் சத்யமாயும், வேதோக்தமாயும், ஈஸ்வராக்ஞையைக் கீழ்ப்படிந்து, இருக்கிறதை இருக்கிறபடியே, எல்லாவற்றையும், எப்பொழுதும் கொண்டு நடப்பதுதான் மங்களாசரணமெனப்படும் என்பதே இதன் கருத்து. நூலினுடைய ஆரம்பமுதல் முடிவுவரையில் சத்யத்தையும் உண்மையையும் எழுதுவதே மங்களாசரணமாகும். ஆகையினால் ஒரு இடத்தில் மங்களத்தையும் மற்றொரு இடத்தில் அமங்களத்தையும் எழுதுவது மங்களாசரணமாகாது. மஹரிஷிகளும், பெரியவர்களும் எழுதுவதை அறியவும்.

यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि नो इतराणि ॥

(தைத்ரேய உபநிஷத், ப்ரபாடக் 7, அனுவாக் 11) இதன் தாத்பர்யமென்னவென்றால்:—ஏப்பிரஜைகளே! "அனவத்ய" அநிந்தியமென்றால் தர்மயுக்தமானகாரியங்கள். அவைகளைச்செய்வதுயோக்யமாகும். அதர்மயுக்தகாரியங்கள் அல்ல. ஆகையினால் தற்கால நூல்களில் காணப்படும் "ஸ்ரீகணேசாய நம: "சீதாராமாப்யாம் நம" "ராதாகிருஷ்ணாப்யாம் நம:" "ஸ்ரீ குருசரணாரவிந்தாப்யாம் நம:" "ஹநுமதே நம:" "துர்காயநம:" "வடுகாய நம:" "பைரவாயநம:" "சிவாயநம:" "சரஸ்வத்யைநம:" "நாராயணாயநம:" இன்னும் முதலான அநேகங்கள், வேத சாஸ்திரங்களுக்கு விரோதமாயிருக்கிறபடியினால், புத்திவான்களால் தப்பெனக் கருதப்படுகின்றது. எப்படி என்றால் வேதங்களிலும், ரிஷிகளுடைய நூல்களிலும், "ஓம்" "அத" என்பவைகளே காணப்படுகின்றன.

'अथ शब्दानुशासनम्' अथेत्ययं शब्दोऽधिकारार्थः ॥
(வ்யாகரண மகாபாஷ்யம்).

'अथातो धर्मजिज्ञासा' अथेत्यानन्तर्ये वेदाध्ययनानन्तरम् । பூர்வ மீமாம்சம்.

'अथातो धर्मं व्याख्यास्यामः' अथेति धर्मकथनान्तरं धर्मलक्षणं विशेषेण व्याख्यास्यामः । வைசேஷிகதர்சனே.

'अथ योगानुशासनम्' अथेत्ययमधिकारार्थः । யோக சாஸ்திரம்.

अथ त्रिविधदुःखात्यन्तनिवृत्तिरत्यन्तपुरुषार्थः' सांसारिकविषयभोगानन्तरं त्रिविधदुःखात्यन्तनिवृत्त्यर्थः प्रयत्नः कर्त्तव्यः । சாங்கிய சாஸ்திரம்.

अथातो ब्रह्मजिज्ञासा । வேதாந்த சூத்ரம்.

ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत । சாந்தோக்யுபநிஷத்.

ओमित्येतदक्षरमिदग्ं सर्वं तस्योपव्याख्यानम् ॥ மண்டூக்ய உபநிஷத்

இவைகள் முறையே அந்தந்தச் சாஸ்திரங்களுடைய ஆரம்ப வசனங்கள் இதேமாதிரி வேறு ரிஷிகளுடையவும், கிரந்தங்களும் "ஓம்" "அத" சப்தங்களினுல் ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது. நான்கு வேதங்களுடைய ஆரம்பத்தில் "அக்னியாதி" நாமங்கள் இருக்கின்றனவே தவிர, "கணேசாயநம:" முதலான நாமங்கள் எங்கேயும் காணப்படுகிறதில்லை. வைதீகர்கள் வேதங்களுடைய ஆரம்பத்தில் "ஹரி: ஓம்" என்று சொல்லவும் எழுதவும் செய்கிறார்கள். இது புராணிகர்களுடையவும், தந்திரிகர்களுடையவும் அசத்ய கற்பனையினுல் கற்றுக்கொள்ளப்பட்டது. வேதாதி சாஸ்திரங்களில் "ஹரி" சப்தம் சம்பவமாகிறதில்லை. ஆகையினுல் கிரந்தங்களினுடைய ஆரம்பங்களில் "ஓம்" அல்லது "அத" வையே எழுதவேண்டும்.

ஈச்வரன் என்னும் விஷயத்தில் கொஞ்சம் எழுதினேம். அடுத்த அத்தியாயத்தில் குடும்பக்கல்வி என்னும் விஷயம் எடுத்துக்கொள்ளப்படும்.

முதல் அத்தியாயம்

முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

குடும்பக் கல்வி.

मातृमान् पितृमानाचार्यवान् पुरुषो वेद ॥

இம்மேற்கோள் சதபத பிராமணத்திலிருந்து, தாய், தந்தை, ஆசான் என்னும் உபாத்தியாயர்களை உடையவனே கற்றுணர்ந்த மேதையாகிறான். வித்வான்களாயுள்ள பெற்றோர்களுடைய குலமே மேன்மைப் பெறுகிறது. அவர்களுடைய மக்களே பாக்கியமுள்ளவர்களாவர். தாயினிடம் குழந்தைகள் உபதேசமும் உபகாரமும் பெறுவதுபோல் வேறு எங்கும் பெறுகிறார்கள் இல்லை. தன் குழந்தைகளினிடமுள்ள அன்பிற்கோ, அல்லது அவைகளுடைய முன்னேற்றத்தின் கவலைக்கோ தாய்க்கு நிகர் எவருமாகார். எனவே மேற்சொன்ன வசனத்தில் "மாத்ருமான்" சப்தம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. எவருடைய தாய் சிரத்தையுள்ளவளாயும் கற்றுணர்ந்தவளாயுமிருக்கிறாளோ, அவருடைய தாயையே தாயெனலாம். கர்ப்பத்தில் கருத்தரிக்குங் காலத்திலிருந்து வித்தை யாவற்றையும் அறியும் காலம் வரையில் சுசீலத்தை உபதேசிக்கும் தாயே உத்தமி.

கர்ப்பகாலத்தில் ஆகாரம்.

கருத்தரித்ததற்குமுன்னும், கர்ப்பகாலத்திலும், பிரசவத்திற்குப்பின்னும், மயக்கத்தை யுண்டுசெய்யக்கூடிய மருந்துகள், லாகிரிவஸ்துகள், துர்நாற்றம், புளிப்பு, புத்தியை நாசஞ்செய்யும் பதார்த்தங்கள், முதலானவைகளை விலக்கி சாந்தம், ஆரோக்யம், பலம், புத்தி, பராக்கிரமம், நல்லொழுக்கம், நல்வழக்கம், முதலியவைகளை யுண்டு பண்ணும் சத்துள்ள பொருள்களாகிய நெய், தயிர், சர்க்கரை, முதலானவைகளை உபயோகஞ்செய்வது தாய் தகப்பனுர்களுக்கு ஏற்றவைகளாகும். ஏனெனில் அவைகள் ரஜஸ் வீரியங்களுடைய குற்றங்களை நீக்கி உத்தமகுணங்களை யளிக்கும்.

கர்ப்பதான காலம்.

மாதத்தீட்டு கண்ட ஐந்தாம் தினமுதல் பதினாறும் தினம் வரையில் புணர்ச்சிக்கேற்ற காலங்களாகும். முதல் நான்கு தினங்களை விட்டுவிடவேண்டும். மிகுதியான பன்னிரண்டு தினங்களிலும், ஏகாதசி, திரயோதசி, தினங்களை விட்டுவிட்டு பாக்கி இரவுகளிலே பெண்களுடன் தேகசம்பந்தம் செய்தல் உத்தமமாகும். மாதத்தீட்டுகண்ட பதினாறுதினங்களுக்குப்பிறகு தேகசம்பந்தம் செய்யலாகாது. பின் மாதத்தீட்டுகாணும் வரையிலும், கருதரித்தபின் ஒரு வருஷகாலம் கழியும் வரையிலும் சம்போகஞ் செய்யக்கூடாது. புணர்ச்சி காலத்தில் தம்பதிகள் ஆரோக்கிய முள்ளவர்களாயும், பரஸ்பர அன்புடனும் துக்கமன்றியும் இருத்தல்வேண்டும். ஆகாரம் உடை இவைகளைப்பற்றிய விஷயங்களில் சரகம், சுஸ்ருதம் சொல்லுகிறபடி நடக்கவேண்டும். பரஸ்பரம்

அன்புடனும் மன ஒருமையுடனும் மனுஸ்மிருதி சொல்லுகிறவண்ணம் அனுஷ்டிக்கவேண்டும். கருத்தரித்தப் பின்னர் ஆகாரம் உடை முதலானவைகளில் தாய் மிக்கக் கவனத்துடன் இருத்தல் அவசியமாகும். குழந்தை பிறக்கும் வரையில் புத்தி, பலம், பராக்கிரமம், ரூபம், ஆரோக்யம், சாந்தம் முதலான குணங்களை உண்டுபண்ணும் பதார்த்தங்களையே உட்கொள்ளவேண்டும்.

பிரசவம்.

பிரசவமானவுடன் சுகந்த பரிசுத்த ஜலத்தினால் குழந்தையை ஸ்நாநஞ் செய்து வைக்கவேண்டும். தொப்புள் கொடியை நீக்கி, வீட்டின் பரிசுத்தமான விடத்தில் நெய் முதலான வாசனைப்பொருள்களைக்கொண்டு ஹோமம் செய்ய வேண்டும். (வேதோக்த தர்மங்கள், ஹோமம் முதலானவைகள் செய்ய வேண்டிய விதிகள் யாவும் என்னுடைய 'சமஸ்காரவிதி' என்னும் நூலில் கூறப்பட்டிருக்கின்றன.) குழந்தையும் தாயும் நிதானமாய் ஆரோக்யத்தையும் புஷ்டியையும் அடையும் வரையில் தாய்க்கு ஸ்நாநம், போஜனம் முதலானவைகளை அளிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். குழந்தையின் மேன்மையான குணங்களைப் பெருகச்செய்வதற்காக வேண்டிய பதார்த்தங்களைத் தாயாரோ அல்லது தாதியோ சாப்பிடவேண்டும்.

குழந்தைகளைக் காப்பாற்றுதல்.

குழந்தைக்கு முதல்ஆறுநாள்வரையில் தாயின்பாலையே ஊட்டவேண்டும். பிறகு தாதியைநியமிக்கலாம். ஆனால் பெற்றோர்கள், உத்தமகுணங்களை உண்டு பண்ணக்கூடிய உயர்ந்த ஔஷதங்களைச் சுத்த நீரில் ஊரவைத்து காய்ச்சி வடிகட்டின ரசத்துடன் சரிக்குச்சரியான பசுவின் அல்லது ஆட்டின் பாலுடன்சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும். சுத்த வாயு பரவியிருக்கும் இடத்தில் பிரசவமானவுடன் தாயையும் குழந்தையையும் மாற்றவேண்டும். சுத்தமாயும்பார்வைக்கு ரம்யமாயுமுள்ள வஸ்துக்கள் அவர்களிருப்பிடத்தில்வேண்டும். சுத்தவாயுவிருக்கும் இடங்களில் அவர்களை நடக்கச்செய்வது உத்தமம். தாதி பால் அல்லது பசு, ஆடு, முதலானவைகளின் பால் கிடைக்காத பக்ஷத்தில் எது ஏற்றதென்று புலப்படுகிறதோ அதைச்செய்யவேண்டும். கர்ப்பிணியுடைய சரீரத்திலிருந்து குழந்தையுடைய சரீரம் உண்டாகிறது. ஆதலாலேயே ஒவ்வொரு பிரசவத்திற்கப்புறம் பெண்களுக்குப் பலமற்று போகிறது. ஆகவே குழந்தைகளுக்குப் பால் கொடுக்காமலிருப்பது தாய்க்குநன்று. பால் வற்ற வேண்டி, மருந்தை ஸ்தனத்தில் தடவவேண்டும். பால் உலர்ந்துபோய் விட்டால், தாயானவள் திரும்பவும் இரண்டு மாதகாலத்தில் சரீர திடத்தை பெறுகிறாள். அதுவரையில் புருஷன் தன்னடக்கத்தினால் ஐம்புலன்களையடக்கி வீர்யத்தைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இவ்விதம் பெற்றோர் இருவரும் நடந்துகொண்டால் உத்தம சந்தானங்கள் உண்டாகி பலம், பராக்கிரம் அதிகமாகும். இதனாலே, பின்வரும் சந்தானங்களெல்லாம் சிறந்தவர்களாயும், பலமுள்ளவர்களாயும், பராக்கிரமத்துடன் கூடினதாயும், தர்மீகர்க

ளாயும் ஆவார்கள். ஸ்திரீ தன் யோனியைக் கவனித்துக்கொள்ளவேண்டும், புருஷனும் வீர்யத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு உண்டாகும் மக்களெல்லாம் சிறந்து ஓங்கும்.

தாய் கற்பிக்க வேண்டியவைகளாவன.

மக்கள் நல்லவர்களாகவும் நன்னடத்தையுடன் கூடினவர்களாகவுமிருக்க வேண்டிய சிறந்த முறைகளை அவர்களுக்கு கற்பிக்கவேண்டும். அவர்களுடைய சரீர அங்கங்களைத் துர்பிரயோஜனம் செய்யாமலும் காத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகள் பேசத்தொடங்கினவுடன் உச்சாரணைகளைச்சரிவர பிழையன்னியில் செய்யத் தாய் கற்பித்துக்கொடுக்கவேண்டும். உதாரணமாக "ப" என்பதை உச்சரிக்கத்தக்க விடம் உதடேயாகும். அதைச்சரியாக உச்சரிக்க உதடுகள் இரண்டையும் சேர்த்தபின் வாயைத் திறக்கவேண்டும். மதுர ஸ்வரம் அந்தரஸ்வரம் கம்பீரமானஸ்வரம் முதலானவைகள் அவைகளுடைய பேசும் பாங்கு, வார்த்தைகள், ஒருமிப்பு, முதலானவைகள் எல்லாம் தனித்தனியே நன்ருய் விளங்கும்படி குறில், நெடில், முதலான எழுத்துக்களை உச்சரிக்கச்செய்யவேண்டும். குழந்தைகளுக்குக் கொஞ்சம் பேசவும், அறியவும் வேண்டிய வயதும் வந்தவுடன், பெரியோர், சிறியோர், தாய், தகப்பன், அரசன், முதலியவர்களிடத்தில் பேசவும் பழகவும் வேண்டிய விதிகளைக் கற்பிக்கவேண்டும். ஏனென்ருல் அவர்கள் சமூகத்திலொதுக்கப்படாமல் மரியாதைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கவேண்டும்.

யோக்யமற்ற நடவடிக்கைகளிலிருந்து நீங்கிக்கொள்ளவும், எல்லோராலும் நன்கு மதிக்கப்படுவதற்கும் வேண்டியவைகளை யெல்லாம் படிப்பிக்க வேண்டும். பயிற்சியிலும் வித்தையிலும் ஆசை அதிகமுள்ளவர்களாகவும், சமூகமேன்மை, ஐம்புலன்களுடைய அடக்கம், முதலானவைகளில் மிக்கப் பிரியமுள்ளவர்களாகவும்செய்ய மக்களின் மனதை ஆக்க முயலவேண்டும். வீண்விளையாட்டு, அழுகை, ஹாஸ்யம், சண்டை, சிரிப்பு, சோகம், எப்பொருளிலாவது துராசை, துவேஷம், முதலானவைகளை விலக்கிவிட வேண்டும். ஜனனேந்திரியங்களுடன் கையாடுவதினுலும், விளையாடுவதினுலும் வீர்யம் குறைந்து தளர்ச்சிக்கு இடம் தருகிறது. அதுவுமன்றி கைகளையும் அழுக்காக்கிவிடுகிறது. உண்மை உரைத்தல், தைர்யமாயிருத்தல், வீரத்தன்மையுடனிருத்தல், மலர்முகம் முதலான குணங்களையடைவதற்கான வழிகளைக் கற்பிக்கவேண்டும்.

குழந்தைகளின் பயிற்ச்சி.

ஆண் பெண் குழந்தைகளாகிய இருவினத்தாருக்கும் வயது ஐந்து முடிந்தவுடன் தேவநாகரி அக்ஷரங்களையும், பிறபாஷைகளின் அக்ஷரங்களையும் கற்பிக்கவேண்டும். துஷ்டர்களால் வஞ்சிக்கப்பட்டு ஏமாற்றமடையாமலிருப்பதற்கு வேண்டிய உத்தமக்கல்வி, வித்தை, தர்மம், முதலியவைகளைக் காட்டுகிறதும் பரமேச்வரன், தாய், தந்தை, ஆசான், வித்வான் அதிதி, ராஜா, பிரஜை

குடும்பம், பந்து, சகோதரன், சகோதரி, வேலைக்காரன், முதலானவர்களிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய விதிகளை வெளியிடுகிறதுமான மந்திரம், சுலோகம், சூத்திரம், வாசகம், செய்யுள் முதலானவைகளை, அர்த்தத்துடன் மனப்பாடம் செய்து, பாராமல் சொல்லக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.

பூதவித்தை.

பூதம் பிரேதம் குருட்டாசாரம் பொய் வார்த்தைகள் முதலானவைகளின் மேல் நம்பிக்கை உண்டாகாமலிருப்பதற்கும், ஞானம், மதம் முதலானவைகளிலிருந்து வேறே ஆசைகளில் புத்தி செல்லாமலிருப்பதற்கும் அவர்களுக்குக் கூறவேண்டியது.

गुरोः प्रेतस्य शिष्यस्तु पितृमेधं समाचरन् ।
प्रेतहारैः समं तत्र दशरात्रेण शुध्यति ॥ மனு 5. 65.

குரு இறந்தபிறகு அவருடைய சவத்திற்குப் பிரேதமென்று பெயர். சவத்தை மயானத்திற்குத் தூக்கிக்கொண்டு செல்லுகிற சிஷ்யர்களும் அதைத் தகனஞ் செய்கிறவனும் பத்து தினங்களில் சுத்தியை அடைகிறான். தகனஞ்செய்து முடித்த சவத்திற்குப் பெயர் "பூத" அதாவது போய்விட்டது என்பது அர்த்தம். அதாவது முன்னே வசித்திருந்து இப்பொழுது காலஞ்சென்றுவிட்டவர். பிறந்து இப்பொழுது இல்லாமல் காலஞ் சென்றுவிட்டவர், இறந்த காலத்துடன் அதாவது, பூதத்துடன் சேர்க்கப்படுகிறார். பிரம்மா முதற்கொண்டு இதுவரையிலிருந்த வித்வான்களுடைய சித்தாந்தம் இதுவேயாகும். ஆனால் சந்தேகங்கொள்ளுவது, தீயாருடன்கூடி இணங்குவது, கெட்ட நடத்தையுடனிருப்பது, இவைகளையுடையவர்கள், அவரவர்களுடைய மனோவெண்ணத்தினாலே யுண்டாக்கப்பட்ட பேய், பிசாசு, வேதாளம், பூதம், மோகினி முதலான வேதனைசெய்யும் மயக்கங்களினால் பிடிக்கப்பட்டு சஞ்சலத்திற்கும், துன்பத்திற்கும், ஆளாகிறார்கள். ஒருவன் இறந்தவுடன், அவனுடைய ஜீவன் பாபபுண்ணிய வசத்திலகப்பட்டு பரமேச்வரனுடைய அழியா நியாயத்திற்குள்ளாகி, சுகதுக்கங்களை யனுபவிப்பதற்காக மறுபிறப்பை யடைகிறது. பரமேச்வரனுடைய அழிவில்லாத இந்நியாயத்தை யார் எதிர்க்கமுடியும்? அக்ஞானிகள் வைத்திய சாஸ்திரங்களையாவது, பொருள் விளக்கங்களையாவது படிக்காமலும், கேழ்க்காமலும், யோசித்துப் பார்க்காமலும், சித்தபிரமை, பிதற்றல், வெறி, ஜுரம் முதலான சரீரத்தை ஒட்டின வியாதிகளுக்குப் பேய் பிசாசு, பூதம் முதலான பெயர்களை யளித்து விடுகிறார்கள். அவைகளுக்குத்தக்க ஔஷதம், பத்தியம், முதலான ஏற்ற சிகிச்சைகளை யளிக்காமல், துஷ்டர்கள், மோசக்காரர்கள், அறியாமையில் அழுந்தியவர்கள், சுயநலங்கருதுகிறவர்கள், பெருக்குகிறவர்கள், சக்கிலியர்கள், இழிந்த குலத்தவர்கள், முரட்டுத்தனமானவர்கள், காட்டுமிராண்டிகள், முதலானவர்களைக் கைக்கொண்டு, அவர்கள் உச்சிஷ்டங்களை உண்டு, தாழுத்து, மந்திரக்கயிறு, மாயக்கயிறு, குளிசம், இரக்ஷை, முதலானவைகளைச் சரீரத்தி

ல்ணிந்துக்கொண்டு, திரிந்துக் கொண்டிருப்பதுமல்லாமல் ஏனையோர்களையும் அம்மாதிரியான பொய்க்கார்யங்களைச்செய்யத் தூண்டுகிறார்கள். செல்வத்தை விரயஞ்செய்து, மக்களை நாசப்படுத்தி வியாதிகளை விருத்தியாக்கி, துன்பங்களையும் அவர்கள் பெருகச்செய்கிறார்கள்.

आंख के अन्धे ओर गांठ के पूरे

ஞானக்கண் குருடர்களாயும், தனத்திலதிகமுடையவர்களுமான பேதைகள், தீயநடத்தையுள்ளவர்களாயும், பாபிகளாயும், சுயநலங் கருதுகிறவர்களாயுமுள்ளவர்களையடைந்து "பிரபுவே குழந்தை, பெண், பையன், ஸ்திரி புருஷன், இவர்களுக்கு என்னவாய்விட்டதோ? தெரியவில்லையே" என்று முறையிடுங்கால் அவர்கள் கூறுவதாவது. அவள் அல்லது அவனுடைய சரீரத்தில் பெரும் பேய், பூதம், பிசாசு, மாரியம்மன், அல்லது வேறெந்த துர்தேவதை குடிகொண்டிருக்கிறது. தக்கப்பரிகாரம் ஒன்றும் செய்யாத பக்ஷத்தில் இது இவர்களை விட்டகலாது. பிராணனையே பழிவாங்கிவிடும். நீங்கள் சர்க்கரைக்கலந்த பூரியும் வெகுமதி யாதேனும் கொஞ்சம் எங்களுக்கு அளிப்பீர்களானால் எங்களுடைய மந்திரசக்தி ஜபசக்தி முதலியவைகளுடைய வலிமையைக்கொண்டு அவைகளெல்லாவற்றையும் தூரவிலகச்செய்வோம் என்று பதிலளிக்கிறார்கள். உடனே அறிவீனர்களும் அவர்களுடைய தோழர்களும் "பிரபுவே எங்களுடைய யாவற்றையும் கொடுக்கத் தயாராயிருக்கிறோம், இவனை மாத்திரம் குணப்படுத்துங்கள்" என்பார்கள். அத்துர்ப்போதகர்கள் தங்களுக்கு அனுகூலமான சமயம் ஏற்பட்டதைக்கண்டவுடன் சொல்லுவார்கள் "நல்லது இவ்வளவு சாமான்களைக் கொண்டுவாருங்கள். எங்களுக்கு வேண்டியதை சமர்ப்பியுங்கள். துஷ்டதேவதைகளுக்கு வேண்டியதைக் கொடுங்கள். கிரகதோஷங்களையும் பீடைகளையும் நிவர்த்தித்துக் கொள்ளுங்கள்." இவ்விதம் கூறிவிட்டு பீடிக்கப்பட்டவன் முன்னிலையில் பேரிகை கொட்டுமுழக்கத்துடன், பாட்டுப்பாடி ஆடுவார்கள். நேரம் போகப்போக அத்துர்ப்போதகர்களிலொருவன் வெறிபிடித்தவன்போல் துள்ளித்துள்ளிக்குதித்து, நான் அவனுடைய—அவளுடைய—பிராணனை எடுத்து விடுவேன் என்பான். அப்பொழுது அறிவீனர்கள் அவ்வயோக்கியனுடைய கால்களில் வீழ்ந்து முறையிடுவார்கள் "ஓ காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!! சுவாமி உங்களுக்கு வேண்டியவைகளையளிக்கச் சித்தமாயிருக்கிறோம்." இதைக் கேட்ட நீசசாதியைச்சேர்ந்த அவன் சொல்லுவான் "நான் ஹனுமான். மிட்டாய்கள், தைலம், செந்தூரம், கூடை நிறைய ரொட்டித் துண்டுகள் செந்நிறமான வஸ்திரம் முதலானவைகள் எனக்கு வேண்டும்." என்றாவது, அல்லது "நான்தான் பைரவன், நானே தேவி, ஐந்து புட்டி சாராயம், இருபது கோழி, ஐந்து ஆடு, தின்பண்டங்கள், வஸ்திரம், முதலானவைகள் தேவை, சமூகத்தில் சமர்ப்பியுங்கள்." உடனே இப்பேதைகள் வேண்டியவைகளை அளிக்கிறோம் என்றவுடன் அவர்கள் குதித்துக் குதித்து உக்கிராவேசத்துடன் ஆடவும் ஆரம்பிப்பார்கள். அவர்களுடைய ஹனுமான், பைரவன், தேவி முதலியவைகளுக்குப் பலியளிப்பதைவிட அறிவுள்ளவர்கள்

எவரேனும அவர்களை நன்றாகக் கையினால் அல்லது செருப்பினால் அடித்து உதைத்தால் உடனே உள்ளங்கால் காணும் வண்ணம் அவர்கள் வேகமாக ஓட்டமெடுப்பார்கள். ஏனெனில் தனத்தை அபகரிக்கக் கபடர்கள் இவ்வாறு செய்யும் முறைகளேயாகும் இவைகளெல்லாம்.

சோதிடம்

இவ்விதமே அறிவீனர்களான ஜனங்கள் ஜோசியனொருவனிடம் போய் "ஐயாவே இவனுக்கு என்ன சமாசாரம்" என்று வினவினால் அவன் சொல்லுவான் "இவனுக்குச் சூரியாதி கிரகங்கள் பிரதி கூலமாயிருக்கின்றன. பரிகாரமாக மந்திர ஜபமோ, பூஜையோ, தானமோ செய்தால் அவன் குணமடைந்துவிடுவான். அவ்விதம் செய்யாத விஷயத்தில், அவன் நீண்ட துன்பங்களுக்கு ஆளாகி கஷ்டப்பட்டுப் பிராணனை இழக்க நேர்ந்தாலும் நேரலாம்."

விசாரிப்போன்.—பிரியமுள்ள ஜோசியரவர்களே, நாமிருக்கும் இப்பூமியைப்போல் சூரியன் முதலான கிரகங்களும் ஜட பதார்த்தங்களே யென்பதை நீங்களறிவீர்கள். அவைகள் உஷ்ணம், பிரகாசம் முதலானவைகள் கொடுப்பதைத்தவிர வேறே யொன்றும் செய்யமுடியாதே. கோபத்தை யடையுங்கால் நமக்குத்துன்பத்தையும், சாந்தத்தை யடையுங்கால் நமக்கு இன்பத்தையும் உண்டுபண்ண அவைகளென்ன ஜீவனுள்ளவைகளா ?

ஜோசியன்—கிரகங்களின் பலனல்லவோ சிலர் தனவந்தர்களாகவும், வேறு சிலர் தரித்திரர்களாகவும், சிலர் ஆளுவோர்களாகவும், வேறு சிலர் பிரஜைகளாகவும் ஆகிறார்கள்.

வி—ன்.—இல்லை, இவைகளெல்லாம் பாபபுண்ணியங்களுடைய பயன்.

ஜோ—ன்.—சோதிட சாத்திரம் பொய்யா என்ன?

வி—ன்.—இல்லை, அதினுள்ளடங்கியிருக்கும் கணித சாத்திரம், பீஜ கணிதம், வான சாத்திரம், முதலானவைகள் உண்மை. ஆனால் கிரகங்களுடைய பலாபலன்களைப்பற்றிச் சொல்லும் ஜோசியம் பொய்யானவைகளே.

ஜோ—ன்.—(ஜாதகம்) ஜன்மபத்திரம் பிரயோசன மற்றவையோ ?

வி—ன்.—ஆமாம், பிரயோசனமற்றவைதான். அதை ஜன்மபத்திரமென்று அறியாமல் சோக பத்திரம் என்றறிதல்வேண்டும். ஏனெனில் குடும்பத்தில் குழந்தைப் பிறந்தவுடன் எல்லோரும் ஆனந்தத்தை யடைகிறார்கள். ஜன்மபத்திரத்தை எழுதாமலும் பெற்றோர்களிடம் கிரகங்களுடையசெய்கைகளைத் தெறிவிக்காமலுமிருக்கிற வரையில்தான் இவ்வானந்தம் இருக்கிறது.

புரோகிதன், குழந்தைப் பிறந்ததும், ஜன்மபத்திரம் எழுதவேண்டும் என்றவுடன், பெற்றோர்கள் சொல்லுவார்கள் "சுவாமி, ஜாதகம் நன்றாயிருக்கும்படி எழுதவேண்டும்." தனவந்தர்களாயிருந்தால் சிவப்பு, மஞ்சள், பச்சை முதலான விசித்திர கோலங்களுடனும், தரித்திரனாயிருந்தால் சுத்தமாய் ஒன்று மன்னியில் ஜன்மபத்திரத்தை எழுதிக்கொண்டுக் காண்பிக்கக் குழந்தையுடைய கிருகத்திற்குப்போகிறான். அப்பொழுது பெற்றோர்கள் ஜோசியன்

முன் உட்கார்ந்துகொண்டு பொருத்தங்களை வினவுவார்கள். அதற்கு அவன் சொல்லுவான் "உள்ளவாறே நான் படித்துக்காட்டுகிறேன். கேளுங்கள் இதனுடைய ஜனனகிரகமும் மித்திரக்கிரகமும் மிகவும் நன்றாயிருக்கிறது. இவைகள் உச்சஸ்தானத்திலிருக்கிறபடியினால் அதனுடைய பிரயோஜனம் மிகவும் உத்தமமானது. அதன் பலனாக இஜ்ஜாதகன் தனவந்தனாகவும், அபிமானிக்கத்தக்கவனாகவும் இருப்பான். எச்சபையிலும் விளங்குவான். பெருமையுள்ளவனாயிருப்பான், சரீராரோக்யத்தையடைந்து அரசனாலும் அபிமானிக்கப்படுவான்." இவ்வார்த்தைகளைப் பெற்றோர்கள் முதலான உறவினர்கள் கேட்டு "பேஷ்! கற்றுணர்ந்த ஜோசியரே!! நீங்கள் நன்குரைத்தீர்" என்பார்கள்.

ஜோசியன் இப்பிரயோஜனமற்ற—அவர்களுக்குப் பிரீதியான—வார்த்தைகளாலெல்லாம் தனக்குப்பிரயோசனம் யாதொன்றும் உண்டாகாது எனக்கண்டு இக்கிரகங்களின் பொருத்தமெல்லாம் நன்றாயிருக்கின்றது. ஆனால் சில ஆகாத கிரகங்களிருக்கின்றன. அதாவது சில கெட்ட கிரகங்களுடைய யோகத்தினால் எட்டாவது வயதில் மரணயோகம் சம்பவிக்கும் என்று சொல்வான். இதைக்கேட்டவுடன் புத்திரப்பிறப்பினாலுண்டான ஆனந்தமெல்லாம் பெற்றோர்களுக்கு இல்லாமல்போய் துக்கத்தில் முழுகி சோதிடனைப் பார்த்துச் சொல்லுவார்கள் "ஏனையா! நாங்கள் செய்யவேண்டியது என்ன? இப்பொழுது யாது செய்யவேண்டும்?" அதற்கு அவன் சொல்வான் "கிரகசாந்தி செய்தல் அவசியம்" "எவ்விதம் சாந்தி செய்வது" என்பார்கள். "தக்க மந்திரத்தைச் சபிக்கவேண்டும், தானங்கள் செய்யவேண்டும். தினந்தோறும் பிராமணர்களுக்கு அன்னமளிக்கவேண்டும். இவ்விதம் செய்வதினால் ஒரு சமயம் நவக்கிரகங்களுடையத் தீமைகளைத்திருப்பக்கூடும்." என்பான். "ஒருசமயம்" என்கிற வார்த்தையின் உபயோகம் சம்பவங்களுக்கேற்றவாறு தப்பித்துக்கொள்ளவேயாகும். அதாவது குழந்தை இறக்கும்பக்ஷத்தில் "நாம் என்ன செய்யக்கூடும்? பரமேச்வரனைவிட உயர்ந்தவர் யாவர்? நானும் என்னால் ஆனதைப் பிரயத்தினஞ்செய்தேன். தாங்களும் கஷ்டப்பட்டீர்கள். யார் என்ன செய்யக்கூடும்? அவன் பூர்வ ஜன்மாந்திர கர்மம் அப்படி" என்றும், குழந்தை இறக்காமல் பிழைத் திருந்துவிட்டால் "பிராமணர்களுக்கும் தேவதைகளுக்கும் மந்திரங்களுக்கும் சக்தி எம்மட்டுமிருக்கிறதென்பதைக்கண்டீர்களா? உங்களுடையகுழந்தையையும் காப்பாற்றிவிட்டது." என்று உற்சாகத்துடன் பெரு முழக்கஞ் செய்வான். இவ்விதச் சந்தர்ப்பங்களில் இத்துஷ்டர்கள் சொல்லும் வண்ணம் ஜபத்திலும், பாராயணத்திலும் மந்திரத்திலும் யாதொரு பிரயோசனமும் உண்டாகாமலிருக்கும் பக்ஷத்தில் தாங்கள் செலவிட்ட தொகைக்கு இரண்டு அல்லது மூன்று பங்கு அதிகமாக அத்துஷ்டர்களிடமிருந்து உதைத்து வாங்குவது உசிதமானது. சாதாரணமாய்க்குழந்தை பிழைத்திருந்தபொழுதிலும் அவர்களிடமிருந்து இத்தொகையைப் பெறவேண்டும். ஏனெனில் அவர்கள் கூறும் வண்ணமே "கர்மத்தை எவராலும் வெல்லமுடியாது. ஈசுவரனுடைய கட்டளையைமீறும் வல்லமை எவருக்குமில்லை." இதைச் சுட்டிக்காட்டி கர்மத்தினாலும்

பரமேச்வரனுடைய நியமனத்தினுலுமே பிழைத்ததே யொழிய உங்களுடைய முயற்சியினுலில்லை என விட்டுக்குப் பெரியோர் சொல்லிக் காட்டவேண்டும்.

வைசூரியும் மந்திரவாதமும்.

சீதளா தேவியையும் மந்திர தந்திரம் முதலானவைகளேயும் நம்புவது பெரும் ஏமாற்றமேயாகும். "நாங்கள் மந்திர ஜபம் ஏற்றின கயிற்றையோ அல்லது சிங்காரச்சிமிழையோ அணியும் பக்ஷத்தில் எங்களுடைய தெய்வம் அல்லது தேவதையுடைய சக்தியினுல், மந்திரோச்சாடன பிரபாவத்தினுல், கெடுதல்கள், இடையூறுகள், யாவும், நேராமல் விலகிவிடும்" என்று யாரேனும் சொல்லுவார்களேயானுல் இக்கேழ்வியை அவர்களிடம் கேழ்க்கவேண்டும். "நீங்கள்மரணத்திலிருந்தோ,கடவுளுடையகட்டளேகளிலிருந்தோ,ஊழ்வினேப் பயனிலிருந்தோ, ஜனங்களேத் தப்பிக்கச் செய்வீர்களா? நீங்கள் இப்பேர்ப் பட்ட தந்திரங்களனேத்தும் செய்தும் பலர் இறக்கின்ருர்களே? உங்களுடைய விட்டிலும் மரணம் சம்பவிக்கன்றதே, இறப்பிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்வீர்களா?" இக்கேழ்விகளெல்லாம் அத்துர்ப் போதகர், அவருடைய சகாக்கள் முதலானவர்களுடைய வாயையடைப்பது மல்லாமல், அவர்களும் இனிமேல் தங்களுடைய தந்திரங்கள் பயன் படாதென்று தெரிந்துகொண்டு ஓடிவிடுவார்கள்.

ஆகையினுல் இப்பொய் விஷயங்களே விட்டு விட்டு தர்மசிந்தனேயுடனிருந்து, தர்மம் செய்பவர்களேயும் தேசங்கள் எல்லாவற்றிற்கும் உபகாரம் செய்கிறவர்களேயும், வஞ்சக மன்னியில் வித்தையை சகலருக்குப் பயிலுவிப்பவர்களேயும், வித்வான்களேயும் காப்பாற்ற வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் உத்தமவித்தைகளின் ஆதரணேயைக் கைவிடக்கூடாது.

இரசாயனம்.

மரணமடையாமலிருப்பதற்கு வேண்டி அமிர்தத்தை உண்ணுவது (மாரணம்) மந்திரத்தினுல் இறக்கச் செய்வது (மோகனம்) புத்தியை ஸ்திரமில்லாமல் செய்வது(உச்சாடனம்)உபத்திரவத்தை யுண்டுபண்ணித்துன்பத்திற்காளாக்குவது (வசீகரணம்) சுவாதீனம் செய்துகொண்டு தனக்கு வேண்டியதை செய்துகொள்வது, இன்னும் இதையொத்த தீய, மாயா விநோதமெல்லாம் செய்வதாக நடித்து கபடஞ்செய்கிறவர்களேப் பெரும் அறிவீனர்களென்றே அறியவேண்டும். இவ்வித ஜாலங்களிலகப்பட்டுக் கொண்டு துக்கப்படாமலிருப்பதற்காக இந்தப் பொய் விஷயங்களேக் குறித்து சிறுவயதிலேயே மக்களுக்கு நல்லுபதேசம் செய்யவேண்டும்.

வீர்யத்தைக் காப்பாற்றல்.

வீரியத்தைப் பாதுகாத்து காப்பாற்றுவதினுல் உண்டாகும் ஆனந்தத்தையும் அதை அழித்து நஷ்டஞ்செய்து கொள்வதினுலுண்டாகும் துக்கம் துன்பம் முதலானவைகளேயும் நன்கு அவர்களுக்குப் புகட்டவேண்டும். உதாரணமாக எவனெருவன் தன் சரீர வீரியத்தை நன்ருகக் காப்பாற்றுகிருனே

அவனுக்கு ஆரோக்யம், புத்தி, பலம், பராக்கிரம் முதலானவைகள் விருத்திய டைந்து சுகம் ஏற்படுகிறதை நாம்கண்ணுல் காண்கிருேமல்லவா? பிரமசாரிக ளுக்கு இவைகளைக்காப்பாற்றுவதற்கு வேண்டிய உயர்ந்தவழிகள்யாதெனில்:— சிற்றின்பக்கதைகள், சிற்றின்பத்தைக் கோறுவோர்களின் சேர்க்கை, சிற்றின்ப வெண்ணம், ஸ்திரீகளின் தரிசனம், அவர்களுடன் தனிமையாயிருத்தல், கூடி சம்பாஷணை செய்தல், அவர்களைத்தொடல், முதலானவைகளிலிருந்து வேறு பட்டிருப்பதோடு உத்தமக்கல்வி, பயிற்சியையும் அளிக்கிற வழியைத்தேட வேண்டும். தவிரவும் வீர்யத்தை நஷ்டஞ் செய்துகொள்பவன் ஆண்மைத் தனத்தை யிழந்து நற்குணங்களற்று மேக வியாதிகளையடைந்து பலஹீனனு யும், தேஜஸ் அற்றவனுயும், புத்திஹீனனுயும், உற்சாகம், சகிப்புத்தன்மை, தைரியம், பலம், பராக்கிரமம் முதலான குணங்களிலிருந்து விலகினவனுகவும் மாறி நாசத்தை யடைகிருன்.

பெற்ருேர்களின் உபதேசம்.

சமயத்தில் நல்லபோதனையையும் பயிற்சியையும் வித்தையையும் பெற்று வீரியத்தைக் காப்பாற்றிக்கொள்ளாமல்போனல் உங்களுடைய வாழ்நாளில் இவ்வித விலைமதிக்கத்தகாத சமயம் இனி வாய்ப்பது அறிது என்று சிறுவர்க ளுக்கு வற்புறுத்துவதைப் பெற்ருேர்கள் மறந்து விடக்கூடாது. பெற்ருேர்கள் பிழைத்திருக்கும் வரையிலும், வீட்டு வேலைகளைப்பார்த்துக் கொள்ளும் வரை யிலுமே, படித்து படிப்பையும், பக்குவமாக்கிக்கொள்ள முடியுமென் பதை அவர்கள் கவனத்தில் வைக்கவேண்டும். தகப்பன், தாய் இவர்களும் இன் னும் முக்கிய விஷயங்களில் அவர்களுக்குத்தக்க உபதேசம் செய்யவேண்டும். இவ்வத்தியாயவாரம்பத்திலிருக்கும் மேற்கோளில், "மாத்ரிமான்", "பித்ரி மான்" என்று உபயோகஞ்செய்திருப்பதின் காரணமிதுவேயாகும். தாய் பிறந் தது முதல் ஐந்துவயதுவரையிலும் தகப்பன் ஆருவதுமுதல் எட்டாவதுவயது வரையிலும் அவர்களுக்குப்போதிக்கவேண்டும். ஒன்பதாவது வயதின் ஆரம் பத்தில் துவிஜர்கள் தங்களுடைய மக்களுக்கு பூணூல் போட்டுவிட்டு ஆசார்ய ருடைய குருகுலத்திற்கு அனுப்பிவிடவேண்டும். அதாவது பரிபூர்ணமான பயிற்சியையும் படிப்பையும் உடையவித்வான்களாலும் பண்டிதைகளாலும் நிறைந்து வித்யாதானம் செய்யப்படுகிறவிடத்தில் பிள்ளைகளையும் பெண்களை யும் அனுப்பவேண்டும். சூத்திரர்களும் குருகுலத்திற்கு அனுப்பவேண்டியது. ஆனல் உபநயனம் (பூணூல் கல்யாணம்) செய்யாமலனுப்பவேண்டும்.

ஒழுக்கம்.

கல்வி விஷயத்தில் சலுகைக்காட்டாமல் கண்டிப்பாய் கொண்டு வரப் படுகிற மக்களே பூர்ணமேதைகளாகவும் நன்னடத்தை யுடையவர்களாக வும், பயிற்சியில் தேர்ந்தவர்களாகவும் ஆகிருர்கள். இதற்கு வியாகரண பாஷ் யத்தினுடைய பிரமாணமாவது.

सामृतैः पाणिभिर्घ्नन्ति गुरवो न विषोक्षितैः ।
लालनाश्रयिणो दोषास्ताडनाश्रयिणो गुणाः ॥ மகாபாஷ்யம். 8. 1. 8.

எந்தத்தாய் தகப்பன் ஆசான் தங்களுடைய மக்கள் அல்லது சீடர்களுடைய படிப்பு, பயிற்சி, முதலானவிஷயங்களில் கண்டிப்பாயிருக்கிறார்களோ அவர்கள் அம்ருதத்தையே அவர்களுக்குப் பானம்செய்யக் கொடுக்கிறவர்களாகிறார்கள். இவ்விஷயங்களில் கண்டிக்காமல் யார் இருக்கிறார்களோ அவர்கள் விஷத்தையே அளிக்கிறவர்களாகிறார்கள். ஆகையினால் அவர்களைக்கெடுத்துப் பிரயோசனமற்றவர்களாக்குகிறார்கள் என்றே சொல்லவேண்டும். குழந்தைகளும் கண்டித்தால் சந்தோஷப்பட்டும், சீராட்டினால் சந்தோஷப்படாமலும் இருக்கவேண்டும். சீராட்டலினால் மக்களும், சீடர்களும் உபயோகமற்றும், கண்டிப்பதினால் குணவான்களாயுமாகிறார்கள். துவேஷம், பகை முதலியவைகளை முன்னிட்டு தாய் தகப்பன் ஆசான் தண்டிக்கக்கூடாது. வெளிப்படையாக அவர்களை பயத்தில் வைத்திருக்கவேண்டும். அந்தரங்கமாக தயையும் பிரீதியும் உள்ளவர்களாக விருக்கவேண்டும்.

சன்மார்க்க போதனை.

அப்படியே களவு, வியபசாரம், சோம்பல் உண்டாக்கக்கூடிய காரியங்கள், அகந்தை, இறுமாப்பு, வெறி, குடி, பொய் பேசுதல், துவேஷம், பகை, ஜீவஹிம்சை, எரிச்சல், பேராசை, முதலானவைகளிலிருந்து வேறாகவும், சத்தியசாரம், தர்மம் முதலானவைகளைப் பயிற்சிசெய்து விருத்தியாக்கக்கூடிய போதனைகளையே அளிக்கவேண்டும். ஒருதடவை கூட ஒருவன் களவு அல்லது வியபசாரம் செய்து அல்லது பொய் பேசிவிட்டால் அவனுடைய மரணபரியந்தம் ஜன சமூகத்தில் தன் மதிப்பை யிழந்துவிடுகிறான். எல்லாவற்றையும்விட சொற்பேச்சுமாறுதலும், பொய் பேசுதலும் மனிதனுடைய குணத்தை எந்நாளும் கெடுத்துவிடுகிறது. ஆகையினால் ஒருவனுக்கு உண்மையாய் வாக்களிக்கும் பக்ஷத்தில் அதைத் தீர்த்தே விடவேண்டும். "நான் உன்னைக் குறிப்பிட்டகாலத்திலும், இடத்திலும், சந்திப்பேன்" அல்லது "குறிப்பிட்டகாலத்தில் குறிப்பிட்டவஸ்து ஒன்றையளிப்பேன்" என்றால் அதை சொற்பிசகாமலிருக்க நடத்தியே தீரவேண்டும். இல்லாவிடில் எவரும் அவனை நம்பமாட்டார்கள். ஆகவே எல்லோரும் எக்காலமும் சத்தியபாவனையேசெய்து, சொல்தவறாமல் நடக்கவேண்டும். இறுமாப்புடன் ஒருபொழுதும் இருக்கக்கூடாது. ஏமாற்றுதல், கபடவேஷம்போடல், செய்நன்றிமறத்தல், இவைகளெல்லாம், இவைகளுக்கு இடங்கொடுக்கிற ஆத்மாவிற்கே பெரும் வருத்தத்தை யுண்டுபண்ணுகிறது. ஆத்மாவிற்கே இவ்வளவு துன்பத்தை யளித்தால் மற்றவர்களுடைய விஷயத்தில் கேழ்ப்பானேன். ஒன்றில் நம்பிக்கையிருக்க மற்றொன்றைப் பேசுவதும், அதனால் ஜனங்களைத் தன்னலத்தை முன்னிட்டு ஏமாற்றுவதுமே ஜாலம் (பொய்வேஷம்) எனப்படும். மற்றவர்கள் தன்னிடம் காட்டும் உதவிகளை அபிமானிக்காமலிருப்பதே கிருதக்னதையாம் (செய்நன்றி மறத்தலாம்).

பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல்.

பிள்ளைகள் எளிதில் சினங்கொள்ளலாகாது அல்லது கடுஞ்சொல்கூறலாகாது. சாந்தம் இன்சொல் இவைகளை பூஷணமாகக் கொள்ளவேண்டும்.

அளவுமிஞ்சி பேசல்கூடாது. பெரியோர்களை வணங்கவேண்டும். அவர்கள் வரும்பொழுது எழுந்து நின்று "நமஸ்தே" என்று வந்தனஞ்செய்து உயர்ந்த ஆசனமளிக்கவேண்டும். கூட்டங்களில் தன் யோக்யதைக்கேற்றவாறும், மற்றவர்களால் தடுக்கமுடியாததுமான ஆசனங்களிலேயே அமரவேண்டும். ஒருவரோடும் பகைகொள்ளலாகாது. எக்காலமும் களிப்புடனிருக்கவேண்டும். குணங்களைக் கிரகித்து தோஷங்களைக்கைவிடவேண்டும். நல்லாரோடு இணங்கியிருக்கவேண்டும். தீயாரோடு இணங்காமல் விலகியிருக்கவேண்டும். தன் உடல் பொருள், ஆவி, முதலான சிறந்த பொருள்களினால் தகப்பன், தாய், ஆசான் இவர்களை வணங்கவேண்டும்.

यान्यस्माकं सुचरितानि तानि त्वयोपास्यानि नो इतराणि ॥

தைத்ரேயோபநிஷத் 7. 11.

"தாய் தகப்பன் ஆசான் எக்காலத்தும் தங்களுடைய மக்களுக்கும் சீடர்களுக்கும் சத்தியோபதேசத்தையே செய்யவேண்டும். அவர்களுடைய நன்மைகளைக்கிரகித்துத் தீமைகளை விலக்கும்படி போதிக்கவேண்டும்." பிள்ளைகள் எக்காலமும் உண்மையே பேசவேண்டும். கபடர்களையும் துராசாரமுள்ளவர்களையும் நம்பக்கூடாது. நன்மையான சகல விஷயங்களிலும் அவர்கள் பெற்றோர்களையும், ஆசாரியர்களையும் கீழ்ப்படிதல்வேண்டும். பெற்றோர்களால் சொல்லிக்கொடுக்கபட்டு மனப்பாடமாயிருக்கும் வேத மந்திரங்கள், அஷ்டாத்யாயி முதலான சூத்திரங்கள், நிருக்தம், நிகண்டு, முதலானவைகளுடைய உண்மையான பொருள்களை ஆசான் மக்களுக்கு நன்கு விளக்கவேண்டும். முன்னத்தியாயத்தில் விவரிக்கப்பட்ட பரமேச்வரனுடைய குணங்கள் முதலானவைகளை அவர்களுக்கு அறியச்செய்யவேண்டும்.

சுகாதார எச்சரிக்கை.

ஆரோக்கியம், பலம், ஞானம், பயிற்சிமுதலானவைகளை அடைவதற்கு அனுகூலமாகவே, அன்னபானதி விஷயங்களில் நடந்துக்கொள்ளவேண்டும். பசிக்குங்கொஞ்சம் அற்பமாகவே புசித்தல்வேண்டும். மாம்சாகாரம், மதுபானம் முதலானவைகளை விலக்கவேண்டும். ஆழமறியாத ஜலங்களில் இறங்க்கூடாது. அபாயப்பிராணி (முதலை முதலானவைகளைப்போன்றது) களால் ஆபத்து ஏற்பட்டு, நீந்தத்தெரியாமல் போனால் முழுகவும் நேரிடும். **"नविज्ञाते जलाशये"** (தெரியாத ஜலாசயத்தில் ஸ்நாநம் செய்யக்கூடாது) என்று மனுவும் முறையிடுகிறார்.

दृष्टिपूतं न्यसेत्पादं वस्त्रपूतं जलं पिबेत् ।
सत्यपूतां वदेद्वाचं मनःपूतं समाचरेत् ॥ மனு. 6. 46.

நடக்கும் பொழுது கீழே கவனித்துப்போகவும்; பேசும்பொழுது சத்திய நெறியினால் சுத்தஞ்செய்த வார்த்தைகளைப்பேசவும்; செய்யு முன்னால் காரியங்களை ஆராய்ந்து செய்யவும்."

பெற்றோர்களின் கடமை.

சாணக்யருடைய நீதியில் பாவலர் ஒருவர் சொல்லுவதாவது:—

माता शत्रुः पिता वैरी येन बालो न पाठितः ।
न शोभते सभामध्ये हंसमध्ये बको यथा ॥

தங்கள் சந்ததிகளுடைய வித்தையைப் புறக்கணிக்கிறபெற்றோர்கள், அவர்களுடைய பெரும் விரோதிகள். சமூகத்தில், அன்னங்களுடைய கூட்டத்தில் நாரையைப்போலவே அவர்களும், தங்களுடைய சந்தானங்களுக்குச் சிறந்தவித்தை, கல்வி, சத்தியநெறியில் பழக்குதல், நடவடிக்கை செய்கைகளில் தேர்ந்தவர்களாகச்செய்தல், சுருங்கச்சொல்லின் பெற்றோர்கள் தங்களுடைய, உடல், பொருள் முதலான யாவற்றையும், இவைகளைப்புசட்டவேண்டி செலவழிப்பதே அவர்களுக்கேற்ற வேலையும், கீர்த்தியை யளிக்கும்படியான கார்யமும் ஆகும்.

புத்திமான்களுக்கு ஒரேவார்த்தை என்பதைக்கொண்டு மக்களுக்குக் கற்பிக்கவேண்டிய வித்தை முதலானவைகளைச் சுருங்கச்சொல்லி முடிக்கிறோம். அடுத்த அத்தியாயத்தில் கல்வி பயிற்சி முறைகளைப்பற்றி எழுதுவோம்.

இரண்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

கல்வி கற்பிக்கும் முறை.

ஆழ்ந்த கல்வி, சிறந்தகுணம், கர்மம், ஸ்வபாவம், இதுபோன்ற பயிர்ச்சிகளான ஆபரணங்களினால் மக்களை அலங்கரிப்பது, தாய், தகப்பன், ஆசான், உறவினர் முதலானவர்களுடைய முதற் கடமையாகும்.

பொன், வெள்ளி, மாணிக்கம், முத்து, பவளம் முதலிய ரத்தினங்களினால் இழைக்கப்பட்ட நகைகளை அணிகிறதினால் மனிதனுடைய ஆத்மா அலங்கரிக்கப்படுகிறதில்லை. வீண் பெருமையை அதிகரித்து தேகாபிமானம் சிற்றின்ப ஆசை இவைகளைப்பெருக்கி, திருடர்களுடைய பயத்திற்கு ஆளாக்கி மரணத்திற்கும் காரணமாகிறது. அநேகம் குழந்தைகள் நகைகளை யணிவதினால் துஷ்டர்களுடைய கையிலகப்பட்டு மாண்டிருப்பதையும் பார்க்கின்றோமல்லவா?

विद्याविलासमनसो धृतशीलशिक्षाः
सत्यव्रता रहितमानमलापहाराः ।
संसारदुःखदलनेन सुभूषिता ये
धन्या नरा विहितकर्मपरोपकाराः ॥

வித்தை ஞானம் இவைகளை அடைவதிலழுந்தியிருக்கும் மனதையுடைய ஸ்திரீகளும், புருஷர்களும்; சுசீலை, நன்னடத்தையுடன் கூடினவர்களும்; சத்தியம் பேசுதல் முதலானகற்புகளைக் கைக்கொண்டு நடக்கிறவர்களும்; கர்வம் அசுத்தம் இவைகளிலிருந்து விலகி யிருக்கிறவர்களும்; அஞ்ஞானத்தி லழுந்தினவர்களை திருத்துகிறவர்களும்; சத்யோபதேசஞ்செய்வதில் பெருமகிழ்ச்சியுள்ளவர்களும்; வித்யா தானத்தினால் உலக துக்கத்தைநீக்கி, சுகத்தை ஜனங்களுக்குக் கொடுக்கிறவர்களும்; வேதங்கள்கூறும் தர்மங்களின் பிரகாரம் உபகாரம் செய்கிறவர்களுமே பாக்கியவான்களாகிறார்கள். பிள்ளைகளையும் பெண்களையும் எட்டுவயதானவுடன் முறையே அவரவர்களுடைய பாடசாலைகளுக்கு அனுப்புதல்வேண்டும். தீயநடத்தை யுள்ளவர்களைக்கொண்டு எக்காரணத்தினாலேயும், பயிற்சிசெய்விக்கலாகாது. சகல வித்தையுடன் கூடினவராயும், தர்மசுபாவம் உள்ளராயுமிருக்கிற ஆசான்களே படிப்பிப்பதற்கும், பயிற்சியளிப்பதற்கும் தகுதியுள்ளவர்கள். துவிஜர்கள் தங்களுடைய இல்லத்திலேயே ஆண்களுக்கும் பெண்களுக்கும் எக்ஞோபவீதம் (பூணூல்) செய்து. முறையே அவரவர்களுக்கான பாடசாலைகளுக்கு அனுப்புதல்வேண்டும்.

கல்விச்சாலைகள் தனியான விடங்களிலிருக்கவேண்டும். பிள்ளைகளுடையக் கல்விச்சாலையானது, பெண்களுடையக் கல்விச்சாலையிலிருந்து குறைந்தது மூன்றுமைல் தூரத்திலிருத்தல்வேண்டும். உபாத்தியாயர்கள், வேலைக்காரர்கள் முதலானவர்கள் அந்தந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகவே இரு பாடசாலைகளிலுமிருக்கவேண்டும். வேறு இனத்தைச் சேர்ந்த ஐந்து வயதுள்ள

வன்கூட கல்விச்சாலையில் நுழையக்கூடாது. பிரமசாரிகளாயிருக்கும் வரையில், வேறு இனத்தைச்சேர்ந்தவர்களுடைய ஆசையை யுண்டுபண்ணுகிற பின்வரும் எட்டுவிஷயங்களிலிருந்தும் விலகியிருக்கவேண்டும். (1) காமக் கண்களுடன் நோக்குதல் (2) ஆலிங்கனம் செய்தல் (3) தேகசம்பந்தம் செய்தல் (4) இரகசிய சம்பாஷணை செய்தல் (5) கூடிக்களித்தல் (6) கூடி இணங்குதல் (7) விஷய விவகாரங்களை விவரித்தல்—படித்தல்—பேசுதல் (8) காமவிகாரங்களில் அழுந்துதல்.

குருகுல வாசத்தின் தத்துவம்.

சிறந்த வித்தைப்பயிற்சி, சுசீலம், சுபாவம், இவைகளுடன் கூடினவர்களாயிருந்துகொண்டு, சரீரத்தையும் ஆத்மாவையும் பலமுள்ளதாகச்செய்து பிரதிதினம் ஆனந்தத்தை விருத்திப்பண்ணிக்கொள்ளும் பொருட்டு பிரமசாரிகளை, ஆசான், இவ்வெட்டுவிதமான தீய நடத்தைகளிலிருந்தும் விலக்கிக் காப்பாற்ற வேண்டும். கிராமம் அல்லது நகரம் இவைகளுக்கு ஒரு யோசனை அல்லது நான்குமைல் தூரத்திற்குக்குறையாமல் கல்விச்சாலைகளிருத்தல் வேண்டும். ராஜனுடைய பிள்ளைகளாயிருந்தாலும் சரி, அல்லது ஏழைகளினுடைய பிள்ளைகளாயிருந்தாலும் சரி, நடை, உடை, பாவனை, ஆகாரம் முதலானவைகளில் எல்லோரையும் யாதொரு வித்தியாசமுமின்றி, சமமாய் நடத்தவேண்டும். பெற்றோர்களைக்காணவோ அல்லது பேசவோ கூடாது. அவர்களும் மக்களுடன் பேசவோ அல்லது காணவோ கூடாது. கடிதப்போக்குவரவும் கூடாது. இம்மாதிரி உலகக்கவலை துன்பம் முதலியவைகளிலிருந்து வேறாகி, தன்னுடைய பாடம் முதலானவைகளை முழுக்கவலையுடன் ஓதல்வேண்டும். இளைப்பாறுதல் முதலான அவர்களுடைய நடைகளில், உபாத்தியாயர்கள் அவர்களுடன் கூடிச்சென்று துர்க்குணம், அசட்டை, சோம்பல், முதலானவைகளுக்கு ஆளாகாமல் கவனித்துக் கொள்ளவேண்டும்.

கட்டாயப்படிப்பு.

कन्यानां सम्प्रदानं च कुमाराणां च रक्षणम्॥ மனு 7. 152.

எட்டுவயதிற்குப்பிறகு மக்களை (ஆண், பெண், இருவர்களையும்) வீட்டில் வைக்காமலிருக்கச் சமூகமும், அரசாங்கமும் கட்டாயப்படுத்தவேண்டும். அப்படி கல்விச்சாலைக்கு அனுப்பாதவர்களைத் தண்டனைக்குள்ளாக்கவேண்டும்.

காயத்ரி மந்திரம்.

வீட்டிலும் பின்னர் கல்விச்சாலையிருக்கும் ஆசாரியனிடத்திலும் மக்களுக்குப்பூணூல் அணியச்செய்யவேண்டும். பெற்றோர்களும், உபாத்தியாயர்களும் தங்களுடைய மக்களுக்கு காயத்ரியை விளக்கி உபதேசம்செய்யவேண்டும். இதுவே மந்திரமாகும் :—

ओं भूर्भुवः स्वः । तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि । धियो यो नः प्रचोदयात्॥ யஜுர்வேதம் 36. மந் 3.

இதன் முதலிலிருக்கும் "ஓம்" என்பதற்கு முதல் அத்தியாயத்தில் பொருள் கூறியிருக்கிறது. மிகுதியாயிருக்கும் மூன்றுக்கும் பொருள் இப்பொழுது விரிவாய் எழுதுவோம். **भूरिति वै प्राणः यः प्राणयति चराऽचरं जगत् स भू स्वयम्भूरीश्वरः** சகல சராசர ஜகத்தினுடைய ஜீவராசிகளுக்கு ஆதாரமாயும், உயிரைவிட மேலானவராயும், சுயம்புவாயுமிருக்கிறபடியினால் "பூ:" பரமேச்வரனுடைய திருநாமமாகிறது. **भुवरित्यपानः यः सर्वं दुःखमपानयति सोऽपानः** அவர் எல்லாத்துன்பம், துக்கம், இவைகளிலிருந்து நீங்கினவராயும், அவருடைய சேர்க்கையினாலேயே ஜீவன், சகலதுக்கம், துன்பம் இவைகளிலிருந்து விடுதலையடைகிறபடியினாலுமே பரமேச்வரனுக்கு "புவ" என்றும் ஒருதிருநாமம். **स्वरिति व्यानः यो विविधं जगत् व्यानयति व्याप्नोति स व्यानः** பலவிதமான உலகமுழுவதிலும் பரவி எல்லாவற்றையும் தாங்குகிறவராகையினால் பரமேச்வரனுக்கே "சுவ" என்னும் திருநாமம். இம் மூன்று வசனங்களும் ஆரணியக தைத்ரேய உபநிஷத்திலிருப்பதைக் காணலாம்.

ஜபம்.

"சவிது:" சகல உலகங்களையும் படைத்து சகல ஐஸ்வர்யங்களையும் அளிக்கிறவராயும், "தேவஸ்ய" இன்பங்களனைத்தையும் அளித்து யாவராலும் அடைவதற்கு இஷ்டப்படுகிறவராயுமிருக்கிற அப்பரமேச்வரன் "வரேணியம்" ஏற்றுக்கொள்ளுவதற்கும் பூஜிப்பதற்கும், அதிக உத்தமமாயுமுள்ளவர்.

"பர்க" சுத்த சுரூபராயும், மற்றவர்களைச் சுத்தஞ்செய்கிறவராயும், எல்லாம் அறிந்தவராயுமிருக்கிற, "தத்" அப்பரமாத்மாவுடைய ஸ்வரூபத்தை நாங்கள், "தீமஹி:" "த்ரோமஹி:" துதிக்கிறோம். எதற்காகவெனின் :—

"யஃ" (ஜகதீச்வர:) பரமாத்மாவானவர் "நஹ" எங்களுக்கு "தியஹ" புத்தியை "பிரசோதயாத்" புலனாககட்டும். தீயச்செயல்களிலிருந்து விலக்கி நற்செயல்களில் செல்லச் செய்யட்டும் என்பதாம்.

हे परमेश्वर! हे सच्चिदानन्दस्वरूप! हे नित्यशुद्धबुद्धमुक्तस्वभाव! हे अज निरञ्जन निर्विकार! हे सर्वान्तर्यामिन्! हे सर्वाधार जगत्पते! सकलजगदुत्पादक! हे अनादे! विश्वम्भर! सर्वव्यापिन्! हे करुणामृतवारिधे! सवितुर्देवस्य तव यदों भूर्भुवः स्वर्वरेण्यं भर्गोऽस्ति तद्वयं धीमहि दधीमहि धरेमहि ध्यायेम वा कस्मै प्रयोजनायेत्यत्राह। हे भगवन्! यः सविता देवः परमेश्वरो भवानस्माकं धियः प्रचोदयात् स एवास्माकं पूज्य उपासनीय इष्टदेवो भवतु नातोऽन्यं भवत्तुल्यं भवतोऽधिकं च कञ्चित् मन्यामहे ॥

சச்சிதானந்த சுரூபியாயும், நித்திய சுத்தராயும், ஞானவடிவாயும், முக்தி வடிவாயும், கருணைக்கடலாயும், எந்நாளும் விளங்குகிறவராயும், அழிவில்லாதவராயும், பிறப்பு இறப்பு முதலானவைகளிலிருந்து நீங்கினவராயும், ஆகாரமில்லாதவராயும், தக்க நியாயத்தை யளிப்பவராயும், யாவையும் அறிகிறவராயும்,

எல்லாவற்றையும் ஆக்குகிறவராயும், எக்காலமும் ஜகங்களைக்காப்பாற்றி அளிக்கிறவராயும், சகல ஐச்வர்யமுள்ளவராயும், சுத்த சேதன ஸ்வரூபராயும், எங்கும் பரவியுமிருக்கும், ஏ! பிரபுவே!! கருணைக்கடலே! சிருஷ்டியின் உயிர் நீயே, ஞானவுருவம் நீயே, உன்னை நினைக்கும்பொழுதே எங்களுடைய துன்பங்களும் துக்கங்களும் தூரவிலகுகின்றன; ஜகத்தையளித்து நீ! காப்பாற்றுகிறவன், சகலருடையபிதா!பரமாத்மா. ஆதலால் உம்மையேநாம்தியானம்செய்யவேண்டும்.'' அப்பரமேச்வரன் நம்முடைய ஆத்மாவிலும், புத்தியிலும் அந்தர்யாமியாயிருந்துகொண்டு நம்மை துராசாரம், அதர்மம், முதலியவழிகளிலிருந்து நீக்கி, சிறந்த ஒழுக்கம், நெறிவழி முதலானவைகளில் செல்லும்படி துணைபுரியட்டும். அவரைத்தவிர வேறு யாதொரு பொருளையும் நாம் துதிக்காமலிருப்போமாக. ஏனெனில் அவருக்குவமையுள்ளவர் ஒருவருமில்லை. தனித்தலைவர் அவரே. அவரே நம்முடைய பிதா, அரசன், நீதிபதி, சகல இன்பங்களையுமளிப்பவர் அவரே. மேற்சொன்ன மந்திரத்தைக் கருத்துடன் கற்றுணர்ந்த பிறகு சந்தியோபாசனை, அதற்கேற்ற ஸ்நாநம், ஆசமனம், பிராணாயாமம், முதலானவைகளுக்கு வேண்டியதை கற்பிக்கவேண்டும்.

சந்தியோ பாசனைக்குமுந்தி வேண்டியவைகள்.

சரீர சுத்தஞ்செய்து ஆரோக்யத்தை உண்டு பண்ணுவது ஸ்நாநம்.

अद्भिर्गात्राणि शुध्यन्ति, मनः सत्येन शुध्यति ।
विद्यातपोभ्यां भूतात्मा, बुद्धिर्ज्ञानेन शुध्यति ॥ மனு 5. 109

தண்ணீரினால் சரீரத்தினுடைய வெளி அவயவங்களும் சத்தியாசாரத்தினால் மனதும் சுத்தமாகின்றது.

வித்தை—*அதாவது சகல கஷ்டங்களிலும் தர்மத்தைக் கைப்பற்றுவதினால் ஜீவாத்மா ஞானத்தை யடைகிறது.*

புத்தி—*அதாவது, அணுவிலிருந்து பரமேச்வரன் வரையிலுள்ள பொருள்களுடைய விளக்கத்தினால் புத்தியானது பரிசுத்தமாகிறது. ஆகவே ஒவ்வொருவரும் முதல் ஆகாரத்தை உண்பதற்கு முந்தி ஸ்நாநம் செய்யவேண்டும்.*

பிராணாயாமம்.

योगाङ्गानुष्ठानादशुद्धिक्षये ज्ञानदीप्तिराविवेकख्यातेः ॥ யோக 2. 28.

பிராணாயாமப் பழக்கமானது அசுத்தங்கள் யாவற்றையும் எரித்து ஆத்மாவையும் மேம்படுத்துகிறது. ஞானம் ஒளி பெறுகின்றது. முக்தியையும் ஞானவொளியையும் பெருக்கிக்கொண்டே போகிறது.

दह्यन्ते ध्मायमानानां धातूनां हि यथा मलाः ।
तथेन्द्रियाणां दह्यन्ते दोषाः प्राणस्य निग्रहात् ॥ மனு 6. 71.

தங்கம் முதலான லோகங்கள் அக்கினியின்முன் மாசற்று சுத்தமடைவது போல் பிராணாயாமத்தினால், மனம் முதலான இந்திரியங்களுடைய குற்றங்கள் குறைந்து நிர்மலமாகின்றன.

பிராணுயாம விதிகள்.

प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य ॥ யோக I. 34.

வேகமிருந்த வாந்தியானது அடிவயற்றிலிருந்து அன்னத்தையும், நீரையும் வெளிக்கொண்டு வருவதுபோல் மூச்சுவிடும்போது வாயுவை வெளியில்விட்டு அவை மறுபடியும் உள்ளே வராமல் சக்திக்கேற்றவாறு தடுக்கவேண்டும். வெளிப்படுத்துங்காலத்து அபானத்துவாரத்தை மேலே இழுக்கவேண்டும். அதுவரையில் மூச்சுநிற்கிறது. இவ்விதம் மூச்சை வெகுநேரம் நிறுத்தலாம். கூடுமானவரையில் நிறுத்திவிட்டு பிறகு மெதுவாகக்காற்றை உள்ளே இழுக்க வேண்டும். மறுபடியும் முடியும்வரையில் செய்யவேண்டும். மனதில் "ஓம்" நாமத்தை உச்சரித்துக்கொண்டே யிருக்கவேண்டும். இப்படிச்செய்வதினுல் ஆத்மாவினுடையவும் மனதினுடையவும் சுத்தம்பெருகி அவைகளுக்கு ஒரு நிலேயும் ஏற்படுகிறது.

நாலு நிலைமைகள்:—

बाह्यविषय । आभ्यन्तर । स्तम्भवृत्ति । बाह्यान्तराक्षेपी ॥

(1) வெகுநேரம் வெளியில் மூச்சைத்தடுத்துவைப்பது—**பாஹ்யவிஷயம்.** (2) உள்ளே மூச்சையடக்கிவைப்பது—**அப்பியாந்திரம்.** (3) மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும்பொழுது எவ்வளவு நேரம் கட்டமுடியுமோ அவ்வளவு நேரம் கட்டுவது—**ஸ்தம்ப விருத்தி.** (4) சாதாரணமாய் மூச்சுவிடும் வழியை மாற்றித்திருப்பிவிடுதல். உள்ளே மூச்சையிழுத்துக்கொண்டிருக்குங் காலே வெளியாக்குதலைக் கைக்கொள்ளுதல்—வெளியே விட்டுக்கொண்டிருக்கும்பொழுதே உள்ளே யிழுத்துக்கொள்ளல். இவ்விதம் மூச்சுவிடுதலை மாற்றுவதினுல் உள்ளே யிழுப்பதும், வெளியில் விடுவதும் முறையே நின்று விடுகின்றன. அப்படியே மூச்சுவிடும்வகையும், இவ்விதம் செய்வதினுல் பிராணன் தன் சொந்த வசமடைந்து மனமும் இந்திரியங்களும் தன்னுடைய சுவாதீனத்தை யடைகின்றன.

சரீரபலமும், பராக்கிரமும் விருத்தியாவதினுல், அதிநுட்பமானவும் சூக்ஷ்மமுமான விஷயங்களை எளிதில் அறிவதற்கு வேண்டிய சக்தி, புத்திக்கு உண்டாகிறது. இதினுல் வீரியம் சரீரத்தில் விருத்தியடைந்து அதன் பலனுக மனிதனுக்குப் பலம், பராக்கிரமம், ஐம்புலன்களின் அடக்கம் முதலானவைகள் உண்டாகின்றன. அவ்விதம் உண்டாவதினுல் சிறிது காலத்திலேயே சகல சாத்திரங்களையும் அறிந்து மேன்மையடைகிறுன். ஸ்திரீகளும் இங்ஙனமே யோகாப்பியாசம் செய்தல்வேண்டும்.

ஒழுக்க முறைகள்:—உண்ணல், உடுக்கல், உட்காரல், எழுந்திருத்தல், சம்பாஷணை செய்தல், விலகுதல், பெரியோர், சிறியோர்களிடம் தக்கவாறு நடந்துகொள்ளல், முதலான எல்லா உபதேசங்களையும் மக்களுக்குக் கற்பித்தல் வேண்டும்.

(1) பிரம்ம யக்ஞம்:—சந்தியோபாசனையுமிதுவே.

ஆசமனம்:—அதிகமும், குறைவில்லாததும், நெஞ்சிலிருந்து ஹிருதயம் வரையில் நனைக்கிறதற்கு வேண்டிய அளவு ஜலத்தைக், கைநடுவில் வைத்துக் கொண்டு உட்கொள்ளுவதே. அப்படி உறிஞ்சுவதினால் கண்டத்திலிருக்கும் கபம் நீங்கி, பித்தமும் சற்று குறையும்.

மார்சனம்:—சோம்பலை நீக்குவதற்காக நடுவிரல் நான்காவது விரல் இவைகளால் ஜலத்தைக்கொண்டு கண்கள் முதலிய அங்கங்களில் தெளிக்க வேண்டும். சோம்பலும் இல்லாமல், ஜலமும் கிடைக்காமல்போனால் இது அவசியமில்லை.

பிராணாயாமத்தைக் கற்பிக்கவேண்டும். **மானசபரீட்சணம்** (அதாவது சிருஷ்டியின் சமுதாய விஷயங்கள்) **உபஸ்தானம்** (கடவுளுக்கு மனதினால் அர்ப்பணம் செய்வது) **உபாசனை** (அவருடைய துதி, பிரார்த்தனை தியானம்) இவைகள் யாவற்றையும் கற்பிக்கவேண்டும். **அகமர்ஷணம்** அதாவது பாபஞ் செய்யும் புத்தி எக்காலமும் இருக்கக்கூடாது. இச்சந்தியோபாசனையைத் தனிப்பிரதேசத்தில் ஒரே எண்ணத்துடன் செய்யவேண்டும். மனு சொல்லுவதாவது:

अपां समीपे नियतो नैत्यिकं विधिमास्थितः ।
सावित्रीमप्यधीयीत गत्वारण्यं समाहितः ॥ மனு 2. 104.

தனித்த விடத்தில், நிதானமாய் ஜலத்தின் சமீபத்தில் நின்றுகொண்டு நித்தியகர்மம் செய்து காயத்ரியை அர்த்தஞானத்துடன் ஜபிக்கவேண்டும். அதற்கேற்றவாறே நடந்துக் கொள்ளவேண்டும். முதலிலிருந்தே ஆரம்பம் செய்தல்வேண்டும்.

(2) தேவ யக்ஞம் (அக்னி ஹோத்திரம்.)

அக்னி ஹோத்திரம், மேதைகளுடைய சங்கம், முதலியவைகளை தேவ யக்ஞமெனப்படும். சந்தியோபாசனை, அக்னி ஹோத்திரம் இவைகளைக் காலை, மாலை இருவேளைகளிலும் செய்யவேண்டும். ஏனெனில் பகலும் இரவும் சேருகிற சந்திக்கே "சந்தியா" (அந்திப்பொழுது) எனப்படும். குறைந்தது ஒரு தடவையாவது பிரதிதினமும தியானஞ்செய்தல்வேண்டும். பரமாத்மாவைத் தியானிப்பதில் யோகபுருஷர்கள். எப்படி சமாதியிலிருந்து தியானம் செய்கிறார்களோ அப்படியே சந்தியோபாசனை முதலானவைகளைச்செய்ய வேண்டும்.

அக்னிஹோத்திரம்:—சூரிய உதயமான பின்னர் சிறிதுநேரம், சூரியாஸ்தமனத்திற்கு முன்னர் சிறிதுநேரமும் அக்னிஹோத்திரத்திற்குறிய காலங்களாம். உபயோகத்திற்குத்தேவையான சாமான்களாவன:—

(1) வேதி—ஒரு பாத்திரம். (மண்ணினால் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்டது) குண்டத்தின் மேற்புரத்தின் உயரம், நீளம், அகலம், 12 அல்லது 16 அங்குலம் சதுரமுள்ளதாகவும் அடிப்புரம் 3 அல்லது 4 அங்குல

சதுரமுள்ளதாகவு மிருக்கவேண்டும். குண்டத்தின்வாய் அடியைவிட நான்கு மடங்கதிகமாய் இருக்கவேண்டும். (2) சந்தனம். பலா, மா முதலான மரத் துண்டுகளைக் குண்டத்திற்கு ஏற்றவாறு, சீவி அடியில்வைக்கவேண்டும். நடுவில் அக்னியை வைத்து சுற்றி ஸமித்துக்களைச்சரியாக வைக்கவேண்டும். (3) ஒரு அகப்பை. (4) ஒரு குடம். (5) நெய் வைக்கக் கிண்ணம். (6) கரண்டி (வெள்ளி அல்லது தங்கம் அல்லது மரத்தினுல் செய்திருக்கவேண்டும்). வேதி யின் கீழே சரியாக சந்தனம் முதலான மரத்துண்டுகளையும் சீவல்களையும் வைத்து நடுவில் தீமூட்டி சுற்றி ஸமித்து முதலானவைகளை அடுக்கவேண்டும். அகப்பை, குடம், முதலானவைகளிலிருக்கும் ஜலத்தைக்கொண்டு கைகளைக் கழுவிக்கொண்டு பின்னர் கிண்ணம், அகப்பைகளிலுள்ள நெய்யை நன்ருய் பரி சோதித்து அக்னியில் கீழ்க்கண்ட மந்திரத்துடன் ஹோமஞ் செய்யவேண்டும்.

ओं भूरग्नये प्राणाय स्वाहा । भुववायवेऽपानाय स्वाहा । स्वरादित्याय व्यानाय स्वाहा । भूर्भुवः स्वरग्निवाय्वादित्येभ्यः प्राणापानव्यानेभ्यः स्वाहा ॥

யஜுர்வேதம்.

ஒவ்வொருதடவையும் மந்திரம் சொல்லும்பொழுது ஒரு கரண்டி நெய் யை வார்க்கவேண்டும். ஆகுதியதிகம் கொடுக்கநேரிடும் பக்ஷத்தில் கீழ்க்கண்ட மந்திரத்திலும், காயத்ரியிலும் அதை அளிக்கவேண்டும்.

विश्वानि देव सवितर्दुरितानि परा सुव । यद्भद्रं तन्न आसुव ॥

யஜுர் 30. 3.

"ஓம்" "பூஹ" "பிராண" முதலானவைகளெல்லாம் பரமேச்வரனுடைய திருநாமங்களே. அவைகளை விளக்கியாய்விட்டது. "ஸ்வாஹா:" என்பதின் பொருள், மனதிலுள்ளதையே பேசவேண்டுமென்பதும் அதற்கு விரோதமான தைக்கூடாதென்பதுமேயாம். சகல பிராணிகளுடைய சுகத்திற்காக ஜகத்தி லிருக்கும் பொருள்களை யெல்லாம் பரமேச்வரன் செய்திருப்பதுபோல், மனி தனும் எல்லாவற்றிற்கும் பரோபகாரம் செய்யவேண்டும்.

வினு.—ஹோமம் செய்வதினுல் என்ன உபகாரம்?

விடை.—துர்கந்த வாயுவினுலும் கெட்ட ஜலத்தினுலும் மனிதனுக்குப் பிணியும், பிணியினுல் பிராணிகளுக்குத்துக்கமும், சுகந்தவாயுவினுலும் பரி சுத்த ஜலத்தினுலும் ஆரோக்கியமுண்டாகி பிணிகள் குறைந்து, சுகம் பெரு குகிறதென்பது யாவரும் அறிந்த விஷயம்.

வினு.—சந்தனம் முதலானவைகளை நெருப்பில் எரித்து வீணுக்குவதை விட எவருக்காவது பூசி, தேய்த்தாலும் நெய் முதலானவைகளை யாருக்காவது கொடுத்து உண்ணச்செய்தாலும், பெருத்த உபகாரமாகுமே? அப்படி யிருக்க இங்ஙனம் வீண்செய்வது புத்திமான்களுக்கு அழகோ?

விடை.—உனக்குப் பொருளாராய்ச்சி சாஸ்திரம் தெரிந்திருந்தால் இங் ஙனம் சொல்லமாட்டாய். ஏனென்ருல் எத்திரவியமும் அபாவத்தை அடைந் து வீணுகிறதில்லே. ஹோமம் செய்வதினுல் தூரத்திலிருக்கிற மனிதனும்

சுகந்த வாசனையைக் கிரகிப்பதைப் பார்க்கிறாய். அக்னியில், ஆகுதி செய்யும் பதார்த்தங்கள் சூட்சுமமாய் வாயுவுடன்கூடிக் கலந்து தூரத்திலிருக்கும் எல்லா இடங்களிலும் பரவி துர்க்கந்தத்தை நிவர்த்திசெய்வது நன்றாய்த் தெரிகிறது.

விஞ.—அப்படி யிருக்கிற விஷயத்தில், கேசர் பவுடர், கஸ்தூரி, சுகந்த புஷ்பங்கள், அத்தர் முதலியவைகளை வீட்டில்வைத்து வாயுவை எல்லாம் சுகந்தமாகச்செய்து சுகத்தையும் ஆனந்தத்தையும் ஏன் அனுபவிக்கக்கூடாது?

விடை.—அச்சுகந்த வஸ்துக்களுக்கு வீட்டிலிருக்கும் கெட்டவாயுவை நீக்கி வெளியிலிருக்கும் பரிசுத்தவாயுவை பிரவேசிக்கச்செய்யவேண்டிய சக்தி யில்லை. ஏனென்றால் பிரிக்கச்செய்யும் சக்தி அதற்குக்கிடையாது. துர்கந்தத்துடன்கூடின பதார்த்தங்களைச் சின்ன பின்னம் செய்து மெல்லியதாக்கி வாயுவிலிருக்கும் அசுத்தங்களை வெளியில் தள்ளி, பரிசுத்தவாயுவைப் பிரவேசிக்கச்செய்யும் சக்தி அக்னிக்குத் தான் உண்டு.

விஞ.—ஹோமம் செய்யும்பொழுது மந்திரம் சொல்வதின் பயன் என்ன?

விடை.—ஹோமம் செய்வதினால் உண்டாகும் இலாபங்கள் மந்திரத்திலிருக்கும் வியாக்கியானத்திலிருந்து வெளியாகிறது. அடிக்கடி சொல்வதினால் அம்மந்திரங்கள் மனதில் பதிந்துவிடுகிறது. அப்படி மனப்பாடமாகிறபடியால் வேதங்களுடைய படிப்பும் ஆவதுமன்னியில் அவைகளும் காப்பாற்றப் படுகின்றன.

விஞ.—ஹோமம் செய்யாவிட்டால் பாபம் உண்டோ ?

விடை.—ஆமாம், மனிதர்களுடைய சரீரத்திலிருந்து உண்டாகும் எல்லா துர்கந்தம், வாயுவையும் ஜலத்தையும் கெடுத்து பிணிகளின் உற்பத்திக்குக் காரணமாய்ப்பிராணிகள் எல்லாவற்றிற்கும் துக்கத்தையுண்டாக்குகிறது. இவ்வளவு பாபங்களும் மனிதர்களால் செய்யப்படுகிறது. இந்தப் பாபத்தை நிவாரணம் செய்வதற்காகவும், அதற்கு வேண்டிய அவ்வளவு சுகத்தை வாயுவிலும் ஜலத்திலும் பரவச்செய்யவும், ஹோமம் செய்தல்வேண்டும். அன்னபானாதிகளை ஒரு மனிதனுக்குக்கொடுத்து அருந்தச்செய்வதினால் அவ்வொருவனுக்கே சுகமும் ஆனந்தமும் உண்டாகின்றன. ஆனால், ஒரு மனிதனுக்கு அளிக்கும் நெய்யும் சுகந்தவாசனைகளையும் அக்கினியில் ஆகுதி செய்யும் பட்சத்தில், இலட்சக் கணக்கான ஜனங்கள் பயன் அடைகிறார்கள். ஆனால் மனிதர்கள் நெய் முதலிய புஷ்டி தரக்கூடிய பதார்த்தங்களை உண்ணாதிருக்கும் பட்சத்தில் தேகத்தினுடைய பலம் விருத்தியாகின்றதில்லை. ஆகையினால் புஷ்டிக்கொடுக்கக் கூடிய பதார்த்தங்களை உண்ணவும் குடிக்கவும் வேண்டும். ஆனால், ஹோமம் செய்வதினால் அதிக பயன் உண்டாகின்றது. எனவே, ஹோமம் செய்தல் அவசியமாகிறது.

விஞ.—ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு ஆகுதி கொடுக்கவேண்டும்? ஒவ்வொரு ஆகுதியின் பரிமாணம் எவ்வளவாயிருக்கவேண்டும்?

விடை.—ஒவ்வொரு மனிதனும் பதினாறு தடவை ஆகுதி செய்யவேண்டும். நெய் முதலியவைகள் ஒவ்வொரு ஆகுதியிலும் 6 மாசை (அல்லது ரூபாயின் பன்னிரண்டில் ஒரு பங்கு) இடையாவது குறையாமலிருக்கவேண்டும். இதற்கு அதிகமாய் ஆகுதி செய்தால் அவ்வளவும் நல்லதே. இதனாலேயே ஆரிய வர்த்தசிரோமணிகள், ரிஷிகள், மகரிஷிகள், இராஜாக்கள் இராஜ ராஜாக்கள் முதலானவர்கள் அதிக ஹோமம் செய்துகொண்டும், செய்யச்சொல்லியும் இருந்தார்கள். ஹோமம் எக்காலம்வரையில் செய்யப்பட்டுவந்ததோ அக்காலம் வரையில் நோயில்லாமல் சுகம் இருந்துவந்தது. இப்பொழுதும் அவ்வாறேசெய்துவந்தால் முன்போலவே சுகமும்சௌக்கியமும்உண்டாகும்.

பிரமசாரிகள் செய்ய வேண்டிய இரண்டு யக்ஞங்களாவன :—

(1) வித்தைக்கற்றுக்கொள்ளுதல், கற்பித்தல், சந்தியோபாசனை, ஈச்வர ஸ்துதி, பிரார்த்தனை, உபாசனை முதலானவைகளைச் செய்வது "பிரம்மயக்ஞம்" (2) அக்னி ஹோத்திரத்திலிருந்து அசுவமேத பரியந்தம் உள்ளயக்ஞமும், வித்வான்களுடையபணிவிடையும்சங்கமுமே "தேவயக்ஞம்". பிரமசாரிகள் மாத்திரம் **பிரம்மயக்ஞமும்** அக்னிஹோத்திரமும் செய்ய வேண்டும்.

ब्राह्मणस्त्रयाणां वर्णानामुपनयनं कर्त्तुमर्हति । राजन्यो द्वयस्य वैश्यो वैश्यस्यैवेति । शूद्रमपि कुलगुणसम्पन्नं मन्त्रवर्जमनुपनीतध्यापयेदित्येके ॥

இது சுசுருதத்தின் சூத்திரஸ்தானமாகிற இரண்டாவது அத்தியாயத்தின் வசனம். பிராமணன், பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களுக்கும், க்ஷத்திரியன், க்ஷத்திரிய வைசியர்களுக்கும், வைசியன், வைசியனுக்கும் எக்ஞோபவீதம் போட்டுவித்து படிப்பிக்கலாம். வேலைக்காரவகுப்பில் சேர்ந்திருந்தும் நற்குலத்துடன் கூடினவராயும் நல்லொழுக்கத்துடன் கூடினவராயுமிருந்தால் மந்திர சங்கீதையைவிட்டு எல்லா சாஸ்திரங்களையும் படிப்பிக்கவேண்டும். சூத்திரம்படிக்கலாம்; ஆனால், உபநயனம் செய்யக்கூடாது என்பது அநேக ஆசாரியருடைய அபிப்பிராயம்.

பிரமசரியம்.

ஐந்தாவது வயதிலிருந்து எட்டாவது வயது வரையில் பிள்ளைகளையும், பெண்களையும் அவரவர்கள் பாடசாலைகளுக்கு முறையே அனுப்பவேண்டும். அடியில்கண்ட கட்டளைகளின் பிரகாரம் போதனுமுறை ஆரம்பிக்கவேண்டும்.

षट्त्रिंशदाब्दिकं चर्य्यं गुरौ त्रैवेदिकं व्रतम् ।
तदर्धिकं पादिकं वा ग्रहणान्तिकमेव वा ॥ மனு 3. 2.

எட்டாவது வயதிலிருந்து முப்பத்தாறுவது வயதுவரையில் பிரமசரிய விரதத்தைக் கைப்பற்றவேண்டும். அதாவது, ஒவ்வொரு வேதத்தையும் பன்னிரண்டு வருஷகால பரியந்தம் சாங்கோபாங்கமாய்ப் படித்து மூன்று வேதங்களையும் முப்பதி ஆறுவருஷத்தில் படித்து முடித்தல் வேண்டும். இந்த முப்பத்தாறு வருஷத்துடன் பாலகனயிருந்த எட்டுவயதையும் சேர்த்தால் நாற்பத்து

நான்கு வருஷமாகிறது. அதுவரையிலும் பிரமசரியத்தைக் காப்பாற்ற வேண்டும். அல்லது பதினெட்டு வருஷகாலம் குருகுல வாசத்துடன் முன் சொல்லியிருக்கும் எட்டு வருஷமும் சேர்ந்து இருபத்தாறு வருஷகாலமாவது அல்லது ஒன்பது வருஷகாலமாவது அல்லது வித்தையை முழுவதும் கிரகிக்கும் வரையிலாவது பிரமசரியத்தைக் காப்பாற்றவேண்டும்.

மூன்றுவித பிரமசரியம்.

கீழ்க்காணும் ஆறு மேற்கோள்களும் சாந்தோக்கிய உபநிஷத்திலிருந்து

पुरुषो वाव यज्ञस्तस्य यानि चतुर्विंशतिवर्षाणि तत्प्रातः सवनं, चतुर्विंशत्यक्षरा गायत्री गायत्रं प्रातः सवनं तदस्य वसवोऽन्वायत्ताः प्राणा वाव वसव एते हीदं सर्वं वासयन्ति ॥

1. பிரமசரிய விரதத்தை அனுஷ்டிப்பதில் மூன்று விதங்கள் இருக்கின்றன. கனிஷ்டம், உத்தமம், அதமம். "**கனிஷ்டம்**" யாதெனில் எப்புருஷனுடைய தேகம் அன்னரசமயமாயும், ஜீவாத்மாவினால் எங்கும் பரவியும், எவன் சற்சங்கங்களில் வசிக்கிறானோ நற்காரியங்களையும் செய்கின்றானோ அவன் இருபத்திநான்கு வருஷகாலம்வரையில் இந்திரியங்களை ஜயித்து வேதாதிசத்திய சாஸ்திரங்களை பிரம்மசரியத்தோடிருந்து படித்து சுசீலத்தை அனுஷ்டிக்கவேண்டும். விவாகமானபிறகும் விஷய விவகாரங்களில் மூழ்கக் கூடாது. அப்பொழுது அவனுடைய தேகத்தில் பிராணன் பலத்தை அடைந்து எல்லா சுபகுணங்களுக்கும் இருப்பிடமாகிறது.

तञ्चेदेतस्मिन् वयसि किञ्चिदुपतपेत्स ब्रूयात्प्राणा वसव इदं मे प्रातःसवनं माध्यन्दिनं सवनमनुसंतनुतेति माहं प्राणानां वसूनां मध्ये यज्ञो विलोप्सीयेत्युद्धैव तत एत्यगदो ह भवति ॥

(2) வித்தியாப்பியாசத்தைக் கிரகிப்பதிலேயே வாழ்நாட்களின் முதற்பாகத்தைக் கழிக்கவேண்டும். உபாத்தியாயர்கள் சிஷ்யர்களுக்கு அதைப்பற்றியே எப்பொழுதும் போதிக்கவேண்டும். "நான் பிரமசாரியம் முதலான விரதத்தைச் சரிவரக்காப்பாற்றினால் என்னுடைய சரீரமும், ஆத்மாவும், ஆரோக்கியத்தையும், பலத்தையுமடைந்து என்னுடைய பிராணனும் சிறந்தகுண முதலியவைகளால் நிறைகின்றது." என்று ஒவ்வொரு பிரமசாரியும் நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். ஓ! மனிதர்களே! நீங்கள் இவ்விதம் இன்பங்களையும் சந்தோஷங்களையும் விருத்திசெய்துகொள்ளுங்கள். "பிரம்மசரியத்துக்குக் கெடுதலைசெய்யாமல் இருபத்திநான்கு வருஷத்திற்குப்பிறகு கிரஹஸ்தாசிரமம்செய்வேனேயானால் என்னுடைய தேகம் பிணிகளிலிருந்து நீங்கி என்னுடைய ஆயுளும் எழுபது அல்லது எண்பது வருஷகாலம் நீடிக்கும்" என்பதை நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள்.

अथ यानि चतुश्चत्वारिंᳬ शद्वर्षाणि तन्माध्यंदिनᳬ सवनं चतुश्चत्वारिंᳬश-दक्षरा त्रिष्टुप् त्रैष्टुभं माध्यंदिनगं सवनं तदस्य रुद्रा अन्वायत्ताः प्राणा वाव रुद्रा एते हीदगं सर्वगं रोदयन्ति ॥

(3) எம்மனிதன் நாற்பத்திநான்கு வருஷகாலம்வரையில் பிரமசரியத்தை அனுஷ்டித்து வித்தியாப்பியாசம் செய்கிருனே, அவனுக்குப்பிராணன், இந்திரியங்கள், அந்தக்கரணம், ஆத்மா, முதலியவைகளின் பலம்விருத்தியாகி, அவன் தன் எல்லா கெட்ட நடத்தைகளையும் அழித்து, சிரேஷ்டமானவைகளைக் காப்பாற்றுகிறவனுகிருன்.

तं चेदेतस्मिन्वयसि किञ्चिदुपतपेत्स ब्रूयात्प्राणा रुद्रा इदं मे माध्यंदिनᳬ सवनं तृतीयसवनमनुसन्तनुतेति माहं प्राणानाᳬरुद्राणां मध्ये यज्ञो विलोप्सीयेत्युद्धैव तत एत्यगदो ह भवति ॥

இதுவே மத்தியம பிரமசரியம்.

(4) "என்னுடைய வாழ்நாளின் முற்பகுதியைப் பிரமசரியத்திலேயே கழிப்பேனேயாகில் ருத்திர ரூபமாயிருக்கப்பட்ட இப்பிராணனனது (சரீரத்தைவிட்டு பிராணன்போய்விடுமேயானுல் அச்சரீரத்தைச் சார்ந்தவைகளுக்கெல்லாம் விசனத்தை உண்டுபண்ணுகிறது. அதற்காகப் பிராணனை ருத்திரரூபம் அல்லது விசனத்தின் ரூபம் என்று சொல்வது இயல்பு.) ஆனந்தத்தை அடைகிறது. ஆகவே மத்தியம பிரமசரியத்தை நான் சித்தம்செய்வேன் என்று பிரம்மசாரியானவன் குருவினிடத்தில் சொல்லவேண்டும். ஓ! பிரமசாரிகளே! நீங்களும் இந்தப் பிரமசரியத்தை விருத்தி செய்யவேண்டும். நான் எப்படி பிரமசரியத்தைக் கைக்கொண்டதினுல் யக்ஞசுவரூபனுயிருக்கிறேனே நீங்களும் அப்படியே இருத்தல்வேண்டும். நான் பழையகாலத்து ஆசாரியகுலத்திலிருந்தே வந்து வியாதி யொன்றுமில்லாமல் சௌக்கியமாயிருக்கின்றேன். ஆகையினுல் பிரமசாரிகள் செய்யவேண்டிய உத்தமகாரியங்களை நீங்கள் செய்யவேண்டும் என்று குரு சொல்லவேண்டும்.

अथ यान्यष्टाचत्वारिंᳬशद्वर्षाणि तत्तृतीयसवनमष्टाचत्वारिंᳬसदक्षरा जगती जगतं तृतीयसवनं तदस्यदित्यान्वायत्तः प्राणा वावादित्या एते हीदᳬ सर्वमाददते ॥

(5) நாற்பத்தெட்டு வருஷகாலம் பிரமசரியத்தைக் காப்பாற்றிக்கொள்வதே மூன்ருவதான உத்தமபிரமசரியம். நாற்பத்தெட்டு அட்சரங்களால் உலகமிருப்பதுபோல் நாற்பத்தெட்டு வருஷபரியந்தம் உண்மையாய் பிரமசரியத்தை அனுஷ்டிப்பவன் தன்னுடைய பிராணனை வசீகரம்செய்து எல்லாவித்தைகளையும் கிரகிக்கிருன்.

तं चेदेतस्मिन् वयसि किञ्चिदुपतपेत्स ब्रूयात् प्राणा आदित्या इदं मे तृतीयसवनमायुरनुसंतनुतेति माहं प्रणानामादित्यानां मध्ये यज्ञो विलोप्सीयेत्युद्धैव तत एत्यगदो हवै भवति ॥

(6) ஆசான், மாதா, பிதா, தங்களுடைய சந்தானங்களை, வித்தையைக் கிரகிப்பதற்காகவும் நல்லவழக்கங்களை அனுசரிப்பதற்காகவும் தபஸ்விகளைப்போல் பழக்கி அங்ஙனம் செய்வதனால் உண்டாகும் பயன்களையும் அவர்களுக்கு உபதேசம் செய்யவேண்டும். சந்தானங்களும் இடைப்பிரியாமல் தங்களுடைய பிரமசரியவிரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். அப்படிச்செய்வதனால் அவர்கள் வித்வான்களாகவும், பூர்ணவயது (நானூறு) ஜீவிப்பவர்களாகவும் ஆகிறார்கள். ஏனென்றால் இங்ஙனம் பிரமசரியத்தை அனுஷ்டித்து குறைசெய்யாமலிருப்பவர்கள் எல்லாவிதமான வியாதிகளிலிருந்தும் நீங்கி, தர்மார்த்த காமமோட்சத்தை அடைகிறார்கள்.

சரீரத்தினுடைய நான்கு பருவங்கள்.

चतस्रोऽवस्थाः शरीरस्य वृद्धिर्यौवनं सम्पूर्णता किञ्चित्परिहाणिश्चेति ।
आषोडशाद्वृद्धिः । आपञ्चविंशतेर्यौवनम् ।आचत्वारिंशतः सम्पूर्णता ।
ततः किञ्चित्परिहाणिश्चेति ॥
पञ्चविंशे ततो वर्षे पुमान् नारी तु षोडशे ।
समत्वागतवीर्यौ तौ जानीयात्कुशलो भिषक् ॥ சுஸ்ரு. சூத்ர. 335.

சரீரத்திற்கு நான்குபருவங்கள் உண்டு (1) விருத்தியடையும்: அதாவதுவளரும் பருவம்; அதாவது பதினறு வயதிலிருந்து இருபத்தைந்தாவது வயது வரையில் தேகத்திலிருக்கும் எல்லாத்தாதுக்களும் வளருகின்றன (2) யௌவனவஸ்தை: இருபத்தைந்தாவது வருஷத்தின் கடைசியிலிருந்து இருபத்தாறுவது வயதின் ஆரம்பத்திலிருந்து யௌவனவஸ்தை ஆரம்பிக்கின்றது. (3) சம்பூர்ணத்தை: நாற்பதாவது வயது வரையில் எல்லாத்தாதுக்களும் புஷ்டியை அடைகின்றன. அதற்கே "சம்பூர்ணத்தை." (4) சரிவர சரீரத்திலிருக்கும் சகலதாதுக்களும் வலுவை அடைந்து "பூர்ணதை" அடைகின்றன. அதற்கு பிறகு விருத்தியாகும் தாதுவானது சரீரத்தில் நிற்காமல் கனவின் வழியாகவோ வியர்வையின் வழியாகவோ வெளியில் வந்து விடுகிறது. ஆகையினால் நாற்பதாவது வயது கலியாணம் பண்ணுவதற்கு மிகவும் உத்தமமான சமயம். ஆனால் சிறந்தகாலம் 48-ஆவது வயதே.

வினா:—புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பிரமசரியாதி நியமனங்கள் சமமானவைகளா? அல்லது வேறானவைகளா?

விடை:—இல்லை. புருஷன் 25 வயது வரையில் பிரமசரியத்தை அனுஷ்டித்தால் ஸ்திரீ பதினறு வயது வரையிலும் கன்னிகையாய் இருக்க வேண்டும். புருஷன் முப்பது வயதுவரையில் பிரம்மசரியாயிருந்தால் ஸ்திரீகள் பதினேழு வயது வரையில் இருக்கவேண்டும். புருஷர்களுக்கு

முப்பத்தாறு வயது வரையில் விவாகம் ஆகாமலிருந்தால், பெண் பதினெட்டு வயது வரையில் அங்ஙனமே இருக்கவேண்டும். நாற்பது வரையில் புருஷன் பிரமசரியத்தைக் காப்பாற்றினால், இருபது வரையில் பெண்ணும் இருக்க வேண்டும். நாற்பத்து நான்கு வரையில் இருந்தால், பெண் இருபத்திரண்டு வரையில் அப்படியே இருத்தல் வேண்டும். நாற்பத்தெட்டு வயது வரையிலிருந்தால் இருபத்திநான்கு வரையிலிருக்கவேண்டும். அதாவது புருஷனுக்கு நாற்பத்தெட்டு வயதிற்குமேலும், ஸ்திரீகளுக்கு இருபத்தி நான்குக்குமேலும் பிரமசரியத்தை அனுசரிக்கலாகாது. இந்நியமங்கள் கல்யாணம் செய்துகொள்ள எண்ணமுள்ளவர்களுக்கேயாம். அப்படிச் செய்துகொள்ள இஷ்டமில்லாதவர்கள் ஆயுள் பரியந்தம் பிரமசாரிகளாயிருக்கலாம். அவர்கள் சுயேச்சையுள்ளவர்கள். இதைக்கைக்கொண்டு நடத்தக் கூடியவர்கள் பூர்ண வித்தையை யுடையவர்களும், ஐம்புலன்களை யடக்கினவர்களும், குற்றமில்லாமலும் இருக்கிற யோகிகளான ஸ்திரீகளும் புருஷர்களுமே. காமவேகத்தைத் தடுத்து இந்திரியங்களைத் தன்வசம் செய்துக் கொள்ளுவது மிகவும் பிரயாசையான வேலையாகும்.

போதனுமுறைகள்

(1) ऋतं च स्वाध्यायप्रवचने च । (2) सत्यं च स्वाध्यायप्रवचने च ।
(3) तपश्च स्वाध्यायप्रवचने च । (4) दमश्च स्वाध्यायप्रवचने च ।
(5) शमश्च स्वाध्यायप्रवचने च । (6) आग्नयश्च स्वाध्यायप्रवचने च ।
(7) अग्निहोत्रश्च स्वाध्यायप्रवचने च । (8) अतिथयश्च स्वाध्यायप्रवचने च ।
(9) मानुषं च स्वाध्यायप्रवचने च । (10) प्रजा च स्वाध्यायप्रवचने च ।
(11) प्रजनश्च स्वाध्यायप्रवचने च । (12) प्रजातिश्च स्वाध्यायप्रवनने च ॥

தைத்ரேய உபநிஷத், 79.

சீடர்களுக்கும் ஆசான்களுக்கும் ஏற்றவிதிகளாவன :—

(1) கற்கவும் கற்பிக்கவும், நன்னடைத்தை வேண்டும். (2) வேதம்முதலான உண்மையான சாஸ்திரங்களை மானிடர்கள் கற்கவும் கற்பிக்கவும் வேண்டும். (3) வேதம் முதலானவைகளைக் கற்று ஒழுகுவதினால், தபஸ்விகளாயும், தர்மானுஷ்டான முள்ளவர்களாயு மிருக்கவேண்டு. (4) கற்குங் காலத்தும் கற்பிக்குங்காலத்தும் தகாத வெண்ணங்களிலிருந்து இந்திரியங்களைத் திருப்ப வேண்டும் (5) தீய நடத்தைகளிலிருந்து மனதை நீக்கி, படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும், (6) மின்னல், மின்சாரம், வெளிச்சம் முதலான இயற்கைச் சாத்திரங்களைப் படிப்பதிலும் படிபித்தலிலும் கவனத்தைச்செலுத்தவேண்டும். (7) கற்கும்பொழுதும் கற்பிக்கும் பொழுதும் ஹோமம் செய்தல் வேண்டும் (8) கற்கும் பொழுதும் கற்பிக்கும்பொழுதும் அதிதிகளை வரவேற்க வேண்டும் (9) மனிதனை ஒட்டின சகல விஷயங்களையும், கற்பிப்பவர்களும் கற்றுகொள்ளுகிறவர்களும் கவனிக்கவேண்டும் (10) மக்கள், அரசாங்கம் இவைகளுடைய ஆளுகையை ஒட்டின விதிகளை, படித்தும் படிப்பிக்கவும் வேண்டும். (11) போதனைகாலம் வரையில் வீரியத்தைக் காப்பாற்றிப் பெருக்கவேண்டும் (12) மக்களையும், சிஷ்யர்களையும் காப்பாற்றும் வழியை அறியவேண்டும்.

यमान् सेवेत् सततं न नियमान् केवलान् बुधः ।
यमान्पतत्यकुर्वाणो नियमान् केवलान् भजन् ॥ மனு 4. 204.

புத்திவான் எமங்களுடைய (நன்னெறி) முறைகளைத் தவறாமல் கவனிக்க வேண்டும். நியமங்களை (சமயாசாரக்கிரியைகளை) மாத்திரம் கவனித்தலில் பிரயோசனமில்லை. எமங்கள் அன்னியில் நியமங்களைக் கொண்டு ஒழுகி வந்த பொழுதிலும் ஒருவன் நேர்மையிலிருந்து வழுவுகிறான். எமங்களில் ஐந்து விதம் முண்டு. யோகசூத்திரத்தில் கூறியுள்ள வண்ணம்:—

तत्राहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः ॥ யோக. சாதன பாத. 30.

(1) அஹிம்சை (2) மனோவாக்கு எண்ணங்களிலும் சத்தியத்தையே கைக்கொள்ளுவது. (3) செய்கை, நடத்தை, எண்ணம் முதலானவைகளில் கூட திருட்டுப் புத்தியன்னியிலிருப்பது (4) போகம் முதலானவைகளில் ஆசையன்னியிலிருப்பது (5) பேராசை, சஞ்சல புத்தி முதலானவைகளை ஒழிப்பது (6) இவ்வைந்து எமாதிகளையும் எக்காலமும் கைக்கொள்ளவேண்டும்.

ஐந்து நியமங்களாவன:—

शौचसन्तोषतपः स्वाध्यायेश्वरप्राणिधानानि नियमाः ॥ யோக சாதன பாத 32.

(1) சுத்தமாயிருத்தல் (சரீரம், மனது) (2) திருப்தி—நிச்சிந்தை புடனிருத்தல் அல்ல. கொண்ட எண்ணம் கைக்கூடவேண்டி மானிட பிரயத்தினம் செய்தல். ஆனால், அதினால் ஏற்படும் இலாபம் நஷ்டம், சந்தோஷம் துக்கம், இவைகளைக் கருதக்கூடாது. (3) பயன்களைக் கவனியாமல் கடமையை நடத்தல் (4) உண்மையறிவைப் பெற்று பரவச்செய்தல் (5) அன்பு மேலிட்டு ஈச்வரனுக்கு ஆத்மாவை அர்ப்பணஞ் செய்தல். இவ்வைந்துமே நியமங்களெனப்படும். எமங்களன்னியில் நியமங்களைக் கைக்கொள்ளக் கூடாது. இவ்விரண்டையும் தழுவச் செய்யவேண்டும். எமங்களைக் களைந்து நியமங்களை மாத்திரம் தனித்துபின்பற்றுகிறவன் எப்பொழுதும் உயர்வதில்லை. இழிவையும் அடைகிறான். அதாவது உலக விஷயங்களில் சுற்றிச் சுற்றி சுழலுகிறான்.

कामात्मता न प्रशस्ता ना चैवेहास्त्यकामता ।
काम्यो हि वेदाधिगमः कर्मयोगश्च वैदिकः ॥ மனு 2. 2.

மிதமிஞ்சின ஆசையுடனும் அல்லது ஆசையற்றும் இருப்பதினால் மனிதனுடைய இன்பத்திற்கு இடந்தராது. ஏனெனில், வேதங்களுடைய ஞானத்தைப் பெறவோ அல்லது கற்புடன் வாழவோ முடியாது.

स्वाध्यायेन व्रतैर्होमैस्त्रैविद्येनेज्यया सुतैः ।
महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥ மனு 2. 27.

சகலசத்திய சாத்திரங்க்களைகற்பதும் கற்பிப்பதும் பிரமசரிய விரதம், உண்மை உரைத்தல், இவைகளை ஒட்டி நடப்பது; ஹோமம் செய்வது, உண்மையை ஏற்று பொய்யை மறுப்பது; சத்திய தருமத்தைப் பரவச்செய்வது; வேதங்கள்

கூறும் வண்ணம் தர்ம வழியில் நடப்பது; சந்தியோபாசனையும் வேதங்களு டைய ஞானத்தையும்பெறுவது; காலங்களுக் கேற்ற ஹோமங்களைச் செய்வது; நல்லமக்களைப் பெறுவது; பிரதி தினமும் பஞ்ச மகாயக்ஞங்களைச் செய்வது; கைத்தொழில் முதலான சிற்பவித்தைகளினால் சமூக மேன்மையும் நன்மை யும் கொடுக்கும் கார்யங்களைச் செய்வது; இவையே பிராம்மணம் ஆகிறது. அதாவது, அவனுடைய மனது வேதங்களுடைய கல்விக்கும் கடவுள் பக்திக் கும் இருப்பிடமாயிருக்கவேண்டும். இவைகளைச் செய்தாலொழிய 'பிராமணன்' என்று அழைக்க ஒருவனும் தகுதியில்லை.

इन्द्रियाणां विचरतां विषयेष्वपहारिषु ।
सँयमे यत्नमातिष्ठेद्विद्वान् यन्तेव वाजिनाम् ॥ மனு 2. 88.

கைப்பழக்கமுள்ள சாரதி யொருவன் குதிரைகளைத்தன்வசம் வைத்துக்கொள் ளுவதுபோல், புத்திமான் தன்னுடைய இந்திரியங்களை—மனம், ஆத்மா, இரண்டையும்கொடிய செய்கைகளிலிழுக்கக்கூடியது—தன்வசத்தில்வைத்துக் கொள்ளவேண்டும்.

इन्द्रियाणां प्रसङ्गेन दोषमृच्छत्यसंशयम् ।
सन्नियम्य तु तान्येव ततः सिद्धिं नियच्छति ॥ மனு 2. 93.

ஜீவாத்மா ஐம்புலன்களுடைய வசமாவதினால் கொடுங்குற்றங்களைச் செய்கி றது. இந்திரியங்கள், ஜீவாத்மாவுடைய வசமாவதினால், சர்வசித்தியைப் பெறுகிறது.

वेदास्त्यागश्च यज्ञाश्च नियमाश्च तपांसि च ।
न विप्रदुष्टभावस्य सिद्धिं गच्छन्ति कर्हिचित् ॥ மனு. 2. 97.

இழிவான ஆசாரங்களையுடையவன் ஐம்புலன்களைச் ஜயிக்காதவன்; வேதம் தியாகம், யக்ஞம், நியமம், தபசு முதலிய நல்ல காரியங்களில் சித்தி யடைகிறானில்லை.

वेदोपकरणे चैव स्वाध्याये चैव नैत्यके ।
नानुरोधोऽस्त्यनध्याये होममन्त्रेषु चैव हि ॥ மனு 2. 105.

வேதங்களைப்படிப்பதற்கும், படிப்பிப்பதற்கும், சந்தியோபாசனை முதலான பஞ்சமகாயக்ஞங்களைச் செய்வதற்கும், ஹோம மந்திரங்களுக்கும், ஒழிவு நாளென்பது ஒருபொழுதும் கிடையாது.

नैत्यिके नास्त्यनध्यायो ब्रह्मसत्रं हि तत्स्मृतम् ।
ब्रह्माहुतिहुतं पुण्यमनध्यायवषट्कृतम् ॥ மனு 2. 106.

நித்தியகர்மங்களை எப்பொழுதும் நிறுத்தலாகாது. ஏனெனில், சுவாசத்தை எப்படி நிறுத்துவதற்குச் சாத்தியப்படாமலிருக்கிறோமோ, அப்படியே நித்திய கர்மங்களை எப்பொழுதும் செய்யவேண்டும். "அனத்யாய" என்னும்படியான ஓய்வுநாளில் செய்யும் நற்செய்கைக்கு பயனில்லாமல் போகாது.

எப்படி பொய் சொல்லுவதினால் எப்பொழுதும் பயமும், உண்மையை உரைப்பதினால் எப்பொழுதும் புண்ணியமும் உண்டாகின்றதோ, அப்படியே தீயச்செயல்களைச் செய்வதினால் எப்பொழுதும் தீமையையும் நற்காரியங்களைச் செய்வதினால் நன்மையையும் பெறுவது அவசியம்.

अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्द्धन्त आयुर्विद्यायशोबलम् ॥ மனு 6. 121.

எப்பொழுதும் வணக்கத்துடனும் சுசீல சுபாவத்துடனும் கற்றுணர்ந்தவனாயும் இருந்துகொண்டு பெரியோர்களுக்குப் பணிவிடை செய்கிறவனுக்கு இந்நான்காகிய ஆயுளும், ஞானமும், கீர்த்தியும், பலமும் விருத்தியாகின்றன. அப்படிச் செய்யாதவனுக்கு இந்நான்கும் விருத்தியாகின்றதில்லை.

अहिंसयैव भूतानां कार्यं श्रेयोऽनुशासनम् ।
वाक् चैव मधुरा श्लक्ष्णा प्रयोज्या धर्मविच्छता मனு 2. 159.

விரோதமான புத்தியை விட்டு எல்லா மனிதர்களிடத்தும் நல்லவனாக இருக்க அறிஞர், முயலவேண்டும். அவனுடைய வார்த்தைகள் இன்பமாயும், மதுரமாயுமிருக்கட்டும். சன்மார்க்கத்தை உபதேசஞ்செய்வது அவனுக்கு ஏற்றவையாம். தர்மத்தில் மேன்மை யடையவேண்டுமென்று விரும்புவோர்கள், எக்காலத்தும் மனோவாக்கு எண்ணங்களில், சத்தியத்தையேகைக் கொண்டு நடக்கவேண்டும்.

यस्य वाङ्मनसे शुद्धे सम्यग्गुप्ते च सर्वदा ।
स वै सर्वमवाप्नोति वेदान्तोपगतं फलम् மனு 2. 160.

எவனுடைய மனதும் பேச்சும் சுத்தமாயும் அடக்கமுள்ளதாயும் இருக்கின்றதோ, அவனுக்குத்தான் எல்லா வேதாந்த சித்தாந்தங்கள் விளங்கும்.

संमानाद् ब्राह्मणो नित्यमुद्विजेत विषादिव ।
अमृतस्यैव चाकाङ्क्षेदवमानस्य सर्वदा ॥ மனு. 2. 162.

புகழ்மொழிகளை விஷத்தைப்போல் கருதியும், இழிவுமொழிகளை அம்ருதத்தைப்போல் எண்ணுகிறவனுமாகிற பிராம்மணனையே, எல்லா வேதங்களையும் கடவுளையும் அறிந்தவன் என்கிறார்கள்.

अनेन क्रमयोगेन संस्कृतात्मा द्विजः शनै ।
गुरौ वसन् संश्चिनुयाद् ब्रह्माधिगामिकं तपः ॥ மனு 2. 164.

இவ்வாறு, உபநயனம் செய்யப்பட்ட துவிஜர்களாகிய பிரமசாரிகள் (ஆண், பெண் இருபாலர்களும்), தங்களுடைய முதற்கடமையாகிய வேதங்களுடைய பொருளின் ஞானத்தைப்பெற்றுக் கொண்டிருக்கட்டும்.

योऽनधीत्य द्विजो वेदमन्यत्र कुरुते श्रमम् ।
स जीवन्नेव शूद्रत्वमाशु गच्छति सान्वयः ॥ மனு 2. 168.

வேதத்தை ஓதாமல் மற்றவிஷயங்களில் வீணாய்க் காலத்தைக் கழிக்கிற துவிஜர்களும் அவர்களுடைய புத்திர பௌத்திரர்களும், சூத்திராக மாறுகிறார்கள்.

वर्जयेन्मधु मांसञ्च गन्धं माल्यं रसान् स्त्रियः ।
शुक्तानि यानि सर्वाणि प्राणिनां चैव हिंसनम् மனு 2 177

பிரமசாரி (ஆண் அல்லது பெண்) மாம்சாகாரம், மதுபானம், மணம், பூமாலை சுவையுள்ள பதார்த்தங்கள், ஸ்திரீபுருஷசங்கம், புளிப்புப்பதார்த்தங்கள், ஜீவஹிம்சை, முதலியவைகளை விட்டு விடவேண்டும்.

अभ्यङ्गमञ्जनं चाक्ष्णोरुपानच्छत्रधारणम् ।
कामं क्रोधं च लोभं च नर्त्तनं गीतवादनम् மனு 2. 178.

தேகத்தை எண்ணெயிட்டுத் தேய்த்தல், ஜனனேந்திரியங்களைத் தொடுதல், மையிடுதல், குடை, செருப்பு இவைகளை உபயோகித்தல், காமம், கோபம், லோபம், பயம், துக்கம், பகை, விரோதம், ஆடல், பாடல், களித்தல், முதலானவைகளையெல்லாம் பிரமசாரி விட்டு விடவேண்டும்.

द्यूतं च जनवादं च परिवादं तथाऽनृतम् ।
स्त्रीणां च प्रेक्षणालम्भमुपघातं परस्य च மனு 2. 179

சூதாடல், வீண் பேசல், அவதூறு சொல்லல், புறம் பேசல், பொய் மொழிதல் முதலியவைகளையும் ஸ்திரீகளுடைய பார்வை (காமக்கண்களுடன்) அவர்களை கட்டி அணைத்தல், பிறருக்குத் தீங்கிழைத்தல் இவை போன்ற தீயச்செயல்களை விலக்கி விடவேண்டும்.

एकः शयित सर्वत्र न रेतः स्कन्दयेत्क्वचित् ।
कामाद्धि स्कन्दयन्रेतो हिनस्ति व्रतमात्मनः மனு 2. 180.

எக்காலத்தும் தனித்துத் படுத்துக் கொள்ளல் வேண்டும். ஆனல் இந்திரிய ஸ்கலிதமாகக் கூடாது. அவ்விதம் வீரியம் நஷ்டமானல், பிரமசர்ய விரதத்திற்கு பங்கம் ஏற்படுகிறது.

(1) वेदमनूच्याचार्योऽन्तेवासिनमनुशास्ति । (2) सत्यं वद । (3) धर्मं चर । (4) स्वाध्यायान्मा प्रमदः । (5) आचार्य्याय प्रियं धनमाहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः । (6) सत्यान्न प्रमदितव्यम् । (7) धर्मान्न प्रमदितव्यम् । (8) कुशलान्न प्रमदितव्यम् । भूत्यै न प्रमदितव्यम् । (9) स्वाध्यायप्रवचनाभ्यां न प्रमदितव्यम् । (10) देवपितृकार्य्याभ्यां न प्रमदितव्यम् । (11) मातृदेवो भव । पितृदेवो भव । आचार्य्यदेवो भव । अतिथिदेवो भव । (12) यान्यनवद्यानि कर्माणि तानि सेवित व्यानि नो इतराणि । (13) यान्यस्माकं सुचरितानि तानि त्वयोपास्यानि नो इतराणि ।

(14) ये के चास्मच्छ्रेयांसो ब्राह्मणास्तेषां त्वयासनेन प्रश्वसितव्यम् । श्रद्धया देयम् । (15) अश्रद्धया देयम् । श्रिया देयम् । ह्रिया देयम् । भिया देयम् । संविदा देयम् । (16) अथ यदि ते कर्मविचिकित्सा वा वृत्तविचिकित्सा वा स्यात् । ये तत्र ब्राह्मणाः सम्मर्शिनो युक्ता अयुक्ता अलूक्षा धर्मकामाः स्युर्यथा ते तत्र वर्तेरन् । तथा तत्र वर्तेथाः । (17) एष आदेश एष उपदेश एषा वेदोपनिषत् । एतदनुशासनम् । एवमुपासितव्यम् । एवमु चैतदुपास्यम् ॥ தைத்ரேய. பிரப 7. அனு II. 2. 3. 4.

இவ்விதமாய் ஆசான் தன் சிஷ்யனுக்கு உபதேசம் செய்தல் வேண்டும். "என் குழந்தாய்! (1) எக்காலமும் உண்மையேப்பேசு. (2) தர்மத்தை அனுசரி. (3) படிக்கும் பொழுதும் படிப்பிக்கும் பொழுதும், கவனமின்றி இராதே. (4) சகல கலைகளையும் கற்றுக்கொள்ளும் வரையில் பூரணமான பிரமசர்யத்தைக் கைக்கொள். (5) ஆசானுக்குவிலையுயர்ந்த பொருளைப்பிரியத்துடன்கொடு. விவாகஞ் செய்துகொண்டு சந்தானவிருத்தி செய் (6) சத்தியத்தை ஒருபொழுதும் கைவிடாதே, (7) அசட்டையினால் தர்மத்தை ஒருபொழுதும் கைவிடாதே (8) கவனமின்மையாய் ஆரோக்யம், சாதுர்யம், செழிப்பு முதலானவைகளை நாசஞ் செய்யாதே, (9) அசட்டையினால் படிப்பதையும் போதிப்பதையும் விடாதே. (10) கடவுள், மேதை, தாய், தகப்பன், முதலான பெரியோர்களை வழிபடு வதிலிருந்து ஒருபொழுதும் வழுவாதே, (11) பெற்ருேர், ஆசாரியன் ஏழை முதலியர்களை, வித்வான்களை வணங்குவதுபோலவே மரியாதை செய், (12) உண்மை பேசுதல் இன்னும் இதுபோன்ற நிந்தை யற்றதாயும் தர்மமாயுள்ள காரியங்களைச் செய். இதற்கு மாருக பொய் பேசுதல் முதலியவைகளை செய்யாதே, (13) சமயாசாரத்திற்கேற்ப நம்முடைய நற்காரியங்களைக் கைக்கொள். ஆனல் நம்முடைய தீச்செயல்களை எடுத்துக்கொள்ளாதே. (14) எங்களிடத்திருக்கிற சிறந்த கற்றுணர்ந்த சமயாசார பிராமணர்களுடைய சமூகத்தைச் சேருங்கள், அவரையும் நம்புங்கள். (15) தர்மவானுயிருங்கள், நம்பிக்கையுடன் கொடுங்கள். பேருக்காகவோ, மானத்திற்காகவே கொடுங்கள். ஜன நிந்தைக்குப் பயந்தோ அல்லது சொல் வார்த்தையைக் காப்பாற்றவோ கொடுங்கள். எப்பொழுதும் கொடுங்கள். (16) எப்பொழுதாவது சந்தேகம் உண்டானல் விவேகிகள், யோகிகள், ஆழ்ந்த சிந்தையுடன் தர்மம் செய்கிறவர்கள், தர்மாத்மாக்கள், தர்ம மார்க்கத்ததிலிருப்பவர்கள், முதலானவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவர்களைப்போல நடந்துகொள்ளுங்கள் (17) இதுதான் கட்டளை, இதுதான் உபதேசம், இது தான் வேதம், இதுதான் உபநிஷத், இவைகளையே பின்பற்ற வேண்டும். இதைக்கொண்டே உன்னுடைய குணங்களைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

अकामस्य क्रिया काचिद् दृश्यते नेह कर्हिचित् ।
यद्यद्धि कुरुते किञ्चित् तत्तत्कामस्य चेष्टितम् ॥ மனு 2. 4.

எண்ணமில்லாமல் ஒருவனுடைய இமைகள் கூட கொட்டுகிறதில்லை யென்பதை ஜனங்கள் அறியவேண்டும். அதாவது எவனொருவன் எதைச்செய்த போதிலும், எண்ணம், தோற்றம், இவைகளன்னியில் அதைச் செய்கிறதில்லை.

आचारः परमो धर्मः श्रुत्युक्तः स्मार्त्त एव च ।
तस्मादस्मिन्सदा युक्तो नित्यं स्यादात्मवान् द्विजः ॥ மனு 1. 108.

பேசுதல், கேட்டல், படித்தல், படிப்பித்தல் இவைகளுடைய பிரயோசனம் யாதெனில், வேதம் வேதானு கூலமாயுள்ள சுருதிகள் இவைகளால் கூறப்படும் தர்மங்களை அநுசரிக்கவேண்டும். இதனால் தர்மத்தை எப்பொழுதும் அனுஷ்டிக்கவேண்டும்.

आचाराद्विच्युतो विप्रो न वेदफलमश्नुते ।
आचारेण तु संयुक्तः सम्पूर्णफलभाग्भवेत् ॥ மனு 1. 109.

தர்மத்தினுடைய அநுசரணையிலிருந்து விலகியிருப்பவன், வேதத்தில் கூறப்பட்டிருக்கும் தர்மத்தினுடைய பிறப்பிலிருந்து உண்டாகும் சுகரூபமான பலத்தை யடைகிறானில்லை. வித்தைகளைக் கற்று தர்மத்தினுடைய அநுசரணையைக் கைக்கொள்ளுகிறவன் பூரண சுகத்தை யடைகிறான்.

योऽवमन्येत ते मूले हेतुशास्त्राश्रयाद् द्विजः ।
स साधुभिर्बहिष्कार्यो नास्तिको वेदनिन्दकः ॥ மனு 2. 11.

வேதம், வேதானுகூலமாயிருக்கும் முனிகளால் செய்யப்பட்ட நூல்கள் இவைகளை மறுப்போரை நாஸ்திகர்கள் என அறிந்து அப்புறப்படுத்தவேண்டும். வேததூஷணை செய்கிறவனுகையினால் அவனை ஜாதி, சமூகம், தேசம் நற்குணம் வாய்ந்தவர்கள், இவைகளிருந்து விலக்கவேண்டும்.

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥ மனு 2. 12.

தர்மாதர்மங்களை நிச்சியம்செய்வதற்கு நான்கு குறிகள் இருக்கின்றன. அதாவது (1) வேதம். (2) "ஸ்மிருதி"—வேதத்திற்கு அனுகூலமாய் ரிஷிகளால் எழுப்பட்டிருக்கும் கட்டளைகள் (மனுஸ்மிருதி முதலானவைகளைப் போன்றது) (3) சத்புருஷர்களுடைய ஆசாரம்—அது சனதனம் அதுவே வேத மூலமாகப் பரமேச்வரனால் அறிவிக்கப்பட்டது (4) தன்னுடைய ஆத்மாவுக்குப் பிரியத்தை உண்டுபண்ணுகிறது. (உண்மை பேசுவது முதலானவைகளைப் போன்றது. பக்ஷபாதமின்றி நியாயம் சத்தியம் இவைகளை கிரகித்து அசத்தியத்தை எப்பொழுதும் விடும் ஆசாரமே தர்மமெனப்படும். இதற்கு விரோதமாய் பக்ஷபாதத்துடன் சத்தியத்தை விழ்த்தல் அசத்தியத்தை கிரகித்தல் முதலிய கர்மங்களெல்லாம் அதர்மமெனப்படும்.

अर्थकामेष्वसक्तानां धर्मज्ञानं विधीयते ।
धर्मं जिज्ञासमानानां प्रमाणं परमं श्रुतिः ॥ மனு 2. 13.

பொன் முதலான பொருள்கள், ஸ்திரீ இவைகளுடைய வலைகளில் எவன் அகப்பட வில்லையோ, அவனுக்குத் தர்மத்தின் ஞானம் உண்டாகிறது. தர்மத்தினுடைய ஞானத்தைக் கோரினல் வேதத்தின் வழியாய் தர்மத்தை நிச்சியம் செய்யவேண்டும். ஏனென்ருல் தர்மாதர்மங்களுடைய நிச்சியத்தை வேத மிருந்தாலொழிய அறியமுடியாது.

இவ்விதம் ஆசாரியன் தன்னுடைய சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும். சிறப்பாய் இராஜ, இன்னும் மற்ற க்ஷத்திரிய வைசிய உயர்ந்த சூத்திர ஜனங்களுக்கும் வித்தையை அவசியமாய் கற்பிக்கவேண்டும். ஏனென்ருல் பிராமணர்களுக்குமாத்திரம் வித்தியாப்பியாசம்செய்து மற்றவர்களுக்கு இல்லாமல்செய்தால் வித்தை, தர்மம், ராஜ்ஜியம், தனம், முதலியவைகள் ஒருநாளும் விருத்தியடையாது. கேவலம் கற்பித்து கற்பிக்கச் செய்யும் பிராமணர்கள், க்ஷத்திரியர் முதலானவரிடத்தில் ஜீவித்து அவர்களாலேயே காலத்தைக் கழிக்கிருர்கள். க்ஷத்திரியர் முதலானவர்கள் கல்வியற்றுப் போவதினல், இடும் கட்டளைகளை ஊகித்து அறிந்துகொள்ள சக்தியற்றுப் போகிருர்கள். அப்பொழுது பிராமணர்களுக்கு க்ஷத்திரியர்களிடத்திலிருக்கும் பயம் முதலிவைகளெல்லாம் நீங்கி, தங்களுடைய கார்யங்களை இடையூறு அன்னியில் அவர்கள் நடத்திக் கொள்ளுகிருர்கள். அவர்கள் இங்ஙனம் மெதுவாக சுயநலத்தின் பொருட்டு இச்சக்தியை உபயோகம் செய்து, கபடம் முதலியவைகளில் விழுந்து தங்களுக்கு தோன்றியவண்ணம் செய்கிருர்கள். இதைக் கண்டு ஏனையவகுப்பினர்களும் பின் தொடருகிருர்கள். க்ஷத்திரியர்களும் மற்றவர்களும் நன்கு கற்றுணர்ந்தவர்களாயிருந்தால், அவர்களை விட அதிகமாய் இருப்பதற்கும், மீருவதற்கும் வேண்டி பிராமணர்கள் மிகவும் பிராயாசைப் படுவார்கள். அப்பொழுது அவர்கள் பொய்ப்பாடஞ் சொல்லி, சுயநல வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே பிராமணர்கள் தங்களுடைய சொந்த மேன்மைக்காகவும், இதரர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் வேதாதி சத்திய சாத்திரங்களை க்ஷத்திரியர் முதலானவர்களுக்கு வெகுப் பிரயாசையுடன் கற்றுக் கொடுத்துப் பயிற்சி செய்யவேண்டும் ஏனெனில் க்ஷத்திரிய முதலானவர்கள்தான் வித்தை, தர்மம் ராஜ்யம், ஐச்வர்யம், முதலிவைகளை விருத்தி செய்கிறவர்கள். அவர்கள் எப்பொழுதும் பிச்சை எடுக்கிறதில்லை யாதலால், வித்தியாவிஷயங்களில் பக்ஷபாதத்துடனிருக்க காரணமில்லை. எல்லாவகுப்பினரும் கசடறகற்றிருப்பின் எந்த ஒரு வகுப்பினரும் பிறரை வஞ்சித்தல் முடியாது. மோசம், அதர்மச்செயல்கள் முதலியவை இனத்தில பறவாது. அங்ஙனம் கற்றுணர்ந்த க்ஷத்திரியர்களால் முறையே பிராமணர்களும் சந்நியாசிகளும் காப்பாற்றப்படுகிருர்கள். ஆதலான் எல்லா இனத்தாருக்கும் ஆண் பெண் இருபாலர்களுக்கும் அறிவு அளித்தல் அவசியமாகும்.

அடியில்கண்ட ஐந்து சோதனைகளினல், கற்றுக்கொண்டவும் உபதேசிக்கப்பட்டதுமான யாவற்றையும் பரிக்ஷித்துப் பார்க்கவேண்டும்.

(i) வேதம் ஈச்வரனுடைய குணங்கள். வேதங்களுடைய போதனை களுக்கு எற்றதாயும் ஈச்வரனுடைய குணம் இயல்பு, சுபாவம் முதலானவை களுக்கு அனுகூலமாயுமிருப்பது உண்மை. இவைகளுக்கு விரோதமாயிருப்ப வைகளெல்லாம் அசத்தியம் அல்லது உண்மையற்றவை.

(ii) இயற்கை அமைப்புக்கு ஒத்ததெல்லாம் சத்யம் அதற்கு விரோத மாயிருப்பவைகளெல்லாம் பொய். உதாரணம். பெற்றோர்களுடைய தேக சம்பந்தமன்னியில் சிசு உண்டாயிற்றென்பது இயற்கை யமைப்பிற்கு மாறுன தினுல் பொய்யே. உண்மையாகாது.

(iii) ஆப்தர்கள். அதாவது தர்ம குணமுள்ளவர்கள், வித்வான்கள், உண் மை உரைப்பவர்கள், கபடமற்றவர்கள் இவர்களுடைய உபதேசம், ஒழுக்கம். இவைகளுக்கு அனுகூலமானதெல்லாம் விரும்பத்தக்கவை. பிரதிகூலமான தெல்லாம் விரும்பத்தகாதவை.

(iv) ஆத்ம அறிவு. உனக்கு நன்மையானது உலகத்திற்கும் நன்மை யானதே. உனக்குத் துன்பமானது உலகத்திற்கும் துன்பமே. நாம் எப்படி சுகத்தைக்கோறி துக்கத்தை வெறுக்கிறோமோ அதேமாதிரி பிறர்களுடைய விஷயத்திலும் கருதவேண்டும்.

(v) பிரமாணங்கள் எட்டு வகைப்படும்.

(1) பிரத்யக்ஷ பிரமாணம் (2) அனுமானம் (3) உபமானம் (4) சப்தம் (திருஷ்டாந்தம்) (5) ஐதீகம் (6) அர்த்தாத்பத்தி (7) சம்பவம் (8) அபாவம்.

इन्द्रियार्थसन्निकर्षोत्पन्नं ज्ञानमव्यपदेश्यमव्यभिचारि व्यवसायात्मकम्प्रत्यक्षम् ॥ நியாய சாஸ்திரம் 1. ஆன்ஹிகம் 1. சூத்திரம் 4.

(1) பிரத்தியக்ஷ பிராமணம்:—

பஞ்சேந்திரியங்களும் முறையே அவைகளுக்கேற்ற பொருள்களோடும் (கண்கள் வெளிச்சத்துடனும், காதுகள் சப்தத்துடனும், தோல் ஸ்பரிசத்து டனும், நாக்கு சுவையுடனும், மூக்கு முகருந்தன்மையுடனும்) மனம் (கவ னத்தையளிக்கும் உருபு) இந்திரியங்களுடனும், ஆத்மா மனதோடும் சேருவதி னுல் உண்டாகும் உணர்ச்சியின் அறிவே பிரத்தியக்ஷமெனப்படும்.

(i) ஆனுல், தண்ணீர் என்னும் வார்த்தைக்கும், அதைக்காட்டும் திரவ பதார்த்தத்திற்கும் உள்ள, சேர்க்கையினுல் உண்டாகும் அறிவு பிரத் தியக்ஷமாகாது. உதாரணமாக நீங்கள் உங்களுடைய வேலையாளைக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரச் சொல்வதாக வைத்துக்கொள்ளு வோம். அவன் கொண்டுவந்து உங்கள் முன்வைத்து சொல்லுவான். "இதோ தண்ணீர்—ஸ்வாமி" இப்பொழுது நீங்களும், உங்களுடைய வேலைக்காரனும் கண்ணுல் காணுவது தண்ணீர் என்னும் பெயரல்ல, அதைக்குறிக்கிற பொருளேயாம். ஆகவே தண்ணீர் என்று சொல்லப்

பட்ட பொருளுடைய பிரத்தியக்ஷ பிரமாணம் உண்டாகிறது. பெய ருக்கும், பெயரை விளக்குகிற பொருளுக்கும் உள்ள சம்பந்தத்தின் ஞானமே, நான்காவது பிரமாணமான "சப்தம்" மாகும்.

(ii) இந்த அறிவு நிலையற்ற குணத்தையுடையதாய் இருக்கக்கூடாது. அதாவது அனுகூலமற்ற சமயங்களில், கண்ட ஞானத்தின் அறிவா யிருக்கக்கூடாது. உதாரணமாக இருட்டில் ஒருவன் ஏதோ ஒன்றைக் கண்டு அதை மனிதனெனக் கொண்டான். ஆனால் பொழுதுவிடிந்த வுடன் அது தூணாகவிருப்பதைக் கண்டான். அவனுடைய விஷயத் தின் முதல் எண்ணம் நிலையற்றது. ஆனால் வெளிச்சத்தில் விளக்கின வுடன் பொருளின் உண்மை வடிவம் தெரிந்து நிலைத்திருக்கிற அறிவு உண்டாயிற்று.

(iii) சகல சந்தேகங்களிலிருந்தும் அது நீங்கினதாய், நிச்சியமாயிருக்க வேண்டும். உதாரணமாக தூரத்தில் ஒரு நதியைப் பார்த்துச் சொல் லுகிறீர். அங்கே தண்ணீரா என்ன? அல்லது வெள்ளை ஆடைகள் உலருவதற்காக விரிக்கப்பட்டிருக்கிறதா என்ன? இன்னுமொரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். தூரத்தில் நிற்கிற ஒருவனைக் கண்டு அங்கே நிற்பவன் தேவதத்தனு அல்லது எக்ஞதத்தனு? வென் கிறீர். உங்களுக்குச் சந்தேகமிருக்கிற வரையிலும் அதன் காரணமாக நிச்சயம் செய்ய முடியாமலிருக்கிற வரையிலும், அறிவு பிரத்தியக்ஷ மாகாது. அப்படி யிருக்கவேண்டினால் சந்தேகம் முழுவதும் அதில் இல்லாமலிருக்கவேண்டும்.

ஆகவே சுருங்கச்சொல்லுங்கால், பெயருக்கும் பொருளுக்குமுள்ள சம் பந்தத்தால் உண்டாகும் அறிவு இல்லாதவரையிலும், நிலையற்றகுண மில்லாததாயும் அல்லது சகல சந்தேகங்களிலிருந்தும் நீங்கினதாயும் இருக்கிற அறிவே பிரத்தியக்ஷமாகும்.

(2) அனுமானம்:—

अथ तत्पूर्वकं त्रिविधमनुमानं पूर्ववच्छेषवत्सामान्यतो दृष्टञ्च ॥

நியாயசூத்ரம். I. I. 5.

இரண்டுபொருள்கள் ஒரே சமயத்தில் ஒரேவிடத்திலிருப்பதைக் கண்டபிறகு வேறொருசமயத்தில், இரண்டிலொன்றைக்கண்டால், மீதியான மற்றொன்றை ஊகிக்கலாம். உதாரணமாக பிள்ளை யொன்றைக்கண்டவுடன், அதற்குப் பெற்றோர்களிருக்க வேண்டுமென்பதை ஊகிக்கிறீர்கள். மலைக்குப் பின்னால் எழும் புகையிலிருந்து, நெருப்பை ஊகிக்கிறீர்கள். அல்லது இன்னுமொரு உதாரணத்தை எடுத்துக்கொள்ளுவோம். இச்சமயத்தில் இவ்வுலகில் இன்ப துன்பங்கள் ஏற்றத்தாழ்வாயிருப்பதிலிருந்து, முன் பிறப்பில் நம்புகிறீர்கள். அனுமானத்தில் மூன்று விதமுண்டு,

(1) **பூர்வவத்:**—காரணத்திலிருந்து கார்யத்தை யறிவதேயாம். அதாவது மேகங்களைக்கண்டு, வரப்போகும் மழையை யறிதலாம். அல்லது கல்யாணமொன்றைக்கண்டு, ஒருநாள் அத்தம்பதிகளிருவருக்கும் மக்கட்பேறு உண்டாகமென்பதாம். அல்லது கல்வியைப் பயிலுகிற திலிருந்து பிள்ளைகள் ஒருநாள், கற்றுணர்ந்த வித்வான்களாவார்க ளெனவறிதலாம்.

(2) **சேஷவத்:**—கார்யங்களைக்கண்டு காரணங்களை ஊகித்தல். உதாரணங் களாவன :—நதியில் ஜலப்பெருக்கைக்கண்டு, அது உண்டாகும் மலைப்பிரதேசத்தில் மழையதிகமாய் பெய்திருக்கவேண்டும் என்று ஊகிப்பது. பிள்ளையைக்கண்டவுடன், அதற்கு உடனே தகப்ப னிருக்கவேண்டுமென்று நிச்சியிப்பது. சிருஷ்டியைக்கண்டு அதற்கு அநாதி கர்த்தாவான ஈச்வரனை ஊகிக்கிறோம். மேலும், இன்பம் அல்லது துன்பத்திலிருக்கிறவனைக்கண்டு முன்னே பாபம் அல்லது புண்ணியம் செய்திருப்பான் என்று அறிகிறோம். ஏனெனில் பாப புண்ணியகளுக்கேற்ப சுகதுக்கங்கள் விளைகின்றன வென்பதை நீங்கள் அறிவீர்கள்.

(3) **சாமான்யதோ திருஷ்ட:**—கார்ய காரண சம்பந்தமில்லாமல், இரண்டிற் கும் ஏதோவொரு உவமை இருப்பதை ஊகிக்கிறோம். உதாரண மாக முதற்விடத்திலிருந்து போகாமல் இரண்டாவது இடத்தை யடையமுடியாது. ஆகையால் ஒரு விடத்தில் ஒருவனைக்கண்டால் உடனே அவன் முன்னிடத்திலிருந்தே பின்னிடத்திற்கு வந்து இருக்கவேண்டுமென்று ஊகிக்கிறீர்கள்.

प्रत्यक्षस्य पश्चान्मीयते ज्ञायते येन तदनुमानम् ॥

பிரத்தியக்ஷமான பிறகு உண்டாகும் அறிவிற்கே அனுமானம் என்று பெயர். உதாரணமாக புகையைப் பிரத்தியக்ஷமாகப பார்த்தாலொழிய பார்க்காம லிருக்கப்பட்ட அக்னியுடைய அறிவு உண்டாகாது.

(3) உபமானம்:—

प्रसिद्धसाधर्म्यात्साध्यसाधनमुपमानम् நியாய சாஸ் I. I. 6.

மற்றொரு பொருளுடன் இசைந்திருப்பதைக்கண்டு, ஒரு பொருளுடைய அறி வைக்கொள்ளலே உபமானமாகும்.

அறியவேண்டிய பொருளுக்குச் **சாத்ய** மென்றும், இருபொருளுக் கும் வேண்டிய உவமைகளைப் புலனுக்குகிற வழிக்குச் **சாதன** மென்றும் பெயர்களாம். உதாரணங்கள்:—"விஷ்ண மித்திரனை அழைத்துவா" என்று கட்டளையிடுகிறான். இதற்கு முன்னால் அவனைக்கண்டதில்லை யாதலால், வேலைக்காரன் "நான் அவனைப்பார்த்ததில்லை" என்கிறான். அதற்கு "உனக்குத் தேவதத்தனைத் தெரியுமல்லவா"? என்கிறான் எஜமானன். ஆமாம்

தெரியும் என்று பதில் சொன்னவுடன், எஜமானன் சொல்லுவான் “ தேவதத்தனைப்போலவே விஷ்ணு மித்திரனும் இருப்பான்”. உடனே வேலைக்காரன் விஷ்ணுமித்திரனை அழைத்துவரச் செல்வான். தேடிச்சென்று கொண்டிருக்கும்வழியில் தேவதத்தனை ஒத்து அவனைப்போலிருக்கிறவனைப் பார்த்து விஷ்ணு மித்திரனாயிருக்கவேண்டும் என நிச்சயித்து தன் எஜமானனிடம் அழைத்துச்செல்வான். இரண்டாவது உதாரண மெடுத்துக்கொள்வோம். “ நீல் காம்” (கவரிமா) என்னவென்று ஒருவன் வினவ, மற்றொருவன் பசுவைப் போலிருக்கும் என்கிறான். காட்டிற்குச்சென்று அத்தகைய மிருகத்தைக் கண்டு இதுதான் “ நீல் காம் ” என்று நிச்சியம் செய்கிறான். தேவதத்தனைக் கண்டு விஷ்ணு மித்திரனை அறிவது பசுவையொத்த விலங்கைக்கொண்டு “ நீல்காமை ” அறிவது. இவ்விதமான அறிவிற்கே உபமான மெனப்பெயர். விஷ்ணு மித்திரன், நீல்காம் இவ்விரண்டும் சாத்தியம். தேவதத்தன், பசு இவ்விரண்டும் சாதனம்.

(4) சப்தம் (வார்த்தை)—

अप्तोपदेशः शब्दः ॥ நியாய. I. I. 7.

முற்றும் கற்றுணர்ந்த வித்வான்கள்; தர்மபுத்தியுள்ளவர்கள்; பரோபகாரப்பிரியமுள்ளவர்கள்; உண்மை உரைப்பவர்கள்; ஊக்கமுள்ளவர்கள்; ஐம்புலன்களையடக்கினவர்கள்; சகல ஜனங்களுடைய நன்மையைக் கோருகிறவர்கள்; தங்களுடைய அறிவு, அனுபவம், கொள்கை, முதலானவைகளால் தான் அடைந்த இன்பத்தின் மார்க்கத்தைப் பிறர்களுக்கும் எடுத்துரைக்க வேண்டுமென்று உண்மையாய் விரும்புகிறவர்கள்; மனதில் உறுதியாயுள்ள உண்மை, நன்மை, இவைகளைப் பரவச்செய்கிறவர்கள்; அணுவிலிருந்து ஈச்வரன் வரையில் தெரிந்த அறிவாளர், இவர்களெல்லோரும் ஆப்தர்களெனப் படுகிறார்கள். ஆப்தர்களெல்லோரையும்விடச் சிறந்தவராயும் உண்மையுமானவர் கடவுளே. அவருடைய வார்த்தையே வேதமாகும். இதற்கே சப்தபிரமாணமென்று பெயர்.

(5) இதிகாஸ: —

न चतुष्ट्वमैहिह्यार्थपत्तिसम्भवाभावप्रामाण्यात् ॥ நியாய. 2. 2. I.

எவ்வவ்மனிதன் எவ்வவ்மாதிரியிருந்தான். எவ்வவ்வேலை செய்தான். என்பதைப்புகட்டுவதே இதிகாசமாகும். அதாவது தேசசரித்திரமே அல்லது மனிதனுடைய ஜீவிய சரித்திரமேயாகும்.

(6) அர்த்தாபத்தி:—தீர்மானம். முடிவு.

“ अर्थादापद्यते सा अर्थापत्तिः ” केनादुच्यते “ सत्सु घनेषु वृष्टिः सति कारणे कार्यं भवतीति किमत्र प्रसज्यते, असत्सु घनेषु वृष्टिरसति कारणे च कार्यं न भवति ”

சொன்ன விவரங்களிலிருந்து விளையும் முடிவுக்கே இப்பெயர். உதாரணமாக, "மேகங்களிலிருந்து மழை பெய்கிறது" "காரணங்களிலிருந்து கார்யமுண்டாகிறது" என்று ஒருவன் சொன்னால், இதிலிருந்து உண்டாகும் முடிவு இதுவேயாகும். "மேகங்களில்லாத விடத்தில் மழை யிராது" "காரணமில்லாத கார்யங்கிடையாது."

(7) சம்பவம்:—சாத்தியமானது.

" सम्भवति यस्मिन् स सम्भवः "

எதாவது ஒரு விஷயத்தைக் கேட்டவுடன் அது ஆகக்கூடியதா என்பது மனதில் உடனே உதிக்கிறது. இயற்கை அமைப்பிற்கு மாறுயிருப்பதெல்லாம் ஆகக்கூடாதது. ஆகையினுல் அவை உண்மையாகாது. உதாரணமாக:—பெற்ருேர்களன்னியில் பிள்ளை பிறந்தது; இறந்தவனுக்கு யாரோ ஒருவன் உயிர் அளித்தான்: சமுத்திரத்தில் கற்களைமிதக்கச்செய்தான்: மலைகளைத் தூக்கினுன்; சந்திரனைத்துண்டு துண்டாகச் செய்து விட்டான்; பரமேச்வரனுடைய திரு அவதாரமே அவன்; மனிதன் தலையில் கொம்புகள் முளைக்கக்கண்டான்; மலடி வயிற்றுப்பிள்ளைகளுடைய விவாகத்தை முடித்துவைத்தான்: என்பவைகளெல்லாம் அசம்பவங்களாம். ஏனெனில் இவையெல்லாம் இயற்கை யமைப்பிற்கு விரோதமானவைகள். இயற்கை யமைப்பிற்கு ஒற்றவைகளே "சம்பவ"மாகும்

(8) அபாவம்:—இன்மை, இல்லாமலிருப்பது.

" न भवन्ति यस्मिन् सोऽभावः "

கிடைக்குமென்று சொன்ன விடத்தில் இல்லாமலிருப்பதைக் கண்டு, ஒருபொருள், வேருரு இடத்தில் கிடைக்குமென்றறிந்து கொள்வது. உதாரணமாக "யானையை லாயத்திலிருந்து கொண்டுவா" என்பானேயானுல் ஒருவன் அங்கே போய் அது இல்லாமலிருப்பதைக்கண்டு, வேறிடத்திலிருக்க வேண்டுமென அறிவான். உடனே அங்கு சென்று சமீபத்திலுள்ள அதை அவிழ்த்து வருவான். இப்பொழுது பிரமாணங்களில் எண்விதத்தைச் சுருங்கச் சொன்னேம். இதிகாசத்தை, சப்தத்துடனும் அர்த்தாபத்தி, சம்பவம், அபாவம் இவைகளை அனுமானத்துடனும் சேர்த்தால் எட்டை, நான்காக்கலாம். இவ்வைந்து பிரமாணங்களைக் கொண்டே எது உண்மை, எது பொய் என்பதை அறியமுடியும். வேறு எவ்விதத்திலும் முடியாது.

धर्मविशेषप्रसूताद् द्रव्यगुणकर्मसामान्यविशेषसमवायानां पदार्थानां साधर्म्यवैधर्म्याभ्यां तत्त्वज्ञानान्निःश्रेयसम् ॥ வைசேஷிகசாஸ. 1. 1. 4.

தர்மத்தைத்தக்கவாறு அனுசரிப்பதினுல் மனிதனுடைய ஆத்மாவானது பரிசுத்தத்தையும், சிறப்பையும் அடைந்து அடியில் கண்ட பொருள்களுடைய தத்துவஞானத்தையுமடைகிறது. ஸாதர்ம்யம் அதாவது வஸ்துஸ்வரூபம், குணங்களுடைய பொருத்தம், வைதர்ம்யம்; ஏற்றத்தாழ்வு. உதாரணமாக பூமி உறுதியானது தண்ணீர் இளகும் திரவியம்; பதார்த்தம், குணம்; தன்மை, கர்மம்: செய்கை, சாமான்ய; ஒற்றுமை, விசேஷம்; வேற்றுமை; சமாவாயம்; ஏற்ற உறவு.

நவதிரவியங்கள்.

पृथिव्यापस्तेजोवायुराकाशं कालो दिगात्म मन इति द्रव्याणि ॥ வை. 1. 1. 5.

பூமி, ஜலம், அக்கினி, காற்று, ஆகாசம், காலம், திசை, ஆத்மா, மனம், ஆக பதார்த்தங்கள் ஒன்பது, இவைகளுக்கே திரவிய மென்று பெயர்.

क्रियागुणवत्समवायिकारणमिति द्रव्यलक्षणम् ॥ வைசே. 1. 1. 15.

எதில் குணம் மாத்திர மிருக்கின்றதோ அதற்கே திரவியம் என்றுபெயர். பூமி, ஜலம், அக்னி, காற்று, மனம், ஆத்மா இவ்வாறும் கிரியைகளையும், குணங்களையும் கொண்டிருக்கின்றன. ஆகாசம், திசை, காலம் இம்மூன்றிலும் கிரியை இல்லாமல் குணம் மாத்திரம் இருக்கின்றன.

(समवायि) " समवेतुं शीलं यस्य तत् समवायि, प्राग्वृत्तित्वं कारणं समवायि च तत्कारणं च समवायिकारणम् "

சேர்க்கையினால் உற்பத்தியை யடைந்து சுபவாத்தில் கலந்து, சுபாவ யுக்தகாரியத்திற்கு முந்தியிருக்கும் காரணத்தையுடையதாயிருக்கிற பொருள்களுக்குத் திரவியம் எனப்பெயர். எதனால் பொருள்களுடைய தோற்றம் வெளிப்படுகிறதோ அதற்கே லக்ஷண மெனப்படும். உதாரணமாக கண்ணினால் உருவமும், வெளிச்சமும் தெரியவருகிறது.

இவைகளுடைய விளக்கம்.

1. பிருத்வி.

रूपरसगन्धस्पर्शवती पृथिवी ॥ வைசே. 2. 1. 1.

உருதி, உருசி வாசனை ஸ்பரிசிக்கக்கூடியது; முதலான குணங்களையுடையது பிருத்வி. தீ, தண்ணீர், வாயு இவைகளுடன் சேருவதினால் இக்குணங்கள் அதற்கு உண்டாயின.

व्यवस्थितः पृथिव्यां गन्धः ॥ வைசே. 2. 2. 2.

பூமிக்குறியது வாசனை; ஜலத்திற்குறியது சுவை; நெருப்பிற்குறியது உருவம் அல்லது வெளிச்சம்; வாயுவுக்குறியது ஸ்பரிசிக்ககூடியத்தன்மை, ஆகாசத்திற்குறியது சப்தம்.

2. ஆப

रूपरसस्पर्शवत्य आपो द्रवाः स्निग्धाः ॥ வைசே. 2. 1. 2.

ரூபம், சுவை, உருதி, திரவத்தன்மை; மிருதுவாயிருத்தல், இக்குணங்களையுடையது ஆப: (தண்ணீர்.) இவைகளெல்லாவற்றிலும் சுவையே அதன் முக்கிய குணமாகும். தீ, காற்று இவைகளுடன் சேருங்கால், உருவத்தையும், ஸ்பரிசிக்கக்கூடிய தன்மையையும் அடைகிறது.

अप्सु शीतता ॥ வைசே. 2. 2. 3.

சீதளம் ஜலத்தின் சாதாரண குணமாகும்.

3. தேஜ-

तेजो रूपस्पर्शवत् ॥ வைசே. 2. I. 3.

ஸ்பரிசிக்கக்கூடிய தன்மை, உருவம் அல்லது வர்ணம் இவை தீயுடைய குணங்களாகும். உருவமே (வர்ணம்) அதனுடைய இயற்கைக் குணம். ஸ்பரிசிக்கக்கூடியதன்மையை காற்றுடன் கலந்து பெறுகிறது.

4. வாயு.

स्पर्शवान् वायुः ॥ வைசே. 2. I. 4.

ஸ்பரிசிக்கக்கூடியத்தன்மையே வாயுவின் குணம். ஆனால் உஷ்ணத்தையும் சீதளத்தையும் தீ, ஜலம் இவைகளுடன் கலந்து பெறுகிறது.

5. ஆகாச

त आकाशे न विद्यन्ते ॥ வைசே. 2. I. 5.

ஆகாசத்திற்குரூப, ரஸ, ஸ்பர்ச, கந்தம் முதலானவைகள் கிடையாது. சப்தம் ஒன்றே அதன் குணமாகும்.

निष्क्रमणं प्रवेशनमित्याकाशस्य लिङ्गम् ॥ வைசே. 2. I. 20.

பிரவேசித்து வெளியாகிறபடியினால் அதற்கு ஆகாசம் என்றுபெயர்.

कार्य्यान्तराप्रादुर्भावाच्च शब्दः स्पर्शवतामगुणः ॥ வைசே. 2. 1. 25.

பூமியிலேயோ, வேறு எதிலேயோ அல்லது அவைகளுடைய பொருள்களிலேயோ இல்லை-சப்தமொன்றே அதனுடைய குணமாகும்.

6. காலம்

अपरस्मिन्नपरं युगपच्चिरं क्षिप्रमिति काललिङ्गानि ॥ வைசே. 2. 2. 6.

நிகழ்காலம், அதற்கு முன்னும், பின்னும் நிகழும் காலம், வேகம், தாமதம் முதலானவைகளைக்காட்டுகிறதே காலமாகும்.

नित्येष्वभावादनित्येषु भावात्कारणे कालाख्येति ॥ வைசே. 2. 2. 9.

பௌதிக சம்பந்தங்களில் காலத்தைக் காணலாமே தவிர அதற்கு விரோதமான குணங்களைக் காணமுடியாது.

7. திசை

इत इदमिति यतस्तद्दिश्यं लिङ्गम् ॥ வைசே. 2. 2. 10.

குறிப்பிட்ட இடத்திலிருந்து கிழக்கு, மேற்கு, தெற்கு வடக்கு என்று சொல்லுவனவே திசையெனப்படும்.

आदित्यसंयोगाद् भूतपूर्वाद् भविष्यतो भूताच्च प्राची ॥ வைசே. 2. 2. 14.

சூரியன் உதயமாவது கிழக்கு என்றும், அது அஸ்தமனமாகும் திசை மேற்கு என்றும், கிழக்கு நோக்கிநிற்கும் மனிதனுடைய வலதுபக்கம் தெற்கு என்றும், இடதுபக்கம் வடக்கு என்றும், கூறப்படும்.

एतेन दिगन्तरालानि व्याख्यातानि ॥ வைசே. 2. 2. 16.

கிழக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலுள்ள பாகத்தை ஆக்னேயமென்றும், தெற்கு மேற்கு இவைகளிடையிலுள்ள பாகத்தை நைரித்யமென்றும், மேற்கு வடக்கு இவைகளிடையிலுள்ள பாகத்தை வாயவ்யமென்றும், வடக்கு கிழக்கு இவைகளுக்கு நடுவிலுள்ள பாகத்தை ஈசான்யம் என்றும் சொல்லுவார்கள்.

8. ஆத்மா

इच्छाद्वेषप्रयत्नसुखदुःखज्ञानान्यात्मनोलिङ्गमिति ॥ ந்யாயசூ. 1. 10.

ஆசை, விரோதம், பிரயத்தினம், சுறு சுறுப்பு, இன்பம், துன்பம், ஞானம், அறிவு இக்குணங்கள் எதில் விளங்குகிறதோ அதுவே ஜீவாத்மாவாகும். வைசேஷிகத்திலும் அடியில் கூறும் வண்ணம் விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

प्राणाऽपाननिमेषोन्मेषजीवनमनोगतीन्द्रियान्तर्विकाराः सुखदुःखेच्छाद्वेष-प्रयत्नाश्चात्मनो लिङ्गानि ॥ வைசே. 3. 2. 4.

வெளிக்காற்றை உட்கொள்ளல், உட்கொண்ட காற்றை வெளியில் விடல், கண்ணிமைகளை கீழ்ப்பக்கமாய்க் காட்டுதல், மேற்புறஞ் சேர்த்தல், பிராணனைத் தரித்துக் கொண்டிருத்தல், உருபுக்களுடைய வேலைகளை செய்தல், உயிர் உணர்ச்சிகள் (பசி, தாகம், ஜுரம், வலி முதலானவைகள்) ஆசை, வெறுப்பு. இன்பம், துன்பம், ஞாபகத்துடன் கஷ்டப்படல் ஞானம், இவைகளை அடக்கியிருப்பது ஆத்மா.

9. மனஸ்

युगपज्ज्ञानानुत्पत्तिर्मनसो लिङ्गम् ॥ ந்யா. 1. 1. 16.

ஒரே சமயத்தில் இருபொருளைக் கவனிக்க சக்தி எதற்கு இல்லையோ அதற்கே மனமென்றுபெயர். அவைகளுடைய குணங்களாவன:—

रूपरसगन्धस्पर्शाः संख्यापरिमाणानि पृथक्त्वं संयोगविभागौ परत्वाऽपर-त्वे बुद्धयः सुखदुःखेच्छाद्वेषौ प्रयत्नाश्च गुणाः ॥ வைசே. 1. 1. 6.

உருவம், சுவை, வாசனை, ஸ்பரிசம், சப்தம், எண்ணிக்கை, அளவு, தனித்திருத்தல், சேர்ந்திருத்தல் பிரித்தல், தூரமாயிருத்தல் சமீபம், புத்தி, இன்ப துன்பம், ஆசை, பகை, பிரயத்தினம், கனமாயிருத்தல், இலேசாயிருத்தல், ஸ்நேகம் (பற்றுடனிருத்தல்) சமஸ்காரம், தர்மம், அதர்மம் ஆக குணங்கள் இருபத்திநான்கு.

द्रव्याश्रय्यगुणवान् संयोगविभागेष्वकारणमनपेक्ष इति गुणलक्षणम् ॥ வைசே. 1. 2. 16.

தன் இருப்பிற்காகப் பொருளொன்றை தழுவி இருப்பதும், வேறு ஒன்றையும் தழுவாமலிருப்பதுமே குணமெனப்படும். சம்யோகவியோகத்தின் காரணமாக ஒருபொழுதுமில்லை. மற்றெவைகள் அன்னியிலும் இருப்பதே அது.

श्रोत्रोपलब्धिर्बुद्धिनिर्ग्राह्यः प्रयोगेणाऽभिज्वलित आकाशदेशः शब्दः ॥ மகாபாஷ்.

காதால் கேட்டு, புத்தியினால் அறிந்து, பேச்சினால் தெரிந்து, ஆகாசத்தில் குடிகொண்டிருக்கிறதே சப்தமாகும். கண்களினால் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடியதே ரூபமாகும். இனிப்பு முதலியவைகளைப்போன்று நாக்கைப்பாதிக்கும் சுவையே ரஸமாகும். மூக்கினால் முகரப்படுகிறதே கந்தமாகும். தோல் களின் வழியாய் உணரப்படுகிறதே ஸ்பர்சம். ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணப்படுகிறதே சங்கியை. கனமானது, இலேசானது என்றவைகளைப்போல் நிறையைக்காண்பிப்பதே பரிமாணம். ஒன்றிலிருந்து வேறாயிருப்பதே பிரதக்த்வம். ஒன்றுடன் சேர்ந்து கலந்துகொள்வதே சம்யோகம். சேர்ந்திருப்பதைத் தனித்தனியாகப் பிரிப்பதே விபாகம். ஓரிடத்திலிருந்து இவ்வளவு தூரமென்பதே பரத்வம்.

ஓரிடத்தைக் குறித்து அதற்குச் சமீபமாய் இருக்கிறது என்பதே அபரத்துவம். எதனால் நல்லது கெட்டது என்கிற ஞானம் உதிக்கின்றதோ அதுவே புத்தி. இன்பமே சுகம். துன்பே துக்கம். ஆசையே இச்சை. பகைக்கொள்வது துவேஷம். பலவிதமாக பலம் பாரக்கிரமம் முதலியவைகளை உபயோகிப்பது பிரயத்தினம். பாரமாய் இருப்பது குருத்வம். உருகுந்தன்மையுடனிருப்பது திரவத்துவம். எண்ணெய்ப்பசையைப்போல் பிரியாமலும் சேர்ந்தும் இருப்பது சிநேகம். பிறவஸ்துக்களினுடைய சேர்க்கையினால் உண்டாகும் பலங்களுக்குச் சமஸ்காரம் எனப்படும். கடினமாயும் நியாயாசரணை முதலியவைகளுடனிருப்பதற்குத் தர்மம் என்று பெயர். கடினம் முதலியவைகளுக்கு விரோதமாய் சுலபமாயிருக்கும் தன்மைகளுக்கும் அநியாயாசரணைகளுக்கும் அதர்மம் என்று பெயர்.

கர்மம்

उत्क्षेपणमवक्षेपणमाकुञ्चनं प्रसारणं गमनमिति कर्माणि ॥ வைசே. I. I. 7.

ஏற்றம், இறக்கம், சுருக்கம், பெருக்கம், வருகை, செல்லுகை, சுழற்சி, முதலியவைகளெல்லாம் கர்மத்தினுடைய தன்மைகளாகும்.

एकद्रव्यमगुणं संयोगविभागेष्वनपेक्षकारणमिति कर्मलक्षणम् ॥ வைசே. I. I. 17.

" एकन्द्रव्यमाश्रय आधारो यस्य तदेकद्रव्यं न विद्यते गुणो यस्य यस्मिन् वा तदगुणं संयोगेषु विभागेषु चाऽपेक्षरहितं कारणं तत्कर्मलक्षणम् "
" अथवा यत् क्रियते तत्कर्म, लक्ष्यते येन तल्लक्षणम् , कर्मणो लक्षणं कर्मलक्षणम् "

ஏதேனுமொரு பொருளை ஆதாரமாகக் கொண்டு குணங்களிலிருந்து விலகி, சேர்க்கையிலும் பிரிவிலும் சம்பந்தமன்னியிலு மிருப்பதற்கே கர்மம் என்று பெயர்.

சாமான்யம்

द्रव्यगुणकर्मणां द्रव्यं कारणं सामान्यम् ॥ வைசே. I. I. 18.

விளைவு, குணம், சுபாவம் இவைகளெல்லாவற்றிற்கும் காரணமாயும் அதனால் எல்லாவற்றிற்கும் சரியாயிருப்பதே சாமான்ய மெனப்படும்.

விசேஷம்

द्रव्याणां द्रव्यं कार्यं सामान्यम् ॥ வைசே. I. I. 32.

द्रव्यत्वं गुणत्वं कर्मत्वञ्च सामान्यानि विशेषाश्च ॥ வைசே. I. 2. 5.

திரவியங்களுக்குள் திரவியத்வமும், குணங்களுள் குணத்துவமும், செய்கையில் சுறு சுறுப்புமே சாமான்யங்களென்றும் (வித்தியாசம்) சொல்லப்படுகின்றன. திரவ்யத்வம் அதாவது (திரவ்யமாயிருத்தல்) சகல திரவ்யங்களுக்குச் சமானமானது. ஆனால் வேறு குணங்களிலிருந்தும் அது தனிமையாயிருக்கிறது. ஆகவே அது (திரவ்யத்வம்) சாமான்யமும் (சாதாரணப்பொருள்) விசேஷமும் (சிறப்புப் பொருளும்) ஆகிறது.

இவ்விதமே யாவற்றையும் அறிதல் வேண்டும்,

सामान्यं विशेष इति बुद्ध्यपेक्षम् ॥ வைசே. I. 2. 3.

பொதுவானவைகளையும்(சாமான்யங்களையும்) சிறப்பானவைகளையும் புத்தியைக் கொண்டு அறியவேண்டும். மானிடவர்க்கத்தில் 'மனிதத்துவம்' சாதாரணமானது ஆனால் அதுவே தான், பசு முதலான விலங்குகளிலிருந்து பிரிக்கும் (சிறப்புப்பொருள்) விசேஷணம். ஆண் பெண்ணுயிருத்தலில், பிராமணத்வம் க்ஷத்திரயத்வம், வைசியத்வம், சூத்ரத்வம் விசேஷமாகின்றது. பிரம்மத்வத்தில் சகல பிராம்மணர்களும் சேருகிறார்கள். அது சாமான்யமானதே. ஆனால் க்ஷத்திரியர் வைசியர் முதலானவர்களிலிருந்து பிறிக்கும் விசேஷணம் அதுவே. வீரர்களிலே வீரத்தனமும் வைசியர்களில் வியாபாரதன்மையும் சூத்திரர்களில் (சேவகத்தனமும்) சாமான்யம். இவ்விதமே யாவற்றையும் அறியவேண்டும்.

சமாவாயா

इहेदमिति यतः कार्यकारणयोः स समवायः ॥ வைசே. 7. 2. 26.

மொத்ததிற்கும், பாகத்திற்கும். கிரியைக்கும் கார்யத்திற்கும், கர்த்தாவுக்கும், பதார்த்தங்களுக்கும் அதனுடைய குணங்களுக்கும், கூட்டங்களுக்கும், கார்யங்களுக்குமுள்ள பரஸ்பர நித்யசம்பந்தத்திற்குச் சமாவாய வென்று பெயர். இருபதார்த்தங்களுக்கு முள்ள சம்பந்தத்திற்கு சம்யோக மென்று பெயர். அது அநித்யமான சம்பந்தம்.

சாதர்மியம்

द्रव्यगुणयोः सजातीयारम्भकत्वं साधर्म्यम् ॥ வைசே. I. I. 9.

திரவியங்களுடையவும் குணங்களுடையவும் தக்க ஜாதிய கார்ய ஒற்றுமைக்கே சாதர்மியம் என்று பெயர். எப்படியெனில்: பூமியில் ஜடத்வதர்மம் அல்லது குணமிருக்கின்றது. அக்குணமே அப்பூமியிலிருந்து எடுத்து செய்யப்பட்ட மண்பாண்டத்திலு மிருக்கின்றது. அங்ஙனமே ஜடத்வகுணமானது, ஜலத்தி

லும் அதிலிருந்துண்டாகும் பதார்த்தங்களிலும் தென்படுகின்றது. உதாரண மாக பனிக்கட்டி முதலியவைகள், ஜடத்தனத்தில் பூமியையும் ஜலத்தையும் ஒத்திருக்கின்றது. அவை இரண்டிற்கும் அது சமமான தர்மம்.

வைதர்மியம்

" द्रव्यगुणयोर्विजातीयारम्भकत्वं वैधर्म्यम् "

சாதர்மியத்திற்கு மாறானது அவை தர்மயம் குணங்கள் வேறாகும் பொழுது போலாம். உதாரணமாக பூமி, தண்ணீர். பூமி கடினமாயும், உலர்ந்தும் வாசனை யுடனுமிருக்கிறது. தண்ணீரோ திரவமாயும், மிருது வாயுமிருக்கிறது. ஆகவே இச்சந்தர்ப்பத்தில் பூமியையும் தண்ணீரையும் வைதர்மயம் எனலாம்.

कारणभावात्कार्यभावः ॥ வைசே. 4. 1. 3.

காரணத்தினாலேயே கார்யமுண்டாகிறது.

न तु कार्याभावात्कारणाभावः வைசே. 1. 2. 2.

கார்யத்தினுடைய அபாவத்தினாலே மாத்திரம் காரண மில்லை யென்று சித்தமாகாது.

कारणाऽभावात्कार्याऽभावः வைசே. 1. 2. 1.

காரணமில்லாமல் கார்யமாகிறதில்லை.

कारणगुणपूर्वकः कार्यगुणो दृष्ट ॥ வைசே. 2. 1. 24.

காரணத்தைப் போலவே கார்யத்தினுடைய குணங்களும்.

अणुमहदिति तस्मिन्विशेषभावाद्विशेषभावाद्विशेषाभावाच्च ॥ வைசே. 7. 1. 11.

பரிமாணத்தில் இரண்டு வகைகள் உண்டு. அணு (சூட்சமம்) மகத் (பெரியது) திரசரேணு (அணுவின் ஒருபாகமானது) ஆனால் அது இரண்டு அணுக்களைக் காட்டிலும் பெரியது. எப்படி மலைகள் பூமியை விடச்சிறிதாயும் மரங்களை விடப் பெரியதாயும் இருக்கிறதோ.

सदिति यतो द्रव्यगुणकर्मसु सा सत्ता ॥ வைசே. 1. 2. 7.

பொருள்களுடைய குணகர்மங்களில் "சத்" (இருத்தல்) சப்தம் அடங்கி இருக் கின்றது. அதாவது சத்திரவ்யம், சற்குணம், சற்கர்மம் அதாவது நிகழுங்கா லத்தைக் குறிக்கும் அன்வயங்கள் எல்லாவற்றோடும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

भवोनुवृत्तेरेव हेतुत्वात्सामान्यमेव வைசே. 1. 2. 4.

சத் (விளங்கியிருத்தல்,) எல்லா வஸ்துக்களிலுமிருக்கிற அதை பெரிய பொது மடங்கு என்பார்கள். இவ்விதமே பொருள் விளக்க நியாயமும்

ஐந்துவிதமான அபாவங்கள்.

क्रियागुणव्यपदेशाभावात्प्रागसत् ॥ வைசே. 9. 1. 1.

விசேஷ நிமித்த காரணத்திற்கு முந்தி, பதார்த்தத்தினுடைய அல்லது கிரியா குணங்களுடைய அபாவத்திற்கு பிராக்பாவ மென்று பெயர்.

உதாரணமாக மண்பாண்டம் அல்லது துணி, உற்பத்திக்கு முன்னுல் இருக்க வில்லை.

सदसत् வைசே. 9. 1. 2.

அது பூர்வத்திலிருந்தது. தற்சமயமில்லை. அதாவது மண்பாண்டம் உடைந்த பிறகு உள்ள நிலைமை இதற்கே பிராதுர்பாவ மென்று பெயர்.

सच्चासत् ॥ வைசே. 9. 1. 4.

ஒன்றிலிருந்தும் மற்றொன்றில் இல்லாமலும் இருக்கிறது. இதற்கே அன்யோன்யபாவ மென்று பெயர்.

உதாரணமாக குதிரை பசுவில்லை, பசு குதிரையில்லை. அதாவது பசுவில் குதிரையில்லாமலிருக்கிறது. அப்படியே மற்றொன்றையும் மாற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். பசுவிலே பசுவும், குதிரையிலே குதிரையுந்தான் இருக்கின்றது.

यच्चान्यद्सदतस्तदसत् ॥ வைசே. 9. 1. 5.

மேற்சொன்ன மூன்றுவகைகளிலிருந்து தனிமையாய் பிரிந்து நிற்பதற்கு அத்யந்த அபாவ மென்று பெயர் (அதாவது:—ஒருபோதுமில்லாமலிருப்பது) உதாரணங்கள், நரசிங்கம், மனிதர்களுக்கு கொம்பு இருப்பது, ஆகாசபுஷ்பங்கள், மலடியின் பிள்ளைகள், இவை போன்றன.

नास्ति घटो गेह इति सतो घटस्य गेहसंसर्गप्रतिषेधः ॥ வைசே. 9. 1. 10.

ஐந்தாவது. மண்பாண்டம் வீட்டிலில்லை. அது வேறு எவ்விடத்திலோ இருக்கிறது. வீட்டிற்கும் மண்பாண்டத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இங்ஙனம் ஐந்து விதமான அபாவங்கள்.

इन्द्रियदोषात्संस्कारदोषाच्चाविद्या ॥ வைசே. 9. 2. 11.

இந்திரியங்களினுலும் சமஸ்காரங்களினுலும் உண்டாகிற தோஷங்களினுலேயே அவித்தை உற்பத்தியாகின்றன.

तद्दुष्टज्ञानम् ॥ வைசே. 9. 2. 12.

பொய்யாயும் விபரீதமாயும் இருக்கப்பட்ட ஞானத்திற்கே அவித்தை யென்று பெயர்.

अदुष्टं विद्या ॥ வைசே. 9. 2. 12.

ஏற்றதாயும் உண்மையாயு மிருக்கும் ஞானத்திற்கு வித்தை யென்று பெயர்.

पृथिव्यादिरूपरसगन्धस्पर्शा द्रव्या नित्यत्वादनित्याश्च ॥ வைசே. 7. 1. 2.

கார்யரூப பிருதிவி முதலான பொருள் அதிலிருக்கும் ரூபம், ரசம், கந்தம், ஸ்பரிசம், குணம், முதலான சகல திரவ்யங்களும், பதார்த்தங்களும் அநித்தியமாயிருக்கிறபடியினுல் நித்தியமில்லாமலிருக்கிறது.

एतेन नित्येषु नित्यत्वमुक्तम् ॥ வைசே. 7. 1. 3.

இதில் காரணபூதமான பிருதிவி முதலியவைகளில் பிரகிருதி முதலான நித்திய பதார்த்தங்களில் கந்தாதி குணங்கள் இருக்கிறபடியினுல் அதுவும் நித்ய மாகின்றது.

सदकारणवन्नित्यम् ॥ வைசே. 4. 1. 1.

எது எப்பொழுதும் இருந்துகொண்டு அதற்குக் காரணமும் இல்லாமலிருக்கின்றதோ அது நித்தியமாயுள்ளது. காரியத்தில் தென்படும் காரணங்களின் குணங்கள் அநித்தியமானது.

अस्येदं कार्यं कारणं संयोगि विरोधि समवायि चेति लैङ्गिकम् ॥ வைசே. 9. 2. 1.

இதுகாரியம்,இதுகாரணம் என்றுசொல்லும்போது நான்குவிதஞானங்கள் உண்டாகின்றது. பதார்த்தத்திற்கும் அதனுடைய குணங்களுக்குமுள்ள சம்பந்தத்திற்கும் சமவாயி என்று பெயர். ஆகாசம் பரிமாணமாயுள்ளது (பரவியுள்ளது) என்ற நெருங்கின சம்பந்தம். பரஸ்பரசம்பந்தப் பட்டிருக்கிற ஞானத்திற்கு சம்யோகி என்று பெயர். தேகமென்று சொல்லும் பொழுதே தேகத்தின்தோல் என்கிற ஞானம் உண்டாகிறது. இங்ஙனம், இன்னும் இதுமாதிரியான சம்பந்தமும் நித்யமானது.

ஒன்றைச் சொல்வதினால் இரண்டு பதார்த்தின் ஞானம் உண்டாகின்றது. அதற்கு ஏகார்த்த சமவாயி என்று பெயர்—தொடு என்றால் தொடும்பதார்த்தத்தின் அறிவும் உண்டாகிறது.

விரோதமாயிருக்கப்பட்ட ஞானத்திற்கு விரோதி என்று பெயர். அதாவது பெய்த மழை பெய்யப் போகும் மழைக்கு விரோதமாயிருக்கிறது.

नियतधर्मसाहित्यमुभयोरेकतरस्य वा व्याप्तिः ॥ சாங்கியபிர. 5. 26.

निजशक्त्युद्भवमित्याचार्याः ॥

आधेयशक्तियोग इति पञ्चशिखः ॥ சாங்கியபிர. 5. 31.

சாத்தியம், சாதனம், இவ்விரண்டுகள் அதாவது சித்தஞ் செய்கிறதற்கு யோக்கியமாயிருக்கிறவும், எதினால் சித்தஞ் செய்யப்படுகிறதோ அதுவும் இவை இரண்டோ அல்லது ஒன்றோ, அதாவது அதற்கு வேண்டியவைகளில் சிலவற்றிற்கு வியாப்தி என்று பெயர். உதாரணமாக புகைக்கும் அக்னிக்கும் உடனிகழ்ச்சியிருக்கிறது. புகையானது தன்னுடைய உண்மையான சக்தியினால் உற்பத்தியடைந்து எல்லா பிரதேசங்களிலும் வெகு தூரமான இடங்களிலும் சுற்றித்திரிகிறது. அப்படிச்சுற்றி வேறு இடங்களில் திரிந்தபோதிலும் அக்னியினுடைய சம்பந்தமில்லாமல் சுயமாகவே இருக்கிறது. இதற்குப் பெயர்தான் வியாப்தி அக்னியினுடைய சேதன பேதன சாமர்த்தியத்தால் ஜலமுதலியவைகள் புகைரூபமாகப் பிரகாசமாகின்றது.

மகாதத்வங்கள் என்று சொல்லப்படுகிற பெரிய மூலவஸ்துக்களில் அல்லது பூதங்களிலிருக்கும் பிரகிருதியினாலாகிய பதார்த்தங்களினுடைய நிரம்புதலுக்கு வேண்டியிருக்கும் சக்திக்கும், புத்தி முதலியவைகளில் பரவப்படுகிறதற்கு அல்லது நிரம்பப்படுகிறதற்கு உள்ள சக்திக்கு அல்லது சாமர்த்தியத்துக்குமுள்ள, பரஸ்பர சம்பந்தத்திற்கு வியாப்தி என்று பெயர். உதாரணம்: சக்தியும் (ஆதேயரூபம்) சக்திமான் (ஆதாரரூபம்) இவைகள் இரண்டிற்குமுள்ள சம்பந்தம்.

लक्षणप्रमाणाभ्यां वस्तुसिद्धिः ॥

இவ்விதம் சாஸ்திரங்களுடைய பிரமாணங்களினுல் பரிட்சை செய்து படிக்கவும், படிப்பிக்கவும் வேண்டும். அப்படியில்லாமற்போனுல் மாணுக்கர்கள் சத்தியமான ஞானத்தை அடையமுடியாது. எந்தந்த நூல்களைப் படிப்பிக்கவேண்டுமோ அந்தந்த நூல்களை முன்சொன்ன வண்ணம் பரிட்சை செய்து எது சத்தியமென்று தோன்றுகிறதோ அதையே படிக்கவும் வேண்டும். மேற்கண்ட பரிட்சைக்குச்சரியாய் நிற்காத எப்புஸ்தகத்தையும் படிக்கவும், படிப்பிக்கவும், கூடாது. உதாரணமாக "கந்தவதி பிரிதிவீ" (பூமியாயிருப்பது வாசனையைக் கொண்டிருக்கிறது) பரிட்சையினுல் அது உண்மை, உண்மையில்லை என்று தெரியவருகிறது.

படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டிய முறை.

(1) பாணினி யுடைய "சிட்சை" சூத்திரங்கள். பெற்ருேர்களும் ஆசிரியரும் எல்லா எழுத்துக்களினுடைய உச்சரிப்புக்களைச் சரிவர எதனுல் எப்படி உச்சரிக்கவேண்டுமோ, அதை அப்படியே கற்பிக்க வேண்டும். உதாரணமாக 'ப" என்னும் சப்தத்தை எடுத்துக்கொள்வோம். உச்சரிக்கும் இடம் உதடு. இரண்டு உதடுகளையும் பூரணமாய்த்திறந்து உச்சரிப்பது முயற்சி. உச்சரிப்பின் கருவி நாக்கு.

(2) பின்பு இலக்கணம். மகாபாஷ்யத்தைப் படிப்பிக்கவேண்டும். புத்தியுள்ளவன், புருஷார்தத்தை இச்சிப்பவன், சுறுசுறுப்புள்ளவன், கபடமில்லாதவன், வித்யாபி விருத்தியைக் கோறுகிறவன், இவர்கள் தினந்தோறும் படித்தும் படிப்பிக்கும் பட்சத்தில் அஷ்டாத்தியாயியை ஒன்றறை வருடத்திலும், மகாபாஷ்யத்தை ஒன்றறை வருடத்திலும் கற்றுப்பூர்ண, வியாகரண பண்டிதன் ஆகிருன். அவர்கள் வைதீக லௌகிக சப்தங்களை வியாகரணசக்தியினுல் அறிந்துகொள்ளுகிருர்கள். மேலும் இதரசம்ஸ்கிருத புஸ்தகங்களைச்சீக்கிரமாகவும் சுலபமாகவும்படித்தும் படிப்பிக்கவும்செய்கிருர்கள். வியாகரணங்கற்பதற்கு வேண்டிய பெருமுயற்சி வேறு எப்புஸ்தகத்தைப்படிப்பதற்கும் வேண்டியதில்லை. மூன்று வருஷத்தில் இப்புஸ்தகங்களைப்படிப்பதினுல் எவ்வளவு ஞானமுண்டாகிறதோ அவ்வளவு ஞானம் கெட்ட கிரந்தங்களாகிய "சாரஸ்வதம்" "சந்திரிகை" "கௌமுதி, மனோரமா" ஆகிய புஸ்தகங்களை ஐம்பது வருஷங்கள் படித்தபோதிலும் உண்டாகிற தில்லை. ஏனென்ருல் பெரியோரான மகரிஷிகள் மிகவும் சுலபத்துடன் அரும் பெரும் விஷயங்களை அவர்களுடைய நூல்களில் வெளிப்படுத்தியிருக்கிருர்கள். அப்படி அரியவிஷயங்களை குறுகிய மனிதர்கள் எப்படி வெளியிடக்கூடும். மகரிஷிகளினுல் காட்டப்பட்ட வழிகள், விஷயங்கள் எல்லாவற்றையும் அறிந்து சீக்கிரமாயும் சுலபமாயும் தெரிந்து கொள்ள உதவியாயிருக்கிறது. குறுகியமனதுள்ளவர்கள் (விசாலபுத்தியில்லாதவர்கள்) எவ்வளவு கடினமான பாஷையில் எழுதவேண்டுமோ அவ்வளவு கடினமான பாஷையில் எழுதுவார்கள்.

(3) பிறகு யாஸ்கர முனியால் எழுதப்பட்ட நிகண்டு, நிருக்தம், (வேதங்களுடைய அகராதி, சப்தவியுத்பத்தி சாஸ்திரம்) அவர்களின் புஸ்தகத்தைப் படித்துக் தெரிந்து கொள்வது மலையைக் கிளிஞ்சல எடுப்பதுகல்லிபோலிருக்கின்றது. மகாவித்வான்களுடைய நூல்களைப்படிப்பது ஓர் முழுகு முழுகி கை நிறைய உயர்ந்த முத்துக்களை எடுத்துக்கொண்டு வருவதுபோல் இருக்கின்றது. வியாகரணத்தை முடித்த பிறகு ஆறு அல்லது எட்டு மாதங்களில் அர்த்தத்துடன் படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும். நாஸ்திகர்களால் எழுதப்பட்ட 'அமரகோஷம்' முதலானவைகளைப் படிப்பதில் அநேக வருஷங்களை மனிதர்கள் வீணுக்கலாகாது.

(4) அதற்குப் பிறகு பிங்கள முனியால் எழுதப்பட்ட சந்தஸ்யாய் இலக்கணம் கிரந்தத்தை படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும். இதைப்படிப்பதினால் வைதீகலௌகிக சம்ஸ்கிருத பாக்கள்செய்யும் முறை தெரியவரும். அதுவுமன்றியில் எவ்வளவு சிறந்த சுலோகங்கள் செய்யவேண்டுமோ அவைகளை அதிலிருந்து அறியலாம். நவீன சுலோகங்கள் செய்யுமுறைகளையும் இப்புஸ்தகத்தையும் இன்னும் பிற்கால மேற்பட்ட முறைகளையும் நான்கு மாதத்தில் கற்றுவிடலாம். சாதாரண படிப்புள்ள அற்ப மனிதர்களால் கற்பிக்கப்பட்ட சந்தஸ் புஸ்தகங்களையும் விருத்திரத்னகரத்தையும் படிப்பதில் அநேகவருஷங்கள் வீணுக்கலாகாது.

(5) அதற்குப் பிறகு மனுஸ்மிருதி வால்மீகிராமாயணம், விதுரநீதி, இன்னும் மகா பாரதத்திலிருந்துத் தெரிந்தெடுத்த பாகங்களை துஷ்டச் செயல்கள் முதலியவைகளை மனதிலிருந்து நீக்கி நற்செயல்களை கற்றுக்கொடுக்கும்படியான நற்பாகங்களை மாத்திரம் செய்யுளைக் கற்பிப்பதுபோலவே, ஆசான் பதவுரை, பொழிப்புரை கருத்துரை முதலானவைகளுடன் கற்பிக்கவேண்டும். கவனத்துடன் சீடன் படிக்கவேண்டும். இதை ஒரு வருஷத்திற்குள் முடிக்க வேண்டும்.

(6) பிறகு பூர்வ மீமாம்சம், வைசேஷிகம், நியாயம், யோகம், சாங்கியை வேதாந்தங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு சாஸ்திரங்களை எவ்வளவுதூரம் இயலுமோ, அவ்வளவு தூரம் ரிஷிகளாலெழுதப்பட்ட உரையுடனும் அல்லது அவைகள் கிடைக்காவிடில் தக்க வித்வான்களாலெழுதப்பட்ட உண்மை உரையுடன் படிக்கவும் படிப்பக்கவும் வேண்டும். வேதாந்த சூத்திரங்களைப் படிப்பதற்கு முன்னால் பத்து உபநிஷதங்களை அதாவது ஈச, கேன, கத, பிரசின, முண்டக, மாண்டுக்கிய ஐத்ரேய, தைத்திரேய. சாந்தோக்கிய, பிருஹதாரண்யக இவைகளைப் படித்து ஆறுபாஷ்யங்களையும் பாஷ்ய விருத்தியுடைய இரண்டுவருஷத்திற்குள் படிக்கவும் படிப்பக்கவும் வேண்டும்.

(7) பிறகு ஆறு வருஷத்திற்குள் நான்கு பிராமணம் அதாவது ஐத்ரேயம், சதபதம், சாமம், கோபதபிராமணம் இவைகளோடு நான்கு வேதங்களை ஸ்வரம், சப்தம் அர்த்தம், சம்மந்தம் கிரியையோடு படிப்பதே தகுதியானது. இதற்குப் பிரமாணம்.

स्थाणुरयं भारहारः किलाभूदधीत्य वेदं न विजानाति योऽर्थम् योऽर्थज्ञ इत्सकलं भद्रमश्नुते नाकमेति ज्ञानविधूतपाप्मा ॥ நிருக்த. I. 18.

வேதங்களை ஸ்வரத்தோடு மாத்திரம் படித்து, அர்த்தந் தெரியாதவன், கிளை, இலை, புஷ்பங்கள் முதலியவைகளுடைய பாரத்தைச் சுமக்கும் மரத்தைப் போலவும், தானியங்கள் முதலியவைகளைச் சுமக்கும் விலங்கைப்போலவு மாகின்ருன். ஆனுல் வேதத்தைப்படித்து அவைகளினுடைய உண்மையான அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளுகிறவன் தேகத்தினுடைய முடிவுக்குப் பிறகும் பாபங்களை விட்டு, பரிசுத்த தர்ம ஆசாரணைகளுடைய கீர்த்தியினுல் சர்வ ஆனந்தத்தை யடைகிருன்.

उत त्वः पश्यन्नददर्श वाचमुत त्वं शृण्वन्न शृणोत्येनाम् । उतो त्वस्मै तन्वं विसस्रे जायेव पत्य उशती सुवासाः ॥ ரு. 10. 71. 4.

அவித்வான்கள் காதிருந்தும் கேட்கிருர்களில்லை. கண்களிருந்தும் பார்க்கிருர்களில்லை. வாயில் நாக்கிருந்தும் பேசுகிருர்களில்லை. அதாவது வித்வானகள் அல்லாதவர்கள் இந்த ஞானத்தினுடைய பரம ரகசியத்தை அறிகிறதில்லை. வித்தையானது தன்னுடைய சுவரூபத்தின் பிரகாசத்தை வித்வான்களுக்கு காண்பிக்கிறது அல்லாதவர்களுக்கு காண்பிக்கிறதில்லை. சப்தம்,அர்த்தம் இவைகளுடன் படித்து தெரிந்து கொள்ளும் வித்வான்களுக்கு வித்தையானது புருஷனைக்காண அவாகொண்ட பெண்ணுனவள், சிறந்த உடைகளையும் ஆபரணங்களையும் தரித்து அவர் முன்னிலையிலிருப்பதுபோல், பிரகாசஞ்செய்கிறது. அவித்துவான் களுக்கவ்விதமில்லை.

ऋचो अक्षरे परमे व्योमन् यस्मिन्देवा अधि विश्वे निषेदुः । यस्तन्न वेद किमृचा करिष्यति य इत्तद्विदुस्त इमे समासते ॥ ரு. I. 164. 39.

பரவியும் நாசமில்லாதவராயும் எல்லா வற்றையும்விடச் சிறந்த வராயிருக்கிற எப்பரமேச்வரனில் எல்லாவித்வான்களும், பூமி சூரியாதி சர்வலோகங்களும் ஸ்திரமாயிருக்கின்றதோ, எவனிடத்தில் வேதங்களின் முக்கிய தாத்பர்யங்களிருக்கின்றதோ அந்த பிரம்மத்தைத் தெரியாதவன் ருக்வேதாதிகளினுல் கொஞ்சமாவது இன்பத்தை யடையக்கூடுமா ? எவ்விதத்திலும் அடையமுடியாது? ஆனுல் வேதங்களைப் படித்து தர்மாத்மா வாயும், யோகிமாகத் தேர்ந்து அந்தப் பிரம்மத்தை யறிகிறவனே பரமேச்வரனில் ஸ்திரமடைந்து முக்திரூபமானப் பரமானந்தத்தை யடைகிருன். ஆகையால் எல்லா வற்றையும் அர்த்த ஞான சகிதமாய் படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும். இவ்விதம் எல்லா வேதங்களையும் படித்து பிறகு...............

(8) ஆயுர்வேதம் அதாவது: சரகம், சுசுருதம், இன்னும் ரிஷிமுனிகளால் எழுதப்பட்ட வைத்திய சாஸ்திரங்களையும், அவைகளினுடைய அர்த்தம் கிரியை, சஸ்திரம் (ரணவித்தை) சேதனம் (சரீரக்கூறுபாடு) பேதனம்

(வேறுபடுத்துகிறது) லேபம் (தேய்க்கிறது) சிகிச்சை, நிதானம் (ரோகவிக்ஞானம்) ஔஷதம், சரீரம், தேசம் காலம், வஸ்துக்களுடைய குணம் இவைகளை ஞானபூர்வமாய் நான்கு வருஷத்திற்குள் படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும்.

(9) **தனுர்வேதம்:**—(அரசாங்க நூல்) இது இருவகைப்படும்—ஜனசமூகத்தைபொருத்தது ஒன்று. ராணுவத்தைபொருத்தது மற்றொன்று. ஜன சமூகத்தையொட்டினது—ஜனங்களை ஆளுதல், அவர்களுடைய உயிர்களையும் பொருள்களையும் காப்பாற்றுதல்; நாட்டின் நீர்வளம் நிலவளம் இவைகளை விருத்தி செய்யதல், நல்லோர்களைக் காப்பாற்றியும், தீயர்களைத்தண்டித்தும் இன்னும் இதுபோன்ற நியாயமுறை பிறழாத வழிகளில் ஜனங்களைச் சந்தோஷமுள்ளவர்களாகவும் செல்வமுள்ளவர்களாகவும் செய்தல்; இவைகளை யொட்டினவையே ஜன சமூகத்தை யொத்தாகும். **ராணுவத்தையோட்டினது:**—சைனியங்களின் அமைப்பு, வெடிமருந்தின் உபயோகம், தேகப்பயிற்சி, படைகளை நடத்தும் வித்தை, படையணி வகுக்கும் வித்தை, முதலாவைகளைச் சேர்ந்தவைகளே ராணுவத்தை யொட்டினதாம். இதை இரண்டு வருஷம் படிக்கவேண்டும்.

(10) **காந்தர்வவேதம்:**—(சங்கீத சாஸ்திரம்) சங்கீதத்தை, அதனுடைய பாகங்களான சாரீரம், இராகம், இசை, தாளம் தாளபேதம், பொருத்தம், பல்லவி, அனுபல்லவி முதலானவைகளுடன் கற்கவேண்டும். பாடுதல், ஆடுதல், நடனஞ் செய்தல் முதலானவைகளையும் ஏற்றவாறு கற்கவேண்டும். ஆனால் சிறப்பாய் சாமவேத மந்திரங்களை சங்கீதவாத்தியங்களோடு வாசித்துப் பாடவேண்டும். நடனப் பெண்களைப்போல், காமநடைகளைப் பாடக்கூடாது. காமாதுரமான பாக்களைப் பாடி கழுதைக்களைப்போல் கனைக்கவுங்கூடாது. **நாரதசம்ஹிதை** முதலானவை போன்ற ரிஷிகளால் எழுதப்பட்ட நூல்கள் இவ்விஷயங்களைச் சொல்லுகின்றன.

(11) **அர்த்தவேதம்** (கைத்தொழில்கள்) இதை சிற்பவித்தையென்றும் சொல்லுவார்கள். மாதிரி வஸ்துக்களுடைய குணங்கள் கைத்திறம், தேர்ச்சி, பலவிதப்பொருள்களைச் செய்தல்,—பூமியிலும், வானத்திலும் உபயோகமாகிற—எல்லாவற்றையும் சரிவர இரண்டுவருஷங்களில் படிக்கவேண்டும். இதினாலேயே் நாட்டினுடைய வளம் விருத்தியாகிறது.

(12) **சூர்யசித்தாந்தம்**—சோதிடசாத்திரம் வான சாஸ்திரம், பீஜகணிதம், கணிதசாத்திரம, பூகோள சாஸ்திரம், பூமி சாஸ்திரம் முதலானவைகளைச் சரிவரப் படிக்கவேண்டும். யந்திரங்களைக் கையாளவும், அவைகளுடைய சூத்திரங்களை நன்றாய் அறியவும், செய்வனே அவைகளை உபயோகிக்கவும் வேண்டிக் கைத்தொழிலைக் கற்கவேண்டும், ஆனால் அவர்கள் சோதிடம், சோதிடம் என்று கூறி, மானிட வாழ்க்கையில் கிரஹங்களின் போக்கை பொருத்தி; வாழ்கை நிகழ்ச்சிகளைக் கூறுவதாக, சொல்லிப் பொருள் சம்பாதித்ததில் தக்கதல்ல. அதை மோசமெனத் தள்ளிவிடவேண்டும். சோதிடம் கணிக்கவும், கூறவும், கற்கவுங்கூடாது, கற்பிக்கவும் கூடாது. கற்

போர்களும் கற்பிப்போர்களும் சகலவித்தைகளையும் கலைகளையும்,இருபது அல்லது இருபத்தோறுவருடங்களில் கற்று அறிந்து, அதன் பலனைக வாழ்க்கையை சிறப்பித்து இன்பவாழ்க்கை வாழ்வார்களாக.

மேற்சொன்ன விதம் செய்வதால் இருபது அல்லது இருபத்தோறு வருடங்களில் கிடைக்கூடிய கல்வி ஞானத்தையும் வேறுவழிகளில் நூறுவருடங்கள் முயன்றாலும் பெறுதல் முடியாத காரியமாகும் ரிஷிகளால் இயற்றப்பட்ட நூல்களை மாத்திரம் நாம் குறித்திருக்கும் காரணம் யாதெனில், அவர்கள் பெரும் மேதைகள், சகலசாத்திரங்களையும் அறிந்தவர்கள், தர்மாத்மாக்கள், குறுகிய புத்தியுடையவர் (அனரிஷிகள்) களால் எழுதப்பட்ட புத்தரிங்களை கண்டனம் செய்ததிற்குக் காரணம் யாதெனில் அவர்களுடைய ஆத்மாவும் பக்ஷபாதமானது. இவ்விதமிருக்க அப்புத்தகங்கள், அதைச் செய்தவர்களுடைய பிழைகளிலிருந்து எப்படி நீங்கி யிருக்கும்?

படிப்பதற்கு ஏற்ற நூல்களாவன:—

1. ஜைமினிபூர்வமீமாம்ஸம். (வியாசர்விளக்கத்துடன்)
2. கணாத வைசேஷிகம் (கௌதமவிளக்கத்துடன்)
3. கௌதமநியாயசூத்திரம்(வாத்யாயனரால் செயயப்பட்ட உரையுடன்)
4. பதஞ்சலியோகம். (வியாஸ உரையுடன்)
5. கபில சாங்கியம் (பாகுரிமுனியின் உரையுடன்)
6. வியாசமுனியால் செய்யப்பட்ட வேதாந்த சூத்திரம் வாத்தியாயன முனியால் செய்யப்பட்ட உரை அல்லது போதானமுனியால் செய்யப்பட்ட உரையுடனும், விரியுரையுடனும், படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும் இந் நூல்கள் கல்பங்களுனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

எப்படி ரிக், யஜுஸ், சாமம், அத்ர்வம் என்கிற நான்கு வேதங்கள் ஈசுவரனுல் உண்டாயிருக்கிறதோ அப்படியே ஐத்ரேயம், சதபதம், சாமம் கோபதம். நான்கு பிராமணங்கள். சிட்சை, கல்பம், வியாகரணம், சந்தஸ், சோதிஷம்— வேதங்களுடைய ஆறு அங்கங்கள், மிமாம்சம் முதலிய கிரந்தங்கள், ஆறு உபாங்கங்கள், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம் இந்த வேதங்களுடை உபவேதங்கள், முதலான ரிஷிமுனிகளால் எழுதப்பட்ட கிரந்தங்கள் இதில் எதெது வேதவிரோதமாயிருக்கின்றதோ அதை விட்டுவிடவேண்டும். ஏனென்றால் வேதங்கள் ஈசுவரனுல் உண்டாயிருக்கிறபடியினுலே யாதொரு விதமான வழுவன்னியில் தனக்குதானே பிரமாணமாயிருக்கின்றது. பிராமண முதலான சகலகிரந்தகளு பிரமாணம் மற்றவைகளை ஆதரவாகக்கொண்டிருக்கிறது. அதாவது அவைகளுக்கு பிரமாணம் வேதமே. வேதத்திர்க்கு விசேஷவியாக்கியானம் ரிக்வேத பாஷ்யபூமிகையிலிருக்கிறது. இப்புஸ்தகத்தில் மறுபடியும் எழுதுவோம்.

படிக்கத்தகாத புத்தகங்கள்.

கர்பத்திற்குத்தகாத புத்தகஙளைக் கீழேக்குறிகிறோம். அவைகள், போலிக் கிரந்தங்களாகையினுல் தள்ளத்தக்கனவைகளாகும்.

1. வியாகரணத்தில், காதந்திரம், சாரஸ்வதம். சந்திரிகை, முக்தபோதம் கௌமுதி, மனோரமா, முதலான புஸ்தகங்கள். 2. கோசம், அகராதியில் அமர கோசாதிம் முதலானவைகள். 3. சந்தசகிரந்தத்தில் விருத்தரத்னாகரம் முத லியவைகள். 4. சிட்சையில் "அதசிட்சா" முதலியவைகள். 5. சோதி டத்தில் சீக்கிரபோதம், முகூர்த்த சிந்தாமணி, முதலியவைகள். 6, செய்யு ளில் நாயகாபேதம். குவலயாநந்தம், ரகுவம்சம், மாகம், கிராதார்ச்சுனீயம் முத லியவைகள். 7. மீமாம்சத்தில தர்மசிந்து, விருதர்க்கம், முதலியவைகள். 8. வைசேஷிகத்தில், தர்க்கசங்கிரஹம் முதலானவைகள். 9. நியாயத்தில் ஜாகதீசி முதலியவைகள். 10. யோகத்தில் ஹடபிரதீபிகை முதலியவைகள். 11. சாங்கியத்தில், சாங்கியத்தும், கௌமுதி முதலானவைகள் 12. வேதாந் தத்தில் யோகம், வாசிஷ்டம், பஞ்சதசம் முதலியவைவள். 13. வைத்தியத் தில், சாரங்கர் முதலியவைகள். 14. ஸ்மிருதியில், மனுஸ்மிருதி தவிர இடை யில் சேர்த்திருக்கும் சுலோகங்களை மாத்திரம் நீக்கி எல்லா ஸ்மிருதிகள், 15. எல்லா தந்திரங்களும். 16. எல்லா புராணங்கள். 17. உப புராணங்கள். 18. துளசிதாசர் செய்த ராமாயணம். 19. ருக்மிணீமங்களம். முதலான ஹிந்தி புஸ்தகங்கள் இவைகளெல்லாம் வீண்தோற்றமான பொய்க்கிரந்தங்கள்.

வினா:—இக்கிரந்தங்களில் கொஞ்சமேனும் உண்மையென்பது இல்லையா?

விடை:—சிறிதளவு உண்மை இங்கும் அங்கும் இருப்பது சரிதான். ஆனால் இவைகளோடு அதிகப் பொய்கள் நிறைந்திருக்கின்றன. **विषसम्पृक्तान्नवत् त्याज्याः** அறுசுவையுடன்கூடின அன்னததோடு விஷம் கலந்திருக்கிறபடியி னாலே அது எறிந்துவிடவே யோக்கியமாயிருக்கிறது. அப்படியே அக்கிரந்தங் களும்.

வினா—இதிகாசபுராணங்களையும் நீங்கள் நம்புகிறதில்லையா?

விடை:—ஆம் நம்புகிறோம். ஆனால் சத்தியங்களை நம்பி பொய்களை நம்பு கிறதில்லை.

வினா:—எது சத்தியக்கிரந்தங்கள்? எது பொய்க்கிரந்தங்கள்?

ब्राह्मणानीतिहासान् पुराणानि कल्पान् गाथा नाराशंसीरिति ॥

விடை:—சூத்திரத்தினுடைய மேற்கோள். இதற்குமுன்னால் சொன்ன சதபதம், பிராமணு முதலியவைகளை சரித்திரத்தினுடைய இவ்வைந்துபேர்க ளாலும் அழைக்கப்படுகிறது. (1) இதிகாசம். (2) புராணம். (3) கல்பம். (4) காதம் கர்ணபரம்பரை (5) நாரசம்ஸி ஒருவனுடைய ஜீவிய சரித்திரம்)— ஸ்ரீமத்பாகவதாதிகளுக்கும் புராணமென்ற பெயரில்லை.

வினா: –தள்ளப்பட்ட கிரந்தங்களில் உண்மையிருந்தால் ஏன் கிரகித்துக் கொள்ளக்கூடாது?

விடை:—எவ்விதமானஉண்மைகள் அவைகளில் காணப்படுகிறதோஅவை கள் வேதம் முதலான சத்தியசாஸ்திரங்களினுடையது. அவைகளிலிருக்கும்

பொய்களெல்லாம் அவர்களால்கற்பிக்கப்பட்டது. வேதம்முதலானசத்தியசாஸ் திரங்களை ஏற்றுக்கொள்வதினால் எல்லா சத்தியமும் உண்மையும் கிரகிக்கப்படு கிறது. எவன் இந்தப் பொய்கிரந்தங்களிலிருந்து சத்தியத்தைக்கிரகிக்க ஆசைப் படுகிறானோ, அவன் பொய்களைத் தள்ளமுடியாமல் முழுவதையும் விழுங்க நேரி டுகிறது. ஆகையினால் **असत्यमिश्रं सत्यं दूरतस्त्याज्यमिति** அசத்தியத்தினால் சம்பந் தப்பட்ட சத்தியத்தையும், விஷத்தினால் கலந்த அன்னத்தைப் போல் விட்டு விடவேண்டும்.

வினா:—உங்களுடைய மதம் யாது?

விடை:—நாங்கள் வேதத்தில் நம்புகிறோம். அதாவது அதில் சொல்லி யிருக்கும் கட்டளைகளைக் காப்பாற்றி, விடச்சொன்னவைகளை விட்டும் விடுகி றோம். நாங்கள் வேதத்தை நம்புகிறபடியினால் எங்களுடைய மதம் வேதமே. எல்லா மனிதர்களும் முக்கியமாய் ஆரியர்களும் இதை அபிமானித்து ஐக்கி யத்தை அடையவேண்டி ஏற்றுக் கொள்ளவேண்டும்.

வினா:—ரிஷிகளால் எழுதப்பட்ட சாஸ்திரங்களிலும், உண்மையானது பொய்யுடன்கலந்து மற்ற புத்தகங்களைப்போல் பரஸ்பரம் விரோதமாயும் இருக்கிறது. உதாரணமாக சிருஷ்டி விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இதில் ஆறுசாஸ்திரங்களும் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கின்றனவே. மீமாம்சத்தில் சிருஷ்டியினுடைய உற்பத்திக்கு "கர்மாவே" காரணமென்றும். வைசேஷிகத்தில் "காலம்" என்றும் நியாயத்தில் "பரம அணு" என்றும் "யோ கத்தில்" "புருஷார்த்தம்" (முயற்சி) என்றும், சாங்கியத்தில் "பிரகிருதி" என்றும்,வேதாந்தத்தில் "பிர்மம்" என்றும்முறையே சொல்லப்படுகின்றனவே?

விடை:—சாங்கியம் வேதாந்தம் இவைகளில் தவிர, மீதி நாலு சாஸ்திரங் களில் சிருஷ்டியினுடைய உற்பத்தி வெளிப்படையாக எழுதப்படவில்லை. இவைகளில் விரோதமாயும் இல்லை. இசைவு பொருத்தங்களுடைய ஞானம் உனக்கில்லையென்று தெரிகிறது. முரண்பாடாய் எந்த இடத்தில் இருக்கிறது என்று கேழ்க்கிறேன்? அது ஒரு விஷயத்திலுண்டாகிறதா அல்லது வித்தி யாசமான விஷயங்களிலா?

வினா:—ஒரு விஷயத்தைப்பற்றி பலவேறான அபிப்பிராயங்கள் ஏற்படின் அது முரண் அல்லவா? சிருஷ்டி என்பது ஒரு விஷயமல்லவா? அதைப்பற்றி முரணான அபிப்பிராயங்கள் எழுதுவதற்குக் காரணமென்ன?

விடை:—வித்தை ஒன்றா இரண்டா? (அதாவது வித்தையில் ஐக்கியமிருக் கிறதா?).

வினா:—ஒன்றுதான்

விடை:—ஒன்றாயிருக்கும் பட்சத்தில் வியாகரணம், வைத்தியம், சோதி டம் அல்லது வானசாஸ்திரம் என்கிற விஷயங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாச மாய் ஏனிருக்கவேண்டும்? ஒருவித்தையில் அல்லது ஒரு சாஸ்திரத்தில் அதனு டைய பற்பல பிரிவுகள் தனியாய் சொல்லப்பட்டிருப்பதுபோல் சிருஷ்டி வித்தையில் ஆறுவிதமான பிரிவுகள் தனிமையாய ஆறுசாஸ்திரங்களுக் கேற்ற

வாறு பிரிக்கப்பட்டிருக்கிறது. இதை விரோதமென்று ஒரு நாளும் சொல்ல முடியாது. உதாரணமாக மண்பாண்டம் செய்வதற்கு அடியிற்கண்ட பல வேருன ஆறு காரணங்கள் அடிப்படையாயிருக்கின்றன. கர்மம், சமயம், களி மண், விசாரம் (யோசனை) சம்யோகம் (சேர்க்கை) பிரித்தல் என்கிற ஞானம், மண்களின்குணம், குயவன். அப்படியேசிருஷ்டிவித்தையில் ஆறுவிதமானசாஸ் திரங்களும் ஆறுவிதமானகாரணங்களை விவாதஞ் செய்கின்றன. இதில்கொஞ்ச மேனும் விரோதமில்லை. உதாரணமாக சிருஷ்டிக்கு எந்தக் கர்மம் காரணமாக சொல்லப்படுகின்றதோ அதனுடைய விளக்கம அதிலிருக்கின்றன. மீமாம்சத் தில், சமயத்தினுடையவும், (காலம்) காரணம் வைசேஷிகத்திலும், பரம அணு அல்லது உபாதானகாரணத்தினுடைய விளக்கம் நியாயத்திலும், புருஷார்த் தத்தினுடைய விளக்கம் யோகத்திலும், பிரகிருதி அல்லது தத்துவங்களினு டைய அனுக்கிரகங்கங்களாலே எண்ணப்படுகிற காரணம் சாங்கியத்திலும், பிரம்மம் அல்லது நிமித்த காரணமாயிருக்கும் பரமேச்வரனைக்குறிக்கும் விளக் கங்கள் வேதாந்தசாஸ்திரத்திலும் முறையே சொல்லப்படுகிறன. இதில் கொஞ் சமேனும் விரோதமில்லை.

உதாரணமாக வைத்திய சாஸ்திரத்தில் நிதானம் (வியாதியைக்கூறும் சாஸ்திரம்) தேகத்தின் அமைப்பு. சிகிச்சை (மருந்து பதார்த்தகுண நூல்) ஔஷதம் (மருந்து வகைராக்கள்) தானம் (சுகாதார விஷயங்கள்) பத்தியமுத லிய விஷயங்கள் தனித்தனியாய் சொல்லப்பட்டிருந்தபோதிலும் எல்லாவற்றி னுடைய கருத்து, பிணியை அல்லது வியாதியை நிவர்த்தி செய்வதற்கே யாம். அப்படியே சிருஷ்டிக்கு ஆறுவிதகாரணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சாஸ்திரத்திலும் ஒவ்வொன்று விவகரிக்கப்படுகின்றது. ஆகையினால் கொஞ்ச மேனும் விரோதமில்லை. இதற்குச் சிறந்த உரைகளைச்சிருஷ்டியின் "ஆக்குதல், அளித்தல், அழித்தல்" என்னும் இந்நூலின் அத்தியாயத்தில் எழுதுவோம்.

வித்தைகளைப் படிப்பதிலும் படிக்கச் செய்வதிலும் உண்டாகும் தடங் கல்களை எல்லாம் ஒழித்துத்தள்ளிவிடவேண்டும். உதாரணமாக துன்மார்க்கர்க ளுடைய சேர்க்கை, மதுபானம், மாம்சாகாரம், வேசிகளிடத்தில் போகுதல், சிறுவயதில் கலியாணம், (அதாவது 25 வயதுக்குள் புருஷர்களுக்கும், 16 வய துக்குள் ஸ்திரீகளுக்கும் விவாகஞ்செய்தல்) பூர்ண பிரமசர்யத்தைக் கொள்ளா திருத்தல். வேதாதிசத்தியசாஸ்திரங்களைப்பரவச்செய்வதில் ஆசையில்லாதிருக் கிற (அரசன், வித்வான், தந்தை, தாய்) அதிகம் உண்ணுதல், அதிகம் விழித் தல், படிப்பதிலும், படிக்கச் செய்வதிலும், சோம்பல், முதலியவைகளை கொள் ளல், வித்தை மிகப்பெரியது, எல்லாவற்றையும்விட லாபந்தரக்கூடியதென்று எண்ணுதிருத்தல், பிரம்மசர்யத்தினுல் பலம், புத்தி, பராக்கிரமம், ஆரோக்கி யம், ராஜீயம், ஐசுவர்யத்தின் விருத்தி இவைகள் உண்டாகிறதென்று நம்பாம லிருத்தல், உண்மையான ஈச்வரனின் ஞானத்தை விட்டு கல் முதலான உயி ரில்லாத மூர்த்திபூஜையில் காலத்தை வீணுகக்கழிப்பது, மாதா, பிதா, அதிதி ஆசாரியர், வித்வான் இவர்களை உண்மைமூர்த்திகளாக வணங்காமலிருத்தல்,

அவர்களுடைய சேவை செய்யாமலிருத்தல், வர்ணாசிரமத்தை விட்டு திருநீறு, திருநாமம், திருபுண்ட்ரம், திலகம் இட்டு உருத்திராக்ஷம் கழுத்திலணிந்து கொள்வது, ஏகாதசி, திரயோதசி முதலிய விரதங்களை அனுஷ்டிப்பது, காசி முதலான தீர்த்தங்களில் ஸ்நாநம்செய்வது, ராம, கிருஷ்ண, நாராயண, சிவ, பகவதி, கணேச முதலியவர்களை ஸ்மரிப்பதினால் பாபங்கள்விலகிவிடுமென்று நம்புவது, கள்ளங்கபடமுள்ளவர்களுடைய உபதேசத்தால் வித்தைகளை படிப்பதில் சிரத்தை இல்லாதிருத்தல், வித்யா, தர்மம், பரமேச்வரனுடைய உபாசனை, இவைகளில்லாமல் பொய்புராணங்களாகிற பாகவதம் முதலியவைகளினுடையக்கதைகளைகேட்பதினாலேயே முக்தி என்றுநம்புவது, லோபித்தனத்தால் தனம் முதலியவைகளிலேயே ஆசைவைத்து வித்தைகளில் ஆசை இல்லாமலிருப்பது, இங்கு மங்கும் திரிந்து பொய்யான விவகாரங்கள் முதலியவைகளுடையவலைகளில் அகப்பட்டு பிரம்மசர்யத்திலிருந்து விலகி மூர்க்கனாயும் ரோகியாயும் ஆவது, முதலியவற்றை விடவேண்டும். தற்காலத்திய சமய பேதங்களை யனுஷ்டிப்பவர்கள், சுயநலங்கூறும் பிராமணர் முதலானவர்கள், மற்றவர்களை வித்தையிலிருந்தும் நல்ல சங்கத்திலிருந்தும் நீக்கி தங்களுடைய வலைகளில் அகப்படச் செய்து அவர்களுடைய தேகம், மனம், ஐசுவர்யம், முதலியவைகளை நஷ்டஞ் செய்கிறார்கள். க்ஷத்திரியர் முதலானவர்கள் படித்து வித்வான்களாகும் பட்சத்தில் சுயநலங்கருதுபவர்களுடைய வலைகளிலிருந்து நீங்கி அவர்களுடைய போக்கிரித்தன முதலியவைகளை தெரிந்து அவமான முதலியவைகளைச் செய்வார்கள் என்று எண்ணி அவர்களைக்கல்விப்பயிற்சி இல்லாது வைத்திருக்க இச்சிக்கிறார்கள். இம்மாதிரி இடையூறுகளை இராஜாவும் பிரஜைகளும் நீக்கிவிடவேண்டும். அவர்களுடைய பிள்ளை பெண்கள் வித்வான்களாக வேண்டி தேகம், மனம் ஐஸ்வர்ய முதலியவைகளால் பிரயத்தினஞ் செய்யவேண்டும்.

மாதர்கள் வேதத்தை ஓதலாம்.

வினா:—ஸ்திரீகளும் சூத்திரர்களும் வேதம்படிக்கலாமா? அவர்கள் படிக்கும்பட்சத்தில் நாங்கள் என்னசெய்கிறது? அவர்கள் படிப்பதற்குப் பிரமாணமுமில்லையே. வேதத்திலேயே அது மறுக்கப்பட்டிருக்கிறதே-பாருங்கள்.

स्त्रीशूद्रौ नाधीयातामिति श्रुतेः

ஸ்திரீகளும் சூத்திரர்களும் வேதம்படிக்ககூடாதென்பதே இதன் கருத்து.

விடை:—எல்லாஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் வேதம்படிக்க ஆதாரமிருக்கின்றது. நீ நாசமாய்ப்போ!! சுருதிஎன்று சொல்லுகிறாயே. அது உன்னுடைய கற்பனையேயாம். அது எந்த பிரமாண கிரந்தத்திலுமில்லை. எல்லா மனிதர்களுக்கும் வேதாதிசாஸ்திரங்களைப் படிக்கிறதற்கும் படிப்பிக்கவும் அதிகாரமுண்டு. அதற்கு அடியிற்கண்ட பிரமாணம் யஜுர்வேதம் 26-வது அத்தியாயம் இரண்டாவது மந்திரத்திலிருக்கின்றது.

यथेमां वाचं कल्याणीमावदानि जनेभ्यः । ब्रह्मराजन्याभ्याग्ं शूद्राय चार्याय च स्वाय चारणाय ॥

ஈசுவரன் சொல்லுகிருர்:—"இக்கல்யாணம் அதாவது இகவாழ்க்கை முக்தி இவைகளின் சுகத்தையளிக்கிற இவ்வார்த்தைகளை அதாவது நான்கு வேதங்களை எப்படி நான் சகலமனிதர்களின் (ஜனேப்ய: என்னும் பதத்திற்கு நாம் சகல மனிதர்கள் என்று மொழி கூறியிருப்பதைக் கொள்ளாமல் ஸ்மிருதிகளில் சொல்லும் வண்ணம் அந்தணர்களைக் கொள்ளவேண்டும் என்றும் அவர்களே வேதங்களைப் படிக்கவேண்டும், ஸ்திரீகளும் சூத்திரர்களும் படிக்கக் கூடாது என்றும் எவரேனும் கூறும்பக்ஷத்தில் இச்சுலோகத்தின் பிற்பகுதியே அதற்குத்தக்கப் பதிலாகும்.) பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் ஸ்திரீகள், தொழிலாளர்கள் கீழானவர்களிலும் கீழானவர்கள் பொருட்டு உபதேசஞ்செய்கிறேனே அதேமாதிரி நீங்கள் செய்யவேண்டும். அதாவது எல்லா மனிதர்களும் வேதங்களைப் படித்தும், படிக்கசெய்தும், கேட்டும் கேட்கச்செய்தும் ஆநந்தத்தை யடையட்டும்.

எவருடைய வார்த்தையை நம்புவது? உன்னுடையதிலா? பரமேச்வரனுடையதிலா? பரமேச்வரனுடைய வார்த்தை கட்டாயமாய் நம்பத்தகுந்தது. இது இப்படி யிருக்கிறபடியினால் பரமேச்வரனை நம்பாதவர் நாஸ்திகர்கள் என்று சொல்லவேண்டும் ஏனென்றால்:—

வேதங்களை நம்பாதவர்களும், நிந்தனை செய்பவர்களும் நாஸ்திகர் என்று சொல்லப்படுகின்றார்கள், ? சூத்திரர்களுக்குநன்மையைசெய்யபரமேச்வரனுக்கு இஷ்டமில்லையா? வேதங்களைப்படிப்பதற்கும்கேட்பதற்கும்துவிஜர்களுக்கென்று விதித்து சூத்திரர்களுக்கு விதிக்காமலிருக்க ஈச்வரன் என்ன பக்ஷபாதமுள்ளவரா? சூத்திரர்களுக்குப்படிப்பதற்கும் படிக்கப்படா திருப்பதற்கும் ஈச்வரனுக்கு இஷ்டமில்லாதிருக்கும் பட்சத்தில் அவர்களுடைய சரீரத்தில் வாக்கையும் காதுகளையும், இந்திரியங்களையும் ஏன் உண்டாக்கினர்? பரமாத்மானவர் எப்படி பூமி, ஜலம் அக்னி, வாயு, சூர்யன் சந்திரன் அன்னம் முதலான பதார்த்தங்களை எல்லோரின் பொருட்டு உண்டு பண்ணியிருக்கிறாரோ, அப்படியே வேதத்தையும் எல்லோரின் பொருட்டும் பிரகாசஞ்செய்திருக்கிறார். தடுக்கப்பட்டிருப்பதின் தாத்பர்யம் யாதெனில், எவனுக்குப்படிப்பதினாலும் படிப்பிக்கப்படுகிறதினாலும் ஒன்றும் வராமலும் பிரயோஜன மன்னியிலுமிருக்கின்றனோ எவன் புத்தியில்லாமல் மடத்தனமாயிருக்கிறானோ அவனுக்குச் சூத்திரன் என்று பெயர். அவனுக்குப் படிப்பதினாலும் படிப்பிப்பதினாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. மாதர்கள் படிப்பதற்கு எவன் நிஷேதங்கூறுகிறானோ அவன் தன்னுடைய மடத்தனம் சுயநலம் புத்தியில்லாத்தன்மை முதலானவைகளையே வெளியிடுகிறான்.

ब्रह्मचर्य्येण कन्या युवानं विन्दते पतिम् ॥ அதர். II. 16. 3. 18.

எப்படிப்பிள்ளைகள், பிர்மசர்யவிரதத்தைக் கொண்டதினால் பூர்ணமான பயிற்சி முதலியவைகளை அடைந்து மங்கையாயும் படித்தவளாயும் தன்னுடைய அனுகூலத்திற்கும் பிரியத்திற்கும் சரியாயுமிருக்கும் பெண்களோடு கல்யாணஞ்செய்துகொள்ளுகிறார்களோ அப்படியே (கன்யா) மங்கையானவள் (பிர்மம்

சர்யேண) பிரமசர்யத்தை அனுஷ்டிப்பதினால் வேதம் முதலான சாஸ்திரங்களைப்படித்து பூர்ணவித்தை சிறந்த கல்வி இவைகளை யடைந்து கன்னிகைப்பருவத்தில் தனக்குச் சரியாயிருக்கும் பூர்ணவித்வான்களாய் யௌவனபருவத்துடன் கூடின புருஷனை (விந்ததே) அடையவேண்டும். இதனால் ஸ்திரிகளும் பிரமசரியம், வித்தை முதலானவைகளைக்கிரஹிப்பது அவசியமாகிறது.

வினா:— ஸ்திரீகளும் வேதங்களைப்படிக்கவேண்டுமா?

விடை:—அவசியமாய் படிக்கவேண்டும். பாருங்கள் சிரௌதசூத்திராதியில் **इमं मन्त्रं पत्नी पठेत्** அதாவது ஸ்திரீ யக்ஞத்தில் இம்மந்திரத்தை ஓதவேண்டும். வேதம் முதலான சாஸ்திரங்களைப் படிக்காதிருந்தால் யக்ஞத்தில் ஸ்வரத்தோடு மந்திரங்களையும் உச்சாரணைகளுடன் கூடின சம்பாஷணைகளையும் எங்ஙனம் செய்யக்கூடும்.

பாரத நாட்டு மாதர்களில் திலகம்போல் விளங்குகிற "கார்கி" முதலியவர்கள்வேதாதி சாஸ்திரங்களைப் படித்து பூரணபண்டிதைகளாயிருந்தார்கள். இது சதபத பிராமணத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. புருஷன் வித்வானும் மனைவி வித்தையில்லாதவளாயும் அல்லது மனைவி வித்வானுயுவும் புருஷன் வித்தையில்லாதவனாயும் இருந்தால் தினந்தோறும் வீட்டில் தேவா சுர யுத்தம் நடைபெறும். அப்படி நடைபெற்றால் சுகம் எங்கிருந்துண்டாகும்? ஸ்திரீகள்படிகாவிட்டால் கன்யாலயங்களில் எப்படி உபாத்தியாயனியா யிருக்கக்கூடும்? படிப்பில்லாமல் இல்லற தர்மங்களை ஸ்திரீ சரியாய் செய்ய முடியாது. வீட்டையாளுகிறதும், நியாயமாய் எல்லாரிடத்திலும் இருப்பதும், கிரஹாச்ரமதர்மங்களையும், ஸ்திரீ புருஷர் பரஸ்பரம் திருப்தியாய் சந்தோஷத்துடனிருக்கவேண்டிய தன்மை, வீட்டின் எல்லா வேலைகளையும் தன்கைக்கீழ் வைத்துக்கொள்வது இவைகளெல்லாம் ஸ்திரீகளுக்குப்படிப்பில்லாவிட்டால் ஒருநாளும் சரிவர நடைபெறாது. பாருங்கள்! ஆர்யவர்த்த தேசத்தின் ஆதி இராஜ புருஷர்களின் ஸ்திரீகள் தனுர் வேதம்—அதாவது யுத்தவித்தைகளை நன்றாய் அறிந்திருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாதிருந்திருக்கும் பட்சத்தில், கைகேயி முதலியவர்கள்தசரதனுடன் எப்படியுத்தத்திற்குப்போயிருந்திருக்கக்கூடும்? யுத்தம் எப்படி செய்திருக்கக்கூடும். பிராமண க்ஷத்திரிய ஸ்திரீகளுக்கு எல்லா வித்தைகளும் வைசிய ஸ்திரிகளுக்கு பாகாதி (சமையல்) வித்தைகளும் அவசியம்வேண்டும். எப்படி புருஷர்களுக்கு வியாகரணம் தர்மம் வியவஹாரங்களுடைய வித்தை (தொழில்) கொஞ்சமாவது படிக்கவேண்டுமோ, அப்படியே ஸ்திரீகளுக்கும், வியாகரணம் தர்மம், வைத்தியம், கணிதம், சிற்பவித்தை முதலியவைகளை அவசியமாய் கற்றுக் கொடுக்கவேண்டும். ஏனென்றால் குணங்களைக் கற்றுக்கொண்டாலொழிய சத்யா சத்தியத்தை நிர்ணயிப்பது, புருஷனிடத்தில் அனுகூலமாயிருந்து கொள்வது, யோக்கியதைக்குத் தகுந்த வண்ணம் சந்தானங்களை உற்பத்திசெய்து கொள்வது, அவர்களைப் பாதுகாத்து நற்சிட்சைகளை கொடுப்பது, வீட்டில் எல்லா வேலைகளை எப்படிச்செய்யவேண்டுமோ

அப்படி செய்வது அன்னபான முதலியவைகளை வைத்திய சாஸ்திரத்தின் பிரகாரம் பக்குவஞ் செய்வது இவைகளெல்லாம் செய்யமுடியாது. இப்படிச் செய்யும் பட்சத்தில் அவர்களுடைய கிரகத்தில் பிணி, எப்பொழுதுந்தீண்டாமல் அவர்களை ஆநந்தத்தில் வைக்கிறது. சிற்பவித்தை தெரிந்தாலொழிய வீடு முதலியவைகளைக் கட்டச் செய்வதும் வஸ்திர ஆபரணமுதலியவைகளை செய்யச்செய்வதும், கணித வித்தை தெரிந்தாலொழிய எல்லா கணக்குகளைத் தெரிந்து கொள்வதும் தெரியச் செய்வதும், வேதாதி சாஸ்திரங்கள் தெரிந்தாலொழிய தர்மத்தை யொரு நாளுமறியாமல் அதர்மத்திலிருந்து ஒருநாளும் தப்பிக்கவும் முறையே முடியாது. ஆகையால் தங்களுடைய சந்தானங்களுக்கு பிரம்ம சர்யத்தினுலும் சிறந்த பயிற்சியினுலும் வித்தைகளினுலும் சரீரத்தையும், ஆன்மாவையும் பூர்ணபலமாக விருத்திசெய்பவர்களே பூஜிக்கத்தகுந்தவர்கள். அவர்களே தங்களுடைய கடமைகளைசெய்தவர்கள். ஏனென்ருல் வயது வந்தவுடன் யோக்கியதைக்குத் தகுந்தவண்ணம் தர்மத்துடன் அடியில் கண்டவர்களுடன் எப்படி நடந்துகொள்ளவேண்டுமோ அப்படி நடந்து கொள்ளுகிருர்கள். தாயார், தகப்பனுர் புருஷன், மாமியார் மாமனுர் இராஜா, பிரஜை சமீபத்திலிருப்பவர் இஷ்டமித்திரன், குழந்தை இன்னுமுதலிய உறவினவர்கள். வித்தை எப்பொழுதும் குறையாதவும், அழியாதவுமான பொக்கிஷம். இது எவ்வளவுக்கெவ்வளவு சிலவு இடப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு விருத்தியை யடைகிறது.

இதர பொக்கிஷங்கள், சிலவு செய்வதினுல், குறைந்து அழிவையடைகிறது உரிமைக்காரர்களும் தங்களுடைய பாகத்தை எடுத்துக்கொள்கிருர்கள். ஆனுல் வித்தையாகிய பொக்கிஷத்தைத் திருடர்கள் திருடவும் முடியாது ஆகையால் இவைகளை ரக்ஷித்து விருத்தி செய்வது இராஜர்களுடையவும் பிரஜைகளுடையவும் கடமையாகும்.

कन्यानां सम्प्रदानं च कुमाराणां च रक्षणम् ॥

கன்னிகை குமாரர்கள் எல்லோரையும் தக்க சமயம் வரையில் பிர்ம்ம சரியத்தில் வைத்து வித்வான்களாகச் செய்வது இராஜர்களுக்கு யோக்கியமான கார்யமாயிருக்கிறது—எட்டுவயதுக்குப் பிறகு பிள்ளைகளையாவது பெண்களையாவது வீட்டில்வைத்துக்கொள்ளாமல் ஆசார்ய இல்லத்திற்கு அனுப்பவேண்டுமென்று இராஜாவானவன் ஏற்படுத்த வேண்டும். இந்தநியமங்களின் பிரகாரம் நடக்காமலிருப்பவர்களுக்கு இராஜதண்டனை அளிக்கவேண்டும். சமாவர்த்தன சமயம் வரும் வரையில் அல்லது ஆசார்யகுலத்திலிருக்கும் வரை கல்யாணஞ் செய்யக்கூடாது.

सर्वेषामेव दानानां ब्रह्मदानं विशिष्यते ।
वार्यन्नगोमहीवासस्तिलकाञ्चनसर्पिषाम् ॥ மனு 4. 233.

உலகத்தில் எல்லாவிதமான தானங்களில் அதாவது ஜலம், அன்னம், பசு, பூமி, வஸ்திரம், எள்ளு, சுவர்ணம், நெய், இவ்வெட்டு விதமான தானங்களைக்காட்டிலும் வேதவித்தையை தானஞ்செய்வது சாலசிறந்தது. ஆகையினுல்

வித்யாதானம் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவு முயற்சியுடன் தேகம், மனம், பணம் முதலியவைகளால் எப்பொழுதுஞ் செய்யவேண்டும். எந்த தேசத்தில் யோக்கியதைக்குச் சரியாய் பிர்ம்மசரியம், வித்தை தர்மம் இவைகள் பிரகாசமுண்டாகின்றதோ அந்த தேசத்தில் எல்லாவிதமான பாக்கியமும் உண்டாகின்றது.

இதில் பிரமசர்யத்தினுடைய முறையைப் பற்றிச் சுருக்கமாய் எழுதினேம். இதன்பின் நான்காவது அத்தியாயத்தில் குருகுலத்தை விட்டு தன் ஆச்ரமத்திற்கு (கிரகஸ்தாச்ரமம்) மீளல் என்னும் விஷயத்தைப்பற்றி எழுதுவோம்.

மூன்ருவது அத்தியாயம்
முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

கிரஹஸ்தாச்ரம தர்மம்.

वेदानधीत्य वेदौ वा वेदं वापि यथाक्रमम् ।
अविप्लुतब्रह्मचर्यो गृहस्थाश्रममाविशेत् ॥ மனு 3. 2.

புருஷர்களும், ஸ்திரீகளும், சரிவர பிரம்மசார்யாச்ரமத்தில் ஆசாரியர்களுடைய மனங்கோணுமலிருந்து, சாங்கோபாங்கமாய், அங்கங்களுடனும், உபாங்கங்களுடனும் நான்கு வேதங்களையாவது, அல்லது அவற்றுள் மூன்றையாவது, அவையுமில்லாவிடில் ஒன்றையாவது படித்தப்பிறகே கிரகஸ்தாசிரமத்தில் பிரவேசிக்கவேண்டும்.

तं प्रतीतं स्वधर्मेण ब्रह्मदायहरं पितुः ।
स्रग्विणं तल्प आसीनमर्हयेत्प्रथमं गवा ॥ மனு 3. 3.

குருவிடத்தில் சிஷ்யனுகவிருந்து தன்னுடைய கடமைகளைச் சரிவர நடத்திய பிறகு, பெற்றோர்களிடமிருந்தோ, குருவினிடமிருந்தோ வேதத்தினுடைய அர்த்தத்தைக்கிரகித்து, மாலையைத்தரித்து, மணையிலமர்ந்தப்பின்னர், மாணுக்கனுக்குத் தன் தகப்பனுர் கோதானத்தினுலே சத்காரஞ்செய்யவேண்டும். அதேமாதிரி பெண்ணின் தகப்பனுரும் செய்யவேண்டும்.

गुरुणानुमत स्नात्वा समावृत्तो यथाविधि ।
उद्वहेत द्विजो भार्यां सवर्णां सक्षणान्विताम् ॥ மனு 3. 4.

பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் வைசியர்களும் குருவினுடைய ஆக்ஞையைப்பெற்று, ஸ்நானஞ்செய்து. குருகுலவாசத்தை முறையே செய்து திரும்பித் தங்கள் தங்கள் வருணத்திலேயே சகல சௌந்தர்யலக்ஷணங்களுடன் கூடின பெண்ணை விவாகஞ் செய்து கொள்ள வேண்டும்.

असपिण्डा च या मातुरसगोत्रा च या पितुः ।
सा प्रशस्ता द्विजातीनां दारकर्मणि मैथुने ॥ மனு 3. 5.

தாயாருடைய குலத்திலிருந்து ஆறுதலைமுறைகளுக்குட் படாதவளாயும், தகப்பனுருடைய குலத்தைச் சேராமலுமிருக்கிறவளாகிய கன்னிகையே விவாகத்திற்கு உசிதமானவள் இப்படிச் செய்வதின் கருத்து என்னவெனில்?

परोक्षप्रिया इव हि देवा प्रत्यक्षद्विषः ॥
दुहिता तुर्हिता दूरेहिता दोग्धेर्वा ॥ சதபதபிரா.

பரோக்ஷ (பார்க்காமலிருக்கும்) வஸ்துக்களில் இச்சை அதிகமாக உண்டாவதுபோல் ப்ரத்யக்ஷமான பதார்த்தங்களிலுண்டாகிறதில்லை, எப்படி என்

ருல் உருபார்க்காமல் குணங்களைமாத்திரம் கேட்டிருக்கும் மதுரமான பதார்த்தங்களிலேயே மனிதர்களுடைய மனது செல்லுகின்றது. மெச்சத்தகுந்த குணங்களையுடைய கண்ணுக்குத் தெரியாத வஸ்து ஒன்றை, ஒருவன் கேட்ட மாத்திரத்திலேயே எவ்விதம் விரும்புகிறானோ அவ்விதமே தாயார் பக்கத்திலேயும், தகப்பனார் பக்கத்திலேயும் சமீபசம்பந்தமற்ற பெண்ணை விவாகத்திற்குத் தேடவேண்டும்.

தூரவிவாகத்தினுடைய குணங்கள்·

(1) சிறுவயதிலிருந்தே ஒன்றுசேர்ந்து ஆடியும், பாடியும், ஒருவருக்கொருவர் நிர்வாணமாய்க்கண்டும், பரஸ்பரகோபதாபங்களையும், குணதோஷங்களையும், விபரீதாசாரங்களையும் அறிந்திருக்கிற இருவர்களுடைய விவாக சம்பந்தம் ஒரு பொழுதும் பரஸ்பர இல்லற நேசத்தை விளைவிக்கின்றதில்லை. (2) ஜலத்துடன் ஜலம் சேர்ந்தால் எப்படி இலக்ஷணமாக (புதியதாக) ஒன்றும் ஏற்படுகிறதில்லையோ, அப்படியே தகப்பனுரைச்சார்ந்த கோத்திரத்திலேயோ அல்லது தாயாரது குலத்திலேயோ விவாகஞ்செய்து கொள்ளுவதினுல் தாதுபுஷ்டியுண்டாவதில்லை. (3) பாலுடன் சர்க்கரையாவது அல்லது சுக்கு முதலான ஔஷத பதார்த்தங்களாவது சேருகின்றதினுல் உத்தம குணமேற்படுவதுபோல் தாய் தந்தை குலத்திலிருந்து பிளவுபட்ட வேறு கோத்ரங்களில் ஸ்திரீ புருஷர்களுக்கு விவாகமாவதினுல் உத்தமமான சந்தானுேத்பத்தியுண்டாகும். (4) ஒரு தேசத்தில் தீராப்பிணியையுடைவர், மற்றொரு தேசத்தினுடைய, காற்று அன்னபானம்முதலானவைகளினுல்சௌக்கியமடைகிறுர். ஆகையினுல் தூரதேச விவாகம் உத்தமமானது. (5) சமீபசம்பந்தத்தினுல் இருபக்கத்தினர்களுடைய குடும்பங்களிலேயும் சச்சரவுகள் ஏற்பட்டுச் சண்டை உண்டாகக்கூடும். தூரதேசத்தில் சம்பந்தமுண்டானுல் இத்தகைய சச்சரவுகளுக்குக் காரணமில்லை. இப்படிச் செய்வதினுல் விருத்தியே சம்பவிக்கும். சமீபசம்பந்தத்தினுல் அவ்வாறு உண்டாவதில்லை. (6) தூரதேச சேர்க்கையினுல் அந்தத்தேசத்தினுடைய பதார்த்தங்களை அடையலாம். தூர சம்பந்தத்தினுல் நன்மைகளே ஏற்படுகின்றன. சமீப விவாகத்தினுல் அவ்வண்ணம் ஏற்படுகிறதில்லை. ஆகையினுல்,

दुहिता दुर्हिता दूरेहिता दोग्धेर्वा ॥ நிருக். 3· 4·

கன்னிகையினுடைய பெயர் துஹிதை· இந்தக் காரணத்தைக்கொண்டு தூரதேச விவாகமாகிறபடியினுல் நன்மையைச் செய்கிறவளாகிறுள். சமீப விவாகத்தினுவில்லை. (7) சமீபச்சேர்க்கையினுல் பெண்ணினுடைய தகபபனுர் ஏழ்மைத்தனத்தையடைய காரணமிருக்கிறது. எப்படி யென்றுல், பெண்ணுனவள் ஒவ்வொருதடவையும் தம்மை பார்க்க வரும்போதெல்லாம் அவளுக்கு அவர்கள் ஏதாவது கொடுக்கவேண்டும். (8) சமீபசேர்க்கையினுல் இருபக்கத்தினரும் அவரவர்களுடைய உதவியைப் பெரிதும் கருதி கர்வத்துடன் நாடி வருவார்கள். ஸ்திரீகளுடைய புத்தி மிகவும் கூர்மையானபடியினுல், சமீப சேர்க்கையினுல் கெட்ட பெயரும் விரோதமுமே சம்பவிக்கும். கொஞ்சம் மனஸ்தாபம் ஏற்படுமே யானுல் உடனே ஸ்திரீ தன் தகப்பனுர் அகத்திற்கு நடந்து விடுவாள். இவைகளும், இன்னும் இவைகளைப்போன்ற அநேக கார

ணங்களும், ஒரே வம்சத்தைச்சார்ந்த இருவர்களுக்கோ அல்லது தகப்பனுர் பக்கத்தைச்சேர்ந்த ஆறு வம்சங்களினுல் பிரிக்கபடாத பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொள்பவர்களுக்கோ ஏற்படகூடிய தீமைகளாகும்.

महान्त्यपि समृद्धानि गोऽजाविधनधान्यतः ।
स्त्रीसम्बन्धे दशैतानि कुलानि परिवर्जयेत् ॥ மனு. 3 6.

தனம், தான்யம், ஆடு, மாடு, யானை, குதிரை, நிலம் முதலான சகல சம்பத்துகளால் எவ்வளவு தூரம் ஒரு குடும்பம் நிறைந்திருந்த போதிலும், விவாகவிஷயங்களில் கீழ்க்கண்ட பத்துகுடும்பங்களுடன் சம்பந்தம் செய்தல் கூடாது.

हीनक्रियं निष्पुरुषं निश्छन्दो रोमशार्शसम् ।
क्षय्यामयाव्यपस्मारिश्वित्रिकुष्ठिकुलानि च ॥ மனு. 3. 7.

எக்குடும்பத்தில், சத்கிரியை ஒன்றும் செய்கிறவர்களில்லையோ, சத்புருஷர்கள்யாருமில்லையோ, வேதாத்யயனத்தை அலக்ஷியம் செய்கிறார்களோ, நீண்டு அல்லது பருத்துக்கனத்த ரோமங்களை உடைய உடம்புள்ளவர்கள் இருக்கிறார்களோ, க்ஷயம், உப்பஸம், கோழை, இருமல், மேகம், வெள்ளைக்குஷ்டம், யானைக்கால், முதலான ரோகங்களால் பீடித்து வருந்துகிறவர்கள் இருக்கிறார்களோ, அந்தக்குடும்பங்களிலிருந்து பெண்ணையாவது, பிள்ளையையாவது ஏற்றுக்கொள்ளவேகூடாது. ஏனென்றால், இம்மாதிரி வியாதிகள், கலியாணஞ் செய்துகொள்ளுவதினுல் ஒரு குடும்பத்திலிருந்து மற்ற குடும்பத்திற்குப் பரவும். ஆகையினுல் உத்தமகுலங்களிலிருந்தே பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் விவாகம் செய்யவேண்டும்.

नोद्वहेत्कपिलां कन्यां नाऽधिकाङ्गीं न रोगिणीम् ।
नालोमिकां नातिलोमां न वाचाटान्न पिङ्गलाम् ॥ மனு. 3. 8.

ஒருவன், மஞ்சள் நிறத்தையுடையவளையாவது, தன்னைவிடப் பெரியவளையாவது, பருத்தவளையாவது, பலமுள்ளவளையாவது, வியாதியால் வருந்துகிறவளையாவது, அடர்ந்தகுழல் அல்லது குழலின்றியிருப்பவளையாவது, பூனையைப்போன்ற கண்களையுடையவளையாவது, கலியாணம் செய்துக் கொள்ளக் கூடாது.

नर्क्षवृक्षनदीनाम्नीं नान्त्यपर्वतनामिकाम् ।
न पक्ष्यहिप्रेष्यनाम्नीं न च भीषणनामिकाम् ॥ மனு. 3. 9.

அசுவனி, பரணி, ரோகிணிதேவி, ரேவதிதேவி, சித்திரை முதலான நக்ஷத்திரங்களுடைய நாமங்களையும், துளசி, ரோஜா, சம்பா முதலான விருக்ஷங்களுடைய பெயர்களையும், கங்கா, யமுனு, முதலான நதிகளுடைய நாமங்களையும், சாண்டாளி முதலான தாழ்ந்த நாமங்களையும், விந்தியை, ஹிமாலயம், முதலான பர்வதங்களின் நாமங்களையும், மாதோதாஸி, மீருதாஸி என்கிற இழிவான நாமங்களையும் உடைய கன்னிகையை விவா

கம் செய்துகொள்ளக்கூடாது; ஏனென்றால், இம்மாதிரி பெயர்களெல்லாம் மனோரம்ய மற்றனவாயும் அன்னியபதார்த்தங்களுடைய நாமங்களாயுமிருக்கின்றன.

अव्यङ्गाङ्गीं सौम्यनाम्नीं हंसवारणगामिनीम् ।
तनुलोमकेशदशनां मृद्वङ्गीमुद्वहेत्स्त्रियम् ॥ மனு. 3. 10.

சமமான பரிமாணத்தை யுடையவளாயும், அங்கஈன மற்றவளாயு **யசோதை சுக்தை** என்கிற சுந்தரமான நாமங்களையுடையவளாயும் அன்னத்தினது அல்லது யானையினது நடையை உடையவளாயும், மிகவும் சன்னமானரோமத்துடனும், நல்ல பற்களுடனும், அழகான சரீரத்துடனுங் கூடின பெண்ணை கலியாணம் செய்து கொள்ளவேண்டும்.

வி:—விவாகத்திற்கு எந்த காலம் நல்லது?

விடை:—பெண்களுக்குக் கலியாணம் செய்யவேண்டிய காலம் 16வயது விருந்து 24வயது வரையிலும், பிள்ளைகளுக்கு 25 முதல் 48 வரையிலும் உத்தமகாலமாம். 16வயது பெண்ணுக்கும் 25 வயது பிள்ளைக்கும் கலியாணம் செய்வதானது அதமம். 18 அல்லது 20 வயது பெண்ணிற்கும், 30, 35 அல்லது 40 வயது புருஷனுக்கும் நடக்கும் கல்யாணம் மத்திமம். இருபத்து நான்கு வயதுடைய கன்னிகையுடன், நாற்பத்திஎட்டு வயதுடைய புருஷனுக்கு நடக்கும் விவாகமே உத்தமமானது. எந்த தேசத்தில் இவ்விதம் சரிவர பிரமசரியத்தை அனுசரித்து வித்தையைக் கிரகித்துக்கலியாணம் செய்யப் பட்டு வருகிறதோ அந்தத் தேசமே க்ஷேமத்தைப்பெற்றுச் சுகமாயிருக்கும். எந்ததேசத்தில், பிரமசர்யத்தை விட்டு, ஜனங்கள் சிறு பிராயத்திலேயே யோக்யதையில்லாமல் கலியாணத்தைச்செய்து கொள்ளுகிறார்களோ அத்தேசம் துக்கசாகரத்தில் மூழ்கிவிடும். பிரமசர்யத்தைச் சரிவர நடத்தி வித்தையைக்கிரகித்து விவாகம் செய்து கொள்ளுகிற ஊரிலேயே சகலமும் சரிவர நடைபெறும். அது தப்பிப்போகும் பக்ஷத்தில் எல்லாம் கெட்டுப்போய் விடும்.

வி:—பின்வரும் வாக்கியங்கள் பராசரர் ஸ்மிருதியிலேயும் சீக்ரபோதத்திலேயும் கூறப்பட்டிருக்கின்றன.

अष्टवर्षा भवेद् गौरी नववर्षा च रोहिणी ।
दशवर्षा भवेत्कन्या तत ऊर्ध्वं रजस्वला ॥
माता चैव पिता तस्या ज्येष्ठो भ्राता तथैव च ।
त्रयस्ते नरकं यान्ति दृष्ट्वा कन्यां रजस्वलाम् ॥

இவைகளின் அர்த்தமென்ன வென்றால், எட்டாவது வயதில் "கௌரீ" என்றும் ஒன்பதாவது வயதில் "ரோகிணி" என்றும் பத்தாவது வயதில் "கன்னிகை" என்றும், அதற்கப்புறம் "ரஜஸ்வலை" என்றும் பெண்ணானவள் அழைக்கப்படுகிறாள். அவளுடைய பத்தாவது வயதில் விவாகம் செய்து

கொடாமல், ரஜஸ்வலையான பெண்ணைப்பார்க்கிற தாயாரும், தகப்பனும், சகோதரர்களும், நரகத்தை யடைவார்கள்!

விடை:—"பிரம்மா உவாசா" பிரம்மா சொல்லுகிறார்.

एकक्षणा भवेद् गौरी द्विक्षणेयन्तु रोहिणी ।
त्रिक्षणा सा भवेत्कन्या ह्यत ऊर्ध्वं रजस्वला ॥
माता पिता तथा भ्राता मातुलो भगिनी स्वका ।
सर्वे ते नरकं यान्ति दृष्ट्वा कन्यां रजस्वलाम् ॥ பிரம்ம புராணம்.

ஒரு பெண் பிறந்த முதல் க்ஷணத்தில் அவளுக்குச் "கௌரி" என்றும் இரண்டாவதில் "ரோகிணி" என்றும்,மூன்றாவதில் "கன்னிகை" என்றும்,நான்காவதில் "ரஜஸ்வலை" என்றும் பெயராம். ரஜஸ்வலையில் கல்யாணமாகாமல் அந்தப்பெண்ணைப்பார்க்கிற அவள் தாயாரும், தகப்பனும், சகோதரர்களும், மாமர்களும், சகோதரிகளும் நரகத்தை அடைகிறார்கள்.

வி௵:—இந்தச் சுலோகம் ஒரு பிரமாண மாகாது.

விடை:—ஏன்? பிரம்மவாக்குப் பிரமாண மாகாது என்றால் உங்களுடைய வாக்கும் பிராமாண மாகாதே.

வி௵:—நீங்கள் பராசரப்பிராமணத்தையும், காசி நாதருடைய பிரமாணத்தையும் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா?

விடை:—நீங்கள் பிரம்ம வாக்கை ஒப்புக்கொள்ளமாட்டீர்களா? காசிநாதரையும், பாரசாரையும் விடப் பிரம்மாபெரியவரில்லையா? நீங்கள்பிரம்மவாக்கை நம்பாவிடில் நாங்கள் காசிநாதருடைய வாக்கையும், பராசருடைய வாக்கையும் நம்பமாட்டோம்.

வி௵:—உங்களுடைய சுலோகங்கள் அசம்பவமாயும, கூடாதனவாயும் இருக்கிறபடியினால், நம்புவதற்கு முடியாது. ஏனெனறால் ஜனன சமயத்திலேயே நூறு க்ஷணங்கள் நடந்தேறிவிடுகின்றன. இதுவுமன்றி அந்தச்சமயத்தில் விவாகம் செய்வதினால் கொஞ்சமேனும் பிரயோஜனம் உண்டாகாது.

விடை:—எங்களுடைய சுலோகங்கள் அசம்பவமாயிக்கும் பக்ஷத்தில் உங்களுடைய சுலோகங்களும் அப்படியே. ஏனென்றால், எட்டு, ஒன்பது வயதில் கல்யாணஞ் செய்வது பிரயோஜனமற்றதே. எப்படியென்றால், கர்ப்பாசயம் முதிர்ந்து, காயபலத்துடன் கூடி பதினறு முதல் இருபத்திநான்கு வயதுள்ள ஸ்திரீக்கும், பரிபக்குவமான வீர்யத்தையும் திடமான சரீரத்தையும் இருபத்து நான்கு முதல் நாற்பத்தெட்டு வயதுள்ள புருஷனுக்கும் பிறக்கும் குழந்தைகளே உத்தம குழந்தைகளாம்* எவ்விதம் எட்டுவயது கன்னிகையிடத்தில் சந்

---

* **ऊनषोडशवर्षायमप्राप्तः पञ्चविंशतिम् ॥**
यद्याधत्ते पुमान् गर्भं कुक्षिस्थः स विपद्यते ॥
जातो वा न चिरञ्जीवेज्जीवेद्वा दुर्बलेन्द्रियः ॥
तस्मादत्यन्तबालायां गर्भाधानं न कारयेत् ॥

சுஸ்ருத சரீரஸ்தானே 10. 47. 48.

தாரோத் பத்தி அசம்பவமோ அவ்விதமே "கௌரீ" "ரோகிணி" என்றழைப்பதும் அசம்பவமாம். "கௌரி" வார்த்தையின் அர்த்த பிரகாரம் பெண் அழகின்றி கறுப்பாயிருக்கும் பக்ஷத்தில், அவளை "கௌரி" அல்லது "அழகுள்ளவள்" என்றழைப்பது அசம்பவமாகும். அதுவுமன்றி "கௌரி" மகாதேவனின் பத்னியாகவும் "ரோகிணி" பலதேவனின் பத்னியாகவும் இருக்கிறார்கள். அவர்கள், புராணங்களை நம்புகிற உங்களால் தாய்களாக அபிமானிக்கப் படுகிறார்கள். தேவியாகிற கௌரியைப்போல் கௌரவிக்கிற ஒருபெண்ணை, நீங்கள், கலியாணம் செய்து கொள்வது எப்படித்தகும்? எப்படி அது நியாயமாகும்?எப்படி ஏற்றதாகும்? ஆகையினால், உங்களுடையதும் எங்களுடையதும் இரண்டும் அசம்பவமும், நம்பக்கூடாதனவுமாம். எவ்விதம் பிரம்மாவின்மீது பழியைச்சுமத்தி நாம் "பிரம்மா சொன்னார்" என்கிறோமோ அவ்விதமே பராசரரின் மீதும் பழியைச்சுமத்தி ஜனங்கள் கட்டுக்கட்டிவிட்டார்கள். ஆகையினால் பிரமாணம் போலிருக்கும் இப்போலிப்பிரமாணங்களை ஒதுக்கி எல்லாவற்றிற்கும் மூலாதாரமாயிருக்கும் வேதங்களைக்கவனிப்போமாக.

त्रीणि वर्षाण्युदीक्षेत कुमार्य्युतुमती सती ।
ऊर्ध्वं तु कालादेतस्माद्विदेत सदृशं पतिम् ॥ மனு. 6. 60.

மாதத்தீட்டு மூன்று வருஷத்திற்குப் பிறகு தனக்கிசைந்த புருஷனைப்பெண் தேடிக்கொள்ளட்டும். பிரதி மாதம் ரஜோதர்சன காண்கிறபடியினால் மூன்று வருஷத்திற்கு முப்பத்தாறு ஆகிறது. அதற்கப்புறம் மணம்புரிந்து கொள்வது ஏற்றதாம். அதற்கு முன்னால் மணஞ்செய்து கொள்வது பிரயோஜனமற்றதே.

काममामरणात्तिष्ठेद् गृहे कन्यर्त्तुमत्यपि ।
न चैवैनां प्रयच्छेत्तु गुणहीनाय कर्हिचित् ॥ மனு. 6. 86.

சமமான குணம், கர்மம், ஸ்வபாவம் இவைகளில்லாதவர்கள் அதாவது பரஸ்பரவிரோதமான குணகர்மஸ்வபாவமுள்ளவர்கள் கலியாணம் செய்து கொள்வதைவிட மரணபரியந்தம் கலியாணமில்லாமலிருப்பதே மேலாகும். இதிலிருந்து என்ன தெளிவாகிற தென்றால் முன் கூறின சமயத்திற்குக் குறை

சுஸ்ருதகர்த்தாவும், வைத்திய நிபுணருமான தன்வந்திரி, முதிர்ந்தவயதையடையாத ஸ்திரீ, புருஷர்களின் கர்ப்பாதானத்தைக் கீழ்கண்ட சுலோகங்களினால் கண்டிக்கிறார்.

பதினாறுவயதிற்குட்பட்டபெண்ணுடன் 25வயதிற்குட்ட ஒருபுருஷன்கர்ப்பாதானம் செய்வதினால் கெடுதல்கள் அநேகம் விளைகின்றன.

அக்கர்ப்பத்தினால் குழந்தை ஒன்று உண்டாகுமேயானால் அது வெகுநாள் ஜீவிக்காது. அப்படி ஜீவித்தபோதிலும் மிகவும் பலவீனமாயிருக்கும். ஆகையினால் அதிபால்யஸ்திரீயுடன் கர்ப்பாதானஞ்செய்யலாகாது.

இம்மாதிரியான சாஸ்திரத்தினால் கூறபட்ட நியாயங்களையும், சிருஷ்டி கர்மவிதிகளையும் யோசித்து நோக்குங்கால் என்ன ஏற்படுகிறதென்றால் 16வயதிற்கு குறைந்த ஸ்திரீயும், 25 வயதிற்குக்குறைந்த புருஷனும் கர்ப்பாதானத்திற்கு அருகரல்லர். இந்த நியாயத்தை யார் மீறி நடக்கிறார்களோ அவர்கள் துக்கத்திற்கு ஆளாகிறார்கள்.

ந்தாவது, சரியில்லாத குணங்களோடு இல்லாதவர்களாவது மணம் புரிந்துகொள்வது தகுதியாகாது.

வினு:—கல்யாணத்தைத் தாய் தகப்பன்களே ஏற்பாடு செய்யவேண்டியதா அல்லது பிள்ளைகளே செய்து கொள்ளவேண்டியதா?

விடை:—கல்யாணம் செய்துகொள்ளுகிறவர்களுடைய ஆதீனத்திலேயே இருந்தால் மிகவும் நல்லது. பெற்றோர்களே ஏற்றுக் கொள்ளுவார்களேயானுலும் அதைப்பெண் பிள்ளைகளின் யோசனையன்னியில் செய்யக்கூடாது. ஏனென்றால் பரஸ்பர நேசத்துடன்சேர்க்கை ஏற்படுமேயானுல் அது சீக்கிரம் விட்டுப்போகாது. அதுவுமன்னியில் அப்படிச்செய்வதினுல் நல்லபயன்களேற்படும். பரஸ்பர நேசத்துடன்நடவாத கலியாணங்களெல்லாம் கஷ்டத்தில் முடிகிறது. கல்யாணத்தில் முக்கியமானவர்கள்பெண்ணும் பிள்ளையுமே தவிற தாயார் தகப்பனுர்களில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் திருப்தியடைந்தால் சுகமாய் வாழ்வார்கள். திருப்தியடையை விட்டால் கஷ்டத்தை அனுபவிப்பார்கள். மேலும்.

सन्तुष्टो भार्यया भर्त्ता भार्य्या तथैव च ।
यस्मिन्नेव कुले नित्यं कल्याणं तत्र वै ध्रुवम् ॥ மனு. 3. 60.

எந்தக் குடும்பத்தில் ஸ்திரீயுடன் புருஷனும், புருஷனுடன் ஸ்திரீயும் பரஸ்பர விச்வாசத்துடன் நன்குநேசித்துவாழ்கிருர்களோ, அந்தக் குடும்பத்திலேயே ஆனந்தமும், சம்பத்தும், கீர்த்தியும் வாசஞ்செய்யும். எந்தக்குடும்பத்தில் விரோதமும், கலகமும் இருக்கிறதோ அங்கே துக்கமும் தரித்திரத்தனமும் நிந்தையும் வாசஞ்செய்யும். ஆகையினுல் ஆர்யவர்த்தத்தில் பழக்கத்திலிருந்துவந்த "ஸ்வயம்வர" விவாகமேசிறந்தது. இருவருக்குக் கலியாணமாவதற்கு முன் அவர்களுடைய வித்தை வினயம், நடவடிக்கை, ரூபம் ஆயுசு, பலம், குலம், சரீரம், முதலியன வெல்லாம் சரியாயிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். இவைகளினுல் ஒற்றுவராத கலியாணத்தில் சுகம் கொஞ்சங்கூட ஏற்படாது. சிறுவயதில் கல்யாணம் செய்வதினுலும் சுகமுண்டாகாது.

युवा सुवासाः परिवीत आगात्स उ श्रेयान्भवति जायमानः ।
तं धीरासःकवय उन्नयन्ति स्वाध्याः मनसा देवयन्तः ॥ ரிக். 38. 4.

எக்ஞோபவீதம் தரித்து, எல்லாவிதத்திலேயும் சிறந்த பயிற்சி வித்தை, இவைகளைக்கற்றுணர்ந்து, சுந்தரவஸ்திரங்களைத் தரித்து பூர்ணயௌவனத்துடன் கூடின புருஷன் ஒருவனே கிரகஸ்தாச்ரமத்தில் வருகிறுன். வித்யா விருத்தியில் பிரேமையுள்ளவனும், தைர்யத்துடனும் கூடின வித்வான்கள் அப்புருஷனுடைய உன்னத குணத்தைக்கண்டு மெச்சுகிறுர்கள். மேலும் பிரம்மசர்யாச்ரமத்தில் உத்தம வித்தையினுடைய சிக்ஷையைக்கிரகிக்காமல், சிறுவயதிலேயே கலியாணத்தைச்செய்து கொண்டு வருகிறவர்கள் வித்வான்களால் மதிக்கப்படாமல் போகிறுர்கள்.

आधेनवो धुनयन्तामशिश्वीः शबर्दुघाः शशयाअप्रदुग्धाः ।
नव्यानव्या युवतयो भवन्तीर्महद्देवानामसुरत्वमेकम् ॥ ரிக். 3. 55. 16.

எவருலும் கறக்கப்படாத பசுவைப்போலிருக்கிறவர்களாயும், இளம் வயதுடன் கூடினவர்களாயும், சகலவிதமான உத்தமவியவகாரங்களைப் பூர்த்தி செய்தவர்களாயும், குழந்தைப்பருவத்தைத் தாண்டினவர்களாயும், உத்தம பயிற்சி நடவடிக்கை இவைகளினுல் நிறைந்தவர்களாயும் பூர்ண யௌவன பர்வத்திலிருக்கிறவர்களாயும், பிரம்மசர்யம் முதலான நன்நடவடிக்கைகளினுல், சிரேஷ்டமான வித்வான்களாலும் பெரிய புத்திமான்களாலும் எழுதப்பட்ட நூல்களிலிருந்தும், சொல்லப்பட்ட உபதேசங்களிலிருந்தும், தன்னுடைய நடவடிக்கைகளைக்கற்றுணர்ந்த ஸ்திரீகள் யௌவன புருஷர்களை அடைந்து கர்ப்பாதானத்தின் ஜவாப்தாரித்தனத்தை ஏற்றுக் கொள்ளட்டும்.

ஒருக்காலும் இளம்வயதில், புருஷர்களை மனதினுல் கூட பெண்கள் நினைக்கக்கூடாது. ஏனென்ருல் கெடாத அவர்களுடைய நடவடிக்கைகளானது இவ்வுலகில் மாத்திரமன்னியில் பரலோகத்திலேயும் சந்தோஷத்தை உண்டுப்பண்ணும். இளம்வயதில் கல்யாணம் செய்வதினுல் புருஷர்களை விட பெண்களுடைய சரீரம் நாசத்தை அடைகிறது.

உத்தம வித்தை பயிற்சி முதலியவைகளை அடைந்து, பூர்ணஞானத்தை கிரகித்து சந்தானங்களை அடையயோக்கியம் என்று எண்ணி தனக்குச் சமானமாயுள்ள யௌவனஸ்திரீயைமணக்க விரும்பி நூறுவயதுவரையில் பேரன் பேத்திகளோடு இருக்க எப்படி ஒருவன் விரும்புகிருனே அப்படியே ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் செய்தல் வேண்டும். பரஸ்பரம் அடியிற் கண்டவாறு சொல்லிக்கொள்ளவேண்டும்.

पूर्वीरहं शरदः शश्रमाणा दोषावस्तोरुषसो जरयन्तीः । मिनाति श्रियं
जरिमा तनूनामप्यूनु पत्नीर्वृषणो जगम्युः ॥ ரிக். 1. 178. 1.

காலையும் மாலையும், இரவும் பகலும், மனிதர்களின் அழகைக்குறைத்து கிழத்தனத்தை உண்டு பண்ணுகிறபடியால் பூர்ண பிரமசர்யத்தை ஆசரயித்து, பலத்தை விருத்திசெய்து குணத்தை மேன்மைப்படுத்தி மலர்ந்தயௌவன பருவத்தை அடைந்த பின்னரே கலியாணம் செய்வேன்? விவாகங்களுக்கு விரோதமாயுள்ள சித்தாந்தங்களை அனுசரிப்பவர்கள் வேதவிரோதிகள். அவர்களுக்குச் சந்தோஷமென்பதில்லை.

எதுவரையில் அரசர்களும், மகாராஜாக்களும், பிரமசர்யத்தில் வித்தையைக் கற்றுணர்ந்து, ஸ்வயம்வரவிவாகத்தை அனுசரித்து வந்தார்களோ அதுவரையில் இவ்வார்யவர்த்ததேசம்மிகவும் உன்னதஸ்திதியை யடைந்திருந்தது. எப்பொழுதிலிருந்து பிரமசர்யாசிரமத்தில் வித்தையைக்கற்காமல், சிறுவயதிலேயே கலியாணம்செய்து கொள்ளுவதானது பராதீனமாய் அதாவது பெற்ருேர்கள்செய்து வைப்பதாய்விட்டதோ அப்பொழுதிலிருந்தேகிரமமாய் ஆர்ய

வர்க்கத்திற்குக் கேடுவர ஆரம்பித்து விட்டது. ஆகையினால் இந்தக் ஜன்மார்க்கத்தை விட்டு, புத்திமான்கள் யாவரும் மேற்சொன்ன ஸ்வயம்வரவிவாகத்தை அநுசரிக்கவேண்டும். இவ்விவாகம் வர்ணானுக்ரமபிரகாரம் நடக்கவேண்டும். வர்ணவியவகாரங்களைக்கூட குணகர்ம ஸ்வபாவமாய் பார்த்துப்பிரிக்க வேண்டும்.

வினா:—என்ன! தாய் தகப்பன் பிராமணர்களாயிருந்தால் தான் பிள்ளையும்பிராம்மணனா? தாய் தகப்பன் வேறுவர்ணத்தைச்சார்ந்தவர்களாயிருந்தால் அவருக்குப் பிறந்தவர்கள் பிராம்மணர்களில்லையா?

விடை.—ஆமாம் பலர் இருந்திருக்கிறார்கள். இருக்கவும் போகிறார்கள். உதாரணம் ஒன்று எடுத்துக்கொள்ளுவோமானால், சாந்தோக்ய உபநிஷத்தில் அறியமுடியாத பிறப்பையுடைய சத்திய காமஜபாலா பிராமணனார். மகாபாரதத்தில் க்ஷத்திரிய வம்சத்து விச்வாமித்திரர் பிராம்மணனானார். சண்டாளி வயிற்றில் பிறந்த மாதங்கரிஷி பிராம்மணனாயிருக்கிறார்.

இப்பொழுதும் எவர் ஸ்வபாவத்தினால் உத்தம வித்தைகளைக் கற்றுணர்ந்தவராயிருக்கிறாரோ அவர் பிராம்மணன் என்று அழைக்கத் தகுந்தவர். மூர்க்கனுவன் சூத்திரன் என்று அழைக்க தகுந்தவன் இவ்விதமான இயற்கைப்பிரிவு எப்பொழுதும் சரியாயிருக்கும்.

வினா.—சுரோணித சுக்கிலங்கலந்து கர்ப்பந்தரிக்கிறதினால் உண்டான சரீரம் இதர வர்ணத்திற்கு யோக்யமாய் எப்படியாகும்.

விடை.—பிராம்மண சரீர ரம்ரஜோவீர்யத்தினால் உண்டாகிறதில்லை.

स्वाध्यायेन जपैर्होमैस्त्रैविद्येनेज्यया सुतैः ।
महायज्ञैश्च यज्ञैश्च ब्राह्मीयं क्रियते तनुः ॥ மனு. 2. 128.

இதனுடைய அர்த்தம் முந்தியே கூறப்பட்டிருக்கிறது. இங்கேயும் சொல்லுவோம். கற்றல் கற்றுக்கொடுத்தல் விசாரணை செய்தல் செய்யச் செய்தல் நானாவித ஹோமங்களைச்சப்தம் அர்த்தம் சம்பந்தம் ஸ்வரோச்சாரணம் இவைகளுடன் கூடிப்படித்தல், படிக்கச்செய்தல், மேற்சொன்ன விதிப்ரகாரம் பௌர்ணமை முதலான நாட்களில் ஹோமம் செய்தல், நியாயவழியிற் சந்தானோத்பத்திசெய்தல், பிரம்ம யக்ஞம், தேவயக்ஞம், வைஸ்வதேவயக்ஞம், அதிதியக்ஞம், முதலியவைகளையும், அக்னிஷ்டோமாதியக்ஞம், வித்வான்களுடைய சங்கம், சத்காரியம், பரோபகாரம் இவைகளைச்செய்தல் கைத்தொழில்களில் பரிபூர்ணவித்வத்தும், கெட்டாசாரங்களை ஒழித்தல், சிரேஷ்ட ஆசாரத்தைக் கைக்கைக்கொள்ளல், இவைகளெல்லாம் பிராம்மணனைக்குறிக்கிறது.

வினா.—என்ன நீங்கள் இந்தச் சுலோகத்தை நம்பவில்லை போலும்.

விடை:—ஆமாம் நம்புகிறோம்.

வினா.—நீங்கள் எப்படி ரஜோவீர்யத்தினால் வர்ணவ்யஸ்தயையை நம்புகிறீர்கள்.

விடை.—நான் ஒருவனே அவ்விதம் நம்பவில்லை. அநேகர் பரம்பரையாய் அப்படியே நம்பி வந்திருக்கிறார்கள்.

வினா.—நீங்கள் பரம்பரையாய் வருவதைக்கூட கண்டிக்கிறீர்களா ?

விடை.—இல்லை. நீங்கள் சொல்லுவதில் தவறுயிருப்பதை ஒத்துக் கொள்ளாமல் கண்டிக்கிறோம்.

வினா—எங்களது முடிவு தவறு என்றும் உங்களுடையது சரியானதென் றும் கூறுவதற்குப் பிரமாணம் யாது ?

விடை:—ஐந்தாறு தலை முறையாக அனுசரித்து வரும் வழக்கங்களை நீங்கள்புராதனமாக நம்புகிறீர்கள். ஆனால் நாங்களோ உலக சிருஷ்டியிலிருந்து வரும் வேதத்தையே புராதனமாக நம்புகிறோம். இதுவே ஒரு பிரமாணம். பாருங்கள் தகப்பன் சிஷ்டனாயிருந்தால் குமாரன் துஷ்டனாயிருக்கிறான். தகப் பன் துஷ்டனாயிருந்தால் குமாரன் சிஷ்டனாயிருக்கிறான். அநேக போல் சில விடங்களில் இரண்டு பெயர்களும் துஷ்டர்களாகவோ சிஷ்டர்களாகவோயிருக் கிறார்கள். ஆகையினால் நீங்கள் பிரமையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்.

येनास्य पितरो याता येन याताः पितामहाः ।
तेन यायात्सतां मार्गं तेन गच्छन्न रिष्यते ॥ மனு 4. 178.

எந்த வழியைத்தன் தகப்பனும், முன்னோர்களும் தொடர்ந்தார்களோ, அதே வழியைப் பிள்ளைகளும் தொடரவேண்டும். ஆனால் நல்ல வழியாயிருந் தால் மாத்திரம் அதைக் கைக்கொள்ளவேண்டுமே யல்லாது, கெட்டவழியைக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் தர்மாத்மாக்களான புருஷர்களுடைய வழியில் செல்லுவதினால் ஒருபொழுதும் துக்கமேற்படாது. நீங்கள் இதை நம்புகிறீர்களா, இல்லையா?

வினா.—ஆமாம்; நம்புகிறோம்.

விடை.—பரமேச்வரனால் வெளியிடப்பட்ட வேதத்தில் சொல்லப்பட்டி ருக்கிறதெல்லாம் அழிவில்லாதது. அதற்கு விரோதமாக இருக்கிறதெல்லாம் ஒருபொழுதும் நித்தியமாகாது. எல்லோரும் அவ்விதம் நம்பவேண்டாமா?

(வினா) அவசியமாய் நம்பவேண்டும்.

விடை.—அவ்விதம் நம்பாதவர்களைத், தகப்பன் பணமில்லாதவனாயும் மகன்பணமுள்ளவனாயுமிருந்தால் அவன் தன்தகப்பனிடமிருக்கும் அபிமானத் தினால்தன்பணங்களை எல்லாம் ஒழித்துவிடுகிறதாவென்றும், தகப்பன்குருடனா யிருந்தால், குமாரனும் தன்கண்களைக் கெடுத்துக்கொள்ளுகிறதாவென்றும், தகப்பன் அயோக்யனாயிருந்தால் பிள்ளையும் அயோக்யமான கார்யங்களையே செய்ய வேண்டியதுதானா வென்றும், கேட்க்க வேண்டியது.

வினா:—இல்லை, இல்லை. ஆகையினால்கெட்டகாரியங்களை விட்டு நற்கார்யங் களையே செய்வது ஒவ்வொரு புருஷனுடைய அத்யாவச்யமான வேலையாகும்.

விடை:—குண கர்மயோகத்தினுல் அல்லது பிறப்பைக்கொண்டு வர்ணுச்ரமத்தை அநுசரிக்கிறவர்கள் தன்வர்ணத்தை விட்டு, நீசனுகவோ மகம்மதியனுகவோ, கிருஸ்துவனுகவோ திரும்புகிற பிராமணனை ஏன் பிராமணனென மதிக்கிறதில்லை என்று கேட்கவேண்டும். அதற்கு, அவன் பிராம்மண ஸ்வபாவங்களையும், கர்மங்களையும், விட்டு விட்டபடியினுல், தன்னை பிராமணனுகத் தீர்மானிக்கிறதில்லை என்பான். இதினுல், பிராமணுதி உத்தமகர்மங்களைச் செய்கிறவன்பிராமணனென்றும், நீசனெருவன் உத்தமகுண கர்மஸ்வபாவங்களை உடையவனுயிருக்கும் பக்ஷத்தில் அவனை உத்தமவர்ணத்தைச் சார்ந்தவனென்றும், உத்தமவர்ணத்தைச் சேர்ந்தவனெருவன், நீசவர்ணத்திற்கேற்ற காரியங்களைச்செய்வானேயானுல் அவனை நீசனுகவேதீர்மானிக்க வேண்டுமென்றும் விளங்குகிறது.

விணு:— இது யஜுர் வேதத்தினுடைய 30-வது அத்தியாயத்தில் 11-வது மந்திரம்.

ब्राह्मणोऽस्य मुखमासीद्बाहू राजन्यः कृतः ।
ऊरू तदस्य यद्वैश्यः पद्भ्यां शूद्रो अजायत ॥ யஜுர். 30. 11.

ஈஸ்வரனுடைய முகத்திலிருந்து பிராமணர்களும், புஜங்களிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடைகளிலிருந்து வைசியர்களும், பாதங்களிலிருந்து சூத்திரர்களும், முறையே உண்டானுர்களென்பது இதன் கருத்து. எவ்விதம் முகம் கைகளாகவும், கைகள் பாதங்களாகவும், பாதங்கள் தொடைகளாகவும் மாறமுடியாதோ அவ்விதமே பிராமணன் சூத்திரனுகவும், சூத்திரன் வைசியனுகவும், மாறமுடியாது.

விடை:—இந்த மந்திரத்திற்கு நீங்கள் கூறினதுசரியான பொருள் அல்ல. இவ்விடத்தில் “ புருஷ ” என்னும் வார்த்தைக்கு ” ரூபமற்றவறென்றும் சர்வவியாபி ” என்றும் முன்மந்திரத்தினுல் ஏற்படுகிறது. எப்பொழுது ஈசுவரன் ரூபமின்றியிருக்கிருரோ, அப்பொழுது அவருக்கு முகமாவது அல்லது சரீரத்தினுடைய வேறு அங்கங்களாவது எங்கிருந்துவரும்? முகமாவது அல்லதுவேறு அங்கங்களாவது அவருக்கு இருந்தால் அவர் சர்வவியாபி என்பது எங்ஙனம் ஆகும்? வியாபகமன்னியிலிருக்கிறவர், சர்வசக்தியினுயும், சிருஷ்டி கர்த்தாவாயும், ஜீவன்களுடைய பாபபுண்ணியங்களை நிர்ணயிக்கிறவராயும் சர்வக்ஞராயும், ஜன்மமின்றியிருக்கிறவராயும் இறப்பு முதலான விசேஷ ரூபங்களை உடையவராயுமிருக்கமுடியாது? ஆகையினுல் இதனுடைய அர்த்த மென்னவென்றுல் (அஸ்ய) மானிட சரீரத்தில் முகம் எப்படி முக்கியமாயிருக்கிறதோ அப்படியே சர்வ வியாபியாயிருக்கிற பரமாத்மாவின் இச்சிருஷ்டியில் (பிராமண:) எல்லோருக்கும் தலைவனுயும்முக்கியமாயுமிருக்கிறபடியினுல் பிராமணன் முக்கியமாகிருன். (பாஹூ:) பாஹுர்வை பலம்பாஹுர்வை வீர்யம்” (சதபாத பிராம்மணம்) பல வீர்யங்களுக்கு “ பாஹு ” என்று பெயர். அது எவனிடத்திலதிகமாயிருக்கிறதோ அவன் (ராஜன்ய) க்ஷத்திரியன். இடுப்புக்குக் கீழ் பட்டும் தொடைகளுக்குமேலேயுமிருக்கிற பாகத்திற்கு

" ஊரு " என்று பெயர். எவனொருவன் " ஊரு " வினுடைய பலத்தினல் சகல தேசங்களுக்கும் சென்று வருகிருனே அவன் (வைஸ்ய.) வைசியன். (பதப்யாம்) பாதங்களென்றால் நீச அங்கங்களைப்போல் மூர்க்கத்தனம் முதலான குணங்களுடன் கூடினவன் சூத்திரன்.

சத பதத்தில், வேறிடத்தில் இந்த சுலோகத்திற்கு இதேமாதிரி அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது.

यस्मादेते मुख्यास्तस्मान्मुखतो ह्यसृज्यान्त इत्यादि । சதபதபிரா.

முக்கியமாகிறபடியினல், முகத்திலிருந்து உண்டாகிறதென்பது **"சம்கதம்"** அதாவது அங்கங்கள் எல்லாவற்றிலும் முகம் சிரேஷ்டமாயிருப்பதைப்போல், பூர்ணவித்தையினுலும், உத்தமகுணகர்மஸ்பாவத்தினுலும்,மனிதஜாதியில் உத்தமனயிருப்பவனுக்கு பிராம்மணனென்று பெயர். பரமேசுவரன் ரூபமற்றவராயிருக்கிறபடியினுலும், முகத்தைப்போன்ற அங்கங்களில்லாதவராயிருக்கிறபடியினுலும் முகத்திலிருந்து உண்டானர்களென்பது மலடி மக்கள் கல்யாணத்தைப்போல அசம்பவமாகிறது. இதுவுமன்னியில் முகம்முதலான அங்கங்களிலிருந்து பிராம்மணர் முதலானவர்கள் உண்டாயிருக்கும் பக்ஷத்தில் அந்தந்தஅங்கங்களின் உருவங்களையேஅவர்கள் அடையவேண்டும். பிராமணர்களுடைய உருவம், முகத்தைப்போல் வட்டமாயிருக்க வேண்டும். க்ஷத்திரியர்கள் கைகளைப்போலவும், வைசியர்கள் துடைகளைப்போலவும், சூத்திரர் பாதங்களைப்போலவும் முறையே இருக்கவேண்டு மல்லவா?. அங்ஙனம் இல்லை. முகம் முதலான அங்கங்களிலிருந்து உண்டாகிறபடியினல், பிராம்மணர் முதலானவர்களை அவ்விதமே அழைக்கவேண்டுமென்று சொல்லுவாய். ஆனல் எல்லோரையும்போல் நீயும் ஒரு ஸ்திரீயுடைய கர்பதானத்திலிருந்து உண்டானபடியினல், அப்படி அழைத்துக்கொள்வது சரியல்ல. முகம் முதலான அங்கங்களிலிருந்து நீங்கள் உண்டாகாமலிருந்துகொண்டு பிராம்மணனென்றழைத்துக் கொள்ளப் பிரியப்படுகிறீர்கள். ஆகையினல் உங்களுடைய அர்த்தம் வியர்த்தமானது. நாங்களுரைத்த அர்த்தத்தையே சரியானதென்று உரைக்கவேண்டும். இவ்விஷயத்தில் மனுமுதலானவர்களும் அவ்வண்ணமே சொல்லுகிறார்கள்.

शूद्रो ब्राह्मणतामेति ब्राह्मणश्चेति शूद्रताम् ।
क्षत्रियाज्जातमेवन्तु विद्याद्वैश्यात्तथैव च ॥ [மனு 10. 65.

சூத்திர குலத்திலுதித்தபோதிலும், பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்களுடைய குணம், கர்மம், ஸ்பாவம் இவைகளை உடைத்தாயிருந்தால், அவன் பிராம்மணனுகவோ, க்ஷத்திரியனுகவோ, வைசியனுகவோ முறையே ஆகிருன். சூத்திரனைப்போல் குணகர்மஸ்வபாவங்களைக்கொண்டிருந்தால் அவன் சூத்திரனுகிருன். அவ்வண்ணமே க்ஷத்திரியகுலத்திலாவது, வைசியகுலத்திலாவது உதித்துப் பிராமமணனைப்போலாவது சூத்திரனைப்போலாவது நடந்தால் அவன் சூத்திரனுகவாவது, பிராம்மணனுகவாவது ஆகிருன்.

ஆகையினுல் நான்கு குலத்திலேயும் எந்தெந்தக் குலத்திற்குச்சமான மான ஸ்திரீபுருஷர்களிலிருக்கிறார்களோ, அவர்களை அந்தந்தக்குலத்திலேயே சேர்க்கவேண்டும்.

धर्मचर्य्यया जघन्यो वर्णः पूर्वं पूर्वं वर्णमापद्यते जातिपरिवृत्तौ ॥

अधर्मचर्य्यया पूर्वो वर्णो जघन्यं जघन्यं वर्णमापद्यते जातिपरिवृत्तौ ॥

இது ஆபஸ்தம்ப சூத்திரத்திலிருக்கிறது. ஈனமாய்த் தள்ளப்பட்டவர்கள் தர்மத்தினுடைய ஆசாரணத்தினுல் உத்தமகுலத்திற் கேற்றவருகிறார்கள். எந்தக்குலத்திற்கு ஒருவன் யோக்கியனே அவனை அதே குலத்தில் ஏற் படுத்த வேண்டும். அதேமாதிரி அதர்மங்களினுடைய ஆசரணத்தினுல் ஒருவன் நீசவர்ணத்தை யடைகிருன். அவனை அந்த நீசவர்ணத்தைச்சார்ந்த வனுகவே பாவிக்கவேண்டும். எவ்விதம் அதர்மங்களுடைய ஆசரணத்தினுல் புருஷர்கள் நீசவர்ணத்தையடைகிறார்களோ அவ்விதமே ஸ்திரீகளும். இதனுல் என்ன ஏற்படுகிறதென்ருல், சகல வர்ணத்தைச்சேர்ந்தவர்களும் அவரவர்க ளுடையகுணகர்மஸ்வபாவத்துடன் கூடினவர்களாய், பரிசுத்தமாகஆகிறார்கள். அதாவது பிராம்மணகுலத்தில் வைசியன், க்ஷத்திரியன் சூத்திரனிருக்கக் கூடாது. க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்திரர்களும், சுத்தமாயி ருக்கக்கூடும். இதினுல் எந்தவர்ணத்திற்காவது நிந்தையும், கெட்டப்பெயரு மேற்படாது.

வினு.—ஒரு குடும்பத்திலுள்ள ஒரே பிள்ளை அல்லது பெண்ணுவது, வேறு வகுப்பில் சேரின், அக்குடும்பத்தாரை ரக்ஷிக்க யார் உதவு வார்கள். குடும்பமும் இத்துடன் நசித்துவிடாதா?

விடை.—இதனுல் ஒருவனுடைய சேவைக்குப்பங்கமாவது வம்சநாசமா வது உண்டாகாது. ஏனென்ருல் தன்பெண்ணினுடைய ஸ்தானத்திற்கோ பிள்ளையினுடைய ஸ்தானத்திற்கோ, வர்ணத்திற்கேற்ற வேறு குழந்தைகளை *இராஜசபையோ, ஜனசபையோ, கொடுக்கும். ஆகையினுல் சமூ கஹீனம் ஒன்றும் ஏற்படாது. இம்மாதிரி குணம், கர்மம், ஸ்வபாவம் இவைகளினுல் வர்ணவியவகாரத்தை ஸ்திரீகளுக்குப் பதினுறுவயதி லேயும், புருஷர்களுக்கு இருபத்தைந்துவயதிலேயும் ஏற்படுத்த வேண்டும். இவ்விதமே பிராம்மணன் பிராமண ஸ்திரீயையும், க்ஷத்திரியன் க்ஷத் திரியையும், வைசியன் வைசிய ஸ்திரீயையும் மணம்புரிந்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அவரவர்கள் தங்கள் தங்களுடைய வர்ண தர்மங்களைச் சரிவரநடத்திப் பரஸ்பரபிரேமையுடன் வாழக்கூடும்.

நான்கு ஆசிரமங்களினுடைய விதிகள்.

கீழ்க்கண்டவைகள் நான்கு ஆசிரமங்களினுடைய குணகர்மங்களாகும்.

பிராம்மணர்களுடைய கடமை.

अध्यापनमध्ययनं यजनं याजनं तथा ।

दानं प्रतिग्रहश्चैव ब्राह्मणानामकल्पयत् ॥ மனு I. 88.

* இச்சபைநிர்மாணத்தைப்பற்றிய விபரங்களுக்கு ஆருவது அத்தியாயத்தைப்பார்க்கவும்.

படிப்பது, படிக்கச்செய்வது, யாகம் செய்வது, செய்விப்பது, தானங் கொடுப்பது, வாங்கிக்கொள்வது. இவ்வாறும் பிராமணன் ஒருவனின் கடமை ஆனால் மனுநீதிப்படி " ப்ரதிக்ருக ப்ரத்யவா. " அதாவது தானம்வாங்கிக் கொள்ளுவது இழிவான காரியம்.

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।

ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ॥ பகவத்கீதை 18. 42.

(சம.) மனதினாலேயும் கெட்ட காரியங்களை நினைக்கக்கூடாது. அதாவது அதர்மமான காரியங்களுக்கு மனதில் ஒருபொழுதும் இடங்கொடுக்க கூடாது. (தம) காது, கண் முதலான இந்திரியங்களை அநியாய காரியங்களிலிருந்து விலக்கி தர்மத்திலேயே பிரவேசிக்கச்செய்கிறது (தப.) எப்பொழுதும் பிரம சர்யத்தினால் இந்திரியங்களை அடக்கி தர்மத்தை அனுஷ்டித்தல். (சௌசம்).

अद्भिर्गात्राणि शुध्यन्तिमनः सत्येन शुध्यति ।

विद्यातपोभ्यां भूतात्मा बुद्धिर्ज्ञानेन शुध्यति ॥ மனு 5. 109.

ஜலத்தினால் வெளி அங்கங்களும், உண்மையான மொழியினால் மனதும் வித்தையினாலும் தர்மானுஷ்டத்தினாலும் ஜீவாத்மாவும், ஞானத்தினால் புத்தி யும் முறையே பரிசுத்தமாகின்றன. அதாவது உள்ளே பகைமைகளைப்போன்ற கெடுதல்களைவிட்டுவிட்டு வெளியில் சத்தியம் அசத்தியம் இவைகளை அறிவின் மூலமாக தெறிந்து அசத்தியத்தை ஒழித்து சத்தியத்தைகைக்கொள்வதினாலே நிச்சயமாய் பரிசுத்தனாகலாம். (க்ஷாந்தி) நிந்தை, ஸ்துதி, சுகதுக்கம், சீதோஷ் ணம், பசி, தாகம், கேடு, லாபம், மானம், அவமானம், முதலான சுக துக்கங்களை விட்டுவிட்டு தர்மத்திலேயே திருடசிந்தையுடனிருப்பது (ஆர்ஜவம்). அபிமான மன்னியிலிருப்பது, திரும்பக்கூடிய ஸ்வபாவத்தை உடைத்தாயிருப்பது, குருட்டு எண்ணம் முதலானவைகளை விட்டுவிடுவது (ஞானம்). சகலவேதாதி சாஸ்திரங்களை அடி முதல் கடைவரையில் படிக்கிறது, படிக்கச்செய்கிறது, விவேகத்துடன் சத்தியாசத்தியத்தை ஏற்படுத்துகிறதும் எந்தப்பொருள் எப் படியிருக்கிறதோ அதை அப்படியே அதாவது ஜடபதார்த்தங்களை ஜடபதார்த் தங்களாக அறிகிறதும் அவ்விதமே ஏற்றுக் கொள்ளுகிறதும் (விக்ஞானம்). அணு முதற்கொண்டு பரமேச்வரன் பரியந்தமுள்ள சகல பொருள்களினு டையவிசேஷங்களைச் சரியாய் அறிந்தும் அவைகளை நேரான விதிப்படி உபயோகித்தலும் (ஆஸ்திக்யம்) ஒருபொழுதும், வேதம், ஈச்வரன் முக்தி, பூர்வஜன்மம் அபரஜன்மம், தர்மம், வித்தை சத்சங்கம், தாயார், தகப்பனார், குரு, அதிதிஇவர்களுக்குச் சேவைப்புறிவதை விடாமலும், எந்நாளும் நிந்திக் காமலும் இருத்தலேயாம். இந்த பதினைந்து குணகர்மங்களை பிராமணகுலத் தினர்கள் அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

க்ஷத்திரியர்களின் கடமைகள்.

प्रजानां रक्षणं दानमिज्याध्ययनमेव च

विषयेष्वप्रसक्तिश्च क्षत्रियस्य समासतः ॥ மனு 1. 89.

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम्।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥ பகவத்கீதை 18. 43.

இந்தப் பதினொன்றும் க்ஷத்திரிய குலத்தினுடைய குணகர்மங்கள். (1) (ரிக்ஷணம்) நியாயமாய் குடிகளைக்காப்பாற்றுகிறது. அதாவது வஞ்சனையின்றி சிஷ்டர்களை ஆதரித்து துஷ்டர்களை தண்டித்துச் சகலவிதத்திலேயும் எல்லோரையும் காப்பாற்றுதல் (2) (தானம்) வித்தியா தர்மங்களைப் பரவச் செய்தல் நன்னடையிற் சிறந்தோர்களுக்குச் சேவைச்செய்தல், தனம் முதலான பொருள்களைச்செலவுசெய்தல் (3) (இஜ்யா) அக்னிஹோத்திரமுதலான யாகங்களைச்செய்தல் (4) (அத்யயன) வேத சாஸ்திரங்களைப்படித்தல் (5). (விஷயேஷ்ரீ) விஷயசுகங்களில் பிரவேசிக்காமல் இந்திரியங்களை அடக்கி, எப்பொழுதும் சரீரத்தையும், ஆத்மாவையும் பலமாய்வைத்துக்கொள்ளல்.(மனு) (6) (சௌர்யம்) ஆயிரக் கணக்கான சைனியங்களுடன் தனியாகப்போர் செய்யப்பயமின்றியிருத்தல் 7 (தேஜ) எப்பொழுதும் தேஜஸ்வியாய் அதாவது அற்பவிஷயங்களை எல்லாம் விட்டு பெருந்தன்மையைக்கைப் பிடித்தவனுயிருத்தல் (8) (திருதி:) தைரியவானுயிருப்பது (தாக்ஷ்யம்) அரசன், குடிகள் இவர்களைச்சார்ந்த சகல வியவகாரங்களிலும், சகல சாஸ்திரங்களிலும், வெகு நிபுணனுயிருத்தல் (10) (யுத்தே) போர்களத்தில் திறமையாயும் சந்தேகமன்றியும் இருந்துகொண்டு ஒருபொழுதும் தளர்வுறுமல் எதிர்த்தல்; அதாவது, நிச்சயமாகத்தன் பக்கத்திற்கே வெற்றி வரும்படியாகச் சண்டைசெய்து தன் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளல் அதாவது சமயம் வாய்த்தபோது சத்ருக்கள் முன்னுலேயிருந்து பதுங்குவதுபோல் பதுங்கி ஜாடைகாட்டிக் கபடத்தனமாய் வெற்றி யடைதல் (11) (தானம்) தானசீலனுயிருத்தல் (ஈச்வாபாவ) பக்ஷபாதமன்னியில் எல்லோரோடும் சரியாய்ப் பழகுதல் வாக்கை ஒருநாளும் கெடுக்காமல் பூர்த்திசெய்தல்; இவை பதினொன்றும் க்ஷத்திரிய குலத்தினுடைய குணங்களும் கர்மங்களுமாகின்றன.

வைசியர்களின் கடமைகள்.

पशूनां रक्षणं दानमिज्याध्ययनमेव च ।
वाणिक्पथं कुसीदं वैश्यस्य कृषिमेव च ॥ மனு 1. 90.

(பசுரக்ஷா) பசுமுதலான கால்நடைகளை காப்பாற்றிவளர்த்தல் (தான) வித்தை, மதம் முதலியவைகளைப் பரவச்செய்வதிலேயே, தனம் முதலானவைகளைச் செலவழித்தல் (இஜ்யா) அக்னிஹோத்ராதி யாகங்களைச்செய்தல் (அத்யயனம்) வேதாதி சாஸ்திரங்களைப் படித்தல் (வணிகப்த) சரியாய் வியாபாரம் செய்தல் (குசீத) வருஷத்திற்கு நான்கு ஐந்து, ஆறு, எட்டு, பன்னிரண்டு, இருபது அணுக்களைவிட அதிகமாய் வட்டிவாங்கிக்கொள்ளாமல் முதலுக்கு இரண்டு மடங்கிற்குமேல் அதிகமாய் அதாவது 100 வருஷமான போதிலும் ஒருரூபாய்க்கு இரண்டு ரூபாய்க்குமேல் வட்டிவாங்கிக்கொள்ளவும் கூடாது. கொடுக்கவுங்கூடாது (க்ருஷி) உழுதல், இவைகள் எல்லாம் வைசியர்களுடைய குணகர்மங்களாம்.

சூத்திரர்களுடைய குணகர்மங்கள்.

एकमेव तु शूद्रस्य प्रभुः कर्म समादिशत् ।
एतेषामेव वर्णानां शुश्रूषामनसूयया ॥

மனு I. 91

குறைகூறுதல், கோபித்தல், கர்வங்கொள்ளுதல், முதலான கெட்ட நடவடிக்கைகளைவிட்டு பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியன் ஆக இவர்களுக்குச் சேவை செய்வது. அதனால் தான் ஜீவனம் செய்வதுமே சூத்திரனின் குணகர்மமாகும்.

இவ்விதமாகச் சுருக்கமாய்க் குலங்களினுடைய குணங்கள், கர்மங்கள் எழுதப்பட்டுள்ளது. எவரெவரிடத்தில் எந்தெந்தக்குலத்தினுடைய குணகர்மங்களிருக்கிறதோ அவர்களை அந்தந்தக்குலத்திலேயே ஸ்தாபிக்கவேண்டும். இக்காரணத்தினால் மானிடர்கள் யாவரும் உன்னதஸ்திதியை அடைவார்கள். எப்படியென்றால், தங்களுடைய மக்கள் மூர்க்கத்தனம் முதலான கெடுதல்களுடன் கூடினவர்களாய் சூத்திரர்களாய் போவார்களென்னும் அச்சத்தினால் நல்ல குலத்தையே தேடுவார்கள். அப்படியே சந்ததிகளும் எங்கே தாங்கள் படிக்காமற் போய்விட்டால் சூத்திரர்களாய்ப்போய்விடுவோமோ என்னும் அச்சத்தினால் மேலான குலத்திலேயே இருக்கப் பிரயத்னப்படுவார்கள். இதுவுமன்றி தாழ்ந்த குலத்தவர்கள் உயர்ந்த குலத்தையடைய பிரியப்பட்டு முயற்சிப்பார்கள்.

பிராமணர்கள் கற்றுணர்ந்த வித்வசிரேஷ்டர்களாயும், தருமசிந்தையுடையவர்களாயு மிருக்கிறபடியினால், அவர்களையே வித்தையையும், தர்மத்தையும் பரவச்செய்வதற்கு நியமிக்கவேண்டும். க்ஷத்திரியர்களுக்கு இராஜயத்தினுடைய அதிகாரத்தைக் கொடுப்பதினால் எப்பொழுதும் இராஜ்யத்திற்குக் கேடு நேரிடாது. ஜீவன்களைக் காப்பாற்றுகிற வேலையைவைசியர்களிடம் ஒப்பிவிக்கவேண்டும். ஏனென்றால் இக்காரியம் அவர்களாலேயே நன்றாய் முடியும். சூத்திரர்கள் வித்தையற்றவர்களாயும், மூர்க்கர்களாயுமிருக்கிறபடியினால் மேற்கூறியமூவர்களுக்குஞ் சேவைச்செய்யும் வேலையையே கொடுக்கவேண்டும். மேலும் காயபலத்தினால் செய்யகூடிய காரியங்களையும் அவர்களுக்கே அளிக்க வேண்டும். இம்மாதிரி அந்தந்த குலத்தினுடைய அதிகாரங்களை அரசன் முதற்கொண்டு குடிகள் வரையில் நடத்திவர வேண்டியது.

எண் வகை மணம்

ब्राह्मो दैवस्तथैवार्षः प्राजापत्यस्तथाऽसुरः ।
गान्धर्वो राक्षसश्चैव पैशाचश्चाष्टमोऽधमः ॥

மனு 3. 21

விவாகங்கள் எட்டு விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன:— (1) பிரம்மா (2) தெய்வ (3) ஆர்ஷம் (4) பிரஜாபத்யம் (5) ஆசுரம் (6) காந்தர்வம் (7) இராக்ஷசம் (8) பைசாசம். இவைகளின் விவரங்களாவன:—

(1) பெண், பிள்ளை, இருவர்களும் சரிவர பிரம்ம சர்யாச்ரமத்தில் பூர்ண மான வித்தையைக்கற்று தர்மிஷ்டர்களாயிருந்து, இருவருக்கும் பரஸ்பரப் பிரேமையுடன் நடக்கும் கலியாணத்திற்கே "பிரம்ம" என்றும் பெயர். (2) பெரிய யாகமொன்றில் பிள்ளை, யாக கர்த்தாவாயிருக்கும்பொழுது பெண்ணை அலங்கரித்து அவரிடம் கொடுப்பதற்கே "தெய்வ" என்று பெயர். (3) மண மகனிடமிருந்து ஏதாவதுபெற்றுக்கொண்டுகலியாணம்செய்வதற்கே "ஆர்ஷம்" என்று பெயர். (4) தருமத்தை முன்னிட்டு (மதத்தை) அதன் அபிவிருத்திக் காக செய்யும் விவாகத்திற்கு "ப்ராஜாபத்யம்" என்றுபெயர் (5) மணமகனிட மிருந்தாவது மணமகளிடமிருந்தாவது ஏதாவது வரும் என்கிற எண்ணத் துடன் செய்யும் விவாகமே "ஆசுர" மாகும் (6)காலம் சமயம் இவை இரண்டு மன்னியில் இருவர்களுமிஷ்டப்பட்டு எதுவோ ஒரு காரணத்தைக்கொண்டு நடக்கும் கல்யாணத்திற்கே "காந்தர்வம்" என்று பெயர். (7) சண்டைச்செய்து பலாத்காரமாய் அதாவது அச்சங்காட்டியாவது அல்லது கபடத்திலைாவது ஒருபெண்ணை அபகரித்துக் கலியாணம் செய்து கொள்வதற்கு "ராக்ஷசம்" என்றுபெயர். (8) தூக்கத்திலிருக்கிற அல்லது குடி முதலான வெறி மயக்கத் தில் இருக்கிற அல்லது அறிவிழந்திருக்கிற ஒருபெண்ணை பலாத்காரமாய்ச் சேருவதற்கு "பைசாச" மென்று பெயர். இவ்விதமான சகலவிவாகங்களுக் குள் "பிரம்ம" விவாகம் மிகவும் மேலானது. தேய்வமும் பிராஜாபத்யமும் நடுத்தரமானது. "ஆசுரம்" "ஆர்ஷம்" "காந்தர்வம்" இவைகள் மூன்றும் கெட்டது "இராக்ஷசம்" இழிவானது "பைசாசம்" மிகவும் இழிவானது.

பெண்ணும், பிள்ளையும் தனியாய் விவாகத்திற்கு முன்னமே சந்திக்க கூடாதெனறும், அப்படிச்சந்திப்பதினால் இளமை கெட்டுப்போய் விடு கிறதென்பதும் இதனால் விளங்குகிறது. பெண்ணுக்காவது, பிள்ளைக்காவது விவாக சமயத்திற்கு முன்னாலே அதாவது பிரம்மசர்யாச்ரமத்தி னுடைய படிப்பு முதலானவைகள் முடிவதற்கு ஒருவருஷத்திற்கோ, ஆறுமா சத்திற்கோ முன்னாலே பிள்ளையினுடைய பிரதி பிம்பத்தை(போட்டோகிராபை) வித்தியாலயத்தினுடைய தலைவிக்கும், பெண்ணினுடைய பிரதிபிம்பத் தை, பிள்ளைகள்கலாசாலை தலைவனுக்கும் அனுப்புதல்வேண்டும். எவரெவர்களு டைய ரூபங்கள் சேருகிறதோ அவரவர்களைத்தேர்ந்தெடுத்துப்பிறகு அவரவர் களுடைய குணகர்மம் ஸ்பாவம் இவைகளை அறிய அவர்கள் பிறப்பிலி ருந்து அன்றைத் தேதிவரையிலுமுள்ள ஜீவிய சரித்திரத்தைப் பார்க்க வேண்டும். அவர்களுடைய குணகர்மங்கள் ஒன்று சேர்ந்து ஒத்திருக்குமானால் அப்பொழுது அந்தஇருவர்களுடைய பிரதிபிம்பம் ஒவ்வொன்றைஇருவருக்கும் அனுப்புதல் அவசியம். அவ்விருவருக்கும் இசைந்து விட்டால் அப்பொழுது தங்கள் எண்ணங்களைத்தங்கள் தங்கள் தலைமை உபாத்தியாயர்களுக்கு அவர் கள் தெரிவிக்கவேண்டும். அவர்கள் இருவரும் பரஸ்பரம் விவாகம் செய்து கொள்ள இசைந்துவிட்டால், இருவரும அதேசமயத்தில் படிப்பை முடித்துக் கொண்டு வீட்டிற்குத்திருப்பவேண்டும். அல்லது அவர்களிருவரும் தங்கள் விவாகத்தைக் குருவின்முன்னாலேயே முடிக்கவேண்டும், என்று பிரியப்பட்

டால் அவ்விதமும் செய்யலாம். அவ்விதமில்லாவிடில் மணமகளினுடையவீட்டிலேயேவிவாகத்தை நடத்துவது நலம். மணமகனும், மணமகளும், நேருக்கு நேராயிருக்கும்பொழுது உபாத்தியாயர்களாவது அல்லது மணமகளின் பெற்றோர்களாவது அவர்களிருவரையும், ஜனங்களின் முன்னிலையில் பேசும்படியோ, வாதஞ்செய்யும்படியோ செய்யவேண்டும். இரகஸ்ய சமாசாரமாயிருக்கும் பக்ஷத்தில் நல்ல ஜனங்களின் முன்னிலையில் காகிதத்திலெழுதச் சொல்லி இருவர்களிடமும் கொடுத்து ஈவேண்டுமானால் கேள்வி கேழ்க்கச் சொல்லவும். கலியாணத்தினால் அவர்களிருவருக்கும் இணைவிடா விசுவாசம் ஏற்படும்பொழுது அவர்களுடைய பெரியோர்கள் பிரமசர்யாச்ரமத்தினுடைய படிப்பின் கஷ்டத்தினால் மெலிந்து இளைத்திருக்கும் அவர்கள் சரீரத்தை வளர்பிறை சந்திரன்போல் கொஞ்சநாளில் விருத்திசெய்ய நல்ல ஆகாரங்களைக்கொடுக்கவேண்டும். பிறகு பெண் ரஜஸ்வலையாய், (பருவம்) சுத்தமான பிறகு, மண்டபம் ஒன்று ஏற்படுத்தி அதில் நல்லவாசனைகளையுடைய மூலிகைகளினாலும், நெய்யினாலும் ஹோமஞ்செய்து, கற்றுணர்ந்த புருஷர்களையும் பெண்களையுமழைத்துத்தக்க மரியாதையுடன் ஏற்கவேண்டும். பிறகு சமஸ்காரவிதியில் சொல்லியபிரகாரம் நடு இரவிலாவது, அல்லது இரவு பத்துநாழிகையிலாவது எல்லாக் கர்மங்களையும் செய்தபிற்பாடு எல்லாருடைய முன்னிலையில் பாணிக்கிரஹணம் செய்து தனிமையாய் ஓர் இடத்தில் ஏகாந்தமாயிருக்கச்செய்யவேண்டும். புருஷர்கள் வீர்யஸ்தாபனத்தையும், ஸ்திரீகள் வீர்யாகிருஷ்ணத்தையும் விதிப்பிரகாரம் அனுசரித்தல் வேண்டும். எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு காலம்வரையில் வீர்யத்தைக்காப்பாற்றல் வேண்டும். இவ்வளவு தூரம்காப்பாற்றி பிறந்தகுழந்தையே சால சிறந்தகுணமுள்ளவனாகிறான். வீர்யம் கர்ப்பத்தில் பிரவேசிக்குந்தருவாயில் ஸ்திரீ புருஷர்கள் அசைவற்றிருந்துகொண்டு மூக்கில்மூக்கையும் கண்ணில் கண்ணையும், அமர்த்தி எல்லா அவயவங்களை கோணலில்லாமல் வைத்து சந்தோஷத்துடன் இருத்தல் வேண்டும்.* அவயவங்களை அசைத்தல்கூடாது. வீர்யத்தைகிரகிக்கும்போது அபானவாயுவை மேல் இழுத்தல் வேண்டும். பிறகு அதை கர்ப்பாசயத்தில் இறுத்த யோனி சங்கோசம்செய்ய வேண்டும். பரிசுத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்தல் வேண்டும். படித்தஸ்திரீ அப்பொழுதே கருத்தரித்ததை உணர்ந்துவிடுகிறாள். மாதத்தீட்டு காணாததிலிருந்து மற்றவர்களும் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

கர்ப்பகால ஒழுக்கம்.

ஸ்நானம் செய்த பிறகு சுக்கு, கஸ்தூரி, கிராம்பு, சாலாமிசிரி இவைகளைக்கலந்து காய்ச்சின பாலைத்திருப்தியாக இருவரும் அருந்தி, தனித்தனியாகப் படுத்துக்கொள்ளவேண்டும். எக்காலங்களில் கர்பாதானம் செய்ய இஷ்டமிருக்கிறதோ அக்காலங்களில் இம்மாதிரி செய்யவேண்டியது. எப்பொழுது ஒரு மாசத்திற்கப்புரம் மாதவிடா நின்றுவிட்டதோ, கர்ப்பதானத்தை அது குறிக்கிறபடியினால், புருஷனும் மனைவியும் ஒருவருட பர்யந்தம்

* இது இரகசியமானபடியினால் அதிகம் எழுதுவது உசிதம் இல்லை.

ஒன்று சேரக்கூடாது. ஏனென்றால் அப்படிச்சேராமலிருப்பதனால் பிறக்கும் பிள்ளை நன்றாயிருக்கும். அதுவுமன்னியில் இரண்டாந்தடவை பிறக்கும் குழந்தையும் முதல் குழந்தையைப்போல் நன்றாயிருக்கும். அப்படிச்செய்யாவிடில் வீர்யம் பிரயோஜனமில்லாததாகி இருவர்களுடைய ஆயுளுங்குறைந்து ரோகங்களுக்கு இடங்கொடுக்கிறது. ஆனால் இரண்டுபெயர்களும் நேசத்துடன் வசிக்கவேண்டும். புருஷன் தன்னுடைய கனவிலும்கூட வீர்யத்தை நஷ்டம் செய்துக் கொள்ளக்கூடாது. சர்வசாதாரணமாய், கர்ப்ப காலத்திலிருக்கும் குழந்தை அதி ரூபலாவண்யத்துடன் புஷ்டியுடனும், பலத்துடனும், பராக்கிரமத்துடனும், பத்துமாசத்திற்கப்பிறகு சுக ஜனனமாகும்படி செய்யவேண்டும். கர்ப்பபாதங்களில் நான்காவதையும், பத்தாவதையும் வெகுகவனத்துடன் காப்பாற்றவேண்டும்.

கர்ப்பகால உணவு.

ஒருபொழுதும் கர்ப்பஸ்திரீ ஒருவள் காரமானபதார்த்தங்களையாவது, மயக்கத்தைக்கொடுக்கக் கூடியபதார்த்தங்களையாவது, பலத்தையோ, புத்தியையோ நாசஞ் செய்கிற பதார்த்தங்களையாவது உட் கொள்ளக்கூடாது. ஆனால் நெய், பால், நல்ல கோதுமை, பழம், உளுந்து,பயிறு முதலான அன்னபானாதி வஸ்துக்களை உட்கொள்ளலாம்.

ஜாதகர்மம்.

கர்பசமயத்தில் இரண்டு சம்ஸ்காரங்களுண்டு.

நான்காவது மாசத்தில் **பும்சவனமென்று** பெயர். மற்றொன்று எட்டாவது மாசத்தில் **சீமந்தகல்யாணம்.** இவைகளை விமரிசையாய் நடத்தவேண்டும். எப்பொழுது குழந்தை பிறக்கிறதோ அப்பொழுதிலிருந்தே தாய் குழந்தை இருவர்களுடையசுகத்தையும் ஜாக்கிறதையாய்க்கவனிக்கவேண்டும். அதாவது பிரசவத்திற்கு முன்னால் "சுண்டீபாகம்" என்னும் சுக்குகஷாயமோ அல்லது "சௌபாக்கிய சுண்டீபாகம்" என்னும் சுக்கினால்செய்யப்பட்டவைவையோ தயாராயிருக்கவேண்டும். பிரசவமான பிறகு நல்ல வாசனையுடன்கூடி ஆரின வெந்நீரில் தாயாரையும் குழந்தையையும் ஸ்நானம் செய்துவைக்கவேண்டும். அதற்குப் பிறகு தொப்புளை அறுக்கவேண்டும் அதாவது நான்கு விரல்களிலும் சன்னமானகயிறு ஒன்றைக்கட்டிக் கொண்டு தொப்புளினுடைய அடியிலிருந்து, ஒரு துளி உதிரமேனும் கீழே விழாமல் அறுக்கவேண்டும். அப்புறம் பிரசவித்த அறையை நன்றாய்ப்பெருக்கி சுத்தம் செய்து, நல்ல வாசனைகளுடன் கூடின நெய் முதலானவைகளுடன் அங்கு ஹோமம் செய்யவேண்டும். அதன் பிறகு அக்குழந்தையினுடைய காதில் அதன் தகப்பனார் "வேதோஸி (உன்பெயர் வேதம்) என்றுச் சொல்லி, தங்கக்கம்பியின் நுணியினால் பரமாத்மாவின் நாமமாகிய "ஓம்" என்னும் மொழியை, நெய்யும் தேனும் கலந்ததில் தோய்த்து அதை அதனுடைய நாக்கிலெழுதி, குழந்தையை நக்கவிட வேண்டும். பிறகு குழந்தை யைத் தாதி வசம் விடுதல் முறையாகும். இஷ்டப்பட்டால்

குழந்தைக்குப்பால் கொடுக்கலாம். அப்படி குழந்தையுடைய தாயாருக்குப் பாலில்லாவிடில், பரிக்ஷை செய்த தாதி ஒருவளை ஏற்பாடு செய்துகொள்ளலாம். பிறகு காற்றோட்டமுள்ள வேறு நல்ல அறையில் தாயையும், குழந்தையையும் கடத்தித்தினந்தோறும் காலை, மாலை, இருபொழுதும் ஹோமம் செய்யவேண்டும். முதல் ஆறுநாளைக்கு குழந்தைக்குத் தாயாரே பால் கொடுக்கவேண்டும். மேலும் தாயாரும் தன்னுடைய சரீர புஷ்டிக்குத்தகுந்த பலவித மேன்மையான போஜனங்களையே உட்கொள்ளவேண்டும். யோனியை ஆற்றி கர்ப்பாசயத்தை முன்னிருந்தநிலைமைக்கு கொண்டுவரவேண்டும். ஆறுவதுநாளில் தன்னுடைய இருப்பிடத்தைவிட்டு தயார் வெளியே வரவேண்டும். வெளியில் தன்குழந்தைக்குப்பால் கொடுக்க பாலுள்ளதாதி ஒருவளை அமர்த்திக்கொள்ளவேண்டும். அவளை நன்றாய் போஷிக்கவேண்டும்.

ஆனால் தாயார் குழந்தையின் பேரிலேயே கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டும். எவ்விதமான கெட்டஸ்வபாவங்களையும் குழந்தையைப்போஷிக்கிற விஷயத்தில் காட்டக்கூடாது. முலைக்காம்பில் கொஞ்சம் மருந்து சாமான்களைப் போட்டு பாலைக்கட்டிக்சொஞ்சங்கொஞ்சமாய் சுரக்க ஏற்பாடுச்செய்ய வேண்டும். இதேமாதிரி தன்னுடைய சாப்பாட்டு விவகாரங்களையும் மட்டுக்கட்ட வேண்டும். பிறகு நாமகர்ணம் முதலான சடங்குகளைச் “ சமஸ்காரவிதி ” என்னும் நூலில் கூறியிருக்கும் பிரகாரம் நடத்தவேண்டும். ஸ்திரீ மறுபடியும் ரஜஸ்வலையாய் சுத்தமான பிறகு அதே மார்கத்தை அநுசரித்து ருதுதானத்தைச்செய்யவேண்டும்.

ऋतुकालाभिगामी स्यात्स्वदारनिरतः सदा ।
पर्ववर्जं व्रजेच्चैनां तद्व्रतो रतिकाम्यया ॥ மனு 3. 45.

निन्द्यास्वष्टासु चान्यासु स्त्रियो रात्रिषु वर्जयन् ।
ब्रह्मचार्य्येव भवति यत्र तत्राश्रमे वसन् ॥ மனு 3. 50.

எப்புருஷன் தன் ஸ்திரீயுடன் சந்தோஷமாய், தடுக்கப்பட்ட இரவுகளில் தேகசம்பந்தம் செய்யாமல் தூரமாயிருந்து, ருதுகாமியிருக்கிறானோ, அப்புருஷன் கிரகஸ்தனாயிருந்தபோதினும் பிரமசாரிக் குச்சமானமானவன்.

இல்லறநேசம்.

सन्तुष्टो भार्यया भर्त्ता भर्त्रा भार्या तथैव च ।
यस्मिन्नेव कुले नित्यं कल्याणं तत्र वै ध्रुवम् ॥ மனு 3. 60.

எவ்வீட்டில் பெண்சாதியுடன் புருஷனும், புருஷனுடன் பத்னியும் நல்ல நேசத்துடன் வாழ்கிறார்களோ அவ்வீட்டில் சௌபாக்கியமும், ஐசுவரியமும், கட்டாயமிருக்கும். எங்கே கலகமிருக்கிறதோ அங்கே தௌர்பாக்கியமும் தரித்திரத்தனமும் குடி கொண்டு இருக்கும்.

यदि हि स्त्री न रोचेत पुमांसन्न प्रमोदयेत् ॥
अप्रमोदात्पुनः पुंसः प्रजनं न प्रवर्त्तते மனு 3. 61.

ஸ்திரீ ஒருவள் தன் புருஷனுடன் கூட நேசமன்னியிலும், சந்தோஷ மன்னியிலும் இருக்கும்பக்ஷத்தில் புருஷனுக்கும் சந்தோஷமேற்படாமல் கார்யம் நடவாமல் கெட்டுப்போய் விடுகிறது.

स्त्रियां तु रोचमानायां सर्वं तद्रोचते कुलम् ।
तस्यां त्वरोचमानायां सर्वमेव न रोचते ॥ மனு 3. 62.

ஒரு குடும்பத்தினுடைய சந்தோஷம் அந்தஸ்திரீயினுடைய சந்தோஷத்திலேயே இருக்கிறபடியினால், அவள் சந்தோஷ மன்னியிலிருப்பதினால் குடும்பத்தினுடைய சந்தோஷம் குறைந்து துக்கம் ஏற்படுகிறது.

ஸ்திரீகளைநடத்தல்,

पितृभिर्भ्रातृभिश्चैताः पतिभिर्देवरैस्तथा ।
पूज्या भूषयितव्याश्च बहुकल्याणमीप्सुभिः ॥ மனு 3. 55.

தகப்பனாரும், சகோதரர்களும், புருஷனும், க்ஷேமத்தைக் கோரிமேன்மையை விரும்புவார்களேயானால், முறையே தங்கள் தங்களுடைய ஸ்திரீயை விதிப்பிரகாரம் ஆபரணங்களினால் அலங்கரிக்கவேண்டும்.

यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवताः ।
यत्रैतास्तु न पूज्यन्ते सर्वास्तत्राऽफलाः क्रियः ॥ மனு 3. 56.

கற்றுணர்ந்தவர்களாகிய ஸ்திரீகள் எவ்விடத்திலிருக்கிறார்களோ, அந்த வீட்டுப்புருஷர்கள் சுகமாய வாழ்வது மன்னியில் தெய்வத்தைப் போலவும் எண்ணப்படுகிறார்கள். ஸ்திரீகளை மரியாதைசெய்யாத குடும்பத்தினுடைய மதகாரியங்கள் யாவும் பலமுள்ளதாகாது.

शोचन्ति जामयो यत्र विनश्यत्याशु तत्कुलम् ।
न शोचन्ति तु यत्रैता वर्द्धते तद्धि सर्वदा ॥ மனு 3. 57.

எக்குலத்தினுடைய வீட்டில் ஸ்திரீகள் துக்கத்துடனும் கஷ்டத்துடனுமிருக்கிறார்களோ, அந்தவீடு சின்னாபின்னமாய் நாசத்தையடைகிறது. எந்த வீட்டில், ஸ்திரீகள் ஆனந்தத்துடனும், உற்சாகத்துடனும், சந்தோஷத்துடனும் இருக்கிறார்களோ, அந்த வீட்டில் எப்பொழுதும் மேன்மையையும், சந்தோஷமும் பெருகிறது.

तस्मादेताः सदा पूज्या भूषणाच्छादनाशनैः ।
भूतिकामैर्नरैर्नित्यं सत्कारेषूत्सवेषु च ॥ மனு 3. 59.

ஐசுவர்யங்களைச்சம்பாதித்து சேர்க்கவிரும்புகிற ஒவ்வொரு மனிதனும் கற்றுணர்ந்த ஸ்திரீகளை உச்சவகாலங்களில் ஆபரணங்களினாலும், வஸ்திரங்களினாலும், அன்னபானாதிகளினாலும், திருப்திசெய்து மரியாதை செய்யவேண்டுமென்று இதனால் விளங்குகிறது. பூஜை என்னும் வார்த்தைக்கு எப்பொழுதும் மரியாதை என்று அர்த்தம் செய்துகொள்ளவும். மேலும் பகலி

லாவது, இரவிலாவது, எப்பொழுது முதற்தடவையாக ஒருவருக்கொருவர் சந்திக்கிறார்களோ அப்பொழுது "நமஸ்தே" என்று பிரேமையுடன் உரைக்க வேண்டும்.

सदा प्रहृष्टया भाव्यं गृहकार्येषु दक्षया ।
सुसंस्कृतोपस्करया व्यये चामुक्तहस्तया ॥ மனு 5. 150.

எப்பொழுதும் பிரசன்னமாயும், வீட்டுக்காரியங்களில் மிகவும் துரிதமாயும், சாமான்களைவெகு அக்கரையுடனும், மிகவும் அதிகமாய்ச்செலவு செய்யாமலும், வீட்டைச்சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். உடலையும், மனதையும் பிணியணுகாமல் காப்பாற்றும்படி, மருந்தைப்போல்யாவற்றையும், சுத்தமாய்ச் சமயல்செய்து வைப்பதே ஸ்திரீகளின் கடமையாகும். செலவுகளைச் கணக்குவைத்துக்கொண்டு, புருஷன் முதலானோர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். வேலைக்காரர்களை, வீட்டுவேலைகள் கெடாமல் சரியாய்செய்யச்சொல்ல வேண்டும்.

स्त्रियो रत्नान्यथो विद्या सत्यं शौचं सुभाषितम् ।
विविधानि च शिल्पानि समादेयानि सर्वतः ॥ மனு 2. 240.

ஸ்திரீகள் பலவித இரத்தினப்பரிக்ஷை, படிப்பு, உண்மை, பரிசுத்தம் நல்ல பேச்சு சகலவிதமான சிற்பவேலைகள், இவைகள் எல்லாவற்றையும் எல்லா தேசங்களிலிருந்தும் மனிதர்களிடமிருந்தும் கற்றுக்கொள்ளவேண்டும்.

சத்தியமுறைத்தல்.

सत्यं ब्रूयात् प्रियं ब्रूयान्न ब्रूयात् सत्यमप्रियम् ।
प्रियं च नानृतं ब्रूयादेष धर्मः सनातनः ॥ மனு 4. 138.

भद्रं भद्रमिति ब्रूयाद्भद्रमित्येव वा वदेत् ।
शुष्कवैरं विवादं च न कुर्यात्केनचित्सह ॥ மனு 4. 139.

எப்பொழுதும் விரும்பத்தகாத உண்மையைப் பேசாதே நலத்தைப் பேசுதலே முறையாகும். மனதுக்குப்பிடிக்காத சத்தியத்தை அதாவது, குருடனைக் குருடனென்று சொல்லலாகாது. ஏனென்றால் உண்மையாய்ப் பேசக்கூடாது. அப்படிச் சொல்லுவதினால் குருடனுடைய மனம் கஷ்டப்படுகிறதே தவிர இலாபம் எதுவுமில்லை. ஆகையினால் அத்தகைய சத்தியத்தை பேசக்கூடாது. (2) பிறர்களை திருப்திசெய்யவாவது பொய் பேசாதே. எப்பொழுதும் உண்மையையே அதாவது எல்லோருக்கும் ஹிதத்தையே செய்கிறவார்த்தைகளையேபேசு. காரணமன்னியிற் சண்டையாவது, அதிகபேச்சாவது, ஒருவருடனும்கூடாது. எல்லோருக்கும் ஹிதமாயிருந்து, அவர்களுக்குக் கெடுதலாயிருந்த போதிலும் அதையே சொல்லவேண்டும்.

पुरुषा बहवो राजन् सततं प्रियवादिनः ।
अप्रियस्य तु पथ्यस्य वक्ता श्रोता च दुर्लभः ॥ உத்தியோகபர்வம் விதுரநீதி.

ஓ திருதராஷ்டிரா! இவ்வுலகில் பிறர்களுக்குத் திருப்திகரமானவார்த்தைகளை மொழியும் முகஸ்துதிக்காரர்கள் பலரிருக்கிறார்கள். கேழ்ப்பதிற்குப் பிரயோஜனமற்றதாய்த் தோன்றினபோதிலும், காரியத்தினால் பிரயோஜனமுள்ளவையாயிருக்கிறதைப் பேசுகிறவர்கள் சிலரே உளர். ஏனென்றால் ஒருவனுடைய கெடுதல்களை அவன் முன்னரே எடுத்துரைப்பது, தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொள்வது, ஆளில்லாத சமயத்தில் அவர்களுடைய குணத்தைப்புகழுவது, இவைகளெல்லாம் நல்லோர்களுடைய ஸ்பாவம். முகத்திற்கு முன்னால் ஒருவனுடைய நல்ல குணங்களைபுகழ்ந்துவிட்டு, அவனுக்குப் பின்னால் அவனுடையகெடுதல்களை உரைப்பது துஷ்டர்களுடைய ஸ்வபாவம். தன்னுடைய குறைகளைச்சொல்லாமல் ஒருக்காலும் ஒருவன் தன்னுடைய கெடுதல்களை ஒழித்து நல்லதை எடுத்துகொள்ள முடியாது. ஒருவரைப் பற்றி ஒருக்காலும் நிந்தை மொழிசொல்லக்கூடாது.

गुणेषु दोषारोपणमसूया । दोषेषुगुणारोपणमप्यसूया । गुणेषु गुणारोपणं दोषेषु दोषारोपणं च स्तुतिः ॥

பிறர்களுடைய நல்ல குணங்களைக் கெட்டவைகளாகக் காட்டுவதற்கே **நிந்தை** என்றுபெயர். நல்லகுணங்களை உள்ளவறே காட்டுவதற்கு ஸ்துதி என்று பெயர், இன்னும் விரிவாகச் சொல்லுவோமேயானால் பொய் பேசுவதற்கு நிந்தை என்றும் உண்மைக்கு ஸ்துதி என்றும் பெயர்.

बुद्धिवृद्धिकराण्याशु धन्यानि च हितानि च ।
नित्यं शास्त्राण्यवेक्षेत निगमांश्चैव वैदिकान् ॥ மனு 4. 19.

यथा यथा हि पुरुषः शास्त्रं समधिगच्छति ।
तथा तथा विजानाति विज्ञानं चास्य रोचते ॥ மனு 4. 20.

புத்தி, தனம், சுகம், இவைகளை விருத்திசெய்கிற வேதம் முதலான சாஸ்திரங்களைப்படித்துச் சொல்லவேண்டியது. ஸ்திரீ, புருஷன் ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் பிரம்மசரியத்தில் படித்தவைகளைப் பார்த்து யோசனைச் செய்து கற்பிக்கவேண்டியது. ஏனென்றால் அவ்வண்ணம் செய்வதினால் ஒருவருடைய புத்தி, விசாலமகிறது. படிப்பதிலேயும் கூட ஆசை ஏற்படுகிறது.

பஞ்சமகாயாகங்கள்.

ऋषियज्ञं देवयज्ञं भूतयज्ञं च सर्वदा ।
नृयज्ञं पितृयज्ञं च यथाशक्ति न हापयेत् ॥ மனு 4. 21.

இந்த ஐந்துயக்ஞங்களுக்குள் இரண்டு பிரமசரியாசிரமத்தைக் குறிக்கப்பட்டிருக்குமிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் முதலான சாஸ்திரங்களைப்படிக்கிறது, படிக்கச்செய்கிறது, சந்தியாவந்தனம் யோகாப்பியாசம், இவைகளைச் செய்வது, இதற்கு **ரிஷியக்ஞம்** என்று பெயர்.

अध्यापनं ब्रह्मयज्ञः पितृयज्ञश्च तर्पणम् ।
होमो दैवो बलिर्भौतो नृयज्ञोऽतिथिपूजनम् ॥ மனு 3. 70.
स्वाध्यायेनार्चयेदृषीन् होमैर्देवान् यथाविधि ।
पितॄन् श्राद्धैश्चनॄनन्नैर्भूतानि बलिकर्मणा ॥ மனு 3. 81.

வித்வான்களுடைய சங்கம், அவர்களுடைய சேவை, பரிசுத்த சிறந்த குணங்களைக்கிரகித்தல், தாராளத்தனம், வித்தையைக்கைக்கொள்ளல், இவைகளுக்கெல்லாம் தேவயக்ஞமென்று பெயர். இவ்விரண்டு கடமைகளை முறையே காலை, மாலை இருபொழுதும் செய்யவேண்டும்.

सायंसायं गृहपतिर्नो अग्निः प्रातःप्रातः सौमनसस्य दाता ॥ प्रायः प्रातर्गृहपतिर्नो अग्निः सायं सायं सौमनसस्य दाता ॥

அதர்வ. 19. அனு. 7. சா. 3. 4.

மாலையில் ஹோமஞ்செய்யப்பட்ட வஸ்துக்கள் மறுநாள் காலைவரையில் ஆகாசத்தைச் சுத்தமாக்கிப் பிரயோஜன முள்ளதாய்ச் செய்கின்றன. காலையில் ஹோமஞ்செய்யப்பட்டவஸ்துக்கள் மாலைவரையில் ஆகாசத்தைத் சுத்தமாக்கிவைத்துக்கொள்வதில் பிரயோஜனமுள்ளதா யிருக்கின்றன.

तस्मादहोरात्रस्य संयोगे ब्राह्मणः सन्ध्यामुपासीत ।
उद्यन्तमस्तं यान्तमादित्यमभिध्यायन् ॥ பிராம்மண, 4. 5.

ஆகையினால் பகலும் இரவும் சேருகிற சமயத்தில் அதாவது சூர்யோதைய சமயத்திலும், சூரியாஸ்தமன சமயத்திலும் பரமேசுவரனை தியானஞ்செய்து அக்கினிஹோத்ரத்தை அவசியமாய்ச் செய்யவேண்டும்.

न तिष्ठति तु यः पूर्वां नोपास्ते यस्तु पश्चिमाम् ।
स शूद्रवद्बहिष्कार्यः सर्वस्माद् द्विजकर्मणः ॥ மனு 2. 103.

இவ்விரண்டு காரியங்களையும், காலையிலும், மாலையிலும் யார் செய்யவில்லையோ அவர்களை, புத்திமான்கள் பிராமணர்களுடைய வர்ணத்திலிருந்து ஒதுக்கிச் சூத்திரனைப்போல் நடத்தவேண்டும்.

வினா:— மூன்றுகாலங்களிலும் ஏன் சந்தியாவந்தனம் செய்யக்கூடாது?

விடை:—மூன்றுகாலங்களிலே சந்தி ஏற்படுகிறதில்லை.

இருளும் வெளிச்சமும் சந்திக்கும்வேளையாகிய காலை, மாலை, இவ்விருவேளைகளில் தவிற வேறு எப்பொழுதும் ஏற்படுகிறதில்லை. இதைக்கவனியாமல் நடுப்பகலில் சந்தியாவந்தனஞ்செய்கிறவன் நடுநிசியிலேயும் செய்யவேண்டும். நடுநிசியில் சந்தியோபாசனை செய்கிறவன், நடுப்பகலில் எவ்வளவு சந்தியிருக்கிறதோ, அவ்வளவு சந்தி (சேர்ப்பு) இருக்கும்படியான ஒவ்வொரு பிரஹரத்திலேயும், கடியிலேயும், விநாடியிலேயும், க்ஷணத்திலேயும், ஏன் செய்யக்கூடாது ? ஒவ்வொருவிநாடியிலேயும் சந்தியாவந்தனம் செய்ய முடியாது. இதுவுமன்னியில் நடுப்பகலில் இப்பிரகாரம் செய்வதற்குச் சாஸ்திர

சம்பந்தமான பிரமாணமொன்று மில்லை. ஆகையினுல், இருவேளை தான், ஒருநாளில் சந்தியோபாசனை, அக்னிஹோத்திரம் செய்வது உசிதம். மூன்று வேளைக்கிடையாது. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், என்று காலக் கிரமத்திற்காக மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர சந்தியாவந் தனம் பூஜை முதலானவைகளுக்காக அவ்வாறு பிரிக்கப்படவில்லை.

பித்ருயக்ஞம்:—வித்வான்களையும் முனிகளையும் படிக்கிறவர்களையும், குருவையும், தகப்பனுரையும், தாயாரையும், இன்னும் சகலபெரியோர்களை யும், பரமயோகிகளையும் தொழுது சேவைசெய்வதற்கே பித்ருயக்ஞமென்று பெயர். இந்த யக்ஞத்தில் சிராத்தமென்றும், தர்ப்பணமென்றும் இரண்டு பிரிவுகள் உண்டு.

உண்மைக்கு இன்னெருவார்த்தையான "ஸ்ரத்" என்னும் பதத்திலி ருந்து உண்டானது "ஸ்ராத்தம்".

"श्रत्सत्यं दधाति यया क्रियया सा श्रद्धा श्रद्धया यत् क्रियते तच्छ्राद्धम्"

எந்தச்செய்கையினுல் சத்தியத்தைக்கிரகிக்கிருேமோ. அதற்கு சிராத்தம் என்று பெயர்.

"तृप्यन्ति तर्पयन्ति येन पितॄन् तत्तर्पणम्"

எந்தச்செய்கையினுல் நம்முடைய பெற்றோர்களையும் (ஜீவித்து வசித்து கொண்டிருக்கும்) பெரியோர்களையும் திருப்தி செய்விக்கிருேமோ அந்தச் செய்கைக்குத்தர்ப்பணம் என்று பெயர். இச்செய்கைகள் பிழைத்திருக்கி றவர்களுக்கேசெய்வதேயன்றி மரித்தவர்களுக்கல்ல.

ரிஷி தர்ப்பணம்.

ओं ब्रह्मादयो देवास्तृप्यन्ताम् । ब्रह्मादिदेवपत्न्यस्तृप्यन्ताम् ब्रह्मादिदेव-सुतास्तृप्यन्ताम् । ब्रह्मादिदेवगणास्तृप्यन्ताम् । इति देवतर्पणम् ॥

"வித்வான் ஸோஹிதேவா" என்று சதபதபிராம்மணம் சொல்லுகிறது. "யார் வித்வானே அவனே தேவன். ஆதியோடந்தமாய் நான்கு வேதங் களையும் கற்றுணர்ந்தவர்களுக்கே "பிரம்மா" என்று பெயர். அவர்களைக் காட்டிலும் கொஞ்சம் குறைவாயிருக்கிறவர்களுக்கே தேவர்கள் என்று பெயர். ஆகையினுல் தேவர்களென்ருல் கற்றுணர்ந்தவித்வான்கள் அவர்களுக்குச்சமா னமான அவர்களுடைய பத்தினிகள்தான் தேவதைகள் என்றும் பிராம்மணன் என்றும் அழைக்கப்படுகிருர்கள். அவர்களுக்குச் சமானமான தங்கள் குழந்தைகளும், சீடர்களும், சேவகர்களுமே அவர்களுடன் கருதப்படுகிருர் கள். இவர்கள் எல்லோருக்கும் சேவை செய்வதற்கே சிரார்த்தமென்றும் தர்ப்பணமென்றும் பெயர்.

ओं मरीच्यादय ऋषयस्तृप्यन्ताम् । मरीच्याद्यृषिपत्न्यस्तृप्यन्ताम् । मरीच्याद्यृषिसुतास्तृप्यन्ताम् । मरीच्याद्यृषिगणास्तृप्यन्ताम् । इति ऋषितर्प्पणम् ॥

பிரம்மாவினுடைய பௌத்திரனான மரீசி முனியைப்போல் வித்வானாயி ருக்கும் கற்றுணர்ந்தவர்களுக்கும், அவர்களுக்குச்சமானமான வித்தையுடன் கூடின பெண்களுக்குக்கற்பிக்கும் ஸ்திரீகளுக்கும் அவர்களுக்குச் சமானமாய் படித்திருக்கும் உறவினர்களுக்கும், சிஷ்யர்களுக்கும், செய்யும் உபசாரத்திற்கே ரிஷி தர்ப்பணமென்று பெயர்.

(1) ओं सोमसदः पितरस्तृप्यन्ताम् । (2) अग्निष्वात्ताः पितरस्तृप्यन्ताम् । (3) बर्हिषदः पितरस्तृप्यन्ताम् । (4) सोमपाः पितरस्तृप्यन्ताम् । (5) हविर्भुजः पितरस्तृप्यन्ताम् । (6) आज्यपाः पितरस्तृप्यन्ताम् । (7) सुकालिनः पितरस्तृप्यन्ताम् । (8) यमादिभ्यो नमः यमादींस्तर्पयामि । (9) पित्रे स्वधा नमः पितरं तर्पयामि । (10) पितामहाय स्वधा नमः पितामहं तर्पयामि । (11) प्रपितामहाय स्वधा नमः प्रपितामहं तर्पयामि (12) मात्रे स्वधा नमो मातरं तर्पयामि । (13) पितामह्यै स्वधा नमः पितामहीं तर्पयामि । (14) प्रपितामह्यै स्वधा नमः प्रपितामहीं तर्पयामि । (15) स्वपत्न्यै स्वधा नमः स्वपत्नीं तर्पयामि । (16) सम्बन्धिभ्यः स्वधा नमः सम्बन्धिनस्तर्पयामि । (17) सगोत्रेभ्यः स्वधा नमः सगोत्रांस्तर्पयामि ॥

இயற்கை சாஸ்திரத்திலேயும் பரமாத்மாவினுடைய ஞானத்திலேயும் யார் வித்வான்களாயிருக்கிறார்களோ அவர்களுக்குச் "சோமசத்" என்று பெயர். (2) அக்கினி, காந்தம் முதலான இயற்கை சாஸ்திரங்களில் வித்வா னாயிருக்கிறவர்களுக்கே "அக்னிஷ்வாத்" என்று பெயர். (3) புத்திசாலி தனத்துடன் கூடினவர்களாய், விருத்திக்கு ஏற்ற வழிகளைச் செய்கிறவர் களுக்கே "பர்ஹிஷத்" என்று பெயர். (4) ஐசுவர்யங்களைக் காப்பாற்றுகிற வர்களாயும், ஔஷதங்களுடைய இரசத்தை அருந்தி நோய்களிலிருந்து நீங்கி னவர்களாயும், இதரர்களுடைய சொத்துக்களை இரக்ஷிக்கிறவர்களாயும், மருந் தினால் இதரர்களுடைய ரோகங்களை தீர்க்கிறவர்களாயு மிருக்கிறவர்களுக்கே "சோமபா" என்று பெயர். (5) மயக்கத்தை உண்டுபண்ணுவதற்குக்காரணமா னதும் ஜீவஹிம்சைக்கும் ஆதாரமான ஆகாரத்தைச் சாப்பிடுகிறவர்களுக்கே "ஹவிர்புஜ" என்று பெயர். (6) அறிவதற்கு யோக்கியமான வஸ்துக்களை காப்பாற்றுகிறவர்களுக்கும் நெய், பால், தயிர் முதலான வஸ்துக்களை உட் கொள்ளுகிறவர்களுக்கும் "ஆஜ்யபா" என்று பெயர். (7) தங்களுடைய வாழ் நாட்களைச் சத்தியத்திற்காகவும், தர்மத்திற்காகவும் உபயோகிக்கிறவர் களுக்கே "சுகாலின்" என்று பெயர். (8) துஷ்டர்களை வென்று, சிஷ்டர் களைக்காப்பாற்றி, நியாயமறிந்தவர்களுக்கே "எமன்" என்று பெயர். (9) குழந்தைகளைப்பெற்று அன்னபானாதி வஸ்துக்களை அளித்துக்காப்பாற்றுகிற வர்களுக்கே "பிதா" என்று பெயர். (10) தகப்பனுடைய தகப்பனுக்கு

15

"பிதாமகா" என்றும் (11) பிதாமகாவினுடைய தகப்பனுருக்கு "பிரபிதாமகா" என்றும் பெயர். (12) குழந்தைக்கு அன்னபானதிவஸ்திரங்களை அளித்து வளர்க்கிறவளுக்கே "மாதா" என்று பெயர். (13) தகப்பனுடைய தாய்க்கு "பிதாமகி" என்றும், (14) பிதாமகியினுடைய தாய்க்கு "பிரபிதாமகி" என்றும் பெயர். தன்னுடைய (15) மனைவி (16) சகோதரி முதலான பந்துக்கள் (17) கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், வேறு நல்ல புருஷர்கள், பெரியோர்கள், முதலானவர்களுக்கு வெகு மரியாதையுடன் அன்ன வஸ்திரமளித்து நல்லவண்டியைக் கொடுத்து திருப்தி செய்வதற்கே, அதாவது, அவர்களுடைய ஆத்மாவைத் திருப்தியடையச்செய்து சரீரம் சுகமாயிருக்கும்படிச் செய்வதற்கே சிராத்தமென்றும் தர்ப்பண மென்றும்பெயர்.

" வைசுதேவம்:— போஜனம் தயாரானவுடன் சர்க்கரை தயிர் இவைகளால் கலக்கப்பட்ட ஆகாரத்தைக் (உப்பு, புளிப்பு இவைகளுடன் கூடியிருப்பவைகளை நீக்கி) கொஞ்சமெடுத்து அக்னியில் மனு சொல்லியிருக்கும் பிரகாரம் ஹோமம் செய்வதற்கே வைசுதேவமென்று பெயர்.

वैश्वदेवस्य सिद्धस्य गृह्येऽग्नौ विधिपूर्वकम् ।
आभ्यः कुर्य्याद्देवताभ्यो ब्राह्मणो होममन्वहम् ॥ மனு 3 84.

எங்கெந்த பதார்த்தங்கள் போஜனத்திற்காகச் சமையலறையில் பக்குவஞ் செய்யப்படுகின்றனவோ அவைகளில் ஏதாவது கொஞ்சம் எடுத்து விதிப்பிரகாரம் கீழ்க்கண்டவேத மந்திரங்களுடன், அக்கினியில் ஹோமஞ் செய்து ஆகாசத்தை சுத்தஞ்செய்யவேண்டும்.

ஹோம மந்திரம்.

ओं अग्नये स्वाहा । सोमाय स्वाहा । अग्नीषोमाभ्यां स्वाहा । विश्वेभ्यो देवेभ्यः स्वाहा । धन्वन्तरये स्वाहा । कुह्वै स्वाहा । अनुमत्यै स्वाहा । प्रजापतये स्वाहा । सहद्यावापृथिवीभ्यां स्वाहा । स्विष्टकृते स्वाहा ॥

பிரதி மந்திரங்களுடனும், எரிந்துகொண்டிருக்கும் அக்னியில், ஒவ்வொருதடவையும் ஹோமம் செய்ய வேண்டும். பிறகு பூமி, இலை அல்லது தட்டின் பேரிலாவது கீழ்க்கண்ட வேதமந்திரத்துடன் தென்திசையிலிருந்து வரிசைக்கிரமமாகப்பாகம் செய்த ஆகாரத்தைக்கொஞ்சம் வைக்கவேண்டும்.

ओं सानुगायेन्द्राय नमः । सानुगाय यमाय नमः । सानुगाय वरुणाय नमः । सानुगाय सोमाय नमः । मरुद्भ्यो नमः । अद्भ्यो नमः । वनस्पतिभ्यो नमः । श्रियै नमः । भद्रकाल्यै नमः । ब्रह्मपतये नमः । वास्तुपतये नमः । विश्वेभ्यो देवेभ्यो नमः । दिवाचरेभ्यो भूतेभ्यो नमः । नक्तञ्चारिभ्यो भूतेभ्यो नमः । सर्वात्मभूतये नमः ॥

இப்பாகங்களைக் கொண்டு, அதிதியாராவதிருந்தால் அவருக்குச் சாப்பிடக் கொடுக்கலாம். அதிதியைக்காணவிடில் அதனை அக்கினியில் ஹோமஞ்செய்து

விடலாம். பிறகு உப்புப்பதார்த்தங்களை அதாவது பருப்பு, அன்னம் பக்குவஞ் செய்யப்பட்ட காய்கறிகள், ரொட்டி முதலானவைகளை எடுத்துக்கொண்டு ஆறுபாகங்களாகப்பிரித்து கீழே பூமியின் பேரில் வைக்கவேண்டும்.

शुनां च पतितानां च श्वपचां पापरोगिणाम् ।
वायसानां कृमीणां च शनकैर्निर्वपेद्भुवि ॥ மனு 3. 92.

வைத்தபிறகு இம்மாதிரி "ஸ்வேப்யோ நம: பதிதிப்யோ நம: ஸ்வ பக்பயோ நம: பாபரோகிப்யோ நம: வாயசோப்யோ நம: கிருமிப்யோ நம: கூப்பிட்டு விட்டு, துக்கமுள்ளவர்களுக்காவது, பசியினால் வருந்துகிறவர்களுக் காவது, நாயிக்காவது காகத்துக்காவது அல்லது வேறெந்த பிராணிகளுக்கா வது கொடுத்துவிடவேண்டியது. இவ்விடத்தில் "நம" என்னும் வார்த்தைக்கு அன்னம் என்று அர்த்தம். இந்த அன்னத்தை நாயிக்கு, பாபிக்கு, சண்டாள னுக்கு, பாபரோகிக்கு, பெருவியாதிக்காரனுக்கு, காக்கைக்கு, புழுவுக்கு, இன்னும் முதலானவைகளுக்கு அளிக்கவேண்டியது. இஃது மனுஸ்மிருதியி லுள்ளது.

அதிதிசேவை:—நமக்குத் தெரியாது திடீரென்று நமது வீடுதிக்கு வருப வருக்கே வடமொழியில் "அதிதி" என்று பெயர். தர்மாத்மாவும், சத்தியத்தை உபதேசிக்கிறவரும், எல்லோருக்கும் உபகாரமுள்ளவரும், எங்கேயும் சஞ்சா ரம் செய்கிறவரும், பூர்ணவித்வானும், பரமயோகியுமான சந்நியாசி ஒருவர், கிரகஸ்தன் வீட்டிற்கு வருவாரேயானால் அப்பொழுது கிரகஸ்தன் அவரு டைய பாதங்களைக்கழுவி ஆசனமளித்து இருக்கச்செய்து அன்னபானாதிக ளுக்கு உத்தமமான பதார்த்தங்களைக் கொடுத்துப் பணிவிடைச் செய்யவேண் டும். பிறகு சிநேகஞ்செய்து, தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், இவைகளை அறியச் சாதனமாயிருக்கும் விக்ஞானம் (லௌகிக ஞானம்) வைதீக ஞானம் முதலானவைகளைப்பெற வேண்டியது. உண்மையை அறிந்து அதன் பிரகாரம் ஒவ்வொருவரும் நடக்கவேண்டும். சமயம் வாய்க்குமேயானால் கிரகஸ்தர்கள் அரசன் முதலானவர்களைக்கூட அதிதியைப் போல் மரியாதைச் செய்வதற்கு ஏற்றவர்களாவார்கள்.

கள்ள பக்தி யுள்ளவர்கள்.

पाषण्डिनो विकर्मस्थान् बैडालवृत्तिकान् शठान् ।
हैतुकान् बकवृत्तींश्च वाङ्मात्रेणापि नार्चयेत् ॥ மனு 4. 30.

வேததூஷகர்களையும், வேதத்திற்கு விரோதமான காரியங்களைச்செய் கிறவர்களையும், எவ்விதம் பூனை பதுங்கியிருந்து கண்ணுற்றுக்கவனித்துசமயம் வாய்த்தபொழுது எலியின் மேலே பாய்ந்து அதனைத்தின்றுவிடுகிறதோ அவ் விதமே, கபடத்தனமாய் வஞ்சகம் பேசிப்பொய்ச்சொல்லித்திரிகிறவர்களையும், ஹடம் செய்கிறவர்களையும், வீண்பிடிவாதமுள்ளவர்களையும், மூடர்களையும், கெட்ட அர்த்தஞ் செய்கிறவர்களையும், "நான்தான் பிரம்மம் ஜகமெல்லாம்

மாயை'' என்று தற்கால வேதாந்திகளைப்போல வீணுய்ப்பேசிக்காலங்கழிக்கிற வர்களையும், கொக்கு ஒரேகாலின் பேரில், தியானஞ் செய்வதுபோல் நின்று, சமயம் வாய்த்தவுடன குளத்திலிருந்து வெளியில் வரும் பிராணிகளுடைய ஜீவனை வதைத்துத் தின்றுவிடுவதுபோல், தன்காரியத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்து நிறைவேற்றிக் கொள்ளுகிறவர்களையும், இச்சுபாவத்தை உடைய தற்காலபைராகிகளையும், கெட்ட எண்ணத்தை உடையவர்களையும் நம்முடைய வார்த்தைகளினுலுங்கூட மரியாதைசெய்யக்கூடாது. ஏனென்ருல் மரியாதை செய்வதினுல் இவர்கள் அதிகரித்து ஜனங்களை அதர்மமான வழிகளில் நடத்துகிருர்கள். அவர்களே அநீதியான வழியிற் செல்லுவது மன்றி அவர்களுடன் கூட இருக்கிறவர்களையும் அஞ்ஞான சமுத்திரத்தில் அழுத்தி விடுகிருர்கள்.

இவ்வைந்து எக்ஞங்களினுடைய பலன்களாவன:—

பிரம்மயக்ஞம் செய்வதனுல் ஞானம், நல்லொழுக்கம், தேர்ச்சி, நீதி நடவடிக்கை முதலிய நல்ல குணங்கள் ஏற்படுகின்றன.

அக்னிஹோத்திரத்தினுல் வாயு, மழை, ஜலம், இவைகள் சுத்தமாகி உலக நன்மை உண்டாகிறது. அதாவது சுவாசத்திற்குச் சுத்தமான காற்றையும், அன்னபானுதிகளையும், ஆரோக்கியத்தையும் அளித்து காயத்தை விருத்தியாக்கி, தர்மார்த்த காமமோக்ஷ பெறுதலை இலகுவாக்குகிறது. வாயு முதலான பதார்த்தங்கள் சுத்தமாகிறபடியினுல் அதற்கு "தேவயக்ஞம்" என்றும் பெயர்.

பித்ருயக்ஞத்தினுல் தாயார், தகப்பஞர் ஞானி, மகாத்மா, இவர்களுடைய சேவைகிடைக்கிறது. இத்தகையசேவையினுல் ஞானம் விருத்தியாகி சத்தியாசத்தியத்தை தெளிவாய் அறியச் செய்கிறது. சத்தியத்தைக் கைப்பற்றிக்கொள்வதினுலும், அசத்தியத்தை விட்டு விடுவதினுலும் சுகமேற்படுகிறது. (2) இளம்பருவத்தில் தன்னைக்காப்பாற்றின பெற்றேர்களுக்கும் வித்தைக்காகக்கஷ்டபட்ட குருவுக்கும் தன்னுடைய நன்றியை திருப்பிக் காட்ட இந்த யக்ஞம் ஒரு காரணமாயிருக்கிறது.

பலி வைசுதேவ யக்ஞங்களுடைய பலனைப்பற்றி முன்னமே கூறி விட்டோம்.

அதிதியக்ஞம்:—உத்தம அதிதிகளில்லாத வரையில் ஒருதேசமானது சீக்கிரத்தில் முன்னேற்ற மடையாது. அவர்கள் சகல தேசங்களிலும் சஞ்சரித்துக் கொண்டுதிரிகிறபடியினுல் மோசம் அதிகரிக்காது. மேலும் தங்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்தே சத்தியத்தைக் கிரகஸ்தர்கள் அறியலாம். உலக முழுவதும் ஒரே தர்மம் ஸ்திரமாக ஏற்படும். அதிதிகளில்லாதவரையில் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளமுடியாது. சந்தேகங்களை நீக்கிக்கொள்ளாவிட்டால் நம்பிக்கை யுண்டாகாது. நிச்சய நம்பிக்கை யன்னியில் சுகம் எங்கிருந்து வரும்?

ब्राह्मे मुहूर्ते बुध्येत धर्मार्थौ चानुचिन्तयेत् ।
कायक्लेशाँश्च तन्मूलान् वेदतत्त्वार्थमेव च ॥ மனு 4. 92.

இராத்திரி நான்காவது ஜாமத்தில் படுக்கையை விட்டு ஒருவர் எழுந்திருந்து, கை கால் முகம் முதலானவைகளைக் கழுவிக்கொண்டு அறம் பொருள் இல்லம் இவைகளைப்பற்றியும், தேகத்தினுடைய பிணிபோக்குதலைப்பற்றியும், பரமாத்மாவைப் பற்றியும், தியானஞ் செய்யவேண்டும். ஒரு பொழுதும் ஒழுக்கமற்ற காரியங்களைச்செய்யலாகாது.

नाधर्मश्चरितो लोके सद्यः फलति गौरिव ।
शनैरावर्त्तमानस्तु कर्त्तुर्मूलानि कृन्तति ॥ மனு 4. 172.

ஒழுக்கமற்ற காரியம் ஏதாவது செய்தால் அது கெடுதியான பலனைத் தருகிறதுமில்லை, அல்லது பயன் உடனேயும் ஏற்படுகிறதில்லை. இக்காரணத்தினாலேயே அஞ்ஞானிகள் ஒருபொழுதும் அநியாயம்செய்யப் பயப்படுகிறதில்லை. அநீதியான காரியங்களைச் செய்வதினால் தன்னுடைய சுகங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒருவன் குறைத்துக்கொள்ளுகிறான் என்பதைக் கவனிக்க வேண்டும்.

अधर्मेणैधते तावत्ततो भद्राणि पश्यति ।
ततः सपत्नाञ्जयति समूलस्तु विनश्यति ॥ மனு 4. 174.

நீர்நிலைகளிலுள்ள ஜலமானது அதிகரித்தால், அதன் கரைகளை உடைத்துக்கொண்டு நாலாபக்கமும் பெருகுவதுபோல் நிதானமான நீதிகளினுடைய எல்லையை மீறி, அநீதிவான் ஒருவன், பொய் சொல்லியும், வஞ்சகம் பேசியும், ஏமாற்றியும் அதாவது சத்தியத்தை நிலை நிறுத்துகிற வேதங்களைக்கண்டித்தும் விசுவாசமோசஞ்செய்தும், பிறர்களுடைய பணங்களை அபகரித்தும், தனவானாகிறான். பிறகு பணம் முதலான ஐசுவர்யங்களினால், அன்னபானம், உடை, ஆபரணம், வண்டி, நிலைமை, மானம், செல்வாக்கு முதலியவைகளைப்பெற்று எதிரிகளையும் அநியாயமாய் ஜயிக்கிறான் கடைசியில் வேர் அறுக்கப்பட்ட மரத்தைப்போல், நாசத்தையடைகிறான்.

सत्यधर्मार्थवृत्तेषु शौचे चैवारमेत्सदा ।
शिष्यांश्च शिष्याद्धर्मेण वाग्बाहूदरसंयतः ॥ மனு 4. 175.

கற்றுணர்ந்தவர் வேதத்தில் கூறியிருக்கும் வண்ணம் பக்ஷபாத மன்னியில் சத்தியத்தையும் நியாயத்தையும் கைப்பிடித்து அசத்தியத்தை விட்டுவிட்டு தர்மத்தைத்தழுவிக்கொண்டு தன் சிஷ்யர்களுக்குப் போதிக்கட்டும்.

ऋत्विक्पुरोहिताचार्यैर्मातुलातिथिसंश्रितैः ।
बालवृद्धातुरैर्वैद्यैर्ज्ञातिसम्बन्धिबान्धवैः ॥
मातापितृभ्यां यामीभिर्भ्रात्रा पुत्रेण भार्यया ।
दुहित्रा दासवर्गेण विवादं न समाचरेत् ॥ மனு 4. 179. 180.

யாகஞ்செய்கிறவர்கள், கல்விகற்பிப்பவர்கள், மாமன், (அதிதி) தன்னை அடுத்திருப்பவர்கள் சம்ஸ்ருதி குழந்தைகள், கிழவர்கள், பிணியினால் பீடிக்கப்பட்டவர்கள், ஆயுர்வேத மறிந்தவர்கள் தன்குலம் கோத்திரம் இவைகளைச் சேர்ந்தவர்கள், மாமனார், சிநேகிதர்கள், தாய், தகப்பன், சகோதரர்கள், பெண் சாதி, பெண், வேலைக்காரர்கள் இவர்களுடன் ஒருபொழுதும் விவாதஞ் செய்யக்கூடாது. விரோதமும் செய்துகொள்ளக்கூடாது.

अतपास्त्वनधीयानः प्रतिग्रहरुचिर्द्विजः ।
अम्भस्यश्मप्लवेनेव सह तेनैव मज्जति ॥ மனு 4. 190.

(அதபாஹ்) பிரமசர்யவிரதம் அநுஷ்டிக்காதவர்கள், உண்மை முதலான நற்செய்கைகளில்லாதவர்கள். (2) படிப்பற்றவர்கள் (3) தர்மத்தின் பேரைக் கொண்டு வாங்கிக்கொள்ளுகிறவர்கள் இம்மூவர்களும், கல்லினால் நிறைத்து தண்ணீரில் விடப்பட்ட படகைப்போல், தங்களுடைய கெட்ட காரியங்களினால் துன்பசாகரத்தில் மூழ்குகிறார்கள். அவர்கள் முழுகிப்போவது மன்னியில் அவர்களுடன் கூடினவர்களையும் மூழ்கடிக்கிறார்கள்.

त्रिष्वप्येतेषु दत्तं हि विधिनाप्यार्जितं धनम् ।
दातुर्भवत्यनर्थाय परत्रादातुरेव च ॥ மனு 4. 193.

ஏனென்றால், தர்ம வழியில் சம்பாதித்த பொருளாயினும், மேற்சொன்ன மூவர்களுக்குக் கொடுப்பதினால், ஈவோனை இப்பிறப்பிலும் பெறுவோனை மறுபிறப்பிலும் நாசஞ்செய்கிறது.

यथा प्लवेनौपलेन निमज्जत्युदके तरन् ।
तथा निमज्जतोऽधस्तादज्ञौ दातृप्रतीच्छकौ ॥ மனு 4. 194.

கல்லினால் நிறைந்த படகிலேறி நீரைக்கடக்க பிரயத்னப்படுகிற ஒருவன் ஆழத்தில் அழுந்துகிறதைப்போல் கொடுக்கும் அஞ்ஞானிகளும், பெற்றுகொள்ளும் அஞ்ஞானிகளும் துக்கத்தில் மூழ்குகிறார்கள்.

பாசாங்குக்காரர்களுடைய லக்ஷணம்.

धर्मध्वजी सदालुब्धश्छाद्मिको लोकदम्भकः ।
बैडालव्रतिको ज्ञेयो हिंस्रः सर्वाभिसन्धकः ॥
अधोदृष्टिर्नैष्कृतिकः स्वार्थसाधनतत्परः ।
शठो मिथ्याविनीतश्च बकव्रतचरो द्विजः ॥ மனு 4. 195. 196.

(தர்மத்வஜீ) தர்மமொன்றும் செய்யாமல், அதன் பெயரைக்கொண்டு ஜனங்களை ஏமாற்றுகிறவர்கள். (சதாலுப்த:) எப்பொழுதும் துராசையுள்ளவர்கள் (சாத்மிக) வஞ்சகர்கள், (லோகதம்பக) பிறர்முன்னிலையில் தன்னைப்புகழ்ந்து பேசிக்கொள்ளுகிறவர்கள்(ஹிம்ஸ்ர:) உயிர்வதை செய்கிறவர்கள், ஜனங்களை

விரோதிக்கிறவர்கள், (ஸர்வாபிசந்தக) தீயர், நல்லோர் இவர்களுடன் கூடியிருப்பவர்கள், இவர்களை கேவலம் பூனையைப் போலவும், மோசக்காரர்களாகவும், கருதவேண்டும். (அதோதிருஷ்டி)கீர்த்திக்கு இஷ்டமுள்ளவர்களாய், கீழ்ப்பார்வையுள்ளவர்கள்(நைஷ்கிருதிக:) தனக்கு ஒருவன் அற்பமான குற்றம்செய்திருந்த போதிலும் அதற்குச் சகியாமல் அவனுடைய பிராணனைப்பழிக்குப்பழி வாங்க சித்தமாயிருக்கிறவர்கள் (ஸ்வார்தசாதனதத்பர:) வஞ்சகம், மோசம், துரோகம் முதலான விதத்திலாவது தன்னுடைய காரியத்தை முடித்துக் கொள்ளுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் (சட:) தப்பென்று அறிந்திருந்தபோதிலும் அதை விடாமலிருக்கும் வீண்பிடிவாதக்காரர்கள் (மித்யாவிநீத:) மரியாதை, மனவமைதி, தெய்வபக்தி இவைகளை கெடுக்கிறவர்கள், இவர்கள் முதலானவர்களைக்கள்ளபக்தியுள்ளவர்களாக அறிந்து (பகவிருத) அண்டங்காக்கையை விட இழிவாக எண்ணவேண்டும். ஒருபொழுதும் இவர்களை நம்பவுங்கூடாது. சகவாசஞ் செய்யவுங் கூடாது.

धर्मं शनैः सञ्चिनुयाद् वल्मीकमिव पुत्तिकाः ।
परलोकसहायार्थं सर्वभूतान्यपीडयन् ॥ மனு 4. 238.

கரையான் தன்னுடைய புத்தைச் சரிவர கட்டிக்கொள்வது போல் ஆடவர்களும் பெண்டீர்களும், மறுமையின்சுகத்தை அடைவதற்கு, ஜீவராசிகளொன்றையும் துன்புறுத்தாமல் சரிவர தர்மத்தை அநுசரித்து விருத்திசெய்ய வேண்டும், ஏனென்றால்,

नामुत्र हि सहायार्थं पिता माता च तिष्ठतः ।
न पुत्रदारं न ज्ञातिर्धर्मस्तिष्ठति केवलः ॥ மனு 4. 239.

மறு உலகத்தில், தாய், தகப்பன், புத்திரன், உறவினர் இவர்களால் உதவிசெய்யமுடியாது. அவர்களுடைய தர்மமே அவர்களுக்குச் சகாயமாகவும் துணையாகவுமிருக்கும்.

एकः प्रजायते जन्तुरेक एव प्रलीयते ।
एकोऽनुभुङ्क्ते सुकृतमेक एव च दुष्कृतम् ॥ மனு 4. 240.

ஒவ்வொரு ஜீவனும் தனியாகவே ஜென்மமெடுக்கிறது, மரணத்தை அடைகிறது, தர்மத்தினுடைய பலனாகிய சுகத்தையும், அதர்மத்தினுடைய பலனாகிய துக்கத்தையும் அனுபவிக்கிறது.

एकः पापानि कुरुते फलं भुङ्क्ते महाजनः ।
भोक्तारो विप्रमुच्यन्ते कर्ता दोषेण लिप्यते ॥ மஹாபாரதம், உத்யோகபர்வ.

ஒருகுடும்பத்தில் ஒருவன் பாபம் செய்தால் அதனால் உண்டாகும் பயன்யாவரையும் சேருகிறது. ஆனால் அதனுடைய கெட்டபலன்களை அவன் ஒருவன் அடைகிறானே தவிர குடும்பமுழுவதுமல்லவென்று அறியவேண்டும்.

मृतं शरीरमुत्सृज्य काष्ठलोष्ठसमं क्षितौ ।
विमुखा बान्धवा यान्ति धर्मस्तमनुगच्छति ॥ ५ ॥ மனு 5. 241.

இறந்த ஒருவனுடைய பிணத்தை, ஒருபிடி மண்ணைப்போல் அவனுடைய உறவினர்கள், கீழே விட்டு விட்டுத்திரும்பிவிடுகிறார்கள், இறந்தவருடன்கூட எவருமே போகிறதில்லை. தர்மம் ஒன்றே செல்லுகிறது.

तस्माद्धर्मं सहायार्थं नित्यं सञ्चिनुयाच्छनैः ।
धर्मेण हि सहायेन तमस्तरति दुस्तरम् ॥ மனு 4 242.

இக்காரணத்தினால், மறு உலகசுகத்திற்குச்சகாயமாயிருக்கும் நித்திய தர்மங்களையே ஒருவர் விருத்திசெய்யவேண்டும். ஏனென்றால் தர்மத்தினுடைய சகாயத்தினாலேதான், கஷ்டமான துக்கசாகரத்தைத்தாண்ட முடியும்.

धर्मप्रधानं पुरुषं तपसा हतकिल्बिषम् ।
परलोकं नयत्याशु भास्वन्तं खशरीरिणम् ॥ மனு 4. 243.

தருமத்தையே பெரிதாகக்கருதி அநுஷ்டித்து, அப்படி அநுஷ்டிப்பதினால் பாபங்கள் நீங்கி அதனால் பாதிக்கப்படாதவனாய் எவனிருக்கிறானோ அவனே, தன் தர்மத்தினுடைய மகிமையினால், வெளிச்சத்தை உருவமாகவும், ஆகாசத்தைச் சரீரமாகவும் கொண்ட பரமாத்மாவை அடைகிறான்.

दृढकारी मृदुर्दान्तः क्रूराचारैरसंवसन् ।
अहिंस्रो दमदानाभ्यां जयेत्स्वर्गं तथाव्रतः ॥
वाच्यर्था नियताः सर्वे वाङ्मूला वाग्विनिःसृताः ।
तांस्तु यः स्तेनयेद्वाचं स सर्वस्तेयकृन्नरः ॥
आचाराल्लभते ह्यायुराचारादीप्सिताः प्रजाः ।
आचाराद्धनमक्षय्यमाचारो हन्त्यलक्षणम् ॥ மனு 4. 246. 156.

எப்பொழுது முயற்சியுள்ளவனாயும், இளக்கம், அடக்கப்பட்ட இந்திரியம் இவைகளை உடையவனாயும், தீச்செயல், துராசாரம் உடையவர்களிலிருந்து தனியாயும் தீதிலானாயுமிருக்கிற ஒருவன் வித்தை முதலிய தானங்களை செய்கிறதினாலே, சுகத்தை அடைகிறான். சகல விவகாரங்களையும் நிச்சயஞ்செய்து, எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாயும், சகல செய்கைகளினுடைய சித்திக்கு ஹேதுவாயுமிருக்கிற நல்லவாக்கை அடக்கி, எவன் பொய்சொல்லுகிறானோ அவனைத் திருடுகளவு முதலான பாபங்களைச் செய்கிறவனாகக் கருதவேண்டும். ஆகையினால் பொய் சொல்லுகிறது முதலான தீமைகளை விட்டு, பிர்மசர்யத்தைச் சரிவரநடத்தி ஐம்புலன்களை அடக்கி இவைகளினால் பூர்ணமான ஆயுளையும், தர்மாசாரத்தினால் சிறந்தமக்கட்பேறு, அழியாச் செல்வம் இவைகளையும் அடையவேண்டும்.

दुराचारो हि पुरुषो लोके भवति निन्दितः ।
दुःखभागी च सततं व्याधितोऽल्पायुरेव च ॥   மனு 4. 157.

தீய ஆசாரங்களை அநுசரிக்கிற ஒருவன் சம்சாரத்தில் நல்ல ஜனங்களுடைய நிந்தைக்கு ஆளாகித் துக்கத்தை அடைந்து எப்பொழுதும் வியாதியுடன் கூடினவனாய் அல்பாயுசுக்கு இரையாகிறான்.

சுகதுக்கம்.

यद्यत्परवशं कर्म तत्तद्यत्नेन वर्जयेत् ।
यद्यदात्मवशं तु स्यात्तत्तत्सेवेत यत्नतः ॥
सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं सुखम् ।
एतद्विद्यात्समासेन लक्षणं सुखदुःखयोः ॥   மனு 4. 159. 160.

பிறர் ஆதாரணையிலிருக்கும் காரியங்களைக் குறித்துக் கவனிக்காமல் தன்னுடைய காரியங்களை ஊக்கத்துடன் ஒருவன் செய்யவேண்டியது. ஏனென்றால் (2) பராதீனத்திலிருக்கிற யாவும் துக்கத்தையும் தன்னுடைய ஆதீனத்திலிருக்கிறவைகளெல்லாம் சுகத்தையும் கொடுக்கும். சுருங்கச்சொல்லின் இவைகளே சுகதுக்கங்களினுடைய குறிகளாம்.

ஆனால் பராதீனத்திலிருக்கும் காரியம் ஒவ்வொன்றும் அவரவர்களுடைய ஒத்துமையின்பேரில் நடந்தேறவேண்டியது. உதாரணமாக, ஒரு குடும்பத்தினுடைய காரியங்களை மனைவி, புருஷன் இருவரும் ஒத்து நடத்தவேண்டியது. உள்ளன்புடன் புருஷன் மனைவியுடனும், மனைவி புருஷனுடனும் கலந்து நடத்தவேண்டும். புருஷனுக்குக் கீழ்ப்படிந்து மனைவி குடும்பக் காரியங்களை நடத்தவேண்டும். குடும்பத்தின் வெளிக்காரியங்களைப் புருஷன் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் தீய வழிகளில் இறங்குவதிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவேண்டும். கலியாணமானதிலிருந்து புருஷன், மனைவி, ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டவர்களாகப் பாவிக்கவேண்டும். அதாவது புருஷனுடைய நடை, உடை, பாவனை முதலியவைகள் மனைவியையும், ஸ்திரீயுடையது புருஷனையும் சேர்ந்தது. இருவருக்குந்தெரியாமல் ஒரு காரியமாவது நடக்கக்கூடாது. வேசித்தனம், போன்றசெயல்கள் அவர்களுடைய இல்லறசுகத்தைகெடுக்கக்கூடியவைகளாகும். இவைகளைப்பற்றிய எண்ணம் அவர்களுடைய மனதில் கொஞ்சமேனும் குடிகொள்ளக்கூடாது. எப்பொழுதும் ஸ்திரீயுடன் புருஷனும் புருஷனுடன் ஸ்திரீயும் திருப்தியடைந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் பிராமணனாயிருக்கும் பக்ஷத்தில், புருஷன் பிள்ளைகளுக்கும், ஸ்திரீ பெண்களுக்கும் வித்தையைக் கற்பிக்க வேண்டும். தங்களுடைய போதனு விளக்கத்தினால் மாணக்கர்களுக்கு நல்ல அறிவைக் கற்பிக்கவேண்டும். ஸ்திரீயினால் புருஷனும், புருஷனால்ஸ்திரீயும் பூஜிக்கதகுந்தவர்களே. அவர்கள் கல்விச்சாலையிலிருக்கும் வரையில் தங்களுடையகுருவைப் பெற்றோர்களைப்போல் கருதவேண்டும். முறையே குருவும் சீடர்களைத் தங்கள் குழந்தைகளாகக் கருதவேண்டும்.

உபாத்தியாயர், உபாத்தியாயினிகளுடைய ஒழுக்கங்களை மகாபாரதம் உத்தியோகபர்வம், விதுர நீதி 32-வது அத்தியாயத்தினுடைய சுலோகங்களா லறியவும்.

आत्मज्ञानं समारम्भस्तितिक्षा धर्मनित्यता ।
यमर्था नापकर्षन्ति स वै पण्डित उच्यते ॥

சோம்பேரித்தனமாயிருப்பது, வீண் காலங்கழிப்பது, சுகம், துக்கம் கேடு, லாபம், துதி, நிந்தை, மரியாதை, அவமரியாதை இவைகளை மதியாமல், தர்மத்திலேயே உறுதியான சிந்தையையும், விஷயசுகங்களினால் கவரப்படாம லிருக்கிற மனதையும், கொண்டவனும் ஆத்மஞானத்தை யுடையவனுமே பண்டிதன்.

निषेवते प्रशस्तानि निन्दितानि न सेवते ।
अनास्तिकः श्रद्धान एतत्पण्डितलक्षणम् ॥

எக்காலமும் தர்மகாரியத்தைச் செய்வதிலேயே கவனமுள்ளவனும், தருமமன்னியிலிருக்கும் காரியங்களை விட்டு விடுகிறவனும், ஈசுவரன், வேதம் சத்தியம், இவைகளிலிருந்து கவனத்தைவிடாமல் ஈசுவரனிலேயும், தர்மத்தி லேயும் உறுதியான நம்பிக்கையை உடையவனான ஒருவன் பண்டிதன் ஆவான்.

क्षिप्रं विजानाति चिरं शृणोति, विज्ञाय चार्थं भजते न कामात् ।
नासम्पृष्टो ह्युपयुङ्क्ते परार्थे, तत्प्रज्ञानं प्रथमं पण्डितस्य ॥

கடினமான விஷயங்களைக்கூட சீக்கிரம் அறிந்து கொள்ளுதலும், வெகு காலம் சாஸ்திரங்களைப்படித்து, கேட்டு, யோசனைசெய்தலும், தான் அறிந்த கொஞ்சத்தையும் பரோபகாரார்த்தமாக உபயோகித்தலும், சுயநலத்தைக் கருதி காரியம் ஒன்றும் செய்யாமலிருப்பதும், சமயமறியாமலும் கோராமலும் யோஜனை பிறர்களுக்குச் சொல்லாமலுமிருப்பதும் பண்டிதன் ஒருவனுடைய முதல் அடையாளமாகும். அடைவதற்குத்தகாத பொருளைக் கோராமலும் கஷ்டமேதாவதேற்படுமேயானால் அதைப்பற்றிக் கவலைப்படாமலும் ஆபத்துக் காலத்திலும் தன் தைரியத்தைக் கைவிடாமலிருக்கிறவனே பண்டிதன்.

नाप्राप्यमभिवाञ्छन्ति नष्टं नेच्छन्ति शोचितुम् ।
आपत्सु च न मुह्यन्ति नराः पण्डितबुद्धयः ॥

கேள்விகேட்பது முதலான பல வித்தைகளில் நிபுணனும், சாஸ்திரங் களை எடுத்துரைப்பதில் சாமார்த்தியமுள்ளவனும், தர்க்கம், ஸ்மிருதி இவைகளை அறிந்துகொண்டு கொஞ்சகாலத்தில் தெளிவாக உரைக்கக்கூடிய சக்தியையும் உடையவன் எவனோ அவனே பண்டிதன்.

प्रवृत्तवाक् चित्रकथ ऊहवान् प्रतिभानवान् ।
आशु ग्रन्थस्य वक्ता च यः स पण्डित उच्यते ॥

சத்தியத்திற்கு ஏற்றவாறு கார்யங்களை அறிகிறவராயும் மனச்சாக்ஷிக்கு ஏற்க காரியங்களைச்செய்கிறவராயும் ஆரியர்களுடைய அதாவது தர்மபுருஷர்களுடைய மரியாதையை மீராமலும் இருக்கிறவர்களேயே பண்டிதன் அல்லது புத்திமான் என்றழைக்க வேண்டும்.

श्रुतं प्रज्ञानुगं यस्य प्रज्ञा चैव श्रुतानुगा ।
असंभिन्नार्यमर्यादः पण्डिताख्यां लभते सः ॥

எங்கெந்த இடங்களில் இவ்விதமான கற்றுணர்ந்த ஸ்திரீகளும் புருஷர்களுமிருக்கிறார்களோ அங்கே சிறந்த ஒழுக்கங்கள் பெருகி பிரதிதினமும் ஆனந்தமதிகரிக்கும்.

மூடர்களுடைய லக்ஷணங்கள்.

अश्रुतश्च समुन्नद्धो दरिद्रश्च महामनाः ।
अर्थाश्चाऽकर्मणा प्रेप्सुर्मूढ इत्युच्यते बुधैः ॥
अनाहूतः प्रविशति ह्यपृष्टो बहु भाषते ।
अविश्वस्ते विश्वसिति मूढचेता नराधमः ॥

மகாபாரதம் உத்யோகபர்வம் விதுர நீதி அத் 32.

சாஸ்திரங்களைப்படிக்காமலும், கேழ்க்காமலும், கர்வத்துடன், இருப்பவர்களும், தரித்திரராயிருந்தும் வீணாய்மனப்பால் குடிக்கிறவர்களும், முயற்சி செய்யாமல் காரியங்களை முடிக்க சிரமப்படுகிறவர்களும், புத்திமான்களால் மூடர்களென அழைக்கப்படுகிறார்கள் (2) அழைக்காமல் சமையலறையையாவது வீட்டையாவதடைகிறவனும், தன் யோக்கியதைக்கு அதிகமான ஸ்தானத்தை அடையவிரும்புகிறவனும், கோராமல் சபையின் மத்தியில் பேசவிரும்புகிறவனும், விரும்பத்தகாதபொருள், மனிதன் இவைகளை நம்புகிறவனும் மூடனாகிறான். எல்லோரும் அவனை நீசன் என்றும் அழைக்கிறார்கள். எவ்விடத்தில் இம்மாதிரிபுருஷர்கள் உபாத்தியாயர்களாகவும், உபதேசகர்களாகவும் குருக்களாகவும், பெரியோர்களாகவும் இருக்கிறார்களோ அவ்விடத்தில் அவித்தையும், அதர்மமும், கலகமும், விரோதமும், ஏற்பட்டு அந்த இடம் துக்கத்தில் முழுகியிருக்கும்.

மாணாக்கர்களுடைய லக்ஷணங்கள்.

आलस्यं मदमोहौ च चापलं गोष्ठिरेव च ।
स्तब्धता चाभिमानित्वं तथाऽत्यागित्वमेव च ।
एते वै सप्त दोषाः स्युः सदा विद्यार्थिनां मताः ॥

சோம்பல், குடிவெறி, லாகிரி வஸ்துக்களின் உபயோகம், நிலையற்றமனம், வாயாடித்தனம், அதாவது பிரயோஜனமற்ற வார்த்தைகளைப்பேசல், படிப்பில் கீழ்ப்படியாத்தனம் கர்வம், பேராசை, இவைகளெல்லாம் மாணாக்கனுடைய குற்றங்களாகும். இவ்விதமானவர்களுக்குப் படிப்புவராது.

सुखार्थिनः कुतो विद्या कुतो विद्यार्थिनः सुखम् ।
सुखार्थी वा त्यजेद्विद्यां विद्यार्थी वा त्यजेत्सुखम् ॥

சுகங்களை கோருகிறவனுக்கு வித்தை எங்கிருந்து வரும்? வித்தையில் ஆசை உள்ளவனுக்கு சுகமேது? ஆகையினால் விஷய சுகத்தைக்கோருகிறவர்கள் வித்தையையும், வித்தையைக் கோருகிறவர்கள் விஷயசுகங்களையும் விட்டுவிடவேண்டும். வித்தையைக்கற்றுக்கொள்ள வேறுவழிகிடையாது.

सत्ये रतानां सततं दान्तानामूर्ध्वरेतसाम् ।
ब्रह्मचर्यं दहेद्राजन् सर्वपापान्युपासीतम् ॥

எக்காலமும் சத்தியாசாரத்தைக்கொண்டவர்களும் அடக்கப்பட்ட ஐம்புலன்களை அதாவது நாசஞ்செய்யாமலிருக்கும் வீர்யத்தைஉடையவர்களுமே பிரமசாரிகளாகவும், வித்வான்களாகவும் ஆகிறார்கள். ஆகையினால் உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிகளும் சுபலக்ஷணங்களுடன் கூடின உயர்ந்த குணங்களை யுடையவர்களாயிருக்க வேண்டும். தங்களுடைய சிஷ்யர்களை சத்தியத்தைத் தொடரும்படியாகவும், மரியாதையுடன் கூடினவனாகவும், அடக்கப்பட்ட இந்திரியங்களை உடையவனாகவும் விநயமுள்ளவனாகவும், இன்னும் பலவித நற்குணங்களுடன் கூடினவனாகவும், நல்லகாயபலம், ஆத்மபலம், இவைகளுடன் கூடினவனாகவும், வேதம் முதலானசாஸ்திரங்களில் வித்வானாகவும் செய்வதற்கே கஷ்டப்படவேண்டும். தீயகுணங்களிலிருந்து நல்லவழியில் திருப்பி உற்சாகத்தையும், புத்தியையும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். மாணுக்கர்களும் எப்பொழுதும்அடக்கப்பட்ட இந்திரியங்களை உடையவர்களாகவும், சாந்தகுணமுள்ளவர்களாகவும் சிநேகிதர்களோடும் உபாத்தியாயர்களோடும் அன்புடன் கூடினவர்களாயும், யோசனை உள்ளவர்களாயும், கருத்துள்ளவர்களாயும், வித்தை, நிறைந்த ஆயுசு, தர்மம், இவைகளை உடையவர்களாயுமிருக்கவேண்டும். இதுவே பிராமணர்களுடைய தர்மமாகும்.

க்ஷத்திரியர்களுடைய தர்மம்.

க்ஷத்திரியர்களுடைய கடமை, இராஜதர்மத்தை குறிக்கும் அடுத்த அத்தியாயத்தில் சொல்லப்படும்.

வைசியர்களுடைய தர்மம்.

பல தேசங்களுடைய பாஷைகளையும், வியாபாரநோக்கம், உபாயம் இவைகளைக்கற்றுக் கொள்ளுகிறதும், வெளிதேசங்களுக்குச் சென்று வருகிறதும் லாபத்தைகொடுக்கும் காரியங்களை ஆரம்பம்செய்கிறதும், மிருகங்களைக்காப்பாற்றுகிறதும், வேளாண்மையையும் கைத்தொழில்வேலையும் விருத்திசெய்கிறதும், தேசத்தினுடைய பொருளைப்பெருகச்செய்கிறதும், சகலசெய்கைகளிலும், சரியாகவும், நம்பிக்கையாகவும் உண்மையாகவுமிருக்கிறதும், வித்தை, தர்மம், இவைகளுடைய மேன்மையில் பணத்தைச்செலவழிக்கிறதும் சாமான்கள் நஷ்டமாகாமலிருக்கும்படி காரியங்களைச்செய்வதுமேயாம்.

சூத்திரர்களுடைய கடமை.

சேவைசெய்யவேண்டிய காரியங்களில் சாமர்த்தியமுள்ளவர்களாகவும் பாகசம்பந்தமான பலவிஷயங்களில் நிபுணர்களாகவும், மிக்க ஆவலுடன் பிராமணர்களிடம் பணிவுசெய்து அவர்களிடத்திலிருந்து தன்ஜீவனஞ் செய்வதும் சூத்திரர்களுடைய கடமை. பிராமணர்களும் இவர்களுக்கு அன்னபானாதிகளை அளித்து வஸ்திரங்களைக்கொடுத்து விவாகஞ்செய்து வைத்து அதற்கு வேண்டியதையாவது அல்லது மாதச்சம்பளமாவது அளிக்கவேண்டும்.

நான்கு குலங்களும், பரஸ்பர அன்புடனும் பிரேமையுடனும் உபகாரத்தினுடனும் இருந்துகொண்டு தங்கள் தங்களுடைய சுகம், துக்கம், லாபம், கேடு, இவைகளைப் பொதுவாக பாவித்து ஜனங்களினுடைய மேன்மையை முன்னிட்டு தங்களுடைய உடல், பொருள் ஆவி இவைகளைப் பிரயோசனப்படுத்தவேண்டும்.

ஸதிரீபுருஷர்களுடைய குற்றங்கள்.

புருஷனும் மனைவியும் ஒருக்காலமும் விட்டுப் பிரிந்திருக்ககூடாது. ஏனென்றால்

पानं दुर्जनसंसर्गः पत्या च विरहोऽटनम् ।
स्वप्नोऽन्यगेहवासश्च नारीसन्दूषणानि षट् ॥ மனு 9. 13.

கள்ளு, சாராயம் முதலான லாகிரிவஸ்துக்களை அருந்துதல், துஷ்டர்களுடன் சகவாசஞ்செய்தல், புருஷனைவிட்டு விடுதல், கள்ளங்கபடத்துடன்கூடின சந்நியாசிகளைச் சேவைசெய்யுங் காரணத்தைக்கொண்டு இங்குமங்கும் அலைதல், பிறருடைய அகத்தில் வசித்தல், தூங்குதல், இத்தகையகாரியங்கள் ஸ்திரீகளுக்கு அபவாதத்தை உண்டுபண்ணும். புருஷர்களுக்கு மப்படியே.

ஸ்திரீபுருஷர்கள் பிரிந்திருக்க இரு காரணங்களுண்டு. கார்யத்தின் மீது தேச சஞ்சாரஞ் செய்வதினால் பிரிக்கப்படுகிறது. காலனால் அதாவது மரணத்தினால் பிரிக்கப்படுகிறது. அயல்தேசயாத்திரைச் செய்யும்பொழுது மனைவியையுங்கூட அழைத்துப்போவதினாலேயே முதற்பிரிவினையின் காரணத்தைத் தடுக்கலாம். இவ்விதம் செய்வதினால் வெகுகாலம் பிரியாதிருக்கலாம்.

மறுவிவாகம்.

வினா—ஸ்திரீபுருஷர்கள் பல தடவை விவாகஞ்செய்து கொள்ளலாமா? கூடாதா?

விடை:—இருவரும் உயிரோடிருக்கும் பொழுது கூடாது.

வினா:—ஒருவர் இறந்துவிட்டால் மற்றவர் மறுவிவாகஞ் செய்துகொள்ளலாமா?

விடை:—ஆமாம் மனு இதைக்குறித்துச்சொல்லுகிறதாவது.

सा चेदक्षतयोनिः स्याद्गतप्रत्यागतापि वा ।
पौनर्भवेन भर्त्रा सा पुनः संस्कारमर्हति ॥ மனு 9. 179.

ஸ்திரீபுருஷருக்கு பேருக்கு மாத்திரம் கலியாணமாய், தேகசம்பந்தம் ஆகாமலிருக்கும் பக்ஷத்தில் புனர்விவாகம் செய்துகொள்ளலாம். பிரம க்ஷத்திரிய வைசியர்கள் கலியாணஞ் செய்துகொண்டு தேகசம்பந்தமான பிறகு மனைவி இறந்துபோனபோதிலுங்கூட புனர்விவாகம்செய்துகொள்ளக்கூடாது.

வினு:—(அவ்விதம் செய்து கொள்ளுகிறவர்களுடைய) புனர்விவாகத்தினுல் என்ன கெடுதல்கள் ஏற்படும்.

விடை:—கீழ்க்கண்டவைகள் முக்கியமான கெடுதல்கள் (1) அவர்களிருவருக்கும் அதிக நேசமிருக்காது. ஏனென்ருல் புருஷன் இஷ்டம் வைத்தபொழுது மனைவியையும், மனைவிக்கு இஷ்டம் வாய்த்தபொழுது புருஷனையும் விட்டு விட்டு, வேறு யாருடனுவது கூடுவதற்கு எத்தனிப்பார்கள். (2) புருஷனுவது மனைவியாது இறந்து விட்ட பிறகு வேறு கலியாணஞ்செய்துகொண்டால், இறந்தவர்களுடை ஐசுவர்யங்களை, புதிதாய்க்கலியாணஞ் செய்து கொண்டவர்கள் எடுத்து கொண்டு குடும்பத்திற்குள்ளே கலகம் அதிக மேற்படுவதற்குக் காரணமாயிருப்பார்கள். (3) அரிய பெரிய குடும்பங்கள் பல அழிந்து மறைந்து அவர்கள் பெயரன்னியில் அவர்களுடைய ஐசுவர்யங்கள் தூசியாய்ப்பறந்துவிடும் (4) ஸ்திரீ புருஷர்களுடைய கற்பு கெட்டுப்போய் விடும். இன்னும் இதைப் போலத்தகெடுதல்களும் புனர்விவாகத்தினுல் ஏற்படுகிறது. ஆகையினுல் முதல் மூன்று குலங்களும் இதையனுசரிக்கக்கூடாது.

வினு:— வம்ச பரம்பரை இல்லாது இறந்துவிட்டால் குடும்பம் நாசமாய்ப்போய்விடும். ஸ்திரீ புருஷர்கள் துஷ்டகர்மங்களை, புனர்விவாகஞ் செய்துக்கொள்ளாவிடில், செய்யத்துணிந்து வியபசாரித்தனத்தைக் கைக்கொள்வார்கள். ஆகையினுல் புனர்விவாகம் செய்துக்கொள்ளவேண்டும்.

விடை:— இல்லை. சரிவர பிரமசரியத்தை அனுசரித்திருப்பார்களேயானுல் கெடுதல்களொன்றுமே ஏற்படாது. சந்தான மற்றுபோய், வம்சபரம்பரைச் சரிவர இருக்கவேண்டுமென்றிருந்தால் அப்பொழுது, சுயஜாதிக் குழந்தையாரையாவது ஸ்வீகாரஞ்செய்து கொள்ளலாம். இப்படிச்செய்யும் விஷயத்தில் வியபசாரித்தன மொன்றுமேற்படாது அல்லது கற்பழிந்து போம் என்னும்பயமிருந்தால் அப்பொழுது "நியோக" கலியாணஞ்செய்துக் கொண்டு குழந்தைகளைப்பெறலாம்.

நியோக விவாகம்.

வினு:— புனர்விவாகத்திற்கும், "நியோக" த்திற்கும் வித்தியாசங்களென்ன ?

விடை:— (1) கலியாணமானவுடன் மணப்பெண் ஒருவள் தன் தகப்பனகத்தைவிட்டு மணவாளனுடைய வீட்டில் வசிக்கிருள். பிதாவினுடைய சம்பந்தமும் குறைந்துபோகிறது. ஆனுல் (நியோக விஷயத்தில்) விதவை இறந்த, தன் புருஷனுடைய வீட்டில்வசிக்கிருள். (2) கலியாணத்தினுல் பிறந்த குழந்தைகள், தன்தாயின் புருஷனுடைய பொருள்களை அடைகின்றனர்.

நியோகத்தால் உண்டான விதவைகளின் சந்தானம் ஜனிக்கச்செய்கின்றவனுடையதாக கருதப்படுகிறதில்லை. ஆகையினால் அவனுடைய வம்சத்தையுஞ் சேர்ந்தவர்கள் ஆகிறதில்லை. இறந்த தன்தாயின் புருஷனுடைய மக்களாகக்கொள்ளப்பட்டு அவருடைய கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாகவும், அவருடைய சொத்துக்களுக்கு உரிமைக்காரர்களாகவும் கருதப்பட்டு அவருடைய வீட்டிலேயே வசிக்கிறார்கள். (3) விவாகத்தினால் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் பரஸ்பர சேவைக்கு பாத்திரமாகிறார்கள். நியோகத்தினால் இக்கட்டுப்பாடு முறிந்துபோய் விடுகிறது. அதாவது (ஒப்பந்தகாலம் கழிந்த பிறகு) நியோக உறவுகளை உதறிவிடலாம். (4) கல்யாணமான தம்பதிகளுடைய, சம்பந்தம் மரண பரியந்தம் நிலைத்திருக்கின்றது. ஆனால் "நியோக" த்தினுடைய சம்மந்தம் மக்கட் பேருண்டாகும் வரையில்தான். (5) கலியாணமான தம்பதிகள் ஒன்றுசேர்ந்து குடும்பத்தினுடைய நன்மைக்காகவே உழைக்கிறார்கள். நியோக தம்பதிகள் அவரவர்களுடைய சொந்த குடும்ப நன்மைக்காக முறையே உழைக்கிறார்கள்.

வினா:— நியோகத்தினுடையவும், விவாகத்தினுடையவும் நியமங்கள் ஒன்றா? அல்லது வெவ்வேறா?

விடை:—கொஞ்சவித்தியாச முண்டு. சிலவித்தியாசங்களை முன்னமே யேகூறியாய்விட்டது. மீதியான சிலவற்றை இங்கே சொல்லுவோம். (1) கலியாணத்தினால் சேர்க்கப்பட்ட இருவர்கள் பத்து குழந்தைகள் வரையில் பெற்றெடுக்கலாம். நியோகத்தினால் சேர்க்கப்பட்டவர்கள் இரண்டு அல்லது நான்கு குழந்தைகளுக்குமேல் பெற்றெடுக்ககூடாது (2) குமாரனுக்கும், குமாரிக்கும் கல்யாணமாவது போல், விதவைக்கும், மனைவி இழந்தவனுக்கும் நியோகமாகிறதே தவிர ஒருபொழுதும் குமாரனுக்கும் குமாரிக்குமல்ல (3) கலியாணத்தினால் சேர்க்கப்பட்டதம்பதிகள் ஒன்றாய் எப்பொழுதும் வசிப்பது போல் நியோகத்தினால் சேர்க்கப்பட்டவர்கள் வசிப்பதில்லை. ருதுசமயம் தவிர வேறுசந்தர்ப்பங்களில் அவர்கள் சேறுகிறதில்லை. விதவையுடையவோ அல்லது மனைவி குழந்தையினுடையவோ, யாருடைய நன்மைக்காவது சரி, இரண்டாவது சேர்க்கையுடன் பிரிந்துவிட வேண்டும். இரண்டு மூன்றுவருடம் வரையில் விதவை குழந்தையைப் போஷித்துவிட்டு பிறகு புருஷனிடம் கொடுத்துவிடவேண்டியது. இவ்விதமாக, கைம்பெண் ஒருவள் தனக்காக இரண்டு குழந்தைகளையும், தன் நியோக புருஷர்கள் நால்வர்களில் ஒவ்வொருவருக்காக இரண்டு குழந்தைகளையும் ஜனனஞ்செய்யலாம். இம்மாதிரியே, மனைவி இழந்தவனும் தனக்காக இரண்டு குழந்தைகளையும், தன்னுடைய நான்கு விதவைகளுக்காக ஒவ்வொருக்கும் இரண்டு குழந்தைகளை பெற்றுக்கொள்ளலாம். ஆகையினால் ஒவ்வொருதம்பதியும் பத்து குழந்தைகளைப் பெறலாம் இதையேதான் வேதமும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

इमां त्वमिन्द्रमीढ्वः सुपुत्रां सुभगां कृणु ।
दशास्यां पुत्रानाधेहि पतिमेकादशं कृधि ॥ ரிக். 10. 85. 48.

பலவானும், மக்கட்பேறை ஆக்க சக்தியுமுள்ள ஓ மனிதனே! விவாகமான எந்த ஸ்திரீயையாவது, விதவையையாவது சந்தோஷமுள்ளவளாகச் செய்து நல்லகுழந்தைகளை அடை! கலியாணஞ்செய்த இவளிடமிருந்து பத்து பிள்ளைகளைப்பெற்று பிறகு இவளை குடும்பத்தைச்சேர்ந்த பதினொன்றாகக்கருது. ஸ்திரீயே! நீயும் கலியாணஞ்செய்த இந்தமனிதனுடனாவது அல்லது "நியோக"த்தினால் இணைக்கப்பட்டப் புருஷர்களுடனாவது பத்துபிள்ளைகளைப்பெற்று பிறகு அந்த புருஷனை பதினொன்றாவதாகக் (குடும்பத்தை சேர்ந்த) கருது. வேதப்பிரகாரம் பிரம க்ஷத்திரிய சூத்ர குலத்தைச்சேர்ந்த இருவர்கள் எக்காரணத்தினாலும் பத்து குழந்தைகளுக்கு மேல்பெறக்கூடாது. ஏனென்றால் அதிகக்குழந்தைகள் பிறப்பதினால் சந்தானங்கள் நிர்பலமாயும் நிர்புத்தியாயும், அற்ப ஆயுசுடன் கூடினதாயும் ஆகின்றன. இப்படிப்பட்ட பெற்றோர்களும் அற்பாயுளை அடைந்து வியாதிகளுக்காளாய், கடைசிநாள்களில் மிக்க துன்பத்தையும் துக்கத்தையும் அனுபவிக்கின்றார்கள்.

வினா:—ஆனால் "நியோகம்" வியபசாரித்தனத்தைப்போல் காண்றதே?

விடை:—கலியாணமாகாத இருவர்களுடைய சேர்க்கையே வியபசாரித்தனமெனப்படும். அது போலவே, நியோகமாகாத மனைவி இழந்தவன், விதவை, இவ்விருவர்களுடைய சேர்க்கையும். சாஸ்திர ப்ரகாரம் செய்யப்பட்ட கலியாணத்தினால் எவ்விதம் வியபசாரித்தனமேற்படாதோ அவ்விதமே வேதம் முதலான சாஸ்திரபிரகாரம் செய்யப்பட்ட "நியோக" த்தினால் வியபசாரித்தனம் ஏற்படாது.

வினா.— அதுண்மையே யானால் வேசித்தனம்போல் காணப்படுகிறதே?

விடை.—இல்லை. வேசி ஒருவள் ஒருமனிதனையே அண்டுகிறதில்லை. அவளுடைய சேர்க்கைக்கு நியாயகட்டுப்பாடு ஒன்றும் கிடையாது. ஆனால் நியோகத்திற்குக்கட்டிருக்கிறது. தன் பெண்ணைக் கலியாணஞ் செய்துக் கொடுக்க ஒருவன் வெட்கப்படுகிறதில்லைபோலவே, நியோகத்திலும் வெட்கப்படுகிறதில்லை வியபசாரத்திற்குப்பழகின ஜனங்கள் கலியாணமான போதிலுங்கூட இந்தகெட்ட வழக்கத்தை விடுகிறதில்லை.

வினா.—"நியோகம்" பாபமான கார்யமாக எங்களுக்குப் புலப்படுகிறது.

விடை.—நியோகத்தைப் பாபமாகக்கருதுவீர்களேயானால், நீங்கள் ஏன் கலியாணத்தையும் அவ்வண்ணமே, கருதலாகாது? நியோகத்தை தடுப்பதினாலேயே பாபம் ஏற்படுகிறது. எவ்விதமென்றால் சிருஷ்டியின் பிரகாரம், உலகத்தை வெறுத்துவிட்ட வித்வான், யோகி, இவர்களுடைய விஷயத்தில் தவிர இவ்வுலகில் மற்ற ஸ்திரீ புருஷர்களுடைய ஸ்வபாவகவர்ச்சியைத் தடுப்பது முடியாதகாரியம். விதவைகளுடையவும் மனைவி இழந்தவர்களுடையவும் கர்ப்பதானத்தை நாசஞ்செய்து (நியோகஞ்செய்யாமல் தடுத்து

மனதைப்புண்படுத்துவதை நீங்கள் பாபமாகக் கருதவில்லையா? ஏனென்றால் சிறுவயதில் யாவரும், குழந்தைகளைப்பெற்று விஷயசுகங்களை அனுபவிக்க விரும்புவார்கள். இந்த அவா அதிகமாயிருக்கிறபடியினால், இராஜ்யவியவகாரம் ஜாதிக்கட்டு,நீதிக்கட்டு,இவைகளினால் தடுக்கப்பட்டால்அவர்கள்இரகசியமாகக் கெட்டவழிகளைத்தேடுவார்கள். இந்திரியங்களை அடக்க சக்தியுள்ளவர்களுக்கு நியோகமாவது, கலியாணமாவது செய்யாமல், இக்கேட்டை நிறுத்தலாம். அப்படி முடியாதவர்களுக்கு கலியாணம் அல்லது நியோகஞ்செய்யவேண்டும். அவ்வண்ணம் செய்வதினால் வியபசாரித்தனங்குறைந்து, மானிட வர்க்கம் விருத்தியாகும். அதுவுமன்றில் கர்ப்பத்தை அழிப்பது அடியோடு மறைந்து விடும். நீசகுல ஸ்திரீயுடன் உயர்குலப்புருஷன் ஆசைகொள்வது, வியபசாரிகளுடைய வேசித்தனம், உத்தமகுலங்களினுடைய அபவாதம், வம்சநாசம் ஸ்திரீ புருஷர்களுடையதுக்கங்கள் இன்னும் வேறான பாபங்கள், கெடுதல்கள், கலியாணத்தையும், நியோகத்தையும், அநுசரிப்பதினால் நின்று போய்விடும். இக்காரணங்களுக்காகவே நியோகத்தை ஆதரிக்கவேண்டும்.

வினா.— நியோகத்தில் எந்தெந்தவிதிகளை அநுசரித்தல் அவசியம்?

விடை.— கலியாணத்திற்கு நல்ல ஜனங்களினுடைய அனுமதியும், இரு பக்கங்களினுடைய பரஸ்பர ஒற்றுமையும், எவ்விதம் அவசியமோ, அவ்விதமே நியோகத்திற்கும் அவைகள் அவசியம். நியோகஞ்செய்து கொள்ளவேண்டுமென்கிற இச்சையுள்ள ஸ்திரீ புருஷர்கள், தங்கள் தங்களுடைய குடும்ப நபர்களுக்கு முன்னிலையில் தான் நியோகக் கலியாணஞ்செய்து கொள்ளப்போவதாகவும், சந்தானமுண்டானவுடன் விட்டுப்பிரிந்து விடுவதாகவும், வெளிப்படுத்த வேண்டும். அவ்விதம் வெளிப்படுத்தின பிரகாரம் நடக்காவிடில் அவர்கள் பாபிகளாய், இராஜ்யத்திலும், சமூகத்திலும் தண்டனைக்காளாகிறார்கள். மாதமொருமுறை கர்ப்பாதானத்தின் கார்யத்தைச்செய்ய வேண்டும். கர்ப்பமானபிறகு ஒரு வருஷகாலம் தனித்தனியே வசிக்கவேண்டும்.

வினா.—நியோகம் அவரவர்களுடைய குலத்திலேயே நடக்கவேண்டுமா? அல்லது வேறுகுலத்தில் நடக்கவேண்டுமா?

விடை.—தன்னுடைய குலத்திலாவது அல்லது அதைவிட உயர்ந்த குலத்திலாவது ஸ்திரீகள் நியோகம் செய்துகொள்ளவேண்டும். உதாரணமாக வைசிய ஸ்திரீ ஒருவள் பிராம்மணனுடனாவது அல்லது தன் வைசியகுலத்தவனையேயாவது அல்லது க்ஷத்திரிய ஸ்திரீ ஒருவள் க்ஷத்திரிய அல்லது பிராமணனையாவதும் பிராமண ஸ்திரீ பிராம்மண புருஷனையுமே அடைய வேண்டும். ஏனென்றால் வீர்யம் அதே வீர்யத்துடனாவது அல்லது உயர்ந்த வீர்யத்துடனாவது சேரவேண்டும். ஒருபொழுதும் தாழ்ந்த வீர்யத்துடன் சேரக்கூடாது. வேதோக்தமாய் கலியாணமாவது நியோகமாவது செய்துக் கொண்டு சந்ததிகளை உண்டுபண்ணுவதே மனிதர்களின் கடமையாகும்.

வினா.—புனர் விவாகம் செய்துகொள்ளாது ஒருவன் நியோகத்தை அனுசரிப்பானேன்?

விடை.—வேதம் முதலான சாஸ்திரப்பிரகாரம், பிராமண ஜாதியார் ஒரு தடவையே கலியாணஞ்செய்து கொள்ளவேண்டுமேயல்லாது இரண்டு தடவை செய்துக்கொள்ளக் கூடாதென்று சொன்னோம். பெண்பிள்ளைகளினுடைய கலியாணம் நியாயத்தின்பேரில் ஏற்பட்டிருக்கிறபடியினுல், விதவை ஒருவளுடன் குமாரனுடைய கலியாணமும், மனைவி இழந்தவனுடன் பெண் ஒருவள் கலியாணமும் நியாயமாகாது. மனிதன் விதவையை கலியாணம் செய்துக்கொள்ள விரும்பாமல் இருப்பதுபோல், பெண்ணும் மனைவி இழந்த புருஷனை கலியாணஞ் செய்துக்கொள்ள விரும்பமாட்டாள். பெண் ஒருத்தி மனைவி இழந்தவனையும், புருஷன் ஒருவன் விதவையையும் மணம்புரியாமலிருக்கும்பொழுது நியோகத்தினுடைய அவசியம் ஏற்படுகிறது. சேருகிறதற்கு, சேருகிறதையே விவாகவிஷயங்களிற்சேர்க்கவேண்டும்.

வினு.—வேதாதிசாஸ்திரங்களில் விவாகத்திற்குப் பிரமாண மிருப்பது போல், நியோகத்திற்குமிருக்கிறதா ?

வேதமும் நியோகமும்.

விடை.—பல பிரமாணங்களிலிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு சொல்வோம்.

कुहस्विद्दोषा कुह वस्तोरश्विना कुहाभिपित्वं करतः कुहोषतुः ।
को वां शयुत्रा विधवेव देवरं मर्यं न योषा कृणुते सधस्थ आ ॥ ரிக் 10. 4. 2.
उदीर्ष्व नार्यभिजीवलोकं गतासुमेतमुप शेष एहि ।
हस्तग्राभस्य दिधिषोस्तवेदं पत्युर्जनित्वमभि सं बभूथ ॥ ரிக். 18. 8.

(அச்விஞ) ஒ, ஸ்திரீபுருஷர்களே ! (தேவரம் விதவேவ) விதவையானவள் தன்னுடைய இரண்டாவது புருஷனுடனும் (யோஷா) கலியாணமான ஸ்திரீ ஒருவள் (மார்யன்) தன்புருஷனுடனும் (சதஸ்தே) முறையே படுக்கையில் படுத்துக்கொண்டு (ஆ, கிருணுதே) குழந்தைகளைப்பெறுவதுபோல், நீங்களும் செய்யவேண்டியது. (குஹாபிபிதவம்) எங்கிருந்து பதார்த்தங்களை அடைந்தீர்கள் ? எப்படி ? (குஹோஷத:) நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள் ? (கோவாம்சயுத்ரா) நீங்கள் தூங்குமிடமெங்கே ? நீங்கள் யார் ? உங்களுடைய ஊர் யாது ? தன்தேசத்திலிருந்தபோதிலும், அன்னிய நாடுகளிலிருந்தபோதிலும் புருஷனும் மனைவியும் ஒன்று சேர்ந்திருக்கவேண்டுமென்றும் தன்னுடைய புருஷனிடம்போல், நியோகத்தினுல் விதவை ஒருவள், ஒருவனிடம் சேர்ந்து சந்ததிகளை அடையலாம் என்று இதனுல் ஏற்படுகிறது.

வினு:—ஒருமனிதனுக்கு இளைய சகோதரனில்லாவிடில் விதவையானவள் யாருடன் நியோகஞ் செய்யலாம்.

விடை.—தேவர் என்றழைக்கப்படும் தன்னுடைய இரண்டாவது புருஷனுடன் ? தேவர என்னும் வார்த்தைக்கு நிருக்த பிரகாரம் அர்த்தம் யாதெனில்:

देवरः कस्माद् द्वितीयो वर उच्यते ॥ நிருக். 3. 15.

தன்புருஷன், புருஷனுடைய மூத்தசகோதரர், இளைய சகோதரர் அதே குலத்தைச் சேர்ந்தவர், யாராயிருந்தபோதிலும் சரி, ஒரு விதவையுடைய இரண்டாம் புருஷனுக்கு "தேவர்" என்று பெயர்.

(நாரி) ஓ, விதவையே! (ஏதம் கதாஸும்) இறந்த இப்புருஷனுடைய ஆசையைவிட்டு ஒழித்து (சேஷே) ப்பாக்கியிருக்கிற புருஷர்களில் (அபிஜீவலோகம்) பிழைத்திருக்கிற இரண்டாவது புருஷனை (உபைஹி) அடைந்து (உதீர்ஷ்வ) கீழ்க்கண்டதை யோசனைச்செய்து கவனத்தில் வைத்துக்கொண்டு நடக்கவும்.

புனர்விவாகம் செய்கிறவனுடைய நலத்திற்காக உண்டாகும் இக்குழந்தைப் பதிக்குச்சேரும். உன்னுடைய நன்மைக்காக நியோகமேற்பட்டால், பிறக்கும் குழந்தை உன்னுடையது. அப்படியே உனக்கு ஏற்பட்டபுருஷனும் நடக்க வேண்டும்.

अदेवृघ्न्यपतिघ्नी हैधि शिवा पशुभ्यः सुयमाः सुवर्चाः ॥
प्रजावती वीरसूर्देवृकामा स्योनेममग्निं गार्हपत्यं सपर्य ॥ அதர். 14. 218.

(அபதிகனயதேவிருத்தி) புருஷனுக்கும் தேவருக்கும் துக்கங்கொடுக்காமலிருக்கும் ஸ்திரீயாகிய நீயே (இஹ) இந்தகிரகாச்ரமத்தில் (பசுப்ய:) பிராணிகளின் பொருட்டு (சிவா) அன்புள்ளவராயிருக்கிறவரும் (சுயமா:)தர்மமாகவும் நியாயமாகவுமிருக்கப்பட்ட வழிகளில் நடக்கிறவரும் (சுவாசா) எல்லா சாஸ்திர வித்தையோடுகூடினவராயிருக்கிறவரும் (பிரஜாவதி) புத்திர பௌத்திரர்களோடு (வீரசு:) வீரதீரசூரபுத்திரர்களை ஜனிக்கும் (தேவ்ருகமா) இரண்டாவது புருஷனை இச்சிக்கும் நீ (ஸ்யோனு) எல்லாரிலும் சுகத்தைக் கொடுக்கும் நாயகனையாவது தேவரையாவது (ஓதி) அடைந்து (இமம்) இந்த (கார்ஹபத்யம்) கிரகஸ்த சம்பந்தமான 'அக்னிம்' அக்னிஹோத்திரத்தை (சபர்ய) ச்செய்யவேண்டும்.

तामनेन विधानेन निजो विन्देत देवरः ॥ மனு. 9. 69.

ஈன்ற ஒரு விதவை இறந்த தன்புருஷனுடைய சிறிய அல்லது பெரிய சகோதரர்களைக்கலியாணம் செய்துக்கொள்ளலாம்.

வினு.—ஒரு புருஷனுவது, ஸ்திரீயாவது எவ்வளவு தடவை நியோகம் செய்துகொள்ளலாம்? அப்படி விவாகஞ்செய்துகொண்ட புருஷர்களுக்கு என்ன பெயர்.

सोमः प्रथमो विविदे गन्धर्वो विविद उत्तरः ।
तृतीयो अग्निष्टे पतिस्तुरीयस्ते मनुष्यजाः ॥ ரிக். 10. 85.

விடை.— ஓ ஸ்திரீயே, கலியாணத்தினுல்இணைக்கப்பட்ட உன்னுடைய புருஷன் (கலியாணத்திற்குமுந்தி) பரிசுத்தமானகுணம் முதலானவைகளுடன்

கூடியிருந்தபடியினால் சோம வென்றும், நியோகத்தினால் இணைக்கப்பட்ட இரண்டாவது புருஷன் வேறே ஒரு ஸ்திரீயுடன் (கலியாணஞ் செய்துக் கொண்டு) வசித்தபடியினால் காந்தர்வன் என்றும், நியோகத்தினால் இணைக்கப்பட்ட உன்னுடைய மூன்றாவது புருஷன் அதிக ஆவல் உள்ளவனா யிருப்பதினால் அக்னி என்று முறையே அறியப்படுவார்கள். மீதி புருஷர்களெல்லாம் நாலிலிருந்து பதினொன்றுவரையில் மனிதர்கள் என்று அறியப்படுகிறார்கள்.

கீழ்கண்ட வேதமந்திரப் பிரகாரம், ஸ்திரீ ஒருவள் ஒவ்வொருவனாக பதினொன்றுபுருஷர்களை நியோகத்தினால் அடைகிறதுபோல், புருஷர்களும் பதினொன்றுஸ்திரீகளை அடையலாம்.

इमां त्वमिन्द्र........पतिमेकादशंकृधि ॥ ரிக். 10. 85. 45.

"..............பதினொன்றாவது புருஷனை நியோகத்தினால் அடை"

வி௫.— ஏகாதச வார்த்தையினால், பத்து பிள்ளைகளாகவும், பதினொன்றைப்புருஷனாகவும் ஏன் அறியக்கூடாது?

விடை.—உங்களுடைய அர்த்தப் பிரகாரம் பார்த்தால் வேதப்பிரமாணங்களுள் வித்தியாசமான அர்த்தம் ஏற்படும். உங்களுடைய அர்த்தப்பிரகாரம் இரண்டாவது புருஷனைக்கூட ஒருஸ்திரீ அடையக்கூடாது.

देवराद्वा सपिण्डाद्वा स्त्रिया सम्यङ् नियुक्तया ।
प्रजेप्सिताऽधिगन्तव्या सन्तानस्य परिक्षये ॥
ज्येष्ठो यवीयसो भार्यां यवीयान्वाग्रजस्त्रियम् ।
पतितौ भवतो गत्वा नियुक्तावप्यनापदि ॥
औरसः क्षेत्रजश्चैव ॥ மனு. 9. 59. 58.

சந்ததி உண்டாகாமல் புருஷன் இறந்து விடுவானேயானால் அவனுடைய விதவை இறந்த தன் புருஷனுடைய ஆறாவது வம்சத்திற்குள் உள்ள மனைவியை இழந்த சகோதரர்கள் (இளையவனானாலும் சரி, மூத்தவனானாலும் சரி) சுய ஜாதிக்காரன், அல்லது உத்தம ஜாதிக்காரன் யார் ஆனாலும் சரி இரண்டு பேரும் சந்ததியை உண்டுபண்ணவிரும்பும் விஷயத்தில் நியோகஞ்செய்து கொள்ளலாம்.

சந்ததியை உண்டுசெய்ய வேண்டும் என்கிற எண்ணமன்னியில் மோகத்தினால், ஒரு மூத்தசகோதரன் தன் இளையவனுடைய மனைவியையும், இளைய சகோதரன் மூத்தசகோதரன் மனைவியையும் நியோகபாவனைக்காட்டி அடைவார்களானால் அவர்களை இழிவாகக் கருதவேண்டும். இரண்டாவது கர்ப்பத்துடன் நியோககாலம் முடிந்துவிடுகிறது. அதற்கப்புறம் அவர்கள் காமக்குறியான சந்திப்புகள் செய்யக்கூடாது. இருவர்களுடைய நன்மையை முன்

னிட்டு நியோகமேற்படுமானால் அது நான்காவது கர்ப்பத்துடன் முடியவேண்டும். மேற்சொன்ன மாதிரி பத்து குழந்தைகளைப் பெறலாம். அதற்கப்புறம் சேருகிறவர்களைக் காமாதுரர்களாகவே கருதவேண்டும். அவர்களை மானங்கெட்டவர்களாக எண்ணவேண்டும். பத்து கர்ப்பங்களைவிட அதிகமாக தேகசம்பந்தம் செய்வார்களானால் அவர்கள் காமிகளாகவும், நிந்திக்கத் தகுந்தவர்களாகவுமாகிறார்கள். ஏனென்றால் கலியாணமும், நியோகமும் சந்தானோற்பத்திக்காகவே ஏற்பட்டது. விலங்குகளைப்போல் காமகிரீடைக்காக இல்லை.

வினா.—நியோகம் என்பது இறந்த பிறகா, அல்லது புருஷன் பிழைத்திருக்கும் பொழுதேயா?

விடை.—புருஷன் (அல்லது மனைவி) பிழைத்திருக்கும் பொழுதே நியோகஞ் செய்துகொள்ளலாம். இதோ, இதற்கு வேதப்பிரமாணம்.

अन्यमिच्छस्व सुभगे पतिं मत् ॥ ரிக். 10. 10.

எப்பொழுது புருஷன் சந்தானோற்பத்தி செய்வதற்குச் சக்தியற்றவனாக ஆகிறானோ அப்பொழுது தன் மனைவியைப்பார்த்து "ஓ! சௌபாக்கியமுள்ளவளே! நீ என்னைவிட வேறு ஒருவனை விரும்புவாய், ஏனென்றால் என்னிடத்திலிருந்து சந்ததியை அடைய உன்னால் முடியாது" என்றுசொல்லவேண்டும். நியோகத்தைக்கோருகிற ஸ்திரீயானவள் கலியாணஞ்செய்து கொண்ட தன் புருஷனைப்பணிய வேண்டும். அம்மாதிரியே காலசம்பந்தமான பிணிகளிலிருந்து வருந்திக்கொண்டு சந்ததியை உண்டுபண்ணயோக்கியமற்ற ஸ்திரீயும் தன் புருஷனை நோக்கி "ஓ! எஜமானனே! என்னிடத்திலிருந்து சந்ததியை உண்டு செய்யவேண்டுமென்கிற ஆசையை விட்டு விதவை ஒருவளுடன் நியோகம் செய்துகொள்ளுங்கள்" என்று சொல்லவேண்டும்.

இதற்குச் சரித்திர சம்பந்தமான பிரமாணங்களில் சிலவற்றைச்சொல்லுவோம்.

பாண்டுவின் மனைவிகளான **குந்தியும்**, **மாத்ரியும்**, நியோகத்தை கைக்கொண்டார்கள். தன் சகோதரர்களாகிய **விசித்ரவீரியனும்**, **சித்ராங்கனும்**, இறந்த பிறகு வியாசரானவர் அவர்களுடைய மனைவிகளுடன் நியோகஞ்செய்துக்கொண்டு, **அம்பிகை**யினிடமிருந்து **திருதராஷ்டிர**னையும், **அம்பாலிகை**யினிடமிருந்து **பாண்டு**வையும், சூத்திரஸ்திரீ ஒருவளிடமிருந்து **விதுர**னையும் பெற்றார்.

प्रोषितो धर्मकार्यार्थं प्रतीक्ष्योऽष्टौ नरः समाः ।
विद्यार्थं षड् यशोर्थं वा कामार्थं त्रींस्तु वत्सरान् ॥ மனு. 9. 76.

புருஷன் ஒருவன் வெளிநாட்டிற்கு வித்தையைக் கற்றுக்கொள்வதற்காகப்போயிருந்தால் எட்டு வருடகாலமும், கீர்த்திக்காகச் சென்றிருந்தால் ஆறுவருஷகாலமும், பொருள் முதலானவைகளைச் சேர்க்கச்சென்றிருந்தால்

மூன்றுவருஷகாலமும் தன்புருஷனுக்காகக் கலியாணமான ஸ்திரீ காத்திருந்து பார்க்கவேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் தன் புருஷன் திரும்பிவிடுவானாகில் நியோகம் உபயோகமற்றதாய்விடும்.

वन्ध्याष्टमेऽधिवेद्याब्दे दशमे तु मृतप्रजा ।
एकादशे स्त्रीजननी सद्यस्त्वप्रियवादिनी ॥ மனு. 9. 81.

இம்மாதிரியே புருஷர்களுக்கும் நியாயமிருக்கிறது. விவாகமாய் மனைவி மலடியாயிருந்து கர்ப்பமாகாமலிருந்தால் எட்டுவருஷமும், பெண்குழந்தைகளை பிறந்துகொண்டிருந்தால் பதினொன்றுவருஷமும் பிரிய மன்னியில் சண்டைக்காரியாயிருந்தால் ஒரு நிமிஷமும் தாமதிக்காமல் உடனே வேறு ஒருவனுடன் நியோகத்தினால் சேர்ந்து குழந்தைகளைப் பெறவேண்டும். அப்படியே புருஷனும் சண்டைக்காரனாயிருப்பானாகில் மனைவி அவனை விட்டு, வேறு ஒருவனுடன் நியோகஞ் செய்து குழந்தையைப்பெற்று கலியாணமான புருஷனுடைய சொத்துக்களைத் தன்குழந்தைக்குச் சேர்க்கட்டும். குலத்தை விருத்தி செய்வதற்கான சுயம்வர கலியாணத்திற்கும் நியோக கல்யாணத்திற்கும் இவ்வளவு அத்தாக்ஷிகள் இருக்கின்றன.

எவ்வண்ணம் ஔரஸர்—விவாகமானபுருஷனால் உண்டாகிற **புத்திரன்**-தன்பிதாவினுடைய சொத்துக்களுக்கு உரிமையுள்ளவனாக ஆகிறானோ அவ்வண்ணமே க்ஷேத்ரஜ—நியோகத்தினால் உண்டாகிற புத்ரர்களும்.—

ஸ்திரீகளும் புருஷர்களும் வீர்யத்தையும், ரஜத்தையும் விலைமதிக்கக் கூடாததாகக்கருதவேண்டும். இந்த ஒப்பற்ற பதார்த்தத்தை பரஸ்திரீகளுடனாவது, வேசிகளுடனாவது, துஷ்டர்களுடனாவது, கூடி, யார் நாசஞ்செய்கிறார்களோ அவர்களை மதியீனர்களாக்கருத வேண்டும். ஏனென்றால் தோட்டக்காரன் மூடனாயினும் தன் தோட்டத்தைவிட்டு வேறு தோட்டத்தில் தன் வித்துக்களைப்பயிர்செய்ய மாட்டான். சாதாரணவித்தை ஒன்று மறியாத மூர்க்கன் இவ்விதம்செய்யும் பொழுது சர்வோத்தமமான மனிதபீஜத்தை தான் அநுபவிக்கமுடியாத வயலில் போடுகிறவன் முழுமூடனே. பிராமண கிரந்தத்திலும் தகப்பனுடைய சரீரத்தில் புத்திரன் ஒரு பாகமென்றுசொல்லுகிறது.

अङ्गादङ्गात्सम्भवासि हृदयादधिजायसे ।
आत्मा वै पुत्रनामासि स जीव शरदः शतम् ॥ நிரு. 3. 4.

"ஓ குழந்தாய்! சரீரத்திலிருந்தும் ஹிருதயத்திலிருந்தும் உண்டாகிற வீர்யத்திலிருந்து நீ உண்டானபடியினால் நீ என்னுடைய ஆத்மாவாகிறாய் நீ எனக்கு முன்னால் மரிக்காமலிருப்பாயாக. நூறுவருஷகாலம் பிழைத்திருப்பாயாக. எதிலிருந்து மகாத்மாக்களினுடையவும், சாதுக்களினுடையவும் சரீரமுண்டாகிறதோ, அதைவேசி முதலான கெட்டவயல்களில் உபயோகிப்பதும், கெட்டவிதைகளை நல்லவயல்களில் உபயோகிப்பதும், பெரும்பாபமான காரியமாம்.

வினா.—நாம் ஏன் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? அப்படி செய்வதினால் இருவர்களுக்குள்ளேயும் கட்டுப்பாடு ஏற்பட்டு கஷ்டம் உண்டாகிறது. ஆகையினால் பரஸ்பரநேயம் இருக்கும் வரையிலேயே புருஷன் பெண்சாதியாக இருந்துவிட்டு, அவ்விசுவாசம் விட்டுப்போகும்போது பிரிந்துவிடுவது நலமன்றோ?

விடை.—இவ்விதம் விலங்கு பறவைகள் செய்யுமேயொழிய மானிடர்கள் செய்யமாட்டார்கள். விவாகத்தினுடைய நியமங்கள் தப்பிப்போய் விடுமேயானால் (1) கிரகஸ்தாசிரமத்தினுடைய நற்குணங்கள் நாசமாகி ஒருவருக்கொருவர் பணிவிடை செய்யமாட்டார்கள். (2) விபசாரித்தனம் அதிகரித்து வியாதி, பலஹீனம், ஆயுள், இவைகள் குறைந்து எல்லோரும் சீக்கிரம் இறந்துபோய் விடுவார்கள். (3) ஒருவருக்கொருவர் மரியாதையற்று இலக்ஷியஞ்செய்ய மாட்டார்கள். (4) பெரியோர்களையாரும் மரியாதைச் செய்யார்கள். (5) வியாதி, பலஹீனம், இவைகளினுடைய விருத்தியினால் குடும்பங்கள் நாசமடைந்து விடும். (6) சொந்தக்காரர்களற்றுப்போய் சொத்துக்களை இழந்துவிடுவார்கள். (7) நீண்ட கார்யங்களைச் செய்ய யாருக்கு மதிகாரமிராது. இவைகளையும், இவைகளைப்போலொத்த பாபங்களையும் ஒழிக்கவே விவாகம் எப்பொழுதும் நல்லது.

வினா.—ஒரே கலியாணம் செய்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிற படியினால் (அதாவது ஒரு புருஷனுக்கு ஒரேமனைவியும், ஒரு மனைவிக்கு ஒரே புருஷனும்) நாள்பட்டவியாதிகளிலிருந்து மனைவி வருந்திக்கொண்டிருந்தால் புருஷனும், புருஷன் தீராவியாதிக்காரனாயிருந்தால் மனைவியும் என்னசெய்வார்கள்? ஏனென்றால் இருவரும் இளம்பருவத்திலிருக்கிறபடியினால் அவர்களை அவர்கள் அடக்கிக்கொள்ளமுடியாது.

விடை.—இதற்குப்பதில் நியோக கலியாணத்தில் சொல்லியாய்விட்டது. மனைவி கர்பவதியாயிருக்கும்பொழுது ஒரு வருஷம் வரையில் புருஷன் சம்போகத்தை நிறுத்தச் சக்தியற்றவனாய் இருந்தால், அப்பொழுது (ஒரு விதவையுடன்) நியோகஞ்செய்து குழந்தைகளைப் பெறலாம். ஆனால் ஒருக்காலமும் வேசிகளுடன் சேரவாவது, விபசாரித்தனமாவதுசெய்யக்கூடாது. கூடுமானவரையில் அடையமுடியாததை அடையவும், அடைந்ததைக்காப்பாற்றவும், காப்பாற்றினதை விருத்திசெய்யவும் விருத்திசெய்ததை உலக க்ஷேமத்திற்காகச்செலவழிக்கவும் ஒருவன் பிரயத்தனப்படவேண்டும். மேற்சொன்னபிரகாரம் அவரவர்களுடைய குலதர்மங்களை உற்சாகத்துடன் சரிவரச் செய்து தர்மமான காரியங்களைச்செய்வதினாலேயே தன்னுடைய உடல் ஆவிகளைச்செலுத்திப் பொருளையும் செலவிடவேண்டும். தன் தாய்தகப்பன் மாமன் மாமி இவர்களை வணங்கி சினேகிதன் அயலார் அரசன் வித்வான், வைத்தியன், சத்புருஷன் இவர்களை நேசித்து, துஷ்டர்களையும் அதர்மம் செய்கிறவர்களையும் அலக்ஷியஞ்செய்து அதாவது வெறுத்து அவர்களை முன்னுக்குகொண்டு வருவதிலேயுமே ஒருவன் பாடுபடவேண்டும். தன்னுடைய

சந்ததிகளுக்கு கற்பிக்கிறதிலேயும், நல்ல பயிற்சியைக் கொடுக்கிறதிலேயுமே பணங்களையும் பதார்த்தங்களையும் செலவிட்டு பூர்ணவித்வானுக்க ஒருவன் முயலவேண்டும். பரமானந்தத்தைக் கொடுக்கிற மோக்ஷத்தை அடைய வேண்டிய காரியங்களையே செய்யவேண்டும்.

இவ்விதமான சுலோகங்களை எப்பொழுதும் பிரமாணமாகக்கருதக் கூடாது.

पतितोऽपि द्विजः श्रेष्ठो न च शूद्रो जितेन्द्रियः ।
निर्दुग्धा चापि गौः पूज्या न च दुग्धवती खरी ॥

"எவ்விதம் பால்கொடுக்கும் கழுதையைவிட பால் கொடாமலிருக்கும் பசுவே மேலானதோ, அவ்விதமே நல்லகர்மங்களைச்செய்கிற சூத்திரனைவிட கெட்டகர்மங்களைச்செய்யும் பிராமணன் மேல்"

अश्वालम्भं गवालम्भं संन्यासं पलपैतृकम् ।
देवराच्च सुतोत्पत्तिं कलौ पञ्च विवर्जयेत् ॥

கீழ்க்கண்டவைகளை இக்கலியுகத்தில் செய்யக்கூடாது. (1) அஸ்வமேத யாகம். (2) கோமேதம். (3) சந்நியாசத்தை கைக்கொள்ளல். (4) பிதுர்களுக்கு மாமிசபிண்டம் தருதல் (5) நியோகம்.

नष्टे मृते प्रव्रजिते क्लीवे च पतिते पतौ ।
पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ॥

கீழ்க்கண்ட ஐந்து ஆபத்து சந்தர்ப்பங்களில் ஒரு விதவை இரண்டாவது புருஷனை அடையலாம். (1) புருஷன் எங்கேயாவது போய், போன விடம் தெரியாமலிருந்தால் (2) இறந்துபோய்விட்டால் (3) சந்நியாசியாய் விட்டால் (4) புருஷத்தனமில்லாமலிருந்தால் (5) ஜாதிப்பிரஷ்டம் செய்துவிட்டால்.

மேற்சொன்ன கற்பிதமான சுலோகங்களைப் பராசரஸ்மிருதியில் காணலாம். துஷ்டகர்மங்களைச்செய்கிற பிராமணன், நல்லகர்மங்களைச்செய்கிற சூத்திரனை விட மேலென்று சொல்லுவதைக்காட்டிலும் அநியாயமானவும், அதர்மமானவும், பக்ஷபாதமுமான வார்த்தை வேறு ஏதாவதுண்டா? இடையர்களால் பசுக்கள் காப்பாற்றப்படுகிறதுபோல் வண்ணான்களால் கழுதைக் காப்பாற்றப் படுகிறதில்லையா? அதுவுமன்னியில் இந்த உதாரணம் சரியானதல்ல. பிராமணனும், சூத்திரனும் மனிதப் பிறப்பாயிருக்க, கழுதையும், பசுவும் வேறு பிறப்பாயிருக்கிறது. தாரதம்யம் ஒன்றுக்கொன்று ஏற்காதபடியினால் இது வித்வான்களால் எவ்விதம் உண்மையானதாகக் கருதப்படும். குதிரையாகமும், பசுயாகமும், வேதவிருத்தமாயிருக்கிறபடியினால், கலியுகத்தில் தடுக்கப்பட்டு ஏன் வேத விரோதமாயிருக்கக்கூடாது. இக்கலியுகத்தில் இவைகள் நீச காரியமாக தள்ளிவைக்கப்பட்டிருக்கும்பொழுது, மீதியான மூன்றுயுகங்களிலேயும் அது செய்யப்பட்டு வந்திருக்கவேண்டும். ஆனால் தர்மமே நியாயமாக இருந்த

அந்நாட்களில் இக்கெட்டகாரியங்கள் பழக்கத்திலிருந்து வந்ததென்பது முடியாதகார்யம். இன்னும் சந்நியாசாசிரமம் வேதாதி சாஸ்திரானுகூலமாயிருக்கிறபடியினால் அதைக் கண்டிப்பது காரணமற்றது. மாம்சம் தள்ளப்பட்டு எப்பொழுதிருந்ததோ அது எக்காலமும் நிஷேதனந்தான். தேவரத்தினால் (நியோகம்) புத்திரோத்பத்திசெய்வது வேதம் முதலானவைகளுக்குச் சரியாயிருக்கும்பொழுது இந்தச்சுலோகம் செய்தவர் ஏனிப்படி வீணாகக் கத்துகிறார். புருஷன் தேசசஞ்சாரங்களுக்குச் சென்றிருக்குங்காலத்தில், மனைவி வேறுபுருஷனுடன் நியோகம் செய்துகொண்டால், தன் கலியாணமான புருஷன் திரும்பிவந்தவுடன் அவள் யாருடைய மனைவியாகிறாள்? அவள் முதல் புருஷனுடைய மனைவி என்று சொல்லப்படுமேயானால் அதை நாங்கள் நம்புவோம். ஆனால் பராசரஸ்ம்ருதியில் அதற்கு ஆதாரம் ஒன்றுமில்லையே. ஸ்திரீ ஒருவளுக்கு ஆபத்காலங்கள் ஐந்துதானா? ஐந்துக்குமேலிருக்கிறதே. அவைகளில் கொஞ்சமாவன:—

(1) புருஷனுடைய தீரா வியாதி.

(2) இருவருக்கும் ஏற்படும் மனஸ்தாபம் முதலானவைகள். இம்மாதிரி சுலோகங்களை எவ்விதம் நம்புதலாகும்?

வினா — நல்லது பராசர் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா.

விடை:—எவ்வளவு பெரியவராயிருக்கப்பட்டவர் சொன்னபோதிலும் வேதவிரோதமாயிருக்கிறவைகள் நம்பத் தகுந்ததல்ல. மேலும் இவைகள் பராசரர் சொன்னதல்ல, இது **பிரம்மோ** வாசா (சொன்னார்) வசிஷ்ட உவாசா **ராமோ** உவாசா, சிவஉவாச, விஷ்ணுஉவாச, என்பவைகளைப்போலிருக்கின்றன. இம்மாதிரி உலகமறிந்தவர்களுடைய பெயரை (பிரம்மா, விஷ்ணு, வசிஷ்டர், ராமர், சிவன், தேவி முதலானவர்கள்) வைத்துப் புஸ்தகங்கள் எழுதுவதின் தாத்பர்யம் என்னவென்றால், எல்லோரும் இதை வாங்கிப்படித்து, எழுதினவருக்கும் பணம் அதிகமாக கிடைக்கும் என்பதே யாகும். ஆகையினால் இப்புத்தகங்களிலிருப்பவைகளெல்லாம், ஒன்று சேராத அனர்த்தங்களால் நிறைந்திருக்கின்றன. ஸ்ம்ருதிகளுக்குள் மனு ஒன்றே, இடையிலெழுதப்பட்டுள்ள சுலோகங்களைத் தவிர, வேதாநுகூலமாயிருக்கிறது. பொய்க் கிரந்தங்கள் யாவற்றையும் இம்மாதிரியாகவே எண்ண வேண்டியது.

வினா:—கிரகஸ்தாசிரமம் எல்லாவற்றையும்விட உயர்ந்ததா? தாழ்ந்ததா?

விடை:—அவர்கள் செய்யும் கர்மங்களைப்போல், எல்லாம் பெரியதாகிறது.

यथा नदीनदाः सर्वे सागरे यान्ति संस्थितिम् ।
तथैवाश्रमिणः सर्वे गृहस्थे यान्ति संस्थितिम् ॥ மனு 6. 90.

பெரியநதி சிறியநதி எல்லாம் எவ்விதம் சமுத்திரத்தில் போய்ச் சேர்ந்து ஸ்திரமடைகிறவரையில் திறிந்தலைகிறதோ, அவ்விதமே, கிரகஸ்தாசிரமத்

தில் ஸ்திரத்தை அடைகிறார்கள். கிரகஸ்தாசிரம மன்னிப்பில் எந்த ஆசிரமங்களும் சரிவர நடக்கிறதில்லை

यथा वायुं समाश्रित्य वर्त्तन्ते सर्वजन्तवः ।
तथा गृहस्थमाश्रित्य वर्त्तन्ते सर्व आश्रमाः ॥ மனு 3. 77.

வாயுவினால் சகல ஜீவப்பிராணிகளும் வசிப்பதுபோல் கிரகஸ்தாசிரமத்தினால் சகல ஆசிரமங்களுமிருக்கிறது. ஏனென்றால் மீதி மூன்று ஆசிரமங்களுக்கும் தினம் அன்னமளித்துக்காப்பற்றுகிறது கிரகஸ்தாச்ரமமே.

यस्मात्त्रयोऽप्याश्रमिणो दानेनान्नेन चान्वहम् ।
गृहस्थेनैव धार्यन्ते तस्माज्ज्येष्ठाश्रमो गृही ॥ மனு 3. 78.

சிலசமயங்களில் இதை ஜ்யேஷ்டர் என்று அழைப்பதுண்டு. சகல வியவகாரங்களுக்கும் இது ஆதாரமாயிருக்கிறது.

स संधार्यः प्रयत्नेन स्वर्गमक्षयमिच्छता ।
सुखं चेहेच्छता नित्यं योऽधार्यो दुर्बलेन्द्रियैः ॥ மனு 3. 79.

ஆகையினால் மோக்ஷத்தையும், உலகசுகத்தையும் விரும்புகிற யாவரும் கிரகாசிரமவிதிகளை அநுசரிக்கவேண்டும். பலஹீனமற்ற இந்திரியங்களை உடையவர்களும், பயந்தவர்களும், இந்த ஆசிரமத்தை நடத்த யோக்யமானவர்களல்ல.

இவ்வுலகில் சம்பந்தப்பட்ட யாவையும் இவ்வாசிரமத்திலிருந்தே உண்டாகிறது. இவ்வாசிரமம் இல்லாவிடில் சந்ததிகள் எங்கிருந்து வரும்? சந்ததிகளில்லாவிடில், மீதிமூன்று ஆசிரமங்கள் (பிரமசர்யம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்) எங்கிருந்து வரும்? எவன் கிரகஸ்தாசிரமத்தைத் தூஷிக்கிறானோ அவன் தூஷிக்கத்தகுந்தவன். எவன் ஸ்துதிக்கிறானோ அவன் ஸ்துதிக்கத்தகுந்தவன் மனைவி புருஷன் இருவரும் பரஸ்பரப்பிரேமையுடன் கூடினவர்களாயும், கற்றுணர்ந்தவர்களாயும், புருஷார்த்திகளாயும், சம்சாரவிஷயங்கள் யாவற்றையும் அறிந்தவர்களாயும் இருந்தால் ஒழிய ஆனந்த மேற்படாது. இதினால் நாம் முன்னமேயே சொன்ன பிரமசர்யமும், ஸ்வயம்வரமும் இந்தக் கிரகஸ்தாசிரம சுகங்களுக்கு முக்கியகாரணங்களாகும்.

இவ்வத்தியாயத்தில், வீட்டிற்குத்திரும்புதல், கலியாணம் செய்துகொள்ளல் முதலானவைகளைப்பற்றி சொன்னோம். அடுத்ததில் வானப்பிரஸ்தம், சந்நியாசம் இவைகளைப்பற்றிச் சொல்லுவோம்.

நான்காவது அத்தியாயம்
முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

வானப்பிரஸ்த சந்நியாச ஆசிரம விதிகள்.

ब्रह्मचर्याश्रमं समाप्य गृही भवेत् गृही भूत्वा
वनी भवेद्वनी भूत्वा प्रव्रजेत् ॥ சதபத. 14.

பிரமசரியாசிரமத்தைக் கைக்கொண்டு நடந்தபின்னர் கிரகஸ்தாசிரமம், வானப்பிரஸ்தாசிரமம், சன்னியாச ஆசிரமம் இவைகளை முறையே கொள்ளுதல் மனிதர்களுக்கு ஏற்ற விதியாகும்.

एवं गृहाश्रमे स्थित्वा विधिवत्स्नातको द्विजः ।
वने वसेत्तु नियतो यथावद्विजितेन्द्रियः ॥ மனு. 6. 1.

பிரமசரியாசிரமத்தைக்கடந்து கிரகஸ்தாசிரமத்தை முறையுடன் நடத்துபவர்களே, பிராமண க்ஷத்திரிய வைசியர்களாகிய துவிஜர்கள் *ஆவார்கள். பின்னர் உறுதியுடனும் மனத்தூய்மையுடனும் வானப்பிரஸ்தாசிரமத்தை சரியே நடத்த வேண்டும். அதாவது, ஐம்புலன்களை அடக்கியாளப் பழகுதலேயாம்.*

गृहस्थस्तु यदा पश्येद्वलीपलितमात्मनः ।
अपत्यस्यैव चापत्यं तदाऽरण्यं समाश्रयेत् ॥ மனு. 6. 2.

தன்தலைமயிர் நரைப்பதையும், தோல் தளர்வதையும் பிள்ளைக்குக் குழந்தைகள் பிறப்பதையும் பார்த்தபின்னரே வனம் புகவேண்டும்.

संत्यज्य ग्राम्यमाहारं सर्वं चैव परिच्छदम् ।
पुत्रेषु भार्यां निक्षिप्य वनं गच्छेत्सहैव वा ॥ மனு. 6. 3.

சுவையுள்ள ஆகாராதிகளையும் அழகான உடைகளையும் நகரபோகங்களையும் விட்டு, பத்தினியைப்பிள்ளையிடம் ஒப்புவித்து விட்டோ அல்லது கூடவே அழைத்துக்கொண்டோ வனம் செல்லவேண்டும்.

अग्निहोत्रं समादाय गृह्यं चाग्निपरिच्छदम् ।
ग्रामादरण्यं निःसृत्य निवसेन्नियतेन्द्रियः ॥ மனு. 6. 4.

அக்கினிஹோத்திரத்திற்கு *வேண்டிய சாமான் முதலானவைகளை ஒன்று விடாமல் எடுத்துக்கொண்டு நகரத்தைவிட்டகன்று ஐம்புலன்களையடக்கும் சக்தியையுடையவனாய், ஆரணியத்தை அடையவேண்டும்.*

मुन्यन्नैर्विविधैर्मेध्यैः शाकमूलफलेन वा ।
एतानेव महायज्ञान्निर्वपेद्विधिपूर्वकम् ॥ மனு. 6. 5.

பலவித தான்யம், அன்னம், காய்கறி, கந்தமூலபதாதிகள், பூமியிலுண்டாகும் இவைகளைக்கொண்டு *பஞ்சமகாயாகங்களைச்செய்து அதிதிகளை வரவேற்றுக் கொண்டு, தானும் அதைக்கொண்டே ஜீவிக்கவேண்டும்.

स्वाध्याये नित्ययुक्तः स्याद्दान्तो मैत्रः समाहितः ।

दाता नित्यमना दाता सर्वभूतानुकम्पकः ॥ மனு. 6. 8.

படிக்கிறது, படிக்கச்செய்கிறதிலேயே மனதை ஊன்றினவனும், ஐயிக்கப்பட்ட ஆத்மாவை உடையவனும், எல்லோருக்கும் நண்பனும், ஐம்புலன்களை அடக்குகினவனும் வித்தையாகிற தானத்தைச் செய்கிறவனும், எல்லோரிடத்திலும் தயையுள்ளவனும், ஒருவனிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளாதவனும் இருந்துகொண்டு காலத்தைக் கழிக்க வேண்டும்.

अप्रयत्नः सुखार्थेषु ब्रह्मचारी धराशयः ।

शरणेष्वममश्चैव वृक्षमूलनिकेतनः மனு. 6. 26.

தன் சரீரத்திற்கு அதிக பாடுபடாமலும், பிரமசாரியாய் அதாவது மாதர்களுடன் பேசாமலும் பழகாமலும், தனக்குப் பிரியமான பொருள்களிலோ, அல்லது தனது சொந்த மனிதர்களிடத்திலோ, மனதை செலுத்தாதவனும், மரத்தடியில் வசிக்கவேண்டும்.

तपःश्रद्धे ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्षचर्यां चरन्तः । सूर्य-

द्वारेण ते विरजाः प्रयान्ति यत्रामृतः स पुरुषो ह्यव्ययात्मा ॥ முண் 1. 2. 11.

வனத்தில் தவம் தருமம், முதலியவைகளை அனுஷ்டித்துக்கொண்டும், சத்தியத்தைச்சாதனஞ்செய்து கொண்டும், பிச்சை எடுத்துக் காலத்தைக் கழிக்கும் சாந்த புருஷர்களான வித்வான்கள், பாவங்களினின்றும் நீங்கினவனும், நிர்மலமாயும் பிராணுதாரமாயும், பிறப்பு இறப்புகளிலிருந்து நீங்கினவனும் இருக்கும் பரமாத்மாவை அடைந்து நித்திய சுகத்தை அனுபவிக்கிறார்கள்.

अभ्यादधामि समिधमग्ने व्रतपते त्वयि ।

व्रतञ्च श्रद्धां चोपैमीन्धे त्वा दीक्षितो अहम् ॥ யஜுர். 20. 24.

வானப்பிரஸ்தனுக்குரிய விதிகளாவன:— "நான் அக்கினியில் ஹோமம் செய்து தீக்ஷையைப்பெற்று சத்தியாசரணம், சிரத்தை முதலியவைகளை அடைவேன், என்றும் உறுதிப்பாட்டைவைத்துக்கொண்டு வானப்பிரஸ்தானவன் பற்பல தபசின் ஆசனங்கள், சற்சங்கம், யோகப்பியாசம், நற்யோசனையினால் ஞானம், பரிசுத்தம், முதலியவைகளை அடையவேண்டும். பிறகு சந்நியாச ஆசிரமத்தை விரும்பினால் தன் பத்தினியைப் பிள்ளையிடம் ஒப்புவித்து விட்டு சந்நியாசத்தை அடையவேண்டும். இவையே வானப்பிரஸ்தாசிரம விதிகளாகும்.

---

*முன் அத்தியாயத்தில் கூறியுள்ளபடி.

சந்நியாச ஆசிரமம்.

वनेषु च विहृत्यैवं तृतीयं भागमायुषः ।
चतुर्थमायुषो भागं त्यक्त्वा सङ्गान् परिव्रजेत् ॥ மனு 6. 33.

வாழ்நாட்களில் மூன்றாவது பாகத்தில் அதாவது ஐம்பதாவது வயது முதல் எழுபத்தி ஐந்தாவது வரையில் வானப்பிரஸ்தனுயிருந்த பின்னர் நான்காவது பாகத்தில் இவ்வுலகைத் துறந்து சந்நியாசியாகவேண்டும்.

வினு:—கிரகஸ்தாசிரமம், வானப்பிரதாசிரமம், இவ்விரண்டையும் விட்டு சந்நியாசாசிரமத்தை அடைகிறவனுக்குப்பாபமுண்டா? இல்லையா?

விடை.—இருந்தாலும் இருக்கலாம். இல்லாமலும் போகலாம்.

வினு.—இருவிதமாயும் எவ்விதம் இருக்கக்கூடும்?

விடை.—பிரமசர்யாசிரமத்தினின்று சந்நியாச ஆசிரமத்தைக் கொள்பவன், பின்னர் விலைமாதர் வலையில் சிக்குவானேயானல் பெரும் பாபியாவான். உறுதியுடன் மாதர் வலையில் சிக்காதிருப்பவன் மகானுவான்.

यदहरेव विरजेत्तदहरेव प्रव्रजेद्वनाद्वा गृहाद्वा ब्रह्मचर्यादेव प्रव्रजेत् ॥ பிராமண.

எத்தினத்தில் வைராக்கியமுண்டாகிறதோ அத்தினத்திலேயே வீட்டிலிருந்தாவது கானகத்திலிருந்தாவது சந்நியாசத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே சந்நியாசாசிரமத்தை அடைவதற்கு மூன்று மார்க்கங்கள் உண்டு. **முதலாவது** மேற்சொன்னபடி எடுத்துக்கொள்வது (அதாவது மூன்று ஆசிரமத்தையும் முறையே கடந்தபிறகு) **இரண்டாவது** கிரகஸ்தனுயிருந்து சந்நியாசத்தைப் பெறுவதே. **மூன்றுவது** பிரமசரியத்திலிருந்து நேராகச் சந்நியாசத்தை அடைவதே. இம்மார்க்கத்தில் ஐம்புலன்களையும் மனதையும், சுவாதீனம் செய்துகொண்டு, சகல சிற்றின்ப ஆசைகளிலிருந்தும் நீங்கினவனுய் பரோபகாரம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கும் பூர்ண ஞானியே நேராகப்பிரவேசிக்கலாம்.

இம்மாதிரியான வழியையே **வேதமும்** ஆதரிக்கிறது.

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥ கடோபநி. 2. 23.

சந்நியாசியாகவிருந்த போதிலும், ஒழுக்கமற்றவனும், சிற்றின்பப்பற்றுக் கொண்டவனும், யோகநிலைபெறுதவனும், மனவமைதி இல்லாதவனும் இறைவனை யறியவும் அடையவும் மாட்டான்.

यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेद् ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥ கடோபநி. 3. 13.

சந்நியாசாசிரமத்தை நடத்திவரும் சந்நியாசி அதர்மச் செயல்களில் மனோவாக்கால் சம்பந்தபடாதிருந்து, மனதையும் வாக்கையும் ஆத்மஞான வளர்ச்சியில் செலுத்தட்டும். இறைவனிடத்து தன்னுடைய ஞானமயமான ஆத்மாவை உபயோகித்து அவரோடு ஒன்றுகட்டும்.

परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायान्नास्त्यकृतः कृतेन ।
तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत् समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥

முண். 2. 12.

எல்லாவிதமான உலகபோகங்களும் நம் கர்மங்களினாலேயே ஏற்படுகிறதென்பதைக்கண்டு சந்நியாசியாயுள்ள பிராமணன் வைராக்கியத்தை அடையவேண்டும். ஆக்கப்படாதவரான பரமாத்மாவை அற்பகர்மத்தினால் அடையமுடியாது. ஆகையினால் பொருளுடன் வேதத்தை அறிந்தவனும் பரமேசுவரனை அறிகிறவனுயிருக்கும் குருவை அடைந்து எல்லாச்சந்தேகங்களையும் ஒருவன் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் அடியிற்கண்டவர்களை அடையலாகாது.

अविद्यायामन्तरे वर्त्तमानाः स्वयं धीराः पण्डितम्मन्यमानाः । जङ्घन्यमा-
नाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः ॥ अविद्यायां बहुधा
वर्त्तमाना वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः । यत्कर्मिणो न प्रवेदयन्ति
रागात् तेनातुराः क्षीणलोकाश्च्यवन्ते ॥

மண். 2. 8. 9.

அஞ்ஞானத்தில் ஆழ்ந்துதன்னைத்தானே பண்டிதனென்றும் புத்திமான் என்றும் நினைத்திருக்கிறவனிடம் போகக்கூடாது. மூடத்தன்மையையும் அற்ப எண்ணங்களையும் கொண்டுள்ள குருடர்களுக்கு குருட்டுதலைவர்களாக அவர்கள் துக்கக்கிணற்றில் விழுகிறார்கள். அநேக அவித்தைகளில் உழன்று கொண்டு, சந்தோஷமாயும் திருப்தியாயும் இருக்கிறோம் என்று நினைத்துத் தெரிந்தவர்கள் போல் பாவனைசெய்து கொண்டு அகங்காரத்துடன் கூடின பால்ய புத்தியுள்ள இவர்கள் கடவுளை அறிகிறார்களில்லை. மற்றவர்களுக்குக் கடவுளுடைய ஞானத்தை இவர்கள் எங்ஙனம் எடுத்துக் காட்டுவார்கள்? சஞ்சல முள்ளவர்களாகையினால் பிறப்பு இறப்பு துன்பங்களில் விழுந்துக் கொண்டே இருக்கிறார்கள்.

वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः संन्यासयोगाद्यतयः शुद्धसत्वाः । ते ब्रह्मलो-
केषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥

மண். 2. 6.

ஆகையினால் வேதாந்தம் அல்லது வேதமந்திரங்களுடைய ஞானம் முதலியவைகளை பொருளுடன் தெரிந்து படித்து சத்தியத்தை அறிந்தும், ஆசாரத்தை உணர்ந்தவனும் சந்நியாசயோகத்தினாலும், காட்சியாலும் பரிசுத்தமடைந்த அந்தக்கரணங்களுடன் கூடின சந்நியாசியானவன் பரமேசுவரனது மோக்ஷ இன்பத்தை அடைகிறான். முக்தி இன்பம் நிறைந்தவுடன் இவ்வுலகத்திற்குத்திரும்புகிறான். முக்தியன்னியில் துக்கம் நாசமடையாது, ஏனென்றால்.

न वै सशरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्त्यशरीरं वावसन्तं न प्रियाप्रिये
स्पृशतः ॥

சாந். 8. 12.

தேகத்தை ஆடையாகக் கொண்டிருப்பதிலேயே ஆத்மாசுகதுக்கங்களி லிருந்து விலகியிருக்கமுடியாது. தேகபந்தத்தை ஒழித்து ஆத்மாமுக்தியின் ஸ்வரூபமாகிறது. இறைவனுடன் கலக்கிறது, எனவே உலக இன்பதுன் பங்கள் ஆத்மாவை பாதிக்கிறதில்லை.

पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति ॥

சதபத 14. 5. 2. 1.

உலகாசைகளான, கீர்த்தி, செல்வம், கௌரவம் புத்திரவாஞ்சை இவை களை வெறுத்து சந்நியாசிகள் பிச்சை எடுத்து உண்டு இரவும் பகலும் மோக்ஷ சாதனத்திலேயே காலத்தைக்கழிக்கவேண்டும்.

प्राजापत्यां निरूप्येष्टिं तस्यां सर्ववेदसं हुत्वा ब्राह्मणः प्रव्रजेत् ॥ சதபதபிராம.

प्राजापत्यां निरूप्येष्टिं सर्ववेदसदाक्षिणाम् ।
आत्मन्यग्नीन्समारोप्य ब्राह्मणः प्रव्रजेद् गृहात् ॥ மனு. 6. 38.

பிரஜாபதி அதாவது பரமேசுவரனை அடைவதற்காக இஷ்டி அதாவது யாகம்செய்து, அதில் யக்ஞோபவீதம் தலைமுடி முதலியசின்னங்களை அறுத்து எறிந்துவிட்டு, ஐந்து அக்னிகளுக்காகவே *பஞ்சப் பிராணங்களை (பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்) ஆரோபணம்செய்து (மாற்றிக் கொண்டு) பிராமணன் வீட்டை விட்டு வெளியாகி சந்நியாசியாக வேண்டும்.

यो दत्वा सर्वभूतेभ्यः प्रव्रजत्यभयं गृहात् ।
तस्य तेजोमया लोका भवन्ति ब्रह्मवादिनः ॥ மனு. 6. 39.

பூதப்பிராணி எல்லாவற்றிற்கும் அபயதானங் கொடுக்கிறவனே வீட்டை விட்டு வெளிப்பட்ட சந்நியாசியாகிறான். பரமேசுவரனால் ஆக்கப்பட்ட வேதத்தின் தர்மத்தைப்பரவச்செய்து பிரகாசஞ்செய்கிறான். இப்படிவேத தர்மவித்தைகளைஉபதேசம் செய்யும் சந்நியாசி ஒளிமயமான முக்திஸ்வரூ பத்தை அடைகிறான்.

வினா:—சந்நியாசிகளுடைய தர்மம் (மதம்) யாது ?

விடை:—தர்மப்பிரகாரம் பக்ஷபாத மின்றி நியாயத்தை அனுசரிப்பது; சத்தியத்தைக்கிரகிப்பது; அசத்தியத்தை விடுவது; வேதத்திலுள்ளபடி ஈசுவா னுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்படிவது; பரோபகாரம், உண்மை பேசுதல். எல்லா ஆசிரமத்தவர்களுக்கும் மனிதர்களுக்கும், மேற்கண்டவைகள் ஒரே மாதிரியானதர்மமாகும். ஆனால் அடியிற்கண்டதர்மங்கள் சந்நியாசிகளுக்குச் சிறந்தவைகளாம்.

दृष्टिपूतं न्यसेत्पादं वस्त्रपूतं जलं पिबेत् ।
सत्यपूतां वदेद्वाचं मनःपूतं समाचरेत् ॥ மனு. 6. 46.

---

* இவைகளின் விளக்கத்திற்கு ஒன்பதாவது அத்தியாயத்தைப் பார்க்கவும்.

சந்நியாசிகளுடைய சிறந்த தர்மங்கள்.

வழியிற் செல்லும்போது இங்குமங்கும் திரும்பிப்பார்க்காமல் கீழே பூமியின் பேரில் கவனத்தைச்செலுத்திக் கொண்டே போகவேண்டும். ஜலத்தைப்பானஞ்செய்வதற்கு முன்னால் வடிகட்டவேண்டும். எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும். காரியங்களைச் செய்யுமுன்னால் யோசனைசெய்யவேண்டும். இப்படி உண்மையைக் கைப்பற்றவேண்டும்.

क्रुद्ध्यन्तं न प्रतिक्रुध्येदाक्रुष्टः कुशलं वदेत् ।
सप्तद्वारावकीर्णां च न वाचमनृतां वदेत् । மனு. 6. 48.

உபதேசஞ்செய்யும் பொழுதாவது அல்லது விவாதஞ்செய்யும் பொழுதாவது யாவரேனும் கோபித்தால் சந்நியாசி பதிலுக்குப் பதில்கோபித்துக் கொள்ளக்கூடாது. தான் தூஷிக்கப்பட்ட போதிலும் அவனுக்கு வேண்டிய நன்மைகளைச் சொல்லவேண்டும்.

ஏழு துவாரங்களின் வழியே பரவும் *வார்த்தைகளை ஒருநாளும் பொய்யாக்கக்கூடாது.

अध्यात्मरतिरासीनो निरपेक्षो निरामिषः ।
आत्मनैव सहायेन सुखार्थी विचरेदिह ॥ மனு. 6. 49.

தன்னுடைய ஆத்மாவிலும் பரமாத்மாவிலும் ஸ்திரமான நம்பிக்கை வைத்து மதுபானம் மாம்சாகாரங்களை விட்டு இன்பதுன்பங்களில் கலவாது விலகிநின்று ஆத்மஞான வளர்ச்சியுடன், உலகில் தர்மம், ஞானம் இவைகளைப் பரவச்செய்வதே கடமை எனக்கொள்ளல்வேண்டும்.

क्लृप्तकेशनखश्मश्रुः पात्री दण्डी कुसुम्भवान् ।
विचरेन्नियतो नित्यं सर्वभूतान्यपीडयन् ॥ மனு. 6. 52.

கேசம், தாடி, நகம், மீசை, இவைகளை வெட்டி காஷாயம், தகுந்த பாத்திரம், தண்டம், இவைகளைத் தாங்கி, ஆத்மவளர்ச்சியுடையவனாய் ஜீவராசிகளுக்கு இம்சை செய்யாமல் எங்கும் சஞ்சாரஞ் செய்யவேண்டும்.

इन्द्रियाणां निरोधेन रागद्वेषक्षयेण च ।
अहिंसया च भूतानाममृतत्वाय कल्पते ॥ மனு. 6. 60.

ஐம்புலன்களின் பிரவிருத்தியை தடுத்து ராகத்து வேஷங்களைவிடுத்து எப்பிராணிகளிடத்தும் பகையில்லாதவனாய் மோக்ஷத்தைப்பெற முயலவேண்டும்.

दूषितोऽपि चरेद्धर्मं यत्र तत्राश्रमे रतः ।
समः सर्वेषु भूतेषु न लिङ्गं धर्मकारणम् ॥ மனு. 6. 66.

---

*வாய் ஒன்று, மூக்கு துவாரங்கள் இரண்டு, இருகண்கள், இருகாதுகள். ஆக இவ்வேழு துவாரங்களின் வழியாகவே விஷயசம்பந்தமானவைகள் மனதில் ஊன்றுகின்றன இதனாலேயே மேற்கண்ட வாயில்களில் வார்த்தைகள் பரவியிருக்கிறது என்று பெயர்.

தூஷணை, பூஷணைகளால் பாதிக்கப்படாமலும் ஜீவராசிகளிடத்தில் பக்ஷபாதம் காட்டாமலும் மனிதஜாதியிடம் தர்மமும், ஞானமும், அறிவும் வளரச் செய்யும் வழியைக் கைப்பற்றவேண்டும். தண்டம், கமண்டலம், காஷாயம் முதலான அடையாளங்களைக் கொள்வதினாலே தான் தர்மத்தை நிறைவேற்றுவதாக எண்ணக்கூடாது. மனிதன் முதலான பிராணிகள் அனைவற்றிற்கும், தர்மோபதேசம் செய்தலே மதமாகக் கொள்ளவேண்டும்.

फलं कतकवृक्षस्य यद्यप्यम्बुप्रसादकम् ।
न नामग्रहणादेव तस्यवारि प्रसीदति मனு. 6. 67.

கலங்கலான ஜலம், தேத்தாங் கொட்டையின் சேர்க்கையால் தெளிந்து பரிசுத்தமாகிறதே யல்லாது தேத்தாங்கொட்டையைச் சேர்க்கவேண்டும் என்ற வார்த்தையால் பரிசுத்தமாகிறதில்லை. எனவே அடுத்துச்செய்யும் அப்பியாசமும் ஒருவனைப்பரிசுத்தப்படுத்துமே யல்லாது, வெறும்பேச்சால் எதுவும் நடவாது.

प्राणायामा ब्राह्मणस्य त्रयोपि विधिवत्कृताः ।
व्याहृतिप्रणवैर्युक्ता विज्ञेयं परमन्तपः ॥ மனு. 6. 70.

பிர்ம வித்தான சந்நியாசி ஓங்கார பூர்வமாய் வியாகிருதிகளினால் விதிப்பிரகாரம் கூடுமானவரையில் பிராணாயாமஞ் செய்யவேண்டும். ஆனால் ஒருபொழுதும் மூன்றுக்குக் குறைய லாகாது. சந்நியாசிகளுடைய முக்கியமான தபசு இதுவேயாகும்.

दह्यन्ते ध्मायमानानां धातूनां हि यथा मलाः ।
तथेन्द्रियाणां दह्यन्ते दोषाः प्राणस्य निग्रहात् ॥ மனு 6. 71.

எவ்விதம் காய்ச்சுவதினாலும், உருக்குவதினாலும் உலோகங்களின்களிம்பு விட்டுப் போய் விடுகிறதோ அவ்விதமே, மூச்சு விடுதலினுடைய நிர்ணயத்தினால் மனது முதலிய இந்திரியங்களின் தோஷங்கள் நாசமாகிவிடுகிறது.

प्राणायामैर्दहेद्दोषान् धारणाभिश्च किल्बिषम् ।
प्रत्याहारेण संसर्गान् ध्यानेनानीश्वरान् गुणान् ॥ மனு. 6. 72.

ஆகையினால் சன்னியாசிகள் பிராணாயாமத்தினால், ஆத்மா, அந்தக்கரணம், இந்திரியங்களின் தோஷங்களையும், தாரணத்தினால் (பரமாத்மாவின்தியானம்) பாபங்களையும், பிரத்யாஹாரத்தினால் ஐம்புலன்களுடைய தோஷங்களையும் தியானத்தால் அனீசுவரகுணங்களை (சுகதுக்கங்கள்) அதாவது வித்தையின்மையில் ஏற்படும் பாபங்களையும் முறையே நாசஞ்செய்யவேண்டும்.

उच्चावचेषु भूतेषु दुर्ज्ञेयामकृतात्मभिः ।
ध्यानयोगेन संपश्येद् गतिमस्यान्तरात्मनः ॥ மனு. 6. 73.

யோகாப்பியாசத்தினால், எல்லாவற்றிலும் பரவியிருக்கும் பரமாத்மாவினுடையசெயல்களைப்பார்க்கட்டும். அப்படியே தன் ஆத்மாவையும் பார்க்கட்டும். இவைகளை யோக்கியாயில்லாதவர்களும் வித்தையில்லாதவர்களும் பார்ப்பது மிகவும் கஷ்டம்.

अहिंसयेन्द्रियासङ्गैर्वैदिकैश्चैव कर्मभिः ।
तपसश्चरणैश्चोग्रैस्साधयन्तीह तत्पदम् ॥ மனு. 6. 75.

எல்லா பூதப் பிராணிகளிடத்திலும் விரோதமில்லாமல், இந்திரியவிஷயங்களைவிட்டு வேதோக்த கர்மத்தினாலும், அதிக உக்கிரமான தபசை ஆசிரயப்பதினாலும் இவ்வுலகில் மோட்சபதவியை முன் சொன்ன சந்நியாசிகளைத் தவிர வேறு யாரும் அடையமுடியாது. அடையச்செய்யவும் முடியாது.

यदा भावेन भवति सर्वभावेषु निस्पृहः ।
तदा सुखमवाप्नोति प्रेत्य चेह च शाश्वतम् ॥
चतुर्भिरपि चैवैतैर्नित्यमाश्रमिभिर्द्विजैः ।
दशलक्षणको धर्मः सेवितव्यः प्रयत्नतः ॥ மனு. 6. 80. 81.

உலக ஆசையை விட்டும் கருமத்துக்குறியவும், பொருளுக்குறியவுமான பதார்த்தங்களில் பரிசுத்தமான எண்ணங்களையும் எல்லாவஸ்துக்களிலும் அனுதாபத்தை உடைத்தாயிருக்கும் சந்நியாசி இறந்த பிறகும் நிலைநிற்கிற உண்மையான ஆனந்தத்தை அடைகிறான். இதனாலேயே, பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசிகளுக்கு ஏற்றதுயாதெனில பிரயத்னத்துடன் அடியிற்கண்ட பத்து லட்சணங்களோடு கூடிய தர்மத்தைத் தொடரவேண்டும்.

धृतिः क्षमा दमोऽस्तेयं शौचमिन्द्रियनिग्रहः ।
धीर्विद्या सत्यमक्रोधो दशकं धर्मलक्षणम् ॥ மனு 6. 91.

1 திருதி:—எப்பொழுதும் தைரியவானயிருப்பது.

2 க்ஷமா:—நிந்தை ஸ்திதி மரியாதை, அவமரியாதை, ஹானி, லாபம் முதலான துக்கங்களைச் சகிக்கும் தன்மையுனிடருப்பது.

3 தமா:—மனதை அதர்மத்திலிருந்து விலக்கி தர்மமயமாக்குவதே. அதர்மமான எண்ணத்தை எள்ளளவும் நினைப்பதும் கூடாது.

4 அஸ்தேயம்:—பராதீனமான சொத்துக்களைக் கபட மோசத்தினாலோ வேதங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் விரோதமான வேறு எந்த வழிகளினாலோ அபகரித்தல்.

5 சௌசம்:—ராகத்துவேஷம் முதலானவைகளை விடுத்து அகசுத்தத்தினும், ஸ்நானபானதிகளால் புறச் சுத்தத்துடனும் இருத்தல்.

6. இந்திரிய நிக்கிரகம் :—அதர்மமான காரியங்களிலிருந்து இந்திரியங்களை அடக்கி தர்மத்திலேயே செலுத்துவது.

7. தீ:—மயக்கத்தை உண்டுபண்ணுகிறதும், புத்தியை நாசஞ்செய்கிறதுமான ஆகாராதிகளைவிட்டுப் பரிசுத்தமான பதார்த்தங்களைக் கொண்டு சத்புருஷர்களுடன் சேர்ந்து யோகாப்பியாசத்தின் மூலம் புத்தியை விருத்தி செய்து கொள்ளுதல்.

8. வித்தை:— அணுவிலிருந்து, பரமேசுவரன் வரையிலுள்ள பதார்த்தங்களினுடைய ஞானத்தையும், அதைச்சரியாய் உபயோகிப்பதும், அதாவது உள்ளதை உள்ளவாறு அறிகிறது, மனதாலெப்படியோ அப்படியே வாக்காலும், வாக்காலெப்படியோ அப்படியே காரியத்திலுைம் செய்வதே வித்தை. இதற்கு மாறானது அவித்தை,

9. சத்திய:— உள்ளதை உள்ளவாறே அறிவதும், அதை அப்படியே சொல்லுவதும், செய்வதும்.

10. அக்ரோதம்— கோபம் முதலான கெடுதல்களைவிட்டு, சத்தியம் முதலான குணங்களைக் கைப்பற்றிக்கொள்வது.

பக்ஷபாதமன்னியில் நியாயத்துடன் இப்பத்து நியமங்களையும் எல்லோரும் நடத்தவேண்டும். வேதப்பிரகாரம் இவைகளை நடத்தி, பிறருக்கு அறிவித்து அவர்களையும் இவ்வாறு நடக்கச்செய்வது சந்நியாசிகளுடைய முதல் தர்மமாகும்.

अनेन विधिना सर्वांस्त्यक्त्वा संगाञ्शनैः शनैः ।
सर्वद्वन्द्वविनिर्मुक्तो ब्रह्मण्येवावतिष्ठते ॥ மனு. 6. 92.

சந்தோஷம், கோபம், படிப்படியாய் பிறவிக்கெடுதல்கள், சோம்பல் முதலானவைகளை விட்டுச் சந்நியாசி ஒருவர் பிரம்மத்தை அடைகிறார். எல்லா ஆசிரமத்திலிருக்கிறவர்களுக்கு நன்னடவடிக்கைகளையுடைய சத்தியத்தை நிச்சயஞ்செய்து அதர்ம நடவடிக்கைகளைத் தொலைக்க வற்புறுத்திச் சகலசந்தேகங்களையும் தீர்ப்பதுமே சந்நியாசிகளுடைய முதல் தர்மமாகும்.

விஞ.—பிராமணர்கள் மாத்திரம் சந்நியாசத்தைப் பெறலாமா? அல்லது க்ஷத்திரியர்களும் பெறலாமா ?

விடை.—பிராமணர்களே அடையலாம். பூர்ணவித்வானயும் தார்மிகர்களாயும், பரோபகார சிந்தை உடையவர்களாயும் இருப்பவர்களே பிராமணர்கள். பூர்ணவித்தையன்னியிலும், தர்மமன்னியிலும் இருக்கிற மனிதர்களுடைய சந்நியாசத்தினுல் உலகத்திற்கு உபகாரம் ஒன்று மேற்படாது. ஆகையினுல் பிராமணர்களுக்கே சந்நியாசத்திற்கதிகாரமிருக்கிறது. வேறுயாருக்குமில்லையென்கிற பழமொழியும் உண்மையாகிறது. மனுகூட என்ன சொல்லுகிறாரென்றால்.

एष वोऽभिहितो धर्मो ब्राह्मणस्य चतुर्विधः ।
पुण्योक्षयफलः प्रेत्य राजधर्मान् निबोधत ॥ மனு. 6. 97.

ஓ ரிஷிகளே ! பிரமசர்யம், வானப்பிரஸ்தம், கிரகஸ்தம், சந்நியாசமுமாகிற நான்கு ஆசிரமங்களை அடைவதே பிராமணர்களுடைய கடமை. சந்நியாசத்தினுல் இவ்வுலகில் புண்ய ஸ்வரூபத்தையும், மறித்தபிறகு அழிவில்லா ஆனந்தத்தையும் அடைகிருர்கள். இதற்குப்பிறகு க்ஷத்திரியர்களுடைய கடமையை என்னிடமிருந்து அறியுங்கள்.

சந்நியாசத்தை அடைய பிராமணர்களுக்கே முக்கியமாய் அதிகாரமிருக்கிறதென்று இதிலிருந்து ஏற்படுகிறது.

வினு:—சந்நியாசி ஆசிரமம் எதற்கு ?

விடை:— அவயவங்களில் தலை எவ்விதம் முக்கியமோ அப்படியே ஆசிரமங்களில் சந்நியாசம். ஏனென்றுல், இதன்னியில் வித்தை தர்மம் இவைகளை விருத்தி செய்யமுடியாது. இதர ஆசிரமத்திலிருக்கிறவர்களுக்கு வித்தையை கற்றுக்கொள்வதினுலும் குடும்ப காரியங்களினுலும் நற்காரியத்தை ஆசிரயிக்கிறதினுலும், இதில் பிரவேசிக்ககாலமிராது. பக்ஷபாதகங்களை ஒழித்து நடப்பது இதர ஆசிரமங்களினுல் செய்யமுடியாத காரியம். முக்தியில் கவனஞ்சென்றவர்களாய் உலகத்திற்கு உபகாரம் சந்நியாசியால் செய்யமுடிவதைப்போல் இதர ஆசிரமத்திலிருக்கிறவர்களால் செய்யமுடியாது. ஞானத்திலுல், அதை விருத்தி செய்யச் சந்நியாசிக்கு அவகாசமிருப்பதுபோல் வேறு ஆசிரமத்திலிருக்கிறவர்களுக்கு அவகாசமில்லை. பிரமசர்யத்திலிருந்து நேராகச்சந்நியாசத்தை அடைந்தவர்கள் உண்மையான ஞானத்தைப்பெற்றுப்பரவச்செய்து உலகத்தைமேம்படச்செய்வதுபோல் கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், இவைகளிலிருந்து சந்நியாசத்தை அடைந்தவர்கள் செய்யமுடியாது.

வினு:—மானிடவர்க்கத்தை விருத்திசெய்வதே கடவுளினுடைய இஷ்டமாகையினுல் அதைச்செய்யாமல் சந்நியாசத்தை எடுத்துக்கொள்வது ஈசுவராக்ஞைக்கு விரோதமானது. கிரகஸ்தாசிரமம் எடுத்துக் கொள்ளாமற்போனுல் சந்ததிகளை உற்பத்தி செய்யமுடியாது. சந்நியாச ஆசிரமம் முக்கியமானபடியினுல் எல்லோரும் அதையே விரும்புவார்களேயானுல் மானிடவர்க்கம் நசித்துப்போய் விடுமே ?

விடை:—விவாகம் செய்து கொண்ட போதிலும், பலபேர்களுக்குப் மக்கட்பேறு உண்டாகிறதில்லை. அப்படி உண்டானபோதிலும் இறந்துபோய் விடுகிறது. இவை ஈசுவராக்ஞைக்கு விரோதமானதல்லவா ? ஆனுல் ஒருவர் சொல்லுகிறபடி यत्ने कृते यदि न सिध्यति कोऽत्र दोषः முயற்சி செய்து காரியம் கைக்கூடாமற்போய் விட்டால் தோஷம் எங்கிருந்தேற்படும் ? என்று நீங்கள் கூறுவீர்களேயானுல் கிரகஸ்தாசிரமத்தில் எவ்வளவோபேர்கள் சண்டையிட்டு

மாண்டு விடுகிறார்கள். இதனால் சமூகத்திற்கு எவ்வளவு நஷ்டமேற்படுமென்று கள் வினவுகிறோம்? அபிப்பிராயபேதங்களினால் ஏற்படும் கெடுதல்கள் அநேகம். சந்நியாசிகள் வேதோக்தமாய் தன்னுடைய உபதேசத்தினால், அபிப்பிராய பேதத்தால் பிளக்கப்பட்ட மனிதர்களையும், தேசங்களையும் தர்மிஷ்டர்களாகச் செய்துசேர்த்துவைத்து லக்ஷக்கணக்கான மானிடர்களைக் காப்பாற்றுகிறார்கள். அப்பொழுது அவர்கள் ஆயிரக்கணக்கான கிரகஸ்தர்களுக்குச் சரியாய் மானிடவர்க்கத்தை விருத்திசெய்வோர்களாகிறார்கள். மேலும் எல்லோரும் சந்நியாசத்தை அடையமுடியாது. ஏனென்றால் எல்லோராலும் சிற்றின்பங்களை மீறமுடியாது. சந்நியாசிகளுடைய உபதேசத்தினால் தார்மிகர்களாகிற மனிதர்கள் அவர்களுடைய புத்திரர்களாகக்கொள்ளத் தகுந்தவர்கள்.

வினா:—தாங்கள் செய்யவேண்டிய கடமைகள் ஒன்று மில்லை என்று சந்நியாசிகள் சொல்லுகிறார்கள்? உலகமாயையில் கஷ்டப்படுவானேன்? அன்ன வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு ஆனந்தத்திலிருப்பானேன்? அவித்தியாரூபமான சம்சாரத்தில் அவஸ்தைப்படுவானேன்? தங்களைத்தாங்களே பிரம்மாவாக நினைத்துக்கொண்டு அவர்கள் சந்தோஷமாயிருக்கிறார்கள். யாராவது அவர்களைக்கேழ்ப்பார்களேயானால் அவர்களையும் அவ்வண்ணமே சொல்லுகிறார்கள். அதாவது நீயும் பிரம்மம். உன்னை பாபம், புண்ணியம் இவைகள் பாதிக்காது. ஏனென்றால் சீதளம் உஷ்ணம்போன்ற சரீரத்தினுடையவும் பசி, தாகம்போன்ற பிராணனுடையவும் சுகதுக்கம்போன்ற மனிதனுடையவும் குணங்களேயாகும், இவைகள். உலகம் மாயை. உலகத்திலிருக்கப்பட்ட கார்யங்கள் எல்லாம் படைப்பினுடையது. ஆகையினால் அவைகளில் சிக்கிக்கொள்வது புத்தியீனமான காரியமாகும். கொஞ்சகொஞ்சமாய் ஏற்படும் பாபபுண்ணியங்கள் தேகத்தினுடையவும் இந்திரியத்தினுடையவுமே யல்லாது ஆத்மாவினுடையதில்லை. அவர்களிம்மாதிரி உபதேசஞ்செய்கிறார்கள். நீங்களோ சந்யாசிதர்மங்களைக்குறித்து வேறு விதமாகச் சொல்லுகிறீர்கள். இதில் நம்பக்கூடிய உண்மை எது?

விடை:— நல்லகாரியங்களைச்செய்வது அவர்கள் கடமையில்லையா? மனு என்னசொல்லுகிறார் "வைதிகஸ்வகர்மபி" வேதாநுகூலமான தர்மங்களைச்செய்வதினால் சந்நியாசிகள் அழியாச்சுகத்தை அனுபவிக்கிறார்கள். ஆகையினால் சந்நியாசிகளுக்கும் வைதீக காரியங்கள் அவசிய மென்று ஏற்படுகிறது. அன்னபானாதி வஸ்திரங்களன்னியில் அவர்கள் காலந்தள்ளமுடியுமா? முடியாவிடில், அவர்கள் நல்லவேலைகளைவிட்டு விடுவதினால் ஏற்படும் பாபத்திற்காளாகமாட்டார்களா? கிரகஸ்தர்களிடமிருந்து அன்ன பானாதிகளைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்குத் திரும்ப ஒன்றும் செய்யாமலிருந்தால் சந்நியாசிகள் பாபத்திற்காளாகமாட்டார்களா? கண்ணும் காதுமிருந்தும் பார்க்காமலும் கேழ்க்காமலுமிருப்பது எப்படி பிரயோசனமற்றதோ, அப்படியே வேதம் முதலான சத்திய சாஸ்திரங்களை நன்கறியாதும், சத்யோபதேசம் செய்யாதும் இருக்கும் சந்நியாசிகள் பிரயோஜனமற்றவர்கள். மேலும் அவர்கள் இவ்வுலகத்திற்கு வீண்பாரமாயிருக்கிறார்கள். இவ்வுலகம் மாயை அவித்

யாரூபமான இந்தச்சம்சாரத்தில் ஏன்வீண் அவஸ்தைப்பட வேண்டும் என்று சொல்லுகிறவர்களே பாபமும் பொய்யும் ரூபமெடுத்துவந்த மனிதர்களாகிறார்கள். பாபவளர்ச்சிக்கு அவர்களே காரணர்களாகையினால் அவர்கள் பெரும்பாபியாகிறார்கள். சரீரம் முதலான அவயவங்களினால் செய்யப்படு எல்லாகாரியங்களிலும் ஆத்மாவினாலேயே நடக்கிறதினால் ஆத்மாவே அதன் பலாபலன்களை அடைகிறது. தங்களுடைய ஜீவனைப் பிரம்மாவென்று கருதுகிறவர்கள் அவித்தையாகிய நித்திரையில் தூங்குகிறார்கள். ஏனென்றால் எல்லையுள்ளதும், ஞானத்திலும் குறைந்தது ஜீவன். பிரம்மமோ சர்வவியாபி எல்லாமறிந்தவர், அழிவற்றவர், சுத்தமானவர். முக்தமானவர், இயற்கையினால் வேறானவர். ஜீவனோ சில சமயங்களில் கட்டுப்பட்டதாய், சில சமயங்களில் தன்னுடைய காரியங்களுக்குள்ளானது. சர்வவியாபியாயும் சர்வக்ஞராயும் பிர்ம்மா இருக்கிறபடியினால் அவர் பயத்திற்கும் சந்தேகத்திற்கும் உள்ளாகமாட்டார். ஜீவனோ சில சமயங்களில் மூடத்தனமாயும் சிலசமயங்களில் புத்திசாலித்தனமாயுமிருக்கிறது. பிரம்மா ஜனனமரணத்திலிருந்து அவஸ்தைப்படுகிறதில்லை. ஜீவனோ அவஸ்தைபடுகிறது. ஆகையினால் அவர்களுடைய உபதேசம் பொய்யானது.

வினா.—சகல காரியங்களையும் ஒழித்துவிட்டபடியினால் சந்நியாசிகள் அக்கினியையும் உலோகங்களையும் தொடக்கூடாது. இது உண்மையா? பொய்யா?

விடை.—பொய்யே. பிரம்மத்தை அறிந்தும், அப்பரிசுத்த சுபாவத்தையடைந்தும் **सम्यङ् नित्यमास्ते यस्मिन् यद्वा सम्यङ् न्यस्यन्ति दुःखानि कर्माणि येन स सन्यासः स प्रशस्तो विद्यते यस्य स संन्यासी** அதனால் கெட்டகாரியங்களை விட்டு சிறந்தகாரியங்களை உடையவர்களாக எவர் இருக்கிறார்களோ அவர்களே சந்நியாசிகள். நற்கிரியைகளைச்செய்து கெட்டகாரியங்களை நாசம் செய்கிறவர்களே சந்நியாசிகள்.

வினா.— கற்பிக்கிறதும், உபதேசிக்கிறதும் கிரகஸ்தனுடையவேலையானபடியினால் சந்நியாசிகள் எதற்காக?

விடை.—சத்தியோபதேசம் எல்லா ஆசிரமத்திலிருக்கிறவர்களும் செய்யலாம். பக்ஷபாதமன்னியில் சந்நியாசிகளுக்குச்செய்ய அவகாசமிருப்பது போல் கிரகஸ்தர்களுக்குக்கிடையாது. பிராமணர்களுடைய கடமை கற்பிக்கிறதும் உபதேசிக்கிறதும் என்பது உண்மையே (ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளும். புருஷர்களுக்கு புருஷர்களும் உபதேசிக்கவேண்டும்)யாத்திரைசெய்யசந்நியாசிகளுக்கு அவகாசமிருப்பதுபோல் ஒருக்காலும் கிரகஸ்தர்களுக்குக்கிடையாது. பிராமணன் வேதவிரோதமான காரியங்களைச் செய்வானேயானால் சந்நியாசிகளே அவனைக்கண்டிக்கக்கூடும். இக்காரணத்தினாலேயே சந்நியாசி ஆசிரமம் அவசியமாகிறது.

வினா:—"ஏக ராத்திரிம் வஸேத் கிராமே" என்றபடி ஒரு இரவுக்குமேல் சந்நியாசி ஒரு இடத்தில் வசிக்கக்கூடாது? இது உண்மையா?

விடை:—ஒருவிதத்தில் இது உண்மை. ஏனென்றால் ஒரே இடத்தில் அதிக நாள் வசிப்பதினால் சந்நியாசி உலகத்திற்கு அதிக உபகாரஞ் செய்யமுடியாது. அந்தவிடத்தினுடைய (வஸ்துக்களிலும் ஜனங்களிடத்திலும்) ஆசையும், வெறுப்பும் அதிகமாய் அந்த ஸ்தலத்தை விரும்பக்கூடும். ஒரே இடத்திலிருந்துகொண்டு அதிகம்செய்யவேண்டும் என்றிருந்தால் ஆதிகாலத்திய பஞ்சசிக சந்நியாசிகள், ஜனகமகாராஜாவினுடன் மாதக்கணக்காயும் வருஷக்கணக்காயும் இருந்ததுபோல் இருக்கட்டும். மேலும் "ஏகத்ரநரஹ்ஞ" என்பதும் தற்போதைய வேஷதாரியான மதாசாரியார்களால் ஏற்படுத்தபட்டவை. ஏனென்றால் அதிக நாள் சந்நியாசி ஒரே இடத்தில் வசித்தால் அவர் வஞ்சகங்கள், சந்நியாசிகளால் வெளியாகிவிடும் என்கிறபயம் இவர்களுக்கு இருந்து வருகிறது.

यतीनां काञ्चनं दद्यात्ताम्बूलं ब्रह्मचारिणाम् ।
चौराणामभयं दद्यात्स नरो नरकं व्रजेत् ॥

வினா:—"சந்நியாசிகளுக்கு சுவர்ணதானஞ் செய்கிறவன் நரகத்தை அடைவான்" என்பது இதன் தாத்பர்யம். இது உண்மையா?

விடை:—இதுகூட வர்ணாசிரமவிரோதிகளாலும், சம்பிரதாயத்தை அனுஷ்டிக்கிறவர்களாலும், மதவெறிப்பிடித்தவர்களாலும், பௌராணிகர்களாலும் கட்டப்பட்டவையாகும். ஏனென்றால் சந்நியாசிகளுக்குப்பணம்வந்தால் அவர்களுடைய பொய்யெல்லாம் வெளிவந்து விடுமென்று இவர்களுக்குத்தெரியும். அப்படி வருவதினால் தாங்கள் நஷ்டமடைந்து ஜனங்களைத்தன் பக்கம் சேரச்செய்து கொள்ளமுடியாது. அதுவுமன்னியில் சந்நியாசிகள் இவர்களுடைய ஆதினத்தில் இருக்கிறார்கள். பிக்ஷைமுதலானவைகள் இவர்களுடைய ஆதீனத்திலிருந்தால் சந்நியாசிகள் இவர்களுக்கும் பயப்படுவார்கள். மூர்க்கர்களுக்கும், சுயநலப்பிரியர்களுக்கும் தானங்கொடுப்பது மேன்மையாகக்கருதப் படும்பொழுது சந்நியாசிகளுக்குக்கொடுப்பதினால் கெடுதல் என்ன?

विविधानि च रत्नानि विविक्तेषूपपादयेत् ॥

என்று மனுசொல்லுகிறார். விலையுயர்ந்த பல உலோகங்களையும் சுவர்ணங்களையும் சந்நியாசிகளுக்குக்கொடுக்கவேண்டும். மேலும் உங்களால் மேற்சொல்லப்பட்ட சுலோகம் புதிதல்ல. ஏனென்றால் சுவர்ணதானஞ்செய்வதினால் ஒருவன் நரகத்தை யடைவானேயானால், வெள்ளி, இரத்தினம், முத்து முதலான பண்டங்களைத் தானஞ் செய்வதினால் சுவர்கத்தை அடைவான்.

வினா:—அந்தச்சுலோகம் எதோ தப்பினால் மாற்றிச் சொல்லப்பட்டது "யதிஹஸ்தே தனம் தத்யாத்" சந்நியாசியினுடைய கையில் பொருளைக்கொடுப்பவன் நரகத்தை அடைகிறான் என்று சொல்லியிருக்கவேண்டும்.

விடை:—இச்சுலோகமும் அறிவீனத்தால் கற்பனைசெய்து எழுதப்பட்டது. ஏனென்றால் கையில் பணம் கொடுப்பதினால் நரகத்தை அடைவானே யானால் மூட்டை கட்டியாவது, அல்லது பாதத்திலாவது அளித்து சுவர்க்கம் அடையவேண்டாமா? இம்மாதிரிகற்பனைகளை நம்புவது உசிதமல்ல. தன்செலவுக்கு வேண்டிய பணத்திற்குமேல் சந்நியாசி வைத்திருந்தால் அதைத் திருடர்களும் கள்ளர்களும் திருடிவிடுவார்கள் என்கிற பயத்தினால் உலகாசையிலிறங்கி விடுவார். வித்வானாயிருக்கிற ஒருவன் தன் ஆசிரமத்திற்குத்தகாத காரியங்களைச்செய்யமாட்டான். ஏனென்றால் தன் கிரகஸ்தாசிரமத்திலாவது, பிரமசர்யத்திலாவது எல்லாவற்றையும் அனுபவித்துப்பார்த்திருப்பான். பிரமசரியத்திலிருந்து சந்நியாசத்தை அடைகிறவர்களும் வைராக்யத்தினால் மாறமாட்டார்கள்.

வினா:—சிராத்தத்தில் அழைத்தாவது அழைக்காமலாவதுவந்து சந்நியாசி புசித்தால் பிதுருக்கள் நரகத்தில் விழுவார்கள் என்பது உண்மையா?

விடை:—பிதுருக்கள் வருகிறார்களென்பதும், சிராத்தத்தில் செய்யப்படுகிற யாவையும் இறந்தமுன்னோர்களைசேருகிறதென்பதும் வேதத்திற்கும் அறிவிற்கும் விரோதமாயிருக்கிறபடியினால், அது ஆகாதகாரியம். பொய்யான காரியம். சிராத்தத்திற்கு அவர்கள் வராமலிருக்கும்பொழுது யார் விழக்கூடும். அடுத்து அவரவர்களுடைய பாபபுண்ணியப்பிரகாரம் ஜீவன்கள் புனர்ஜென்மமெடுக்கிறபடியினால், அவைகள் எவ்விதம் திரும்பிவரக்கூடும்? ஆகையினால் புராணிகர்களினாலும், பைராகிகளினாலும் இந்த இணையற்ற பொய்க்கற்பனை செய்யப்பட்டது. இறந்தவர்களுக்குச் சிராத்தம் செய்வது வேதம் முதலான சாஸ்திரங்களுக்கு விரோதமானபடியினால், தாங்கள் செல்லுகிறவிடமெல்லாம் சந்நியாசிகள் அதைக்கண்டித்து நிறுத்துவார்களென்பது உண்மை.

வினா.—இந்திரியங்களை அடக்குவது முடியாத காரியமானபடியினால் பிரமசரியத்திலிருந்து சந்நியாசத்தை அடைகிறவர்கள் கஷ்டப்படுவார்கள். ஆகையினால் கிரகஸ்தாசிரமம், வானப்பிரதாசிரமம் இவைகளை அடைந்து கிழவனான பிறகே சந்நியாசத்தைப் பெறுவதுநலமாகும்.

விடை.—இந்திரியங்களை அடக்கமுடியாதவர்கள் பிரமசரியத்திலிருந்து சந்நியாசத்தை எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. அவ்விதம் அடக்கக்கூடியவர்கள் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது? விஷயங்களினுடைய கெடுதல்களையும், வீரியரக்ஷணையினால் உண்டாகும் சுகங்களையும் அறிகிறவன் விஷயசுகங்களில் ஒரு நாளும் இச்சை கொள்ளான். அறிவாகிற அனலுக்கு அவனுடைய வீர்யம் விறகாக உபயோகப்படுகிறது. ஆரோக்கியமாயிருக்கிறவன் வைத்தியர்களையும், மருந்துகளையும் விட்டுவிடுவது போல், சத்தியதர்மத்தையும் ஞானத்தையும் பரவச்செய்வதிலேயும், உலக உபகாரத்திலேயுமே சிந்தையுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும் ஆதிகாலத்திய பஞ்சசிகை கார்கி முதலானவர்களைப்போல் கலியாணத்தை விட்டுவிடுகிறார்கள்.

ஆகையினால் இவ்வுயர்பதவியை அதற்குத்தகுதியானவர்களே அடைய வேண்டும். தகுதியற்றவர்கள் சந்நியாசத்தினால் தன்னைத்தானே கெடுத்துக் கொள்வதுடன் மற்றவர்களையும் கெடுக்கிறார்கள்.

சாம்ராட் (அரசன்) பூலோகாதி பதியாயிருக்கிறது போல் (சந்நியாசிகள்) பரிவ்ராட் பூலோக குருவாய் அதாவது மானிடவர்க்கத்திற்கே குருவாயிருக்கிறார்கள். ஆனால் அரசனொருவன் தன் தேசத்திலும் பந்துக்களிடத்திலுமே மரியாதையைப் பெறுகிறான். சந்நியாசிகளுக்குச்சென்ற விடமெல்லாம் சிறப்பு.

विद्वत्त्वं च नृपत्वं च नैव तुल्यं कदाचन ।
स्वदेशे पूज्यते राजा विद्वान् सर्वत्र पूज्यते ॥

நான்கு ஆசிரமங்களினுடைய கடமைகளைச் சுருங்கத் திரும்பவுங் கூறுமிடத்து.

வித்தையை கற்றுக்கொள்ளவும், நல்ல பயிற்சியை அடையவும் பலவானாவதற்குமே பிரமசரியமும்,

நல்லவழியில் ஒழுக்கத்தைக் கைகொள்வதற்கு கிரகஸ்தாசிரமமும்.

போஜனசக்தியை விருத்தி செய்வதற்கும், மனச்சிந்தனைக்கும் ஞானவிருத்திக்கும், தபசுக்குமே வானப்பிரஸ்தமும்,

வேதம் முதலான சத்திய சாஸ்திரங்களைப் பரவச்செய்து தர்மச்செய்கைகளைக் கிரகித்துக்கெட்ட செய்கைகளை விட்டு சத்தியோபதேசஞ் செய்வதற்கும், சகலருடைய சந்தேகங்களைத் தீர்ப்பதற்குமே சந்நியாசி ஆசிரமமேயாம். சத்தியதர்மங்களை விருத்தி செய்வதற்கென வைத்திருக்கும் சந்நியாச ஆசிரமத்தினுடைய கடமைகளைச் சரிவர நடத்தாதவர்கள் கெட்டு நரகத்தை அடைகிறார்கள். ஆகையினால் சத்தியோபதேசஞ் செய்வதும், சந்தேகங்களைத்தீர்ப்பதும், வேதம் முதலான சத்திய சாஸ்திரங்களை கற்பிப்பதும், வேதப்பிரகாரம் தர்மத்தை விருத்திசெய்யப் பிரயத்தனஞ்செய்வதும் உலகநன்மைக்காப்பாடுபட்டு வருவதுமே சந்நியாசிகளுக்கு ஏற்ற கடமைகளாகும்.

வினா:—பைராகி, கேஸாவி முதலானவர்களைச் சந்நியாசிகளுடன் சேர்க்கலாமா ? கூடாதா ?

விடை:—கூடாது. ஏனென்றால் அவர்களிடத்தில் சந்நியாசி ஆசிரமதர்மங்கள் ஒன்றுமே கிடையாது. அவர்கள் வேதவிரோதமான வழிகளில் பிரவேசித்து, தங்கள் மதாச்சாரியர்களுடைய வசனங்களை வேதத்தைக்காட்டிலும் பெரிதுங்கருதுகிறாகள். தங்கள் மதக்கொள்கைகளைப் பெரிதும் பாராட்டு

கிறார்கள். பொய்யுலகில் மூழ்குகிறார்கள். உலக நன்மைசெய்வதற்குப்பதிலாக பிற்போக்கானவழிகளில் ஜனங்களைப்போகச்செய்து சுயகாரியங்களைத் திருப்தி செய்து கொள்ளுகிறார்கள். இக்காரணங்களினால் அவர்களைச் சந்நியாசி ஆசிரமத்தைச்சேர்ந்தவர்களாகக் கருதக்கூடாது. அவர்களைச் சுயநலக்காரர்களென்று அழைத்தலே தகும். இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

வினா:—எவர்கள் தானே நல்லதர்மத்தைப்பயின்று மற்றவர்களையுமப்படியே செய்யச்சொல்லி, இஜ்ஜென்மத்திலும், மறு ஜென்மத்திலும் சுகத்தை அனுபவிக்கசெய்கிறார்களோ, அவர்களே தர்மாத்மாக்கள்

சந்நியாசி ஆசிரமத்தினுடைய தர்மத்தைப் பற்றி இதுவரை சுருங்கச் சொன்னோம். அடுத்த அத்தியாயத்தில் இராஜதர்மங்களைப்பற்றி பேசுவோம்.

ஐந்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்.

இராஜ தர்மம்

१ राजधर्मान् प्रवक्ष्यामि यथावृत्तो भवेन्नृपः ।
संभवश्च यथा तस्य सिद्धिश्च परमा तथा ॥ மனு. 7. 1.

२ ब्राह्मं प्राप्तेन संस्कारं क्षत्रियेण यथाविधि ।
सर्वस्यास्य यथान्यायं कर्त्तव्यं परिरक्षणम् ॥ மனு. 7. 2.

முனிவர்கள் மனுவை வினவிய பொழுது அவர் சொல்லுகிறார் "நான்கு வர்ணங்களினுடையதும் நான்கு ஆச்ரமங்களினுடையதுமான கடமைகளைச் சொன்ன பிறகு (1) 'ராஜ தருமத்தை' அல்லது அரசர்களுடைய கடமை முதலானவைகளைச் சொல்லுவோம். அதாவது அரசனுயிருக்கத் தகுந்தவர் யாவர்? அவரை எவ்விதம் தெரிந்தெடுப்பது? அவர் எப்படி 'பரமசித்தியை' அடையலாம்? என்பதேயாகும் (2) புத்தி, ஞானம் தெய்வபக்தி இவைகளினால் பிராம்மணர்களைப்போல் பரிசுத்தமான க்ஷத்திரியர்கள், நியாயப்பிரகாரம் ராஜ்யத்தை இரக்ஷிக்கட்டும் "எவ்விதமென்றால்;

त्रीणि राजाना विदथे पुरूणि परि विश्वानि भूषथः सदांसि ॥

ரிக். மண் 3. சூக் 38- மந் 6.

(ஈச்வரன் உபதேசஞ் செய்கிறார்) ஆளுகிறவர்களுடையவும், ஆளப்படுகிறவர்களுடையவும், நன்மைக்காக, கல்விச் சபை, தர்ம (சமயம்) சபை, ராஜ சபை என்ற மூன்று சபைகளிருக்கட்டும். அததற்குரிய காரியங்களை விசாரித்து, நிச்சயித்து, எல்லோரையும், வித்தை, சுதந்திரம், தர்மம், நல்ல பயிற்சி, தனம் முதலானவைகளினால் அலங்கரிக்கட்டும்.

तं सभा च समितिश्च सेना च ॥ அ. கா 15. அனு 2. வ 9. ம 2.

सभ्यं सभां मे पाहि ये च सभ्याः सभासदः ॥

அத. கா 19. அனு 7. வ 55. மந் 6.

மூன்று சபைகளும், ராணுவ சபைகளும், சைனியமும் எல்லாம் ஒத்து, தேசத்தின் ஆட்சியை நடத்தட்டும். சபையோர்களைப் பார்த்து அரசன் சொல்ல வேண்டியதாவது; நியாயப்பிரகாரஞ் செய்யப்பட்ட அந்தந்தச் சபைகளினுடைய நியாயங்களைச் சபா பதிகளும் சபையோர்களும் அடுத்திருக்கட்டும். அதாவது, ஒருவருக்கும் சுயேச்சாதிகாரம் கொடுக்கக் கூடாது. சபா பதியாகிய அரசரும் அதன் அங்கத்தினர்களும் ஒருவருக்

கொருவருடைய ஆதீனத்திலிருக்க வேண்டும். இவ்விருதிரத்தினரும் ஜனங்களினுடைய ஆதீனத்திலிருக்க வேண்டும். ஜனங்களும் இவர்களால் இரக்ஷிக்கப்படவேண்டும். இவ்விதமில்லாமற் போகுமேயானால் :

राष्टमेव विश्याहन्ति तस्माद्राष्ट्री विशं घातुकः । विशमेव राष्टायाद्यां
करोति तस्माद्राष्टी विशमत्ति न पुष्टं पशुं मन्यत इति ॥

சத. காண் 12. பிர 2. பிரா 3. க 7. 8.

பிரஜைகளினுடைய ஆதீனமன்னியில் ஆளுகிறவன் சுயேச்சையாயிருப்பானேயானால், பிரஜைகளை நாசஞ் செய்து விடுவான். தன்னிடம் சர்வாதிகாரமு மிருக்கிறபடியினால், ஜனங்களை அழுத்திக் கொழுத்த மிருகங்களைச் சிங்கம் முதலான மாம்ச பக்ஷிணிகள் அடித்து விழுங்குவது போல் விழுங்கியும் விடுவான். அத்தகைய அரசன், வளரும் அதிகாரத்தின் துணையைக் கொண்டு, ஜனங்களைக் கொள்ளையடித்தும், அநீதியான தண்டனைகளை விதித்தும், ஐசுவர்யங்களை அபகரித்தும் வருவான். ஆகையினால் ஒருவரிடமே சுயேச்சாதிகாரம் இருத்தல் கூடாது.

इन्द्रो जयाति न परा जयाता अधिराजो राजसु राजयातै । चर्कृत्य
ईड्यो वन्द्यश्चोतसद्यो नमस्यो भव हे

அதர் .கண் 6. அனு 10. வ. 18. ம 1.

ஒ மனிதர்களே! (இஹ) இம்மனித சமுத்திரத்தில் (இந்தர:) பரம ஐசுவர்யங்களை உண்டாக்குகிறவராயும், சத்துருக்களை (ஜயாதி) ஜயிக்கக் கூடியவராயும், (ந பராஜயாதே) அவர்களால் வெல்ல முடியாதவராயும், (ராஜஸு) அரசர்களில், (அதிராஜ:) சர்வாதிகாரியாய் (ராஜயாதை) விளங்குகிறவராயும், (சக்ருதய:) சபா பதி ஸ்தானத்திற்குத் தகுந்த யோக்ய முள்ளவராயும், (இட்ய:) துதிக்கத்தக்க குணம், கர்மம், ஸ்வபாவம் இவைகளுடன் கூடினவராயும், (வந்தய:) வணங்குவதற்கும், (சோபஸத்ய:) நேசிப்பதற்கும் மரியாதையைப்பெற்றுகொள்ளுவதற்கும் யோக்யமுள்ளவராயும், (நமஸ்ய:) எல்லோராலும் மதிக்கத் தகுந்தவராயும் இருக்கிறவரையே அரசராகவோ அல்லது சபாநாயகராகவோ, நியமிக்க வேண்டும்.

इमन्दे वा असपत्न सुवध्वं महते क्षत्राय महते ज्यैष्ठ्याय महते
जानराज्यायेन्द्रस्येन्द्रियाय ॥ யஜுர் அ 9 ம 40

கற்றுணர்ந்த ஒ மனிதர்களே! நியாயத்துடன் கூடினவனும், பக்ஷபாத மன்னியிலும், தேர்ந்த வித்வானும், தேற்சியடைந்தவனும், சர்வஜன சிநேகிதனும் இருக்கிறவனையே உங்களுடைய அரசனாகவும், ராஜ்யத்தின் தலைவனாகவும், சபா பதியாகவும், ஒரே தொனியுடன் அங்கீகரியுங்கள். இம்மாதிரி செய்வதினாலேயே சர்வாதிகாரம் பெற்று,

எல்லோரையும்விட மேன்மையை அடைந்து ராஜ்யபாரத்தை நடத்தி மேலான சுவையும் பரம ஐசுவர்யங்களையும் அடைந்து உலகத்தைச் சத்துருக்களிடமிருந்து நீக்கினதாகச் செய்வீர்கள்.

स्थिरा वः सन्त्वायुधा पराणुदे वीळू उत प्रतिष्कभे । युष्माकमस्तु
तविषी पनीयसी मा मर्त्यस्य मायिनः ॥ ரிக் ம 1. சூத் 39, ம 2.

ஈச்வரன் என்ன உபதேசஞ் செய்கிறுரென்றால் :— சண்டைக் கருவிகளும் (துப்பாக்கிகள், முறுக்குக்குழல்கள், வில் அம்பு, முதலானவைகள்) வெடிமருந்து முதலான சண்டைச் சாமான்களும், உங்களுடைய சத்துருக்களை எதிர்த்து வெல்லும் படியான சக்தியை உடையதாகவும், பலமுள்ளதாகவுமிருக்கட்டும். உங்களுடைய சைனியமும் புகழுத்தகுந்ததாயும், எக்காலமும் சத்துருக்களை ஜயிக்கக் கூடியதாயுமிருக்கட்டும். ஆனுல், மேற் சொன்னவைகள் இழிவானவர்களினுலும், அநியாயஞ் செய்கிறவர்களினுலும் அடைய முடியாது. அதாவது மனிதர்கள் தர்மவான்களாய் இருக்கும் வரையிலேயே அவர்கள் ராஜாங்க விஷயங்களில் பெரியவராயிருப்பார்கள். கெட்ட கர்மங்களை அனுசரித்து அநியாய கார்யங்களைச் செய்கிறவர்கள் அடியோடு நசித்துப் போய்விடுவார்கள். ஆகையினுல் "மகா வித்வான்களை" வித்வசபை அங்கத்தினர்களாகவும், தார்மிக வித்வான்களை தர்மசபை அங்கத்தினர்களாகவும் பூஜிக்கத்தக்க தரும புருஷர்களை ராஜசபை அங்கத்தினர்களாகவும் தேசமானது தேர்ந்தெடுக்கட்டும். இவைகளெல்லாவற்றிலும் சர்வோத்தமமான குணம் கர்மம் ஸ்வபாவம் இவைகளுடன் கூடின மகான்களான புருஷர்களையே ராஜசபையின் தலைவராகச் செய்யட்டும். இம்மூன்று சபைகளும் நல்ல சட்டங்களை ஏற்படுத்த, அப்பிரகாரமே எல்லோரும் நடக்கட்டும். சர்வஜன சௌகர்யங்களைக் கோருகிற நியாயங்களுக்கு எல்லோரும் கீழ்ப்படிந்தும், தன் சௌகர்யங்களைக் கோருகிற நியாயங்களில் சுயேச்சையுடனுமிருக்க வேண்டும்.

சபைத்தலைவர்

इन्द्राऽनिलयमार्काणामग्नेश्च वरुणस्य च ।
चन्द्रवित्तेशयोश्चैव मात्रा निहृत्य शाश्वतीः ॥ மனு 7-4.

மின்சாரத்தைப்போல் சக்தியுள்ளவராயும், பிராணனைப்போல் தன் பிரஜைகளிடத்தில் பிரியமுள்ளவராயும், பிரர்களுடைய மனதை அறியக் கூடியவராயும், "நியாயாதிபதியைப்போல்" பக்ஷபாதமற்று நியாயமாயிருக்கிறவராயும், சூர்யனைப்போல் நியாயம், தர்மம், வித்தை இவைகளை விளக்கி ஜனங்களுடைய அஞ்ஞானத்தைப் போக்கிப் பிரகாசிக்கச்செய்கிற

வரரும், அக்னியைப் போல் துஷ்டர்களை நாசஞ்செய்கிறவராயும், சிறைச் சாலாதிபதியைப் போல் மோசக்காரர்களையும் துஷ்டர்களையும் அடக்குகிற வராயும், சந்திரனைப் போல் சிரேஷ்ட புருஷர்களை சந்தோஷிக்கச் செய்கிற வராயும், பொக்கிஷக்காரனைப் போல் தன் பொக்கிஷத்தை பூர்ணமாய் வைத்துக் கொண்டிருக்கிற வராயும்:

तपत्यादित्यवच्चैष चक्षूंषि च मनांसि च ।
न चैनं भुवि शक्नोति कश्चिदप्यभिवीक्षितुम् ॥ மனு 7. 6.

அச்சத்தில் சூரியன் ஜனங்களைவைத்திருப் பதுபோல் சக்தியுள்ளவரா யும், கம்பீரமானவராயும், தன்னை எதிர் நோக்கும் படியான சக்தியை உடைய, யாவரும் இல்லாமலிருக்கிறவராயும் சபா பதி இருத்தல்வேண்டும்.

सोऽग्निर्भवति वायुश्च सोऽर्कः सोमः स धर्मराट् ।
स कुबेरः स वरूणः स महेन्द्रः प्रभावतः ॥ மனு 7. 7.

அக்னி, வாயு, சூரியன், சந்திரன் நியாயாதிபதி, பொக்கிஷாதி பதி, இவர்களைப் போலவும், சிறைச்சாலாதிபதியைப் போல் துஷ்டர்களை அடக்குகிறவரும், சக்தியில் மின்சாரத்தைப் போலிருக்கிறவருமே சபா பதியாய் வீற்றிருக்க யோக்யமுள்ளவர்.

அரசன்.

स राजा पुरुषो दण्डःस नेता शासिता च सः ।
चतुर्णामाश्रमाणां च धर्मस्य प्रतिभूः स्मृतः ॥ மனு 7. 17.

சட்டமே (தண்டனை) உண்மையான அரசன், நியாயாதிகாரி, தருமஞ்செலுத்துபவன். சட்டமே நான்கு வருணத்திற்கும் நான்கு ஆச்ரமத்திற்கும் ஜாமீன். சட்டமே பிரஜைகளுக்கு நியாயமேற்படுத்தி ஆளுகிறது.

दण्डः शास्ति प्रजाः सर्वा दण्ड एवाभिरक्षति ।
दण्डः सुप्तेषु जागर्ति दण्डं धर्मं विदुर्बुधाः ॥ மனு 7. 18.

சட்டமே அவரவர்களுடைய இரக்ஷகன். சகல பிரஜைகளும் தூங்கும் பொழுது சட்டமே விழித்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலேயே புத்திமான்கள் சட்டத்தைத் தர்மமாகப் பாவிக்கிறார்கள்.

समीक्ष्य स धृतः सम्यक सर्वा रञ्जयति प्रजाः ।
असमीक्ष्य प्रणीतस्तु विनाशयति सर्वतः ॥ மனு 7. 19.

சரியாகச் செலுத்துங்கால் "சட்டமே" எல்லோரையும் சந்தோஷ முள்ளதாகச் செய்கிறது. தப்பாய், அதாவது நியாயம் தப்பி நடத்தினால் அது அரசனையும் நாசஞ்செய்கிறது.

दुष्येयुः सर्ववर्णाश्च भिद्येरन्सर्वसेतवः ।
सर्वलोकप्रकोपश्च भवेद्दण्डस्य विभ्रमात् ॥ மனு 7. 24.

சட்டத்தைச் சரிவர நடத்தாவிட்டால் அனைவராலும் தூஷிக்கப்பட்டு, ஒழுங்கீனம் சமூகத்தில் ஏற்படுகிறது.

यत्र श्यामो लोहिताक्षो दण्डश्चरति पापहा ।
प्रजास्तत्र न मुह्यन्ति नेता चेत्साधु पश्यति ॥ மனு 7. 25.

எவ்விடத்தில், கறுப்பு வர்ணத்துடனும், சிவந்த கண்களுடனும் கூடின பயங்கரமான புருஷனைப்போல் பாபங்களை விசாரித்து (சட்டமானது) நாசஞ்செய்கிறதோ, எவ்விடத்தில் சட்டத்தைச் செலுத்துகிறவர்கள் பக்ஷபாதமன்னியில் வித்வானாயிருக்கிறார்களோ, அவ்விடத்தில் பிரஜைகள் மோகத்தில் சிக்கிக் கொள்ளாமல் ஆனந்தத் துடனிருக்கிறார்கள்.

तस्याहुः संप्रणेतारं राजानं सत्यवादिनम् ।
समीक्ष्यकारिणं प्राज्ञं धर्मकामार्थकोविदम् ॥ மனு 7. 26.

சத்தியத்தையே பேசியும், யோசித்தும், புத்திமானாயும், தர்மம் அர்த்தம், காமம் இவைகளை அடைவதிலே நிபுணராயிருக்கிறவரையே சட்டத்தை நடத்த யோக்ய முள்ளவர்களாக வித்வான்கள் கருதுகிறார்கள்.

तं राजा प्रणयन्सम्यक् त्रिवर्गेणाभिवर्द्धते ।
कामात्मा विषमः क्षुद्रो दण्डेनैव निहन्यते ॥ மனு 7. 27.

சட்டத்தைச் சரிவர நடத்துகிற அரசன் தர்மார்த்தகாமத்தினுடைய சித்தியை சீக்கிரம் அடையச்செய்கிறார். அதே சட்டம் விஷயசக்தி யுள்ளவனும், உடம்பு வணங்காதவனும், சூதானவனும், தீயகுண முள்ளவனும், அற்பத்தனமானவனும், நீச புத்தி யுள்ளவனுமான அரசனால் செலுத்தப்படுமேயானால், அது அவனையே நாசஞ் செய்துவிடும்.

दण्डो हि सुमहत्तेजो दुर्धरश्चाकृतात्मभिः ।
धर्माद्विचलितं हन्ति नृपमेव सबान्धवम् ॥ மனு 7.28.

சட்டத்தினுடைய மேன்மையும் வலுவும் சிறப்பானபடியினால் அதை அவித்வான்களினாலும் அதர்மாத்மாக்களினாலும் செலுத்த முடியாது. தர்மத்திலிருந்து வேறாக நடக்கிற அரசனை நாசஞ்செய்ய அது காரணமாயிருக்கிறது.

सोऽसहायेन मूढेन लुब्धेनाकृतबुद्धिना ।
न शक्यो न्यायतो नेतुं सक्तेन विषयेषु च ॥ மனு 7. 30.

வித்தை, நல்ல பயிற்சி, யோசனைக்கு நற்புருஷர்கள், இவைகளற்றவனும், விஷயசுகங்களில் அழுந்தியிருக்கிறவனுமான அரசனால் "சட்டத்தை" நீதியுடன் செலுத்த முடியாது.

शुचिना सत्यसन्धेन यथा शास्त्रानुसारिणा ।
प्रणेतुं शक्यते दण्डः सुसहायेन धीमता ॥ மனு 7. 31.

நியாயத்திற்கு வேறு பெயரான சட்டத்தைப், பரிசுத்த ஆத்மா, சத்தியாசாரம், சத்புருஷசங்கம், நீதி சாஸ்திர பிரகாரம் தன் கடமைகளை நடத்த புத்திமான்களுடைய சகாயம், இவைகளுடன் கூடினவர்களே செலுத்த யோக்கியமானவர்.

முக்கிய அதிகாரிகள்.

सैनापत्यं च राज्यं च दण्डनेतृत्वमेव च ।
सर्वलोकाधिपत्यं च वेदशास्त्रविदर्हति ॥ மனு 12. 100.

நான்கு முக்கிய உத்தியோகங்களாவன:—முக்கிய சேனாதிபதி, முக்கிய விசாரணைத்தலைவர், முக்கிய நீதிபதி, சகலருக்கும் சர்வாதிகாரி, அதாவது அரசர். வேதம், முதலான சத்திய சாஸ்திரங்களில் ஞானம், பூர்ண வித்தை, தர்மாத்மா அடக்கப்பட்ட இந்திரியம் நல்லகுணம் இவைகளுடன் கூடினவர்களைக் கொண்டே நடத்தவேண்டும்.

ஆலோசனை சபைகள்.

दशावरा वा परिषद्यं धर्मं परिकल्पयेत् ॥
त्र्यवरा वापि वृत्तस्था तं धर्मं न विचालयेत् ॥ மனு 12. 110.

பத்து வித்வான்களாலோ, புத்திமான்களாலோ அல்லது மூன்று பெயர்களாலோ மனமொருமித்துச் செய்யப்பட்ட நியாயத்தை எவரும் மீறி நடக்கக் கூடாது.

त्रैविद्यो हैतुकस्तर्की नैरुक्तो धर्मपाठकः ।
त्रयश्चाश्रमिणः पूर्वे परिषत्स्याद्दशावरा ॥ மனு 12. 111.

சபையின் அங்கத்தினர்கள், நான்கு வேதம், நியாயசாஸ்திரம், நிருக்தம், தர்மசாஸ்திரம், முதலானவைகளில் நிபுணர்களாயும் முதல் மூன்று ஆசிரமங்களாகிய பிரமசரியம், கிரகஸ்தம், வானப்ரஸ்தம் இவைகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாயுமிருக்கவேண்டும்.

ऋग्वेदविद्यजुर्विच्च सामवेदविदेव च ।
त्र्यवरा परिषज्ज्ञेया धर्मसंशयनिर्णये ॥ மனு 12. 112.

ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம் இவைகளை அறிந்த மூன்று பேர் சேர்ந்து சபை கூடிச் செய்யப்பட்ட சட்டங்களை எவரேனும் மீறக் கூடாது.

एकोपि वेदविद्धर्मं यं व्यवस्येद् द्विजोत्तमः ।
स विज्ञेयः परो धर्मो नाज्ञानामुदितोऽयुतैः ॥ மனு 12. 113.

நான்கு வேதங்களையுமறிந்த சந்நியாசியுடைய ஏற்பாடானது பல வேதியர்களால் செய்யப் பட்டதைவிட மேலானதாகும். இலக்ஷக்கணக்கான அக்ஞானிகளினால் செய்யப்பட்ட விதிகளுக்கு யாரும் இணங்க வேண்டிய தில்லை.

अव्रतानाममन्त्राणां जातिमात्रोपजीविनाम् ।
सहस्रशः समेतानां परिषत्त्वं न विद्यते ॥ மனு 12. 114.

பிரம்மசரியத்தை அனுஷ்டிக்காமலும், சத்திய வாக்கு, வேத வித்தை விசாரணை இவைகளில்லாமலும் பிறப்பினால் மாத்திரம் பிராம்மணனயிருந்து செய்கைகளினால் சூத்திரனா யிருக்கிற ஆயிரம் பெயர்கள் கூடினாலும் அது சபையாகாது.

यं वदन्ति तमोभूता मूर्खा धर्ममतद्विदः ।
तत्पापं शतधा भूत्वा तद्वक्तृननुगच्छति ॥ மனு 12. 115.

அவித்வான்களினாலும் வேதஞானமற்றவர்களினாலும் செய்யப்பட்ட நியாயங்களை ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏனென்றால், மூர்க்கர்களால் செய்யப்பட்ட தர்மத்தை அனுஸரிப்பதினால் நூற்றுக் கணக்கான பாபங்கள் சம்பவிக்கும். ஆகையினால் மேற்சொன்ன மூன்று சபைகளில், வித்வசபை, தர்மசபை, ராஜசபை, ஒரு நாளும் மூர்க்கர்களை அங்கத்தினர்களாகச் சேர்க்கக்கூடாது. எப்பொழுதும் வித்வான்களையும், தார்மிகர்களையுமே ஏற்படுத்தவேண்டும்.

சபைகளின் அங்கத்தினர்கள்.

त्रैविद्येभ्यस्त्रयीं विद्यां दण्डनीतिं च शाश्वतीम् ।
आन्वीक्षिकीं चात्मविद्यां वार्त्तारम्भांश्च लोकतः ॥ மனு 7. 43.

மூன்றுவித வித்தைகளையும் நற்செய்கைகளையும் உணர்ந்தும், அப்பியாசித்தும் தண்ட நீதி, நியாயவித்தை, ஆத்ம வித்தை அதாவது: பரமாத்மாவினுடைய குணம், கர்மம், ஸ்வபாவம் இவைகளை அறிந்துமிருக்கிறவர்களே இராஜாவாகவும், இராஜ சபையின் அங்கத்தினர்களாகவும் இருப்பது நலம்.

इन्द्रियाणां जये योगं समातिष्ठेद्दिवानिशम् ।
जितेन्द्रियो हि शक्नोति वशे स्थापयितुं प्रजाः ॥ மனு 7. 44.

சபையின் சகல அங்கத்தினர்களும், சபா பதியும் நியாய மார்க்கத்தில் சென்று இந்திரியங்களை அடக்கி பாபங்களிலிருந்து வேருயிருக்க

களையே செய்து இழிவடைந்து கஷ்டத்தை அனுபவிப்பார்கள். கெட்டகர்மங்களிலிருந்து வேறாயிருக்கிறவர்கள் இறந்தபோதிலும் சுகத்தையே அனுபவிப்பார்கள்.

மந்திரிகள்.

मौलाञ्छास्त्रविदः शूराँल्लब्धलक्षान् कुलोद्गतान् ।
सचिवान्सप्त चाष्टौ वा प्रकुर्वीत परीक्षितान् ॥ மனு 7. 54.

தன் தேசத்திலும் இராஜ்யத்திலும் உண்டானவர்களாயும், வேதாதிசாஸ்திரங்களை அறிகிறவர்களாயும், வீரசூரர்களாயும், நிஷ்பலமாகாத எண்ணங்களை உடையவர்களாயும், நற்குலத்திலுதித்தவர்களாயும், நன்கு பழக்கப்பட்டவர்களாயுமிருக்கிற ஏழு அல்லது எட்டு பெயர்களை அரசன் மந்திரிகளாக நியமிக்க வேண்டும்.

अपि यत्सुकरं कर्म तदप्येकेन दुष्करम् ।
विशेषतोऽसहायेन किन्तु राज्यं महोदयम् ॥ மனு 7. 55.

சுலபமாயிருக்கும் ஒரு காரியத்தையுங்கூட ஒருவர் சகாயமன்னியில் தனியாய்ச் செய்வதென்றால் கஷ்டமாகிறது. இவ்விதம் இருக்கும்பொழுது மகத்தான இராஜ்யகாரியங்களை ஒருவரால் எவ்விதம் தனியாகச் செய்யமுடியும்? ஆகையினால் இராஜ்யகாரியங்களை ஒரே புத்தியின்பேரிலாவது, இராஜாவின்பேரிலாவது சுமத்துவது முடியாத காரியமாம்.

तैः सार्द्धं चिन्तयेन्नित्यं सामान्यं सन्धिविग्रहम् ।
स्थानं समुदयं गुप्तिं लब्धप्रशमनानि च ॥ மனு 7. 56.

இராஜ்யத்தின் தலைமையை வகிக்கிறவர்கள், கீழ்க்கண்டவைகளைப் போன்ற தன் ராஜ்யவிஷயங்களில் கற்றுணர்ந்த வித்வான்களாகிய மந்திரிகளுடன் யோசனை செய்யவேண்டும். (i) சமாதானம் (ii) சண்டை (iii) காப்பு—வெளி எதிர்ப்பிலிருந்து தான் ராஜ்யத்தைக் காப்பாற்றிக்கொண்டு, சமயத்தை எதிர்பார்த்தல் (iv) வாழ்வு. அதாவது தனக்குக் காலம் சரியாயிருக்கும்பொழுது சத்துருக்களை எதிர்த்தல் (v) அரசிறை, கஜானா, சைனியம் முதலான ஸ்வதேச சம்பந்தமான காரியங்களைச் சரிவர நடத்தல் (vi) எல்லா கஷ்டங்களையும் நீக்கிப் புதிதாய் வென்ற தேசங்களைச் சாந்தமாகச்செய்தல். இவ்வாறையுங்குறித்து அவர் தினந்தோறும் ஆலோசனைசெய்யட்டும்.

तेषां स्वं स्वमभिप्रायमुपलभ्य पृथक् पृथक् ।
समस्तानांच कार्य्येषु विदध्याद्धितमात्मनः ॥ மனு 7. 57.

மந்திரிகள், சபையின் அங்கத்தினர்கள் இவர்களுடைய தனித்தனி அபிப்பிராயங்களை அறிந்துகொண்டு, பெரும்பான்மையோர் அபிப்பிராயப்பிரகாரம் நடந்து தனக்கும் பிரஜைகளுக்கும் நன்மைகளைச் செய்யட்டும்.

अन्यानपि प्रकुर्वीत शुचीन् प्राज्ञानवस्थितान् ।
सम्यगर्थसमाहर्तॄ नमात्यान्सुपरीक्षितान् ॥ மனு 7.60.

அம்மாத்திரியே, பரிசுத்தம், புத்திமான், நிச்சய புத்தி, ஏற்பாடுசெய்யுஞ் சக்தி, அதிக அநுபவம் இவைகளுடன் கூடின வேறு மந்திரிகளையும் நியமிக்க வேண்டும்.

निर्वर्त्ततास्य यावद्भिरितिकर्तव्यता नृभिः ।
तावतोऽतन्द्रितान् दक्षान् प्रकुर्वीत विचक्षणान् ॥ மனு 7. 61.

இராஜ்ய காரியங்களை நடத்துவதற்காக தீவிர புத்தி, சாமர்த்தியம் சுறுசுறுப்பு பலம் இவைகளுடன் கூடினவர்களை வேண்டியவரையில் நியமிக்கட்டும்.

तेषामर्थे नियुञ्जीत शूरान् दक्षान् कुलोद्गतान् ।
शुचिनाकरकर्मान्ते भीरूनन्तर्निवेशने ॥ மனு 7. 62.

இவர்களுடைய ஆதீனத்தில் சூரவீரனும் பரிசுத்தமாயும் பலவானும், நற்குலத்திலுதித்தவனும் இருக்கிற பல சேவகர்களைப் பெரிய ஜவாப்தாரித்தனங்களுக்கேற்படுத்திக் கூச்சமுள்ளவும் திருட சிந்தையுமில்லாதவர்களை ராஜ்யத்தினுடைய உள் இலாகாவுக்கு நியமிக்கட்டும்.

दूतं चैव प्रकुर्वीत सर्वशास्त्रविशारदम् ।
इङ्गिताकारचेष्टज्ञं शुचिं दक्षं कुलोद्गतम् ॥ மனு 7. 64.

நற்குலத்திலுதித்தவராயும், பரிசுத்தமாயும், யோக்கியமாயும், மனதிலிருப்பதை அறியக்கூடியவராயும், முகவாட்டம் முதலானவைகளிலிருந்து முன் வருவதை சொல்லுகிறவராயும், சகல சாஸ்திரங்களை அறிந்தவராயும் இருக்கிறவரை தூதராக நியமிக்க வேண்டும்.

अनुरक्तः शुचिर्दक्षः स्मृतिमान् देशकालवित् ।
वपुष्मान्वीतभीर्वाग्मी दूतो राज्ञः प्रशस्यते ॥

இராஜ்ய காரியங்களைச் செய்வதில் வெகு பிரியமுள்ளவராயும், ஸ்வதேசத்தில்ஆசையுடனும், நிஷ்களங்கமாயும், மனோசுத்தம், தீவிரபுத்தி, நல்ல ஞாபக சக்தி, தேசம் காலம் இவைகளை அநுசரிக்கிறவராயும், நல்ல ரூபம், நிர்பயம், வாசாலத்தனம், இவைகளுடன் கூடினவராயும், தூதர் இருக்க வேண்டும்.

மந்திரிகள் முதலானவர்களுடைய கடமைகள்.

अमात्ये दण्ड आयात्तो दण्डे वैनायिकी क्रिया ।
नृपतौ कोषराष्ट्रे च दूते सन्धिविपर्ययौ ॥ மனு 7. 65.

தண்டனை செய்வதில் நியாயத்தைச்செலுத்தி, அநியாயமான தண்டனைகள் செய்யாமல் பார்த்துக் கொள்ளுவது மந்திரிகளுடையவும், கஜானு

முதலான ராஜகாரியங்கள் அரசனுடையவும், சண்டை சமாதானம் முதலான் வைகள் தூதருடையவும், சகல கடமைகள் சபைகளினுடையவும் காரியங் களாகும். சத்துருக்களுடன் சமாதானத்தையும் சிநேகிதர்களுடன் சண்டை யும் தூதரே செய்யக்கூடும்.

दूत एव हि सन्धत्ते भिनत्त्येव च संहतान् ।
दूतस्तत्कुरुते कर्म भिद्यन्ते येन वान वा ॥ மனு 7. 66.

சத்துருக்களைக் கலைப்பதற்கே அவர் கஷ்டப்படவேண்டும்.

बुद्ध्वा च सर्वन्तत्वेन परराजचिकीर्षितम् ।
तथा प्रयत्नमातिष्ठेद्यथात्मानं न पीडयेत् ॥ மனு 68.

விரோதி அவருடைய அபிப்பிராயம் இவைகளை அறிந்துகொண்டு தனக் குக்கேடு, வராமலிருக்கும் வழியை தூதன், அரசன், சபைத்தலைவன், சபையி னுடைய சகல அங்கத்தினர்களும் தேடவேண்டும்.

धनुर्दुर्गं महीदुर्गमब्दुर्गं वार्क्षमेव वा ।
नृदुर्गं गिरिदुर्गं वा समाश्रित्य वसेत्पुरम् ॥ மனு 7. 70.

அடர்ந்த மலைப்பிரதேசத்தில் பூமிசெழித்திருக்கும் ஸ்தலத்தில் நீரினாலோ அடர்ந்தமரங்களினாலோ, கவசம் பூண்டவர்களினாலோ, மலை யினாலோ, சூழப்பட்ட ஒரு பட்டணத்தைத் தன்னுடைய வாசஸ்தானமாக ஏற்படுத்திக்கொள்ளட்டும்.

एकः शतं योधयति प्राकारस्थो धनुर्धरः ।
शतं दशसहस्राणि तस्माद्दुर्गं विधीयते ॥ மனு 7. 74.

மதிலுக்குள்ளேயிருக்கும் ஒருவன் வெளியிலிருக்கும் நூறு பெயர் களுக்கும், நூறு பெயர் ஆயிரம் பெயர்களுக்கும் முறையே இணையாகிறார்களா கையினால் தன் நகரத்தைச் சுற்றி ஒரு மதிலைக் கட்டிக்கொள்ளட்டும். ஆகையினால் கோட்டை ஒன்று மிகவும் அவசியமாகிறது.

तत्स्यादायुधसम्पन्नं धनधान्येन वाहनैः ।
ब्राह्मणैः शिल्पिभिर्यन्त्रैर्यवसेनोदकेन च ॥ மனு 7. 75.

அஸ்திரசஸ்திரங்களினாலும், தனதான்யங்களினாலும், ஆடு மாடுகளி னாலும், போதகாசிரியர்களினாலும், உபதேசகர்களினாலும், கைத்தொழிலாளர் களினாலும், மிருகங்களுக்கு ஆகாரமாகிற புல் பூண்டு, ஜலம் இவைகளினாலும் கோட்டையை நன்கு நிறைக்கவேண்டும்.

तस्य मध्ये सुपर्याप्तं कारयेद्गृहमात्मनः ।
गुप्तं सर्वर्तुकं शुभ्रं जलवृक्षसमन्वितम् ॥ மனு 7. 76.

அந்தகரின் மத்தியில் ஜலம், விருக்ஷம், புஷ்பம், காற்று இவைகளி ஞல் நிரம்பப்பெற்ற ஒரு இல்லத்தைத் தனக்கு அமைத்துக் கொள்ளவேண்டும். அது எல்லா காலங்களுக்கேற்றதாயும் ராஜ்யபாரங்களை நடத்தத்தகுந்த. வளவு பெரியதாயுமிருக்கவேண்டும்.

तदध्यास्योद्वहेद्भार्यां सवर्णां लक्षणान्विताम् ।
कुले महति सम्भूतां हृद्यां रूपगुणान्विताम् ॥ மனு 7. 77.

இவ்வளவு செய்துவிட்டு அதாவது பிரம்மசரிய வித்தைகளைப் படித்து விட்டு இராஜகாரியங்களை முடித்துக்கொண்டு தன் க்ஷத்திரிய வகுப்பிலிருந்தே உத்தமகுலத்திலுதித்தவும், சகல சௌந்தரிய லக்ஷணங்களுடனும் சௌபாக் யங்களுடனும் கூடின மனதிற்கேற்ற ஒரு பெண்ணைத் தன் சகவாசியாகத் தேடிக்கொள்ளட்டும். ஒரு மனைவியை அடைந்து மீதி சகல ஸ்திரீகளையும் அடையக்கூடாதவளாக நினைத்து வேறுயாரையும் நிமிர்ந்து கூடப்பார்க்கக் கூடாது.

पुरोहितं प्रकुर्वीत वृणुयादेव चर्त्विजम् ।
तेऽस्य गृह्याणि कर्माणि कुर्य्युर्वैतानिकानि च ॥ மனு 7. 78.

காலகிரமப்பிரகாரம் ஹோமம், எக்ஞம், இன்னும் முதலான தருமங் களைச் செய்யத் தன் அரண்மனையில் புரோஹிதரையும் ரித்விக்கையும் வைத் துக்கொள்ளட்டும். அல்லும் பகலும் ராஜ கார்யங்களிலிருந்து மீறுமல் அதைச் செய்வதே அரசனுடைய முதற்கடமை.

அரசிறை.

सांवत्सरिकमाप्तैश्च राष्ट्रादाहारयेद्बलिम् ।
स्याच्चाम्नायपरो लोके वर्त्तेत पितृवन्नृषु ॥ மனு 7. 80.

தன்னுடைய வருமான வருஷவரவை அரசன் தான் அறிந்த இஷ்ட புருஷர்களைக்கொண்டு சேகரிக்கட்டும். சபாபதிரூபமான அரசன், மந்திரிகள், இன்னும் முதலானவர்கள் வேதானுகூலப்பிரகாரம் பிரஜைகளுடைய தகப்ப னைப்போல் நடக்கட்டும்.

अध्यक्षान् विविधान् कुर्यात् तत्र तत्र विपश्चितः ।
तेऽस्य सर्वाण्यवेक्षेरन्नृणां कार्याणि कुर्वताम् ॥ மனு 7. 81.

நியமபிரகாரம் அவரவர்களுடைய கடமைகளைச்சரிவர நடத்துகிருர் களாவென்று பார்க்க அந்தந்த இலாகாக்களுக்குத் தனித்தனியாக பலவித உத்தியோகஸ்தர்களை சபைகள் நியமிக்கட்டும். அவ்விதம் சரியாய்ச் செய் கிறவர்களை மரியாதை செய்து, அப்படிச் செய்யாதவர்களைத் தண்டிக்கவும் வேண்டும்.

आवृत्तानां गुरुकुलाद्विप्राणां पूजको भवेत् ।
नृपाणामक्षयो ह्येष निधिर्ब्राह्मो विधीयते ॥ மனு 7. 82.

அரசர்களுடைய அழிவில்லாத பொக்கிஷம் என்று அறியப்படும் வேதத்தினுடைய ஞானத்தைப் பரவச்செய்வதற்காக அரசனும் சபைகளும் வேதசாஸ்திரங்களைப் படித்து குருகுலத்திலிருந்து வெளிவரும் பிரம்மசாரிகளையும் அவர்களுடைய ஆசிரியர்களையும் ஏற்றவாறு மரியாதை செய்யட்டும். இவ்விதம் செய்வதினால் ஞானம் விருத்தியாகித் தேசம் க்ஷேமத்தை அடைகிறது.

समोत्तमाधमै राजा त्वाहूतः पालयन् प्रजाः ।
न निवर्त्तेत संग्रामात् क्षात्रं धर्ममनुस्मरन् ॥ மனு 7. 87.

தன் பிரஜைகளினுடைய க்ஷேமத்தைக் கோருகிற அரசன் தனக்குச் சமானமான பலத்தையாவது, அல்லது அதிகமான பலத்தையாவது உடைய மற்றொருவன் எதிர்த்தானேயானால் அப்பொழுது தன் க்ஷத்திரிய தர்மத்தை நினைத்துக்கொண்டு யுத்தத்திற்குப் போவதிலிருந்து பின் வாங்கக்கூடாது. தனக்கு ஜயம் ஏற்படக்கூடிய சாமர்த்தியத்துடன் சண்டை செய்யவேண்டும்.

आहवेषु मिथोऽन्योन्यं जिघांसन्तो महीक्षितः ।
युध्यमानाः परं शक्त्या स्वर्गं यान्त्यपराङ्मुखाः ॥ மனு 7. 89.

சத்துருக்களை வெல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் பயமன்னியில் போர்க்களத்திலிருந்து பின் வாங்காமல் சண்டை செய்யும் அரசர்கள் சுகத்தை யடைவார்கள். இதனால் ஒரு பொழுதும் பின் வாங்கக்கூடாது. ஆனால் ஜயமடைய சிலசமயங்களில் சத்துருக்களிடமிருந்து பதுங்கவேண்டியதவசியமாகும். தனக்கு ஜயம் வரும்படி சகலவிதமான உபாயங்களை கைக்கொள்ள வேண்டும். ஆனால் கோபம் வருங்காலத்தில் புலி அக்னியிடம் வந்து விழுந்து மரிப்பது போல் மூடத்தனமாய் நாசமாய்ப் போகவேண்டியதில்லை.

ஆண்மையுடைமை.

न च हन्यात्स्थलारूढं न क्लीबं कृताञ्जलिम् ।
न मुक्तकेशं नासीनं न तवास्मीतिवादिनम् ॥ மனு 7. 91.
न सुप्तं न विसन्नाहं न नग्नं न निरायुधम् ।
नायुध्यमानं पश्यन्तं न परेण समागतम् ॥ மனு 7. 92.
नायुधव्यसनं प्राप्तं नार्त्तं नातिपरिक्षतम् ।
न भीतं न परावृत्त सतां धर्ममनुस्मरन् ॥ மனு 7. 93.

வீரத்தன்மையுடைய மேன்மையைக் கருதி யுத்தத்தில் போர்வீரர்கள் சமீபத்தில் ஆயுதமன்னியிலிருக்கிறவர்களை அடிக்கக்கூடாது. நபுஞ்சகர்கள் கூப்பின கைகளுடன் சமாதானத்திற்கு வேண்டுகிறவர்கள், அலங்கோலமான (கண்களில் தொங்கும்) மயிரைப் பெற்றவர்கள், உட்கார்ந்திருக்கிறவர்கள், "உனக்கே சரணம்" என்று சொல்லுகிறவர்கள், ஸ்மரணையன்னியிலோ அல்லது மயக்கத்திலோ இருக்கிறவர்கள், ஆயுதமன்னியிலிருக்கிறவர்கள்

நிர்வாணமாயிருக்கிறவர்கள், யுத்தத்தைப் பார்க்கிறவர்கள், கூடாரங்களுடன் தொடருகிறவர்கள், வியாதி புண் இவைகளிலிருந்து வருந்துகிறவர்கள், அசக்தமானவர்கள், பலத்த காயமடைந்தவர்கள், பயந்தவர்கள், திரும்பி போர்க்களத்திலிருந்து ஓடுகிறவர்கள், இவர்கள் எல்லோரையும் அடிக்கக் கூடாது.

இவர்களைக் கைதியாக்கி அன்னபாநுதிகளை அளிக்கவேண்டும். புண்பட்டவர்களை வைத்தியர்களைக் கொண்டுக் கவனிக்கவேண்டும். அவர்களை எவ்விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது. வருத்தப்படச் செய்யக்கூடாது. அவரவர்களுக்குத் தகுந்த காரியங்களைக் கொடுக்கவேண்டும். ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிகர்கள், காயமடைந்தவர்கள், வியாதிக்காரர்கள் துக்கத்திலிருந்து வருந்துகிறவர்கள் இவர்கள் எல்லோரையும் யாரும் கஷ்டமடையாதபடி முக்கியமாய் அரசன் பார்த்துக்கொள்ளவேண்டும். குழந்தைகளைத் தன் குழந்தைகளைப்போலக் காப்பாற்றவேண்டும். ஸ்திரீகளையும் தன் ஸ்திரீகளைப்போல எண்ண வேண்டும். தன் தமக்கை அல்லது பெண்களைப்போல் கவனிக்கவேண்டும். காமக்கண்களினால் அவர்களைப் பார்க்கவேகூடாது. தேயமுழுவதும் அமைதியான பிறகு மறுபடியும் படையெடுக்க முடியாதவர்களை அவரவர்கள் ஸ்தலத்திற்குத் திருப்பி யனுப்பவேண்டும். படையெடுத்து வரக்கூடும் என்று சந்தேகப்படுகிறவர்களை அரசன் சிறைப்படுத்தவேண்டும்.

यस्तु भीतः परावृत्तः संग्रामे हन्यते परैः ।
भर्त्तुर्यद्दुष्कृतं किञ्चित्तत्सर्वं प्रतिपद्यते ॥ மனு 7. 94.

கோழத்தனமாய் சபையோரிடமிருந்து திரும்பி நம்பிக்கை துரோகஞ் செய்கிற போர்வீரனை ராஜ்யத்திற்கு விரோதமாக நடந்த குற்றத்திற்காக தண்டிக்கவேண்டும்.

यच्चास्य सुकृतं किंचिदमुत्रार्थमुपार्जितम् ।
भर्त्ता तत्सर्वमादत्ते परावृत्तहतस्य तु ॥ மனு 7. 95.

இந்தஜன்மத்திலும் மறுஜன்மத்திலும் அவன் அடையவேண்டியசுகத்தை அவனுடைய எஜமானனடைகிறான். போர்க்களத்திலிருந்து திரும்பியோடும்பொழுது கொல்லப்படுகிறபோர்வீரன் ஒரு பொழுதும் சுகத்தையடையான். இப்பயங்காளித்தனமான செய்கைகளினால் அவனுடைய நல்ல காரியங்களெல்லாம் வியர்த்தமாய்ப்போகிறது. நன்றியுடன் யுத்தஞ்செய்கிறவனே மறியாதையை அடைகிறான்.

रथाश्वं हस्तिनं छत्रं धनं धान्यं पशून् स्त्रियः ।
सर्वद्रव्याणि कुप्यं च यो यज्जयति तस्य तत् ॥ மனு 7. 96.

யுத்தத்தில் போர்வீரர்களோ அதிகாரிகளோ அடையும் வண்டி, யானை குதிரை, கூடாரம், தானியம், பொன், வெள்ளி, பசு முதலான பிராணிகள்,

ஸ்திரீகள், எண்ணெய், வெண்ணெய் முதலானவைகளை அரசன் அடையக் கூடாதென்கிற சட்டத்தை மீறக்கூடாது.

राज्ञश्च दद्युरुद्धारमित्येषा वैदिकी श्रुतिः ।
राज्ञा च सर्वयोधेभ्यो दातव्यमपृथग्जितम् ॥ மனு 7 97.

ஆனால் சைனியத்திலிருக்கிறவர்கள் தாங்களடைந்ததில் பதினாறி லொரு பங்கு அரசனுக்களித்துவிடவேண்டும். அரசனும் அவர்களிடமிருந்து தானடைந்த மொத்தத்தில் பதினாறிலொருபங்கு அவர்களுக்கு அளித்துவிட வேண்டும்.

சண்டையிலிறந்தவருடைய பாகத்தை மனைவியும், மக்களும் அடைய வேண்டும். அவருடைய அநாதையான மனைவி மக்களைச் சரிவரப் பாதுகாத்து குழந்தைகள் பெரியவர்களானபிறகு அரசன் தன்னுடைய வேலையிலமர்த்திக் கொள்ளவேண்டும். இராஜ க்ஷேமத்தைக் கோருகிறவர்களும் கீர்த்தி, சுகம் இவைகளை விரும்புகிறவர்களும் இதை மீறிநடக்கக்கூடாது.

அதிகாரிகளுடைய கடமைகள்.

अलब्धं चैव लिप्सेत लब्धं रक्षेत्प्रयत्नतः ।
रक्षितं वर्द्धयेच्चैव वृद्धं पात्रेषु निः क्षिपेत् ॥ மனு 7. 99.

அரசனும், சபைகளும், இல்லாததை அடைந்தும், அடைந்ததை அக் கரையுடன் காப்பாற்றியும், காப்பாற்றியதை விருத்திசெய்தும், விருத்தி செய்த தனத்தைக் கொண்டு வேதஞானம், வேதமார்கம், இவைகளைப் பரவச்செய் வதிலேயும், வேதோத்தமஸித்தியார்த்திகள், உபதேசகர்கள் இவர்களுக்கு உதவுவதிலேயும், அசமர்த்தர்கள் அநாதைகள் இவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதிலேயும் செலவிட வேண்டும்.

நடவடிக்கைகளினுடைய நான்கு உபாயங்களை அறிந்துகொண்டு சோம் பலை விட்டு, சுறு சுறுப்பாயிருக்க வேண்டும்.

अलब्धमिच्छेद्दण्डेन लब्धं रक्षेदवेक्षया ।
रक्षितं वर्द्धयेद् वृद्धया वृद्धं दानेन निःक्षिपेत् ॥ மனு 7. 101.

நியாயத்தினால் அடையமுடியாததை அடைய விரும்பவும், அடைந் ததை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றவும், காப்பாற்றியதை நல்ல வழியில் விருத்தி செய்யவும், விருத்தி செய்ததை மேற்சொன்ன நல்ல வழியில் செல விடவும் பிரயத்தனப்படட்டும்.

अमाययैव वर्त्तेत न कथंचन मायया ।
बुध्येतारिप्रयुक्तां च मायान्नित्यं स्वसंवृतः ॥ மனு 7. 104.

எப்பொழுதும் வஞ்சக மன்னியில் உண்மையாய் நடக்கட்டும். தான் ஜாக்கிரதையாயிருந்து கொண்டு சத்துருக்களுடைய கெடுதல்களை அறிந்து கொண்டு காப்பாற்றிக் கொள்ளட்டும்.

नास्य छिद्रं परो विद्याच्छिद्रं विद्यात्परस्य तु ।
गूहेत्कूर्म इवाङ्गानि रक्षेद्विवरमात्मनः ॥ மனு 7.105.

தனக்குப் பலமில்லாததை எதிரிகளுக்குக் காட்டாமல் எதிரிகளினுடைய பலத்தைத் தானறிந்திருக்கவேண்டும். ஆமை தன்னுடைய அவயவங்களை மறைத்து ஓட்டின் கீழ் வைத்திருப்பதைப்போல் எதிரியால் தாக்கக்கூடியவைகளை மறைத்து வைத்திருக்கவேண்டும்.

बकवच्चिन्तयेदर्थान् सिंहवच्च पराक्रमेत् ।
वृकवच्चावलुम्पेत शशवच्च विनिष्पतेत् ॥ மனு 7. 106.

மீன் பிடிப்பதற்கு ஆயத்தமாய் நாரையானது யோசனையிலிருப்பது போல் தனத்தைச்சேகரிப்பதிலேயே கவனமாயிருக்கவேண்டும். வேண்டியவைகளைச் சேர்த்துக்கொண்டு தன்னதிகாரத்தை விருத்தி செய்துகொண்ட பிறகு சிங்கத்தைப்போல் பலமாய்த் தன் சத்துருவைத் தொலைக்கட்டும். புலியைப்போல் மெதுவாகப் பதுங்கித் தன் வைரியைக் கைக்கொள்ளட்டும். சத்துரு சமீபத்தில் வந்து விட்டால் முயலைப்போல் ஓடிப் பிறகு யுக்தியானல் அவர்களை மீறட்டும்.

एवं विजयमानस्य येऽस्य स्युः परिपन्थिनः ।
तानानयेद्वशं सर्वान् सामादिभिरुपक्रमैः ॥ மனு 7. 107.

க்ஷேமத்தை விரும்புகிற அரசன் சகல வழிபறிக் கொள்ளைக்காரர்களையும், திருடர்களையும் இன்னும் முதலானவர்களையும் மன்னித்தோ, வெகுமதியளித்தோ, அல்லது பரஸ்பர விரோதம் செய்து வைத்தோ அடக்க வேண்டும். இவ்வழிகளினால் முடியாமல் போனால் தண்டனை செய்து அடக்க வேண்டும்.

यथोद्धरति निर्दाता कक्षं धान्यं च रक्षति ।
तथा रक्षेन्नृपो राष्ट्रं हन्याच्च परिपन्थिनः ॥ மனு 7. 110.

தானியங்களுக்குக் கேடன்னியில் குடியானவன் உமியைப் பிரிப்பது போல், அரசன் வழிபறிக்கொள்ளைக்காரர்களையும், கன்னக்களவுக்காரர்களையும் அழித்துப் பிரஜைகளைக் காப்பாற்றட்டும்.

मोहाद्राजा स्वराष्ट्रं यः कर्षयत्यनवेक्षया ।
सोऽचिराद् भ्रश्यते राज्याज्जीविताच्च सबान्धवः ॥ மனு 7. 111.

மோகத்திலும் "விசாரணை" அன்னியிலும் நன்றாய் ஆளாத இராஜ்யத்தையுடைய அரசன் தன் இராஜ்யத்தை இழந்து மரிப்பதற்கு முந்தி பந்து சகிதமாய்த் தான் நாசமடைகிறான்.

शरीरकर्षणात्प्राणाः क्षीयन्ते प्राणिनां यथा ।
तथा राज्ञामपि प्राणाः क्षीयन्ते राष्ट्रकर्षणात् ॥ மனு 7. 112.

சரீரம் மெலிந்து போவதினால் ஜீவன்களுடைய பிராணன் க்ஷீணமடைகிறாற்போல் பிரஜைகளை நெருக்கியாளுகிற அரசனுடைய அதிகாரம் அவன் பந்து சகிதமாய் நசித்துப்போகிறது.

राष्ट्रस्य संग्रहे नित्यं विधानमिदमाचरेत् ।
सुसंगृहीतराष्ट्रो हि पार्थिवः सुखमेधते ॥ மனு 7. 113.

ஆகையினால், அரசனும் இராஜசபைகளும், இராஜ்ய காரியங்களைச் சரிவர நடக்கும் வழியில் பாடுபடவேண்டும். இராஜ்யத்தைக் காப்பாற்றுவதிலேயே கவனமுள்ள அரசன் சுகத்தை அடைகிறான்.

द्वयोस्त्रयाणां पञ्चानां मध्ये गुल्ममधिष्ठितम् ।
तथा ग्रामशतानां च कुर्य्याद्राष्ट्रस्य संग्रहम् ॥ மனு 7. 114.

ஆகையினால், இரண்டு, மூன்று, ஐந்து, நூறு கிராமங்களின் மத்தியில் முறையே அதிகாரி ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்தி அங்கு துரைத்தன வேலைகளை நடத்துவதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கட்டும்.

ग्रामस्याधिपतिं कुर्याद्दशग्रामपतिं तथा ।
विंशतीशं शतेशं च सहस्रपतिमेव च ॥ மனு 7. 115.

ஒரு கிராமத்திற்கு ஒரு முக்கியஸ்தரையும், பத்துக்கு இவரையும் அதுபோன்ற இருபதிற்கு மூவரையும், நூறுக்கு ஐந்துபேரையும் நியமிக்க வேண்டும் அதாவது ஒரு கிராமத்திற்கு ஒரு படவாரியும் (விசாரணகர்த்தா) அல்லது ஒவ்வொரு கிராமங்களுக்கு ஒரு சிறிய தாணாவும், இரண்டு சிறிய "தாணாவிற்கு" ஒரு பெரிய "தாணா"வும், பத்து தாணாவிற்கு ஒரு "தஹஸில்" உம், பத்து தஹஸிலுக்கு ஒரு ஜில்லாவும் ஆக முறையே நியமித்திருக்கும் தற்போதைய மார்க்கமானது நம்முடைய மனு முதலான தர்ம சாஸ்திரங்களைத் தழுவினது.

ग्रामदोषान्समुत्पन्नान् ग्रामिकः शनकैः स्वयम् ।
शंसेद् ग्रामदशेशाय दशेशो शतीशिविंनम् ॥ மனு 7. 116.

இம்மாதிரி ஆளுகைக்கு ஏற்பாடு செய்துவிட்டு ஒரு கிராமத்தினுடைய அதிபதி பத்து கிராமங்களினுடைய அதிபதிக்கு தன் எல்லையில் நடந்த குற்றங்களைத் தினந்தோறும் அறிவிக்கவேண்டும். அம்மாதிரியே பத்து கிராமங்களுடைய அதிகாரி இருபதினுடைய அதிபதிக்குத் தெரிவிக்க வேண்டும்.

विंशतीशस्तु तत्सर्वं शतेशाय निवेदयेत् ।
शंसेद् ग्रामशतेशस्तु सहस्रपतये स्वयम् ॥ மனு 7. 117.

இருபதினுடைய அதிபதி பிரதிதினம் சஹஸ்ராதிபதிக்கு, அச் சமாசாரங்களைத் தெரியப்படுத்தவேண்டும். சஹஸ்ராதிபதிக்கு ஆயிரத்தினுடைய அதிபதிக்கு அதாவது ஐந்து "இருபதாதிபதிகள்" ஒரு சஹஸ்ராதிபதிக்கும், பத்து சஹஸ்ராதிபதிகள் ஒரு லக்ஷாதிபதிக்கும், லக்ஷாதிபதிகள் கோடி கிராமங்களை ஆளும் இராஜசபைக்கும், ராஜசபைகளெல்லாம் சர்வதேச சபை ஒன்றுக்கும் அறிவிக்கவேண்டும்.

तेषां ग्राम्याणि कार्याणि पृथक्कार्याणि चैव हि ।
राज्ञोऽन्यः सचिवः स्निग्धस्तानि पश्येदतन्द्रितः ॥ மனு 7. 120.

பத்தாயிரம் கிராமங்கள் ஒவ்வொன்றின் பேரில் இரண்டு சபாதிபதிகளை உத்தியோகஸ்தர்களாக நியமிக்கவேண்டும். அவர்களிலொருவர் ராஜசபைக்குச் சபாநாயகராயிருக்கட்டும். மற்றொருவர் ஊக்கத்துடன் ஊர்முழுவதும் சுற்றி நியாயதிகாரிகள் காரியத்தைச் சரிவரசெய்கிருர்களாவென்று பார்க்கட்டும்.

नगरे नगरे चैकं कुर्यात्सर्वार्थचिन्तकम् ।
उच्चैः स्थानं घोररूपं नक्षत्राणामिव ग्रहम् । மனு 7. 121.

நகரவிசாரணைக்காக ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் "நகர சபை மண்டபம்" ஒன்றைக் கட்டவேண்டும். அது உயரமாயும், விசாலமாயும் சந்திரனைப்போல் ரம்மியமாயுமிருக்கவேண்டும். வித்தியா விருத்தர்களான அந்நகர் சபையினர்கள், நகரசமாசாரங்களை அங்கே விசாரணைசெய்து பொதுஜன நன்மையை விருத்திசெய்கிறவும், புத்தி, ஞானம் இவைகளைப் பரவச்செய்கிறது மானநியாயங்களை ஏற்படுத்தவேண்டும்.

स तानुनुपरिक्रामेत्सर्वानेव सदा स्वयम् ।
तेषां वृत्त परिणयेत्सम्यग्राष्ट्रेषु तच्चरैः ॥ மனு 7. 122.

தன்கீழ்—க்ஷத்திரியர்களிலிருந்தும் வேறு இதர வகுப்புக்களிலிருந்தும்—துப்பு அறிகிறவர்களை வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து — நல்லதோ, கெட்டதோ,—ராஜ்யபரிபாலனசேவகர்கள், ஜனங்கள் இவர்களுடைய குணங்களைப் பரிபூரணமாய் அறியட்டும். கடமைகளை நிறைவேற்றத் தவறுகிறவர்களைத் தண்டித்து, மெச்சத்தகுந்தவர்களைக் கௌரவப்படுத்தட்டும்.

राज्ञो हि रक्षाधिकृताः परस्वादायिनः शठाः । மனு 7. 123.
भृत्या भवन्ति प्रायेण तेभ्यो रक्षेदिमाः प्रजाः ॥

தார்மிகர்கள், அனுபவமுள்ளவர்கள் வித்துவான்கள், நற்குலத்துதித்தவர்கள் இவர்களையே அரசன் பிரஜைகளைக் காப்பாற்றுகிற விஷயத்தில் ஏற்படுத்தவேண்டும். இம்மாதிரி கற்றுணர்ந்த வித்துவான்களுடைய ஆதீனத்தில் மோசக்காரர்கள், கள்ளர்கள் அதாவது மற்றவர்களுடைய சொத்தை அபகரிக்கிறவர்கள் முதலானவர்களை வைக்கவேண்டும். இவ்விதம் செய்வதினால் அவர்களுடைய துன்மார்க்கவழியையும் குறைத்து பிரஜைகளையும் காப்பாற்றுவதாகும்.

ये कार्यिकेभ्योऽर्थमेव गृह्णीयुः पापचेतसः ।
तेषां सर्वस्वमादाय राजा कुर्यात्प्रवासनम् ॥ மனு 7. 124.

வாதியிடமிருந்தோ, பிரதிவாதியிடமிருந்தோ, அநீதியாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு பக்ஷபாதத்துடன் தீர்ப்பு செய்கிற "இராஜபுருஷர்களை" அரசன் அவர்களுடைய ஆதீனத்தில் இருக்கிறவைகளைப்பரிமுதல் செய்து திரும்பிவராமலிருக்கும்படி தேசபிரஷ்டஞ் செய்வதினால் தண்டிக்கவேண்டும். அவ்விதம் தண்டிக்காவிடில் மற்றவர்களும் அம்மாதிரி செய்ய அது ஒரு உதாரணமாகும். அவர்களைத் தண்டிப்பதினால் அக்கெட்ட நடவடிக்கைகள் நின்றுபோய் விடும். ஆனால் அவர்கள் சுகமாய் வாழ்ந்து தனவானாகும்படிக்கு, அவர்களுக்கு வருஷாவருஷமோ, மாதாமாதமோ, நிலத்தினாலோ, பணத்தினாலோ, சன்மானிக்கவேண்டும். வயோதிக உத்தியோகஸ்தர்களுக்கு, அவர்களுடைய சேவகத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டு சம்பளத்தில் பாதி உபகாரச்சம்பளமளிக்கவேண்டும். இவ்வுபகாரச்சம்பளம் அவர்களிலிருக்கும் வரையிலே யல்லாது இறந்தபிறகுகிடையாது. அவர்களுடைய மக்கள் மரியாதை செய்யப்பட்டு அவர்களுடைய சக்திக்கேற்றவாறு ராஜாங்க உத்தியோகங்கள் கொடுக்கப் படவேண்டும். அவருடைய மனைவி மக்களுடைய நிர்வாகத்திற்கு ஏதாவது அளிக்கவேண்டும். இந் நீதியை அரசன் எப்பொழுதும் கைக்கொண்டு நடக்கட்டும்.

தீர்வை

यथा फलेन युज्येत राजा कर्त्ता च कर्मणाम् ।
तथावेक्ष्य नृपो राष्ट्रे कल्पयेत्सततं करान् ॥ மனு 7. 128.

பிரஜைகளுடைய சுகத்தையும், தன்னுடைய சுகத்தையும், பாதுகாக்கும் வண்ணம் அரசன் தன் சபையுடன் தீர விளங்க யோசனை செய்து, வரி விதிக்கட்டும்.

यथाल्पाल्पमदन्त्याऽऽद्यं वार्य्योकोवत्सषट्पदाः ।
तथाऽल्पाल्पो ग्रहीतव्यो राष्ट्राद्राज्ञाब्दिकः करः ॥ மனு 7. 129.

அட்டை, கன்றுக்குட்டி, வண்டு, இவைகள் தங்கள் ஆகாரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உட்கொள்ளுவது போல் தன்னுடைய வருஷவரியை

அரசன் கொஞ்சங் கொஞ்சமாக ஜனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளட்டும்.

नोच्छिन्द्यादात्मनो मूलं परेषां चातितृष्णया ।
उच्छिन्दन्ह्यात्मनो मूलमात्मानं तांश्च पीडयेत् ॥ மனு 7. 139.

பெரும் பேராசையினால் அவர் தன்னுடைய சுகத்தையும், பிறருடைய சுகத்தையும் அடியோடு நாசஞ்செய்யக் கூடாது. ஏனென்றால் சுகத்தினுடைய வேரை, களைபவர் தனக்கும் பிறருக்கும் கேட்டை விளைவித்துக்கொள்ளுகிறார்களே யல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

तीक्ष्णश्चैव मृदुश्च स्यात्कार्यं वीक्ष्य महीपतिः ।
तीक्ष्णश्चैव मृदुश्चैव राजा भवति सम्मतः ॥ மனு 7. 140.

சமயத்திற்கேற்றவாறு இளகியதும் கடினமுமான மனதை உடைய அரசன் நல்லவர்களிடத்தில் அன்பாயும், தீயர்களிடத்தில் கண்டிப்பாயுமிருக்கிறபடியினால் வெகு மரியாதையுடன் கருதப்படுகிறார்.

एवं सर्वं विधायेदमितिकर्तव्यमात्मनः ।
युक्तश्चैवाप्रमत्तश्च परिरक्षेदिमाः प्रजाः ॥ மனு 7. 142.

இம்மாதிரியாகத் தன் பிரஜைகளைக் காப்பாற்றவேண்டும். அலக்ஷியமன்னியில் தன் காரியத்திலேயே கண்ணுயிருந்துகொண்டு அரசன் பிரஜைகளைக் காப்பாற்றவேண்டும்.

विक्रोशन्त्यो यस्य राष्ट्राद्ध्रियन्ते दस्युभिः प्रजाः ।
सम्पश्यतः सभृत्यस्य मृतः स न तु जीवति ॥ மனு. 7. 143.

எந்த அரசன், மந்திரி இவர்களுடைய எதிரிலேயே, ஜீவனும், பணமும் துஷ்டர்களால் அபகரிக்கப்பட்டு ஜனங்கள் உதவிக்குப்பரிதவிக்கிறார்களோ, அந்த அரசன் மந்திரிகளை மரித்தவர்களாக அறி. பிழைத்திருக்கிறவர்களாகஇல்லை. அப்பேர்ப்பட்டவர் பெருந்துக்கத்தை அநுபவிப்பார்.

क्षत्रियस्य परो धर्मः प्रजानामेव पालनम् ।
निर्दिष्टफलभोक्ता हि राजा धर्मेण युज्यते ॥ மனு 7. 144.

பிரஜைகளைப் பாலனஞ் செய்வதே அரசனுடைய முதற்கடமையாகும். மனுஸ்மிருதி ஏழாவது அத்தியாயத்தில் கூறியிருக்கும் வண்ணம் சபைகளினுடைய உதவியினால் வரிகளைப்பெற்று ஆளுகிற அரசன் சுகத்தை அநுபவிக்கிறான். அவ்விதம் செய்யாதவர்கள் கடுந்துக்கத்தை அனுபவிப்பார்கள்.

தினசரி வேலை

उत्थाय पश्चिमे यामे कृतशौचः समाहितः ।
हुताग्निर्ब्राह्मणांश्चार्च्य प्रविशेत्स शुभां सभाम् ॥ மனு 7. 145.

ராத்திரி கடைசிஜாமத்திலெழுந்திருந்து, முகத்தைக் கழுவிக்கொண்டு, பரமேஸ்வரதியானம், அக்னிஹோத்திரம், தார்மிக வித்வான்களுடைய சேவை இவைகளைச் செய்துகொண்டு, போஜனத்தை முடித்துக்கொண்டு சபையினுள்ளே பிரவேசிக்கட்டும்.

तत्र स्थितः प्रजाः सर्वाः प्रतिनन्द्य विसर्जयेत् ।
विसृज्य च प्रजाः सर्वा मन्त्रयेत्सह मन्त्रिभिः ॥ மனு 7. 146.

அங்கே நின்றுகொண்டு வந்திருக்கிறவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும். பிறகு அன்புடன் அவர்களைக் கலைத்துவிட்டுத் தன் முக்கிய மந்திரியுடன் இராஜ சமாசாரங்களை யோசனை செய்யவேண்டும்.

गिरिपृष्ठं समारुह्य प्रसादं वा रहोगतः ।
अरण्ये निःशलाके वा मन्त्रयेदविभावितः ॥ மனு 7. 147.

பிறகு அவருடன் திரிவதற்காக வெளியில் சென்று மலை உசியையாவது, சிறிய புல் கூட இல்லாத (மறைப்பதற்கு) தனிவீட்டையாவது அடைந்து (இராஜ்ய சமாசாரங்களை) தன் மந்திரியுடன் வெகு சாவதானமாய் யோசனை செய்யவேண்டும்.

यस्य मन्त्रं न जानन्ति समागम्य पृथग्जनाः ।
स कृत्स्नां पृथिवीं भुङ्क्ते कोशहीनोऽपि पार्थिवः ॥ மனு 7. 148.

எவ்வரசனுடைய ஆலோசனை அன்னியர்கள் ஒன்று கூடின போதிலும் அறியக் கூடாததாயிருக்கிறதோ அதாவது ஆழ்ந்த யோசனையுள்ளதாயும், சுத்தமாயும், பரோபகாரார்த்தமாயும், இரகஸ்யமாயும் இருக்கிறதோ அந்த அரசன் ஏழையாயிருந்தபோதிலும் உலகமுழுவதும் ஆளுகிறான்.

आसनं चैव यानं च संधिं विग्रहमेव च ।
कार्यं वीक्ष्य प्रयुञ्जीत द्वैधं संश्रयमेव च ॥ மனு 7. 161.

அரசன் முதலான இராஜபுருஷர்கள் தீரயோசனைசெய்தபிறகு கீழ்க்கண்ட ஆறிலொரு கடமை, காலத்திற்கேற்றவாறு பெறவேண்டும். எதிர்க்காமலிருத்தல், எதிர்த்தல், சத்துருக்களுடன் சமாதானம் செய்துகொள்ளல், துஷ்ட சண்டை செய்தல், அவருடை சைனியங்களைப் பிரித்துவிட்டு ஜயம்பெறல் தான் நிர்பலமாயிருந்தால் மற்றொரு அரசனை ஆசிரித்தல்.

संधिं तु द्विविधं विद्याद्राजा विग्रहमेव च ।
उभे यानासने चैव द्विविधः संश्रयः स्मृतः ॥ மனு 7. 162.

சமாதானம், சண்டை, எதிர்த்தல், அமைதியாயிருத்தல், பலங்களுடைய அமைப்பு, நேசம், இவைகள் ஒவ்வொன்றினுடைய இருவகையான குண வேற்றுமைகளை அரசன் அறிந்துகொள்ளட்டும்.

समानयानकर्मा च विपरीतस्तथैव च ।
तथा त्वायतिसंयुक्तः संधिर्ज्ञेयो द्विलक्षणः मனு 7. 163.

சத்துருக்களுடன் சமாதானம் இருவிதமாகும். சமாதானம் செய்து கொள்ளுதல் ஒன்று. அவனை எதிர்க்க வேறொருவனுடன் சேர்ந்துகொள்ளுதல் இரண்டு, ஆனால் அரசன் நடக்க வேண்டியதையும் நடக்கப் போக வேண்டிதையும் யோசனை செய்த நடக்கட்டும்.

स्वयंकृतश्च कार्यार्थमकाले काल एव वा ।
मित्रस्य चैवापकृते द्विविधो विग्रहः स्मृतः ॥ மனு 7. 164.

சண்டை இருவிதம். தன்காரியசித்திக்காகச்செய்தல் ஒன்று, சமயாசமய மன்னியில் தன் நேசதேசத்திற்கு அபராதம் செய்த குற்றத்திற்காக எதிரியுடன் சண்டைசெய்தல் இரண்டு.

एकाकिनश्चात्ययिके कार्ये प्राप्ते यदृच्छया ।
संहतस्य च मित्रेण द्विविधं यानमुच्यते ॥ மனு 7. 165.

முன்னறியாத காலங்களில் உதவியுடனே உதவியற்றோ துரிதமாய்ச் சத்துருக்களின் பேரில் படையெடுத்தலே இருவிதமான எதிர்ப்பு.

क्षीणस्य चैव क्रमशो दैवात्पूर्वकृतेन वा ।
मित्रस्य चानुरोधेन द्विविधं स्मृतमासनम् ॥ மனு 7. 166.

எக்காரணத்தினாலாவது தான் சலித்தபொழுது அமைதியாயிருப்பது ஒன்று. சிநேகிதர்களுடைய யோசனையின் பேரில் அமைதியாயிருப்பது இரண்டு.

बलस्य स्वामिनश्चैव स्थितिः कार्यार्थसिद्धये ।
द्विविधं कीर्त्यते द्वैधं षाड्गुण्यगुणवेदिभिः ॥ மனு 7. 167.

காரியசித்திக்காக சேனாதிபதி, சேனை என்று இருவிதமாகப் பிரிப்பதையே பலங்களினுடைய பிரிவு, என்றழைக்கிறார்கள்.

अर्थसंपादनार्थं च पीड्यमानस्य शत्रुभिः ।
साधुषु व्यपदेशार्थं द्विविधः संश्रयः स्मृतः ॥ மனு 7. 168.

சத்துருவுக்குப் பயந்தாவது, தன்னுடைய எண்ணம் சித்தியாகுவதற்காவது தன்னைவிடப் பெரிய அரசனையாவது அல்லது மகானையாவது சரணமடைவதுதான் இரண்டு விதமான நேசமாம்.

यदावगच्छेदायत्यामाधिक्यं ध्रुवमात्मनः ।
तदात्वे चाल्पिकां पीडां तदा सन्धिं समाश्रयेत् ॥ மனு 7. 169.

தற்சமயம் சண்டைக்குச்சென்றால் தான் கஷ்டப்படுவாரென்றும், சில காலம் காத்திருந்த பிறகு சென்றால் தன் சத்துருவை நாசஞ்செய்து, ஜயம் பெறலாம் என்றும் அறிகிற அரசன் சத்துருவுடன் சமாதானம் செய்து கொண்டு தனக்கு நல்லகாலம் வரும்வரையில் காத்திருக்கட்டும்.

यदा प्रहृष्टा मन्येत सर्वास्तु प्रकृतीर्भृशम् ।
अत्युच्छ्रितं तथात्मानं तदा कुर्वीत विग्रहम् ॥ மனு 7. 170.

எப்பொழுது தன் பிரஜைகள் யாவரும், சேனையும் மிகவும் உன்னதமாயும் பிரசன்னமாயு மிருக்கிறவர்களாக அரசன் அறிகிறானோ அப்பொழுது தன் சத்துருவோடு யுத்தம் செய்யட்டும்.

यदा मन्येत भावेन हृष्टं पुष्टं बलं स्वकम् ।
परस्य विपरीतं च तदा यायाद्रिपुं प्रति ॥ மனு 7. 171.

எப்பொழுது, தன்னுடைய பலம் அதாவது சேனை சந்தோஷமாயும், பிரசன்னமாயும், சரியாயும், நன்கு பரிபாலிக்கப்பட்டும், போஷிக்கப்பட்டும், உடுத்தப்பட்டும் இருக்க எதிரிகளுடையது அதற்கு விரோதமாக இருக்கிறதோ அப்பொழுது அவர் சத்துருவுடன் யுத்தஞ்செய்யத் தொடரட்டும்.

यदा तु स्यात्परिक्षीणो वाहनेन बलेन च ।
तदासीत प्रयत्नेन शनकैः सांत्वयन्नरीन् ॥ மனு 7. 172.

எப்பொழுது சேனையானது பலத்திலும், பெயரிலும் குறைந்து போகிறதோ அப்பொழுது அவர் சத்துருவை மெதுவாகச் சாந்தம் செய்து தன்னிடத்திலேயே வைத்திருக்கட்டும்.

मन्येतारिं यदा राजा सर्वथा बलवत्तरम् ।
तदा द्विधा बलं कृत्वा साधयेत्कार्यमात्मनः ॥ மனு 7. 173.

தன்னைவிட அதிக பலவானுகச் சத்துருவை அறியும் அரசன் தன் பலத்தை இருமடங்காக்கியோ அல்லது இரண்டாகப் பிரித்தோ தன் காரியத்தைக் கைக்கூட்டிக்கொள்ளட்டும்.

यदा परबलानां तु गमनीयतमो भवेत् ।
तदा तु संश्रयेत् क्षिप्रं धार्मिकं बलिनं नृपम् ॥ மனு 7. 174.

தன்மேல் சத்துரு உடனே எதிர்ப்பான் என்று தெரிந்தவுடன் அவ்வரசன் நியாயமானவும் பலமுமுள்ள வேறு அரசனுடன் நேசஞ்செய்து கொள்ளட்டும்.

निग्रहं प्रकृतीनां च कुर्याद्योरिबलस्य च ।
उपसेवेत तं नित्यं सर्वयत्नैर्गुरुं यथा ॥ மனு 7. 175.

சத்துருக்களை நாசஞ் செய்வதிலேயோ, அமைதியை உண்டுபண்ணுவதிலேயோ, தன் சைனியங்களை அடக்குவதிலேயோ தனக்கு உபகாரம் செய்கிறவர்களை அரசன் தன் குருவைப்போல் எப்பொழுதும் கருதவேண்டும்.

यदि तत्रापि संपश्येद्दोषं संश्रयकारितम् ।
सुयुद्धमेव तत्राऽपि निर्विशंकः समाचरेत् ॥ மனு 7. 176.

தன்னைச் சேருகிறவர்களிடமாவது, நேசர்களிடமாவது தோஷத்தை காண்கிற அரசன் அவர்களுக்கு வெற்றி தராது சண்டைச் செய்யட்டும் தருமவானுயிருக்கிற அரசனுடன் ஒருபொழுதும் விரோதம்செய்துகொள்ளக் கூடாது. அவனுடன் எப்பொழுதும் சிநேகமாகவே இருக்கவேண்டும். பிரபலமாயிருக்கிற துஷ்டர்களை அடக்குவதற்கு மேற்சொன்னவைகளை யெல்லாம் கைக்கொள்ளட்டும்.

सर्वोपायैस्तथा कुर्यान्नीतिज्ञः पृथिवीपतिः ।
यथास्याभ्यधिका न स्युर्मित्रोदासीनशत्रवः ॥ மனு 7. 177.

நிபுணனான அரசன், அவனுடைய சிநேகிதன் மத்தியஸ்தன், சத்துரு இவர்கள் தன்னைவிட பலமுடையாமலிருக்கும்படியான வழிகளை எடுத்துக் கொள்ளட்டும்.

आयतिं सर्वकार्याणां तदात्वं च विचारयेत् ।
अतीतानां चसर्वेषां गुणदोषौ च तत्त्वतः ॥ மனு 7. 178.

செய்யும் காரியங்கள், செய்யப்போகும் காரியங்கள், இவைகளினுடைய பலாபலன்களைச் சரிவர பரிசீலனைச் செய்யட்டும். பிறகு கெடுதல்களை விலக்கி நல்ல குணங்களை விருத்தி செய்யட்டும்.

आयत्यां च गुणदोषज्ञस्तदात्वे क्षिप्रनिश्चयः ।
अतीते कार्य्यशेषज्ञः शत्रुभिर्नाभिभूयते ॥ மனு 7. 179.

செய்யப்போகிற காரியங்களினுடைய குணதோஷங்களை அறிந்தும், இடமாய்க் காரியங்களைச்செய்தும் செய்தகாரியங்களின் பிழைகளைத் தெரிந்துமிருக்கிற அரசனை ஒருபொழுதும் சத்துருக்கள் ஜயிக்க மாட்டார்கள்.

यथैनं नाभिसंदध्युर्मित्रोदासीनशत्रवः ।
तथा सर्वं संविदध्यादेष सामासिको नयः ॥ மனு 7. 180.

அரசன், அதாவது சபாபதி எப்பொழுதும், எவ்விதத்திலும் நேச இராஜ்யங்களினுடைய பலத்தையும், மத்தியஸ்த இராஜ்யங்களையும், சத்துருக்களையும் தன்வசத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய வழிகளைத்தேடட்டும். இதையொருபொழுதும் அலக்ஷியஞ் செய்யக்கூடாது. இதுவே, சுருங்கச்சொல்லில், உண்மையான இராஜ தந்திரமாகும்.

कृत्वा विधानं मूले तु यात्रिकं च यथाविधि ।
उपगृह्यास्पदं चैव चारान् सम्यग्विधाय च ॥ மனு 7. 184.

அரசன் சத்துருவுடன் யுத்தத்திற்குச் செல்லுமுன் தன் இராஜ்யத்தினுடைய க்ஷேமத்தைத் தேடட்டும். போர்முனைக்குச் செல்லுங்கால் வேண்டிய பொருள்கள் யாவற்றையும் தயாரிக்கட்டும். சகல சேனைகள், வண்டிகள், வாகனங்கள், சஸ்திரங்கள் அஸ்திரங்கள் முதலானவைகளை எடுத்துக்கொள்ளட்டும். எங்கும் தூதர்களை அதாவது நாலாபக்கங்களிலிருந்தும் சமாசாரத்தைக் கொண்டுவர ஒற்றர்களை அனுப்பட்டும்.

संशोध्य त्रिविधं मार्गं षड्विधं च बलं स्वकम् ।
सांपरायिककल्पेन यायादरिपुरं शनैः ॥ மனு 7. 185.

மூவிதமார்க்கங்களும்- நில வழி, ஜலவழி ஆகாயவழி-சரியாயிருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, நிலவழிகளில் ரதம், குதிரை, யானை, இவைகளின் பேரிலும், நடந்தும், நீர்வழிகளில் படகுகளின் பேரிலும், ஆகாயவழிகளில் விமானம் முதலானவைகளின்பேரிலும் செல்லட்டும். மேலும் வேண்டிய காலாட்படை, குதிரைப்படை, யானை, வாகனம், யுத்ததளவாடங்கள், அன்னபானாதிகள் முதலான பலங்களுடன் எக்காரணத்தையாவது உரைத்து சத்துருவினுடைய நகரசமீபத்திற்குச் செல்லட்டும்.

शत्रुसेविनि मित्रे च गूढे युक्ततरो भवेत् ।
गतप्रत्यागते चैव स हि कष्टतरो रिपुः ॥ மனு 7. 186.

உள்ளுக்குச் சத்துருவுடன் சேர்ந்து கொண்டு, சமாசாரத்தைக் கொடுத்து, வெளியில் தன்னுடன் சிநேகிதமாயிருக்கிறவருடன் வெகு எச்சரிக்கையாய்ப் பேசவேண்டும். ஏனென்றால் அந்தரங்க சத்துருவாயும் வெளியில் மித்திரனுயு மிருக்கிறவர்களைப் பெரிய சத்துருவாகக் கருதவேண்டும். சகல உத்தியோகஸ்தர்களும் யுத்தஞ் செய்யும் வித்தையைக் கற்றுக்கொண்டிருக்கிறார்களாவென்று அரசன் பார்க்கவேண்டும். தானும் தன் பிரஜைகளுமப்படியே. ஏனென்றால் நன்கு யுத்தஞ்செய்யக் கற்று கொண்டிருக்கிறவர்களே நன்றாய்ச் சண்டைச் செய்வார்கள்.

दण्डव्यूहेन तन्मार्गं यायात्तु शकटेन वा ।
वराहमकराभ्यां वा सूच्या वा गरुडेन वा ॥ மனு 7. 187.

கீழ்க்கண்ட ஒழுங்குகளில் அவர்கள் செவ்வையாய்ப் பழக்கப்படுத்தப்பட்டிருக்கட்டும் (i) வரிசையாய் சைனியங்களைச்செல்லச் செய்தல் (ii) வகுப்பு வாரியாய்ச் செல்லுதல் (iii) சதுரமாய்ச் செல்லுதல் (ஒன்றன்பின் ஒன்றாய்ச்சென்று அப்புறம் ஒன்று சேருதல்) (iv) இருசாரியாய்ச் செல்லுதல் (மீன்கள் நீரில் நீந்துவதுபோல்) (v) முன்பாகம்கூர்மையாயும் அடிபாகம் பருத்தும்இருக்கிற ஊசியைப்போல் செல்லுதல் (vi) சண்டைச் செய்யும் வண்ணம் முன்செல்லுதல்

यतश्च भयमाशंकेत्ततो विस्तारयेद्बलम् ।
पद्मेन चैव व्यूहेन निविशेत सदा स्वयम् ॥ மனு 7. 188.

அபாயம் வரும் என்று ஊகிக்கும் பக்கத்தில் "பத்மவ்யூக" த்தைப்போல் (மத்தியில் தானும், சுற்றி சைனியங்களும் தாமரைப்பூவைப்போல்) தன். சைனியத்தை வைக்கட்டும்.

सेनापतिबलाध्यक्षौ सर्वदिक्षु निवेशयेत् ।
यतश्च भयमाशङ्केत् प्राचीं तां कल्पयेद्दिशम् ॥ மனு 7. 189

நாலாபக்கங்களிலும் சேனாதிபதிகளுடன் சைனியத்தை நிறுத்திவிட்டு மத்தியில் தானிருக்கட்டும். எண் மூலைகளிலும் தங்களுடைய வீரர்களுடன் நடத்தும் உத்தியோகஸ்தர்களை வைக்கவேண்டும். போர்முகத்தை நோக்கித் தானும் எல்லோரும் நிற்கட்டும். முன்னும் பின்னும் நன்றாய்க் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அப்பக்கங்களிலிருந்து சத்துரு தாக்கக்கூடும்.

गुल्मांश्च स्थापयेदाप्तान् कृतसंज्ञान समन्ततः ।
स्थाने युद्धे च कुशलानभीरूनविकारिणः ॥ மனு 7. 190.

யுத்தவித்தைகள் நன்றாய்க் கற்பிக்கப்பட்டவர்களாயும், தர்மிகர்களாயும், தாக்குவதிலும், தாக்கப்படுவதைத் தடுப்பதிலும் நிபுணர்களாயும், பயமற்றவர்களாயும், நம்பிக்கை யுள்ளவர்களாயுமுள்ளவர்களையே நாலாபக்கமும் வைக்கவேண்டும்.

संहतान् योधयेदल्पान् कामं विस्तारयेद्बहून् ।
सूच्या वज्रेण चैवैतान् व्यूहेन व्यूह्य योधयेत् ॥ மனு 7. 191.

தன்னைவிட பலமுள்ள சத்துருக்களுடன் சண்டைச் செய்ய நேரிட்டால் அப்பொழுது தன் சைனியங்களை ஒன்று சேர்க்கட்டும். அல்லது சமயத்திற் கேற்றவாறு பரவச்செய்யட்டும். நகரத்திலாவது கோட்டையிலாவது சத்துருவினுடைய சேனையிலாவது நுழைந்து யுத்தஞ்செய்ய வேண்டியிருந்தால் அப்பொழுது (சூசிவியூகம்) அல்லது (வஜ்ரவியூகம்) இரண்டுபக்கமும் வெட்டுகிற இருதலைவாளினுடைய உருவத்தைப்போல் சைனியத்தை ஏற்படுத்தி சண்டைச்செய்து முன்செல்லட்டும். (சதத்வனி) துப்பாக்கி வெடிகளைத் தடுக்க வேண்டியிருக்கும்பொழுது (ஸர்பவ்யூகம்) சர்ப்பத்தைப்போல் நகர்ந்து துப்பாக்கிகளை அடைந்து அதைச் சுடுவோர்களைப் பிடித்தாவது, வெடிவைத்தாவது அத்துப்பாக்கிகளை எதிரிகள் பக்கம் திருப்பவேண்டும். அல்லது விருத்த யுத்தவீரர்களைத் துப்பாக்கிகளின் முன்னால் குதிரைகளின் பேரில் சவாரி செய்யச்செய்து பலமுள்ளவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சத்துருக்களைத் தாக்கவேண்டும். சத்துருக்களைச் சுட்டு அவர்களுடைய பலங்களைச் சின்னாபின்னமாக்கிப் பிடிக்கட்டும்.

स्यन्दनाश्वैः समे युध्येदनूपे नौद्विपैस्तथा ।
वृक्षगुल्मावृते चापैरसिचर्मायुधैः स्थले ॥ மனு 7. 192.

சமபூமிகளில் ரதம் குதிரை பாதம் இவைகளின் பேரிலும், சமுத்திரங்களில் கப்பல்களிலும், ஆழமற்ற ஜலங்களில் யானைகளின்பேரிலும், விருக்ஷம், காடு இவைகளில் வாகனங்களிலும், மணல் வெளிகளில் கத்தி கேடயங்களினலும் யுத்தஞ் செய்யவேண்டும்.

प्रहर्षयेद्बलं व्यूह्य तांश्च सम्यक् परीक्षयेत् ।
चेष्टाश्चैव विजानीयादरीन् योधयतामपि ॥ மனு 7. 194.

படைகள் சண்டைச் செய்யும் பொழுது அவர்களைச் சந்தோஷப்படுத்தி உத்ஸாஹப் படுத்தவேண்டும். யுத்தம் முடிந்த பிறகு சௌரியத்துடன் யுத்தஞ் செய்தவர்களை நல்வார்த்தைகளினலும், அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுப்பதினலும் அவரவர்களுடைய சௌகரியங்களைக்கவனித்துச் சகலவிதங்களிலும் அவர்களுக்கு உதவி புரிவதினல் சந்தோஷப்படச்செய்யட்டும். சைனியங்களை வேண்டிய வ்யூகங்களாகப் பிரித்துக் கொள்ளாமல் ஒரு நாளும் சண்டைக்குச் செல்லக்கூடாது. சைனியங்களினுடைய நடவடிக்கைகளைக் கவனித்து அவர்கள் நன்ருய் யுத்தஞ் செய்கிறுர்களா? கபடமாய்ச் செய்கிருர்களா? என்று கவனிக்க வேண்டும்.

उपरुध्यारिमासीत राष्ट्रं चास्योपपीडयेत् ।
दूषयेच्चास्य सततं यवसान्नोदकेन्धनम् ॥ மனு 7. 195.

சமயம் வாய்க்கும் பொழுது சத்துருக்களை வளைத்துக்கொண்டு, அவர்களைத் தாமசப்படுத்தி அவர்களுடைய தேசத்தைத் தளரச்செய்து, புல், நீர், ஆகாரம் கட்டை முதலானவைகளை அனுப்பாமல் நிறுத்தவேண்டும்.

भिन्द्याच्चैव तडागानि प्राकारपरिखास्तथा ।
समवस्कन्दयेच्चैनं रात्रौ वित्रासयेत्तथा ॥ மனு 7. 196.

சத்துருக்களினுடைய நகரமதில்களையும், நீர்நிலைகளையும், அகழ்களையும், நாசஞ்செய்து இரவுகாலங்களிற் பயமுறுத்தி அவர்களை நாசஞ்செய்ய வேண்டிய உபாயங்களைத் தேடட்டும்.

प्रमाणानि च कुर्वीत तेषां धर्म्यान्यथोदितान् ।
रत्नैश्च पूजयेदेनं प्रधानपुरुषैः सह ॥ மனு 7. 203.

சத்துருக்களை ஜயித்த பிறகு அவர்களிடமிருந்து பிரமாணம், அதாவது, பிரதிக்ஞை ஒன்று எழுதி வாங்கிக் கொள்ளட்டும். அல்லது சமயமேற்பட்டால் வேறு தரும புருஷனை அந்த வம்சத்திலிருந்தே அரசனக ஏற்படுத்தி அவர்களுடைய ஆக்ஞைபிரகாரம் அதாவது தர்மயுக்தமாய் ராஜநீதி பிரகாரம் நடந்து நியாயமாய்ப்பிரஜைகளைக் காப்பாற்றுவதாக எழுதிவாங்கிக்கொள்ளட்

டும். இம்மாதிரி புத்தி சொல்லி மறுபடியும் உபத்திரவம் ஏற்படாமலிருக்கும் படியான புருஷர்களை அவர்களிடம் வைக்கவேண்டும். ஜயிக்கப்பட்ட தன் சத்துருவை இரத்னம் முதலான உத்தம பதார்த்தங்களினால் மரியாதை செய்யட்டும். அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியதைக்கூட அழித்து அவ்வளவு அற்பமாக நடத்த வேண்டாம். கைதியாய்ச்செய்திருந்த போதிலும் அவர்களுடைய தோல்வியைக்கூட நினையாமல் சந்தோஷமா யிருக்கும்படி அவர்களை நிலைக்கு ஏற்றவாறு நடத்தட்டும்.

आदानमप्रियकरं दानञ्च प्रियकारकम् ।
अभीप्सितानामर्थानां काले युक्तं प्रशस्यते ॥ மனு 7 204.

ஏனென்றால் இவ்வுலகில் பிறர்களுடைய பொருளைக் கொள்ளுவது வெறுக்கத்தக்கதும் கொடுப்பது விரும்பத்தக்கதுமான காரியம். அவருக்கு வேண்டியதை வேண்டியகாலத்திற் செய்வது மிகவும் உத்தமமான காரியம். ஜயிக்கப்பட்ட சத்துருக்களுக்கு வேண்டியதைக் கொடுப்பது மிகவும் உத்தமமான காரியம்.

சிநேகத்திற்கு உரியவர்கள்

हिरण्यभूमिसंप्राप्त्या पार्थिवो न तथैधते ।
यथा मित्रं ध्रुवं लब्ध्वा कृशमप्यायतिक्षमम् ॥ மனு 7. 208.

உறுதியும், உண்மையும் நிகழ்கால அறிவுமுள்ள சிநேகிதனை பெறுவதினால் ஏற்படும் பலன், ஸ்வர்ணத்தாலும், பூமி முதலானவைகளாலும் அரசனுக்கு ஏற்படாது. தன்னுடைய காரியசித்திக்கு அவர் பிரயோஜனமுள்ளவராயிருந்தபோதிலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, துர்பலமுள்ளவராயிருந்தாலும் சரி, அத்தகைய நேசன் மிகவும் பிரயோஜனமுள்ளவன்.

धर्मज्ञं च कृतज्ञं च तुष्टप्रकृतिमेव च ।
अनुरक्तं स्थिरारम्भं लघुमित्रं प्रशस्यते ॥ மனு 7. 209.

தருமங்களை அறிகிறவனும், செய்நன்றி மறவாதவனும், பிரசன்ன ஸ்வபாவ முள்ளவனுயுமிருக்கிற சிநேகிதனை (சிறியவனுயிருந்தபோதிலும்) அடைகிற அரசன் புகழத்தகுந்தவன்.

प्राज्ञं कुलीनं शूरं च दक्षं दातारमेव च ।
कृतज्ञं धृतिमन्तञ्च कष्टमाहुररिं बुधाः ॥ மனு 7. 210.

புத்திமான், நற்குலத்திலுதித்தவன், சூரன், வீரன், உறுதியானவன், பொறுமையுள்ளவன் இத்தகையஸ்வபாவங்களை உடைய ஒரு நேசனைப் பகைத்துக்கொள்ளக் கூடாது. அப்பேர்ப்பட்டவனை வெறுத்துக்கொள்ளுகிறவன் துக்கத்தையடைகிறான்.

आप्र्याता पुरुषज्ञानं शौर्य्यं करुणवेदिता ।
स्थौललक्ष्यं च सततमुदासीनगुणोदयः ॥ மனு 7. 211

அன்பார்ந்த சிநேகனுயும், தீராப்பகைவனுயும் தன்னைக் காட்டிக் கொள்ளா மனும், சூரத்வம், வீரத்வம், கருணை இவைகளை உடையவனுயும், மனோ ரகஸ்யத்தை வெளியிடாதவனுயு மிருப்பவன் மத்திஸ்யஸ்தன் என்றழைக்கப் வான்.

एवं सर्वमिदं राजा सह संमन्त्र्य मन्त्रिभिः ।
व्यायाम्याप्लुत्य मध्याह्ने भोक्तुमन्तःपुरं विशेत् ॥ மனு 7. 216.

முன்சொன்னமாதிரி அரசன் காலையிலெழுந்திருந்து சௌச்சம், சந்தியோ பாசனை, அக்கினிஹோத்திரம் முதலானவைகளை முடித்து அல்லது முடிக்கச் செய்து சகலமந்திரிகளுடன் யோசனை செய்து தன் சேனை, சேவகர்கள் இவர் களைப்பார்த்து நல்வரவு கூறி, குதிரை, யானை, பசு முதலானவைகளினுடைய லாயங்களையும், அஸ்திர சஸ்திர சாலைகளையும், கஜானுவையும் தானே பார்த் துக் குறைகளைச் சொல்லட்டும். மல்லகச்சாலைக்குச் சென்று மீதக பயிற்சி செய்து மத்தியான சமயத்தில் அந்த புரத்தில் தன் பத்தினி முதலானவர்க ளுடன் உண்ணச் செல்லட்டும். நன்முய்ப் பரிக்ஷிக்கப்பட்டு, புத்திபலம், பராக் ரமம், இவைகளை விருத்தி செய்கிறதாய் அது இருக்கவேண்டும். அவருடைய போஜனம் பலவித, பதார்த்தங்கள், பானம், மதுரம் இவைகளுடன் கூடின தாயும், சுகந்தம் உள்ளதாயும், ரோகங்களை நாசஞ் செய்யக்கூடிய சுத்தமாயும் பக்குவமாயும் இருக்கவேண்டும்.

இம்மாதிரி தன் இராஜ்யங்களினுடைய க்ஷேமத்தை விருத்தி செய்ய வேண்டும்.

पञ्चाशद्भाग आदेयो राज्ञा पशुहिरण्ययोः ।
धान्यानामष्टमो भागः षष्ठो द्वादश एव वा ॥ மனு 7. 130.

வியாபாரம் செய்கிறவர்களிடமிருந்து அவர்களுடைய ஸ்வர்ணம் வெள்ளி, லாபங்களில் ஐம்பதில் ஒருபாகமும், அரிசி முதலான தானியங்களில் ஆறிலொருபாகமும் எட்டிலொருபாகமும் முறையே வரியாக அரசன் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இனவரியாகப் பெற்றுக்கொள்ளாமல் ரொக்கமாகப் பெற்றுகொள்ளும் பொழுது குடியானவர்கள் முதலானவர்கள் அன்ன பானுதிகளிலிருந்து வருந் தாமலிருக்கும் படியாகப் பெற்றுக்கொள்ளட்டும். ஏனென்றால் பிரஜைகளி னுடைய க்ஷேமத்திலேயே அரசனுடைய க்ஷேமம். ஆகையினுல் பிரஜைகளைத் தன் மக்களைப்போல் சந்தோஷமுள்ளவர்களாகச் செய்யட்டும். பிரஜை களும் அரசன் முதலானவர்களைப் பாலகர்களாக பாவிக்கட்டும். பிரஜாபலத் திற்கு அவர்களே காரணமாயிருக்கிறுர்கள். அரசனே அவர்களுடைய பால

கன். பிரஜைகளன்றியில் அரசன் எங்கிருந்து வரக்கூடும். அரசனன்றியில் யாருடைய பிரஜைகளென்று அவர்களழைத்துக் கொள்ளக்கூடும்? இருவர்களும்—ஆளுகிறவர்கள், ஆளப்படுகிறவர்கள்—தங்கள் தங்களுடைய காரியங்களில் தனியாகவும், கலந்து ஒத்துழைக்கவேண்டிய காரியங்களில் சேர்ந்தும் நடக்கட்டும். பிரஜைகளினுடைய சம்மதத்திற்கு விரோதமாய் அரசனும், அரசனுடைய சம்மதத்திற்கு விரோதமாய் மந்திரிகளும் பிரஜைகளும் செல்ல வேண்டியதில்லை.

அரசனுடைய அரசியல் காரியங்களைப்பற்றி இவ்விதம் சுருங்கச் சொன்னோம். இதைக்குறித்து அறிந்து தெரிந்துகொள்ள விரும்புவோர்கள் நான்கு வேதம் மனுஸ்மிருதி, சுக்ரநீதி, மகாபாரதம் முதலானவைகளைப் பார்க்கட்டும். நியாயத்தைச் செலுத்துகிற விஷயங்களை மனுஸ்ம்ருதி எட்டாவது, ஒன்பதாவது அத்தியாயங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனால் அவைகள் கீழே சுருக்கமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன—

प्रत्यहं देशदृष्टैश्च शास्त्रदृष्टै हेतुभिः ।
अष्टादशसु मार्गेषु निबिद्धानि पृथक् पृथक् ॥ மனு 8. 3.

சபைகள், அரசன், அதிகாரிகள் முதலானவர்கள் தேசாசாரம், சாஸ்திர வியவகாரம் இவைகளில் கூறியபடி கீழ்க்கண்ட பதினெட்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் விவாதங்களை "விவாதயுக்த கர்மங்களினால்" பிரதிதினமும் தீர்ப்புச்செய்யட்டும். புதுசட்டங்கள் ஏற்படுத்த வேண்டியிருந்தால்—சாஸ்திர வியவகாரங்களில் சொல்லப்படாத விஷயங்களுக்கு—அரசனுடையவும், பிரஜைகளுடையவும் மேன்மையை விருத்திசெய்கிறதான நியாயங்களை ஏற்படுத்தட்டும்.

तेषामाद्यमृणादानं निक्षेपोऽस्वामिविक्रयः ।
संभूय च समुत्थानं दत्तस्यानपकर्म च ॥
वेतनस्यैव चादानं संविदश्च व्यतिक्रमः ।
क्रयविक्रयानुशयो विवादः स्वामिपालयोः ॥
सीमाविवादधर्मश्च पारुष्ये दण्डवाचिके ।
स्तेयं च साहसं चैव स्त्रीसङ्ग्रहमणमेव च ॥
स्त्रीपुंधर्मो विभागश्च द्यूतमाह्वय एव च ।
पदान्यष्टादशैतानि व्यवहारस्थिताविह ॥ மனு 8. 4–7.

(1) கடன் வாங்கிக்கொடுக்காமலிருப்பது (2) "வைப்பு" ஒருவரிடம் சாமான்களை வைத்துவிட்டு அவர் அதைத் திருப்பிக்கொடாததிலிருந்து ஏற்படும் விவாதம் (3) பிறருடைய பொருளை ஒருவன் விற்பது (4) ஒருவன் மேல் குற்றஞ் சுமத்துவதற்காகப் பலர்சேருவது (5) கொடுத்த பொருளைத்

தர மறுப்பது (6) ஒருவருடைய கூலிகளைக் குறைத்துக் கொடுப்பது அல்லது கொடுக்காமலிருப்பது (7) ஒப்பந்தத்திற்கு விரோதமாய் நடப்பது (8) விற்பனைகளிலிருந்தும் வாங்கிக்கொள்வதிலிருந்தும் ஏற்படும் விவாதம் (9) பிராணிகளின் சொந்தக்காரனுக்கும் அதைபாதுகாத்து வருகிறவனுக்கும் ஏற்படும் சச்சரவு (10) எல்லைச்சண்டை (11) அடிதடி சண்டை (12) அபவாதம் (13) களவு, கன்னம், கொள்ளை (14) காரியங்களைப்பலாத்காரமாய்ச் செய்தல் (15) வியபசாரித்தனம் (16) இல்லறகடமைகளை மீறுதல் (17) தாயாதிச் சண்டை (18) சூதாடல்—ஜடபதார்த்தங்களுடனும் சேதனங்களுடனும். இவைகள் பரஸ்பர விவாதங்களினுடைய பதினெட்டுகாரணங்களாகும்.

एषु स्थानेषु भूयिष्ठं विवादं चरतां नृणाम् ।
धर्मं शाश्वतमाश्रित्य कुर्यात्कार्यविनिर्णयम् ॥ மனு 8. 8.

ஸநாதன தர்மத்தை ஆசிரயித்து நியாயத்துடன் பக்ஷபாத மன்னியில் நியாயாதிபதி இவ்வியவகாரங்களைத் தீர்க்கட்டும்.

धर्मो विद्धस्त्वधर्मेण सभां यत्रोपतिष्ठते ।
शल्यं चास्य न कृन्तन्ति विद्धास्तत्र सभासदः ॥ மனு 8. 12.

அதர்மத்தால் புண்படுத்தப்பட்ட தர்மம், நியாயசபையை அடைந்தும் நியாயம் பெறுவிடில், அச்சபையினர் அனைவரும் அதர்மிகர் எனவே அழைக்கப்படுவார்கள்.

सभां वा न प्रवेष्टव्या वक्तव्यं वा समञ्जसम् ।
अब्रुवन्विब्रुवन्वापि नरो भवति किल्बिषी ॥ மனு 8. 113.

தர்மாத்மாக்கள் ஒருக்காலும் சபையில் (நியாயஸ்தலத்தில்) பிரவேசிக்கக் கூடாது. பிரவேசித்தால் உண்மையே பேசவேண்டும். நேரில் அநியாயம் நடப்பதைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருக்கிற சத்தியவாதியும் அல்லது சத்திய நியாயத்திற்கு விரோதமாய்ச் சொல்லுகிறவர்களும் மகாபாபிகளாவார்கள்.

यत्र धर्मो ह्यधर्मेण सत्यं यत्रानृतेन च ।
हन्यते प्रेक्षमाणानां हतास्तत्र सभासदः ॥ மனு 8. 114.

எச்சபையில் அதர்மத்தினால் தர்மமும் அசத்தியத்தினால் சத்தியமும் சபையோர்களின் முன்னரே நாசமடைகிறதோ, அச்சபையினோர் யாவரும் இறந்தவர்களே. உயிருடையோர் என எவரையும் அழைத்தல்பொருந்தாது.

धर्म एव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः ।
तस्माद्धर्मो न हन्तव्यो मा नो धर्मो हतोऽवधीत् ॥ மனு 8. 115.

தர்மம் நாசஞ் செய்யப்படின் அந்நாசத்திற்குக் காரணமாயிருப்பவனை அது நாசஞ்செய்கிறது. காப்பாற்றபடும் தருமம் காப்பாற்றுகிறவனைக் காப்பாற்றுகிறது. ஆதலால் தருமத்தை யாரும் மீறுதல் முறையாகாது.

वृषो हि भगवान् धर्मस्तस्य यः कुरुते ह्यलम् ।
वृषलं तं विदुर्देवास्तस्माद्धर्मं न लोपयेत् ॥ மனு 8. 116.

சகலஐசுவர்யங்களைக் கொடுத்தும் சுகங்களை அளித்தும் வருகிற தருமத்தை மீறுகிறவர்களை வித்வான்கள் நீசனிலும் நீசனாகக் கருதுகிறார்கள். ஆகையினால் தருமத்தை யாரும் மீறுதல் கூடாது.

एक एव सुहृद्धर्मो निधनेऽप्यनुयाति यः ।
शरीरेण समं नाशं सर्वमन्यद्धि गच्छति ॥ மனு 8. 117.

இவ்வுலகில் தர்மம் ஒன்றே சிநேகிதன். அதுவே இறந்த பிறகும் மனிதனைத் தொடருகிறது. மற்றவை சரீர நாசத்துடன் நாசமடைகிறது. தருமம் ஒருநாளும் மனிதனைக் கைவிடுகிறதில்லை.

पादोऽधर्मस्य कर्तारं पादः साक्षिणमृच्छति ।
पादः सभासदः सर्वान् पादो राजानमृच्छति ॥ மனு. 8. 118.

(எங்கியாஸ்தலத்தில்) எச்சபையில் பக்ஷபாதத்துடன் அநியாயம் செய்யப்படுகிறதோ அங்கே அதர்மம் நான்கு சரிபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகம் கர்த்தாவையும், இரண்டாவது சாக்ஷியையும், மூன்றாவது சபையோர்களையும், நான்காவது சபாபதியாயிருக்கும் நியாயாதிபதியையும் அல்லது சபாபதியையும்முறையே அடைகின்றன.

राजा भवत्यनेनास्तु मुच्यन्ते च सभासदः ।
एनो गच्छति कर्तारं निन्दार्हो यत्र निन्द्यते ॥ மனு 8. 119.

எச்சபையில் நிந்தைக்கு யோக்கியமானவர்கள் நிந்திக்கப்படுகிறார்களோ, ஸ்துதிக்கு யோக்கியமானவர்கள் ஸ்துதிக்கப்படுகிறார்களோ, தண்டனைக்கு யோக்கியமானவர்கள் தண்டிக்கப்படுகிறார்களோ, மரியாதைக்கு யோக்கியமானவர்கள் மரியாதைசெய்யப்படுகிறார்களோ அங்கே அரசன், சபையோர்கள் எல்லோரும் பாபத்திலிருந்து நீங்கிப் பரிசுத்தமாகிறார்கள். பாபிகளே பாதிக்கப்படுகிறார்கள்.

சாக்ஷிகள்

आप्ताः सर्वेषु वर्णेषु कार्याः कार्येषु साक्षिणः ।
सर्वधर्मविदोऽलुब्धा विपरीतांस्तु वर्जयेत् ॥ மனு 8. 63.

வித்வான்கள், கபடமற்றவர்கள். நன்றாய்த் தருமத்தை அறிந்தவர்கள், பேராசையற்றவர்கள், சத்தியவாதிகள், இவர்களே சகலவகுப்புகளிலிருந்தும் சாக்ஷிக்கு யோக்கியமுள்ளவர்கள். மேற்கூறிய குணங்களைப் பெறாதவர்கள் சாக்ஷிக்கு யோக்கியமானவர்கள் அல்ல.

स्त्रीणां साक्ष्यं स्त्रियः कुर्युर्द्विजानां सदृशा द्विजाः ।
शूद्राश्च सन्तः शूद्राणामन्त्यानामन्त्ययोनयः ॥ மனு 8. 72.

ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளும், துவிஜர்களுக்கு துவிஜர்களும், சூத்திரர்களுக்கு சூத்திரர்களும், தீண்டாதவர்களுக்குத் தீண்டாதவர்களுமே முறையே சாக்ஷியாக இருக்கவேண்டும்.

साहसेषु च सर्वेषु स्तेयसङ्ग्रहणेषु च ।
वाग्दण्डयोश्च पारुष्ये न परीक्षेत साक्षिणः ॥ மனு 8. 75.

திருட்டு, வியபசாரம், அடித்தல் முதலிய தீச்செயல்கள். இவ்விவாதங்களில் மிகவும் நுட்பமாய் சாட்சியங்களை விசாரிப்பது மிகவும் அவசியமென்று நியாயாதிகாரி நினைக்கவேண்டியதில்லை. ஏனென்றால் இவைகள் இரகசியமாய் செய்யப்படும் காரியங்களாம். ஆகையினால் சுலபத்தில் சாட்சிகள் கிடைப்பது அரிது.

बहुत्वं परीगृह्णीयात्साक्षिद्वैधे नराधिपः ।
समेषु तु गुणोत्कृष्टान् गुणद्वैधे द्विजोत्तमान् ॥ மனு 8. 78.

பொருத்தமற்ற சாட்சியங்கள் ஏற்படும் காலத்து பெரும்பான்மையோரின் அபிப்பிராயங்களைத் தழுவியும், அல்லாத விடத்து, உத்தமர், அறிஞர், முனீந்திரர்கள், மஹரிஷிகள் இவர்களுடைய வாய்பொருப்பைத் தழுவியும் தீர்ப்புத் தரல் வேண்டும்.

समक्षदर्शनात्साक्ष्यं श्रवणाच्चैव सिध्यति ।
तत्र सत्यं ब्रुवन्साक्षी धर्मार्थाभ्यां न हीयते ॥ மனு 8. 79.

சாக்ஷிகளில் இருவிதமுண்டு. ஒன்று கண்ணால் பார்ப்பது, இரண்டு கேட்பது. நியாயஸ்தலத்தில் உண்மையைப் பேசுகிறவர்கள் தர்மஹீனர்களாகவோ, தண்டனைக்குப் பாத்திரங்களாகவோ ஆகிறதில்லை. பொய் சொல்லுகிற சாக்ஷிகள் தக்கவாறு தண்டிக்கத் தகுந்தவர்களாகிறார்கள்.

साक्षी दृष्टश्रुतादन्यद्विब्रुवन्नार्यसंसदि ।
अवाङ्नरकमभ्येति प्रेत्य स्वर्गाच्च हीयते ॥ மனு 8. 80.

நியாயஸ்தலத்திலாவது அல்லதுபெரியோர்களினுடைய சபையிலாவது பார்த்ததிற்கும் கேட்டதற்கும் விரோதமாய்ச் சொல்லுகிற சாக்ஷிகளுடைய நாக்குத் துண்டிக்கத்தகுந்தது. அதன் பலனை துக்கரூபமான நரகத்தையடைந்து சுகவாழ்வு அற்றவர்களாகிறார்கள்.

स्वभावेनैव यद् ब्रुयुस्तद् ग्राह्यं व्यावहारिकम् ।
अतो यदन्यद्विब्रुयुर्धर्मार्थं तदपार्थकम् ॥ மனு 8. 81.

வியவகாரசம்பந்தத்தில் சுவபாவமாய்ச் சொல்லுகிறதை ருஜுவாக எடுத்துக்கொண்டு கற்பிக்கப்பட்டு பாடம்போல் சொல்லுகிறவைகளை பிரயோஜன மற்ற சாட்சியமாக நியாயாதிகாரி எடுத்துக் கொள்ளட்டும்.

सभान्तः साक्षिणः प्राप्तानर्थिप्रत्यर्थिसन्निधौ ।
प्राड्विवाकोऽनुयुञ्जीत विधिनाऽनेन सान्त्वयन् ॥ மனு 8. 83.

வாதி, பிரதிவாதி இவர்களுடைய முன்னே நியாயஸ்தலத்திற்கு வந்திருக்கும் சாக்ஷிகளைப் பார்த்து நியாயாதிபதியும், நியாயவாதியும் இவ்விதம் சொல்லட்டும்.

यद् द्वयोरनयोर्वेत्थ कार्येऽस्मिन् चेष्टितं मिथः ।
तद् ब्रूत सर्वं सत्येन युष्माकं ह्यत्र साक्षिता । மனு 8. 84.

ஓ சாக்ஷிகளே ! இக்காரியத்தில் இவ்விருவர்களுடைய பரஸ்பர காரியங்களில் உங்களுக்குத் தெரிந்தவரை உண்மையாகச் சொல்லுங்கள். ஏனென்றால் இவ்விஷயத்தில் உங்களுடைய சாக்ஷியம் வேண்டியதாயிருக்கிறது.

सत्यं साक्ष्ये ब्रुवन्साक्षी लोकानाप्नोति पुष्कलान् ।
इह चानुत्तमां कीर्त्तिं वागेषा ब्रह्मपूजिता ॥ மனு 8. 96.

உண்மையைப் பேசுகிறசாக்ஷி ஜன்மாந்திரங்களிலும், லோகாந்திரங்களிலும் உத்தம ஜன்மத்தை அடைந்து சுகத்தை அடைகிருன். இஜ்ஜன்மத்திலும், பரஜன்மத்திலும் கீர்த்தியை அடைகிருன். ஏனென்றால் "வாணி" யே (வாக்கே) வேதங்களில் மரியாதைக்கும் அவமானத்திற்கும் காரணமெனப்படுகிறது.

सत्येन पूयते साक्षी धर्मः सत्येन वर्द्धते ।
तस्मात्सत्यं हि वक्तव्यं सर्ववर्णेषु साक्षिभिः ॥ மனு 8. 91.

உண்மையைப் பேசுகிறவர்கள் மரியாதை செய்யப்படட்டும், பொய் பேசுகிறவர்கள் நிந்திக்கவும் படுகிருர்கள். ஆகையிஞல் பரிசுத்தமாக்குகிற சத்தியத்தையே சகல வர்ணங்களினுடைய சாக்ஷிகள் யாவரும் சொல்ல வேண்டும். உண்மையை உரைப்பதிஞல் தர்மம் விருத்தியாகிறது.

आत्मैव ह्यात्मनः साक्षी गतिरात्मा तथात्मनः ।
मावमंस्थः स्वमात्मानं नृणां साक्षिणमुत्तमम् ॥

ஆத்மாவிற்கு சாக்ஷி ஆத்மாவே. ஆத்மாவினுடைய கதி ஆத்மாவே. ஆகையிஞல் ஓ மனிதர்களே நீங்கள் சகல மானிடர்களுக்கும் உத்தம சாக்ஷியாகிறபடியிஞல் உங்களுடைய ஆத்மாவை அவமானம் செய்யாதேயுங்கள். அதாவது உங்களுடைய ஆத்மாவும் அதிலிருப்பதும் உண்மை, அதற்கு விரோதமானது பொய்.

यस्य विद्वान् हि वदतः क्षेत्रज्ञो नाभिशङ्कते ।
तस्मान्न देवाः श्रेयांसं लोकेऽन्यं पुरुषं विदुः ॥

சந்தேகமன்னியில் தான் சாக்ஷி கூறும்பொழுது தன் அந்தரங்க எண்ணங்களை அறிகிற ஒருவரையாவது வித்வான்கள் உத்தமர்களாக நினைப்பதில்லை.

एकोऽहमस्मीत्यात्मानं यत्त्वं कल्याण मन्यसे ।
नित्यं स्थितस्ते हृद्येष पुण्यपापेक्षिता मुनिः ॥

ஓ மனிதனே! பொய்சொல்லி நீ சௌபாக்கியங்களை அடைய விரும்புவாயேயானால் அது பிழையாகும். ஏனென்றால் உன் ஹிருதயத்தில் அந்தர்யாமியாயிருக்கிற பரமேசுவரர் பாப புண்ணியங்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறார். ஆகையினால் அப்பரமாத்மாவுக்குப் பயந்து எக்காலமும் உண்மையையேபேசுங்கள்.

लोभान्मोहाद्भयान्मैत्रात्कामात् क्रोधात्तथैव च ।
आज्ञानाद्बालभावाच्च साक्ष्यं वितथमुच्यते ॥ மனு 8. 118

வாக்கு மூலங்கள்.

லோபம், மோகம், பயம், சிநேகம், காமம், குரோதம், அஞ்ஞானம், சிறு பிள்ளைத்தனம் இவைகளை முன்னிட்டுக் கொடுக்கும் வாக்கு மூலங்களை ருஜுவாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.

एषामन्यतमे स्थाने यः साक्ष्यमनृतं वदेत् ।
तस्य दण्डविशेषांस्तु प्रवक्ष्याम्यनुपूर्वशः ॥ மனு 8. 119.

இவைகளில் எக்காரணத்தையாவது கொண்டு பொய் சொல்லுகிற சாக்ஷிகளைப் பலவிதமாகத் தண்டிக்க வேண்டும்.

लोभात्सहस्रं दण्ड्यस्तु मोहात्पूर्वन्तुसाहसम् ।
भयाद् द्वौ मध्यमौ दण्ड्यौ मैत्रात्पूर्वं चतुर्गुणम् ॥
कामाद्दशगुणं पूर्वं क्रोधात्तु त्रिगुणं परम् ।
अज्ञानाद् द्वे शते पूर्णे बालिश्याच्छतमेव तु ॥ மனு 120-121.

தண்டனைகள்.

லோபத்தினால் பொய் சாக்ஷியம் கூறுகிறவர்களுக்கு 1000 "பணம்" ரூ. 15-12-0ம், மோகத்தினால் சொல்லுகிறவர்களுக்கு 250 பணமும் ரூ3-2-0ம், பயத்தினால் சொல்லுகிறவர்களுக்கு ரூ 6-4-0ம், சிநேகத்தினால் சொல்லுகிறவர்களுக்கு ரூ12-8-0ம், காமத்தினால் சொல்லுகிறவர்களுக்கு ரூ 25ம், குரோதத்தினால் சொல்லுகிறவர்களுக்கு ரூ 46-14-0ம், அஞ்ஞானத்தி

ஞல் சொல்லுகிறவர்களுக்கு ரூ 6ம், சிறு பிள்ளைத்தனமாய்க் கூறுகிறவர்களுக்கு ரூ 1-9-0ம், ஆக முறையே அபராதம் விதித்தல் முறை.

उपस्थमुदरं दिह्वा हस्तौ पादौ च पञ्चमम् ।
चक्षुर्नासा च कर्णौ च धनं देहस्तथैव च ॥ மனு 8. 125.

தண்டனையை ஜனன இந்திரியங்கள், வயிறு, நாக்கு, கை, கால்கள், கண்கள், மூக்கு, காதுகள், சொத்து, சரீரம் இவைகள் மூலமாய் செலுத்தவேண்டும்.

अनुबन्धं परिज्ञाय देशकालौ च तत्त्वतः ।
साराऽपराधौ चालोक्य दण्डं दण्डयेषु पातयेत् ॥ மனு 8. 126.

மேற்சொன்னதும், இனி சொல்லப்போகிறதுமான பலவித தண்டனைகளைத் தேசம், காலம், குற்றவாளியுடைய ஸ்திதி இவைகளைத் தழுவி விதிக்க வேண்டும். எவ்விதமென்றால் மிகவும் ஏழையாயிருந்தால் கொஞ்ச அபதாரமும், தனவாளுயிருந்தால் அதைப்போல் இருமடங்கோ, அல்லது மும்மடங்கோ அதிகமாக இருக்கட்டும்.

अधर्मदण्डनं लोके यशोघ्नं कीर्त्तिनाशनम् ।
अस्वर्ग्यश्च परत्रापि तस्मात्तत्परिवर्जयेत् ॥ மனு 8 127.

இவ்வுலகில் யார் அதர்மமான தண்டனையை விதிக்கிறார்களோ அவர் இருந்த, இருக்கிற, இருக்கப்போகிறதும் எங்கும் ஏற்படுகிறதுமான கீர்த்தியை நாசஞ் செய்துகொண்டு துக்கத்தை அடைகிறார்கள். ஆகையினால் அதர்மமான தண்டனையை ஒருக்காலும் விதிக்கக்கூடாது.

अदण्ड्यान्दण्डयन् राजा दण्ड्यांश्चैवाप्यदण्डयन् ।
अयशो महदाप्नोति नरकं चैव गच्छति ॥ மனு 8. 128.

தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டிக்காமலும், தண்டனைக்கு அருகரில்லாதவர்களைத் தண்டிப்பவனை அரசன் பெரிய துக்கத்தை அடைந்து இறந்த பிறகும் துக்கத்தை அனுபவிக்கிறான். ஆகையினால் தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டித்தும், அல்லாதவர்களை தண்டியாமலும் இருக்கவேண்டும்.

वाग्दण्डं प्रथमं कुर्याद्धिग्दण्डं तदनन्तरम् ।
तृतीयं धनदण्डं तु वधदण्डमतः परम् ॥ மனு 8 .129.

தண்டனை முறை

முதல் குற்றத்திற்கு எச்சரிக்கையுடன் விடுத்தும், இரண்டாமுறை கடுஞ்சொற் சொல்லியும், மூன்றும் முறை அபராதம் விதித்தும், நான்காம் முறை சவுக்கடி, பிரம்படி, சிறையிலிடுதல், சிரச்சேதம் செய்தல் முதலான சரீர சம்பந்தமானவைகளை விதித்தும் தண்டிக்கவேண்டும்.

येन येन यथाङ्गेन स्तेनो नृषु विचेष्टते ।
तत्तदेव हरेदस्य प्रत्यादेशाय पार्थिवः ॥ மனு 8. 334.

எந்தெந்த அங்கங்கள் குற்றஞ் செய்கிறதோ அந்தந்த அங்கங்களைக்கூட, அதே குற்றஞ் செய்வதைத் தடுக்கவும் பிறருக்கு உதாரணமாகவும், அரசன் நாசம் செய்துவிட வேண்டும்.

पिताचार्य्यः सुहृन्माता भार्य्या पुत्रः पुरोहितः ।
नादण्ड्यो नाम राज्ञोऽस्ति यः स्वधर्मे न तिष्ठति ॥ மனு 8. 335.

யாராயிருந்தாலும் சரி—தாய், தகப்பன், குரு, மித்திரன், மனைவி, மக்கள், புரோஹிதன்—சுவதர்மங்களைச் செய்யாமலிருக்கிறவர்கள் தண்டனைக்குள்ளாகுகிறார்கள். அதாவது நியாயஸ்தலத்தில் அமர்ந்து தீர்ப்புசெய்யும் பொழுது பக்ஷபாதமன்னியில் தண்டிக்கவேண்டும்.

कार्षापणं भवेद्दण्ड्यो यत्रान्यः प्राकृतो जनः ।
तत्र राजा भवेद्दण्ड्यः सहस्रमिति धारणा ॥ மனு 8. 336.

சாதாரண மனிதனுக்கு ஒரு பைசா தண்டனை விதித்தால் அரசனுக்கு 1000 பைசா விதிக்கவேண்டும். அதாவது சாதாரணமனிதனைக் காட்டிலும் அரனுக்கு ஆயிரம் தடவை அதிமாயிருக்கவேண்டும். அரசனுடைய திவானுக்கு எண்ணூறு தடவை அதிகம். அவரைவிடக் குறைந்த உத்தியோகஸ்தர்களுக்கு எழுநூறு. அவரைவிட இன்னும் குறைந்தவர்களுக்கு அறுநூறு தடவை. இம்மாதிரியே இன்னும் சேவகனைப் போன்ற ஒரு சிறிய உத்தியோகஸ்தன் எண்மடங்கு அதிகமாய் சாதாரண பிரஜைகளைக் காட்டிலும் தண்டிக்கப்படவேண்டும். ஏனென்றால் துரைத்தனச் சேவகர்களுக்குச் சாதாரண ஜனங்களைவிட அதிக தண்டனை விதிக்காமலிருந்தால் அவர்கள் ஜனங்களை நாசம் செய்யஆரம்பிப்பார்கள். ஆட்டைக் காட்டிலும் சிங்கத்தை வசமாக்க அதிக தண்டனைவேண்டியிருப்பதுபோல் அதிகாரி வர்க்கத்தினர்களுக்கு அரசன் முதற் கொண்டு சேவகன் வரையிலும் சாதாரண ஜனங்களைவிட தண்டனை அதிகமாயிருக்க வேண்டும்.

अष्टापाद्यन्तु शूद्रस्य स्तेये भवति किल्बिषम् ।
षोडशैव तु वैश्यस्य द्वात्रिंशत् क्षत्रियस्य च ॥
ब्राह्मणस्य चतुःषष्टिः पूर्णं वापि शतं भवेत् ।
द्विगुणा वा चतुः षष्टिस्तद्दोषगुणविद्धि सः ॥ மனு 8. 337, 338.

அம்மாதிரியே கொஞ்சம் விவேகியாயிருந்து அவன் திருடினால் எண்மடங்கு அதிகமாய் திருட்டைவிட தண்டனை இருக்கட்டும். சூத்திரனாயிருந்தால் பதினாறுமடங்கும், வைசியனாயிருந்தால் முப்பத்திரண்டு மடங்கு க்ஷத்திரியனாயிருந்தால் அறுபத்திரெண்டு தடவையும், பிராமணனாயிருந்

தால் அறுபத்திநான்கு அல்லது நூறு அல்லது நூற்றிருபத்தியெட்டுத் தடவையும் அதிகமாயிருக்கட்டும். அதாவது, எவ்வளவுக்கெவ்வளவு ஞானம், செல்வாக்கு, அதிகாரம் இவைகள் அதிகமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தண்டனை அதிகமாயிருக்கவேண்டும்.

ऐन्द्रं स्थानमभिप्रेप्सुर्यशश्चाक्षयमव्ययम् ।
नोपेक्षेत क्षणमपि राजा साहसिकं नरम् ॥ மனு 8. 344

தர்மத்தையும், ஐசுவர்யத்தையும் விரும்புகிற அரசனும், உத்தியோகஸ்தர்களும் ராஜபுருஷர்களும் ஒரு க்ஷணங்கூட கன்னம் களவு, வழிபறிக் கொள்ளை முதலான ஒவ்வாத காரியங்கள் செய்கிறவர்களைத் தண்டிக்காமல் வைத்திருக்கவேண்டியதில்லை.

वाग्दुष्टात्तस्कराच्चैव दण्डेनैव च हिंसतः ।
साहसस्य नरः कर्ता विज्ञेयः पापकृत्तम. ॥ மனு 8. 345.

சாகஸ புருஷர்களுடைய லக்ஷணம்.

அபவாதம் பேசுகிறவர், திருடுகிறவர், அபராதமன்னியில் தண்டனை செய்கிறவர், இவர்களைவிட பலாத்காரமாய் (ஒவ்வாத) காரியஞ் செய்கிறவர்கள் கொடும்பாவிகள். பரமதுஷ்டர்கள்.

साहसे वर्तमानन्तु यो मर्षयति पार्थिवः ।
स विनाशं व्रजत्याशु विद्वेषं चाधिगच्छति ॥ மனு 8. 346.

அம்மாதிரி சாகஸகாரியங்கள் செய்கிறவர்களைத் தண்டிக்காமல் விடுகிற அரசன் சீக்கிரம் நாசமாய் சமூகத்தால் வெறுக்கப்படுகிறான்.

न मित्रकारणाद्राजा विपुलाद्वा धनागमात् ।
समुत्सृजेत् साहसिकान्सर्वभूतभयावहान् ॥ மனு 8. 347.

சிநேகத்தினாலும் சரி, அளவற்ற பண ஆசையினாலானாலுஞ்சரி, அடாத காரியங்கள் செய்கிறவர்களை அரசன் தண்டனை செய்யாமல் விடக்கூடாது.

गुरुं वा बालवृद्धौ वा ब्राह्मणं वा बहुश्रुतम् ।
आततायिनमायान्तं हन्यादेवाविचारयन् ॥ மனு 8. 350.

குரு, பிள்ளை, பெண், பிதா, விருத்தன், பிராமணன், பல சாஸ்திரங்களைக் கேட்டிருக்கிறவன் இவர்களில் யாராயிருந்தாலும் சரி, தர்மத்தை விட்டு அதர்மத்தில் பிரவேசித்து பிறர்களை கொலை புரிகிறவர்களை அரசன் உடனே கொலை செய்யவேண்டும். அதாவது பிறகே யோசனை செய்யவேண்டும்.

नाततायिवधे दोषो हन्तुर्भवति कश्चन ।
प्रकाशं वाऽप्रकाशं वा मन्युस्तन्मन्युमृच्छति ॥ மனு 8. 351.

கொலைபுரிதல் முதலான கொடுங்குற்றம் செய்கிறவர்களைக் கொலைசெய்வதினால் பாபமொன்றும் அவரை அணுகாது. பகிரங்கமாய்ச் செய்தாலும் இரகசியமாய்ச் செய்தாலும் சரி, கோபத்தைக் கோபத்தினாலேயே தடுத்தல் வேண்டும்.

यस्य स्तेनः पुरे नास्ति नान्यस्त्रीगो न दुष्टवाक् ।
न साहसिकदण्डघ्नौ स राजा शक्रलोकभाक् ॥ மனு 8 386.

திருடர்கள், பரஸ்திரீகமனம் செய்பவர்கள், கெட்ட வார்த்தைப் பேசுகிறவர்கள் சாகஸிகள் வழிபறிக் கொள்ளைக்காரர்கள் சட்டத்தை மீறுகிறவர்கள் இவர்களில்லாத அரசனுடைய இராஜ்யமே மிகச் சிரேஷ்டமானது.

भर्त्तारं लंघयेद्या स्त्री स्वज्ञातिगुणदर्पिता ।
तां श्वभिः खादयेद्राजा संस्थाने बहुसंस्थिते ॥ மனு 8. 371.

மனைவி ஒருவள் தன் குடும்ப கர்வத்தினால் புருஷனைவிட்டு வியபசாரித்தனம் செய்தால் அவளை அரசன் சகல ஸ்திரீபுருஷர்களுக்கு முன்னால் நாயைக் கொண்டு கடிக்கச் செய்து கொல்லட்டும்.

पुमांसं दाहयेत्पापं शयने तप्त आयसे ।
अभ्यादध्युश्च काष्ठानि तत्र दह्येत पापकृत् ॥ மனு 8. 372.

அப்படியே தன் மனைவியை விட்டு பரஸ்திரீ அல்லது வேசியை அடைகிறவனை பகிரங்கமாய் அரசன் அக்னியில் தள்ள வேண்டும்.

வினா:—அரசனாவது அரசியாவது, நியாயாதிபதியாவது அவருடைய மனைவியாவது வியபசாரித்தனம் செய்தால் அவர்களை யார் தண்டிக்கிறது?

விடை:—சபைகள் (அல்லது நியாயஸ்தலம்) சாதாரண ஜனங்களைவிட அவர்களை கடினமாய்த் தண்டித்தல் வேண்டும்.

வினா:—அரசன் முதலானவர்கள் ஏன் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்?

விடை:—அரசனும் பொருளும் அதிகாரமும் சிறந்த குணங்களையுடைய மனிதனே யாவான். அரசனும் மற்றுமுள்ள பெரியோரும் நியாயமாய் விதிக்கப்பட்டும் எங்ஙனம் மீறல் கூடும்? அங்ஙனம் மீறுவார்களேயானால் பிரஜைகளும் மற்றுமுள்ளோரும் தண்டனையை ஏற்றுக்கொள்ள மறுக்கமாட்டார்களா? பிரஜைகளும், சபைகளும், அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து விதிக்கும் தர்ம தண்டனையைக் கீழ்ப்படியாது எங்ஙனம் மறுக்க முடியும்? அதிகாரம், செல்வாக்கு, பொருள் இவைகள் காரணமாக சிலர் தண்டனைக்கு

க்கீழ்ப்படியாது நடப்பார்களேயானல் நியாயமும் தர்மமும் ஒரு நாட்டில் மழுங்கும். பிரஜைகள் நாசமடைவார்கள். எங்கும் ஒழுங்கீனமேற்படும். ஆகையினல் வேதங்கள் மொழியும் வண்ணம் நியாயமாய் விதிக்கப்படும் தண்டனையை வாழ்க்கையின் தர்மமென அரசன் முதலிய எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தண்டனை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களைவிட நீசர்கள் யாவர்?

வினு.—அங்கங்களை உண்டுபண்ணவாவது இறந்தவனைப் பிழைப்பிக்கச் செய்யவாவது மனிதனுக்கு சக்தியில்லை யாகையினல் அவ்வளவு கடுந்தண்டனைகளை மனிதனல் எவ்விதம் விதிக்கமுடியும்?

விடை.—"கடுந்தண்டனை" என்று இதை அழைக்கிறவர்கள் "ராஜநீதி" தெரியாதவர்கள். ஒருவருக்கு இம்மாதிரி தண்டனையை விதிப்பதினல் மற்றவர்கள் இம்மாதிரி கெட்டகாரியங்களைச் செய்யமாட்டார்கள். தர்மமார்க்கத்திலேயே உறுதியாய் நடப்பார்கள். ஆயிரம் பேருக்கு ஒரு கடுகினலேற்படும் சுமையைவிட அதிகமாய் "கடுந்தண்டனை"யினலேற்படாது. இலேசான தண்டனையானது குற்றங்களை அடக்காதபடியினல் முன் சொன்னதைவிட ஆயிரமடங்கதிகமானது. ஏனென்ருல் அது பெருகப்பெருகக்குற்றங்களதிகமாகிறது. உதாரணமாக ஆயிரம் பேருள்ள ஜன சமூகம் ஒன்றை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொருவருக்கும் ஒருராத்தலாகத்தண்டனைவிதிக்கப்பட்டால் அது ஆயிரம்ராத்தலாகிறது. ஆனல் அவ்வாயிரத்தில் ஒருவருக்கே நூறுராத்தலைத் தண்டித்து மற்றக்குற்றங்களை அடக்கினல் அது ஆயிரத்தைவிட பதின்மடங்கு குறைவான நூறுராத்தலுக்கு மேலாகாது. ஆகையினல் பார்வைக்கு இலேசாயிருக்கிறது. கடைசியில் கடுந்தண்டனையாகிறது.

दीर्घाध्वनि यथादेशे यथाकालङ्करो भवेत् ।
नदीतीरेषु तद्विद्यात्समुद्रे नास्ति लक्षणम् ॥ மனு 8. 406.

சமுத்திரத்தின் வாய்க்கால்களிலும், நதிகளிலும் போய்வருகிற சகல கப்பல்களிலிருந்தும், அவைகள் எவ்வளவு தூரம் செல்லுகிறதோ அதற்கேற்ற வாறு வரியைவிதிக்கட்டும். மகாசமுத்திரங்களில் வரிவிதிக்கமுடியாதகாலத்து சமயத்திற்கேற்றவாறு ஏற்பாடு செய்யட்டும். இம்மாதிரி விஷயங்களில் அரசனுக்கும் சமுத்திரத்தில் செல்லும் மாலுமிகளுக்கும் லாபமேற்படுகிறவழியில் நியாய ஏற்பாடுகளைச்செய்யட்டும்.

தேச தேசாந்திரங்களுக்கும், த்வீபத்வீபாந்திரங்களுக்கும் கப்பலில் செல்லுகிற தனது பிரஜைகளை எப்பொழுதும் காப்பாற்றட்டும். அவர்களுக்கு எவ்விதத்திலும் துக்கமேற்படாது பார்த்துக்கொள்ளட்டும்.

अहन्यहन्यवेक्षेत कर्मान्तान्वाहनानि च ।
आयव्ययौ च नियतावाकरान्कोषमेव च ॥
एवं सर्वानिमान्राजा व्यवहारान्समापयन् ।
व्यपोह्य किल्बिषं सर्वं प्राप्नोति परमां गतिम् ॥ மனு 419. 420.

பிரதிதினமும் அரசன் கருமங்களை முடித்துக்கொண்டு யானை குதிரை முதலான வாகனங்களையும் பார்த்து வரவு செலவு திட்டங்களையும் கவனித்து கஜானாவையும் பரிசோதித்து (ராஜ்ய நன்மைக்காகச்செய்யப்படும்) பலகாரி களினுடைய பலனையும் கவனித்து வரட்டும். இவ்விதம் சகல வியவகாரங்களை யும், கவனித்துவரும் அரசனுடைய பாவங்கள் நீங்கி, அவன் மோக்ஷ இன்பத் தையடைகிறான்.

வினா. — சம்ஸ்கிருதத்தில் ராஜநீதி பூர்ணமாயிருக்கிறதா? அரை குறை யாயிருக்கிறதா?

விடை.— பூர்ணமாய். ஏனென்றால் பூலோகத்திலிருக்கிற சகல இராஜ நீதிகளும், இனி ஏற்படும் நீதிமுறைகளும் சம்ஸ்கிருதவித்தையிலிருந்தே. அதற்கத்தாக்ஷியாக

प्रत्यहं लोकदृष्टैश्च शास्त्रदृष्टैश्च हेतुभिः ॥ மனு 8. 3.

சிறந்த வித்வான்கள் திட்டஞ்செய்திருக்கும் நியாயாலோசனை சபையா னது அரசனுக்கும் ஜனங்களுக்கும் சுகத்தையும் நியாயத்தையும் ஏற்படுத் தட்டும்.

பால்யவிவாகத்தையாவது அல்லது சம்மதமற்ற வளர்ந்தவர்களுடைய கலியாணத்தையாவது நடத்தக்கூடாதென்பதை அரசனும் சபையோர்களும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். பிரமசரியத்தை அரசன் விருத்திசெய்யட்டும் வியபசாரித்தனத்தையும் ஒருவன் பலரை மணந்துகொள்வதையும் நிறுத்தட் டும். அதனால் சரீரமும், ஆத்மாவும், பூர்ணபலத்துடன் இருக்கும். ஏனென் றால் கேவலம வித்தியர் ஞானமிருந்து சரீரபலமில்லாமல் போனால் அப்பொ ழுது பலவானான ஒரு புருஷன் நூறுவித்வான்களை ஜயிக்கலாம், சரீரபலமாத் திரமிருந்து ஆத்மபலமில்லாமல் போனால் ஞானமன்னியில் இராஜ்யபரிபால னம் செய்யமுடியாது. சரியான இராஜ்ய பரிபாலனமன்னியில் ஜனங்கள் பிளக்கப்பட்டு விரோதம் யுத்தம் சண்டை இவைகள் விருத்தியாகி நாசமடை கிறார்கள். ஆகையினால் சரீரமும் ஆத்மாவும் விருத்தியாகவேண்டியது. சரீர பலத்தையும் ஆத்மபலத்தையும் நாசஞ்செய்ய விஷயசுகங்களினுடைய இச் சையைப்போல் வேறு ஒன்றுமில்லை. முக்கியமாய் க்ஷத்திரியர்கள் வலுவான அங்கங்களுடனும் பலவான்ளாயுமிருக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் விஷயசுகங்களிலிறங்கிவிட்டால் இராஜ்யதர்மம் கெட்டுப்போய்விடும். "அர சனைப்போல் பிரஜைகளும்" என்று மூதாதையர் மொழிந்திருப்பதை மன தில் வைக்கவேண்டும்,

ஆகையினால் துஷ்டாசாரங்களைச்செய்யாமலிருப்பது இராஜனுக்கும், இராஜபுருஷர்களுக்கும் உத்தமமானது. அவர்கள் தினந்தோறும்நியாயத்திலி றங்கி எல்லோருக்கும் நல்ல மார்க்கத்தைக்காண்பிக்கட்டும்.

இம்மாதிரியாக இராஜதர்மங்களைப்பற்றி சுருக்கமாய்ச் சொன்னோம். விவரமாய்ப்படிக்க விரும்புகிறவர்கள் வேதங்களையும், மனுஸ்மிருதி,

ஏழு, எட்டு, ஒன்பதாம் அத்தியாயங்களையும், சுக்கிரநீதி, விதுரப்ரஜாகரம், மகா பாரதம் சாந்திபருவத்தில் இராஜதர்மம் ஆபத்தர்மம் முதலானவைகளைப் படிக்கவேண்டும். படித்து பூர்ணராஜ நீதிகளை அறிந்துகொண்டு மண்டலாதி பதிகளாவது, சார்வபௌமசக்கிரவர்த்திகளாவது, ஆளட்டும்.

எல்லோரும் "வயம் ப்ரஜாபதே: ப்ரஜா அபூமா" (யஜுர்வேதவாக்கியம்) பரமாத்மா நம்முடைய அரசன். நாம் அவருடைய அடியார்கள். அவர்கிருபை செய்தால் அவருடைய சிருஷ்டியில் நம்மையும் இராஜ்யாதிகாரியாகச்செய் வார். நம்மால் அவருடைய சத்திய நியாயம் பரவி விருத்திசெய்யப்படட்டும்" என்று அறியட்டும்.

அடுத்த அத்தியாயத்தில் ஈசுவரன் வேதம் இவைகளைக் குறித்துச்சொல் லுவோம்.

ஆருவது அத்தியாயம்
முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

கடவுளும் வேதமும்.

ऋचो अक्षरे परमे व्योमन्यस्मिन् देवा अधि विश्वे निषेदुः ।
यस्तन्न वेद किमृचा करिष्यति य इत्तद्विदुस्त इमे समासते ॥

இம்மந்திரத்தின் விளக்கம் பிரமசரியாசிரமத்தைப்பற்றின அத்தியாயத்தில் கூறியுள்ளோம். எவரில் எல்லாவிதமான சிறந்த குணகர்ம சுபாவங்கள் எல்லாவித வித்தைகள் அடங்கின்றனவோ, எவரால் சூரியன் முதலான லோகங்கள் தாங்கப்படுகின்றதோ, எவர் ஆகாசத்திற்குச் சமானமாய், பரவியிருக்கிறரோ அவரே சகல தேவர்களுக்குத் தேவராகிய **பரமேசுவரன்.** அவரை நம்பாமலும் அறியாமலும் தியானஞ் செய்யாமலும் இருப்பவர்கள் நாஸ்திகர்களாயும் அறிவீனர்களாயும் எப்பொழுதும் துக்க சமுத்திரத்தில் அமிழ்ந்திருக்கிறார்கள். வித்தையிலும் தியானத்திலும் அவரை அறிகிறவர்களே எப்பொழுதும் சுகமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

வினு:—வேதத்தில் ஒன்றிற்கதிகமாய் பல "ஈசுவரன்" இருக்கின்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றதே? இதை நீங்கள்நம்புகிறீர்களா? இல்லையா?

விடை:—இல்லை நாங்கள் ஏன் நம்புகிறதில்லை என்றால் ஒன்றிற்கதிகமாய் பல "ஈசுவரன்" இருப்பதைக் காட்டுவதற்கு நான்கு வேதங்களில் எந்தவிடத்திலும் ஆதாரமில்லை. ஆனால் அநேக இடங்களில் ஈசுவரன் ஒருவர் என்றே காண்பிக்கப்பட்டிருக்கிறது.

வினு:—வேதங்களில், அநேக தேவதைகள் இருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கின்றதே, அவைகளின் கருத்தென்ன ?

விடை:—சிறந்த குணங்களுடன் கூடின எந்த பொருளுக்கும் **தேவதை** என்று பெயர். உதாரணமாக பூமி. அது கடவுளென்றும் பூஜிக்கத்தகுந்ததென்றும் எங்கும் குறிக்கப்படவில்லை. மேற்கண்ட மந்திரத்திலும் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் எவரால் சகல தேவதைகளும் தாங்கப்படுகிறதோ, அவரே உபாசனைக்கும் அறிகிறதற்கும், யோக்கியதை யுள்ள ஈசுவரன் ஆவர். தேவதைச்சப்தத்தை ஈசுவரன் என்று அர்த்தம்கொள்பவர்கள் பெரும் பிழை இழைக்கிறவர்க ளாகிறார்கள். தேவதைகளுக் கெல்லாம் தேவதை என்று ஈசுவரனுக்குப் பெயர். ஏனென்றால் இப்பிரபஞ்சத்தின் ஆக்குதல் அளித்தல் அழித்தல் முதலியவைகளைச் செய்பவர் அவரே. நீதிபதி, எல்லாருக்கும் ஈசுவரன் என்று **திரிபத்திரி சந்திரி** என்றும் வேதவாக்கியத்தால் பிரமாணமாகிறது. இதனுடைய விளக்கம் **சதபதப்பிராமணம்** அத்தியாயம் பதினென்கில் கூறப்பட்டிருக்கிறது. முப்பத்தி மூன்று தேவதைகளாவன்:—

பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், சிருஷ்டியின் இருப்பிடமாகையினால் இவைகளுக்கு அஷ்டவசுக்களென்று சிறப்புப்பெயர்.

பிராணன் (உட்கொள்ளும் சுவாசம்) அபானன் (வெளிவிடும் சுவாசம்)வியானன்(சலனசக்தி) உதானன். (உட்கொள்ளும்சக்தி)சமானன்(ஓடிப்பரவும்சக்தி) நாகன்கூர்மம்(கொட்டுதல்)கிருகலன்(தாகம்)தேவதத்தன்(ஆசை) தனஞ்சயன் (பூதசக்தி) ஜீவாத்மா இப்பதினொன்றுக்கும் ஏகாதசருத்திரரென்று பெயர். இவைகள்விலகுங்கால், தேகம் அழிந்து அதன்பயனாக உற்றார் உறவினர்களுடையதுக்கத்திற்குக் காரணமாகிறது. வருஷத்தின் பன்னிரண்டு மாதங்கள் மனிதர்களின் வயதைக் கிரகிக்கிறபடியினாலே பன்னிரண்டு ஆதித்தியர்களென்று பெயர். எங்கும் நிறைந்திருக்கிறபடியினாலும் அதிகசக்தியையும் ஐசுவர்யத்தையும் கொண்டிருக்கிறபடியினாலும் மின்சாரசக்திக்கு இந்திரன் என்றும் பெயர்.

எக்ஞத்திற்குப் பிரஜாபதி என்று அடியிற்கண்ட காரணத்தினால் பெயருண்டு. இதினால் வாயு மழை ஜலம், ஔஷதம், முதலியவைகள் பரிசுத்தமடைந்து பலவித சிற்பவித்தைகளைப் பெருக்குவதில் உதவியாகிறது. வித்வான்களுக்கு மரியாதையும், குடிமக்களுடைய பரிபாலனமும் இதனால் உண்டாகிறது. ஆக தேவதைகள் முப்பத்திமூன்று. ஏனென்றால் குணவிசேஷங்களுடன் அவைகள் கூடியிருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் ஈசனாயும், எல்லாவற்றையும்விட பெரியவனாயுமிருக்கிறபடியினால், பரமாத்மா முப்பத்திநான்காவது தேவதை. அவரே உபாசிக்கத்தகுந்தவர். இதுவேமற்றசாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங்கள் இந்நூல்களைப் பார்த்திருப்பார்களேயானால் இந்தப் பிரம்மஜாலங்களைப் பழகமாட்டார்கள்? பரமேசுவரன் ஒருவரே.

ई॒शा वा॒स्य॑मि॒दं सर्वं॒ यत्किञ्च॒ जग॑त्यां॒ जग॑त् ।
तेन॑ त्य॒क्तेन॑ भुञ्जीथा॒ मा गृ॑धः॒ कस्य॑ स्वि॒द्धन॑म् ॥ यஜு॰ 40. 1.

अ॒हम्भु॑वं॒ वसु॑नः पू॒र्व्यस्पति॑र॒हं धना॑नि॒ सं ज॑यामि॒ शश्व॑तः ।
मां ह॑वन्ते पि॒तरं॒ न ज॒न्तवो॒ऽहं दा॒शुषे॒ वि भ॑जामि॒ भोज॑नम् ॥
अ॒हमिन्द्रो॒ न परा॑ जिग्य॒ इद्धनं॒ न मृ॒त्यवेऽव॑ तस्थे॒ कदा॑चन ।
सोम॒मिन्मा॑ सु॒न्वन्तो॑ याचता॒ वसु॒ न मे॑ पूरवः स॒ख्ये रि॑षाथन ॥
ரிக். 10. 48. 1. 5.

இப்பிரபஞ்சமானது ஆக்ஞாபிக்கிற ஒருவரால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருக்கும் ஒவ்வொரு உலகமும் அப்படியே. அவர் சத்தியமான ஈசுவரன். அவருக்குப் பயந்து எனையப்பிராணிகளின் ஐசுவரியத்தில் அநியாயமாய் பேராசைகொள்ளாதே. நியாயமன்னியில் இருப்பவைகளை விட்டு விடு. நியாயவழியில் உன் ஆத்மாவைச் செலுத்தி ஆனந்தத்தை அனுபவி.

ஓ மனிதர்களே ! இப்பொழுது பிரபஞ்சத்திற்கு முந்தியும் நான் இருந்தேன். நான் எல்லாவற்றிற்கும் பதி அல்லது தலைவன். எல்லா உலகத்திற்கும் சனாதனகாரணம் நானே. எல்லா ஐசுவர்யத்தைக்கொடுப்பவன் நான். அதற்கு இருப்பிடமும் நான். பெற்றோர்களைக் குழந்தைகள் பார்ப்பது போல எல்லாமனிதர்களும் என்னைப்பார்க்கட்டும். என்னுடைய ஜீவன்கள் காப்பாற்றப்பட்டு ஆனந்தத்திலிருக்கும் நிமித்தமும், சுகத்திலிருக்கும் நிமித்தமும் பற்பல அன்னபானாதிகளை ஏற்பாடு செய்திருக்கிறேன். நான் பரமேசுவரன். சூரியனுக்குச்சமானமாய் ஒளியை உலகமெங்கும் பிரகாசிப்பவன். தோல்வியும் மரணமும் ஒரு நாளும் என்னையண்டாது. உலக ரூபமாயிருக்கும் தனத்தை நிர்மாணஞ்செய்கிறவன் நான். நான்தான் இப்பிரபஞ்சத்திற்கதிகாரி. உலகெல்லாம் உற்பத்திசெய்பவன் என்று என்னையறி ஓஜீவனே ! ஐஸ்வர்யத்தையடையும் பொருட்டு பிரயத்னஞ் செய்யும் நீ, வித்தையாகிற தனத்தை என்னிடமிருந்து கேள். என்னுடைய சிநேகிதத்திலிருந்து ஒரு நாளும் தனிமையாய்ப் போகாதே ! ஓ மனிதர்களே ! சத்தியபாஷண ஸ்வரூபத்தை ஸ்துதி செய்கிறவனுக்கும், தொடருகிறவனுக்கும் சனாதன ஞான ஆதி தனத்தை என்னுடைய உண்மையான ஸ்வபாவத்தைக்காண்பிக்கும் வேதத்தை வெளிப்படுத்தியவன் நான். அவ்வேதத்தின் மூலமாகவே எல்லாவற்றின் ஞானத்தைப் பிரகாசஞ்செய்து விருத்தி செய்கிறேன். சற்புருஷர்களுக்குத் தூண்டுகோலாயுமிருக்கிறேன். விச்வத்திற்கு, அல்லதுமானிட பிரகிருதி சமூகத்திற்கு, உழைப்பவர்களுக்கு நான் வெகுமதி செய்கிறேன். உலகத்தில் இருக்கும் எல்லாவற்றிற்கும் காரணம் நான்தான். ஆகையால் என்னிடமிருந்து திரும்பாதேயுங்கள். என்னுடைய ஸ்தானத்தில் மற்றொரு தெய்வத்தை ஒப்புக்கொள்ளாதேயுங்கள்.

ஈசுவர நிரூபணம்.

हिरण्यगर्भः समवर्त्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत् ।
स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम॥ யஜு 13. 4.

ஓ மனிதர்களே! கடவுள் சிருஷ்டியின் ஆதியிலும் இருந்தார். சூரியாதி தேஜசுடன் கூடினலோகங்களை ஆக்கியவரும் அளிக்கிறவரும், தாங்குகிறவரும் கடந்த சிருஷ்டிக்கும் ஈசுவரன் அவர்தான். நிகழ்பவைகளுக்கும் அவரே. உற்பத்தியாகுபவைகளுக்கும் அவரே. பூமியிலிருந்து சூரியரூபம் வரையிலிருக்கும் சிருஷ்டிகளைப்படைத்துத்தாங்குகிறவர் அவரே. அவர் நித்திய சுகஸ்வரூபர், அப்பரமாத்மாவை நாம் பக்தியுடன் போற்றுகிற வண்ணம் நீங்களும் போற்றுவீர்களாக.

வினா.—கடவுள் ! கடவுள்! என்றுசொல்லுகிறீர்களே அவர் இருக்கிறாரா இருப்பின் அதை நிரூபணம் செய்வீர்களா ?

விடை:—பிரத்தியக்ஷாதி பிராமணங்களால் நிரூபணம் செய்வோம்.

வினா:—ஈசுவரவிஷயம் பிரத்தியக்ஷாதி பிரமாணத்தினால் ஒருபொழுதும் நிஜமாவாகாது.

इन्द्रियार्थसन्निकर्षोत्पन्नं ज्ञानमव्यपदेश्यमव्यभिचारिव्यवसायात्मकं प्रत्यक्षम् ॥

நியாய I. 4.

விடை:— பஞ்சேந்திரியங்களும் முறையே அவைகளுக்கேற்ற பொருள்களோடும் (கண்கள் வெளிச்சத்துடனும், காதுகள் சப்தத்துடனும் தோல் ஸ்பரிசத்துடனும், நாக்கு சுவையுடனும், மூக்கு முகருந்தன்மையுடனும்) மனம் (கவனத்தையளிக்கும் உருபு) இந்திரியங்களுடனும் ஆத்மமனதோடும் சேருவதினால் உண்டாகும் உணர்ச்சியின் அறிவே பிரத்தியக்ஷமெனப்படும். இஞ்ஞானம், சந்தேகம், குற்றம் இவைகளிலிருந்து விலகியுள்ளது. பஞ்சேந்திரியங்களின் மூலம் ஒரு பொருளின் குணம் வெளியாகிறது. இந்திரியங்கள் மனதுடனும், மனது ஆத்மாவுடனும் சேருங்கால், ஒரு குணத்தைப்படைத்தப் பொருள் புலனாகிறது. இவ்விதமே சிருஷ்டியிலிருக்கும் அமைப்பு முதலிய ஞானாதிகுணங்களினால், ஈசவரன் இருக்கிறாரென்பது பிரத்தியக்ஷமாகிறது. ஆத்மாவும் மனமும் இந்திரியாதி குணங்களில் எப்பொழுது பிரவேசிக்கிறதோ அப்பொழுது இது நல்லது இதுகெட்டது என்னும் ஞானம் ஏற்படுகிறது. அதாவது கொலைகளவு முதலிய தீயச்செயல்களைச்செய்யுங்கால் அவன்மனதில் பயம் வெட்கம் சந்தேகம் என்னும் உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. அவன் செய்யும் காரியம் நற்காரியமாயின் பயமின்மை தைரியம் சந்தோஷம் மனவமைதி, இவைபோன்ற நல்லுணர்ச்சிகள் அவன் மனதில் உதிக்கின்றன. இத்தகைய உணர்ச்சிக்குக்காரணம் பரமாத்மாவே. ஜீவாத்மா காரணமாகாது. ஆத்மா, தூய்மைபெறின் அது யோகம் தியானம் முதலிய நற்பயிற்சிகளினால், ஈசுவரனை அடைய முயலுகிறது. அங்ஙனம்முயலும் ஆத்மாவிற்கு ஜீவாத்மாவும் பரமாத்மாவும் விள்ளுகிறது. கடவுளிருப்பதைப் பிரத்தியக்ஷமாகஅறிந்துகொள்ளவழியிருக்கும்பொழுது, அவர் இருக்கிறார் என்று அனுமானிக்கத்தேவையில்லை. கார்யத்தைப் பார்த்துவிட்டபிறகு அதன் காரணத்தை ஏன் அனுமானிக்கவேண்டும்?

வினா,—ஈசுவரன் எங்கும் வியாபித்திருக்கிறாரா? அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே இருக்கிறாரா?

விடை.— அவர் சர்வவியாபி. அவர் குறிப்பிட்ட ஒரு இடத்திலேயே இருக்கும் பக்ஷத்தில், ஒரு பொழுதும் சர்வாந்தர்யாமி சர்வஞ்ஞர், சர்வநியந்தா அல்லது எல்லாவற்றையும் நியமிப்பவராகவும், எல்லாவற்றினுடைய ஆக்குதல் அளித்தல் அழித்தல் முதலானவைகளுடைய கர்த்தாவாகவும் இருக்கமுடியாது.

வினா.—கடவுள் தயாளுவாயும், பக்ஷபாதமில்லாதவராயும் இருக்கிறாரா?

விடை.—ஆம். இருவகையாயும் இருக்கிறார்.

வினா.—ஏனென்றால் நியாயமிருக்குமிடம் தயையும், தயை இருக்கும் இடம் நியாயமும் இருத்தல் முடியாது. கர்மத்திற்கேற்றவாறு சுகதுக்கங்களைக்கொடுப்பதே நியாயம். ஆனால் தயையோ, அபராதஞ் செய்கிறவனைத் தண்டியாமல் விட்டுவிடுவதே. ஒரே சமயத்தில எப்படி தயைகாட்டவும் நியாயமும் செய்யமுடியும்?

விடை:—நியாயமும், தயையும் கேவலம் நாமத்தினுலே வித்தியாசமாயிருந்த போதிலும், தயையால் என்ன பிரயோஜன முண்டாகிறதோ, அதுவே நியாயஞ் செய்வதினுலும் உண்டாகிறது. தண்டனை யளிப்பதின் கருத்து யாதெனில் பாபகர்மங்களைச் செய்யாதிருக்கச்செய்வதே. பாபகர்மங்களைச் செய்யாதிருப்பின் ஜனங்கள் துக்கம் முதலியவைகளினுல் பாதிக்கப்படுகிறதில்லை. ஜனங்களைத் துக்கத்திலிருந்து காப்பாற்றுவதின் பொருள் என்ன? தயையே அல்லவா? ஒருவன் செய்யும் குற்றத்திற்கு ஏற்றவாறு ஒருவனைத் தண்டிக்காது விட்டால் தயை பொருளற்ற வார்த்தையாகும்.உலகில் ஒழுங்கீனம் அதிகரிக்கும். திருடர்களைப்போலுள்ள பாபிகளைத் தண்டியாது விட்டால் ஆயிரக்கணக்கான சிறந்த ஒழுக்கத்தினரான மேலோர்களுக்குத் துக்கம் அதிகம் விளையும். ஒருவனைத்தண்டியாமல் விட்டு விட்டு ஆயிரக்கணக்கான ஜனங்களைத்துக்கசாகரத்தில் வைப்பது நியாயமாகுமா? நன் நடத்தையினரை வருந்துமாறு செய்வதுதான் ஒழுங்கோ? அவனைச் சிறைக்கனுப்பி, பின்னரும் அங்ஙனம் பிழைசெய்யாதவாறு தடுப்பதே திருடன்மேல் காண்பிக்கும் தயையாகும். கொலைபாதகனைக் கொல்லுவதும் திருடனை அடக்குவதுமே ஆயிரக்கணக்கான ஜனங்களின்மேல் காண்பிக்கும் தயையாகும்.

வினு:— பிறகு தயை என்றும் நியாயம் என்றும் இரண்டு தனித்தனிச் சொற்கள் எதற்காக? ஒரே அர்த்தமாயிருந்தால் இருபதங்களினுல் பிரயோசனமொன்று மில்லையே. ஒரே பதமாயிருந்தால் மேன்மையாக இருக்காதா? இதனுல் இருசப்தத்திற்கும் ஒரே பொருள் என்பது புலனுகவில்லையா?

விடை:—ஒரு பொருளைக்குறிக்க பலபதங்களும் பலபதங்களுக்கு ஒரு பொருளும் இல்லையா?

வினு:—ஆமாம் இருக்கிறது.

விடை:—பின்னர் உங்களுக்கு ஏன் இச் சந்தேகம்?

வினு:—உலகத்தில் அடிக்கடி இத்தகைய சந்தேகத்திற்குக் காரணமான பதங்கள் இருப்பதினுலேயே.

விடை:—ஆழ்ந்த யோசனையில்லாததே இதற்குக்காரணம். ஆனுல் தீர்க்காலோசனை செய்து சத்தியா சத்தியங்களை பகுத்தறிவது நம்முடைய கடமையாகும். எல்லாருடைய நன்மைக்காக இவ்வுலகத்திலிருக்கும் சகலவஸ்துக்களையும் படைத்து அவைகளுக்குச்சுய இச்சையைக் கொடுத்திருக்கும் ஈசுவரனுடைய தயையே தயை. இதைக்காட்டிலும் உயர்ந்த தயை ஏதேனுமுண்டோ? மனிதர்களின் தாரதம்மிய ஸ்திதியானது, சிலர் துக்கத்திலும் சிலர் சந்தோஷத்திலிருப்பது, பரமேசுவரனுடைய நியாயத்தைக்காட்டுகிறது. பகவான் தயாளு என்பதற்கு அவன் சிருஷ்டியும், நியாயத்தின் ரூபம் என்பதற்கு ஜனங்களிடம் காணப்படும் சுகதுக்கவேற்றுமையும் முறையே போதிய சான்று அல்லவா? தயையுக்கும் நியாயத்திற்குமுள்ள சிறிய பேதம் யாதெனில்:—எல்லாருடையதுக்கத்தை நீக்கி சுகத்தைகொடுக்க இச்சையுள்ளவனுய் அதற்குத் தகுந்த காரியங்களைச் செய்வது தயை. ஆனுல் அபராதம் அல்லது

குற்றத்திற்குத்தகுந்த தண்டனைவிதிப்பது நியாயம். பாபம், பாபத்தினால் உண்டாகும் துக்கமுதலியவைகளிலிருந்து விடுவித்துக்கொள்வதே தயை, நியாயம் இவைகளுடைய பிரயோஜனம்.

வினா:—ஈசுவரன் உருவம் உள்ளவரா ? உருவமில்லாதவரா ?

விடை:—அவர் உருவமில்லாதவர். ஏனென்றால்உருவமுள்ளவராயிருந்தால் அவரிடத்தில் வியாபகம் இருக்கமுடியாது. வியாபகமில்லாமற்போனால் சர்வஞ்ஞாதிகுணங்கள் அவரிடத்திலிராது. அப்பொழுது எல்லைக்குள் அடங்கின குணகர்மஸ்வபாவங்களே அவரிடத்தில் இருக்கும். அதுவுமன்றி சீதோஷ்ணம், உஷ்ணம், சீதளம், பசி தாகம், ரோகம், குறைதோஷம் கெடுதி முதலியவைகளிலிருந்து நீங்கினவராயிருக்க இயலாது. இதனால் ஈசுவரன் நிராகாரர் என்று நிச்சயமாகிறது. அவருக்குச் சரீரமிருந்தால் அவருடைய சரீரத்தின் அவயவங்களாகிற கண் காது முதலியவைகளை உண்டாக்குவதற்கு கர்த்தா ஒருவன் தேவை. சம்யோகத்தினால் உற்பத்தியாகிறவைகளைச் சேர்த்துவைக்க நிராகாரனாயிருக்கும் சேதன (ஞான) ஸ்வரூபர் ஒருவர் அவசியமாய்வேண்டும். இஷ்டத்தினால் கடவுளானவர் தன்னைத்தானே சிருஷ்டித்துக் கொண்டார் என்று சொல்லப்படுமேயானால் தன் தேகத்தைச் சிருஷ்டி செய்யுமுன் நிராகாரமாயிருந்ததாக அதிலிருந்தே ருஜுவாகிறது. இதனால் பரமாத்மா எப்பொழுதும் சரீரமெடுக்கிறதில்லை. ஏனென்றால் அவர் உருவமற்றவர். சூட்சமகாரணங்களிலிருந்து ஸ்தூலமாயிருக்கும் உலகத்தைச்செய்யச் சக்தியுள்ளவராயிருக்கிறார்.

சர்வசக்தியுள்ளவர்.

வினா.—ஈசுவரன் சர்வசக்தியுள்ளவரா ? இல்லையா ?

விடை.— ஆம். உள்ளவர்தான். நீங்கள் சர்வசக்தி என்னும் பதத்திற்கு எப்படி பொருள் தெரிந்துகொள்ளுகிறீர்களோ அப்படி இல்லை. ஈசுவரன் தன் வேலைகளாகிற, உற்பத்தி, பாலனம், பிரளயம், எல்லா ஜீவன்களுக்கும் பாப புண்ணியத்திற்குத் தகுந்தவாறு அவைகளுக்குத்தகுந்த வியவஸ்தையில் வைப்பதையும் ஒருவருடைய சகாயத்தை வேண்டாமல் தன்னுடைய அனந்த சாமர்த்தியத்தினால் பூர்ணமாய் செய்துகொள்ளுகிறார். இவைகளையே சர்வ சக்திமான் என்கிற பதத்திற்குப் பொருள், என்று அறியவேண்டும்.

வினா.—ஈசுவரன் தான்விரும்புவதைச் செய்துகொள்வாரென்று நான் கருதுகிறேன், அவருக்குமேல் ஒருவருமில்லையே ?

விடை.—அவர்விரும்புகிறதையும், இன்னும் எல்லாவற்றையும் செய்யக்கூடுமென்றுசொல்வீரானால் அவரையே அவர்கொலைசெய்துகொள்வாரா? அல்லது தன்னைப்போல் அநேக ஈசுவரர்களைப் படைத்துவிட்டு தன்னை அனீசுவரனாயும் செய்துகொண்டு திருடு, வியபசாரம் முதலிய பாபங்களைச்செய்து துக்கத்துடனுமிருப்பாரா? என்று நாங்கள் கேட்கிறோம் இக்காரியங்கள் ஈசுவரனுடைய குணகர்மஸ்வபாவத்திற்கு எப்படி விருத்தமாயிருக்கிறதோ அப்படியே

நீசொல்லுவதும். ஆகையாலீசுவரன் எல்லாம்செய்பவர் என்கிற உங்களுடை சித்தாந்தம் நிலை நிற்கிறதில்லை, சர்வசக்திமான் என்னும் பதத்திற்கு நாங்கள் தரும் பொருளே சரியானது.

ஈசுவரன் அநாதி.

வினா.—பரமேசுவரன் என்ன *அநாதியா அல்லது ஆதியுள்ளவரா?

விடை.—அவர் அநாதி அதாவது காரணமும் ஆரம்பமும் இல்லாதவர்.

வினா.—பரமேசுவரன் எதை விரும்புகிறார் ?

விடை.—சகலருடைய நன்மையையும் இன்பத்தையும் விரும்புகிறார். பாபமன்னியில் பரமேசுவரன் தன் சுயப்போக்கைக் கொண்டே ஒருவரை மற்றொருவருக்குக் கீழ்ப்படியச் செய்கிறதில்லை.

துதி உபாசனை.

வினா.—துதி, பிரார்த்தனை, உபாசனைகளைப் பரமேசுவரனுக்குத் தான் அளிக்கவேண்டுமா ?

விடை:—வேண்டும்.

வினா.—துதிமுதலியவைகளைச் செய்வதினால் ஈசுவரன் தன்னுடைய நியமத்தை விட்டுத்துதிப்போனின் பாபத்தைவிலகச்செய்கிறார்?

விடை:—இல்லை.

வினா.—அதை (துதி பிரார்த்தனை) ஏன் செய்யவேண்டும் ?

விடை:—வேறு பிரயோஜனமுமிருக்கின்றது.

வினா.—அதென்ன.

விடை:—ஸ்துதியால் அவருடைய அன்புண்டாய் ஈசுவரனின் குண கர்மஸ்வபாவத்திற்குத் தகுந்தவண்ணம் தன்னைத் திருத்திக்கொள்வதற்குச் சாதகமாயிருக்கிறது. பிரார்த்தனையினால் மனத்தூய்மை, தைரியம், தெய்வ சகாயம், முதலியவை யுண்டாகிறது. உபாசனையினால் பரப்பிரம்மத்தோடு கலந்து அவருடைய சாட்சாத்காரமுண்டாகிறது.

வினா.—விளக்கிக்காட்டுங்கள்.

स पर्य॑गाच्छु॒क्रम॑का॒यम॑व्र॒णम॑स्नावि॒रं शु॒द्धमपा॑पविद्धम् ।
क॒विर्म॑नी॒षी प॑रि॒भूः स्व॑य॒म्भूर्या॑थातथ्य॒तोऽर्था॒न् व्य॑दधाच्छाश्व॒तीभ्यः॒ समा॑भ्यः ॥

யஜு॰ 40. 8.

ஸ்துதியில் இரண்டுவிதம் உண்டு. சகுணம் ஒன்று, நிர்குணம் மற்றது. அவருக்கு எந்த குணங்களுண்டோ அக்குணங்களுடன் அவரைத்துதிப்பது சகுணோபாசனை. அதாவது அவர் எல்லாவற்றிலும் வியாபகமாயிருக்கிறார். தீவிரமனதையுடையவர். ஆவியாயுள்ளவர். அனந்தபலவான் பரிசுத்தமுள்ளவர். சர்வஞ்ஞர். அந்தர்யாமி. எல்லாவற்றிலும் வீற்றிருப்பவர்.

* இதன் விளக்க விவரம் முதல் அத்தியாயத்தில் கூறியுள்ளோம்.

சனாதனர். ஸ்வயம் சித்தர். தன்னுடைய ஜீவரூபசனாதன அனாதி பிரஜைகளுக்குத் தன்னுடைய சனாதன வித்தையினால் கிரமப்பிரகாரம், பொருள்களின் ஞானத்தை வேதத்தின்வழியாய் போதித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு எந்தெந்த அனீச்வர குணங்கள் இல்லையோ அவைகள் இல்லாதவரென்று துதிப்பது நிர்குணோபாசனையாகும். அவர் எப்பொழுதும் சரீரத்தைத்தரிப்பதில்லை. ஜன்மம் எடுப்பதில்லை. அவருக்குப்பந்தம் ஒன்றும் உண்டாகிறதில்லை. பாபங்களை ஆசிரயிக்கிறதில்லை. அவருக்குக் கிலேசம் அஞ்ஞானம், துக்கமென்பது கிடையாது. இப்படி ராகத்துவேஷாதி விவகாரங்களிலிருந்து விலக்கிப் பரமேசுவரனை உபாசனைசெய்வது நிர்குணோபாசனையாகும்.

பரமேசுவரனின் குணகர்மஸ்வபாவங்கள் எப்படி இருக்கின்றனவோ அதே மாதிரி தன்னுடைய குணகர்மஸ்வபாவங்களைத்திருத்திக்கொள்வதற்கு உபகாரமாகிறது. இதுவே இதனுடைய தாத்பரியமாகும். உதாரணமாக அவர் நியாயகாரியானால், நாமும் நியாயமாயிருப்பதற்கே முயலவேண்டும். கள்ள ஆசாரம் செய்பவனுக்குச்சமானமாய் பரமேசுவரனுடைய குணங்களைக்கீர்த்தனை செய்துக் கொண்டு தன்னைத் திருத்திக்கொள்ளாமலிருப்பவனுடைய ஸ்துதி வியர்த்தமானதாகும்.

यां मेधां देवगणाः पितरश्चोपासते ।
तया मामद्य मेधयाऽग्ने मेधाविनं कुरु स्वाहा ॥ யஜு॰ 32. 14.

तेजोऽसि तेजो मयि धेहि । वीर्यमसि वीर्यं मयि धेहि । बलमसि बलं
मयि धेहि । ओजोऽस्योजो मयि धेहि । मन्युरसि मन्युं मयि धेहि
सहोऽसि सहो मयि धेहि ॥ யஜு॰ 20. 9.

ஓ! அக்னியே (அதாவது ஒளிரூபியான ஈசுவரனே) என் பால் உனது கருணையைச்செலுத்துவாய். உனது பேரொளியைத் தந்து என்னைப்பிரகாசிக்கச்செய்வாய். நீஎல்லையற்றசக்தியையுடையாய்! எனக்கு அச்சக்தியைத் தந்தருள்வாய். நீ பெரும்வலிமையையுடைய தோளினை யுடையாய். எனது பலமற்ற தோளினை, உனது பலத்தால் அலங்கரிப்பாய். நீ எல்லாம் வல்ல பரம்பொருள். உனது வல்லமையை எனக்கு அளிப்பாய். தூய்மை அற்றவையைக்காணுங்கால் கோபவெறிகொள்வாய். எனக்கும் அவ்வெறியைத் தந்திடுவாய். புகழிலும், நிந்தையிலும் நீ கலவாதவன். என்னை அங்ஙனம் இருக்கச் செய்வாய். உன்னை மறப்போனையும், நிந்திப்போனையும், பொருத்தருளும் பெருந்தகையான் நீ. அப்பெருங்குணத்தையான் பெறும்வழியை எனக்களிப்பாய்.

यज्जाग्रतो दूरमुदैति दैवन्तदु सुप्तस्य तथैवैति ।
दूरंगमं ज्योतिषां ज्योतिरेकन्तन्मे मनः शिवसङ्कल्पमस्तु॥ யஜு॰ 34. 1.

ஓ கருணைக்கடலே! உனதருளைப்பெற்ற எனக்கு என்ன குறை? உனது கருணையில் நான் கலந்திருக்குங்கால், விழிப்பிலும் தூக்கத்திலும் சரியே

என் மனம் காற்றைப்போல் காணுமிடந்தோறும் சென்று உனது கல்யாண குணத்தைப் பெருகிறது. உன்கருணையினால் எனது ஆத்மாவினுடைய நலத்தையும் உலகத்தினிடம் வாழும் ஜீவராசிகளின் நலத்தையும் தவிர, வேறு ஒன்றையும் என்மனம், நாடுகிறதில்லை. உன் வயப்பட்ட என் மனம் துன்பம் விளைத்தல் என்னும் எண்ணத்தை எங்ஙனம் பெறல் கூடும் ?

येन॒ कर्मा॑ण्यपसो॑ मनी॒षिणो॑ य॒ज्ञे कृ॒ण्वन्ति॑ वि॒दथे॑षु॒ धीराः॑ ।
यद॑पू॒र्वं य॒क्षम॒न्तः प्र॒जानां॒ तन्मे॒ मनः॑ शि॒वस॑ङ्कल्पमस्तु ॥ யஜு 34. 2.

எங்கும் வியாபித்துள்ளோனே! சலன சக்தியின் பீடமாயுள்ள என்மனம், கல்விப்பயிற்சியும் தர்மப்பயிற்சியுமுள்ளோருக்கு, யக்ஞபூமியிலும்போர்முனையிலும், நற்காரியத்தைச் செய்ய போதிய திடத்தையும், பெருங்குணத்தையும் தரக்கூடியது, தீமையை யொழிக்கவும் நற்கருமத்தைச்செய்யவும் தூண்டுகோலாகட்டும்.

यत्प्र॒ज्ञान॑मु॒त चेतो॒ धृति॑श्च॒ यज्ज्योति॑र॒न्तर॒मृतं॑ प्र॒जासु॑ ।
यस्मा॒न्न ऋ॒ते किं च॒न कर्म॑ क्रि॒यते॒ तन्मे॒ मनः॑ शि॒वस॑ङ्कल्पमस्तु ॥ யஜு 34. 3.

என் கோவே! பேரறிவிற்குக்களஞ்சியமாயும், பகுத்தறியும் தன்மைக்கு இருப்பிடமாயும், இந்திரியாதி குணங்களின் ஒளியாயும், அழிவற்றதாயும், மனிதன்செய்யும் ஒவ்வொரு கார்யத்திற்கும் மூல வஸ்துவாயும், இருக்கும் எனது மனம் தூய்மைப்பெறட்டும். தூய்மையற்றதை விலக்கட்டும்.

येने॒दं भू॒तं भुव॑नं भवि॒ष्यत्परि॑गृहीतम॒मृते॑न॒ सर्व॑म् ।
येन॑ य॒ज्ञस्ता॒यते॑ स॒प्तहो॑ता॒ तन्मे॒ मनः॑ शि॒वस॑ङ्कल्पमस्तु ॥ யஜு 34. 4

ஏ பரஞ்சோதியே! முக்கால நிகழ்ச்சியை யோகிகள் அறிவதற்குக்காரணமாயும், ஜீவாத்மா, பரமாத்மாவிடம் தன்னை இழந்து விடுவதற்கு மூலவஸ்துவாயும், ஞானக்கிரியைகளைச்செய்ய இந்திரியாதிகளுக்குத் தூண்டுகோலாயும், யோகநிலைப் பெறுவதற்கு வழிகாட்டியாயும், இருக்கும் எனது மனதிற்கு, உனது உண்மை அறிவைத்தந்து, துன்பம், அறிவின்மையாகிய இருளின் வயப்பட்டு இருக்கும் அதை வெளியேறச்செய்வாய்.

यस्मि॒न्नृचः॒ साम॒ यजू॑ꣳषि॒ यस्मि॒न्प्रति॑ष्ठिता रथना॒भावि॑वा॒राः ।
यस्मिँ॒श्चित्तꣳ॒ सर्व॒मोतं॑ प्र॒जानां॒ तन्मे॒ मनः॑ शि॒वस॑ङ्कल्पमस्तु ॥
सु॒षा॒र॒थिरश्वा॑निव॒ यन्म॑नु॒ष्या॒न्नेनी॒यते॒ऽभीशु॑भिर्वा॒जिन॑ इव ।
हृत्प्रति॑ष्ठं॒ यद॑जि॒रं जवि॑ष्ठं॒ तन्मे॒ मनः॑ शि॒वस॑ङ्कल्पमस्तु ॥ யஜு 34. 6.

ஞானிக்குஞ்ஞானியான ஏ பரம்பொருளே! வண்டிக்குச் சக்கிரம் போல், ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களுக்கு மூலாதாரமாயும் எங்கும் பரவியுள்ள உன்னை அறிவதற்குப் பாத்திரமாயும் இருக்கும் உனது அருளைப்பெற்ற எனது மனம், உண்மை அறிவால் அலங்கரிக்கப்படட்டும். ஏ! லோகநாயகா! திக்குகள்தோறும் ரதத்தை நடத்தும் வல்லமையுள்ள சாரதி, குதிரையை

ஆட்டிவைப்பதுபோல் என்னை ஆட்டிவைக்கும் மனதைத் தீயபாதையினின்றும் விலக்கி நல்லவழியை அதற்குக்காட்டுவாய். இறைவனே! எனது இப்பிரார்த்தனையைப் பூர்த்திசெய்வாய்.

अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान् ।
युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ॥ யஜு I. 46.

சுகத்தைகொடுப்பவனே! சுயம்பிரகாசஸ்வரூபனே, எல்லாவற்றையும் அறிகிறவனுயிருக்கும் பரமாத்மாவே, நீ என்னைச் சிறந்தவழியில் நடத்தி சம்பூர்ண ஞானத்தைப்பெறச்செய்வாய்.

எங்களைப் பொய்யாயும் பாபமாயுமிருக்கும் ஆசரணைகளிலிருந்தும் அவ்வழிகளிலிருந்தும் தனிமையாய்வைப்பாய். இதற்கு நாங்கள் மிகவும் வணக்கத்துடன் உன்னைத்துதிக்கிறோம். எங்களைப் பரிசுத்தமாகச்செய்யவும்.

मा नो महान्तमुत मा नो अर्भकं मा न उक्षन्तमुत मा न उक्षितम् ।
मा नो वधीः पितरं मोत मातरं प्रिया मा नस्तन्वो रुद्र रीरिषः ॥

யஜு 16. 15.

ஓ உருத்திரனே (துஷ்டர்களுடைய பாபத்திற்குத் தகுந்தவண்ணம் பலனைக்கொடுத்து விசனிக்கச்செய்யும் பரமேசுவரனே) எங்களில் சிறியவர்களையும், பெரியவர்களையும், தாய்மார்களையும் எங்களுக்குப் பிரியமானவர்களையும் பந்துக்களையும் எங்களுடைய சரீரங்களையும் நாசஞ்செய்யாமலிருக்கவும். உனது நியாயந்தவராது நடக்கவும் வேண்டிய வழியைக் காட்டவும்.

असतो मा सद् गमय तमसो मा ज्योतिर्गमय मृत्योर्माऽमृतं गमयेति ॥

சத I4. 3. I. 30.

பரமகுருவே! அசத்தியங்களிலிருந்து நீக்கி சத்திய வழியை அடையச் செய்வாய். எனது அகத்திருளை நீக்கி அறிவாகிய ஒளியைப் பெறச்செய்வாய். தேகசம்பந்தமான பிணி முதலிய நோய்களினின்று நீக்கி மோக்ஷமென்னும் அம்ருதத்தை எனக்கு அளிப்பாய்.

ஈசுவரனது கல்யாணகுணங்களைச் சொல்லி ஜபஞ்செய்வது **சகுணோபாசனையாகும்.** குணசம்பந்தங்களிலிருந்து விலக்கி, அவரைப்பஜனை செய்வது **நிர்குணோபாசனையாகும்.** ஒருவன் ஞானம் வேண்டுமென்று ஈசுவரனை வழிபடுவானேயாளுல், அவன் துதியுடன் நிறுத்தாது ஞானத்தை அடைய முயலவேண்டும். நாம் எந்தெந்த உத்தேசத்தைக்கொண்டு, பகவத்தியானம் செய்கின்றோமோ அவைகள் நிறைவேறுமாறு நம்மால் இயன்றவரை அவ்வழியில் பாடுபடவேண்டும். பின்வருமாறு இறைவனைத்துதிப்பதினுல் பலன் ஒன்றும் விளையாது.

இறைவனே! எனது விரோதியை நாசஞ்செய். என்னை எல்லோரினும் சிறந்தோனுகச்செய். எல்லோரும் என்னை வணங்கட்டும். பிறர் எனக்கு அடிமையாக வேண்டும். இத்தகையப்பிரார்த்தனைகளைக் கடவுள் ஏற்கிறதில்லை. ஒவ்வொருவரும் மற்றவர் நாசம் அடைய வேண்டும் என வேண்டுவார்களேயாளுல் கடவுள் அவர்களது இச்சையை எங்ஙனம் பூர்த்தி செய்வார்? இரு

வரில் ஒவ்வொருவனும், மற்றவன் நாசமடைய வேண்டுமென்று பகவானை வேண்டினால், தன்னிடம் அதிக பக்தி கொண்டு இருப்பானது பிரார்த்தனைக்குக் கடவுள் இறங்குவாரேயானால், கடவுள் மேல் பக்திகொண்டிருக்கும் மற்றவன் நாசமடைய வேண்டுமல்லவா? இங்ஙனம் கடவுள் பாரபக்ஷத்துடன் காரியம் செய்வாரேயானால் பின்னர் ஜனங்கள் பின் வருமாறு பிரார்த்தனை செய்யத்துடங்கி விடுவார்கள்:—

"இறைவனே, எனக்குச் சமையல் வேலைசெய். எனக்குச் சாப்பாட்டைப்போடு. என் வீட்டைச்சுத்தஞ்செய். எனது நிலத்தைச் செழிக்கச்செய். இவைபோன்ற பிரார்த்தனைகள் உலகத்தில் வலுத்துவிடும். ஜனங்களிடத்தில் சோம்பல் அதிகம் ஏற்படும். மூர்க்கத்தனம் உலகில் அதிகம் பரவும் கடவுள்விரும்புவது மனிதன் பிரயத்தினம் செய்யவேண்டுமென்பதே. அதுவே அவரது ஆக்ஞையுமாகும். ஈசுவரபக்தியுடன் தனது காரியத்தை செய்து முடிக்க பிரயத்தனப்படாதவன், ஒரு நாளும் சுகத்தைப்பெறுவன்?

कुर्वन्नेवेहकर्माणि जिजीविषेच्छतं समाः॥ யஜு 40. 2.

சோம்பலை ஒழி. எப்பொழுதும் வேலைசெய். நூறுவருடம் வேலைசெய். உன்வாழ்நாளைவேலையிலேயேசெலவழி. உலகத்தில்உயிருள்ளதும்உயிரில்லாததுமான ஜீவகோடிகள், அததன் வேலையை ஒழுங்கே செய்து வரவில்லையா? எறும்பைப்பார். எப்பொழுதும் வேலைசெய்து கொண்டே இருக்கிறது. சந்திரன் சூரியன் இதர நக்ஷத்திரங்கள் அவைகளுக்கான வேலையைச்செய்து கொண்டே வருகின்றன. மரங்கள் வளருகின்றன. இவைகள் மனிதனுக்குப் போதியபாடமாகாதா? தன்னலத்தைத் தேடாதவனுக்குக்கடவுள் நலந்தருவதில்லை. வேலையில் சோம்பலில்லாது தன்வேலையை சரியேசெய்யும் எஜமானனுக்குத்தான் வேலைக்காரனும் அவனது வேலையை சரியேசெய்கிறான். கண்ணிருந்தால் மாத்திரம் போதாது. பார்க்கவேண்டுமென்ற அவா உள்ளவன் தான் பார்க்கிறான். தான் பெறவேண்டுமென்று நினைக்கும் ஒன்றைப் பெற, போதிய முயற்சி எடுக்காதவனது துதிக்குக் கடவுள் செவிசாய்க்கிறாரில்லை. சர்க்கரை தித்திக்கும். சர்க்கரை தித்திக்கும் என்று சொல்லுவதினால் மாத்திரம் என்ன பயன்? மந்திரத்தில் மாங்காய் விழாது. குறிவைத்து கல்லெறிந்தால் தான் ஒருக்கால் மாங்காய் விழும். என்பதே கடவுளது கட்டளை.

உபாசனை.

समाधिनिर्धूतमलस्य चेतसो निवेशितस्याऽऽत्मनि यत्सुखं भवेत् ॥
न शक्यते वर्णयितुं गिरा तदा स्वयन्तदन्तःकरणेन गृह्यते ॥ யோக 30.

யோக சமாதியினால் எவன் உயர்வடைந்திருக்கிறானோ, எங்கும் செல்லாமல் எவனது மனம் ஆத்மநிலையிலிருக்கின்றதோ, பரமாத்மாவினிடம் எவனுடைய சித்தம் லயித்து இருக்கின்றதோ, அத்தகையோனுக்குப் பரமாத்மாவினுடைய இன்பசுகம் உண்டாகின்றது. அதை வாக்கால் வர்ணிக்க இயலாது. அவ்வானந்தத்தை ஜீவாத்மாவனது தன்னுடைய அந்தக்கரணத்தினால் அனுபவிக்

கிறது. உபாசனை என்னும் பதத்திற்குப்பொருள் சமீபத்தில் போகிறது என்பது. அஷ்டாங்கயோகத்தினால் அவருடைய சமீபத்தில் போகிறதிற்கும் அவருடைய சர்வவியாபி சர்வாந்தர்யாமி ரூபத்தை பிரத்தியக்ஷமாக்கிக் கொள்ளுவதற்கும் என்னென்ன செய்யவேண்டுமோ அவையெல்லாம் செய்யவேண்டும், அதாவது.

तत्राहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः ॥ யோக 30.

உபாசனை செய்யவிரும்புகிறவன் அடியிற்கண்ட விதம் துவக்க வேண்டும். எந்த ஜீவனிடத்திலும் பகையில்லாது எப்பொழுதும் எல்லாரிடத்திலும் அன்புடனிருக்கவேண்டும். உண்மையே பேசவேண்டும். பொய் ஒருபொழுதும் பேசல் கூடாது. சத்தியமான விவகாரங்களையே செய்யவேண்டும். ஆசையில்லாமல் சிந்தையை அடக்க அப்பியாசஞ்செய்ய வேண்டும் பஞ்ச இந்திரியங்களை ஜெயிக்கவேண்டும். எப்பொழுதும் வினயமாயும் வீணெண்ணம் கொள்ளாமலுமிருக்கவேண்டும். இவ்வைந்தும் உபாசனையாகிற யோகத்தின்முதல் அங்கமாகிறது. இவைகளுக்கு எமங்களென்று பெயர்.

शौचसन्तोषतपःस्वाध्यायेश्वरप्रणिधानानि नियमाः ॥ யோக 32.

பிறகு நியமங்கள். அவைகளும் ஐந்தாக இருக்கின்றன. ராகதுவேஷ முதலியவைகளைவிடுவதினால் உள்ளத்தை அல்லது அந்தரங்கத்தையும், ஜல முதலியவைகளினால் புறத்தையும் அல்லது வெளியையும் சுத்தமாய்வைத்துக் கொள்ள வேண்டும். தர்மமாய் வேலைசெய்யவேண்டும். லாபம் வந்தால் ஆனந்தம்வேண்டாம். நஷ்டம்வந்தால் துக்கமும் வேண்டாம். ஆலசியம், சோம்பேரித்தனம் இவைகளை விட்டுவிட்டு எப்பொழுதும் சுறுசுறுப்பாயும் பிரசன்னமாயும் இருக்கவேண்டும். சுகதுக்கம் இரண்டுமிருந்தால் மனதை நடுநிலையில்வைத்துகொண்டு கலக்கமன்னியில் தர்மத்தின் அனுஷ்டானத்தைச் செய்துகொண்டிருக்கவேண்டும். அதர்மத்தை விட்டு விட வேண்டும். எப்பொழுதும் சத்திய சாஸ்திரத்தைப்படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும். பெரியோர்களுடையசகவாசத்தைத்தேடு. ஓம். பரமாத்மாவின் இந்தஒருநாமத்தை அர்த்த விசாரத்துடன் தியானஞ்செய்து கடவுளுடைய ஆக்ஞைக்கு உன்னுடைய ஆத்மாவை சமர்ப்பித்து விடு. இந்த ஐந்தும் உபாசனயோகத்தின் இரண்டாவது அங்கமாகிறது. மீதியான ஆறு அங்கங்களை யோகசூத்திரத்திலிருந்தாவது அல்லது என்னுடைய வேதபாஷ்யபூமிகையிலிருந்தாவது பார்த்து தெரிந்துகொள்ளவும்.

உபாசனைசெய்ய இச்சிப்போர் பரிசுத்தமாயிருக்கும் தனி இடத்தில் அமரவேண்டும். இந்திரியங்களை அடக்கி மனதைப் பிறவிஷயங்களில் பிரவேசிக்காது தடுத்து அதை நாபிப்பிரதேசத்திலாவது ஹிருதயம் கழுத்து, கண், முதுகெலும்பு முதலிய ஏதாவது ஒரு இடத்தில் நிறுத்தி பிராணயாமம் செய்யவேண்டும். பின்னர் ஆத்மாவையும் பரமாத்மாவையும்தனியே அறிந்து சிந்தனைசெய்து தன்னை மறக்கவேண்டும். இங்ஙனம் யோகசாதன சித்தி பெறுபவனது ஆத்மாவும் அந்தக்கரணமும் சுத்தமடைந்து சத்தியத்தினால்

அலங்கரிக்கப்படுகின்றது. அவன் மோக்ஷத்தையடையும் வரையில் அவனது அறிவும் ஞானமும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேபோகிறது. அறுபது நாழிகையில் சிலநாழிகையாவது தினந்தோறும் ஒருவன் இங்ஙனம் யோகசாதனம் செய்வானேயானால் ஆத்ம ஞானத்தை அடையலாம்.

ஈசுவரனுக்குக் குணங்களைக்கற்பித்து அக்குணங்களுடன் அவரைத் தியானித்தல் சகுண உபாசனையாகும். ரூபரஸ கந்த ஸ்பர்ஸாதி குணங்களிலிருந்து அவரை விலக்கி சூக்ஷமமாய் உள்ளும் வெளியும் வியாபித்திருக்கும் பரமேசுவரனைத்தியானிப்பது நிர்குணோபாசனையாகும். இங்ஙனம் ஈசுவரனை நெருங்கும் ஒருவன் இன்பதுன்பங்களிலிருந்து விலகி, கடவுளைப்போல் பரிசுத்தமடைகிறான். எவ்வாறு நடுக்கலுற்றவனின் குளிர் தீயினிடம் அணுகின் விலகுகிறதோ அவ்வாறே ஈசுவரனையடைந்தவுடன் குளிர்போன்ற உலகாதி சுகதுக்கங்கள், ஆத்மாவை விட்டு விலகுகின்றன. ஆதலால் ஈசுவரனைப்பஜிப்பது, அவனில் தன்னை இழப்பது மனிதஜாதியின் கடமையாகும். உபாசனையால் ஒருவன் பெறும் பயன் சிறிதளவாயிருந்தாலும், சுகதுக்கங்கள் அவனைப்பற்றுவதில்லை. நிறைந்த மனச்சாந்தி ஏற்படுகிறது. இவைகள் அற்பமானவைகளா ? பரமேச்வரனைப்பக்தி பண்ணுதவன் நன்றி மறப்பவனுவான். அப்பரமாத்மா ஜீவராசிகளின் சுகத்திற்காகப் பலபொருள்களைப் படைத்திருக்கிறார். அவர் அங்ஙனம் நமது நலத்தை நாடுங்கால், அவரை மறப்பதும்; அவரில்லை என்று கருதுவதும் மூடத்தனமாகாதா ?

வினு.—பரமேச்வரனுக்கு கண் முதலிய இந்திரியங்கள் இல்லையானால் அவர் இந்திரியங்களுடைய காரியங்களை எப்படி செய்யக்கூடும் ?

अपाणिपादो जवनो ग्रहीता पश्यत्यचक्षुः स शृणोत्यकर्णः ।
स वेत्ति वेद्यं न च तस्यास्ति वेत्ता तमाहुरग्र्यं पुरुषं महान्तम् ॥ சுவேதாசுவே 3. 19.

விடை.—பரமேசுவரனுக்குக் கைகளில்லை. ஆனால்தனது சக்திரூபமான கைகளினுல் எல்லாவற்றையும் படைப்பதையும் கிரகிக்கிறதையும் நாம்பார்க்கிறோம். கால்களில்லை. ஆனால் வியாபகமாயிருக்கிறார். கண்கள் இல்லை. ஆனால் எல்லாவற்றையுங் கேட்கிறார். அந்தக்கரணமில்லை ஆனால் எல்லா ஜகத்தையும் அதிலிருப்பதையுமறிகிறார். அவருடைய எல்லையை அறிபவனில்லை, அவர்சனாதனர். எல்லோரையும்விடச்சிரேஷ்டர். எல்லாவற்றிலும்நிறைந்திருக்கிறபடியால் புருஷனென்று சொல்லப்படுகிறார். இந்திரியங்கள் அந்தக்கரணங்கள் இல்லாதிருந்தபோதிலும் தன்னுடைய எல்லாவேலைகளையும் தன் சாமர்த்தியத்தால் செய்துவிடுகிறார்.

வினு:—அவரை அநேகர் சலனமற்றவர் நிர்குணர், என்று சொல்லுகிறார்களே ! உண்மைதானு ?

न तस्य कार्यं करणं च विद्यते न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते ।
परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च । சுவேதாசுவே 6. 8.

விடை:—அவர் ஒரு விதமான யாதுதலையும் அடைகிறதில்லை. அவருக்கு வேலைகளைச் செய்வதற்கு சாதனமும் வேண்டியதில்லை. அவருக்குச் சமான மாயும் உயர்ந்ததாயும் எதுவும் இல்லை. அவர் சர்வ உத்தமமான சக்தியைக் கொண்டவர். அதாவது அவரில் அளவில்லாத ஞானம், அளவில்லாத சக்தி, அனந்தகிரியைகள், அடங்கி இருக்கின்றன. பரமேசுவரன் சலனசக்தியற்றவரா யிருந்தால் உலகத்தின் ஆக்குதல் அளித்தல் அழித்தலை, அவரால்செய்ய இயலாது. இதனால் அவர் (விபு)எங்கும் நிறைந்தவர், எல்லாவற்றையுமறிந்தவர். சேதனமாயிருக்கிறபடியால் அவரில் கிரியையுமிருக்கின்றன.

வினா:—கிரியையைச் செய்பவராயிருந்தால், அவருடைய கிரியைகள் எல்லையுடன் கூடியதா? அல்லது அனந்தமா?

விடை:—தேசகாலங்களுக்குள் எவ்வளவு கிரியை செய்ய வேண்டு மென்று விரும்புகிறாரோ அத்தேசகாலத்திற்குள் கிரியைகளைச் செய்கிறார். அதிகமாகவாவது, குறைவாகவாவது செய்கிறதில்லை. ஏனென்றால் அவர் பெரும் ஞானி.

வினா:—தன்னுடைய பலத்தையறிகிறாரா? இல்லையா?

விடை:—பரமாத்மா பூர்ணமான ஞானி. எதைத்தெரிந்து கொள்ள வேண்டுமோ அதாவது பதார்த்தங்கள் எப்படி எப்படிஇருக்கின்றதோ, அதை அப்படியப்படியே தெரிந்து கொள்வது ஞானமென்று பெயர். பரமேசுவரன் அனந்தன். அவருடைய அனந்தத்தை அறிந்து கொள்வது ஞானம். அதற்கு விரோதமாயிருப்பது அஞ்ஞானம். எல்லையில்லாமலிருப்பதை எல்லையுடன் இருப்பதாகக் கருதுவதும், எல்லையுடன் இருப்பதை அனந்தமாகக்கருதுவதும் அஞ்ஞானம்.

எதற்கு எப்படி குணகர்மஸ்வபாவமிருக்கிறதோ அப்படியே அதை உணர்ந்து கருதுவது ஞானம். அதற்கு விரோதமாயிருப்பது அஞ்ஞானம். இதனாலேயே.

ஈசுவரநிருபணம்.

क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः पुरुषविशेष ईश्वरः ॥

இச்சை, துக்கம், பலன்களைத் தரும் கர்மங்கள், இவைகளிலிருந்து விலகித் தனிமையாய் ஆனால் எல்லாவற்றிலும் வியாபித்தும் எல்லாவற்றையும் விட உயர்ந்தும் இருப்பவர் ஈசுவரன்.

ईश्वरासिद्धेः ॥ प्रमाणाभावान्न तत्सिद्धिः ॥ सम्बन्धाभावान्नानुमानम् ॥

வினா:—பிரத்தியக்ஷ நிருபணத்தால் ஈசுவரன் இருக்கிறார் என்பதைச் சித்தஞ்செய்யமுடியாது. அவர் இருக்கிறார் என்று நிரூபிப்பதற்குப்பிரத்தியக்ஷப்பிரமாணங்கள் இல்லாதபொழுது அனுமானாதி பிரமாணங்களினாலும் முடியாது. பிரத்தியக்ஷயனுமான பிரமாணங்களில்லாதபடியால் சப்தம் முதலிய பிரமாணங்களினாலும் சித்தமாகாது. இக்காரணங்களினால் ஈசுவரனை நிர் மாணிக்க முடியாது.

விடை:— இல்லை. மேற்கண்ட சூத்திரத்தின் உண்மையான பொருள் யாதெனில் கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபணஞ் செய்வதற்குப் பிரத்திய க்ஷாதி பிரமாணங்கள் இல்லை என்று சொல்லவில்லை. இப்பிரபஞ்சத்தின் உபாதானகாரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய பிரத்தியக்ஷாதிபிரமா ணங்கள் இல்லையென்றே சொல்லுகிறது.

प्रधानशक्तियोगाच्चेत्सङ्गापत्तिः॥ सत्तामात्राच्चेत्सर्वैश्वर्यम्॥ श्रुतिरपि प्रधान-कार्यत्वस्य॥

பரமாத்மா பிரபஞ்சத்தின் உபாதானகாரணம். பிரதான சக்தியாயிருந் தால் அவரும் பற்பல பதார்த்தங்களுடன் சேர்ந்து மாறுதலையடைந்திருப் பார். எப்படிப் பிரகிருதியான அல்லது அதிருட்பமான பரமஅணுக்களுடன் அதி சூட்சமமான வஸ்துக்கள் கலந்து, ஸ்தூலமும், ஸ்பர்சிக்கக்கூடுமான வஸ்து வாக உருமாற்றப்படுகிறதோ அப்படியே பரமேசுவரனும் ஸ்தூலமாக மாறி விடுவார். ஆகையினால் பரமேசுவரன் இவ்வுலகத்திற்கு உபாதானகாரண மில்லை. நிமித்தகாரணமாக இருக்கிறார். பிரகிருதி பதார்த்தமே இஜ்ஜெகத் திற்கு நிமித்தகாரணமென்று உபநிஷத்தும் விளக்குகின்றது.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाः सृजमानां स्वरूपाः॥

ஜனனமில்லாமல் சத்வ, ரஜ, தமோகுண ரூபமாயிருக்கும் பிரகிருதியே தன்னுடைய ஸ்வரூபாகாரத்தினால் பலபிரஜா ரூபங்களாகமாறுகிறது. மாறும் ஸ்வபாவத்தைப் பிரகிருதியுடைத்தாயிருக்கிறபடியால் மாறுதலையடைகிறதா யிருக்கிறது. ஆனால் எங்கும் வியாபித்திருக்கும் பரமாத்மா மாறுதலையடை யாதவராகையால் எந்த ரூபமாகவாவது உருவாகவாவது வேற்றுமையடைகிற தில்லை. அவர்மாறுதலயடையாதவர். எப்பொழுதும் ஹிருதயத்தினுள் வாசஞ் செய்கிறவர். ஆகையால் மேற்கண்ட சூத்திரத்திற்குக் கர்த்தாவாயிருக்கும் கபிலரை *நாஸ்திக்வாதி என்று சொல்லுபவனே நாஸ்திகனாவான். இப்படியே இன்னும்வேறு பலசாஸ்திரகர்த்தாக்களும் சொல்லியிருக்கிறார்கள். உதார ணமாக* மீமாம்சம் *நாஸ்திகசம்பந்தமானநூல் அல்ல. அது தர்மம் (குணம்) தர்மி (பதார்த்தம்) இவைகளைக்குறிக்கின்றது. வைசேஷிகத்தில் ஈசுவரனைக் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது. நியாயசாஸ்திரம் பரமாத்மாவை ஆத்மா வாக அழைக்கிறது. ஏனென்றால் சர்வஞ்ஞாதி தர்மயுக்தராயும்* **अतति सर्वत्र व्याप्नोतीत्यात्मा** *எல்லாவிடத்தில் வியாபகமாயும் எல்லாவற்றையு மறிந்தவ ராயும் தர்மயுக்தகுணங்களோடு கூடினவராயும் எல்லா ஜீவன்களுக்கும் ஆத் மாவாயும் இருக்கின்றாரோ அவரை மீமாம்சம் வைசேஷிகம் நியாயம் இவைகள் ஈசுவரனைக் கருதுகின்றன.*

வினா:— *ஈசுவரன் அவதாரம் எடுக்கிறாரா? இல்லையா?*

விடை:— *இல்லை. ஏனென்றால்* **अज एकपात् - सपर्यगाच्छुक्रमकायम्** *அவர் எங்கேயும் வியாபித்திருக்கிறார். அவர் பரிசுத்தர். எப்பொழுதும் பிறக்கி றதில்லை. மானிடசரீரத்தைத் தரிக்கிறதுமில்லை, என்று யஜுர்வேதம் சொல்லு கின்றது. இதிலிருந்து ஈசுவரனுக்குப் பிறப்பில்லையென்று நிரூபணமாகின்றது.*

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदाऽऽत्मानं सृजाम्यहम् ॥

வினா:—உலகத்தில் தர்மம் குன்றி அதர்மம் செழிக்குங்கால், அதர்மத்தைக் களைய நான் அவதரிக்கின்றேன் எனக் கண்ணன் கீதையில் கூறியுள்ளார். இதற்குத்தங்களது பதிலென்ன?

விடை:—வேதத்திற்கு முரண்பாடாய் இருக்கும் இதைப்பிரமாணமாய் எடுத்துக்கொள்ளக்கூடாது. கண்ணன் தர்மத்தின் உருவாய் தர்மத்தை வளர்ப்பதற்கும் அதர்மத்தைக்களைவதற்கும் விரும்பி தர்மபரிபாலனஞ் செய்ய உலகத்தில் பிறக்கவேண்டுமென்று எண்ணியிருக்கலாம். ஏனென்றால்,

परोपकाराय सतां विभूतयः ॥

பரோபகாரத்தின் பொருட்டு சத்புருஷர்கள் தேகம் மனம் பொருள் முதலியவைகளை அர்ப்பணம் செய்துவிடுகிறார்கள். எனினும் கடவுள் அல்லர்

வினா:—இங்ஙனமிருக்கக் கடவுளின் அவதாரங்களில் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்?

விடை:—அவதாரங்களின் உட்பொருள் தெரியாமையாலும் கல்வி கேள்விகள் போதியவாறு இல்லாமையாலும், அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடப்பதினாலும் இத்தகைய பொய்களை ஜனங்கள் நம்புவது ஆச்சரியமாகாது.

வினா:—கடவுள் அவதரிக்காது இருந்தால் **இராவணன், கம்சன்** போலுள்ள துஷ்டர்கள் எவ்வாறு நாசமடைவார்கள்.

விடை:—பிறந்தவன் இறப்பது நிச்சயம். பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் முடிவு. ஈசுவரன் சரீரம் தரிக்கிறார் இல்லை. படைப்பதும் படைத்ததை இரக்ஷிப்பதும், முடிவில் அழிப்பதும், ஈசுவரன்சரீரத்தைத்தரியாமலே செய்கிறார். எனவே இராவணாதி முதலிய துஷ்டர்கள் ஈசுவரனுக்கு முன் புழுக்கள் போலாவார்கள். அவர் சர்வ வியாபி எனவே இராவணன் கம்சன் முதலிய சரீரங்களிலேயும் பரிபூர்ணமாய் வியாபித்திருக்கிறார். எச்சமயத்திலும் அத்துஷ்டர்களை அவர் நாசஞ்செய்தல் கூடும். அனந்தகுண ஸ்வபாவமுள்ள பகவான் ஒரு அற்பஜீவனைக்கொல்லும் நிமித்தம் ஜனனமரண சம்பவத்திற்குள்ளாகிறார் என்பது விந்தையே. இங்ஙனம் ஈசுவரனைப்பிறப்பு இறப்புக்குள்ளாக்கும் மாக்களை மூர்க்கர்களென்றும் அறிவிலிகளென்றும் அழைப்பதைத் தவிர வேறு என்ன செய்வது. பக்தர்களின் நிமித்தம் ஈசுவரன் ஜன்மத்தை எடுக்கிறார் என்று சொல்லும் பக்ஷத்தில் அது சத்தியமாகாது. ஈசுவரசங்கல்பத்திற்கு அடங்கி நடக்கும் பக்தர்களை இரக்ஷிப்பதற்கு ஈசுவரனிடத்தில் சகல சக்தியுமிருக்கிறது. சூரியன் சந்திரன் பூமி முதலிய கிரகங்களை உலகில் படைத்துப் பிரளயம் முதலிய கர்மங்களைத் தாங்கிவரும் கடவுளுக்கு இராவணனை வதைப்பதும், கம்சனைத் தொலைப்பதும் கோவர்த்தனத்தைத் தூக்குவதும் பெரியவேலையா? இதற்குச்சரீரம் தேவையா? சிருஷ்டியினிடத்து

ஒருவன் தனது மனதைச் செலுத்தி ஊன்றிப் பார்ப்பானேயானால் அடியிற் கண்ட முடிவு ஏற்படும். ஈசுவரன் நிகரற்றவர். அவருக்கு நிகருள்ளான் எவனுமில்லை. யுக்தி அல்லது வேறு எக்காரணத் தினாலேனும் அவருடைய ஜன்மம் நிரூபணம் ஆகிறதில்லை. ஒருவர் கர்ப்பத்தில் பிரவேசித்தார் ஒருவர் கையிலகப்பட்டுக்கொண்டார் என்று எங்கும் வியாபகமாயுள்ள ஈசுவரனைச்சொல்லுவது சத்தியமாகாது. என்றும் எல்லாப்பொருளிலும் வியாபகமாயிருக்கும் ஈசுவரனைச் சரீத்துடன் வரச்செய்வதும்பின்னர் போகச்செய்வதும் பொருளில்லாப்பேச்சாகும். ஆதலால் இயேசு முதலியவர்கள் ஈசுவரனின் அவதாரமாகமாட்டார்கள். இராகத்துவேஷம், பசிதாகம், சுகதுக்கம் ஜனனமரணம் இவைகளில் உழலுபவர்களே மனிதர்கள், ஆவார்கள்.

பாபமன்னிப்பு.

வினா:—ஈசுவரன் ஒருவர் செய்யும் பாபத்தை மன்னித்து விடுகிறாரா ?

விடை:—இல்லை. ஏனெனின் பாபமன்னிப்பு நியாயநஷ்டத்தைத் தரும். மன்னிப்பு என்பதை ஒருவன் மனதில் தாங்கித் துஷ்டத்துறைகளில் இறங்கி விடுவான். பின்னர் மனிதஜாதிகளிடத்து பாபம் அதிகரிக்கும். அரசன் மன்னித்துவிடுவான் என்ற நம்பிக்கை ஒருவனிடத்திலிருக்குமேயானால், அரசனது மன்னிப்பைபெறலாமென்றெண்ணி செல்வாக்கு உள்ள ஒருவன் அஞ்சாது பாபகர்மங்களில் பிரவேசிக்கிறான். எனவே கர்மங்களுக்கேற்றவாறு பயன்களைக் கொடுப்பது என்பதே ஈசுவரனுடைய வேலையாகும்.

ஈசுவரன் தர்ம ஹானிக்குக் காரணராய் ஒரு நாளுமிருக்கமாட்டார்.

வினா:—ஜீவன் சுதந்திரமுடையதா அலலது சுதந்திரமற்றதா ?

விடை:—கர்மங்களைச்செய்வதில் அது சுதந்திரமுள்ளது. ஆனால் பலன்களை அனுபவிப்பதில் சுதந்திரமற்றது. ஒரு கர்மத்தின் பயனைப்பற்றிய விஷயத்தில் ஜீவன் ஈசுவராக்ஞைக்குட் பட்டதாயிருக்கிறது. சுதந்தரத்துடன் காரியம் செய்பவனே **கர்த்தா.**

வினா:—சுதந்திரமென்றால் என்ன ?

விடை:—எவனுடைய ஆதீனத்தில் சரீரம் பிராணன் இந்திரியங்கள் அந்தக்கரணாதிகளிருக்கிறதோ அவன் சுதந்திரன். ஸ்வதந்திரனயில்லாவிட்டால் கர்மங்களுடைய பாபபுண்ணியபலன்களை ஒரு நாளும் அனுபவிக்கமுடியாது. சேனாதிபதியின் உத்திரவு பிரகாரம் யுத்தகளத்தில் போர்வீரர்கள் கொன்றபோதிலும் அபராதிகளாக எப்படி அவர்கள் ஆகிறதில்லையோ, அப்படியே பரமேசுவரனுடைய ஆக்ஞையினால், அவருடைய ஆதீனத்தில் ஜீவனுடைய காரியம் சித்தமாகிறபடியால் ஜீவன்களின் பாபபுண்ணியத்தை, நரக ஸ்வர்க்கத்தை, சுகதுக்கத்தை, பரமேசுவரன்தான் அனுபவிக்கவேண்டும். சரமொன்றால் ஒருவன் கொல்லப்பட்டால் ஆயுதம் தரித்து பிரயோகித்தவன் பிடிக்கப்படுவான். அவனுடைய ஆயுதத்தைப் பிடிக்கமாட்டார்கள். அப்படியே பராதீன ஜீவன் தான் செய்த பாபபுண்ணிய பலன்களை யனுபவிக்கச் செய்யமுடியாது. ஆகையால் சாமர்த்தியானுகூல கர்மஞ்செய்வதில் ஜீவன்

इच्छाद्वेषप्रयत्नसुखदुःखज्ञानान्यात्मनो लिङ्गमिति ॥

प्राणापाननिमेषोन्मेषमनोगतीन्द्रियान्तरविकाराः सुखदुःखेच्छाद्वेषौ प्रयत्नाश्चात्मनो लिङ्गानि ॥

பொருள்களைப் பெறுவதில் ஆசை, வெறுப்பு, ஊக்கம் இன்பதுன்பங்களின் உணர்ச்சி, துக்கம், சந்தோஷமின்மை, ஞானம் *மூச்சை உள்ளிழுத்தல், மூச்சுவிடுதல், கண்களைக்கொட்டுதல், கண்களைத்திறத்தல் நிச்சயமான ஸ்மரணையைக் கொண்டிருத்தல், விவேகம், ஞாபகம், வியக்தித்துவம், பசிதாகம், சுகதுக்கம் இவைகளைப்போன்ற அகமாறுதல்களையும், வேற்றுமைகளையும், இந்திரியங்களைச் சரிப்படுத்தல். இவைகளே ஜீவாத்மாவைப்பரமாத்மாவிலிருந்து மாறுபடுத்துகிறது. இக்குணங்களினுலேயே ஜீவாத்மாவும் வெளியாகிறது. அது ஸ்தூலபதார்த்தமாகாது. எதுவரையில் ஆத்மா தேகத்திலிருக்கின்றதோ அதுவரையில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. சரீரத்தை விட்டகன்றவுடன் அவைபிரகாசமாகிறதில்லை. ஒரு பதார்த்தமிருக்கும் பொழுதே அதனுடைய குணங்கள் பிரகாசமடைந்து, பதார்த்தங்களில்லாதபொழுது பிரகாசிக்கிறதில்லை. ஆனுல் அப்பதார்த்தங்களையே அது சேர்ந்ததாயிருக்கின்றன. உதாரணமாக சூர்யனுடையவும் விளக்குனுடையவும் குணம் வெளிச்சம். சூர்யனும் விளக்கு மிருந்தால் பிரகாசமிருக்கின்றன. அவைகளில்லாவிட்டால் இல்லை. அவ்வாறே ஜீவாத்மாவும், பரமாத்மாவும் முறையே குணங்களால் அறியப்படுகின்றன.

வினு:—பரமேசுவரன் முக்காலஞானி எனவே எதிர் கால, நிகழ்ச்சியை அறியக்கூடியவர். அவர் எப்படி நிச்சயம் செய்கிருரோ, அப்படியே ஜீவன் நடக்கும். இதனுல் ஜீவனுக்குச் சுதந்திரமில்லை. ஆகையினுல் அவனுக்குத் தண்டனையளிக்க நியாயமில்லை. ஏனென்ருல் ஈசுவரன் முதலில் எப்படி நிச்சயஞ் செய்கிருனே அப்படியே தான் ஜீவன் நடிக்கின்றன.

விடை:—ஈசுவரனை முக்கால ஞானி எனல் மூடத்தனமாகும். இருப்பதின் அழிவே இறந்தகாலமாகும். இனி நிகழுவதே வருங்காலமாகும். கடவுளுக்குக் கடந்தவிஷயம் என்றும் தற்காலம் அவரிடம் இல்லாது இனி வரப்போகும் ஞானம் என்பதும் கிடையாது. கடவுளின் அறிவு அகண்டமானது. அழிவற்றது என்றும், இருப்பது கடந்தது என்பதும், இனிநிகழப்போவதென்பதும் ஆத்மசம்பந்தத்துடன் நிற்பதே தவிற கடவுளைபற்றினதல்ல. அவர் எப்பொழுதும் நிகழ்கால அறிவில் வாழ்பவரே. ஆத்மசம்பந்தமாய்ப் பேசுங்கால், கடவுளை முக்கால ஞானி என்று சொல்லலாம். ஆனுல் ஆத்மசம்பந்தத்திலிருந்து விலக்கி அவரைச் சுயமாய் எடுத்துக்கொள்ளுங்கால் இறந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலம் என்பது பொருளற்ற சொல்லாகும். ஏனெனின், கடவுள் கால வேற்றுமையற்றவர். சுதந்திரமாய் ஜீவன் எப்படி செய்கிறதோ அதை ஈசுவரன் தன்னுடைய சர்வஞ்ஞ சக்தியால் அறிகிருர். ஈச்வரன் அறிகிறபடி ஜீவன்

* இவ்வாறும் வைசேஷிகத்திற்கும் நியாயத்திற்கும் சமானமானவை.

காரியத்தைச் செய்கிறது. ஆனால் இறந்தகால, நிகழ்கால, எதிர்கால, ஞானத்தின்பலன்களைக்கொடுப்பதில் ஈசுவரன் சுதந்திரர். நிகழ்காலத்தில் கொஞ்ச ஞானத்தை உடைத்தாயிருப்பதில், காரியஞ்செய்வதிலும் ஜீவன் ஸ்வதந்திரமாயுள்ளது. ஜீவன்களின் கர்மங்களில் ஈச்வரனின் ஞானம் எப்படி அநாதியாயிருக்கின்றதோ, அப்படியே தண்டனைசெய்வதிலும் அநாதி. அப்படியே கர்மஞ்செய்வதிலும். இரண்டுவிதமான ஞானமும் அவருக்குச்சத்தியம். கர்மத்தின் அல்லது காரியத்தின் ஞானம் சத்தியமாயிருந்துகொண்டு தண்டனை அல்லது நியாய விசாரணையின் ஞானம் பொய்யாயிருக்கக்கூடுமா? இதனால் யாதொரு தோஷமும் ஏற்படுகிறதில்லை.

வினா:—அநேக சரீரங்களில் அல்லது தேகங்களில் ஒரே ஆத்மா பரவிக்கொண்டிருக்கிறதா? அல்லது தனித்தனி சரீரத்திற்குப் தனித்தனி ஆத்மாவா?

விடை:—தனித்தனியாய் இருக்கின்றன. ஒரே ஆத்மாபரவிக்கொண்டிருக்குமேயானால் ஜாக்கிரதாவஸ்தை (விழித்திருக்கும்போதுள்ள ஸ்திதி) ஸ்வப்னம் ஆழ்ந்தநித்திரை, மரணம், ஜன்மம், சம்யோகம், வியோகம் வருதல் இவைகள் போதல் ஒருநாளுமுடியாது. ஜீவனுடைய ஸ்வரூபமானது அற்ப ஞானமுடையது, எல்லையுள்ளது, சூட்சமமாயுள்ளது. பரமேசுவரனோ அதி சூட்மத்திற்கும் சூட்சமமாயுள்ளவர், அனந்தர், சர்வஞ்ஞர், சர்வவியாபகஸ்வரூபர் இதனால் ஜீவனுக்கும் பரமேச்வரனுக்கு முள்ள சம்பந்தம் வியாப்பியத்துக்கும் (பரவப்பட்டது) வியாபகத்துக்குமுள்ள சம்பந்தந்தான்.

வினா:—ஒரு இடத்தில் ஒருவஸ்து இருந்தால் அதே இடத்தில் அதேசமயத்தில் மற்றொரு வஸ்து இருக்கமுடியாது. இதனால் ஜீவனும், ஈசுவரனும் சமீபசம்யோக சம்பந்தத்திலிருக்கக்கூடும். வியாப்பிய வியாபக சம்பந்தத்திலிருக்க இயலாது.

விடை:— ஒரே விதமான ஆகிருதிகளைக்கொண்ட பதார்த்தங்களுக்கு நீங்கள் சொன்ன நியாயம் சரியானது. சமானமில்லாத ஆகிருதி வஸ்துக்களுக்குச் சரியாகாது. உதாரணமாக இரும்பு ஸ்தூலமானபதார்த்தம், அக்கினி மின்சாரம் சூட்சமமானது. காந்தமானது இரும்பு முழுவதும் பரவி அதே இடத்தில் அதுவுமிருக்கின்றது. பரமேச்வரனைக்காட்டிலும் ஜீவன் ஸ்தூலமானது. பரமேச்வரன் ஜீவனைவிடச் சூட்சமமாயிருக்கிறபடியால் பரமேச்வரன் வியாபகராயும், ஜீவன்வியாப்பியமாயுமிருக்கின்றது. எப்படி இந்த வியாப்பிய வியாபகசம்பந்தம் ஜீவனுக்கும் ஈசுவரனுக்குமிருக்கின்றதோ அப்படியே யஜமானன் வேலைக்காரன், அரசன் குடிகள், தகப்பன், மகன், முதலிய சம்பந்தங்கள்.

வேதாந்தம்,

வினா.—ஜீவாத்மாவும் ஈசுவரனும் தனித்தனியா இருந்தால் அடியிற்கண்ட வேதவாக்கியங்களை எப்படிக் கொள்வது? நான் ஈசுவரன்! நீ கடவுள் இஜ்ஜீவாத்மா கடவுள்,

प्रज्ञानं ब्रह्म ॥ अहं ब्रह्मास्मि ॥ तत्त्वमसि ॥ अयमात्मा ब्रह्म ॥

விடை:—இவை வேதவாக்கியமல்ல. பிராமண கிரந்தவசனங்களேயாகும். சத்திய சாஸ்திரங்கள் இவைகளை மகாவாக்கியங்களாக எடுத்துக்கொள்ளவில்லை. அகம் நான் பிரமம் பிரம்மத்தில் அல்லது ஈச்வரினிலிருக்கிறேன். இது தாத்ஸ்யோபாதி எனப்படும். ஒரு பதார்த்தத்தினிடத்துள் அடங்கியிருக்கும் ஒருபொருளைக்குறிக்க அப்பதார்த்தத்தையே உபயோகிப்பது. உதாரணமாக ஊர்க்காவலின்கூவல். காவலுக்குக்கூக்குரலிடும் சாமர்த்திய மில்லை. ஆனால் காவலிலிருக்கும் மனிதர்கள்தான் கூவுகிறார்கள். எனவேஊர்க்காவலின் கூக்குரல் என்பதற்கு ஊர்க்காவல் செய்யும் காவலர்களின் கூக்குரல் என்பது பொருள். அங்ஙனமே மேற்சொல்லிய மேற்கோளின் பொருளை இங்குநாமறிய வேண்டும், சிலர் பிரமம்! ஈசுவரன் எல்லாபதார்த்தத்திலுமிருக்கிறதென்கிறார்கள். அப்படியிருக்க ஜீவாத்மாமாத்திரம் ஈசுவரனிடத்தில் இருப்பது என்பதில் குறிக்கப்படும்விசேஷம் என்ன? எல்லாவஸ்துக்களும் ஈசுவரனிடத்திலிருக்கிறதென்று சொன்னபோதிலும், ஜீவனைப்போல் ஈசுவரனுக்கு அருகிலுள்ள வஸ்துவேறெதுவுமில்லை. ஒரே விதமானகுணத்தையுடையபடியினால், ஜீவன்கள்மாத்திரம் ஈசுவரனை அறிய முடியும். மோக்ஷ நிலையில் ஈசுவரனுடைய முன்னிலையிலும் இருக்கமுடியும். எனவே ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் உள்ள சம்பந்தம் யாதெனில், தனக்கும், தன்னுள் அடங்கியிருக்கும் வஸ்துவுக்கும் உள்ள சம்பந்தமே. ஒன்றிற்கு மற்றொன்று தோழன் போன்ற சம்பந்தமுடையது. ஜீவனும் கடவுளும் ஒன்றாகாது மேலும் மேலும்பெருகும் அன்பு நிகழ்ச்சியினால்ஒருவன் அவனும் நானும் ஒன்றே, என்பான். அதேபோல் ஜீவாத்மா ஈசுவரனிடத்தில் கொண்டுள்ள, அன்பு வெள்ளத்தின்பயனால்தன்னை மறந்து தன்னைஅவனில் இழந்து சமாதி நிலையடையுங்கால் நானும் ஈசுவரனும் ஒன்று என்கிறான்.

ஈசுவரனுக்குண்டான குணங்களைப்பெற்ற ஆத்மாவொன்றே கடவுள் வயப்படுவதினால் நானும் கடவுளும் ஒன்று எனச் சொல்லலாம்.

வினா.—ஏஜீவனே (தத்) பிரமமாவாக (த்வம்) நீ (அஸி) ஆகிறாய். அதாவது நீயே பிரம்மா இதற்குப்பொருளென்ன ?

விடை.— "தத்" என்கிற பதத்திற்கு என்ன பொருள் கொள்ளுகிறாய்?

வினா:—பிரம்மம்

விடை:—(தத்) பிரம்மத்தைக்குறிக்கிறது என்பதை எவ்வாறு கொண்டாய் ?

सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं ब्रह्म ॥

வினா:—அதனது பூர்வ வாக்கியத்திலிருந்து.

விடை:— நீ சாந்தோக்ய உபநிஷத்தைப்பார்த்ததில்லை எனத் தெரிகிறது. பார்த்திருந்தால் பிரம்ம சப்தம் அதிலில்லை என்று அறிந்திருப்பாய். இவ்வாறு தவறான பொருளையும் கூறமாட்டாய். சாந்தோக்ய உபநிஷத்தில்.

सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयम् ॥

வினா:— தத் சப்தத்தின் பொருளென்ன?

स य एषोऽणिमा ॥ एतदात्म्यमिदग्ं सर्वं तत्सत्यग्ं स आत्मा तत्त्वमसि श्वेतकेतो इति ॥ சாந்தோ 6. 7 8. 6. 7.

விடை:—அப்பரமாத்மாவே அறிய யோக்கியமுள்ளவர். அவர் அதிஸூக்ஷ்மமானவர். • சகல ஜகத்திற்கும் ஜீவனுக்கும் ஆத்மா அவரே. சத்தியஸ்வரூபர். தனக்குத்தானே ஆத்மா. ஹே சுவேதகேதோ குழந்தாய்

तदात्मकस्तदन्तर्यामी त्वमसि ॥.

அந்தர்யாமியாயிருக்கும் அப்பரமாத்மா உன்னிலும் விளங்குகிறார். இதுவே உபநிஷத்துகளுக்கு விரோதமன்னியிலிருக்கிறது. பிரகதாரண்யக உபநிஷத்தில் யாக்ஞவல்கியர் தன் பத்தினிக்குச் சொல்லுவதாவது.

य आत्मनि तिष्ठन्नात्मनोन्तरोयमात्मा न वेद यस्यात्मा शरीरम् ।
आत्मनोन्तरोयमयति स त आत्मान्तर्याम्यमृतः ॥

ஓமைத்திரேயி. அழிவில்லாதவரும் சர்வவல்லமையுள்ளவருமான ஈசுவரன் உன்னுடைய ஆத்மாவில் வசிக்கிறார். அவரை, அறிவற்ற ஜீவாத்மா தெரிந்து கொள்ளுகிறதில்லை. எப்படி ஜீவாத்மா சரீரத்தில் வசிக்கிறதோ அப்படியே ஜீவாத்மாவினிடத்துப் பரமேசுவரன் வசிக்கிறார். அவர் ஜீவாத்மாவிலிருந்தாலும், ஜீவாத்மாவை விட்டு விலகியிருந்து கொண்டும், அதனுடைய பாபபுண்ணியங்களுக்குச்சாக்ஷியாயிருந்து கொண்டும், கர்மத்திற்குத்தக்கவாறு பலன்களை அளித்துக்கொண்டும் விளங்குகிறார். அப்பரமாத்மாவை அறிவாய். மேற்சொல்லிய செய்யுள் வேறுபொருளைத்தான் கொடுக்குமோ?

अयमात्मा ब्रह्म

அதாவது சமாதிநிலையில் யோகிகளுக்குப் பரமேசுவரன் பிரத்தியட்சமாயிருக்கும்போது அவன் என்ன சொல்லுகிறான் என்றால் என்னிடத்தில் வியாபகமாயுள்ள அந்தபிரம்மம் எவ்விடத்திலும் வியாபகமாயிருக்கிறது. இதனாலேயேஜீவனைப் பிரம்மம் என்று சொல்லும் வேதாந்திகள் வேதாந்தசாஸ்திரத்தையறிகிறார்கள் இல்லை.

अनेन जीवेनात्मनानुप्रविश्य नामरूपे व्याकरवाणीति ॥ சாந்தோ 6. 3. 2.

तत्सृष्ट्वा तदेवानुप्राविशत् ॥ தைத்திரே பிரம்மா 2. 6.

வினா:— சாந்தோக்ய உபநிஷத்தில் கடவுள் சொல்லுகிறது என்னவென்றால்:—பிரபஞ்சத்தையும் அதிலிருக்கும் சரீரங்களையும்சிருஷ்டிசெய்து சரீரத்தில் ஆத்மாவாக நுழைந்து, பற்பல ரூபத்தாலும்பெயர்களாலும் தோன்றுகின்றேன்? மறுபடியும் தைத்திரேய உபநிஷத்தில் சொல்லுவதாவது, ஜகத்தையும் அதிலிருக்கும் சரீரங்களையும் சிருஷ்டி செய்து கடவுளே அதனுள்பிரவேசிக்கிறார். இவ்வாக்கியங்களுக்கு நீ வேறு அர்த்தம் எப்படிக்கூறுவாய்.

விடை:—பதம், பதப்பொருள், கருத்துரை இவைகளையறிந்திருந்தால் இப்படி அனர்த்தம் எப்பொழுதும் செய்யமாட்டாய். பிரவேசம், அனுப்பிரவேசம் என்று இரண்டு பாவங்களுண்டு. அனுப்பிரவேசமென்றால் ஒன்றன்பின் பிரவேசிப்பது. ஜீவன் சரீரத்தில் நுழைந்தபிறகு ஈசுவரன் அவனில் பிரவேசிக்கிறபடியால் அனுப்பிரவேசி போல் ஆகிறான். வேதத்தின் வழியாய் எல்லா நாமரூப முதலிய வித்தைகளை வெளிப்படுத்தி சரீரத்தில் ஜீவனைப் பிரவேசிக்கச் செய்து தான் ஜீவனில் பிரவேசிக்கிறார். (அனு) என்னும் பதத்திற்கு அர்த்தம் தெரிந்தால் நீ இப்படிப்பொருள்வழங்கமாட்டாய்.

வினா:—காசியில் கோடை காலத்தில் பார்த்த தேவதத்தனை மழைக் காலத்தில் மதுரையில்பார்த்தேன் என்று ஒருவன் சொல்லுகிறான். தேசகால சீதோஷ்ணத்தை விட்டு சரீரத்தை மாத்திரம் கணக்கில் எடுத்தால் தேவதத்தனது வாழ்க்கை நிச்சயமாகிறது. பாகத்தியாக *லட்சண நியாயத்தின்பிரகாரம் பரோட்சம் (பார்க்காமலிருப்பது) தேசம் காலம், மாயை, உபாதி இவைகளை ஈசுவரவிஷயத்திலும், தேசகாலம், அவித்தை அற்பஞானம் முதலிய உபாதிகளை ஜீவன் விஷயத்திலும் விட்டு விட்டு இரண்டிற்கும் பொதுவாயிருக்கும் சேதன சுவபாவத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டால் இரண்டிலும் பிரம்மம் இருப்பது நிரூபணமாகின்றது. ஈசுவரனுடைய சர்வஞ்ஞாதி குணங்களையும் ஆத்மாவினுடைய அற்பஞாதி குணங்களையும் விட்டு விட்டு இரண்டிற்கும் பொதுவாயிருக்கும் சேதன குணங்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளுங்கால், ஈசுவரனும் ஆத்மாவும் ஒன்றே என்பது புலனாகிறது. இவ்வாட்சேபனைக்குப்பதில் என்ன?

விடை:—ஜீவனையும், ஈச்வரனையும் எங்ஙனம் கருதுகிறாய்? நித்தியமாகவா அல்லது அநித்தியமாகவா?

வினா:—இரண்டும் உபாதியிலிருந்து உற்பத்தியானபடியால் அநித்திய மென்று கருதுகிறேன்.

விடை:—உபாதி நித்தியமா? அல்லது அநித்தியமா?

வினா:—

जीवेशौ च विशुद्धाचिद्विभेदस्तु तयोर्द्वयोः ।
अविद्या तच्चितोर्योगः षडस्माकमनादयः ॥
कार्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः ।
कार्यकारणतां हित्वा पूर्णबोधोऽवशिष्यते ॥

எங்களுடைய மதம் பின்வருமாறு. வேதாந்திகளாகிற நாங்கள் அடியிற்கண்ட ஆறு காரிகை அல்லது பதார்த்தங்களை அநாதியாக கருதுகிறோம். (1) ஜீவன் (2) (ஈசுவரன் (சேஷ்டையுள்ளவன்) (3) பிரம்மம் (சேஷ்டையில்லாதது) (4) ஈசுவரனுக்கும் ஜீவனுக்குமுள்ள விசேஷபேதம் (5) அவித்தை அஞ்

* பொருள்களின் பொதுவான குணங்களை அங்கீகரித்து வேற்றுமையான குணங்களைத்தள்ளுவது.

ஞானம். (6) சேதனபதார்த்தத்தோடு அவித்தையின் ஐக்கியம். இந்த ஆறில் பிர்ம்மமே ஆதியும் அந்தமும் இல்லாதது. மீதி ஐந்தும் ஆதியில்லாதிருப்பினும் *அபாவத்தைப்போல தற்போதிருந்தாலும் எதிர் காலத்திலில்லை. எதுவரையில் அஞ்ஞானமிருக்கின்றதோ அதுவரையில் இந்த ஐந்தும் இருக்கின்றது. இந்த ஐந்தினுடைய ஆரம்பம் தெரிகிறதில்லை. அதனால் அநாதி என்று பெயர். ஞானமடைந்தபிறகு நஷ்டத்தையடைகிறபடியினால், இவைகள் நாசத்தையடையது.

விடை.—உன்னுடைய இரண்டு சுலோகமும் சரியானவையல்ல. ஏனென்றால் அவித்தையினுடைய யோகமன்னியில் ஜீவனும் மாயையுடைய யோகமன்னியில ஈசுவரனும் உன்னுடையமதத்தில் இருக்கிறதில்லை.

तच्चितोर्योगः

ஆறாவது பதார்த்தம் என்று ஒன்றை எண்ணினாயே அது இல்லை. ஏனென்றால் அவித்தை மாயை இவ்விரண்டும் ஜீவன் ஈசுவரனில் முறையே கலந்துவிடுகிறது. பிர்மம் அப்படியே மாயை வித்தையினுடைய யோகமன்னியில் ஈசுவரன் உண்டாகிறதில்லை. அப்பொழுது ஈசுவரனை அவித்தை பிர்மம், இவைகளிலிருந்து தனிமையாய் எண்ணுவது வியர்த்தமாகிறது. அதனுடைய பாகமும் தொகுதியுமாக ஆகின்றது. இந்தகாரணத்தினாலேயே ஈச்வரன் ஜீவனை பிர்மத்திலிருந்து அநாதியாயுள்ள பதார்த்தமென்று கருதுவது பிரயோசனமற்றது. இதனால் இரண்டுபதார்த்தங்களே, பிரம்மம் அவித்தை, உன்னுடைய மதத்தால் சித்தமாகின்றது. ஆறாவது பதார்த்தமில்லை. முதலில் கார்யோபாதி காரணோபாதியிலிருந்து ஜீவனையும், ஈசுவரனையும் எப்பொழுது சித்தஞ்செய்ய முடியுமென்றால்:—அனந்த நித்திய சுத்தபுத்த முக்த ஸ்வபாவ சர்வவியாபக பிர்ம்மத்தில், அவித்தை எப்பொழுதுசித்தமாகின்றதோ அப்பொழுதேமுடியும். ஒரேஇடத்தில் (ஸ்வ ஆசிரயம், ஸ்வவிஷயம்) அஞ்ஞானம் அநாதி எல்லாவற்றையும்பிர்ம்மத்தில் இருக்கென்று கருதினால் அப்பொழுதுபிர்ம்மம் பரிசுத்தமானதாகமாட்டாது. ஒரு இடத்தில் பிரம்மத்திற்கு அஞ்ஞானம் இருக்கிறதென்று ஒப்புக்கொண்டால் அது இங்குமங்கும் அலைகிறபடியால் இங்குமங்கும் போய்க்கொண்டே இருக்கும். எங்கெங்குபோகின்றதோ அங்கெங்கு பிரம்மம் அஞ்ஞானியாயும் எங்கெந்ததேசத்தை விட்டுப்போகிறதோ அந்தந்த இடத்தில் ஞானியாயும் மாறிக்கொண்டேயிருக்கும். இப்படி இருக்கிறதினால் ஒரு பாகத்தையாவது நித்திய பரிசுத்த அநாதி ஞானயுக்தமென்று சொல்லமுடியாது. அஞ்ஞானத்தின் எல்லைக்குள்ளிருக்கும் பிர்ம்மத்தின் பாகம் அஞ்ஞானத்தையே உணர்ந்து கொண்டிருக்கும். உள்ளும் புறமும் இருக்கப்பட்ட பிரம்மா அஞ்ஞானத்துடன் " கூடியிருப்பது, கூடாதிருப்பது" என இருவகைப்படும். இவ்விதம் பிரிக்கப்படுவதால் அவருக்கு ஹானி ஒன்றும் இல்லை, என்று சொல்லுவீர்களேயானால் அவர் பிரிக்கப்படாமல் இருக்கிறார். அவர் அஞ்ஞானத்துடன் கூடினவரல்லர். ஞானம் அஞ்ஞானம் என்பது கற்பிக்கப்படும் குணமே

* மூன்றாவது அத்தியாயம் பார்க்கவும்

படியே ஜலமும் அக்கினியும் சடபதார்த்தமாயும் பார்க்கத்தகுந்ததாயுமிருக்கின்றன. இப்படி இருந்தும் இவைகளெல்லாம் ஒரு பதார்த்தமாகாது. இவைகளிலிருக்கும் வேற்றுமைகள் பிரித்துவிடுகின்றன. கடினத்வம் ரூபம் முதலியவைகள் பூமியிலும், திரவத்வம் நீர்த்தன்மை ரசத்தன்மை ஜலத்திலும், உஷ்ணம் வெளிச்சம் நெருப்பிலும், முறையே இருக்கின்றபடியால் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் பிரித்து எல்லாவற்றையும் ஒன்றாயிருப்பதைத் தடுத்துவிடுகின்றன. மற்றொரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். மனிதர்களும், எறும்புகளும். இவ்விரண்டும் கண்களால் பார்க்கின்றன, வாயால் உண்ணுகின்றன. கால்களினால் நடக்கின்றன. அப்படியிருந்தும் அவைகள் ஒன்றாகாது. அவைகளின் அவயவங்களில் மாறுபாடுகள் பல இருக்கின்றன. மனிதனுக்கு இரண்டு கால்களும் எறும்புக்குப் பல கால்களும் இருக்கின்றன. இவ்விதபேதங்களிருப்பதால் ஒன்றாகமாட்டாது. பரமேச்வரனின் அனந்த ஞானம் அனந்தபலம், காரியம், பிழையன்னியிலிருப்பது, வியாபகம், ஜீவனிலிருந்து வேறாயிருப்பது, அப்படியே ஜீவனின் குணங்களாகிற அற்பஞானம் அற்பபலம், அற்பசுவரூபம் பிழைசெய்யும் சுபாவம் எல்லையுடன் கூடினதாயுள்ள குணங்கள் இவைகளினால் பிரம்மத்திலிருந்து வேறுபாடாயிருக்கிறது. அப்படி மாறுபாடாயிருக்கிற படியினால் பரமேச்வரனும் ஜீவனும் ஒன்றாகமாட்டாது. ஏனின் ஆத்மாவைவிட கடவுள் மிகவும் நுட்பமானவர்.

अथोदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति द्वितीयाद्वैभयं भवति ॥

எவன் ஜீவனுக்கும் பிரம்மாவிற்கும் சிறிது பேதங்களை ஏற்படுத்துகிறானோ அவன் பயத்தை அடைகிறான், ஏனென்றால் பயம் மற்றொருவனாலேயே உண்டாகிறது, (இதனால் பிரம்மத்திற்கும் ஜீவனுக்கும் ஐக்கியமுண்டென்பது வெளியாகவில்லையா ?)

விடை:—இதனுடைய அர்த்தம் இதுவாகாது. எந்த ஜீவன்பரமேச்வரனுடைய குணகர்ம சுவபாவத்திற்கு விரோதமாய்ப்போகிறதோ அல்லது எச்ஜீவன் மற்றொரு மனிதனிடம் சத்துருத்தனத்தை உடைத்தாயிருக்கிறதோ அதுவே பயத்தை அடைகிறது என்பது இதன் பொருளாகும். "ஈச்வரனுக்கும் எனக்கும் கொஞ்சங்கூட சம்பந்த மில்லை" மற்றொருமனிதனிடத்தில் நான் "ஏன் உன்னை இலக்ஷியம் செய்யவேண்டும் ? எனக்கு விரோதமாய் நீ என்ன செய்வாய்? மற்றவர்கள் என்ன செய்யக்கூடும்" என்று சொல்பவனே கடவுளிடத்தில் பயப்படுவன். எல்லாவிதமான விஷயங்களிலும் பரஸ்பரம் ஒற்றுமையுடன் இருப்பவைகளுக்கு உலகத்தில் ஒன்றானதேஎன்றுசொல்லப்படுகிறது. தேவதத்தன், யக்ஞ தத்தன் விஷ்ணுதத்தன் எல்லாரும் ஒன்றுதான் என்று சொன்னால் அவர்களெல்லாரும் ஒரே மனதை உடையவர்களேயாம். ஒற்றுமையினால் சுகமும் ஒற்றுமையின்மையால் துக்கமும் உண்டாகின்றது.

வினா:—பிரம்மமும் ஜீவனும் பரஸ்பரம் தனிமையாக எப்பொழுதும் இருக்கின்றதா ? அல்லது எச்சமயத்திலாவது இரண்டும் ஒன்றாகின்றதா?

விடை:—இதற்கு ஒருவாறு பதில் மொழிந்துள்ளோம். ஆனால் சாதர்ம்மிய அன்வயபாவத்தில் இரண்டும் ஒன்றே (நெருங்கிய சம்பந்தம்). உதாரணமாக ஜட பதார்த்தமும், ஆகாசமும், உயிர் இல்லாத்தன்மையிலும், சாச்வத சம்பந்தத்திலும், ஒன்றாக இருக்கின்றது. ஆனால் அடியிற்கண்ட வைதர்ம்மியங்களுள் அவைகள் தனிமையாக இருக்கின்றன. ஆகாசத்தில் எங்கும்வியாபிக்கும் தன்மை, சூட்சத்தன்மை ரூபமில்லாமை அனந்தம் முதலிய குணங்களிருக்கின்றன. ஆனால் ஜட அல்லது கனபதார்த்தமொன்றுக்கு எல்லையும் பரிமாணமுமுள்ள தன்மை இருக்கின்றன. குணங்களினால் ஆகாசத்திலிருந்து தனிமையாக இருக்கின்றது. ஆனால் ஜட பதார்த்தமானது ஆகாசத்திலிருந்து பிரிந்து தனிமையாக இருக்கமுடியாது. ஏனெனில் அஜ்ஜடபதார்த்தம் இருக்க ஆகாசம் வேண்டியிருக்கிறது. ஆனால் வைதர்மிய குணங்களினால் அது வேறாகவும் இது வேறாகவும் தனிமையாகவுமிருக்கின்றன. இப்படியே ஜீவனும் பூமி முதலிய திரவியங்களும், பிரமம் சர்வவியாபியானபடியால், அதிலிருந்து தனிமையாக இருக்கமுடியாது. ஆனால் அவரோடு ஒன்றாகவும் இருக்க இயலாது. ஏனென்றால் ஸ்வரூபத்தில் அவரைக்காட்டிலும் இவைகள் வேறாக இருக்கின்றது. வீடுகட்டுகிறதற்கு முன்னால் மண் ஜலம் இரும்பு இன்னும் முதலிய கட்டட சாமான்கள் தனித்தனியாக ஆகாசத்திலேயே இருக்கின்றன. வீடுகட்டிய பிறகும் அவைகள் ஆகாசத்திலேயே இருக்கின்றன. வீடுஇடிந்துசாமான்கள் எங்கும் பரவப்பட்டிருந்தபோதிலும் அச்சாமான்கள் ஆகாசத்திலேயே இருக்கின்றன. ஆதாவது சுருங்கச் சொல்லின வீட்டைக்கட்டும் சாமான்கள்ஆகாசத்திலிருந்துதனிமையாய்நிற்க முடியாது. வைதர்ம்மிய குணங்களினால் ஒன்றாக இருக்கவும் முடியாது. இது முக்கால உண்மை. இப்படியே ஜீவனும் இன்னும் உலகத்திலிருக்கும் பதார்த்தங்களும் பரமேச்வரனால் வியாபிக்கப்பட்டிருக்கிறபடியால் தனிமையாய் ஒரு நாளும் இருந்ததுமில்லை, இருக்கிறதுமில்லை. இருக்கப்போகிறது மில்லை. அவருடன் ஒன்றாக இருந்தது இல்லை. இருக்கிறதுமில்லை இருக்கப் போகிறதுமில்லை. ஒற்றைக்கண்ணன் தான்போகும் தெருவின் ஒரு பாகத்தையே எப்படிகவனிக்கிறானோ அப்படியே தற்கால வேதாந்திகள் பரமேசுவரனுக்கும் ஜீவனுக்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிக்கிறார்களேயொழிய வேற்றுமையை கவனிக்கிறார்களில்லை. இவ்வுலகில் சகுணம் அன்வயம் (நெருங்கின சம்பந்தம்) விபரீதம், சாதர்மியம் (பொது குணம்) வைதர்ம்மியம் (வித்தியாசம்) இவைகளிலிருந்து நீங்கின பதார்த்தமொன்று இல்லை.

வினா:—பரமேசுவரன் சகுணத்தை அடைந்தவரா? அல்லது நிர்குணத்தை அடைந்தவரா?

விடை:—இரண்டு முள்ளவர்.

வினா:—இரண்டு கத்திகள் ஒரே உறையில் எப்படி இருக்கும். ஒரேவஸ்து சகுணமாயும் நிர்குணமாயும் எப்படி இருக்கமுடியும்?

यद्गुणैस्सह वर्त्तमान तत्सगुणम्

குணத்தோடுகூடியிருப்பதற்குச் சகுணமென்றும், குணரஹிதமாயிருப்ப தற்கு நிர்குணமென்றும் பெயர். ஸ்வபாவ குணங்களோடு சேர்ந்து விரோத குணங்களிலிருந்து ரஹிதமாயிருக்கிறபடியால்பதார்த்தங்களுக்குச்சகுணமென் றும் நிர்குணமென்றும் பெயர். ஒரு பதார்த்தத்தில் கேவலம் சகுணமாத்தி ரம் இருக்கின்றதில்லை. நிர்குணமாத்திரமும் இருக்கின்றதில்லை. ஒன்றிலே யே சகுணமும் நிர்குணமும் எப்பொழுதும் நிறைந்திருக்கின்றன. இப்படியே பரமேச்வரனுக்கு அனந்தஞானபலாதிகுணங்கள் இருப்பதால் சகுணமென் றும், ஜடஸ்வபாவமாகிற ரூபாதிகுணங்களிலிருந்தும் த்வேஷாதி குணங்களி லிருந்து தனிமையாய் அல்லது ரஹிதமாயிருக்கிறபடியால் நிர்குணமென்றும் சொல்லப்படுகிறது.

வினா:—உலகத்தில் உருவமுள்ளதைச் சகுணமென்றும், அற்றதை நிர்குண மென்றும் சொல்லுகிறார்கள். அதாவது பரமேச்வரன் ஜன்மம் எடுக்காதிருந் தால் நிர்குணமென்றும்அவதாரமெடுத்தால் சகுணமென்றும் சொல்லுகிறார் களா ?

விடை:—இந்தக்கற்பனை அஞ்ஞானிகளுடையதும் அவித்வான்களு டையதுமே. படிப்பில்லாதவன் விலங்குகளைப்போல் சத்தமிடுகிறான் ; சன்னி பாத ஜ்வரத்திலிருப்பவன் பிதற்றுவதுபோல் கத்துகிறான்.

வினா:—ராகத்தோடு கூடியவரா அல்லது விரக்தரா ?

விடை:—இரண்டுமில்லை. தனக்கு வெளியிலிருக்கும் பதார்த்தத் தில் ஆசைவைக்கிறான். அவ்வாசைக்கே ராகம் என்று பெயர். பரமேச்வர னுக்கு அவரைவிட தனிமையாகவோ அல்லது அவருக்கு வெளியிலோ வேறு பதார்த்தமில்லை. இதனால் அவரில் 'ராக' குணமிருப்பது முடியாதது. அடை யக் கூடியதை விட்டுவிடுகிறதே விரக்தி எனப்படும். பரமேச்வரன் எங்கும் பரவியிருக்கிறபடியால் அவர் எதையும் விட்டுவிட முடியாது. அவர் விரக்தரு மில்லை.

வினா:—ஈச்வரனில் இச்சையுண்டா இல்லையா ?

விடை:— இல்லை. ஈச்வரன் மனிதரைப்போன்றவரல்லர். தனக்கு இன் பத்தைத்தரும் ஒரு பொருளின்மேல் ஏற்படும் பற்றுதலால் நிகழும் ஆசையே மனிதன் கொள்ளும் இச்சையாகும். ஆனால் கடவுளுக்கு மேலானதும், அவ ருக்கு இன்பத்தைத்தரக்கூடியது மென்பது ஒன்றுமேகிடையாது. மனிதன் மேலும் மேலும் விருத்தியாகும் இன்பத்தின்மேல் ஆசைப்படுகிறான். கடவுள் இன்பசுவரூபியான படியால் அவர் ஆசைப்படக்கூடியதும், அவருக்கு இன்பங் கொடுப்பதும் உலகிலில்லை. எனவே கடவுளுக்கு இச்சை யென்பது இல்லை. ஆனால் அவரிடத்தில் எல்லாவித்தையையும் அறியுந்தன்மை எல்லா சிருஷ்டி யையும் உண்டுபண்ணுந்தன்மை இருக்கின்றன.

அறிஞர்களுக்கு இது போதுமானது. இனி வேதத்தைப்பற்றிபேசு வோம்.

यस्मादृचो अपातक्षन् यजुर्यस्मादपाकषन्न् । सामानि यस्य लोमान्यथ वोऽङ्गिरसो मुखम् । स्कम्भन्तं ब्रूहि कतमः स्विदेव सः ॥

அதர்வ 10. 23. 4. 20.

எந்தபரமாத்மாவினால் ரிக்வேதம் யஜுர்வேதம், சாமவேதம் அதர்வவேதம் பிரகாசஞ்செய்யப்பட்டதோ அந்த தேவர் யார்?

स्वयम्भूर्याथातथ्यतोऽर्थान् व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ॥ யஜுர் 40. 8.

விடை:—எவர் எல்லாவற்றையும் உற்பத்தி செய்து தரித்துக்கொண்டிருக்கிறாரோ அவரே அந்தபரமாத்மா. கடவுள். அவரே சர்வவியாபகர், சுசித்தர் சனாதனர். நிராகாரர். பரமேசுவரன் தன்னுடைய சனாதன ஜீவரூபமானபிரஜைகளின் நிமித்தம் ஒழுங்காய் வேதத்தின் வழியாய் எல்லா வித்தைகளையும் உபதேசஞ்செய்கிறார்.

வினா:—பரமேச்வரனை நிராகாரராகக் கருதுகிறீரா?

விடை:—ரூபமற்றவராகக் கருதுகிறோம்,

வினா:—நிராகாரராயிருந்தால் வேதவித்தைகளை வாயினால் உச்சரித்து எப்படி கற்பிக்கக்கூடும்? ஏனென்றால் எழுத்துகளை உச்சரிப்பதற்கு மேல் வாயும், நாக்கும் அவசியமாய் வேண்டுமே?

விடை:—பரமேசுவரன் சர்வசக்திமானும் சர்வவியாபியாயுமிருக்கிறபடியால் ஜீவன்களுக்குத் தன்னுடைய வியாப்தியினால் வேத வித்தைகளை உபதேசஞ்செய்வதற்கு முகம் வாய் முதலியவைகள் தேவையில்லை, ஏனென்றால் தன்னைவிட மற்றொருவனுக்குத் தெரிவிப்பதற்கே வாயினாலும் நாக்கினாலும் உச்சரிக்கவேண்டும். தனக்குத்தானே தெரிந்துகொள்வதற்கு அவசியமில்லை. வாய் நாக்கு இவைகளின் உதவியில்லாமல் மனதில் அநேக வியவகாரங்களும் யோசனைகளும் நடக்கின்றன. காதுகளைச்சற்று விரல்களினால அடைத்துக்கொண்டுபார், வாய் நாக்கு உதடு இவைகளினுடைய ஒத்தாசை, சேர்க்கையன்றியில் எவ்வளவு விதமான சப்தங்கள் ஏற்படுகின்றன. அப்படியே ஜீவன்களுக்கு அந்தர்யாமிரூபமாய் உபதேசஞ்செய்தார். மற்றவர்கள்தெரிந்து கொள்வதற்காகவே உச்சரிப்பு அவசியமாயிருக்கின்றது பரமேசுவரன் நிராகாரர். சர்வவியாபியாயிருக்கிறபடியால் அகிலமான வேத வித்தையைத்தான் ஜீவனுள் அந்தர்யாமியாயிருக்கிறபடியால் பிரகாசஞ்செய்கிறார். பிறகு அம்மனிதன் தன்வாயின் உச்சரணையினால் மற்றொருவனைக் கேட்கச்செய்கிறான்.

வினா:—எந்த ஆத்மாவில் எப்பொழுது வேதங்களை உபதேசஞ்செய்தார்?

अग्नेर्ऋग्वेदो वायोर्यजुर्वेदः सूर्यात्सामवेदः ॥ சதபத 11. 4. 2. 3.

விடை:—சிருஷ்டியின்முதலில் பரமாத்மா அக்கினி வாயு ஆதித்தியன் அங்கிரா இப்புருஷர்களுடைய ஆத்மாவில் பிரகாசஞ்செய்தார்.

यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ॥ சுவேதசே 6. 18.

வினா:—மேற்கண்ட வாக்கியத்தின் பிரகாரம் பிரம்மாவுக்கு உபதேசஞ் செய்ததாக இருக்கிறதே; அக்கினிமுதலியவர்கள் என்று ஏன் சொல்லுகிறீர்கள் ?

விடை,—பிரம்மாவின் ஆத்மாவில் அக்கினிமுதலிய ரிஷிகளின் மூலமாக ஸ்தாபித்தார்.

अग्निवायुरविभ्यस्तु त्रयं ब्रह्म सनातनम् ।
दुदोह यज्ञसिद्ध्यर्थमृग्यजुःसामलक्षणम् ॥ மனு I. 23.

சிருஷ்டிமுதலில் பரமேசுவரன் மனிதர்களையுண்டுபண்ணி அக்கினிமுதலிய நான்கு ரிஷிகளின்மூலமாகப் பிரம்மாவை அடையச்செய்து அப்பிரம்மாவானவர் அக்கினி, வாயு, ஆதித்யன் அங்கிராவினிடமிருந்து ரிக், யஜுர், சாம, அதர்வ வேதத்தை முறையே கிரகித்தார்.

வினா:—மற்றவர்களுக்கு இல்லாமல் இந்நான்கு ரிஷிகளுக்கே பிரகாசஞ் செய்ததால் அவர் பட்சபாதி யாகிறார் அல்லவா ?

விடை:—இந்நால்வர்கள் ஜீவன்களுள் அதிகப்பரிசுத்தமாயிருந்தார்கள். இவர்களுக்குச் சமானமாய் மற்றவர்கள் இருந்தார்களில்லை. ஆதலால் இவர்களுக்கே பிரகாசஞ்செய்தார்.

வினா:—தேசபாஷையில் எதிலாவது வேதத்தைப் பிரகாசஞ்செய்யாமல் சம்ஸ்கிருதபாஷையில் ஏன் செய்தார் ?

விடை:—வேறு எந்தபாஷையிலாவது பிரகாசஞ்செய்திருந்தால் பட்சபாதியாயிருந்திருப்பார். ஏனென்றால் எவர்களுடைய தேசபாஷையில் பிரகாசஞ் செய்திருக்கிறதோ அவர்களுக்குப் படிப்பிதலும், படிப்பிப்பதிலும் வெகு சுலபமாயிருக்கும். விதேசிகளுக்கு, (மற்றவர்களுக்கு) கடினமாயிருந்திருக்கும். இதனாலேயே சமஸ்கிருதத்தில் பிரகாசஞ்செய்தார். இது எந்த தேசத்தினுடையபாஷையுமில்லை. வேதபாஷையே எல்லா பாஷைகளுக்கும் காரணமாகும். இது தாயைப்போலிருக்கிறது. இதனாலேயே அந்தப் பாஷையில் கொடுக்கப்பட்டது. எப்படி ஈசுவரனுடைய சிருஷ்டியான பூமி முதலியவைகள் எல்லா தேசங்களுக்கும் தேச ஜனங்களுக்கும் ஒன்றாக இருக்கிறதோ எல்லாவிதமான சிற்பவித்தைகளுக்குக் காரணமாயிருக்கின்றதோ, அப்படியே பரமேசுவரனின் வித்தைகளின் பாஷையானது ஒன்றாகத்தானிருக்கவேண்டும். அப்பொழுதுதான் சிறிதளவு பிரயாசையில் எல்லாதேசத்தவர்களும் படிக்கவும், படிப்பிக்கவும் முடியும். எனவே ஈசுவரன் பட்சபாதமுடையவர் அல்லர்.

வினா:—வேதம் ஈசுவரனால் செய்யப்பட்டதா ? அல்லது அந்நியர்களால் செய்யப்பட்டதா ? இதற்குப் பிரமாணம் யாது ?

விடை:—எப்படி ஈசுவரன் பரிசுத்தமுள்ளவனாயும் சர்வ வித்தைகளைத் தன்னிடம் கொண்டவனாயும் சுத்த குணகர்ம ஸ்வபாவங்களை யுடையவனாயும் நியாயத்தைச் செய்கிறவனாயும் தயாளுவாயும் இருக்கிறானோ அப்படியே எப்

புஸ்தகத்தில் ஈசுவரனுடைய குணகர்ம ஸ்வபாவத்திற்கு அனுகூலமான விஷயங்கள் இருக்கின்றதோ அது ஈசுவரனால் செய்யப்பட்டதாகும்.

2. சிருஷ்டிக்கிரமம், பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் ஆப்தம் பவித்ர ஆத்மாக்களினுடைய விவகாரங்கள் முதலியவைகளுக்கு விரோதமன்னியிலிருக்கும் அதுவே ஈசுவரசம்பந்தமானது.

3. ஈசுவரனுக்குப் பிழையில்லாத ஞானம் எப்படியிருக்கின்றதோ அப்படியே எப்புத்தகம் அவைகளன்னியிலிருக்கிறதோ அது ஈசுவரனால் செய்யப்பட்டது.

4. பரமேசுவரன் எப்படி இருக்கிறாரோ, சிருஷ்டிக்கிரம் எப்படி இருக்கின்றதோ அப்படியே ஈசுவரன், சிருஷ்டிகார்யம், காரணம், ஜீவன்களை உள்ளது உள்ள வண்ணமாயும்கூறும் புஸ்தகம் ஈசுவரனால் அருளப்பட்டதாகும்.

5. பிரத்தியக்ஷாதி பிரமாண விஷயங்களுக்கு விரோதமன்னியிலும், சுத்தாத்மா, ஸ்வபாவம் இவைகளுக்கு விரோதமில்லாமலும் வேதம் இருக்கின்றது. அப்படி பைபில் குர்ஆன் முதலிய புஸ்தகங்கள் இல்லை. இதனுடைய விளக்கம் பைபில் குர்ஆன் இவைகளைப்பற்றிய அத்தியாயத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

வினா:—ஈசுவரனிடத்திலிருந்து வேதம் உற்பத்தியாக கொஞ்சமேனும் அவசியமில்லையே. ஏனென்றால் மனிதர்கள் கிரமத்தில் ஞானத்தை விருத்தி செய்துகொண்டு பிறகு புஸ்தகத்தைச் செய்யக்கூடுமே ?

விடை:—அப்படி ஒருநாளும் அவர்களால்செய்ய இயலாது. காரணம் இருந்தாலொழிய காரியம் உற்பத்தியாவது எப்பொழுதும் அசம்பவமாகும். சிருஷ்டியைக் கவனித்துக் காட்டு மனிதர்கள் ஒருநாளும் வித்வான்கள் ஆகிறதில்லை. அவர்களுக்கு உபாத்தியாயர் இருக்கும்பட்சத்தில் வித்வானாக ஆகலாம். இப்பொழுதும் ஒருவன் மற்றொருவனால் படிக்கப்பட்டாலொழிய வித்வானாக ஆகிறதில்லை. இப்பிரகாரமே பரமாத்மாவானவர் ஆதி சிருஷ்டியில் வேத வித்தையைப்படிப்பிக்காமலிருந்தால் அல்லது அந்த ரிஷிகளும் மற்றவர்களும் படிப்பிக்கப்படாதிருந்தால் எல்லோரும் அவித்வான்களாகவே இருந்திருப்பார்கள். உதாரணமாக ஒரு சிசுவை சிறுபொழுதிலிருந்து ஏகாந்தமான இடத்தில், அவித்வான் அல்லது விலங்குகளுடைய கூட்டத்தில் வைத்து வளர்த்தால் அப்பாலகனும் அவர்கள் அல்லது அவைகள் மாதிரியே மாறிவிடுவான். இதற்குத்திருஷ்டாந்தம் காட்டில் வசிக்கும் காட்டுமனிதன் பில், கோடர் முதலியவர்களே. ஆர்யவர்த்த தேசத்திலிருந்து போகும்வரையில் மிசர (ஈஜிப்டு) யூனான் (கிரீஸ்) ஐரோப்பா முதலிய தேசங்களில் கொஞ்சமாவது வித்தையென்பது கிடையாது. அமெரிகர்கள் மூர்க்கர்களாயும் வித்யாஹீனர்களாயும் நூறு, ஆயிரம், லட்சக்கோடிக்கணக்கான வருஷமிருந்தார்கள். கோலம்பஸ் போனபிறகே அமெரிகர் மறுபடியும் மேன்மையை அடைந்து வித்வான்களாக ஆனார்கள். இப்படியே மனிதர்கள் பரமாத்மாவினருளினால் முதலில் வித்தை

களைக் கிரகித்தார்கள். அதுமுதலிலிருந்து பற்பல காலங்களில் அநேக வித்வான்கள் இருந்திருக்கிறார்கள். தஞ்சலி தன்னுடைய யோகசூத்திரத்தில் சொல்லுகிறார்.

स पूर्वेषामपि गुरुः कालेनानवच्छेदात् ॥ யோக சமாதி 26.

உபாத்தியாயர்களால் கற்பிக்கப்பட்டு வித்வான்களாகவும் தெரிந்தவர்களாகவும் இப்பொழுது எப்படி ஆகிறோமோ அப்படியே சிருஷ்டி முதலில் கடவுள் அக்கினி முதலியவர்களுக்குப் பரமகுருவாக இருந்தார்.

ஏனென்றால் ஜீவன் ஸுஷுப்தியிலும் பிரளயத்திலும் ஞான ரஹிதமாகிறமாதிரி பரமேசுவரன் ஆகிறதில்லை. அவருடைய ஞானம், நித்தியமானது. காரணமன்னியில் காரியம் உண்டாகாதென்பதை நிச்சமாய் அறிந்துகொள்ள வேண்டும்.

வினா:— வேதம் சமஸ்கிருதபாஷையில் பிரகாசிக்கப்பட்டது. அக்கினி முதலிய ரிஷிகள் அப்பாஷையை அறியவில்லையாதலால் வேதத்தின் அர்த்தத்தை எப்படி அறிந்தார்கள்?

விடை:—பரமேசுவரன் அவ்வேதத்தை அறியும்படிசெய்தார். தர்மாத்மா, யோகி, மகரிஷி இவர்கள் எதனுடைய அர்த்தத்தை யறியவேண்டுமென்று தியான ஸ்திதியில் பரமேசுவரனின் ஸ்வரூபத்தில் சமாதியை யடைகிறார்களோ அப்பொழுது பரமாத்மாவானவர் அபீஷ்டமான மந்திரத்தின் அர்த்தத்தை அறியச்செய்கிறார். அப்படி அநேகயோகிகளுடையவும் ரிஷிகளுடையவும் மனதில் வேத அர்த்தம் பிரகாசமடைந்து அந்தந்த ரிஷி முனிகள் இதிஹாச பூர்வமாய் கிரந்தங்களைச் செய்தார்கள். அதுவே பிராம்மணம் அல்லது பிரம்மமாகும். அதாவது எந்த வேதத்திற்கு வியாக்யானஞ் செய்யப்பட்டிருக்கிறதோ அதற்கேப் பிராமண மென்று பெயர்.

ऋषयो (मन्त्रदृष्टयः)...........मन्त्रान्सम्प्रादुः ॥ நிருக்தம் I. 20.

வேத அர்த்தம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டதோ அவருடைய பெயரும் அதில் ஞாபகத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதுவரையில் அர்த்தஞ்செய்ததில்லை. ஆகையால் படிப்பிக்கப்படவுமில்லை. அந்த ரிஷிகளை வேதமந்திரகர்த்தா வென்று சொல்லுகிறவர்கள் பொய்யுரைப்பவர்கள். அவர்கள் வேதமந்திரங்களின் அர்த்தம் பகருபவர்களே.

வினா —எக்கிரந்தத்திற்கு வேத மென்றுபெயர்.

விடை:—ரிக், யஜு, சாம, ஆதர்வ, மந்திர சம்ஹிதைகளுக்கு வேத மென்று பெயர். மற்றவைகளுக்கு இல்லை.

வினா:—

मन्त्रब्राह्मणयोर्वेदनामधेयम्॥ (மந்திரங்களும், பிராம்மணங்களும் வேதமே.)

காத்யாயனரால் செய்யப்பட்ட பிரதிக்ஞை முதலிய சூத்திரங்களுக்கு அர்த்தம் என்னசெய்வாய்—

விடை:—ஒவ்வொரு மந்திரசம்ஹிதையின் ஆரம்பத்திலும், அத்தியாயங்களின் கடைசியிலும் சனாதன காலந்தொட்டு வேதமென்னும் சப்தம் எழுதப்பட்டு வந்திருக்கும் பழக்கத்தை கவனித்துப்பார். பிராம்மண கிரந்தத்தின் ஆரம்பத்திலாவது கடைசியிலாவது அது எழுதப்படவில்லை. நிருக்தத்தில்

इत्यपि निगमो भवति इति ब्राह्मणम् ॥ நிருக்தம் 5. 3. 4.

छन्दोब्राह्मणानि च तद्विषयाणि ॥ அஷ்டாத்யாயி 4. 2. 66.

இதிலிருந்து வேதம் மந்திரபாகமென்பதும் பிராம்மணம் வியாக்கியானபாகமென்பதும் தெளிவாகப் புலப்படுகிறது. இவ்விஷயத்தைக் குறித்து விசேஷமாகப்பார்க்க விரும்பினால் நம்முடைய வேதபாஷ்ய பூமிகையைப் பார்க்கலாம், அதில் என்ன காண்பித்திருக்கிறது என்றால்

அநேக பிரமாணங்களுக்கு விரோதமாகிறபடியால் காத்யாயன வசனமாயிருக்கமுடியாது:—அப்படி சித்தமாகுமேயானால் வேதம் சனாதனமாகாது. ஏனென்றால் பிராம்மண பாகத்தில் அநேக ரிஷி, மகரிஷி அரசர்களுடைய சரித்திரமிருக்கிறது. பிறந்ததற்குப் பிற்பாடு சரித்திரம், எழுதுகிறபடியால் அதை உடைத்தாயிருக்கும் கிரந்தம் பிறந்தபிறகே எழுதியிருக்க வேண்டும். வேதத்தில் எவருடைய சரித்திரமும் இல்லை. எந்த எந்த சப்தத்தினால் வித்தையினுடைய ஞானம் ஏற்படுகிறதோ அவைகளை பிரயோகிக்கப் பட்டிருக்கின்றன. அதில் யாருடைய பெயருமில்லை. எந்த விசேஷக் கதையினுடைய வித்தையுமில்லை.

வினா:—வேதத்தில் எத்தனை சாகைகளிருக்கின்றன.

விடை:—இருபத்தேழு.

வினா:—சாகைகள் என்றால் என்ன!

விடை:—வியாக்கியானத்திற்குச் சாகைகள் என்று பெயர்.

வினா:—உலகத்தில் வித்வான்கள் வேதத்தின் பாகங்களைச் சாகைகளாகக் கருதுகிறார்கள்.

விடை:—கொஞ்சம் சிந்தனைசெய்தால் உண்மை விளங்கும். ஏனென்றால் எத்தனை சாகைகள் இருக்கின்றதோ அவைகளெல்லாம் ஆசுவலாயனர் முதலிய ரிஷிகளின் பெயரால் இருக்கின்றன. மந்திர சம்ஹிதை பரமேசுவரின் பெயரில் இருக்கிறது. நான்கு வேதங்களை எப்படி பரமேச்வரன் செய்தாரென்று கருதுகிறோமோ அப்படியே ஆசுவலாயன முதலிய சாகைகளை அந்த ரிஷிகள் செய்ததாக கருதுகிறோம். எல்லா சாகைகளும் தங்களுடைய விளக்கத்தில் வேத மந்திரத்தை ஆதியாக உடைத்தாயிருக்கின்றன. உதாரணமாக தைத்திரிய சாகையில் 'இஷேத்வா' என்று ஆரம்பித்திருக்கிற மந்திரம் ஒரு விதத் தலைப்பங்கத்துடனும் கூட ஆரம்பிக்கப் படவில்லை. பரமேசுவரனாலருளப்பட்ட நான்கு வேதங்களும் விருட்சமூலங்கள்போல் இருக்கின்றன. ஆச்வலாயன ஆதி சாகைகள், ரிஷிகளால்

செய்யப்பட்டவைகள், மரத்தின்கிளைகளாகும். பரமேசுவரனால் செய்யப்படவில்லை. இதைப்பற்றி விசேஷமாய் நம்முடைய ருக்வேத பாஷ்ய பூமிகையைப் பார்க்கவும். பெற்றோர்கள் தங்கள் சந்தானத்தின்பேரில் கிருபைவைத்து எப்படி அவர்களுடையமேன்மையைவிரும்புகிறார்களோ அப்படியேபரமாத்மா எல்லா மனிதர்கள்பேரிலும் கிருபைசெய்து மனிதர்கள் அவித்தை அந்தகாரம், பிரமஜாலம், பொய்த்தோற்றம் இவைகளை விட்டுவிட்டு வித்தையாகிற விஞ்ஞான ரூப ஒளியையும் அனந்தத்தையும் அடைந்து வித்தை சுகம் முதலியவைகளை விருத்திசெய்து கொண்டிருக்க வேண்டி வேதத்தைப் பிரகாசஞ் செய்தார்.

வினா:—வேதம நித்தியமா, அநித்தியமா.

விடை:—நித்தியம். பரமேசுவரன் நித்தியமாகிறபடியால் அவருடைய ஞானுதிகுணங்களும் நித்தியம். நித்திய பதார்த்தமா யிருப்பவைகளுக்கு அவைகளுடைய குணகர்மஸ்வபாவங்களும் நித்தியமாகும், அநித்திய திரவ்யங்களுக்கு அநித்திய குணகர்ம ஸ்வபாவங்களே.

வினா:—என்ன! இப்புஸ்தகமும் நித்தியமா.

விடை:—இல்லை. புஸ்தகம் காகிதத்தினாலும் மையினாலும் செய்யப்பட்டவை. அப்படியிருக்கும்போது எப்படி நித்தியமாயிருக்கும். ஆனால் அதனின் சப்த அர்த்த சம்பந்தங்கள் நித்தியம்.

வினா:—ஈசுவரன் அந்த ரிஷிகளுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கலாம். அந்த ஞானத்தை அவர்கள் வேதமாய் செய்திருக்கலாம்.

விடை:—ஞேயமில்லாமல் (அறியும் பதார்த்தம்) ஞானமில்லை. சந்தஸ் உதாத்தம் அனுதாத்தம் ஸ்வரம் ஞானம், இவைகளால் ததும்பியிருக்கும் காயத்திரி முதலியவைகளைச்செய்ய சர்வஞ்ஞரைவிட யாருக்கும் சாமர்த்தியமில்லை. இப்படி சர்வஞ்ஞான சாஸ்திரத்தை யாராவது செய்யமுடியுமா? விஷயங்கள் விளங்கவேண்டி, ரிஷிகள் இலக்கணம், பாஷைநடை, இசை, காவ்யம் முதலியவைகளைக்குறித்து வேதத்தைப் படித்தபிறகு நூல்கள் செய்தார்கள். பரமாத்மா வேதத்தைச் செய்யாமலிருந்தால் ஒருவரும் ஒன்றும் செய்திருக்கமுடியாது. இதனால் வேதம் ஈசுவரனால் செய்யப்பட்டதாகும். நீ எந்தமதமென்றால், நான் வேதமதம் அதாவதுவேதத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ அதைக்கருதுகிறேன் என்று பதிலுரைக்கவேண்டும். அதாவது வேதத்தில் சொல்லியிருக்கும் வண்ணம் நடந்துவருகிறேன் என்பதாம்.

வேதத்தின் கர்த்தாவான ஈசுவரனையும் வேதத்தையும்பற்றிச் சுருக்கமாய்க்கூறினோம். இனி அடுத்த அத்தியாயத்தில் சிருஷ்டியைப் பற்றிப்பேசுவோம்.

ஏழாவது அத்தியாயம்

முற்றிற்று.

1136

எட்டாவது அத்தியாயம்

உலகத்தினுடைய ஆக்குதல் அளித்தல் அழித்தல் இவைகளைக்குறித்தது.

इयं विसृष्टिर्यत आ बभूव यदि वा दधे यदि वा न ।
यो अस्याध्यक्षः परमे व्योमन्त्सो अङ्ग वेद यदि वा न वेद ॥

ரிக். 10. 126. 8.

ஏ! மானிடனே! எவன் சிருஷ்டியின் கர்த்தாவோ, ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்முத்தொழிலையும் தனதாகக்கொண்ட நாயகன் எவனோ அவனே பரமாத்மா! அவனையே நீ அறி! வேறு யாரையும் சிருஷ்டிகர்த்தாவாகக்கருதாதே.

तम आसीत्तमसा गूढमग्रे प्रकेतं सलिलं सर्वमा इदम् ।
तुच्छ्येनाभ्वपिहितं यदासीत्तपसस्तन्महिना जायतैकम् ॥ ரிக் 10. 129. 3.

சிருஷ்டிக்குமுன் சகலமும் அந்தகாரத்தினால் சூழப்பட்டு இருளைப்போல் அறிவதற்கு முடியாததாயும், ஆகாசரூபமாயுமிருந்தது. அகில ஜகமும் பரமேசுவரனுடைய அனந்த ரூபத்தின்கண் அற்பமாயிருந்தது. பிறகு அவர் தன்னுடைய சர்வவல்லமையினால் காரணரூபத்திலிருந்து காரிய ரூபமாகச் செய்தார்.

हिरण्यगर्भः समवर्त्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत् ।
स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषा विधेम ॥ ரிக் 10. 120. 1.

ஓ மானிடர்களே! சூரியன் முதலான தேஜஸையுடைய சகல பதார்த்தங்களுக்காதாரமாயும், இருக்கிறதும் உண்டாகப்போகிறதுமான பிரபஞ்சத்தினுடைய நிகரற்ற எஜமானனாயும், ஜகத்தினுடைய உற்பத்திக்கு முன்னேயிருந்து விளங்குகிறவனாயும், பூமி முதல் சூரியன் (ஆகாசம்) பரியந்தமுள்ள உலகங்களை உண்டுபண்ணினவனாயுமிருக்கிற அப்பரமாத்மாவையே பிரேமையுடன் வணங்குங்கள்.

पुरुष एवेदꣳ सर्वं यद्भूतं यच्च भाव्यम् ।
उतामृतत्वस्येशानो यदन्नेनातिरोहति ॥

யஜுர் 31. 2.

ஓ மனிதர்களே! சகலத்திலும் பூர்ணமாயிருக்கிற அவரே ஜீவனுக்கும் நாசமற்ற காரணங்களுக்கும் நாதன். ஆனால் பிருதிவி முதலான ஜடம், ஜீவன்களிலிருந்து வேறாயிருக்கிற அவரே-இருந்த, இருக்கிற, இருக்கப்போகிற-ஜகத்தினுடைய சிருஷ்டிகர்த்தா.

यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति ।
यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद्ब्रह्म ॥ தைத்திரேய. பிருகு. 1.

எப்பரமாத்மாவிலிருந்து பிருதிவி முதலான சகல பூதங்களும் உண்டாச்சுதோ, இவைகள் வாழ்வதும் அழிவை அடைவதும் எவனாலோ அவனே பிரம்மா. அவனையே அறிவதற்கு முயலவேண்டும்.

जन्माद्यस्य यतः ॥ சரீரக I. I. 2.

இந்த ஜெகத்தினுடைய சிருஷ்டிக்கும், ஸ்திதிக்கும் (பரிபாலனத்திற்கும்) பிரளயத்திற்கும் காரணமாயிருக்கிறவரே பிரம்மா. அவரே அறிவதற்கு யோக்கியமுள்ளவர்.

வினா:—இப்பிரபஞ்சம் பரமேசுவரனிடத்திலிருந்து உண்டாச்சுதா? அல்லது வேறுயாரிடமிருந்தாவதா ?

விடை:—இப்பிரபஞ்சத்திற்குப்பரமாத்மாவே நிமித்த (காரியசாதகமான) காரணம். ஆனால் இதனுடைய உபாதான காரணம் பிரகிருதியேயாகும்.

வினா:—பிரகிருதி பரமேசுவரனிடமிருந்துண்டாகவில்லையா ?

விடை:— இல்லை. அது அநாதி (ஆதியற்றது)

வினா:—அநாதி என்று யாரை, எவைகளை அழைப்பது ?

விடை:—ஈசுவரன், ஜீவன், பிரபஞ்சத்திற்குக்காரணம், இம்மூன்றும் அநாதிகள்.

வினா:—இதற்குப் பிரமாணங்கள் யாவை ?

द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।

तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभि चाकशीति ॥ ரிக் I. 164. 20.

शाश्वतीभ्यः समाभ्यः ॥ யஜுர் 40. 8.

விடை:—பிரமமா, ஜீவன் இரண்டும் அநாதி. சேதனம் முதலான குணங்களினால் அவைகள் சமமாயிருக்கிறது. அவைகள், பிரம்மா ஜீவனில் பரவியிருக்கிறபடியினால், ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன. பரஸ்பர சிநேகிதர்கள். பிரளயகாலத்தில் சிதறிப்போகிற இப்பிரபஞ்சமாகிற கிளைகளினுடைய அடிமரமாகிறபிரகிருதியும் அநாதியே. இம்மூன்றினுடையகுணம் கர்மம ஸ்வபாவம் இவைகளும் அநாதி. இவ்விரண்டிலும்—பரமாத்மா ஜீவன்—பின் சொல்லப்பட்டதே, விருக்ஷரூபமான சம்சாரத்தினுடைய பலாபலன்களை நல்லதோ, கெட்டதோ, அநுபவிக்கிறது. முன்சொல்லப்பட்ட பரமாத்மா அனுபவிக்கிறதில்லை. உள்ளேயும் வெளியிலேயும் எங்கும் பிரகாசிக்கிற அவரே சர்வகீர்த்திமான், ஸ்வரூபத்தினால் மாறுபடுகிறபடியினால் ஜீவன், ஈசுவரன், பிரகிருதி, இம்மூன்றும் வெவ்வேறானது. ஆனால் இவைகளெல்லாம் அநாதி.

பரமாத்மா வேதமூலமாக ஆதியில்லாததும், சாசுவதமாயுமிருக்கிற சகல வித்தைகளை ஜீவரூபமான பிரஜைகளுக்குவெளிப்படுத்தியுள்ளார்.

अजामेकां लोहितशुक्लकृष्णां बह्वीः प्रजाः सृजमानां स्वरूपाः ।

अजो ह्येको जुषमाणोऽनुशेते जहात्येनां भुक्तभोगामजोऽन्यः ॥

சுவேதாசுவே 4. 5.

பிரகிருதி ஜீவன், பரமாத்மா, இவைகளுக்கு ஒரு நாளும் ஜன்மம கிடையாது. இவைகளும் ஜன்மமெடுத்துக்கொள்வதில்லை. அதாவது இம்மூன்றுமே அகில பிரபஞ்சத்திற்குங் காரணம். இவைகளுக்குக் காரணமொன்றுங் கிடையாது. எக்காலமுமிருந்துகொண்டே வருகிறது. அநாதியான ஜீவன் அநாதியை அநுபவித்து அதில் மூழ்கி இருக்கிறது. பரமாத்மாவோ அதில் மூழ்கியுமில்லை. அனுபவிக்கிறதுமில்லை.

கடந்த அத்தியாயத்தில் ஈசுவரனுடைய லக்ஷணங்களையும், ஜீவனுடைய லக்ஷணங்களையும் கூறிவிட்டோம். இவ்விடத்தில் பிரகிருதியுடையஇலக்ஷணங்களைக் கூறுவோம்.

सत्वरजस्तमसां साम्यावस्था प्रकृतिः प्रकृतेर्महान् महतोऽहङ्कारोऽहङ्कारात् पञ्चतन्मात्राण्युभयमिन्द्रियं पञ्चतन्मात्रेभ्यः स्थूलभूतानि पुरुष इति पञ्चविंशतिर्गणः ॥

(சத்வ) சுத்தம், (ரஜ) மந்தம், (தம:) ஜடத்தன்மை இவைகள் மூன்றும் எங்கு ஒன்று கூடிசேர்ந்திருக்கிறதோ அதற்குப் பிரகிருதியென்றுபெயர். இதிலிருந்து மகாதத்வபுத்தியும், அதிலிருந்து அகங்காரமும், அதிலிருந்து பஞ்ச தன்மாத்ராக்களும் (ஐந்து சத்துக்களும்) பத்து இந்திரியங்களும் (உணர்ச்சிகளும் செய்கைகளும்) மனமும் (மனோ எண்ணங்களும்) எழுந்தன. பஞ்ச தன்மாத்ராக்களிலிருந்து பிருதிவிமுதலான பஞ்சபூதங்களுண்டாச்சுது. இவ்விருபத்திநான்கும் “புருஷனும்” சேர்ந்து இருபத்தி ஐந்து (ஆகாரபூதங்கள்) ஆகிறது. இவ்விருபத்திநான்கில் பிரகிருதி சிருஷ்டிக்கப்படாதது. மஹா தத்வம், அகங்காரம், பஞ்ச சூக்ஷும், இவைகளெல்லாம் பிருகிருதியினுடைய பலன்கள். இவைகளெல்லாம் இந்திரியம், மனம், ஸ்தூலபூதம், இவைகளுக்குக் காரணமாயிருக்கின்றன. “புருஷன்” ஒருபொழுதும் காரணமாகவாவது அல்லது ஒன்றின் காரியமாகவாவது ஆகாது.

सदेव सोम्येदमग्र आसीत् ॥ சாந் 6. 2.

असद्वा इदमग्र आसीत् ॥ தைத் பிரம் 8.

आत्मैवेदमग्र आसीत् ॥ பிரக 1. 4. 1.

ब्रह्म वा इदमग्र आसीत् ॥ சத 11. 1. 11. 1.

तदैक्षत बहुः स्यां प्रजायेयेति । सोऽकामयत बहुः स्यां प्रजायेयेति ॥ தைத் பிர. 6.

सर्वं खल्विदं ब्रह्म नेह नानास्ति किञ्चन ॥

வி:—ஆனால் சாந்தோக்ய உபநிஷத்தில் “சிருஷ்டிக்கு முன்னால் இப் பிரபஞ்சம் இருந்தது” என்று இருக்கிறது. தைத்திரேயமோ “அது இல்லாமலோ அல்லது ஒன்றுமில்லாமலோ இருந்தது” என்கிறது. பிரஹதாரண்யக உபநிஷத் “சகலமும் ஆத்மஸ்வரூபமாய்” இருந்ததென்கிறது. சதபதபிராமணமோ “இருக்கும் இவ்வுலகில் பிரபஞ்சமும் பிரம்மாவே” என்கிறது. மேலும் “பரமாத்மா தன்னிஷ்டப்பிரகாரம் பலரூபங்களாக ஆயிருக்கிறார்”

எல்லாம் பிரம்மரூபம் என்று கூறுகிறது. மற்றொரு உபநிஷத் "இதில் இரண்டாவதானவேறு பதார்த்தங்களொன்றுங்கிடையாது " ஸர்வம் கலு "..........சகலமும் பிரம்மாவே" என்று சொல்லுகிறது.

விடை:—இவைகளை ஏன் நீங்கள் தப்பர்த்தம்செய்யவேண்டும். ஏனென்றால் அதே உபநிஷத்துக்கள் கூறுவதாவது.

एकमेव खलु सोम्यान्नेन शुङ्गेनापो मूलमन्विच्छद्भिस्सोम्य शुङ्गेन तेजो-मूलमन्विच्छ तेजसा सोम्य शुङ्गेन सन्मूलमन्विच्छ सन्मूलाः सोम्येमाः सर्वाः प्रजाः सदायतनाः सत्प्रतिष्ठाः ॥

ஹே! சுவேதகேது! காரியங்களிலிருந்து காரணத்தை அறி. அன்னரூபமான பிருதிவிகாரியங்களுக்கு ஜலரூபம் மூலகாரணமென்று அறி. அதாவது திடபதார்த்தத்திற்குத் திரவபதார்த்தம் மூலகாரணம். கார்யரூபமாயிருக்கிற, ஜலங்களுக்கு (பதார்த்தங்களுக்கு) தேஜோ ரூபம் மூலகாரணமென்று அறி. தேஜோ ரூபமான காரியத்திற்கு நித்திய பிரகிருதியே காரணமென்று அறி. இப்பிரகிருதியேசகல (பிரபஞ்சத்திற்கும்) ஜகத்திற்கும் உற்பத்தியாயும் இருப்பிடமாயும், ஆதரவாயுமிருக்கிறது. இப்பிரபஞ்சம் இல்லாமலிருந்ததென்று நீங்கள் அர்த்தஞ்செய்வதற்கு இவ்வுலகம் தற்போது புலப்படும்படியான ஸ்தூலஸ்திதியிலில்லைஎன்பதாகும். ஆனால் அது நித்திய பிரகிருதியில் லயப்பட்டிருந்தது. ஒன்றுமில்லாமல் அது இருக்கவில்லை. ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இருந்தது, "ஸர்வம் கலு............" என்று சொல்லுவதானது இங்கிருந்து ஒரு பாரையையும் அங்கிருந்து ஒரு கல்லையும் எடுத்து ஜாலவித்தைக்காரர்கள் வீடுகட்டுவது என்கிற பழமொழியைப் போலாகிறது. ஏனென்றால்,

सर्वं खल्विदं ब्रह्म तज्जलानिति शान्त उपासीत ॥ சாந்தோ 3. 14. 11.

नेह नानास्ति किंचन ॥ கடோப 2. 4. 11.

வெவ்வேறாய் இரு உபநிஷத்துகளிலிருந்து இரண்டு வாக்கியங்களை எடுத்துச்சேர்த்து ஒன்றாகச் செய்திருக்கிறீர்கள் "சர்வம்கலு ...." சாந்தோக்ய உபநிஷத்திலிருந்தும், "நேஹநாநாஸ்திகிஞ்சன" என்பதும் கடோபநிஷத்திலிருந்தும், முறையே எடுக்கப்பட்டிருக்கின்றன. எவ்விதம் அவயவங்கள் சரீரத்துடன் சேர்ந்திருக்கும் வரையில் காரியத்திற்குபயோகப்படும், பிரிக்கப்பட்டு வேறாகச்செய்தவுடன் உபயோகமற்றதாகவும் போகிறதோ அவ்விதமே சந்தர்ப்பம் மாறி இடம் விட்டு இடந்தப்பினால் அர்த்தமற்றுப்போகிறது. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முன்னும் பின்னும் சேர்த்து படிப்பதினாலேயே பொருள் விளங்கும். இப்பொழுது இதனுடைய அர்த்தத்தைச் சரியாய் கவனியுங்கள். ஓ ஜீவனே! இப்பிரபஞ்ச சிருஷ்டிக்கும் காப்பாற்றுவதற்கும், பிரளயத்திற்கும் காரணமாயிருக்கும் பிரம்மத்தையே உபாசனை செய். அவருடைய வல்லமையினாலேயே இப்பிரபஞ்சம் விளங்கி நிற்கிறது. அவருடனேயே இப்பிரபஞ்சமுமிருக்கிறது. அவரைத்தவிர வேறு இரண்டாவதான யாரையும் உபாசித்தல் கூடாது. அவர் பிரிக்கமுடியாதவர். அசைக்கமுடி

யாதவர், பிரம்மரூபி. பலவஸ்துக்களினுடையசேர்க்கை அவரிடம்கிடையாது. ஆனால் இவைகளெல்லாம் வேறானசுவரூபத்துடன் பரமேசுவரனுடைய ஆதாரத்திலிருக்கின்றன.

வினா:—பிரபஞ்சத்திற்குக் காரணமெவ்வளவிருக்கின்றன ?

விடை:—மூன்று. ஒன்று நிமித்தம். இரண்டு உபாதானம், மூன்று சாதாரணம். எதனுடைய செய்கையினால் ஒரு காரியம் நடக்கிறதோ, எதனுடைய செய்கையில்லாததினால் ஒரு காரியம் நடக்கிறதில்லையோ அதுவே நிமித்த காரணம். அது தானாகவே மாறுகிறதில்லை. ஆனால் மற்றவைகளை மாறசெய்கிறது. எது இல்லாது ஒரு காரியமும் செய்யமுடியாதோ அது தான் உபாதான காரணம். அது ரூபத்தில் மாறுகிறது. நாசத்தையடைறது. காரியத்தைச் செய்வதில் சாதகமாயும், பலகாரியங்களுக்குச் சரியாயுமிருக்கிறதற்கே சாதாரண காரண மென்று பெயர். நிமித்தகாரணத்தில் இருவிதமுண்டு. முதல் நிமித்தகாரணம், சகல சிருஷ்டிக்குக் காரணமாயும் பரிபாலனத்திற்கும் பிரளயத்திற்கும் காரணமாயுமிருக்கிறது, பரமாத்மவோ.

இரண்டாவது நிமித்தகாரணம் ஜீவன். பரமேசுவரனுடைய சிருஷ்டியிலிருந்து பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு பலவிதகாரியங்களைச் செய்கிறது ஜீவன்.

இப்பிரபஞ்ச சிருஷ்டியில் உபயோகப் படுத்தப்பட்ட பிரகிருதியே உபாதான காரணம். அது ஜடமானபடியினால் தன்னைத்தானே ஏற்படுத்திக்கொள்ளவோ நாசஞ்செய்துக்கொள்ளவோ முடியாது. சிலசமயங்களில் ஜடத்துடன் ஜடம் சேர்ந்து உருமாறினாலும், மற்றொன்றினுடைய செய்கையினால் அது ஏற்படுகிறது. நாசத்தினால் நாசத்தையடைகிறது.

உதாரணமாகப் பரமேசுவரனால் செய்யப்பட்ட வித்தானது பூமியில் விழுந்து நீர் நிலம் இவைகளையடைந்தால் விருக்ஷமாகிறது. ஆனால் அக்கினி முதலான ஜட பதார்த்தங்களில் விழுந்தால் நாசத்தையடைகிறது. சகல வஸ்துக்கள் செய்யப்படுகிறதும் நாசத்தையடைகிறதும் பரமேசுவரனுடைய ஆதீனத்திலேயே, இருக்கிறது.

ஒரு வஸ்துவைச் செய்வதற்கு வேண்டிய, ஞானம், பலம், கை முதலான சாதகங்களே அதனுடைய சாதாரணகாரணம். உதாரணமாகப் பானை ஒன்றை எடுக்கொள்ளுவோம். அதில் குயவன் நியமித்தகாரணமாகவும் மண் உபாதான காரணமாகவும் மூங்கில் சக்கிரம் முதலான கருவிகளும் காலம், தேசம், வெளிச்சம், கண்கள், கைகள் (குயவனுடைய) ஞானம், வேண்டியவேலை இவைகளெல்லாம் அதனுடைய சாதாரனகாரணமாகவும் முறையே ஆகின்றன. இம்மூன்று மன்னியில் ஒன்றையும் உண்டாக்கமுடியாது. நாசஞ்செய்யவும் முடியாது.

தற்போதைய வேதாந்திகள் பரமேசுவரனைப் பிரபஞ்சத்தினுடைய நிமித்தகாரணமாகவும் உபாதான காரணமாகவும் நம்புகிறார்கள்.

வினு:—

यथोर्णनाभिः सृजते गृह्णते च ॥ முண்டகோ உப. I. I. 7.

சிலந்தி வெளியிலிருந்து ஒன்றையும் எடுத்துக்கோள்ளாமல் தன் சரீரத்தி லிருந்தே (நூலை) எடுத்துக்கொண்டு கூட்டைக்கட்டி விளையாடுகிறமாதிரியே பிரம்மம் தன்னிடமிருந்தே பிரபஞ்சத்தை விரித்து அதில் வேற்றுருவாகி அநுபவிக்கிறது. ஆகையினல் பிரம்மாதான் வேற்றுருவாகவேண்டு மென்று விரும்பினர். விரும்பின மாத்திரத்திலேயே ஜகத்ரூபமாகிவிட்டார்.

आदावन्ते च यन्नास्ति वर्त्तमानेऽपि तत्तथा ॥ கௌடபாதிய 31.

மண்டூக உபநிஷத் வியாக்கியானத்தில் சொல்லுகிறதாவது முதலில்லாத தும் கடைசியில் இருக்கக்கூடாததுமானது தற்போதும் இராது. சிருஷ்டியின் ஆதியில் பிரபஞ்சமில்லை, ஆனல் பிரம்மாவிருந்தார். பிரளயத்தின் பிறகு பிரபஞ்சமே யிராது, பிரம்மாவோ யிருப்பார். ஆகையினல் தற்போதும் உலக மில்லை. சகலமும் பிரம்மமே? ஆகையினல் இப்பிரபஞ்சம் ஏன் பிரம்மமா காது?

விடை:—நீங்கள் கூறும் வண்ணம் பிரபஞ்சத்தின் உபாதானகாரணமாக பிரம்மா விருந்தால் அவர் மாறக்கூடியவருயும், நாசத்திற்குக் காரணமாகவும் ஆகிருர். ஏனென்ருல் உபாதான காரணத்தினுடைய குணம் கர்மம் சுவபா வம் முதலானவைகள், காரியத்தில தெரிகிறது. வைசேஷிகதர்மம் சொல் லுகிறதாவது.

कारणगुणपूर्वकः कार्यगुणो दृष्टः ॥ வைசேஷி. 2. I. 14.

(உபாதான) காரணத்தில் முன்னிருந்ததையே முடிவு (காரணம்) வெளிப்படுகிறது. இவ்விதமிருக்கும் பொழுது பிரம்மாவையும் பிரபஞ்சத் தையும் எவ்விதம் (உபாதான) காரணகாரியமாகப்புணைக்கலாம்? குணம் கர் மம் சுவபாவம் இவைகளில் இரண்டும் அவ்வளவு வித்தியாசப்பட்டி ருக்கிறது. பிரம்மா சச்சிதானந்தசுவரூபர். பிரபஞ்சமோ க்ஷண பங்குரமா னது. அசேதனமானது. பேரின்பமற்றது. பிரம்மாவோ சிருஷ்டிக்கப்படாதவர் பார்க்கமுடியாதவர் பிரபஞ்சமோ சிருஷ்டிக்கப்பட்டது. பிரிக்கக் கூடியது பார்க்கக்கூடியது. பிரிதிவிமுதலான ஜடகுணங்கள் பிரம்மாவிடமிருந்துண் டானல் அவரும் அஜ்ஜடபதார்த்தங்களினுடைய குணங்களை உடையவரா யிருக்கவேண்டும். பிருதுவி முதலானவைகளைப்போல் அவரும் ஜடமாயிருக்க வேண்டும் அல்லது பிரம்மாவைப்போல் பிருதிவ்யாதி காரியங்கள் சேதனமா யிருக்கவேண்டும். மேலும் சிலந்தியுடைய உதாரணம் தங்களுடைய சித்தாந் தத்தைத்தாங்கவில்லை. அதை நிராகரிக்கவும் நிராகரிக்கிறது. ஏனென்ருல் ஜட ரூபமாகிறசரீர அவயவங்கள் உபாதான காரணமாகவும், ஜீவாத்மா நிமித்தகார ணமாகவுமாகிறது. இம்மாதிரி சர்வவியாபகமான பிரம்மா, தன்னுள்பரவியிருக் கும் பிரகிருதியிலிருந்து ஸ்தூல ஜகத்தை சிருஷ்டித்து அதில் தான் வியாபக

மாய் சாக்ஷிபூதமாயிருந்து கொண்டு ஆனந்தபதத்திலிருக்கிறார். பிரம்மாதான் வேற்றுருவாகவேண்டுமென்று விரும்பினார் என்று நீங்கள் சொல்லுவதற்குப் "பலவிதமான இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்துப் பிரசித்தனாகட்டும்" என்று பார்த்து யோசனைசெய்து விரும்பினதாக ஆகிறது. ஏனென்றால் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தப்பிறகே பரமேசுவரன் சகல ஸ்தூலபதார்த்தங்களிலும் இருந்து, ஜீவன்களுடைய விசாரணை ஞானம் தியானம் உபதேசம் கேட்டல் முதலானவைகளில் வெளிப்படுகிறார். பிரளயகாலத்தில் பரமேசுவரனை முக்தி ஜீவன் இவை இரண்டும்தவிர வேறுயாரும் அறிகிறதில்லை. நீங்கள் கூறின சூத்திரம் தவறானது. ஏனென்றால் சிருஷ்டிக்கு முந்தி பிரபஞ்சம் இப்படி வெளிப்படையாய் இல்லாமலிருந்தபோதிலும் அது சூக்ஷ்மமாயிருந்தது. பிரளயத்திற்கப்புறமும் அது அவ்விதமேயிருக்கும். ரிக்வேதம் என்ன முறையிடுகிறதென்றால்.

तम आसीत्तमसा गूढमग्रे ॥ ரிக். 10. 126. 3.

ஆதியில் சகலமும் இருட்டாயிருந்தது. முழுப்பிரபஞ்சமும் இருட்டினால் சூழப்பட்டிருந்தது.

आसीदिदं तमोभूतमप्रज्ञातमलक्षणम् ।
अप्रतर्क्यमविज्ञेयं प्रसुप्तमिव सर्वतः ॥ மனு I. 5.

ஆரம்பத்தில் இச்சகல பிரபஞ்சமும் இருட்டில் மூழ்கியிருந்தது. அது அறிய முடியாததாயும் அறிவிற்கெட்டாததாயுமிருந்தது. இந்திரியங்களினாலும் அறிவதற்கு முடியாததாயிருந்தது. பிரளயத்திற்கு முந்தியாவது அல்லது பிரளய காலத்திலாவது அது இராது. ஆனால் தற்சமயத்தில் அது அறியக்கூடியதாயும் பிரசித்த சின்னங்களுடன் கூடினதாயும் ஆகவே புத்தியினால் அறியக்கூடியதாயுமிருக்கிறது. அவ்விதமிருந்தும் அவ்வுரை ஆசிரியர் உலகம் இல்லை என்கிறார். இது எப்பொழுதும் பிரமாணமற்றது, ஏனென்றால் நேராக அறிவுமுதலானவைகளினால் ஒருவருக்குத்தெரியாதது. ஒன்றுமில்லாததாக விருக்காது.

வினா:—பிரபஞ்சத்தைச் சிருஷ்டி செய்வதில் பரமேசுவரனுடைய எண்ணம் யாது?

விடை:—சிருஷ்டிசெய்யாமலிருப்பதில் அவருடைய பிரயோஜனம்(எண்ணம்) யாது?

வினா:—சிருஷ்டி செய்யாமலிருக்கும் பக்ஷத்தில் ஆனந்தத்தில் அவர் இருக்கலாம். ஜீவன்களும் சுகம் துக்கம் முதலானவைகளையடையாது.

விடை:—இது சோம்பேறிகளுடையவும் தரித்திரர்களுடையவும் யோசனையாகும். ஊக்கமுள்ளவர்களுடையதும் சுறுசுறுப்புள்ளவர்களுடையதுமல்ல. பிரளயகாலத்தில்ஜீவன்களுக்கு என்னசுகதுக்கங்களிருக்கிறது? சிருஷ்டியுடைய சுகதுக்கங்களை நோக்குங்கால் துக்கத்தைவிட சுகம் பன்மடங்கதிகமாக இருக்கிறதை அறியக்கூடும். முக்தியைச்சாதனஞ் செய்கிற பரிசுத்த

மான பல ஜீவன்கள் கடைசியில் மோக்ஷத்தினுடைய ஆனந்தத்தையடை கின்றன. பிரளயகாலத்திலோ ஆழ்ந்த நித்திரையில் போல் மந்தமாயிருக்கிறது. சிருஷ்டிசெய்யாவிடில் ஜீவன்களுக்கு ஏற்றவாறு எவ்விதம்தீர்மானிக்கக்கூடும்? முன் சிருஷ்டியில் செய்யப்பட்ட பாபபுண்யங்களினுடைய கர்மங்களை எவ்விதம் அனுபவிக்கக்கூடும்? கண்களினால் யாது பிரயோஜனமென்று உங்களை யாராவது வினவினால் நீங்கள் ஐயமன்னியில் பார்ப்பதற்கென்பீர்கள். அவ்விதமே ஈச்வரனிடத்திலிருக்கும் படியான விஞ்ஞானம், பலம் சிருஷ்டிசக்தி, இவைகளினால் சிருஷ்டிசெய்வதைவிட வேறுயாது பிரயோசனம்? நியாயத்தைக்காப்பாற்றுதல், தயை, உலகபரிபாலன சக்தி முதலான ஈசுவரனுடைய குணங்கள் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெயவதினாலேயே விளங்கும். சிருஷ்டி, பரிபாலனம் பிரளயம் முதலானவைகளைச்செய்வதிலேயே அவருடைய அளவற்ற சக்தியானது சபலமாகிறது. எவவிதம் பார்வை கண்களினுடைய சுவபாவகுணமோ அவ்விதமே பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கிறது, சகலஜீவன்களுக்கும் ஏற்ற பதார்த்தங்களையளித்து பரோபகாரஞ்செய்கிறது இவைகளெல்லம் பரமேசுவரனுடைய ஸ்வபாவகுணம்.

வினா.—முதலில் வித்து செய்யப்பட்டதா அல்லது மரமா?

விடை.—வித்துதான். ஏனென்றால் வித்தே நிதான நிமித்த (துவக்க) ஹேது (காரணம்). எல்லாம் ஏகார்த்த பதமாகும். காரணம் வித்தே யானபடியினால் காரியத்திற்கு அதுவே முந்தவேண்டும்.

வினா.—பரமேசுவரன் சர்வ சக்திமான் ஆனபடியினால். பிரகிருதியையும் (முதல்துவக்கும்பதார்த்தம்) ஜீவனையும்சிருஷ்டிக்கலாம். அவ்விதம் செய்யாவிடில் சர்வசக்திமான் என்று அழைப்பதற்கு அவர் எவ்விதம் யோக்கியர் ஆவார்.

விடை.—சர்வசக்திமான் என்னும் வார்த்தைக்குப் பொருள் முன்னமேயே கூறியாய்விட்டது. சர்வசக்திமான் என்றால் அசம்பவமான காரியங்களைக்கூடச்செய்வதாகுமோ? காரணமன்னியில் காரியம்செய்கிறது முதலான அசம்பவகாரியங்களைப்புரிய முடியுமானால் அவர் இரண்டாவது ஈசுவரனை உற்பத்திசெய்து தான்மரணத்தையடைந்து துக்கத்தை யநுபவிக்கலாம். அநியாயஞ்செய்கிறவனையும் அபவித்ரனையும் கெட்டகாரியங்களைப் புரிகிறவனையும் ஆகலாம். ஸ்வபாவ அதாவது அக்கினியையுடைய உஷ்ணம் ஜலத்தினுடைய சீதளம், பிருதிவி முதலானவைகளினுடைய ஜடத்தன்மை முதலான காரியங்களை மாற்றமுடியாது. ஈசுவரனுடைய நியமங்கள் சத்தியமானதும் நிறைவானதாயு மிருக்கிற படியினால் அதை மாற்றமுடியாது. ஆகையினால் உதவியன்னியில் தன்னுடைய சசல காரியங்களையும் நிறைவேற்ற அவருக்குச் சக்தியிருக்கிறபடியினால் சர்வ சக்திமானென்று பெயர்.

வினா:— ஈசுவரன் ஆகாரத்துடன் (உருவத்துடன்) கூடினவரா? அல்லது ஆகாரமற்றவரா? ஆகாரமற்றவராயிருந்தால் கைமுதலான சாதகங்களன்கனியில் அவரெப்படிப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கமுடியும்? உருவத்துடனிருந்தால் இச்சந்தேகமேற்படாது?

விடை:—அவர் உருவமற்றவர். யார் சரீரத்துடன் கூடினவராயிருக்கிறாரோ அவர் ஈசுவரனாக மாட்டார். ஏனென்றால் அப்பொழுது அவர் எல்லையுள்ள சக்திகளை உடையவராவர். தேசம் காலம் இவைகளினால் பாதிக்கப்பட்டு அவர் பசி, தாகம், உஷ்ணம், பனி, காயம், புண் வலி, நோய் இவைகளுக்காளாவர். அப்பேர்பட்டவனிடத்தில் ஜீவனுடைய குணங்களிருக்குமே தவிர ஈசுவர குணம் ஒரு நாளும் ஏற்படாது. நீங்களும், நாங்களும் சரீரத்துடன் கூடினவர்களாயிருந்து கொண்டு அணு, பரமாணு, பிரகிருதி இவைகளை வசமாக்கிக் கொள்ள முடியாது. அம்மாதிரியே தூலதேகத்துடன் கூடின பரமேசுவரன் கூட தன் சூக்ஷ்ம பதார்த்தங்களால் தூல ஜகத்தைச் செய்யமுடியாது. பரமேசுவரனுக்கு ஜடமான சரீரமாவது அவயவங்களாவது கிடையாது. ஆனால் அவருக்கு அனந்தமான (எல்லையற்ற) சக்தி, பலம், பராக்கிரமம் உண்டு. அதனால் ஜீவன் பிரகிருதி இவைகளினால் ஒரு நாளும் செய்யமுடியாத சகலகாரியங்களையுஞ் செய்கிறார். பிரகிருதி, ஜீவன் இவைகளைவிட சூக்ஷ்மமாயும் இவைகளில் பரவியும் அவர் இருக்கிறபடியினால் இவைகளை அடக்கி உருவான ஜகமாக மாற்றுகிறார்.

வினா:—மானிடப் பெற்றோர்களுடைய குழந்தைகள் தங்கள் தாய் தகப்பன் உருவச்சாயலாக விருப்பதுபோல், பரமேசுவரன் உருவமற்றவராயிருந்தால் அவரால்சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகமும் உருவமற்றதாயிருக்கவேண்டுமே?

விடை:—என்ன குழந்தைத் தனமானகேள்வி!! நாம் முன்னமேயே பரமேசுவரன் இஜ்ஜகத்தின் உபாதான காரணமில்லையென்றும் நிமித்தகாரணமென்றும் கூறினோம். பரமேசுவரனைவிட சூக்ஷ்மக்குறைவான பிரகுருதியும் பரமாணுவுமே இஜ்ஜகத்தின் உபாதானகாரணம். அவைகளெல்லாம் உருவமற்றதல்ல ஆனால் பரமேசுவரனைவிட ஸ்தூலமாயும், இதர காரியங்களைவிட சூக்ஷ்மமான உருவத்தை உடையதாயுமிருக்கின்றன.

காரணமன்னியில் ஒன்றுங்கிடையாது

வினா:—பரமேசுவரனால் காரணமன்னியில் காரியம் ஒன்றும் செய்ய முடியாதா ?

விடை:—முடியாது, எதனுடைய இருப்பு (எவ்வுருவத்திலாவது) இல்லையோ அதை இருக்கிறதாக அழைக்க முடியாது. அது கொஞ்சங்கூட முடியாதகாரியம். வீண்ஜம்பம் பேசிச்சியம் என்கிற கதையைப்போல் கீழ்க்கண்டவாறு காரணமன்னியில் காரியமுண்டாவது முடியாத காரியம். மலடி வயற்று மக்களுடைய விவாகமொன்றைக் கண்டேன். அவர்களுக்கு மனிதக்கொம்பினால் செய்யப்பட்டவும் சுகந்தபுஷ்ப மாலைகளையும் உடைய குழந்தைகளுண்டாச்சுது. அவர்கள் மரீசிகை ஜலத்தில் ஸ்நானஞ் செய்து மேகமன்னியில் மழை பொழிகிறவும், சாகுபடியன்னியில் சகல உணவுப்பொருள்களும் உற்பத்தியுமாகிற கந்தர்வ நகரத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் சொல்லுவான்.

தாய் தகப்பனில்லை ஆனால் நான் பிறந்தேன். வாயில் நாக்கில்லை ஆனால் பேசுவேன். புத்தில் பாம்பே இல்லை. ஆனால் ஒன்று வெளியில் வந்தது. நான் எங்குமில்லை இவர்களும் எங்குமில்லை. ஆனால் நாங்களெல்லோரும். இங்கிருந்தோம். இம்மாதிரி வார்த்தைகள் பைத்தியக்காரர்களுக்கே தகும்.

காரணத்திற்குக் காரணங்கிடையாது.

வினா :—காரணமன்னியில் காரிய மில்லாமல் போகுமே யானால் முதல் காரணத்திற்குக் காரணம் யாது ?

விடை:—காரண ரூபமாயிருக்கிறதெல்லாம் ஒருபொழுதும் ஒன்றின் காரியமா ாது. ஒன்றின் காரணமாகவும் மற்றொன்றின் காரியமாகவுமிருப்பதற்கே "அடுத்த" காரணமென்று பெயர். உதாரணமாக சாங்கிய தர்சனம் சொல்லுகிறதாவது.

मूले मूलाभावादमूलं मूलम् ॥ சாங்கி I. 67.

வேருக்கு வேர்கிடையாது ! எனவே காரணங்களுக்குக் காரணங் கிடையாது. ஆகையினால் எல்லாகாரியங்களினுடைய காரணமே காரணமற்றது. ஒவ்வொரு காரியத்தினுடைய ஆரம்பத்திற்கும் அவசியமாய் மூன்று காரணங்களுண்டு. உதாரணமாக ஒருதுணி செய்வதற்குச் சேணியன், நூல், இயந்திரம் இம் மூன்றும் அவசியம். அம் மாதிரியே ஜகத்தினுடைய உற்பத்திற்குப் பரமேசுவரன் பிரகிருதி காலம் அப்படியே ஆகாசம், ஜீவன், முதலான சிருஷ்டிக்கப்படாதவும், நிரந்தர முமானவைகளினால் ஆச்சுது. இதில் ஒன்றாவது இராமல் போனால் உலகமே இராது.

நாஸ்திகர்களுடைய சந்தேகங்களுக்குப் பதில்

வினா:—

अत्र नास्तिका आहुः—शून्यं तत्त्वं भावो विनश्यति वस्तुधर्मत्वाद्विनाशस्य ॥ சாங். I. 44.

अभावाद्भावोत्पत्तिर्नानुपमृद्य प्रादुर्भावात् ॥ ईश्वरः कारणं पुरुषकर्माफल्यदर्शनात् ॥ अनिमित्ततो भावोत्पत्तिः कण्टकतैक्ष्ण्यादिदर्शनात् ॥ सर्वमनित्यमुत्पत्तिविनाशधर्मकत्वात् ॥ सर्वं नित्यं पञ्चभूतनित्यत्वात् ॥ सर्वं पृथग् भावलक्षणपृथक्त्वात् ॥ सर्वमभावो भावेष्वितरेतराभावसिद्धेः॥

நியாய 4. 1.

1வது வினா:—சூன்யம் (ஒன்றுமில்லாத்தன்மை) என்பதும் ஒரு பதார்த்தம். சிருஷ்டிக்குமுந்தி சூன்யமிருந்ததே தவிர வேறொன்று மில்லை. அப்புரமும் சூன்யமே இருக்கும். ஏனென்றால் இப்பொழுதிருக்கும் பதார்த்தங்களெல்லாம் பாவ (இரும்பு) மற்றதாய் சூன்யமாய்ப்போய்விடும்.

விடை:—ஆகாசம் (பிரகிருதியைப்போல்) காணமுடியாத பதார்த்தம். அவகாசம், பிந்து (துளி) எல்லாம் சூன்யமே. சூன்யம் ஜடபதார்த்தம்,

ஆனால் சகலபதார்த்தங்களிலும் புலப்பட்டதாய் இருக்கிறது. வரிகள் புள்ளிகளால் செய்யப்பட்டிருக்கின்றன. சதுரங்களும் சக்கிரங்களும் வரிகளால் செய்யப்பட்டிருக்கின்றன. அம்மாதிரி ஈசுவரன் தன்னுடை சிருஷ்டி சக்தியினால் மலை, பூமி முதலான உருவங்களை ஒரு புள்ளியிலிருந்து விரித்திருக்கிறார். மேலும் சூன்யத்தை அறிகிறவன் சூன்யமாயிருக்க முடியாது.

2வது வினா:—அபாவத்திலிருந்து (இல்லாமலிருப்பதிலிருந்து) பாவம் உற்பத்தியாகக்கூடும். எப்படியென்றால் அது பிளவுபடுகிற வரையில் வித்தானது அரும்பு விட்டுத்துளிர்க்கிறதில்லை. ஆனால் அதை உடைத்துப் பார்த்தால் அரும்பு ஒன்றும் காணப்படுகிறதில்லை. ஆகையினால் அபாவமில்லாமலிருப்பதிலிருந்தே உற்பத்தி ஏற்படுகிறது.

விடை:—எது வித்தைத் துளிர்க்கச்செய்கிறதோ அது முன்னமேயே அதிலிருந்திருக்க வேண்டும். அல்லது வித்தைப் பிளக்கச் செய்கிறது எது? அல்லது உள்ளே இல்லாமலிருந்தால் அது வெளியில் வராது.

3வது வினா:—செய்கிற அளவு அனுபவிப்பாய் என்பது உண்மையில்லையா? சில காரியங்களில் இது உண்மையாயிருப்பதில்லை. ஆகையினால் ஒரு மனிதனை அவன் கர்மங்களினுடைய பலன் பிரகாரம் அநுமானிப்பது ஈசுவரனுடைய ஆதீனத்திற்குட்பட்டிருக்கிறது. அவருடைய இஷ்டத்திலிருக்கிறது அது.

விடை:—அவ்விதமிருக்குமேயானால் கர்மங்களன்னியில் பலனை ஏன் ஈசுவரன் அளிக்கக்கூடாது? ஆகையினால் மனிதன் எவ்விதகர்மம்செய்கிறானோ அவ்விதபலனையே ஈசுவரன் அளிக்கிறாரென்று ஏற்படுகிறது. தன் மனம் போன பிரகாரம் ஈசுவரன் பலாபலன்களை அளிக்கிறதில்லை. ஒருவன் செய்த கர்மங்களினுடைய பலனையே அவர் அளிக்கிறார்.

4-வது வினா:—காரணமன்னியில் காரியம் ஏற்படும். எவ்விதமென்றால் கூர்மை யற்றதும் மிருதுவானதும் மழ மழப்பானதுமான கருவேலி கிளைகளிலிருந்து கூர்மையான முள்ளுகள் உண்டாகின்றதுபோல சிருஷ்டியுடன் சகல ஜடபதார்த்தங்களும் பிராணிகளுடைய சரீரங்களும் (காரணமன்னியில்) ஏற்பட்டிருக்கிறதென்று தெரிய வருகிறது.

விடை:—எதிலிருந்து ஒரு பதார்த்த முண்டாகிறதோ அது அதனுடைய நிமித்த காரணம். ஒன்றுமில்லாததிலிருந்து முள்ளுகள் உண்டாவதில்லை. முள்ளுமரத்திலிருந்து அவைகளுண்டாகிறபடியினால் மரமே அவைகளுக்குக் காரணம். ஆகையினால் காரணமன்னியில் உலகம் சிருஷ்டிக்கப்படவில்லை.

5-வது வினா:—சகல பதார்த்தங்களும் உற்பத்தி செய்யப்பட்டது. நாசத்திற்குரியது. ஆகையினால் சகலமும் அநித்தியம். ஒரு நூல் கூறுவதாவது.

श्लोकार्धेन प्रवक्ष्यामि यदुक्तं ग्रन्थकोटिभिः ।
ब्रह्म सत्यं जगन्मिथ्या जीवो ब्रह्मैव नापरः ॥

நவீன (தற்காலத்திய) வேதாந்திகளும் இவ்விதசந்தேகத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அவர்கள், கோடிக்கணக்கான கிரந்தங்கள், பிரம்மாவே சத்தியமென்றும் ஜகம் பொய் யென்றும், பிரம்மத்திலிருந்து ஜீவன் வேறுபட்டில்லை என்றும் கூறுவதாகச் சொல்லுகிறார்கள். மீதி எல்லாம் பொய் என்றார்கள்.

விடை:—எல்லாம் அநித்தியமாயிருப்பது உண்மையாயிருந்தால் அது அநித்தியம் (பொய்).

விடை:—அவைகள் நித்தியமாயிருப்பதுகூட அநித்தியமே. எப்படியென்றால் அக்னி கட்டைகளை நாசஞ்செய்து அதுவும் நாசமாய் விடுகிறது.

விடை:—அறிவினால் அறியக்கூடியவைகள் பொய்யாகவாவது ஒன்றுமில்லாததாகவாவது ஆகாது. பரம சூக்ஷ்ம காரணமும் அநித்தியமாகாது. வேதாந்திகள் ஜகத்தினுடைய உற்பத்திக்குப் பிரம்மாவே காரணமென்றுகருதுகிறார்கள். பிரம்மா சத்தியமானபடியினால் அவருடைய காரியங்கள் ஒருபொழுதும் அசத்தியமாகாது. கனவைப்போலவும், இருட்டில் கயிற்றைக் கண்டு பாம்பாக நினைப்பதைப்போலவும், இவ்வுலகத்தை கல்பனையாக மனோபாவனை செய்வது உண்மையாகாது. ஏனென்றால் மனோபாவனைகளெல்லாம்ஒருகுணமே. வஸ்துக்களிலிருந்து குணம்வேறாக இருக்கமுடியாது. குணத்திலிருந்து வஸ்துவும் வேறாகவிருக்கமுடியாது. கற்பனை (மனோபாவனை) செய்கிறவர் நித்தியமாயிருந்தால் அவருடைய கற்பனையும் நித்தியமாயிருக்கவேண்டும். இல்லாவிடில் ஜீவனும் அநித்தியமானதே. நீ விழித்திருக்கும் பொழுது பிரத்தியக்ஷமாக வஸ்துக்களைப்பார்த்துக்கேட்டிராவிடில் உனக்குக் கனவு உண்டாகாது. அதாவது இவ்வுலகிலிருக்கும் படியான பல பதார்த்தங்களும் நம்முடைய அறிவுடன் பிரகாசமாகிறபடியினால் அவைகள் நம்முடைய ஞாபகங்களில் சில அறிகுறிகளை அழுத்துகிறது. இவ்வறிகுறிகளைத் திரும்பி யோஜிக்குங்கால் கனவில்உயிருடனிருப்பதாகக் காணப்படுகிறது. தன்னுடைய மனதில் அறிகுறியிலாத விஷயங்களைக்குறித்து கனவுகாண முடியுமேயானால் குருடனாய் பிறந்த ஒருவன் வெளிச்சம், தோற்றம் முதலானவைகளைக் கனவு காணவேண்டும். ஆனால் காண்கிறதில்லை. ஆகையினால் வெளி உலகினுடைய பரபதார்த்தங்களின் அறிகுறிகள்மனதில் பதிவாகின்றன வென்று ஏற்படுகின்றன. வெளிபதார்த்தங்களினுடைய ஞாபகத்தை மறந்தபோதிலும் —ஆழ்ந்த நித்திரையிலிருப்பது போல்—அது இருந்து கொண்டே வருகிறது. அவ்விதமே பிரகிருதியும்—இப்பிரபஞ்சத்தின் உபாதான காரணம்—பிரளயத்திற்கப்புறங்கூட இருந்துகொண்டே வருகிறது.

வினா:—சுற்றியிருக்கும் பதார்த்தங்களும், கனவுகளும் எப்படி ஆழ்ந்த நித்திரையில் அநித்தியமாகின்றனவோ (மறைகிறதோ) அவ்வாறே பார்க்கும் சகலபதார்த்தங்களையும் கனவு மாதிரி கருதவேண்டும்.

விடை:—இம்மாதிரி எப்பொழுதும் கருதக்கூடாது. ஏனென்றால் உறக்கம், ஆழ்ந்த நித்திரை இவ்விரண்டிலேயும் வெளிபதார்த்தங்கள் அஞ்ஞானமா

கிறது (கவனத்தைவிட்டுகலுகிறது.) நம்பின்னேயிருக்கும் சகலபதார்த்தங்களும் அதிருசியமான (பார்க்கமுடியாமல்) போதிலும், அபாவமாகப் (நிலைமையற்றதாக) போகவில்லை. அம்மாதிரியே இவைகளும் அபாவமாக ஆகிறதில்லை, ஆகையினால் நாம் முன்சொன்ன பிரகாரம் பிரம்மா, ஜீவன், பிரகிருதி—உபாதான காரணம்—இம்மூன்றும் அநாதியானது. நித்தியமானது. இவைகளே உண்மை.

புத்தர்களும் ஜயினர்களும்.

6வது வினா:—பஞ்சபூதங்களும் நித்தியமானபடியினால் உலகம் சகலமும் நித்தியமே ?

விடை:—இது உண்மையாகாது. ஏனென்றால் எப்பதார்த்தங்களினுடைய உற்பத்தி நாசம் முதலானவைகள் தினந்தோறும் புலப்படுகிறதோ, அவைகள் நித்தியமாயிருந்தால் சகல தூலஜகமும் அதனுடன்கூடின மானிட சரீரம் வீடு, சாமான்கள் முதலானவைகளும் நித்தியமாகும். இது முட்டாள்த்தனம் ஆகையினால் காரியம் ஒரு பொழுதும் நித்தியமாகாது.

7வது வினா:—சகலமும் வெவ்வேறாயிருக்கின்றன. அவைகளுள் ஒற்றுமை கிடையாது. நாம் பார்க்கிறவைகளெல்லாம் மற்றொன்றை நிஷேதிக்கிறது.

விடை:—மொத்தம் அவயவங்களினுடைய பாகங்களிலிருக்கின்றன. காலம், ஆகாசம், பரமாத்மா, வர்க்கம், வகுப்பு எல்லாம் இனவாரியாய்ப் பிரிந்த போதிலும் ஒன்றே. ஒன்றன்னியில் ஒன்றுந்தனியாயிராது. ஆகையினால் வேற்றுமையில் ஒற்றுமையிருக்கிறது.

8வது வினா:—பசு எவ்விதம் குதிரையாகாதோ, குதிரை எவ்விதம் பசுவாகாதோ அவ்விதமே சகல வஸ்துக்களும் அபாவம்—ஒன்றை யொன்று விலக்குகிறகுணம்—. ஆகையினால்பசுகுதிரை இரண்டும் அபாவம். அப்படியே சகலவஸ்துக்களும் அபாவமானது.

விடை:—ஒன்றையொன்று விலக்குகிறகுணம் சகல வஸ்துக்களிடமிருக்கிறது என்பது உண்மையாயிருந்தபோதிலும் தன்னைத்தானே ஒரு வஸ்து விலக்கிக்கொள்ளுகிறதில்லை. உதாரணமாகப் பசு குதிரையாகாது குதிரை பசுவாகாது. ஆனால் பசு பசுவாகவும் குதிரை குதிரையாகவும் இருந்து வருகின்றன. பதார்த்தங்களுக்குப் பாவமற்றுபோனபோதிலும், இதரேதரபாவம் அன்யோன்ய உறவைக்குறித்து நீங்கள் எப்படி சொல்லக்கூடும்.

9வது வினா:—சுவபாவத்தினால்ஜகம் உண்டாகிறது. எவ்விதம் ஆகாரமும் ஜலமும் சேர்ந்தால் கிருமிகள் விளைகிறதோ, நல்ல நிலத்துடன் விதை வானம் முதலானவைகள் சேர்ந்தால் எப்படி விருக்ஷம் உண்டாகிறதோ, சமுத்திரத்துடன் வாயுசேர்ந்தால் எப்படி பொங்குகிறதோ, பொங்குகிறதுடன் சுண்ணாம்பு மஞ்சள், எலுமிச்சை சேர்ந்து (ஆரத்தி) உண்டாகிறதோ அம்மாதிரியே சகலதத்வங்களினுடைய சுவபாவகுணங்களினால் இப்பிரபஞ்சமுண்டாகிறது. சிருஷ்டிகர்த்தாயாருமே கிடையாது.

விடை:—சுவபாவத்தினால் உலகமுண்டாயிருந்தால் அது நாசமேயடையாது. நாசத்தையே பதார்த்தங்களினுடைய சுவபாவகுணமென்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் அப்பொழுது சேர்க்கையே உண்டாகாது. ஆனால் விநாசம், சேர்க்கை, இரண்டையும் பதார்த்தங்களினுடைய ஸ்வபாவமென்று நீங்கள் சொல்லுவீர்களேயானால் அப்பொழுது விநாசமுமிராது சேர்க்கையுமிராது. சிருஷ்டியும் பிரளயமும் நிமித்தகாரணத்தினாலேயேஉண்டாச்சுதென்று நீங்கள் சொன்னால் அப்பொழுது விநாசத்திலிருந்தும் சேர்க்கையிலிருந்தும் தூரமாயும் வேறாயுமிருக்கிறதாகவே இருக்கவேண்டும். விநாசமும் உற்பத்தியும் ஸ்வபாவமாய் உண்டாகிறதாயிருந்தால், எப்பொழுதும் உண்டாகும். சிருஷ்டி கர்த்தா இல்லாமல் இப்பிரபஞ்சம் சுவபாவமாய் உண்டாயிருந்தால் இதைவிட வேறு உலகங்களான சூரியன் சந்திரன் ஏன் நம்பூமியின் சமீபமாக வரக்கூடாது? மேலும் இப்பொழுது உண்டாகிறது முன்னுக்கு வருகிறது, இவைகளெல்லாம் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட பலபதார்த்தங்களினுடைய சேர்க்கையினாலாகிறது. எவ்வண்ணம் பூமி, வித்து, வானம், இவைகள் சரியாய் சேர்ந்தால் விருக்ஷம் உண்டாகிறதோ, வேறுவிதமானாலில்லையோ அவ்வண்ணமே, அதனுடைய பிரிக்கப்பட்ட பலபாகங்கள்—மஞ்சள், சுண்ணாம்பு, எலுமிச்சை—சேருகிறபடியினாலேயே உாரத்தி (மஞ்சநீர்) உண்டாகிறது. ஆனால் அவைகள் தானாகவே சேருகிறதில்லை. ஏதோ ஒன்றால் சேர்க்கப்படுகிறது. மேலும் தக்கவாறு சேர்க்கப்படாவிட்டால் சரியாயுண்கிறதில்லை. அவ்விதமே பிரகிருதி, பரமாணு, இவைகளை ஞானம் யுக்திஇவைகளுடன் பரமேசுவரன் சேர்க்காவிடில் சிருஷ்டியுண்டாகாது. ஆகையினால் உலகம் தானாகவே உண்டாகவில்லை. அதாவது சுவபாவத்தினால் உண்டாகவில்லை. பரமேசுவரனால் சிருஷ்டிக்கப்பட்டதென்று ஏற்படுகிறது.

வினா:—இஜ்ஜகத்தைச்செய்த கர்த்தா இல்லை. இருக்கவும் போகிறதில்லை. அநாதி காலத்திலிருந்து இருந்து வருகிறது. அது சிருஷ்டிக்கப்படவுமில்லை. நாசத்தையுமடையாது.

விடை:—காரியம்—மற்றொரு காரியத்தினுடைய பயன் — ஒன்றும் கர்த்தா இல்லாது, சித்தியாகாது. பிருதிவி முதலான சகல பதார்த்தங்களும் சம்யோக விசேஷத்தினுடைய பலன். அவைகள் ஒருபொழுதும் நித்தியமாகாது. ஏனென்றால் சோக்கை சம்பந்தத்தினாலுண்டான ஒரு வஸ்து அதைப்பிடித்துக்கொண்டிருக்கிற பல பிரிவுகள் சிதறிப்போய்விட்டால் நிலைநிற்காது. இதை நீ நம்பாவிடில், அதி கடின கல்லையாவது, இரத்தினத்தையாவது, அல்லது எஃகையாவது எடுத்து துண்டுதுண்டாக்கி உருக்கியாவது அல்லது காய்ச்சியாவது பார்ப்பாயேயானால் அது வெவ்வேறான பரமாணுக்களால் சோக்கப்பட்டிருக்கிறதென்று தெரியவரும். எப்பொழுது சேர்ந்திருக்கிறதோ அப்பொழுது அவைகள் தனித்தனியாய்ப் பிரியவேண்டிய காலம் அவசியம் வரவேண்டும்.

வினு:—அநாதியான ஈசுவரன் யாருமில்லை. யோகாப்பியாசத்தினுல் அணிமாதி ஐசுவரியங்களையடைந்து சர்வஞ்ஞும் முதலானவைகளுடன் கூடின கேவலம் ஞானி ஒருவனே. அந்த ஜீவனைப்பரமேசுவரன் என்று சொல்லுகிருர்கள்.

விடை:—அநாதியான ஈசுவரன் இவ்வுலகைச் சிருஷ்டிக்காவிடில், சாதனத்திஞல் சித்தியையடைந்து ஜீவன்களுக்காதாரமான சரீரம் இந்திரியம் இவைகளை யாரால் செய்யமுடியும்? இவர் இல்லாது ஜீவசாதனஞ் செய்யமுடியாது. சாதானமில்லாமல் போனுல் சித்தி எங்கிருந்து ஏற்படும்? எவ்வளவு சாதனஞ் செய்தபோதிலும் சித்தியை அடைந்தபோதிலும் கூட, ஈசுவரனுக்கு இருக்கும் சுயம் சநாதானம், அநாதி சித்தி, அனந்தசித்தி இவைகளுக்குச் சமானமானவராக வேறெந்த ஜீவனுலும் முடியாது. ஏனென்ருல் ஜீவன் கற்று முயன்ற போதிலும், அளவுள்ள ஞானத்தை அடைந்து சாமார்த்தியத்தையே பெறலாம். ஞானம் ஒருக்காலும் அனந்தமாகாது. கவனியுங்கள். இதுவரையிலும் ஒருயோகியாலும் ஈசுவரனுல் செய்யப்பட்ட சிருஷ்டிக்கிரமத்தைத் திருப்பமுடியவில்லை. திருப்பவும் முடியாது. ஆதியற்ற சித்தமான பரமேசுவரன் பார்வைக்குக் கண்களையும், கேழ்பதற்குக் காதுகளையும் கொடுத்திருக்கிருர். இதை எந்தயோகியும் மாற்றமுடியாது. ஜீவன் ஒருக்காலும் ஈசுவரனுக முடியாது.

வினு:—முன்செய்தமாதிரியே இப்பொழுதும் சிருஷ்டிக்கிருரா? அல்லது மாற்றி அமைக்கிருரா?

விடை:— இப்பொழுது எவ்விதமிருக்கிறதோ அவ்விதமே முன்னேயிருந்தது. இனிமேலுமிருக்கும். வேதம் கோஷிக்கிறதாவது.

सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत् ।
दिवं च पृथिवीं चान्तरिक्षमथो स्वः ॥ ரிக். 10. 160. 3.

பரமேசுவரன் எவ்வண்ணம் முன்கல்பத்தில் சூரியன் சந்திரன் மின்னல் பூமி, அந்தரீக்ஷம் (ஆகாசம்) முதலானவைகளைச் சிருஷ்டித்தாரோ அவவண்ணமே இப்பொழுதும் சிருஷ்டித்திருக்கிருர். அம்மாதிரியே இனியும் சிருஷ்டிப்பார். ஆகையினுல் பரமேசுவரனுடைய காரியங்கள் தப்புதவறன்னியிலிருக்கிறபடியினுல் எப்பொழுதும் ஒரேமாதிரியாகவிருக்கும். யார் அல்பஞ்ஞரோ, யாருடைய ஞானம் நாசத்திற்கும், குறைவிற்கும் காரணமாயிருக்கிறதோ அவருடைய காரியங்கள் தப்புள்ளதாகவும் குறைவுள்ளதாகவும் ஆகும். ஈசுவரனுடைய காரியங்களோவென்ருல் அவ்வாருகாது.

வினு:—சிருஷ்டி விஷயத்தில் வேதாதி சாஸ்திரங்கள் மாறுகிறதா? அல்லது சரியாய் இருக்கிறதா?

விடை:—சரியாயிருக்கிறது.

வினு:—அவைகள் சரியாயிருந்தால் ஐதத்திரேய உபநிஷத்தில் இம்மாதிரி சொல்லுவானேன்?"

तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः । आकाशाद्वायुः । वायोरग्निः । अग्नेरापः । अद्भ्यः पृथिवी । पृथिव्या ओषधयः । ओषधिभ्योऽन्नम् । अन्नाद्रेतः । रेतसः पुरुषः स वा एष पुरुषोऽन्नरसमयः ॥ தைத்ரே பிரம். 1.

காரணரூபத்திலிருந்து எங்கும்வீசின ஜடபதார்த்தங்களினுடைய மூச்சினால் உண்டான ஆகாசம் அல்லது அவகாசம் பரமேசுவரனிடமிருந்தும் பிரகிருதியிடமிருந்தும் உண்டாச்சுது. உண்மையில் ஆகாசத்திற்கு உற்பத்தி கிடையாது. ஏனென்றால் ஆகாசமன்னியில் பிரகிருதியும் பரமாணுவும் எங்கு தங்கும்? ஆகாசத்திற்கப்புரம் வாயு, வாயுவுக்குப்புரம் அக்கினி, அக்கினிக்கப்புரம் ஜலம், ஜலத்திற்கப்புரம் பிருதிவி, பிருதிவியிலிருந்து ஔஷதிகள், ஔஷதிகளிலிருந்து அன்னம், அன்னத்திலிருந்து வீரியம், வீர்யத்திலிருந்து புருஷன் அதாவது சரீரம்முறையேஉண்டாகின்றன. சாந்தோக்யஉபநிஷத்தில்சிருஷ்டிக்கிரமம் அக்கினியிலிருந்தாரம்பிக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. வேதத்திலேயே சிலவிடங்களில் புருஷன் என்றும் வேறுசிலவிடங்களில் ஹிரண்யகர்பன் சிருஷ்டிக்கிரமமென்றும் கூறப்பட்டிருக்கிறது. மீமாம்சத்தில் கர்மம், வைசேஷிகத்தில் காலம், நியாயத்தில் பரமாணு, யோகத்தில் புருஷார்த்தம் சாங்கியப் பிரகிருதியிலும் வேதாந்தத்திலும் பிரம்மா, இக்கிரந்தங்களில் முறையேஇவைகளிருந்தே சிருஷ்டியுடைய உற்பத்தி உண்டானதென சொல்லப்படுகின்றன. இதில் தப்புயாவை? உண்மை யாவை?

விடை:—எல்லாம்சரி ஒன்றுவது தப்பில்லே. அவைகளை அறியாதவனே தப்பிலிருக்கிறான். ஜகத்திற்குப் பரமேசுரன் நிமித்த காரணம், பிரகிருதி உபாதான காரணம். மகாப்பிரளயத்திற்கப்புரம் ஆகாசத்திலிருந்து சிருஷ்டியாரம்பமாகிறது. பிரளயத்தில் ஆகாசத்தையும் வாயுவையும் எட்டாமல் அக்கினியையே அடைகிறபடியினால் அதற்கப்புரம் அக்கினியிலிருந்தே சிருஷ்டியாரம்பமாகிறது. பிரளயத்திற்குப்பிறகு அக்னிகூட நாசமாகாதபடியினால் அடுத்த சிருஷ்டி ஜலத்திலிருந்துஆரம்பமாகிறது.அதாவதுமுன்பிரளயம் எங்குமுடிகிறதோ அங்கிருந்து சிருஷ்டியாரம்பமாகிறது. நாம் முதல் அத்தியாயத்தில் கூறியவண்ணம், புருஷ ஹிரண்யகர்ப்பம் என்பது பரமேசுவரனுடைய திருநாமங்கள். ஒரே விஷயத்தைக்குறித்து பலவேறாகப் பலசந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடிசொல்லுவது விரோதமாகாது. ஆறு சாஸ்திரங்களும் எப்படி சரியாயிருக்கிறதென்று கவனியுங்கள். மீமாம்சத்தில் "கர்மசேஷ்டையன்னியில் (சரியான ஊக்கம்) ஒரு காரியமும் இவ்வுலகில் செய்யமுடியாது" என்றும், வைசேஷகத்தில் "காலச்செலவன்னியில் ஒன்றும் செய்யமுடியாது" என்றும் நியாயத்தில் "உபாதானகாரணமன்னியில் கொஞ்சம் கூட ஒன்றும் செய்யமுடியாது" என்றும் யோகத்தில் "வேண்டிய வித்தை ஞானம், விசாரணையன்னியில் ஒன்றும் முடியாது" என்றும் சாங்கியத்தில் "தத்வங்களுடைய சேர்க்கையன்னியில் ஒன்றும் செய்ய முடியாது" என்றும் வேதாந்தத்தில் "செய்கிறவனன்னியில் ஒருபதார்த்தையும் உண்டுபண்ண முடியாது"

என்றும் முறையே கூறப்பட்டிருக்கின்றன. தனித்தனியாய் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறவாறு இச்சிருஷ்டிக்கு ஆறு தனிக்காரணங்கள் வசியம் ஆகின்றன. ஆகையினால் விரோதம் ஒன்றுமில்லை. ஒரே வீட்டின் கூரையை முடைய ஆறுமனிதர்கள் வசியமாவதுபோல் ஆறுசாஸ்திரங்களும் சிருஷ்டிக்கார்யத்தை வியாக்கியானஞ் செய்ய ஒன்று சேருகிறது. இது குருடர்களுடைய யானைத்தைப்போலிருக்கிறது.

ஒருவன் அறுவோன்றை—குருடர் ஐவர். பக்தமான திருஷ்டியையுடையவன் ஒருவன்—இவர்களை அழைத்துக்கொண்டு யானை ஒன்றின்பல அவயவங்களைத் தனி தனியாகக் காண்பித்து அது எப்படி இருக்கிறதென்று வினவ முதல் மனிதன் தூணைப்போல் என்றும் இரண்டாவதவன் விசிறியைப்போல் என்றும், மற்றவன் பெரிய உலக்கையைப்போல என்றும், மற்றொருவன் துடப்பத்தைப்போல் என்றும், ஐந்தாவதானவன் தட்டையாயிருக்கிறதென்றும், எருமையின் சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் பெருந்தூண்கள் என்றும் முறையே மொழிந்தனர். இம்மாதிரி முனிகளால் வரையப்பட்ட கிரந்தங்களை ஓதாமல், கற்பனைசெய்யப்பட்ட தற்போதைய புன்கவிகளால் எழுதப் பட்ட நூல்களைப்படிப்பவர் பிறரை தூஷிப்பதிலேயும் அற்பத்தைப் பெரிதாக கருதுவதிலேயுமே கவனத்தைச் செலுத்துகிறார்கள். அவர்களுடைய உபதேசங்களைப் புத்திமான்கள் ஏற்கக் கூடாது, ஏனென்றால் குருடனை முன்சென்று போகிற குருடர்கள் துக்க சாகரத்திலேயே முழுகி ஏன் அவஸ்தைபடமாட்டார்கள்? அற்பவித்தை சுயநலப்பிரியம், இந்திரியங்களில் ஆசை, இக்குணமுடையவர்கள் பிழைத்திருப்பதினால் உலகத்திற்கு நாசமே ஏற்படும்.

வினா:—காரணமன்னியில் காரியமில்லாமல்போனால் காரணத்திற்கு ஏன் காரணங்கிடையாது?

விடை:—ஒன்றுமறியாதவனே! உன்னுடைய புத்தியை ஏன் கொஞ்சம் உபயோகிக்கக்கூடாது? கவனி! உலகத்தில் காரணம், காரியம் என்று இரண்டு பதார்த்தங்களே உண்டு. எது காரணமோ அது காரியமாகாது. எது காரியமோ அது அநேக சமயத்தில் காரணமாகாது. எது வரையில் மனிதன் சிருஷ்டியை ஏற்றவிதமாய் அறியாமலிருக்கிறானோ அவனுக்குச்சரியான ஞானம் உண்டாகாது.

சிருஷ்டி என்பதென்ன?

नित्यायाः सत्वरजस्तमसां साम्यावस्थायाः प्रकृतेरुत्पन्नानां परमसूक्ष्माणां पृथक् पृथग्वर्त्तमानानां तत्त्वपरमाणूनां प्रथमः संयोगारम्भः संयोगविशेषादवस्थान्तरस्य स्थूलाकारप्राप्तिः सृष्टिरुच्यते ॥

சத்வ குணம் ரஜோகுணம், தமோ குணம்,இவைகள் எங்கு ஒருங்கே சமயாய்ச்சேர்ந்திருக்கிறதோ அதுவே அநாதியானதும்நித்தியஸ்வரூபமானதுமான பிரகிருதி. பிரகிருதியிலிருந்துண்டான பரம சூக்ஷமமாயும், வேறுபட்டிருக்கிற பர

மாணுஷ்டிய சேர்க்கையே முதலாரம்பம் (சிருஷ்டி). பரமாணுக்களினுடைய பலவிதமான—பலவிதங்களிலேயும், பிரமாணங்களிலேயும்—சேர்க்கையானது சூக்ஷ்ம ஸ்தூல—சிருஷ்டி என்று சொல்லும்படியான விசித்திர ரூபஸ்திதியை அடையும் வரையில் செல்லுகிறது.

முதல் சம்யோகத்தில் சேர்ந்து அதை முடித்து, சம்யோகத்திற்கு முந்தியும் வியோகத்திற்கு (அதைச்சேர்க்கும் பலபாகங்களை கழித்தல்) ப்பிந்தியும் மீதியாயிருப்பது காரணம். சம்யோகத்திற்கப்புரம் எது நிற்கிறதோ, வியோகத்திற்கப்புரம் எது மீதியில்லையோ, அதுவே காரியம். எவன் காரணத்தின் காரணத்தையும், காரியத்தின் காரியத்தையும், கர்த்தாவின் கர்த்தாவையும், சாதனத்தின்சாதனத்தையும், செய்கையின் செய்கையையும் அறியவிரும்புருனே அவன் பார்த்தபோதிலும் குருடன், கேட்டபோதிலும் செவிடன், படித்திருந்தபோதிலும் மூடன். தீபத்திற்குத் தீபமும், கண்ணுக்குக் கண்ணும், சூரியனுக்குச் சூரியனும் எங்கேயாவது உண்டா? எது எதினுலுண்டாகிறதோ அதுகாரணம். உண்டானது காரியம். காரியத்தைச் செய்கிறவனே கர்த்தா.

கீதை என்ன சொல்லுகிறதென்று கவனியுங்கள்.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥ ப. கீதை 2. 16.

அசத்திலிருந்து (ஒன்றுமில்லாததிலிருந்து) பாவமும், சத்திலிருந்து அபாவமும் உண்டாகாது. இவ்விரண்டினுடைய நிர்ணயத்தையும் தத்வதரிசிகள் அறிந்திருந்தார்கள். பக்ஷபாதமுள்ளவன், அவித்வான், இவர்களால்இதை எவ்விதம் சகஜமாய் அறியமுடியும்? ஏனென்றுல் சத்சங்கமற்று தீர விளங்கயோசனை செய்யாதவர்கள் எப்பொழுதும் அஞ்ஞானத்திலும் சந்தேகத்திலும் மூழ்கியிருக்கிறுர்கள். சகல சித்தாந்தங்களையும், வித்தைகளையும் அறிந்தும், அறிவதற்குப் பாடுபட்டும் அறிந்துகொண்டு கபடமன்னியில் பிறருக்குப்போதிக்கிறவர்களே மேலோர். ஆகையினுல் காரணமொன்றுமன்னியில் சிருஷ்டியைச் செய்ததாகக் கருதுகிறவர்கள் ஒன்றுமறியாத சிற்றறிவுடையோர்.

சிருஷ்டிகாலம் வரும்பொழுது பரமாத்மா பரமசூக்ஷ்மமான பதார்த்தங்களைச்சேகரிக்கிறுர். அதனுடைய முதல் அவஸ்தையில் பரமசூக்ஷ்மபிருகிருதிரூப காரணத்திலிருந்து உண்டாகிற கொஞ்சம் ஸ்தூலத்திற்கு மகாதத்வமென்று பெயர். அதிலிருந்து ஏற்படும் கொஞ்சம் தூலத்திற்கு அகங்காரமென்று பெயர். அகங்காரத்திலிருந்து பிளவுப்பட்டு ஐந்துசூக்ஷ்ம பூதம் ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்துகர்மேந்திரியங்கள், பதினுென்று மனம் இவைகள் கொஞ்சஸ்தூல மடைகிறது. பஞ்ச தன்மாத்ரங்களும் அநேகஸ்தூலவஸ்துக்களையடைந்து கிரமமாகப் பஞ்சஸ்தூலமாகிறது. அதிலிருந்து நானுப்பிரகாரமான ஓஷதங்களும் விருக்ஷம் முதலானவைகளும், அதிலிருந்து வீரியமும் வீரியத்திலிருந்து சரீரமும் உண்டாகின்றன ஆனுல் ஆதி சிருஷ்டியில் மைதனங்

கிடையாது. ஏனென்றால் ஸ்திரீபுருஷர்களைப் பரமாத்மா உண்டு செய்து அவர்களில் ஜீவன்களைச் சம்யோகஞ் செய்த பிறகே மைதுனத்தினால் சிருஷ்டியாரம்பமாகிறது. சரீரத்தின் ஞான பூர்வகமான சிருஷ்டியைப் பாருங்கள். அதைக் கண்டு வித்வான்கள் ஆச்சரியமடைகிறார்கள். முதலில் எலும்பினுடைய கட்டு வேலை, நாடி, நரம்பு முதலானவைகளான வலைப்பின்னல்களால் இணைக்கப்பட்டு, மாம்சத்தினால் நிரைக்கப்பட்டு, நகம் ரோமம் முதலான அநுபந்தங்களுடன் கூடின தோலினால் மூடப்பட்டிருக்கிறது. பிறகு எவ்வளவு அழகாய் ஹிருதயம், கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் முதலான இந்திரியங்களமைக்கப் பட்டிருக்கின்றன. மூளையின் அமைப்பு, அக்ஷகத்துடன் (கண்ணிலுள்ள வலைபோன்ற ஜவ்வு) கண் நிரம்பினுடைய பின்னல் வலைபோன்ற சேர்க்கை, இந்திரிய மார்க்கங்களினுடைய பிரகாசம், ஜீவனுடையஜாக்கிரதை, கனவு, உரக்கம், தூக்கம், முதலானவைகளை அனுபவிப்பதற்கேற்றதான விசேஷஸ்தானங்களினுடைய ஏற்பாடு, சகலதாதுக்களினுடைய அமைப்பு, இன்னும் சரீரத்திலிருக்கும் படியான ஸ்தானங்களினுடைய அற்புத சிருஷ்டி இவைகளெல்லாம் பரமேசுவரனன்னியில் வேருயாரால் செய்யமுடியும்? இதன்னியில் பலவிதமான இரத்தினம், முதலானவைகளினால் அலங்கரிக்கப் பட்ட பூமி, அநேகவிதமான மரங்களினுடைய விதைகள், அநந்தமான வர்ணம் சாயை, இவைகளையுடைய இலைகள், இதழ்கள், புஷ்பங்கள், பழங்கள், வேருகள் பலவிதமான வாசனைகள் பரிமளங்கள், இவைகளுடன்கூடின தானியங்கள் இவைகளெல்லாம் பரமேசுவரனன்னியில் வேறுயாரால் செய்யமுடியும்? பரமேசுவரனைத்தவிர வேறுயாராலும் அளவற்ற பூமி, சூரியன், சந்திரன், முதலான கிரகங்களைச் சிருஷ்டித்துப் பரிபாலித்து நடத்த முடியாது.

ஏதாவது பொருளைப்பார்க்கும்பொழுது நமக்கு இருவித எண்ணங்கள் உண்டாகின்றன. (1) பதார்த்தம் எவ்விதமிருக்கிறது (2) அதனுடைய கர்த்தா யார்? உதாரணமாக வனத்தில் அழகான ஆபரணம் ஒன்றை ஒருவன் கண்டான் என்று வைத்துக்கொள்வோம். அதைப்பார்த்ததும் தங்கத்தினால் செய்ததென்றும் கைதேர்ந்த தட்டானால் செய்யப்பட்டதென்றும் தெரியவந்தது. அம்மாதிரியே இந்நானுவிதமான சிருஷ்டியினுடைய ஆச்சரியங்கள், இவைகளுக்கு மூலகாரணமாகிற பரமேசுவரனை ஸ்தாபிக்கிறது அல்லவா?

ஆதி சிருஷ்டி.

வினா:—மனிதன், பூமி. முதலில் எது சிருஷ்டிக்கப்பட்டது?

விடை:—பூமி முதலானவைகளே! ஏனென்றால் அவைகளன்னியில் மனிதன் எங்கு தங்கி தன்னைக்காப்பாற்றிக்கொள்ளக்கூடும்?

வினா:—முதலில் ஒரே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டானா? அல்லது அநேகம் பெயர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்களா?

விடை:—ஒருவனுக்குமேல்; ஏனென்றால் தங்களுடைய கர்மத்தினால் பிறக்க உரிமையுள்ள ஜீவன்கள், சிருஷ்டியுற்பத்தியுடன் பிறந்தார்கள், வேதம் முறையிடுகிறதாவது.

मनुष्या ऋषयश्च ये । ततो मनुष्या अजायन्त

(ஆதியில்) அநேகமனிதர்களும் முனிகளும் பிறந்தார்கள். அவர்களே மானிடர்களின் மூதாதைகள். இவ்வேதவாக்கியத்தின் பிரமாணப் பிரகாரம் சிருஷ்டியுடன் ஆயிரக்கணக்கான மனிதர்கள் உண்டாயிருந்தார்களென்று ஏற்படுகின்றன. சிருஷ்டியைக்காணும்பொழுதும் அநேகம் மாதா பிதாக்களினுடைய சந்ததிகள் என்று ஏற்படுகிறது.

வினு:—சிருஷ்டியில் மனிதன் முதலானவர்கள் குழந்தைகளாகவா, யௌவனர்களாகவா, அல்லது விருத்தர்களாகவா அல்லது இம்மூன்றுவிதத்திலேயுமா சிருஷ்டிக்கப்பட்டார்கள் ?

விடை:— யௌவனமாகவே சிருஷ்டித்தார். ஏனென்றால் குழந்தைகளாய்ப் பிறப்பித்தால் அவர்களைக்காப்பாற்ற மனிதர்கள் வேண்டும், விருத்தர்களாலோ, மானிடவர்கத்தை விருத்தி செய்ய முடியாது. ஆகையினால் யௌவனர்களாகவே சிருஷ்டித்தார்.

வினு:—சிருஷ்டிக்கு எப்பொழுதாவது ஆரம்பம் உண்டா ? இல்லையா ?

விடை:—கிடையாது; இரவுபகலைத்தொடருகிறதுபோலவும், பகல்இரவைத்தொடருகிறது போலவும், இரவு பகலை முந்துகிறதுபோலவும், பகலை இரவு முந்துகிறதுபோலவும், பிரளயத்தைச் சிருஷ்டித்தொடருகிறது. பிரளயம் சிருஷ்டியைத்தொடருகிறது. சிருஷ்டி பிரளயத்தை முந்துகிறது பிரளயம் சிருஷ்டியை முந்துகிறது. இம்மாதிரி ஆரம்பமன்னியில் நடக்கிறது. அதற்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. ஆனால் பகலினுடைய ஆதியையும் அந்தத்தையும் இரவினுடையதையும் நாம் காணுவதுபோலவே, சிருஷ்டிக்கும் பிரளயத்திற்கும் ஆதியந்தமுண்டு. பரமாத்மா ஜீவன் பிரகிருதி.—இம்மூன்றும் ஸ்வரூபத்தினால் அநாதியானது, உற்பத்தி, ஸ்திதி இவைகள் பிரவாகத்தினால்— காலம் முழுவதும் சரியாக ஓடாத நதியைப்போல் — அநாதியானது. அது கோடை காலத்தில் உலர்ந்து காய்ந்து போகிறது. மாரிகாலத்தில் திரும்பியும் காண்கிறது. எவ்வண்ணம் பரமேசுவரனுடைய குணம் கர்மம் ஸ்வபாவம் இவைகள் அநாதியோ (ஆதியந்தமில்லாததோ) அவ்வண்ணமே அவரால் செய்யப்படும் காரியங்களும் ஆதியந்தமற்றது.

வினு:—சில ஜீவன்களுக்கு மனித ஜென்மத்தையும், சிலவைகளுக்குச் சிங்கம் முதலான குரூரஜென்மத்தையும், சிலவைகளுக்கு விருக்ஷம், புழு, பரவை முதலானவைகளுடைய ஜென்மத்தையும் அளித்திருக்கிறார். இதனால் பரமாத்மா பக்ஷபாதமுள்ளவரென்று ஏற்படவில்லையா ?

விடை:—இல்லை. பக்ஷபாதமொன்றையும் அது காண்பிக்கவில்லை. முன் ஜன்மத்தில் செய்த கர்மாநுசாரப் பிரகாரமே பிறப்பை அளிக்கிறார். இவ்விதமன்னியில் ஜன்மமளித்தல் அவர் பக்ஷபாதமுள்ளவர்தான்.

வினு:—முதல் மனிதசிருஷ்டி எவ்விடத்தில் உண்டானது.

விடை:—திபேத் எனப்படும்படியான திருவிஷ்டாபில்,

வினா:—சிருஷ்டிகாலத்தில் ஒரே ஜாதியிருந்ததா ? அல்லது அநேகமா ?

விடை:—ஒரே மனிதஜாதிதான் இருந்தது. பிறகு தீயோர்கள், நல்லோர்கள் என்று இரண்டாச்சுது. கெட்டவர்கள் தஸ்யு என்றும் நல்லவர்கள் ஆரியர் என்றும் அழைக்கப்பட்டார்கள். ரிக்வேதம் கோஷிக்கிறதாவது.

विजानीह्यार्यान्ये च दस्यवः

சிரேஷ்டர்களுடைய பெயர் ஆரியர் வித்வான் தேவன். துஷ்டர்களுடைய பெயர் தஸ்யு. வித்வான்கள் நல்லவர்கள் தேவர்களென்றும், வழிபறிக் கொள்ளைக்காரர்கள், மூடர்கள், கெட்டவர்கள், இவர்கள் அசுரர்களென்றும் அழைக்கப்பட்டார்கள். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களென்று ஆரியர்கள் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் மூன்று வகுப்பைச்சார்ந்தவர்களும் வித்வான்கள். இவர்களுக்குத் துவிஜர்களென்றும் பெயர் நான்காவது வகுப்பினர்க்ள் மூடர்களும் அவித்வான்களுமானபடியினால் அவ்விதமழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு அநாரியர்கள்— ஆரியர்களில்லாதவர்கள் என்றும் பெயர். இம்மாதிரி பிரிவு அதர்வவேதத்திலும் " சிலர் ஆரியர்கள் மற்றவர்கள் அநாரியர்கள் " என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆரியர்களின் முன்னேற்றம்.

வினா:—பிறகு அவர்கள் எவ்விதம் வந்தார்கள் ?

விடை:— ஆரியர்களுக்கும், தஸ்யுக்களுக்கும் அதாவது வித்வான்களான தேவர்களுக்கும், அவித்வான்களான அசுரர்களுக்கும் இருந்த சினேகிதம் சதா சண்டையாகமாறி மிகுந்த உபத்திரவமுண்டான பொழுது ஆரியர்கள் சகல பூகோளத்திலும், இந்நாட்டை உத்தம பூமியென அறிந்து இங்குவந்து வசிக்க வாரம்பித்தார்கள். ஆகையினாலேயே இதற்கு ஆரியவர்த்தம் என்று பெயர்

வினா:—ஆரியவர்த்தத்தினுடைய எல்லைகள் யாது ?

आसमुद्रात्तु वै पूर्वादासमुद्रात्तु पश्चिमात् ।
तयोरेवान्तरं गिर्योरार्यावर्त्तं विदुर्बुधाः ॥
सरस्वतीदृषद्वत्योर्देवनद्योर्यदन्तरम् ।
तं देवनिर्मितं देशमार्यावर्त्तं प्रचक्षते ॥ மனு. 2. 22, 27.

விடை:—வடக்கில்ஹிமாலயபர்வதத்தினாலும், தெற்கில் விந்தியாசலபர்வதத்தினாலும், கிழக்கு, மேற்கு இத்திக்குகளில் சமுத்திரங்களினாலும் சூழப்பட்டிருக்கிறது. மேற்கில் சரஸ்வதிநதியும், அடக்நதியும், கிழக்கில், நேப்பாளத்தின் கிழக்குபாகங்களிலிருக்கும் மலைகளில் உற்பத்தியாகி வங்காளத்தின் மேற்கேயும் ஆசாம் பர்மா இவைகளுக்குக்கிழக்கேயுமாகப் பாய்ந்து தெற்கு சமுத்திரத்திலே (இது மகா சமுத்திரம்) வங்காளவிரிகுடாவில் கலக்கும் திருஷ்டபதி என்கிற பிரம்மபுத்திராவினாலும் சூழப்பட்டிருக்கின்றன. வடக்கே ஹிமாலயத்திலிருந்து தெற்கே விந்தியாசலம், ராமேஸ்வரம்வரையில் அகப்பட்டிருக்கும் நாட்டிற்கே ஆரியர்வர்த்தம் என்றுபெயர். ஏனென்றால் தேவர்களாலும் (வித்வான்களாலும்) ஆரியர்களாலும் (சிறந்த) குடியேறப்பட்டு வாசஸ்தானமாக்கிக்கொள்ளப்பட்டது.

வினு:—இத்தேசத்திற்கு அதற்கு முன்னிருந்த பெயரென்ன? இதில்யார் இருந்தார்கள்?

விடை:—இதற்கு முந்திபெயரேகிடையாது. ஏனென்றால் ஆரியர்களுக்கு முந்தி இதில்யாரும் வசிக்கவில்லை. ஏனென்றால் சிருஷ்டி முதலிலிருந்து கொஞ்சகாலத்திற்குப்பிறகு திபேத்திலிருந்து நேராகவந்து இத்தேசத்தில் தான் வசித்தார்கள்.

வினு:—சிலர், அவர்கள் இரானிலிருந்து (பெர்ஷியா) வந்ததாகவும், அதினுலேயே அவர்களுக்கு ஆரியர்களென்றும் பெயர் என்கிருர்கள். ஆரியர்களுக்குமுந்தி இது காட்டாளர்களால் வசிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆரியர்கள் அவர்களை அசுரர்களென்றும் இராக்ஷஸர்களென்றுமழைத்துத் தங்களைத் தேவர்கள் என்றும் அழைத்துக்கொண்டிருந்தார்கள். இவர்களிருவருக்கும் உண்டானசங்கிராமத்திற்கே (யுத்தத்திற்கே) தேவாசுரசங்கிரகம் என்றுபெயர். இது உண்மையா?

விடை:—இது முழுப்பொய். ஏனென்றால் நாம் சொன்னதையே வேதங்கள் தாங்குகிறது.

विजानीह्यार्यान्ये च दस्यवो बर्हिष्मते रन्धया शासदव्रतान् ॥ ரிக். 1. 5. 8.

தார்மீகர்கள், வித்வான்கள், சத்புருஷர்கள் இவர்களுக்கு ஆரியர் என்று பெயர். இவர்களுக்கு விரோதமான ஜனங்களுக்குத் **த**ஸ்யு என்று பெயர். அதாவது திருடர்கள் துஷ்டர்கள். மேலும்

उत शूद्रे उतार्ये ॥ அதர்வ. 19. 62.

துவிஜர்கள்—பிரம்ம க்ஷத்திரியவைசியர்கள்—ஆரியர்களென்றும், சூத்திரர்கள் அநாரியர்களென்றும் அழைக்கப்படுகிருர்கள். இவ்வித வேதப்பிரமாணங்களிருக்க எவ்விதம் விதேசியர்கள் (அந்நிய நாட்டவர்கள்) சொல்லும் கல்பனையைப் புத்திமான்கள் நம்புவார்கள். தேவாசுரயுத்தங்களில் ஆரியவர்த்தத்தைச்சார்ந்த **அர்ஜுனன் தசரதன்** இன்னும் இத்தகையார் அசுரர்களைவெல்ல ஆரியர்களுடைய உதவிக்குச்சென்றிருக்கிருர்கள். ஆகையிஞல் ஆரியவர்த்தத்திக்கப்புறமிருக்கிறவர்கள் மிலேச்சர்களென்றும்தஸ்யுக்களென்றும் ஏற்படுகிறது. ஏனென்றால் ஹிமாலயத்திலிருக்கும் ஆரியர்களை எதிர்த்தால் ஆரியவர்த்தத்தின் அரசர்களும், இராஜர்களும் வடக்கிலிருக்கும் ஆரியர்களினுடைய உதவிக்குச் சென்ருர்கள். ஸ்ரீராமருக்கும் ராவணனுக்கும் தெற்கேநடந்த யுத்தத்தின் பெயர் தேவாசுரசங்கிராமமல்ல. ராமராவணயுத்தமென்று பெயர் அல்லது ஆரியர்களுக்கும் இராக்ஷசர்களுக்கும் நடந்த சங்கிராமமென்றுபெயர். ஒரு சமஸ்கிருதகிரந்தத்திலாவது இதிகாசத்திலாவது ஆரியர்கள் இரானிலிருந்து வந்தார்கள், வந்துகாட்டாளர்களையடித்து ஜயம்பெற்று இத்தேசமன்னர்களானுர்கள் என்றுசொல்லப்படவில்லை. அதுவுமன்னியில் விதேசியர்கள் எழுதுவதை நாம் எப்படி நம்புவது?

म्लेच्छवाचश्चार्यवाचः सर्वेते दस्यवः स्मृताः ॥ மனு 10. 45.
म्लेच्छदेशस्त्वतः परः ॥ மனு. 2. 23.

"ஆரியவர்த்தத்தைத்தவிர மற்றதேசங்களெல்லாம் மிலேச்ச தேசம் தஸ்யு தேசம். ஆரியவர்த்தத்தின் ஈசானியம், உத்திரம், வாயவியம், பஸ்சிமம், இத்திக்குகளிலிருக்கிறவர்கள் தஸ்யுக்கள், அசுரர்கள், மிலேச்சர்கள். தக்ஷிணம், ஆக்னேயம் முதலான திக்குகளில் வசிக்கிறவர்கள் இராக்ஷசர்கள். இவ்விதமாக முறையே அறியப்படுகிறார்கள். இன்றைக்கும் இராக்ஷசர்களுடைய வர்ணனைத் தற்காலத்திய நீக்ரோக்களினுடைய பயங்கரமான உருவத்திற்குச் சரியாயிருப்பதாகத் தெரிந்துகொள்ளவும். ஆரியவர்த்தத்தின் மறுபக்கத்தில் வசிக்கிறவர்களுக்கு நாக வென்றும் பெயர். அவர்களுடைய ஊர் பாதாளம் ஏனென்றால் ஆரியவர்த்தமனிதர்களுடைய பாதத்தின் கீழேயிருக்கிறபடியினால் அவர்களுடைய அரசன் நாகவம்சத்தைச்சேர்ந்தவன்—நாகவென்னும் ஆதி அரசனிடமிருந்து.— அவருக்குப்பிறந்த உலோபியையே அர்ஜுனனுக்கு மணஞ்செய்து கொடுத்தார்கள். இக்ஷுவாகு முதற்கொண்டு கௌரவ பாண்டவர்கள் வரையில் முழுபூகோளத்திலேயும் ஆரியர்களுடையஇராஜ்யம் ஓங்கி வேதம் ஆரியவர்த்தமற்ற நாடுகளில்கூட கற்பிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வந்தது.

அறிஞர்களில் பிரம்மாவே முதல். அவருடைய புத்திரன் விராட். விராட்டினுடையபிள்ளை மனு. மனுவிற்கு மரீசி முதலான நூறுகுமாரர்கள்இருந்தார்கள். இவருக்கு ஸ்வாயம்பவ முதலான ஏழுமன்னர்கள் உண்டானார்கள். இவர்களுடையசந்தானமே இக்ஷுவாகுமுதலான மன்னர்கள். இவ்விக்ஷுவாகர்களே ஆரியவர்த்தத்தில்குடியேறி இராஜ்யத்தைஸ்தாபித்தார்கள். இப்பொழுது துரதிருஷ்டத்தினாலும் ஆரியர்களினுடைய ஆலசியம், அலக்ஷியம், பரஸ்பரவிரோதம், இவைகளினால் சுதந்திரம், சுயாதீனம், நிர்பயம், இராஜ்யம் இவைகள் தங்களுடைய ஊரிலேயே இல்லாமல் போய்விட்டது. கொஞ்சமுள்ளதும் விதேசிகளினுடைய பாதத்தினால் நசுக்கப்பட்டுப்போகிறது. சில இராஜ்யங்களே சுதந்திரத்துடனிருக்கிறது. கெட்டகாலம் வரும்பொழுது தேசவாசிகள் அநேகவிதமான துக்கங்களை அநுபவிக்கிறார்கள். யார் எவ்வளவு செய்தபோதிலும் சுதேச ராஜ்யமே எல்லாவற்றையும் விட உத்தமமானது. மதவிஷயங்களில் தலையிடாமல் வேறாயும், சகலரிடத்திலும்—சுதேசத்தவர்கள், விதேசத்தவர்கள்—பக்ஷபாதமற்றுப்பிரியமாயும், பிரஜைகளிடத்தில் பெற்றோர்களைப்போல் அன்புடனுமிருந்தபோதிலும் விதேசிகளுடைய இராஜ்யம் (அரசாட்சி) பூர்ண சுகத்தையளிக்காது. பாஷை, மதம், வித்தை, பழக்கவழக்கங்கள் இவைகளினுடைய வித்தியாசங்களையொழிப்பது மகா கடினமான காரியம். ஆனால் இவைகளை யொழிக்காவிடில் பரஸ்பரம் பூர்ணமான அபிப்ராயங்களை வெளிப்படுத்திக்கொள்ளவும், உபகாரங்களைப்புரிவதும் முடியாத காரியம். ஆகையினால் வேதாதி சாஸ்திரங்களிலும் இதிஹாசங்களிலும் கூறியிருப்பதைப் போற்றிவருவது நல்ல புருஷர்களுடைய கடமை.

வினு:—பிரபஞ்ச உற்பத்திக்கப்புரம் எவ்வளவு காலங்கழிந்தாய்விட்டது.

விடை:—ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகோடியே சில்லறை ரு ஷங்கள் பிரபஞ்ச சிருஷ்டியாயும் வேதங்கள் வெளியாயுமாகின்றன். இதற்கு இன்னும் விரிவான வியாக்கியானம் வேண்டியவர்கள் நம்முடைய ருக்வேதாதி பாஷ்யபூமிகா என்ற நூலைப் பார்க்கட்டும். மிகவும் நுட்பமாயும் அதற்குமேல் பிரிக்கமுடியாததுமான துளிக்குப் பரமாணு வென்று பெயர்.

60 பரமாணுக்கள் கொண்டது ஒரு அணு

2 அணு கொண்டது ஸ்தூலவாயுவாகிற ஒரு துவியுணக்

3 துவியுணக்குக்கள் கொண்டது அக்கினி

4 துவியுணக்குக்கள் சேர்ந்தது ஜலம் (திரவபதார்த்தம்).

5 துவியுணக்குக்கள்சேர்ந்தது பிருதுவி. (திடபதார்த்தம்) அதாவது மூன்று துவியுணக்குகள் கொண்டது ஒரு தரசரேணு.இவைகளினுடைய இரட்டையினாலேயே பிருதிவி முதலான தென்படக்கூடிய பதார்த்தங்களாகின்றன இவ்விதம் கிரமமாகச்சேர்த்து — அதாவது பரமாணுக்களையும் அணுக்களையும் புலப்படக்கூடிய பதார்த்தங்களாகிறவரையில் சேர்த்துக்கொண்டேபோகிறது—பிரபஞ்சம் முதலான கிரகங்களைச் சிருஷ்டித்தார்.

பூமியின் ஆதாரம் எது ?

வினு:—ஆயிரம்முடிதாங்கிய ஆதிசேஷன்என்பார் ஒருசிலர். காளைமாட்டின் கொம்பின்கண் என்பார் வேறு சிலர், இன்னுஞ்சிலர் ஆதாரமற்றது என்றுகூறுகின்றனர். வாயுவின்துணையினால் என்றும் சூரியனின் ஆகர்ஷணசக்தியினால் என்றும் வேறு சிலசார்பார் கூறுகின்றனர். இம்முரண்பாடான மொழிகளில் எதை நம்புவது ? எதை விடுவது ? உண்மை எது ?

விடை:—சேஷசர்ப்பத்தின் பேரிலும் காளையின் கொம்பின் நுனியிலும் பூமி நிற்கிறதெனக் கூறுபவர்களை சர்ப்பத்தினுடையவும் காளையினுடையவும் சிறுவயதில் பூமி எதின்பேரிலிருந்ததென்றும், அவர்களையார்தாங்கினார் களென்றும் வினவவேண்டும். அப்பொழுது காளையின்கொம்புகள் என்கிறவர்களுடைய(முகம்மதியர்களுடைய)வாய்மூடிவிடும். சேஷசர்ப்பம்என்கிறவர்கள் சர்ப்பம் கூர்மத்தின் பேரிலிருக்கிறதென்றும் கூர்மம் ஜலத்திலிருக்கிற தென்றும் ஜலம் அக்கினியின்பேரிலும்,அக்னி வாயுவின் பேரிலும் வாயு ஆகாசத்தின்பேரிலுமிருப்பதாகச் சொல்லுவார்கள். எல்லாம் எதின்பேரில் நிற்கிறதென்று அவர்களைக்கேழ்க்கவேண்டும் ? அப்பொழுது கட்டாயமாய் அவர்கள் பரமேசுவரன்பேரிலென்பார்கள். சேஷனும் காளையும் யாருடைய குமாரர்கள் என்று வினவுங்கால் காளை ஒரு பசுவினுடைய தென்றும், சேஷன் கூர்மத்தினுடையதென்றும், கூர்மம்ரிஷியுடையவும், மனுவிராட்டினுடையவும் விராட் பிரம்மாவுடைய குமாரர்களென்றும் சொல்லுவார்கள். பிரம்மா ஆதிசிருஷ்டியிலிருந்தவர். சேஷனுடைய ஜென்மத்திற்குமுந்தி அதுவரையில் பூமியை தரித்துவந்த ஆறுதலைமுறைகள் முடிந்ததென்பார்கள். காசியபருடைய (கூர்மத்தினுடைய) ஜன்மசமயத்தில் பூமி எதன்பேரிலிருந்ததென்றால் “ நீயும்

கப்சுப் நானும் கப்சுப்" சண்டை செய்யவாரம்பிப்பார்கள். இதனுடைய உண்மையான அர்த்தம் யாதெனில் எது பாக்கியிருக்கிறதோ அதற்குச் சேஷன் என்று பெயர். யரோ ஒரு கவி "சேஷதாரா பிருத்வித் யுக்தம்" (சேஷனுடைய ஆதாரத்தில் பூமி இருக்கிறது) என்றார். இதரர்கள் அவருடைய அபிப்பிராயத்தை அறியாமல் சர்ப்பக்கதையைக்கட்டி விட்டார்கள். ஆனால் எதனால் பரமேசுவரன் உற்பத்தி, பிரளயம் இவைகளி லிருந்து பாக்கியாய் (மீதியாய்) அதாவது தனியாய் இருக்கிறாரோ அதினாலே யே அவருக்குச் சேஷன் என்று பெயர். அவருடைய ஆதாரத்திலேயே பூமி நிற்கிறது.

सत्येनोत्तभिता भूमिः ॥ அதர். I4. I. I.

காலத்தினால் நாசம் ஒரு பொழுதுமடையாமலிருக்கிற பரமேசுவரனே பூமி ஆதித்தியன் முதலான சர்வலோகங்களையும் தரிக்கிறார்.

இதுரிக்வேதவாக்கு. அர்த்தம் யாதெனில் "உக்ஷா சந்திரன் சூரியனை ஆதரிக்கிறார்." உக்ஷா வார்த்தையைக்கண்டு சிலர் காளைதரிக்கிறதென்கிற கதையைக் கட்டிவிட்டார்கள். ஏனென்றால் காளைக்கு உக்ஷாவென்னும் பெயருண்டு. இப்பிரமாண்டஜகத்தைத்தரிப்பதற்கு சாமர்த்தியம் காளைக்குண் டாவென்று அவருக்குத்தோன்றவில்லை. மழையின் மூலமாக இப்பூமியை நனைக்கிறபடியினால் உக்ஷாவென்றால் இவ்விடம் சூரியனென்று அர்த்தம். அவருடைய ஆகர்ஷண சக்தியினால் பூமியைத்தரிக்கிறார். ஆனால் அவரைத் தரிக்கிறவர் பரமேசுவரனைத்தவிர வேறுயாருமில்லை.

வினா:—சூரியன், பூமி இவ்வளவு பெரிய இரண்டு கிரகங்களைப் பரமேசுவரனால் எவ்விதம் தரிக்கமுடியும்?

விடை:—எவ்விதம் அனந்தத்தின் (முடிவற்றதின்) கண் (அவைகளிலிருக்கிற) பெரியகிரகங்கள் ஒன்றுமில்லையோ—சமுத்திரத்தில் ஒருதுளிஜலம் பெரிதாயிருப்பதைப்போலக் கூடவில்லை—அவ்விதமே அனந்தமான பரமேசுவரன் முன் கணக்கற்ற இப்பேர்பட்ட கிரகங்கள் ஒரு பரமாணுவிற்குக்கூடச் சமானமாகாது. அவர்வெளியிலும் உள்ளேயுமிருக்கிறார். யஜுர்வேதம் "விபு பிரஜாஸு" என்று கூறுகிறது. அர்த்தமென்னவென்றால் அப்பரமாத்மா சகல பிரஜைகளிலும் வியாபகமாய்த் தரித்துக்கொண்டிருக்கிறார். அவர் சர்வவியாபகமான விபுவாய் இல்லாவிடில், மகம்மதியர்கள், கிருஸ்துவர்கள், புராணிகர்கள் சொல்லும் வண்ணம், இச்சகல சிருஷ்டிகளையும் ஒரு பொழுதும் தரிக்க முடியாது. ஏனென்றால் தான் ஒருவிடத்திலன்னியில் ஒரு வஸ்துவைத்தன்னால் காப்பாற்றமுடியாது. "சகலமும் பரஸ்பர ஆகர்ஷணசக்தியினால் நிற்கிறது" ஆகையினால் பரமேசுவரன் தரிப்பதற்கு அவசியம் எங்கிருந்தேற்படுகிறது" என்று எவனாவது சொல்லுவானேயானால் அவனை இச்சிருஷ்டி அனந்தமானதா, முடிவுள்ளதா என்று வினவவேண்டும். அவன் அனந்தமென்றால் அதுசரியகாது. ஏனென்றால் உருவத்துடன் கூடின வஸ்து ஒரு பொழுதும் அனந்தமாகாது. முடிவுள்ளதென்றால் அவ்வெல்லையை மீறியோ

அப்புரமோ அதை யார்தாங்குகிறதென்று கேழ்க்கவேண்டும். மொத்தமாய் பேசும் பொழுது 'சமஷ்டி' என்றும் தனித்தனியாய் பேசும்பொழுது வ்யஷ்டி என்றுங் கூறுகிறார்கள். ஒவ்வொரு மரமாக எண்ணினால் வ்யஷ்டி என்றும் மொத்தமாக எண்ணினால சமஷ்டி என்றும் சொல்லுகிறார்கள். இம்மாதிரியே சகல உலகங்களையும் சமஷ்டியாக ஜகமென்றழைத்தால் அதைத்தரித்து ஆகர்ஷணத்தைச் செய்கிறவர் பரமேசுவரனைவிட வேறு யாருமில்லை. ஆகையினால் சகல ஜகத்தையும் யார்காப்பாற்றுகிறாரோ அவரே.

स दाधार पृथिवीं द्यामुतेमाम् ॥ யஜு. 13. 4.

பிருதிவி முதலான பிரகாசமற்றலோக லோகாந்தரங்களையும் பதார்த்தங்களையும், சூரியன் முதலான பிரகாசமுள்ள லோகங்களையும் பதார்த்தங்களையும் சிருஷ்டித்துத்தரிக்கிற பரமாத்மா. எவர்சகலத்திலும் வியாபகமாயிருகிறாரோ அவரே சகல ஜகத்தைச் செய்கிறவர் தரிக்கிறவர்.

வினா:— பூமி முதவானவைகள் சுற்றுகிறதா? அல்லது ஸ்திரமாயிருக்கிறதா?

விடை:—சுற்றுகிறது.

வினா:—சிலர் சூரியன் சுற்றுகிறதென்கிறார்கள் பூமியில்லை என்கிறார்கள் வேறு சிலர் இதற்கு விரோதமாகச்சொல்லுகிறார்கள். இதில் எதை உண்மையாகக் கருதுவது?

விடை:—இரண்டும்பாதி உண்மை. ஏனென்றால் வேதங்கள் அவ்வாறே கோஷிக்கின்றன.

आयं गौः पृश्निरक्रमीदसदन्मातरं पुरः । पितरं च प्रयन्त्स्वः ॥ யஜு. 3. 6.

இப்பூலோகம் ஜலத்துடன் கூடிக்கொண்டு சூரியனை நாலாபக்கமும் சுற்றுகிறது. மறுபடியும் வேதங்கள் முறையிடுகிறதாவது.

आकृष्णेन रजसा वर्त्तमानो निवेशयन्नमृतं मर्त्यं च । हिरण्ययेन सविता रथेना देवो याति भुवनानि पश्यन् ॥ யஜு. 33. 43.

மழைமுதலானவைகளைச்செய்கிறவனும், பிரகாசஸ்வரூபனும் சகலபிராணிகளுக்கும் அப்பிராணிகளுக்கும் அம்ருதரூபமான மழை, ஒளி முதலானவைகளைக்கொடுக்கிற வனுமான சூரியன் தன்னுடைய ரேகையிலேயே சுற்றுகிறான். வேறுகிரகங்களைச் சுற்றிவருகிறதில்லை. ஒவ்வொரு பிரம்மாண்டத்திலேயும் ஒரு சூரியனிருக்கிறான். இருந்துபிரகாசத்தையளிக்கிறான். வேறு உலகங்களிலேயும் பிரகாசிக்கிறான்.

दिवि सोमो अधि श्रितः ॥

சந்திரலோகம சூரியனால் பிரகாசிப்பதுபோல் பிருதிவி முதலான உலகங்களும் சூரியனால் பிரகாசிக்கிறது. பகலும் இரவும் எப்பொழுதும் இருந்துகொண்டேவருகிறது. பிருதிவியாதி உலகங்கள் திரியும்பொழுது எப்

பாகம் சூரியன் முன்வருகிறதோ அங்கே பகலாகும். எப்பாகம் பின்னே வருகிறதோ அங்கே இரவாகும். அதாவது உதயம், அஸ்தமனம், மத்தியானம் நடுநிசி, முதலானவைகள் தேசதேசாந்திரங்களில் சதா இருந்து கொண்டே வருகிறது. அதாவது ஆரியவர்த்தத்தில்(இந்தியாவில்)சூரியோதயமாயிருக்கும் பொழுது பாதாளதேசத்தில் அதாவது அமெரிக்காவில் அஸ்தமனமாகிறது ஆரியவர்த்தத்தில் எப்பொழுது மாலைப்பொழுதோ அப்பொழுது பாதாளத்தில் காலைப்பொழுது. எப்பொழுது (இந்தியாவில்) ஆரியவர்த்தத்தில் நடுப்பகலோ அல்லது நடுநிசியோ அப்பொழுது பாதாளதேசத்தில (அமெரிக்காவில்) நடுநிசி அல்லது மத்தியானம். சூரியன் சுற்றுகிறது, பூமிசுற்றுகிறதில்லை என்பவர்களெல்லாம் அஞ்ஞானிகள். ஏனென்றால் அப்படியிருந்தால் ஒரு பக்கம் இரவே ஆயிரம் வருஷகாலமுமிருக்கும். சூரியன் "பிரதன" என்றழைக்கப் படுகிறபடியினால் பூமியைவிட லக்ஷமடங்கு அதிகப் பெரியது. மேலும் லக்ஷக்கணக்கான மைல்கள் பூமியிலிருந்து தூரமாயிருக்கிறது. ஆகையினால் பூமி சூரியனைச்சுற்றிபோவதைக்காட்டிலும் சூரியன் பூமியைச் சுற்றிப்போகக் காலதாமதமாகும். கடுகு மலையைச்சுற்றிப்போவதைக்காட்டிலும் மலை கடுகைச்சுற்றிப்போகக்காலதாமதமாகும். சூரியன் ஸ்திரமாயிருக்கிறதென்கிறவர்கள் வானசாஸ்திரமறிந்தவர்களல்ல. ஏனென்றால்அவ்விதமிருக்குமேயானால் ஒரு இராசிஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானத்திற்கு எவ்விதம் செல்லமுடியும்? மேலும் சூரியனைப்போல கனமான பதார்த்தம் திரியாமல் ஆகாசத்தில் ஸ்திரமாயிருக்கமுடியாது. ஜெயினர்கள் பூமிசுற்றுகிறதில்லையென்றும், கீழே போகிறதென்றும், கேவலம் ஜம்பூத்வீபத்திலேயே இரண்டு சூரியனும் இரண்டு சந்திரனுமிருக்கிறதென்கிறார்கள். அவர்கள் பங்கி (அபினி) யுடைய மயக்கத்தில் மூழ்கியிருக்கிறார்கள். பூமி கீழேசென்று கொண்டேயிருந்தால் காற்றன்னியில் சின்னபின்னமாய் விடுமே; வாயுவின் நிலைமை ஏறத்தாழ விருக்கிறபடியினால் கீழே யிருக்கிறவர்களை விடமேலேயிருக்கிறவர்களுக்கதிகம் வேண்டும். இரண்டு சந்திரன்களும் இரண்டு சூரியன்களுமிருந்தால் இரவும்கிருஷ்ணபக்ஷமும்இரவேயிராது. ஆகையினால் ஒரு பூமிக்கு ஒரே சந்திரனும் பலபூமிகளுக்கு ஒரே சூரியனுந்தானிருக்கின்றன.

வினா:—சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், இவைகளென்ன? இவைகளில் மனிதன் முதலான சிருஷ்டிகளுண்டா? இல்லையா?

விடை:—மனிதன் முதலானவர்கள் வசிக்கும் லோகங்களது. சதபத பிராமணங் கூறுகிறதாவது.

एतेषु हीदग्ं सर्वं वसु हितमेते हीदग्ं सर्वं वासयन्ते तद्यदिदग्ं सर्वं वासयन्ते तस्माद्वसव इति ॥ சதபத. 14. 6. 7. 4.

பிருதுவி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாசம், சந்திரன், நக்ஷத்திரம், சூரியன் இவைகளுக்கு வசு என்று பெயர். ஏனென்றால் அதில் சகல பதார்த்

தங்களும், பிரஜைகளும் வசிக்கின்றன. வசிப்பதற்கு எது வீடோ அதற்கு வசு என்று பெயர். சூரியன் சந்திரன், முதலான கிரகங்கள் நம்முடைய பூமியைப்போல வசுவானபடியினால் அதில் இம்மாதிரி பிரஜைகளிருப்பதைக் குறித்து எவ்விதம் சந்தேகமேற்படும். பரமேசுவரனுடைய இச்சிறிய உலகமே மனிதன் முதலான சிருஷ்டிகளால் நிறைந்திருக்கும் பொழுது மீதி உலகங்களெல்லாம் எவ்விதம் சூன்யமாயிருக்கும். பரமேசுவரனுடைய காரியம் ஒன்றுகூட நிஷ்பிரயோஜனமானதல்ல. இவ்வளவு கணக்கற்ற உலகங்களில் மனிதன் முதலான சிருஷ்டிகளுண்டு.

வினா:—இவ்வுலகில் மனிதன் முதலானவர்களுக்கு ஆகிருதி அவயவமிருப்பது போல் அந்நிய உலகங்களிலும் உண்டா? அல்லது வேறுயாயிருக்கிறதா?

விடை:—ஆகிருதியில் கொஞ்சம் வித்தியாசமிருக்கக்கூடும். இவ்வுலகில் சீனன், ஆரியவர்த்தத்தினன், ஐரோப்பியன், இவர்களில் அவயவம், அங்க அமைப்பு இவைகளில் கொஞ்சம் வித்தியாசமிருப்பதுபோலவே, லோக லோகாந்திரங்களிலுங்கூட பேதமுண்டு. ஆனால் எஜ்ஜாதியுடைய சிருஷ்டி இத்தேசத்திலெவ்விதமிருக்கிறதோ அவ்விதமே அஜ்ஜாதினுடைய சிருஷ்டி அன்னியலோகங்களிலேயும் இருக்கும். அப்படியே இப்பிரதேசத்திலே சரீரத்தில் கண் முதலான அங்கங்கள் எங்கே யிருக்கிறதோ அங்கேயே இதரபிரதேசங்களிலும் உண்டு. வேதங்களிலுங்கூறுகிறதாவது.

सूर्याचन्द्रमसौ धाता यथापूर्वमकल्पयत् ।
दिवं च पृथिवीं चान्तरिक्षमथो स्वः ॥ ரிக். 10. 190.

பரமாத்மா, சூரியன் சந்திரன் ஆகாசம் பூமி முதலான கிரகங்கள் பதார்த்தங்கள் இவைகளைப் பூர்வகல்பத்தில் எவ்விதம் செய்தாரோ அவ்விதமே இக்கல்பத்திலும் அதாவது இச்சிருஷ்டியிலும் செய்திருக்கிறார். வித்தியாசமான மாறுதல்கள் ஒன்றும் அவர் செய்கிறதில்லை.

வினா:—இவ்வுலகத்தில்போலவே மீதி உலகங்களிலும் வேதம் முதலியவை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதா?

விடை:—ஆமாம். தன்னுடைய சகல தேசத்திலும் ஒரு ராஜனுடைய ஆளுகை ஒன்றாகவே யிருப்பதுபோல், இராஜராஜனாகிய பரமாத்மாவினுடைய வேதோக்த நீதி அவருடைய சிருஷ்டி ரூபங்களாகிய சகல இராஜ்யங்களிலும் சரியாகவே இருக்கின்றன.

வினா:—ஜீவனும் பிரகிருதியும் அநாதியானபடியினாலும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்படாததினாலும் ஈசுவரனுடைய அதிகாரம் இவர்களின்பேரிலிருப்பதற்கு அவசியமில்லை? ஏனென்றால் இவைகள் சுதந்திரமுள்ளது.

விடை:—அரசனும் பிரஜைகளும் சமகால வாசியாயிருந்தும் பிரஜைகள் அரசனுடைய ஆளுகைக்குள்ளாகிறார்கள், அவ்விதமே பரமேசுவரனுடைய

ஆதீனத்திற்குஜ் ஜீவனும் ஜடபதார்த்தமும், கீழ்பட்டிருக்கின்றன. பரமேசுவரன் சகல சிருஷ்டிகளை உண்டாக்கும்பொழுதும் அனந்தபலவானாயிருக்கும் பொழுதும் அல்பசாமார்த்தியவானான ஜீவனும் ஜடபதார்த்தமும் அவருடைய ஆதீனத்தில் ஏன் வரக்கூடாது? ஆகையினால் காரியங்களைச்செய்வதில் சுதந்திரமுள்ளவன் ஆனால் கர்மங்களினுடைய பலனை அநுபவிப்பதில் ஈசுவர வியவஸ்தைக்குட்பட்டவன். அவரேசர்வசக்திமான். சகல விசுவத்தையும் ஆக்கி அளித்து அழிக்கிறவர்.

அடுத்த அத்தியாயத்தில் வித்தை, அவித்தை, பந்தம், (கட்டு) மோக்ஷம் இவ்விஷயங்களைக் குறித்துச் சொல்லுவோம்.

எட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

வித்தை, அவித்தை, பந்தம், மோக்ஷம் இவைகளைப்பற்றினது.

विद्यां चाऽविद्यां च यस्तद्वेदोभयंसह ।
अविद्यया मृत्यु तीर्त्वा विद्ययाऽमृतमश्नुते ॥ யஜு. 40.

எவன் வித்தை, அவித்தை, இவைகளினுடைய ஸ்வரூபத்தை முறையே அறிகிறானோ, அவன் அவித்தை அதாவது கர்மோபாசனையினால் காலனையும் வித்தை அதாவது உண்மையான ஞானத்தினால் மோக்ஷத்தையும் அடைகிறான். அவித்தையின் இலக்ஷணங்களாவன:—

अनित्याशुचिदुःखानात्मसु नित्यशुचिसुखात्मख्यातिरविद्या ॥ யோக. சாதன.

(1) அநித்தியமான உலகம் அழியும் தேகம் அதாவது பார்க்கக் கூடியதாயும் கேழ்க்கக்கூடியதாயுமிருக்கிற காரியமான உலகம் இவைகள் எப்பொழுதும் இருக்குமென்றும், இருந்திருக்கிறதென்றும், யோகபலத்தினால் தேவர்களினுடைய இச்சரீரம் எப்பொழுதும் இருக்குமென்றும் இன்னும் இவைகளைப் போன்ற விபரீதமான புத்தியை அடைவது அவித்தையின் முதல்பாகம். (2) அசுசி அதாவது மலமயமானவும் காமாதுரமான ஸ்திரீ, பொய்ப்பேச்சு, களவு முதலிய பரிசுத்தமில்லாப்பொருள்களைப் பரிசுத்தமாக நினைப்பது இரண்டாவதுபாகம். (3) துக்கத்தை விளைவிக்கிற சிற்றின்பசுகங்களை நல்லதை உண்டுபண்ணக்கூடியதென்று நம்புவது மூன்றாவதாகும். (4) ஆத்மா இல்லாததில் ஆத்மா இருக்கிறதென்று கருதுவது நான்காவது பாகமாகும். இந்நான்கு விபரீத ஞானத்திற்கு அவித்தை என்று பெயர். இதற்கு விரோதமாய் அநித்தியத்தில் அநித்தியத்தையும், நித்தியத்தில் நித்தியத்தையும், பரிசுத்தமற்றதில் பரிசுத்தமில்லாததையும், துக்கத்தில் துக்கத்தையும், சுகத்தில் சுகத்தையும், அநாத்மாவில் அநாத்மாவையும், ஆத்மாவில் ஆத்மஞானத்தையும் முறையே அறிவது வித்தையாகும். எதனால் பதார்த்தங்களின் உண்மையான ஸ்வரூபஞானம் விளங்குகிறதோ அதுவே வித்தை. எதனால் பதார்த்தங்களின் உண்மையான ஞானம் விளங்காமல் அதற்குமாறான தோற்றங்களுண்டாகிறதோ அதுவே அவித்தை.

சுத்தகர்மமும் பரமேசுவரனுடைய உபாசனையுமிருந்தாலொழிய இறப்பு துக்கங்களிலிருந்து ஒரு நாளும் மீளமுடியாது. பரிசுத்தகர்மம் பரிசுத்த உபாசனை பரிசுத்த ஞானம் இவைகளால் முக்தியும் பரிசுத்தமற்ற பொய்ப்பேசுதல் முதலான கர்மங்கள், விலங்கு, கல்முதலான விக்கிரக பூஜை, பொய்ஞ்ஞானம் முதலியவைகளினால் பந்தமும் உண்டாகின்றன. ஒரு க்ஷணமாவது மனிதன், கர்மம் உபாசனை ஞானம் முதலியவைகளிலிருந்து

வேருயிருக்கமுடியாது. இதனுலேயே தர்மோசிதமான உண்மை உரைத்தல் முதலான நற்கிரியைகளைச் செய்து பொய்ப்பேசுதல் முதலான தீமைகளை விட்டுவிடுவதே முக்திக்குச் சாதகமானவழி.

வினு:—முக்தி எவருக்குக்கிடையாது?

விடை:—பந்தம் அல்லது பந்தத்திலிருக்கப்பட்டவருக்கு.

வினு:—பந்தத்திலிருப்பவர் யார்?

விடை:—அதர்ம அஞ்ஞான சமுத்ரத்தில் முழுகிக்கிடக்கும் ஜீவன்.

வினு:—பந்தமும் மோக்ஷமும் இயல்பாவகவே விளையக்கூடியதா அல்லது செயலினுல் (நிமித்தம்) அடையப்படுகிறதா?

விடை:—செய்கையினுல் அடையப்படுகிறதே. இயல்பாயிருந்தால் அவைகள் எப்பொழுதும் காயமாயிருக்கும்.

न निरोधो न चोत्पत्तिर्न बद्धो न च साधकः ।
न मुमुक्षुर्न वै मुक्त इत्येषा परमार्थता ॥ கௌடபாதீயகாரிகா. 2. 32.

மேற்கண்டசுலோகம் மண்டூகோபநிஷத்திலிருக்கிறது. ஜீவன் பிரம்மத்திலிருக்கிறபடியினுல் எப்பொழுதும் அவித்தையினுல் மறைந்ததாயில்லையில்லை. அதுபந்தத்திலுமில்லை. அல்லது அதன் முக்திக்காக அதற்குச்சாதனங்களும் வேண்டியதில்லை. முக்தியையடைய இஷ்டமுமில்லை அதற்கு எக்காலமும் முக்தியுமில்லை. பந்தமில்லாமலிருக்குங்கால் அதற்கு முக்தி ஏது?

விடை:—நவீனவேதாந்திகள் சொல்லும் மேற்கண்டவைகள் உண்மையாகாது. ஜீவனின் சுரூபம் அற்பமாயிருக்கிறதினுலே இருளினுல் மூடப்பட்டிருக்கிறது. சரீரத்துடன் சேர்ந்து வெளிப்படுவதினுல் பிறப்பை யடைகிறது. பாபரூபமான கர்மங்களின் பலனுல் போகரூபமானபந்தத்தில் அகப்படுகிறது. அதிலிருந்து நீங்கவேண்டி சாதகங்களைத்தேடி துக்கத்திலிருந்து வெளிவர விரும்புகின்றது. துக்கத்திலிருந்து நீங்கி பரமானந்தமான பரமேசுவரனை அடைந்து முக்தியை அநுபவிக்கிறது.

வினு:—இத்தர்மங்களெல்லாம் தேகத்திற்கும்அந்தக்கரணத்திற்கு மேயுள்ளது. ஜீவனுக்கில்லை. ஏனெனில் ஜீவன் பாப புண்ணியங்களிலிருந்து நீங்கினதாயிருக்கின்றது. தேகமும் அந்தக்கரணமும் செய்யும் கர்மங்களுக்கு அது சாட்சியாயிருக்கிறது. சீதோஷ்ணம் முதலானவைகள் சரீரத்தின் குணங்கள். ஆத்மா பரிசுத்தமாயும் களங்கமன்னியிலுமிருக்கின்றது.

விடை:—தேகமும் அந்தக்கரணமும் சடபதார்த்தங்கள். அது சீதோஷ்ணங்களை உணருகிறதுமில்லை. அனுபவிக்கிறதுமில்லை. உணர்ச்சியுடன் கூடின மனிதன் முதலான பிராணிகளே சுவாசத்தையடையும் பக்ஷத்தில் சீதோஷ்ணங்களையடைந்து போகத்தையடைகிறது. பிராணனும் சடப்பொருளே. அதிற்குப் பசிதாகங்கிடையாது. ஆனுல் பிராணனுடனுங்கூடின ஜீவனுக்கே பசியும் தாகமும் உண்டாகிறது. அப்படியே மனமும் சடப்பொருள்

அதற்குத் துக்கமும் சந்தோஷமுங்கிடையாது. ஆனால்மனதின் வழியாக ஜீவன் சுகத்தையாவது துக்கத்தையாவது ஆனந்தத்தையாவது அல்லது உபத்திரவத்தையாவது அனுபவிக்கிறது. காது முதலான உணரும்படியான இந்திரியங்களின் வழியாய் நல்ல அல்லது கெட்ட விஷயங்களைக்கிரகித்து ஜீவன் சுகதுக்கத்தையடைகிறது. அப்படியே அந்தக்கரணமும் அதாவது மனம் புத்தி சித்தம் அகங்காரம் இவைகளின் மூலமாய் ஆத்மாவானது சங்கல்பம் விகல்பம் நிச்சயம், ஸ்மரணை, அவமானம் இவைகளையடைகிறது. ஆகையினால் ஆத்மாவே சந்தோஷத்தையாவது துக்கத்தையாவது அடைகிறது. கத்தியினால் குத்தினவன் எவ்விதம் தண்டனைக்குள்ளாகிறானோ—கத்தியை எப்படி தண்டிக்கிறதில்லையோ—அப்படியே தேக இந்திரியங்கள் அந்தக்கரணம் பிராணரூப சாதனங்களினாலே நல்ல கெட்ட கருமங்களைச் செய்யும் கர்த்தாவாகிய ஜீவனே சுகதுக்கங்களை யனுபவிக்கிறது. ஜீவன் கர்மங்களுக்குச் சாட்சியாகாது. கர்த்தாவாயும் அனுபவிக்கிறதாயுமிருக்கிறது. கர்மங்களுக்குச் சாட்சியாயிருப்பது இரண்டற்ற பரமாத்மாவே. ஜீவன் கர்மங்களினால் முழுவதும் கவரப்பட்டிக்கிறது, ஜீவன் கடவுளாகாது. ஆகையினால் அது சாட்சி பூதமுமல்ல.

வினா:—ஜீவன் பிரம்மத்தின் பிரதிபிம்பம். கண்ணாடி உடைந்து துண்டு துண்டானபோது பிரதி பிம்பம் மறைந்தபோதிலும் உண்மையான பிம்பம் அல்லது உருவம் எவ்விதமான கெடுதலையுமடையாமலிருப்பது போல் அந்தக்கரணத்தில் பிரம்மத்தின் பிரதிபிம்பமாகிய ஜீவன், அது இருக்கும் வரையிலிருந்து அந்தக்கரணம் நாசமானவுடன் ஜீவனும் முக்தியை யடைகிறது. இது உண்மையா இல்லையா ?

விடை:—இது குழந்தைப் பேச்சு. ஏனெனில் பிரதி பிம்பம் ஒலிக்குமுன்னால், இரண்டு உருவங்களுடன் கூடின பொருள்கள் — பிம்பமொன்று பிரதிபிம்ப முண்டாக உருவுள்ள வஸ்து இரண்டு—வேண்டும். உதாரணமாக முகத்தின் பிரதிபிம்பம் ஒலிக்க முகமும் கண்ணாடியும் அவசியமாகிறது. இரண்டும் உருவமுடையவைகள். தனித்தனியாய் இருப்பவைகள். அவைகள் வேறாக இல்லாமல் போனால் பிரதிபிம்பம் ஒலிக்காது. பிரம்மா உருவற்றவராயும் சர்வவியாபகராயு மிருக்கிறபடியினால் அவருக்குப்பிரதிபிம்பம் உண்டாகாது.

வினா:—ஆழமாயும் பரிசுத்தமாயுள்ள ஜலத்தில் உருவற்றதாயும் சர்வவியாபகமாயுமுள்ள ஆகாசத்தின் பிரதிபிம்பந்தெரியவில்லையா? இப்பிரகாரமே நிர்மலமாயும் பரிசுத்தமாயுமுள்ள அந்தக்கரணத்தில் பரமாத்மாவின் உருவம் அல்லது ஆகாசம் தென்படும். இதனாலேயே இதற்குச் சிதாபாஸம் என்று சொல்லப்படுகிறது.

விடை:—சிறுபிள்ளையின் பிதற்றல் இது. ஆகாசம் பார்க்க முடியாமலிருக்குமேயானால் கண்களுக்குப்புலப்படுவானேன்.

வினா:—மேலே நீலநிறத்துடனும் தூசியுடனும் கூடினதாய் காணப்படுகிறது ஆகாசமில்லையா ?

விடை:—இல்லை.

வினு:—இல்லையெனின் அது வேறென்ன ?

விடை:—அக்கினி, பூமி, ஜலம், இவைகளின் நுண்ணியமான வேவ்வேறான அணுக்கள். மழையாகக்கீழேவிழும் ஜலத்தின் அணுக்களே நீலநிறமாயிருப்பது. புழுதியடைந்திருக்குந்தோற்றம் பூமியிலிருந்து உயரவெழும்பிக்காற்றில் மிதக்கும் புழுதி அல்லது தூசி. இவைகள்தான் கண்களுக்குத்தென்படுகின்றன. அவைகளே ஜலத்திலும் கண்ணுடியிலும் பிரதிபிம்பமாகத்தெரிகின்றன. அது ஆகாசமாகாது.

வினு:—கடாகாசம்—பானையிலடங்கியிருக்கும் ஆகாசம், மடாகாசம்—வீட்டிலடங்கியிருக்கும் ஆகாசம்—மேகாகாசம்—மேகத்திஞல்சுற்றப்பட்டிருக்கிற ஆகாசம். இன்னும் இதையொத்தக்குறிப்பட்ட வேவ்வேறான ஆகாசங்களைக் காண்பிப்பதற்கு மேற்கண்டபெயர்கள் எப்படியிருக்கின்றனவோ—பானை முதலியவைகள் உடைந்துபோனல் பின்னமான ஆகாசங்களின் நிலையானது அழிந்து பெரிய ஆகாசம் கடைசியில் எப்படி தங்குகின்றதோ அப்படியே பிரம்மமானது ஈசுவரனெனவும் அல்லது ஜீவனெனவும் உபாதி பிரம்மாண்டம் அந்தக்கரணபேதங்களிஞல் அழைக்கப்படுகின்றன.

விடை:—இது அவித்வான்களின்பேச்சு. ஆகாசம் (கடத்திலுள்ளது வீட்டிலுள்ளது முதலியவைகள்) ஒருபொழுதும் அழிகிறதில்லை. சின்னுபின்னமாயும் துண்டு துண்டாயும் ஆகிறதில்லை. வீடு, பானை முதலியவைகள் அழிந்து துண்டு துண்டாகின்றன. 'கடாகாசத்தை' க்கொண்டுவா என்று எவரும் சொல்லுகிறதில்லை. பழக்கத்தில் 'கடத்தைக்கொண்டுவா' என்று சொல்லக் கேழ்க்கிறேம். ஆகையிஞல் உன்னுடையவாதம் சரியானதில்லை.

வினு:—சமுத்திரநடுவில் மீன்முதலியபிராணிகள் எப்படி நீந்துகின்றனவோ ஆகாயமத்தியில் பக்ஷிமுதலியவைகள் எப்படி பறக்கின்றனவோ அப்படியே சகல அந்தக்கரணங்களும் 'சிதாகாச' (சேதனமாய் ஆகாயம் போல பரவியுள்ள) பிரம்மத்தில் நடமாடுகின்றது. இயல்பாகவே அவைகள் சடப்பொருள்கள். ஆனல் சர்வவியாபகமான பரமாத்மாவினுடைய சேர்க்கையிஞல், அக்கினி சம்மந்தப்பட்ட இரும்பு சூட்டை அடைகிற மாதிரி, சேதனத்தையடைகின்றது. ஆனல் பிரம்மமோ ஆகாயத்தைப் போல் சலனமன்னியிலிருக்கிறர். ஆகையிஞல் ஜீவனைப்பிரம்மாவாகக் கருதுவதில்யாதொரு விதமான குற்றமுமில்லை.

விடை:—உன்னுடைய இவ்வுதாரணமும் உண்மையானதில்லை. ஏனெனில் சர்வவியாபியான பிரம்மா அந்தக்கரணத்தில் பிரகாசித்து ஜீவனுயிருக்குமேயானல் சர்வஞ்ஞும் முதலான குணங்கள் அதிலுண்டாகவில்லையா ? கட்டுப்படுவதிஞல் சர்வஞ்ஞும் உண்டாகிறதில்லையென்றல் பிரம்மா கட்டுப்பட்டு எல்லைக்குட்பட்டவராஅல்லது வெளிப்பட்டவரா ? அவர்வெளிப்படாதவரென்றல் திரை ஒன்றும் அவரை வேறுபடுத்தாது. அப்பொழுது ஏன் சர்வஞ்ஞும் ஆகாது. தன் ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு அந்தக்கரணத்துடனிருக்கிறதென்றல், அந்தக்கரணத்துடனிருக்கும்படியான பிரம்மமானது சந்தே

கம், அவநம்பிக்கை அஞ்ஞானம் இவைகளுக்கு ஆளாகி மிகுதியிருக்கும்படியான பிரம்மமானது ஞானத்தையும் பரிசுத்தத்தையும் முக்தியையும் அடையும். இப்பிரகாரம் சிருஷ்டி முழுவது மிருக்கும்படியான பிரம்மத்தை அந்தக்கரணம் தடுக்கின்றது, தடுத்து பந்தமும் முக்தியும் அற்பாயுசுள்ளதாய் விடுகிறது. உங்களுடைய பிரமாணம் உண்மையுள்ளதாயிருக்குமேயானால் ஜீவனுக்கு முன்சொன்னதும் கேட்டதும் ஞாபகமிராது. ஏனென்றால் கேட்டதும் பார்த்ததுமான பிரம்மம் இருக்கிறதில்லை. ஆகையினால் ஜீவன் பிரம்மாவாகவும் பிரம்மா ஜீவனாகவும் இருக்கவில்லை. இரண்டும் வெவ்வேறாகவேயிருக்கின்றன.

வினா:— இவைகளெல்லாம் அத்தியா ரோபமே? அதாவது வஸ்துவில் இல்லாத குணங்களை உண்டாக்குவதற்கே அத்தியா ரோபம் என்று பெயர். பிரம்மத்தில் உலகத்தையும் அதிலிருக்கும் சகல வஸ்துக்களையும் அத்தியாரோபஞ் செய்வதினாலே சத்தியத்தை அறிவோர்க்குச் சமாச்சாரத்தை நன்கறியச்செய்வதேயாகும். உண்மையில் எல்லாம் பிரம்மமே.

விடை:—அத்தியாரோபம் செய்கிறவர் யார் ?

வினா:—ஜீவன்.

விடை:—ஜீவன் என்று எதற்குச்சொல்லுவது ?

வினா:—அந்தக்கரணத்திலுள்ள தனது அறிவின் உண்மைக்கு ?

விடை:—அது பிரம்மமா அல்லது வேறானதா ?

வினா:—அதேபிரம்மாவே.

விடை:—பிரம்மாவே உலகத்தைப்பற்றி தன்னில் தப்பெண்ணங் கொண்டாரா ?

வினா:—ஆமாம். இதினால் பிரம்மாவிற்கு என்ன கெடுதல்?

விடை:—விஷயங்களைப்பற்றி தப்பெண்ணங்கொள்ளுபவர் ஏன் பொய்யனாகமாட்டார் ?

வினா:—இல்லை மனதினாலும் பேச்சினாலும் எண்ணிச் சொல்வதெல்லாம் பொய்யே.

விடை:—மனதிலும் பேச்சிலும் கற்பனைசெய்து பொய்ப்பேசுகிற பிரம்மா பொய்யனும் தப்பிப்போகக் கூடியவனுமாகிறாரே ?

வினா:—அது எங்களுடைய கருத்தை நிருபணஞ்செய்கிறது.

விடை:—ஆஹா! பொய் வேதாந்திகளே! சத்திய ஸ்வரூபம், சத்தியகாரியம், சத்திய நோக்கம் இவைகளையுடைய பரமாத்மாவைப் பொய்யனாகச்செய்கிறீர்கள் ? இதுவே உங்களுடைய கஷ்டகாலத்திற்குக் காரணமில்லையா ? பரமேசுவரன் பொய் எண்ணம் பொய்நோக்கமுடையவரென்று எந்த உபநிஷத்து சூத்திரத்தில் அல்லது எவ்வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது ? இது

उलटि चोर कोतवाल को दण्डे

திருடன் கொத்தவாலைத் (அதிகாரியை) தண்டித்தான் என்னும் பழமொழியை உண்மையாக்குகின்றது. சாதாரணமாகக் கொத்தவால் திருடனைத் தண்டிக்க வேண்டும். திருடன் கொத்தவாலைத்தண்டிக்கிறான் என்பது சகல அனுபவ சித்தாந்தங்களுக்கும் விரோதமாயிருக்கிறது. நீங்கள் தப்பெண்ணங் கொண்டவர்களும் பொய்பேசுகிறவர்களுமானபடியினால் அதை வீணுகப் பரமேசுவரனின்பேரில் சுமத்துகிறீர்கள். பிரம்மத்தின் எப்பாகமாவது பொய்யால் சூழப்பட்டிருந்தால், பிரம்மமே பொய்யாகும். ஏனெனில் ஓரிடத்திலிருப்பது போலவே அவர் எங்குமிருக்கிறார். சத்தியஸ்வரூபமாயும் சத்தியத்தைக் கௌரவிக்கிறவராயும் சத்தியவானாயும் அவர் இருக்கிறார். மேற்கண்ட கெடுதல்களெல்லாம் உங்களுடையதே ஒழிய பிரம்மாவினுடையதாகாது. நீங்கள் வித்தை என்பது அவித்தையே. உங்களுடைய அத்தியாரோபமும் பொய்யே. ஏனெனில் பிரம்மாவாயில்லாத உங்களைப்பிரம்மமாகவும் பிரம்மாவைஜ் ஜீவனாகவும் கருதுவது பொய்யில்லாமல் போனால் வேறென்ன? எவர் சர்வ வியாபியாயிருக்கிறாரோ அவர் எல்லைக்குட்பட்டு அஞ்ஞானமான பந்தத்தில் ஒரு பொழுதும் விழுகிறதில்லை. ஏனெனில்ஜீவன் எப்பொழுதும் கட்டுப்பட்டது, ஓரே விடத்திலுள்ளது. அற்பமானது, கொஞ்சம் ஞானமுள்ளது. பிரம்மாவோ அவ்விதமில்லை.

முக்தியும் பந்தமும்.

வினா:—முக்தி என்றால் என்ன?

मुञ्चन्ति पृथग्भवन्ति जनायस्यां सा मुक्तिः

விடை:—எதில் சுதந்திரமிருக்கிறதோ அதுவே முக்தி.

வினா:—எதிலிருந்து சுதந்திரமுண்டாகிறது?

விடை:—எதிலிருந்து மீளவேண்டுமென்று சகல ஜீவன்களும் விரும்புகின்றதோ?

வினா:—எதிலிருந்து மீளவேண்டுமென்று விரும்புகிறது?

விடை:—மீளவேண்டுமென்று விரும்புகிறதிலிருந்து?

வினா:—எதிலிருந்து மீளுகிறது?

விடை.—துக்கத்திலிருந்து.

வினா.—மீறி எதையடைந்து எங்குவசிக்கிறது?

விடை.—சுகத்தையடைந்து பிரம்மத்தில் வசிக்கிறது.

வினா.—முக்தியும் பந்தமும் உண்டாகக் காரணங்களென்ன?

விடை.— பரமேசுவரனின் கட்டளைகளைக் காப்பாற்றுதல், அதர்மம், அவித்தை, கெட்டசேர்க்கை, தீய ஒழுக்கம் தீய ஆசாரம் இவைகளிலிருந்து வேறாக இருத்தல், சத்தியபாஷணை பரோபகாரம், பக்ஷபாதமின்மை வித்தை தர்மம் நியாயம் இவைகளை விருத்திசெய்தல், மேற்சொன்னபிரகாரம் பரமேசுவரனைத்துதித்துப்பிரார்த்தனைசெய்து உபாசனைசெய்தல் வித்தையை ஓதுதல் ஓதுவித்தல், புருஷபிரயத்தனஞ்செய்து ஞானத்தை விருத்தி செய்தல், சகலரையும் விட உத்தமவழிகளைக்கைப்பிடித்தல், செய்கிற சிலவற்றை

யும் பக்ஷபாதமன்னியில் நியாயதர்மப்பிரகாரம்செய்தல் இவைகளைக்கொள்வதினால் முக்தியையும் இவைகளுக்கு எதிரிடையாய் ஈசுவர ஆக்ஞைக்குக் கெடுதலானக் காரியங்களைச் செய்வதினால் பந்தத்தையும் பெறலாம்.

வினா.—முக்தியில் ஜீவன் ஒன்றாக விருக்கின்றதா ? அல்லது தனியாகப் பிரகாசிக்கின்றதா ?

விடை.—தனியாகவே பிரகாசிக்கின்றது,

வினா.—அது எங்கே வசிக்கிறது ?

விடை.—பிரம்மத்தில்.

வினா.—பிரம்மம் எங்கிருக்கிறது ? அங்கு முக்தியையடைந்த ஜீவன் ஓரேவிடத்திலிருக்கிறதா அல்லது சுயேச்சாதிகாரமாய் எங்கும் திரிகின்றதா ?

விடை.—எங்கும் பூர்ணமாயிருக்கிற பிரம்மத்தில் முக்தியடைந்த ஜீவன் அதைத்தடுப்போரன்னியில் ஞானத்தை யடைந்து ஆனந்தத்துடன் சுயேச்சையாய் திரிகின்றது.

வினா.—முக்தியடைந்த ஜீவனுக்குத்தூல சரீரம் உண்டா ? இல்லையா ?

விடை.—இல்லை.

வினா.—அப்படியானால் இன்பத்தையும் ஆனந்தத்தையும் எப்படி அநுபவிக்கும் ?

விடை.—உண்மை நோக்கம் முதலான இயற்கைக் குணங்கள் அதற்குண்டு. ஆனால் சடசம்பந்தங்கிடையாது.

शृण्वन् श्रोत्रं भवति, स्पर्शयन् त्वग्भवति, पश्यन् चक्षुर्भवति, रसयन् रसना भवति, जिघ्रन् घ्राणं भवति, मन्वानो मनो भवति, बोधयन् बुद्धिर्भवति, चेतयंश्चित्तम्भवत्यहङ्कुर्वाणोऽहङ्कारो भवति ॥

சதபத பிராம்மணம் காண்டம் 14.

மோக்ஷத்தில் பௌதிக சரீரமாவது இந்திரியங்களாவது ஜீவனைப் பின்தொடருகிறதில்லை. ஆனால் அதனுடைய இயல்பான சுத்தகுணங்கள் கூடவே இருக்கின்றன. கேழ்க்கவேண்டும் என்று விரும்பும்பொழுது காதையும் ஸ்பரிசிக்கத் தோலையும் பார்க்கக் கண்களையும் உருசிக்கு நாக்கையும் முகர மூக்கையும் ஆசைக்கும் யோசனைக்கும் எண்ணத்தையும் புத்திக்குச்சித்தத்தையும் ஞாபகசக்தியையும் ஜீவன்தன்னுடைய சுயசக்தியைகொண்டு அடைகின்றது. சங்கல்பமாத்திரத்தினால் சரீரத்தையுமடைகிறது. சரீர ஆதாரத்துடன் இந்திரியங்களைக்கொண்டு தன் காரியங்களை உலகில் செய்துகொள்வது போலவே தன்னுடைய சக்தியைக்கொண்டு முக்தியிலும் சகல இன்பங்களையும் அனுபவிக்கிறது.

வினா.—எவ்வளவு சக்தியிருக்கிறது ? அது எவ்விதமானது ?

விடை.—ஒரேவிதமான சக்தியுள்ளது ஆனால் அதை விவரித்தால் 24வகைகளாகின்றன. 1. பலம் 2. பராக்கிரமம் 3. ஆகர்ஷண சக்தி 2. முயற்சி 5. நடத்

ந்த 6. பயம் 7. பகுத்தறிவு 8. செய்கை 9. உத்சாகம் 10. ஸ்மரணை 11. நிச்சயம் 12. இச்சை 13. ஆசை 14. துவேஷம் 15. சேர்க்கை 16. பிரிவு 17. கூடுதல் 18. பிரிதல் 19. கவனம் 20. ஸ்பரிசித்தல் 21. பார்வை 22. உருசி 23. கந்தம் 24. அறிவு இவைகளேயாம். இதைக்கொண்டே முக்தியில் கூட ஆனந்தத்தையடைந்து அனுபவிக்கிறது. முக்தியில் ஜீவன் ஒன்றாய் விட்டால் முக்தியினுடைய சுகங்களை யார் அனுபவிக்கிறார்கள். ஜீவனுடைய நாசத்தில் முக்தியை அறிகிறவர்கள் பெரும் அறிவீனர்கள். ஏனெனில் முக்தி யென்பது துக்கங்களிலிருந்து மீறி ஆனந்தஸ்வரூபனும் சர்வ வியாபகனும் ஆனந்தனுமிருக்கிற பரமேசுவரனிடத்தில் ஜீவன் ஆனந்தத்திலிருப்பதே யாகும்.

வேதாந்த சாரீரிக சூத்திரம் சொல்லுவதாவது.

अभावं बादरिराह ह्येवम् ॥ வேதாந்தம். 4. 4. 10.

வியாசருடைய பிதாவாகிய வாதரி முக்தியினால் ஜீவனுடையவும் அதனுடைய மனோவெண்ணத்தையும் நம்புகிறார். அதாவது ஜீவன் மனது இவைகளினுடைய லயத்தை வாதரியான பராசரர் நம்பவில்லை.

भावं जैमिनिर्विकल्पामननात् ॥ வேதாந்தம் 4. 4. 11.

ஆசாரியர் ஜெய்முனி முக்தியடைந்த புருஷனில் மனதுக்குச் சரியான சூக்ஷ்ம சரீரம் இந்திரியம் பிராணன் முதலானவைகள் விளங்குவதாக நம்புகிறார். அபாவத்தில் நம்பவில்லை.

द्वादशाहवदुभयविधं बादरायणोऽत ॥ வேதாந்தம் 4. 4. 12.

வியாசர் முக்தியில் பாவம் அபாவம் இவ்விரண்டையும் நம்புகிறார். அதாவது சுத்தசாமார்த்தியத்துடன் கூடின ஜீவன் முக்தியிலிருப்பதாகவும் பரிசுத்தமின்மை பாபகாரியம் செய்தல் துக்கம் அஞ்ஞானம் முதலானவைகளை அபாவமாகவுங்கருதுகிறார்.

यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह ।
बुद्धिश्च न विचेष्टते तामाहुः परमां गतिम् ॥ கடோபநிஷத். 2. 6. 10.

சுத்தமனதுடன் ஐந்து ஞானேந்திரியங்களைக்கொண்டு வசித்து புத்தியும் நிச்சியமாய் ஸ்திரமானஜீவனுக்குப் பரமகதி அதாவது மோக்ஷமென்று பெயர்.

य आत्मा अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोकोऽविजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः सोऽन्वेष्टव्यः स विजिज्ञासितव्यः सर्वांश्च लोकानाप्नोति सर्वांश्च कामान् यस्तमात्मानमनुविद्य विजानातीति ॥ சாந். 8. 7. 1.

லாபம், மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம், இவைகளன்னியிலும் சத்தியவேலை சத்திய சங்கல்பத்துடனிருக்கிறவரை அறிய ஆசைப்படு. பரமாத்மாவினுடைய சேர்க்கையினாலேயே முக்தியடைந்த ஜீவன் சகல உல

களையும் சகல எண்ணங்களையும் அடைகிறது. அப்பரமாத்மாவை அறிவதினாலேயே மோக்ஷசாதனங்களையும் சுய சக்தியையும் அடைகிறது

स वा एष एतेन दैवेन चक्षुषा मनसैतान् कामान् पश्यन् रमते ।। य एते ब्रह्मलोके तं वा एतं देवा आत्मानमुपासते तस्मात्तेषाँ सर्वे च लोका आत्ताः सर्वे च कामाः स सर्वाँश्च लोकानाप्नोति सर्वाँश्च कामान्यस्त-मात्मानमनुविद्य विजानातीति ।। சாந்தோ. 8. 125. 6.

முக்தியையடைந்த ஜீவன் சுத்தமான கண்களினாலும் சுத்தமனதினாலும் காரியங்களைப்பார்த்து அடைந்து அனுபவிக்கிறது. பிரம்மலோகம் அதாவது தரிசிக்கத்தகுந்த பரமாத்வாவிருந்துகொண்டு மோக்ஷ சுகத்தை அனுபவிக்கிறது. அந்தர்யாமியாயும் ஆத்மாவாயுமிருக்கிற இப்பரமாத்மாவினுடைய முக்தியை யடைந்த வித்வான்கள் பூஜையைச்செய்கிறார்கள். அதாவது எச்சங்கல்பங்கள் செய்யப்படுகிறதோ அதையடைகிறார்கள். முக்தியடைந்த ஜீவன் ஸ்தூலசரீரத்தைவிட்டு எண்ணத்தினால் செய்யப்பட்ட தெய்விகச்சரீரத்துடன் ஆகாயத்தில் பரமேசுவரனுடன் வசிக்கிறது. ஏனெனில் சரீரத்துடன் கூடினவர்கள் சம்சாரதுக்கங்களிலிருந்து மீறமுடியாதவர்கள்.

मघवन्मर्त्यं वा इदं शरीरमात्तं मृत्युना तदस्याऽमृतस्याशरीरस्यात्मनोऽधि-ष्ठानमात्तो वै स शरीरः प्रियाप्रियाभ्यां न वै सशरीरस्य सतः प्रियाप्रिययो-रपहतिरस्त्यशरीरं वाव सन्तं न प्रियाप्रिये स्पृशतः ।। சாந். 8. 12. 1.

இந்திரன் பிரஜாபதியுடன் சொன்னதுபோல் பூஜிக்கத்தக்கச் செல்வத்துடன் கூடின மனிதனே? இச்சரீரம் சிங்கத்தின் வாயிலுள்ள ஆட்டைப்போல் மரணத்தின் வாயில் இருக்கிறது. இச்சரீரம் மரணம் உருவம் இவைகளற்ற ஜீவாத்மாவிற்கு இருப்பிடமாயிருக்கிறது. ஆகையினால் எப்பொழுதும் சுகதுக்கங்களினால் மூடப்படுகிறது. ஏனெனில் சரீரத்துடன் கூடின ஜீவன் உலகசுகங்களை இம்மாதிரி யடைகிறது. ஆனால் சரீரமில்லாத முக்தியையடைந்த ஜீவாத்மா பிரம்மத்தில் வசிக்கிறது. அதை உலகத்தின் சுகதுக்கங்கள் பாதிக்கிறதில்லை. எப்பொழுதும் இன்பத்திலேயே வசிக்கிறது.

வினா:—ஜீவன் முக்தியையடைந்த பிறகு ஜனனமரண துக்கத்தில் வருகிறதா இல்லையா? இவைகள் கூறுவதுபோல் மறுபடியும் திரும்பி உலகத்தில் வாராமலிருப்பதினாலேயே முக்தியுண்டாகின்றது.

न च पुनरावर्त्तत न च पुनरावर्त्तते इति ।। சாந்தோ. 8. 15.

अनावृत्तिः शब्दादनावृत्तिः शब्दात् ।। சாரீரிக. 4. 4. 33.

यद् गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ।। பகவத்கீதை.

விடை:—இது உண்மையானதில்லை. வேதங்கள் இவைகளைத்தள்ளுகின்றன.

कस्य॑ नूनं कत॒मस्या॒मृता॑नां मना॑महे॒ चारु॑ दे॒वस्य॒ नाम॑ ।
को नो॑ म॒ह्या अदि॑तये॒ पुन॑र्दात् पि॒तरं॑ च दृ॒शेयं॑ मा॒तरं॑ च ॥
अ॒ग्नेर्व॒यं प्र॑थ॒मस्या॒मृता॑नां मना॑महे॒ चारु॑ दे॒वस्य॒ नाम॑ ।
स नो॑ म॒ह्या अदि॑तये॒ पुन॑र्दात् पि॒तरं॑ च दृ॒शेयं॑ मा॒तरं॑ च ॥ ரிக். 1. 24. 2.

इदानीमिव सर्वत्र नात्यन्तोच्छेदः ॥ சாங்கிய சூத்திரம் 1. 159.

நாங்கள் எந்தை பவித்திரமென்று அறிவது என்பது கேழ்வியாகும். எத் தேவன் அழிவுள்ளபொருள்களின் நடுவில் அழியாமலிருந்துகொண்டு பிரகாச ஸ்வரூபனாய் நமக்கு முக்தியின் சுகத்தை யளித்து மறுபடியும் இவ்வுலகில் பிறப்பைக்கொடுத்து தாய்தகப்பனார்களைப்பார்க்கச்செய்கிறான்? சுயம்பிரகாச ஸ்வரூபமாய் அநாதியாயும் எக்காலமும் முக்தியை யடைந்திருக்கும் பரமாத்மாவையே பவித்திரன் என்று அறி. எவர் நமக்கு முக்தியில் ஆனந்தத்தை யளித்து பூமியில் மறுபடியும் மாதாபிதாவினுடைய சேர்க்கையில் பிறப்பையளித்து அவர்களைகாணச் செய்துவைக்கிறாரோ அப்பரமாத்மாவையே பூஜித்தல்வேண்டும். அவரே முக்தியைக்கொடுக்கிறார். சகலருக்கும் அவரே கடவுள்

தற்சமயத்தில் பந்தமுக்த ஜீவன்களெப்படியோ அப்படியே எப்பொழுது மிருக்கிறது. பந்தமும் முக்தியும் எக்காலமுமிருப்பதல்ல.

तदत्यन्तविमोक्षोऽपवर्गः । दुःखजन्मप्रवृत्तिदोषमिथ्याज्ञानानामुत्तरोत्तरापाये तदनन्तरापायादपवर्गः ॥ நியாயசூத்திரம் 1. 22. 2.

வினா:—துன்பத்திலிருந்து (அத்யந்த) எந்நாளும் விலகியுள்ள சுயேச்சைக்கு முக்தி என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் பொட்டுஞானம் அவித்தை அவா விஷயசுகம் தீய ஒழுக்கம் பிறப்பு இறப்பு இவைகளிலிருந்து சுயேச்சையை யடைவதே எந்நாளுமுள்ளதாகும்.

விடை:—"அத்யந்த" வார்த்தைச்கு எந்நாளும் என்று அர்த்தம் ஆக வேண்டாம். உதாரணமாக (அத்யந்தசுகம் அத்யந்ததுக்கம்) என்பதில் "மிகவும் சுகம் மிகவும் கஷ்டம்" என்று ஆவதுபோல் "அத்யந்த" வார்த்தைக்கு அர்த்தங்கொள்ளவேண்டும்.

வினா:—முக்தியிலிருந்து ஜீவன் திரும்பிவிடுமேயானால் அது எவ்வளவு காலம் முக்தியிலிருக்கும்?

ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥ முண்டகோ. 3. 2. 6.

முக்தி பெற்ற ஜீவன் முக்தியையடைந்து மகாகல்பம வரையிலும் பிரமத்தில் ஆனந்தத்தையனுபவிக்கிறது. மறுபடியும் மகாகல்பத்திற்குப் பிறகு முக்தி சுகத்தைவிட்டு உலகத்திற்கு திரும்பிவருகிறது. கணக்கு விவரம் இதுவேயாம்.

காலம் நாலுயுகங்களாகபிரிக்கப்பட்டிருக்கின்றன.

விடை—சத்தியயுகம்	17,28,000	வருடங்கள்
துவாபரயுகம்	12,96,000	,,
திரேதாயுகம்	864000	,,
கலியுகம்	432000	,,
மொத்தம்.	4320000	,,

ஆக சதுர்யுகம் ஒன்றுக்கு வருஷங்கள் 43,20.000.

2000 சதுர்யுகம் (6640000000 வருஷங்கள்) ஒரு அகோராத்திரம்

30 அகோராத்திரம் = ஒரு மாசம்

12 மாசங்கள் = ஒரு வருஷம்

100 வருஷங்கள் = ஒரு பரந்தகாலம் (மகாகல்பம்)

ஆகவே மொத்த வருஷங்கள் = 100 × 12 × 30 × 2000 × 43, 20, 000 = 3, 11, 040, 000, 000, 000 வருஷங்கள்

வினு:—எதிலிருந்து மறுபடியும் பிறப்பு இறப்பு கிடையாதோ அதையே முக்தியென்று உலகமும் கிரந்தகர்த்தாக்களும் நம்புகிறார்கள்.

விடை:—இது உண்மையாகாது? முதலாவதாக ஜீவனுடைய சாமர்த்தியம் சரீரம் முதலான பொருள்கள் எல்லையுள்ளதென்றால் அதனுடைய பயன்கள் எவ்விதம் அனந்தமாயிருக்கக் கூடும் ? இரண்டாவதாக அனந்த ஆனந்தத்தை யனுபவிக்க ஜீவனுக்கு, கட்டுக்குட்படாத சக்தி, வழி சுறுசுறுப்பு இவைகள் இல்லாமையினால் அனந்த சுகத்தை யனுபவிக்க முடியாது. சாதனங்கள் அநித்தியமாயிருக்குங்கால் அதனுடையபலன்கள் ஒருபொழுதும் நித்தியமாகாது. மூன்றாவதாக முக்தியிதிலிருந்து எஜ்ஜீவனும் திரும்பி வராமல் போனால் உலகம் அவைகளற்றதாய்விடும்.

வினு:—எவ்வளவு ஜீவன் முக்தியை யடைகிறதோ அவ்வளவு புதியவைகளை உண்டுபண்ணி ஈசுவரன் உலகத்தில் வைக்கிறபடியினால் ஜீவன்களுடைய வறட்சி உண்டாகாதே?

விடை:—முதலாவதாக அவ்விதமிருக்குமேயானால் ஜீவன் அநித்தியமாகும். ஏனென்றால் எதற்கு உற்பத்தியுண்டோ அதற்கு அழிவு நிச்சயம். உங்களனுஷ்டானப்பிரகாரமே முக்தியை யடைந்து அழிவையுமடைந்தால் முக்தி அநித்தியமாகிறது. இரண்டாவதாக முக்தியைஅனுபவிக்கும் இடத்தில் சத்தமும், கலகமும், கும்பலும், அதிகமாகும். ஏனெனில் வெளிப்போகும் ஜீவனங்களன்னியில் எல்லோரும் உள்ளேயேபோவார்கள். மூன்றாவதாக நாம் ஒன்றையே உருசிபார்த்துக்கொண்டிருந்தால் துக்கத்தினுடைய அனுபவமும் இராது. உதாரணமாக இனிப்பிலிருந்து கைப்பும் கைப்பிலிருந்து இனிப்பையும் அறியகூடியாது மாறுதலான ருசிகளையுடைய வஸ்துக்களைப் பார்ப்பதினாலேயே இரண்டினுடைய குணங்களும் தெரிகிறது. பலவிதரசங்களைச்சாப்பிடுகிறவன் அறிகிறமாதிரி ஒரே இனிமையே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறவன்

அறியான் நான்காவதாக முடிவையுடைய காரியங்களுக்கு அனந்த பலனைக் கொடுப்பதினால் ஈசுவரனுடைய நியாயம் கெட்டுப்போகும். சுமக்கக்கூடிய வரையிலே சுமையைவைப்பது புத்திமான்களுடையவேலை. ஒருமணங்கு தூக்கக்கூடிய தலையில் பத்து மணங்குவைக்கிறவன் நிந்தனைக்கு ஆளாகிறான். இப்படியே அல்பஞ்ஞானத்தையும சாமர்த்தியத்தையுமுடைய ஜீவன் பேரில் அனந்தசுகங்களின் சுமையை வைப்பது ஈசுவரனுக்குச்சரியல்ல. ஐந்தாவதாக பரமேசுவரன் புது ஜீவன்களை உற்பத்திபண்ணிக்கொண்டேயிருந்தால், எதைக் கொண்டு உற்பத்தி பண்ணுகிறானோ அது முடிந்துபோய்விடும். ஏனென்றால் எவ்வளவு பணம்நிறைந்த பொக்கிஷமாயிருந்த போதிலும் வரவு அன்னியில் செலவுமாத்திரம் இருக்குமேயானால் அது குறைந்துகொண்டே போய்விடும் ஆகையினால் முக்தியடைவதும் அதிலிருந்து திரும்பிவருவதுமே சரியானவழி. சிலகால சிறைவாசத்தைவிட தீவாந்திர சிட்சையையாரும் கோரமாட்டார்கள் முக்தியிலிருந்து திரும்பிவருவது இல்லாமல்போனால்தீவாந்திர சிட்சையேயாகும். வேலையில்லாமலிருப்பதே அதற்கும் இதற்கு முள்ள வித்தியாசமாகும். பிரம்மத்துடன் கலப்பதாக முக்தியை நினைப்பது சமுத்திரத்தில் முழுகுவது போலாகும்.

வினா:—பரமேசுவரன் நித்திய முக்தனும் பூர்ணமாயும் இருக்கிற மாதிரி அவன் கூட நித்திய முக்தனும் சுகமுள்ளவனுமிருந்தால் கெடுதல் மூன்றும் உண்டாகாதே?

விடை:—பரமேசுவரன் குணம் கர்மம் ஸ்வபாவத்தினால் அநந்தமாயும் சாமார்த்தியமுள்ளவனுமிருக்கிறான். ஆகையினால் அவர் ஒரு பொழுதும் பந்தம் அவித்தை துக்கங்களில் விழமாட்டார் அவன் முக்தியையடைந்துங் கூட அற்பஞ்ஞனும் கட்டுக்குட்பட்ட குணகர்ம சுவபாவமுள்ளவனுமிருக்கிறார். பரவேச்வரனுககுச்சரியாய் அது ஒரு பொழுதும் ஆகாது.

வினா:—இம்மாதிரியானால் முக்தியும் பிறப்பு, இறப்பிற்குச்சரியாகிறது. ஆகையினால் அதை அடைய சுஷ்டப்படுவது வீணே?

விடை:—முக்தி பிறப்பு இறப்பிறகுச்சரியாகாது. 36,000 தடவைகளிலுள்ள, உற்பத்தி பிரளய வருஷங்களில் பூராவும் ஜீவன் முக்தியில் ஆனந்தத்தை யடைந்து துக்கமன்னியில் இருப்பது சிறியகாரியமில்லை. பசிக்கு மென்றும் தெரிந்திருந்து இன்றைக்கு ஏன் புசித்து அருந்துகிறீர்கள்? பசி தாகம் பணஞ்சேர்த்தல் கீர்த்தி ஸ்திரீ, சந்தானம் இவைகளுக்காகக் கஷ்டப்படுவது அவசியமானால் முக்திக்காக எதுதான் செய்யக்கூடாது. இறப்பது அவசியமாயிருக்க ஜீவனோபாயம் ஏன் செய்கிறீர்கள்? இம்மாதிரியே முக்தியிலிருந்து திரும்பி ஜன்மத்தை யடைந்தபோதிலும் அதற்காக வழிதேடுவது மிகவும் அவசியமானது.

வினா:—முக்தியை அடைய என்னென்ன வழிகளுண்டு?

விடை.—சிலவழிகள் முன்னலேயே சொல்லப்பட்டிருக்கின்றன. முக்தியமானவழிகளிவைகளாகும்.

I. முக்தியை விரும்புகிறவர்கள் ஜீவன் முக்தர்களாய், அதாவது பொய் பேசுதல், பாபகர்மம் இவைகளுடைய பலன் பெருந்துக்கம் இவைகளை விட்டு சுகரூபமாக இருக்கிறபயனைக் கொடுக்கிற மெய் உரைத்தல் தர்மத்தை ஆச்ரியத்தல், முதலானவைகளை அவசியமாகசெய்யட்டும். துக்கத்தைவிட்டுச் சுகத்தையடைய விரும்பினால் அதர்மத்தைவிட்டு தர்மத்தைக் அவசியம் செய்யவேண்டும். ஏனெனில் துக்கத்திற்குப் பாபகாரியங்களும் தர்ம காரியங்களுக்குச்சுகமும் மூலகாரணங்களாயிருக்கின்றன.

II. சத்புருஷர்களுடைய சங்கத்தின் சேர்க்கையினால் அதாவது சத்யம், அசத்யம், தர்மம், அதர்மம், செய்யக்கூடாது, செய்யக்கூடாதது இவைகளை அறியட்டும்.

III. பஞ்சகோசங்களினுடைய சாரத்தையும் ஞானத்தையும் அறியட்டும்.

(i) அன்னமயகோசம்:—எலும்பிலிருந்து தோல்வரையிலுள்ள தசை நரம்பு முதலானவைகள் பிருதிவி மயம்.

(ii) பிராணமயகோசம்:—

(1) பிராண, அதாவது வெளியிலிருந்து மூச்சை உள்ளே இழுத்துக்கொள்ளுவது.

(2) அபானம். அதாவது உள்ளேயிருந்துவெளியில் விடுவது.

(3) சமானம். தொப்புளிலிருந்து சரீரம் முழுவதும் ரசத்தை—அன்னரசம்—ஓடச்செய்வது.

(4) உதானம். கழுத்திலிருந்து அன்னபானங்களை வயிற்றில் வாங்கிக்கொண்டு பலம் பராக்கிரமத்தைக்கொடுப்பது.

(5) வியானம்:— சரீரத்தில் அசைதல் முதலான எக்கர்மங்களைஞ் ஜீவன் செய்கிறதோ

(iii) மனோமயகோசம்:— மனதுடன்கூட அகங்காரம் எண்ணம், ஞாபகசக்தி, பஞ்சேந்திரியம் இவைகளடங்கி யுள்ளது.

(iv) விஞ்ஞானமயகோசம்:—புத்தி, சித்தம், கேழ்க்கல், சுவையறிதல், கண் நாக்கு மூக்கு. இவ்வைந்து ஞானேந்திரிகள் அடங்கியுள்ளது. இவைகளைக்கொண்டே ஜீவன் ஞானம் முதலான காரியங்களை அடைகிறது.

(v) ஆனந்தமயகோசம்:—ஆசை, களித்தல், (அதிகமாயிருத்தல்—குறைவாயிருத்தல்) சந்தோஷித்தல் இவைகள் அடங்கியுள்ளது.

மேற்சொன்ன கோசங்களாகிற ஐந்தினாலேயே ஜீவன் பலவித கர்மம் உபாசனை, ஞானம் முதலானவைகளைச் செய்கிறது.

IV. அவஸ்தைகள் மூன்று விதமாகும்,

(1) ஜாக்கிரதம்—விழித்திருத்தல்

(2) சுவப்னம்—கனவு காணுதல்

(3) சுஷுப்தி—இளைப்பாறுதல்—சிறுதுயில்

V. சரீரங்கள் மூன்றுவிதமாகும்

(1) தூலசரீரம்:—காண்கிறது.

(2) சூக்ஷ்மசரீரம்:—ஐந்து பிராணன், ஐந்து ஞானேந்திரியம், ஐந்து சூக்ஷ்மபூதம், மனது, புத்தி, இப்பதினேழு தத்துவங்களினுடைய கூட்டம். பிறப்பு இறப்பிலுங்கூட அது ஜீவனுடனிருக்கிறது. அது இருவகைப்படும்.

(i) பௌதிகம்:—சூக்ஷ்ம பூதங்களுடைய அம்சங்களிலிருந்து செய்யப்பட்டது.

(ii) சுவபாவிகம்—ஜீவனுடைய இயற்கை குண ரூபங்கள்

இவ்விரண்டும் முக்திநிலையிலும் கூடவேயிருப்பதால் ஜீவன், அந்நிலையிலும் இன்பத்தை அனுபவிக்கிறான்,

(3) காரணசரீரம்:—பிரகிருதி அடங்கியுள்ளது, அது எங்கும் பரவியுள்ளது. ஆகவே சகலஜீவன்களிலும் சமமாகவே இருக்கிறது. இதைக்கொண்டே ஜீவன் சுஷுப்தி எனப்படும் அயர்ந்த நித்திரையை அடைகிறது.

(4) துரிய சரீரம்:—சமாதியினால் பரமாத்மாவினுடைய ஆனந்த ஸ்வரூபத்தில் அமிழ்ந்து ஜீவனிருக்கிறது. இச்சமாதி சம்ஸ்காரத்தினால் உண்டாகிற சுத்த சரீரத்தின் பராக்கிரமம், முக்திநிலையில்கூட உபயோகமாகிறது.

கோசம், அவஸ்தை, சரீரம் முதலான இவைகளெல்லாவற்றிலுமிருந்து ஜீவன் தனியாயிருக்கிறது. ஒருவன் இறந்தவுடன் சாதாரணமாய்ஜனங்கள், “ஜீவன் போய்விட்டது” என்று சொல்லுவதிலிருந்தே இவ்வுண்மை தெளிவாகிறது. ஜீவனே எல்லாவற்றையும் ஏவுகிறவன். சகலத்தையும் உடையவன். சாக்ஷிசெய்கிறவன். அனுபவிக்கிறவன். ஜீவன் கர்த்தா. அனுபவிக்கிறவன் இல்லையென்று சொல்லுகிறவர்களை அவிவேகி என்றும் அஞ்ஞானியென்றும் தெரிந்துகொள். ஏனெனில் ஜீவனன்னியில் இவைகளெல்லாம் சடப்பொருள்களே. இவைகளுக்குச் சுக துக்கங்களை யனுபவிக்கவும் பாபபுண்ணியங்களைச் செய்யவும் ஒரு பொழுதும் முடியாது. இவைகளுடைய சேர்க்கையினாலே ஜீவன் பாப புண்ணியங்களைச்செய்து சுகதுக்கங்களை அனுபவிக்கிறது. இந்திரியங்கள் வெளி விஷயங்களுடனும், மனது இந்திரியங்களுடனும் ஆத்மா மனதுடனும் சேர்ந்தால் பிராணனை யுண்டுபண்ணி (நல்லது கெட்டது) காரியங்களிலிழுக்கிறது. அப்பொழுது அது பகிர்முகம் (வெளியிலிருந்து ஏவப்படுகிறது) ஆகிறது. அச்சமயத்தில் உள்ளிருந்து ஆனந்தம் உற்சாகம், பயமின்மையும், கெட்டகாரியமாயிருந்தால் பயம், சந்தேகம், வெட்கம் இவ்வுணர்ச்சிகள் உண்டாகின்றன. அந்தர்யாமியாயிருக்கிற பரமாத்மாவினுடைய சிக்ஷையே அது. எவன் இச்சிக்ஷைக்கு அனுகூலமாப் நடக்கிறானோ அவன் முக்திநிலையின் இன்பத்தை யடைகிறான். எவன் எதிரிடையாகச் செய்கிறானோ அவன் பந்த துக்கங்களை யனுபவிக்கிறான். இதுவே முதல் சாதனமாகும்.

(2) **வைராக்யம்** அதாவது விவேகத்தினால் சத்தியாசத்தியத்தை யறிந்து அதிலிருந்து சத்தியகாரியங்களைக் கடைப் பிடித்து அசத்தியகாரியங்களை விடுவது. பூமிமுதல் பரமேசுவரன் பரியந்தம் உள்ள பொருள்களின் குணம் கர்மம் சுவபாவம் இவைகளை யறிந்து அவைகளினுடைய ஏவல்களைக்காப்பாற்றி உபாசனையில் அவைகளிலிருந்து வேறாகப் போகாமல் சிருஷ்டிப் பிரகாரம் நடப்பதிற்கு விவேகம் என்று பெயர்.

(3) **ஷடக்சம்பத்தி:**—அதாவது ஆறுவிதமான கர்மங்களைச்செய்வது.

(i) சம:— தன்னுடைய ஆத்மாவையும் அந்தக்கரணத்தையும் அதர்மகாரியத்திலிருந்து விலக்கி தர்மத்தில் எப்பொழுதும் செலுத்துவது.

(ii) தம:—ஐம்புலன்களையும் சரீரத்தையும் வியபசாரம் முதலிய தீயகாரியங்களிலிருந்து விலக்கி அடக்கப்பட்ட ஐம்புலன்களை உடையவனாய் நல்ல ஒழுக்கங்களைக்கைக்கொண்டிருப்பது.

(iii) உபாதி:—தீயோர்களிடமிருந்து தூரமாயிருப்பது.

(iv) திதிக்ஷா:—நிந்தை, துதி, லாபநஷ்டம் சுகதுக்கம் இவைகளால் பாதிக்கப்படாமல் முக்திக்குவேண்டியசாதகங்களைப்பழகுவது.

(v) சிரத்தா:—வேதம் முதலான சத்தியசாஸ்திரங்களுடைய ஞானத்தினால் பூரணமாயிருக்கும் கற்றுணர்ந்த பெரியோர்களுடைய சத்தியோபதேசத்தில் நம்பிக்கை வைப்பது.

(vi) சமாதானம்:— ஒரே சித்தத்துடனிருப்பது.

இவ்வாறையும் மூன்றாவது சாதனமென்று கூறுவார்கள்.

4. **முமுக்ஷுத்துவம்:**—பசியால் களைத்திருப்பவன், ஆகாரத்தையும் தண்ணீரையும் தவிர வேறொன்றையும் எண்ணாமலிருப்பதுபோலவே முக்தி இன்பத்தைப்பெறுவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பது. மற்ற எதிலேயும் கவனமில்லாதிருப்பது. ஆக முக்தியைப்பெற சாதனங்கள் நான்கு. இதற்குப் பிறகு அனுபந்தங்கள் (துணைகள்) நான்கிருக்கின்றன.

அனுபந்தங்கள் நான்காவன.

(i) அதிகாரி:—மோக்ஷத்தையடையத்தகுதியுடனிருப்பது.

(ii) சம்பந்தம்:—பிரம்மத்தையடையவேண்டிய ரூபமான முக்தியை அடைந்து வேதம் முதலான சாஸ்திரங்களைச்சரிவர அறிந்து அனுபவிப்பது.

(iii) விஷயீ:—சகலசாஸ்திரங்களும் கூறும் விஷயமாகிற பிரம்மத்தை அறிந்து அடையவேண்டியவைகளைக்கைக்கொள்வது.

(iv) பிரயோஜன:—இன்பதுன்பம் எல்லாவற்றிலிருந்தும் மீறி, பிரம்மானந்தத்தைப்பெற்று முக்தியின்பத்தையடைவது.

அநுபந்தத்திற்கப்புறம் சரவணசதுஷ்டயஹ உண்டு. இதிலேயும் நான்கு வகையுண்டு. (i) சிரவண:—மனவமதியுடனும் கவனத்துடனும் மேதைக

ளுடைய உபதேசத்தைக்கேழ்த்தல். பிரம்மவித்தையைக்கேழ்ப்பதில் ஆழ்ந்த கவனத்துடனிருத்தல் வேண்டும். ஏனென்றால் சகலவித்தைகளிலும் சூக்ஷ்ம மானது இது. (ii) மனனம்:—கேட்ட பிறகு தனிவிடத்தில் உட்கார்ந்து கேட்டவைகளையோசிப்பது. சந்தேகமிருந்தால் மறுபடியும் கேட்பது. சபை யோர்களுக்கும், உபந்நியாசகருக்கும் சரி என்று தோன்றினால் சந்தேகங்களை அவ்வப்போதே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். (iii) நிதித்தியாசனம்:— கேழ்க்கும் பொழுதும் யோசிக்கும்பொழுதும் சந்தேகமன்னியிலிருந்து பிறகு சமாதி நிலையை அடைந்து யோகத்தின் உதவியால் அவைகள் சரியாய் இருக் கிறதா இல்லையாவென்று அறிவது. (iv) சாக்ஷாத்காரம்:—எவ்விதம் பொருள்க ளுடைய குணம், கர்மம், சுவபாவம் இருக்கிறதோ அதை அவ்விதமே அறி வது. கோபம், சுத்தக்குறைவு, ஆலசியம், மடமை முதலானவைகளை விளக்கும் தமோ குணத்தையும், பொறாமை ஆர்வம், அகந்தை, துராசை, முதலானவைகளை விளக்கும் ரஜோ குணத்தையும் முறையே களைந்துவிட்டு, மனவமைதி, சாந்தம், பரிசுத்தம், அறிவு, ஊக்கம், இவைகளைத்தரும் சத்வ குணத்தை அவன் (முக்தியை கோருகிறவன்) கைக்கொள்ளட்டும்.

சந்தோஷ முள்ளவர்களுடன் நேசபாவத்துடனும் துன்பங்களிலிருந்து பரிதவிக்கிறவர்களுடன் தயையுடனும், தீயோர்களுடன் நேசமன்னியிலும் விரோதமன்னியிலும் அவன் இருக்கட்டும். பிரதிதினமும்,குறைந்தது இரண்டு மணிநேரமாவது தியானஞ்செய்து அகத்திலுள்ள மனம் முதலான பொருள் களைப் பார்க்கட்டும். நமக்குச் சேதனஸ்வரூபமிருக்கிறது. இதனாலேயே ஞான ரூபம் மனதுக்குச் சாக்ஷியாயிருக்கிறது. ஏனெனில் எப்பொழுது மனது அமைதியில்லாதது ஆனந்தம், விஷயசுகங்களை அனுபவித்தல் இவைகளினால் பாதிக்கப்படுகின்றதோ அப்பொழுது உள்ளவாரேயறிகின்றது. இப்படியே இந்திரியம் பிராணன், முதலானவை ளினுடைய காரியங்களை அறிகிறோம். முன்கண்டவைகளை ஞாபகம் வைத்துக்கொள்ளுகிறோம். ஒரே சமயத்தில் பலபொருள்களின் அறிவை யடைகிறோம். இழுத்து மற்றவர்களைத்தரித்து வேறாகவுமிருக்கிறோம். தனியாயில்லாமல் போனால் சுதந்திர எஜமானன் இதைத்தூண்டுவோனாயும் தாங்குவோனாயு மிருக்கமுடியாது.

अविद्याऽस्मितारागद्वेषाभिनिवेशाः पञ्च क्लेशाः॥ யோகசாஸ். 2. 3.

இவ்வுலகில் ஐந்து விதமான கிலேசங்கள் (துக்கம்.) (i) அவித்தை:— அத்தியாய வாரம்பத்திலேயே இதைக்குறித்துப் பேசிவிட்டோம். (ii) அஸ் மிதை:—புத்தியை ஆத்மாவிலிருந்து விலகினதாக நினைப்பது. (iii) ராகம்:— சுகத்தில் ஆசை. (iv) துவேஷம்:—துக்கத்தில் வெறுப்பு. (v) அபிநிவே சம்:—மரணத்திற்குப் பயம். ஜீவித்திருக்கும் மனிதர்கள் எல்லோரும் எக்கா லமும் பிழைத்தும் எப்பொழுதும் இறக்காமலுமிருக்கப் பிரியப்படுகிறார்கள். யோகாப்பியாச உதவியைக்கொண்டு இவ்வைந்து கிலேசகங்களையும் ஒழித்துப் பிரம்மத்தை யடைந்து முக்தியின்பத்தை அனுபவிக்க வேண்டும்.

வினு:—உலகத்திலிருந்து வேறுவிதமாக நீங்கள் முக்தியை நினைக்கிறீர்களே? சமணர்கள் சிவபுரத்தையடைந்து மோட்ச சிலையில் அமைதியுடனிருப்பதென்றும், கிருஸ்தவர்கள் விவாகம் சண்டை செய்துகொண்டு நான்காவது உப்பரிகையையடைந்து ஆடுவது பாடுவது நல்லதுணிகளைக் கட்டிக்கொள்ளுவது ஆனந்தத்தை அனுபவிப்பது என்றும், முகம்மதியர்கள் ஏழாவது உப்பரிகைக்குச் செல்வதென்றும் வாமமார்க்கத்தைச்சேர்ந்தவர்கள் ஸ்ரீ புரம் சைவம், கைலாயர்கள்ம் வைணவர்கள் வைகுண்டம், கோகுலத்தையும் கோசாவிகள் கோலோகத்தையும் யடைந்து நல்லபெண், அன்னபானம், வஸ்திரம் இடம் முதலானவைகளைப்பெற்று ஆனந்தத்திலிருப்பதையே முக்தியென்று முறையே எண்ணுகிறார்கள். (சாலோக்யம்) ஈசுவரனுடைய உலகத்தில் வசிப்பது (சானுஞ்யம்) தம்பிக்குச்சரியாய் ஈசுவரனுடன் இருப்பது (சாரூப்பியம்) உபாசனுதேவதையினுடைய உருவத்தைத் தானும் அடைவது (சாமீப்பியம்) சேவகனுக்குச்சமானமாய் ஈசுவரசமீபத்தில் வசிப்பது. (சாயுஞ்யம்) ஈசுவரனுடன் ஒன்று சேருவது என்றுபுராணிகர்கள் (புராணம் முதலானவைகளை நம்புகிறவர்கள்) நம்புகிறார்கள். பிரம்மத்துடன் கலப்பதையே வேதாந்திகள் முக்தியென்று நம்புகிறார்கள்.

விடை:—சமணர்கள், துருக்கர்கள், கிருஸ்துவர்கள் இவர்களுடையமுக்தி முதலான விஷயங்களைக்குறித்துப் பன்னிரண்டாவது, பதிமூன்றாவது, பதினான்காவது அத்தியாயங்களில் விவரிப்போம். வாமமார்க்கத்தவர்கள் ஸ்ரீபுரத்தைச்சேர்ந்து லக்ஷ்மிக்குச்சரியான பெண்களுடன்கூடி மாம்சம் கள்ளு சாராயங்களைச்சாப்பிட்டு காமபோகங்களை அனுபவிப்பது இவ்வுலகிலிருப்பதைவிட ஒரு அற்புதமாகாது. புருஷர்களை மகாதேவன் விஷ்ணு ஆகியவர்களுக்குச்சமானமாயும் ஸ்திரீகளை லக்ஷ்மி பார்வதிஆகியவர்களுக்குச் சரியானவர்களாயும் எண்ணி ஆனந்தத்தில் ஒருவருக்கொருவர் சம்யோகஞ்செய்கிறார்கள். அங்கேபிணிகள் பீடிக்காதென்றும் எப்பொழுதும் சிறுவயதுடனேயேயிருக்கலாமென்றும் சொல்லி தனவந்தர்களும் அரசர்களும் செய்வதைவிட மிகையாகாது. இம்மாதிரி சொல்லுவது பொய் வார்த்தைகளேயாகும். ஏனெனில் எங்குபோகமிருக்கிறதோ அங்கேரோகமும் ரோகமாயிருக்குமிடத்தில் கிழத்தனமும் கட்டாயமாக இருந்தே வருகின்றது. தன்முயற்சியன்னியிலேயே மிருகம் புழு பூச்சிகளுக்குக்கூட அவர்களுடைய ஐவித முக்தி உண்டு என்று புராணிகர்களிடம் சொல்லவேண்டும். உதாரணமாக அவர்களுடைய முதல் விதத்தை எடுத்துக்கொள்வோம். (1) எவ்வளவு உலகங்களிருக்கின்றதோ அவைகள் யாவும் ஈசுவரனுடையதே. இவைகளிலேயே சகலமும் வசிக்கின்றன. ஆகையினுல் சாலோக்கியத்தை பிரயத்தினமன்னியிலேயே அடையக்கூடும். (2) ஈசுவரன் எங்கும் பரவியிருக்கிறபடியினுல் எல்லோரும் அவருக்குச் சமீபத்திலேயே இருக்கிறார்கள். ஆகையினுல் சாமீப்ய சித்தி தானுகவே உண்டாகும். (3) ஜீவன் ஈசுவரனில் பலவிதமாய் சிறியதாயும் சேதனமாயுமிருக்கிறபடியினுல் சொந்தபந்துக்களைப் போலாகிறுன். இதனுல் சாயுஜ்ய முக்தியும் பிரயத்தன மன்னியிலேயே கிடைக்கின்றன. (4) சகல ஜீவனும் சர்வ

வியாபகமான பரமாத்மாவில் பரவியிருக்கிறபடியினுல் சேர்ந்திருக்கிறன. ஆகையினுல் சாயுஜ்ய முக்தியும் தானுகவே உண்டாகக்கூடியது. வேறு சாதாரண நாஸ்திகர்கள் இறப்பதினுல் தத்துவங்களுடன் தத்துவங்கள் சேருவதை முக்தியென்று நினைக்கிறுர்கள். அதை நாய் நூதை முதலானவைகள்கூட அடைகின்றன. இவைகள் முக்தியாகாது. இதெல்லாம் ஒரு விதமான பந்தங்களேயாகின்றன. சிவபுரி, மோக்ஷசிலே, நான்காவது உப்பரிகை, ஏழாவது உப்பரிகை, ஸ்ரீபுரம், கைலாசம், வைகுண்டம் கோலோகம் இவைகளை இவர்கள் நாட்டைச்சேர்ந்த ஒரு முக்கிய ஸ்தலமாகவே கருதுகிறுர்கள். இவ்விடங்களிலிருந்து வந்துவிட்டால் முக்திபிரிந்து ஓடிவிடும். இருட்டறைகளிலடைப்பட்டு வெளியில் போகமுடியாமல் இருக்கும் கைதிகளைப்போல் கட்டுப்பட்டிருக்கிறுர்கள். தங்குதடையன்னியில் நினைத்தவிடங்களுக்குச்செல்லகூடியதும் பயம் சந்தேகம் துக்கம் இவைகளன்னியிலிருப்பதுமே முக்தி. ஜன்மத்திற்கு உற்பத்தியென்றும் இறப்பிற்குப் பிரளயம் என்றும் சொல்லப்படுகின்றன.

வினு:—ஜன்மம் ஒன்ரு அல்லது அநேகமா?

விடை:—அநேகம்.

வினு:—அப்பொழுது பிறப்பு இறப்பினுடைய முன்பின் ஞானமும் ஏன் கிடையாது?

விடை:—ஜீவன் அல்பஞ்ஞன். திரிகாலதரிசியில்லே. இதனுலேயே ஞாபகம் இருக்கிறதில்லே. ஒரேசமயத்தில் இரண்டு தோற்றங்களினுடைய ஞானங்கிடையாது. முன் ஜன்மவார்த்தையையே விட்டு விடுவோம். இச் ஜன்மத்திலேயே கர்ப்பந்தரித்ததிலிருந்து ஐந்துவயதுவரையில் நடந்திருக்கும் படியான சம்பவங்களின் ஞாபகம் ஏன் இல்லே? விழித்திருக்குங்காலத்திலும் கனவிலும் பலகாரியங்களை நாம் நேரிட்டுச்செய்தும் ஆழ்ந்த தூக்கத்தில் அவைகளினுடைய ஞாபகம் ஏன் உண்டாகிறதில்லே? எவருவது உன் பதின் மூன்ருவது வயதின் பதினைந்தாவது மாசம் ஒன்பதாவது நாள் பத்தாவது மணியில் என்னசெய்து கொண்டிருந்தாய்? மனதில் என்ன யோசனே நிகழ்ந்தன? உன்முகம், கை, காது, கண் சரீரம் இவைகள் என்ன ஸ்திதியை அடைந்து எப்பக்கத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது எனக் கேட்டால் பதில் கூறமுடியுமா? முடியாது. இப்பிறப்பின் சம்பவங்களிலேயே இம்மாதிரியானுல் முன்பிறப்பின் காரியங்களினுடைய ஞாபகத்தைச்செய்வதென்பது கேவலம் குழந்தைப்பேச்சேயாகும். ஞாபகமில்லாமலிருப்பதினுலேயே ஜீவன் சுகமாயிருக்கிறுன். இல்லேயேல் பல ஜன்ம துக்கங்களை நினைத்து வியாகூலமடைந்து மரணமடைவான். பிறப்பின் முன்பின் சம்பவங்களை அறிய விரும்பினுல் கூட அதுமுடியாதகாரியமே யாகும். ஏனென்ருல் ஜீவனுடைய ஞாபகமும் ஸ்வரூபமும் அற்பமானதே. இவைகளை ஈசுவரன் ஒருவனே அறியத்தகுந்தவன், ஜீவனல்ல.

வினு:—பூர்வஞ்ஞானமில்லாவிடில் ஜீவனுக்குத் தன்னை மேம்படுத்திக் கொள்ள முடியாது. ஏனெனில் நம்முடைய தப்பு காரியங்களுக்கு ஈசுவரன்

இன்னென்ன தண்டனைகளை யளித்தார் என்று அறிந்தாலொழிய பாபகாரியங்களிலிருந்து தப்பமுடியாது ?

விடை:—ஞானத்தை எவ்வளவு விதமாக நம்புகிறீர்கள்.

வினு:—பிரத்தியக்ஷம் முதலான பிரமாணங்களான எட்டுவிதங்கள்.

விடை:—பிறப்பு முதல் மரணம் வரையிலுள்ள பலவித அதிகாரம், பணம், வித்தை, புத்தி, ஏழ்மைத்தனம், புத்தியின்மை, மடமை முதலான சுகதுக்கங்களை உலகில் கண்டு முன்ஜென்மஞானத்தை ஏன் ஊகிக்கக்கூடாது. வைத்தியன் ஒருவனுக்கும் வேறே ஒருவனுக்கும் வியாதி காணுமேயானல் வைத்தியன் அதன் காரணங்களை அறிவான். சாதாரணமனிதனே வைத்தியப் பயிற்சியில்லாததினுல் அவைகளை யறியமாட்டான். ஆனுல் நோய்க்குக்காரணம் பத்தியப்பிழையான ஆகாரம் என்று சாதாரண மனிதன் கூறுகிறுன். அம்மாதிரியே பூமியிலிருக்கும்படியானவியக்கத்தகுந்த சுகதுக்கங்களைக் கண்டு பூர்வஜன்மத்தை நீங்கள் ஏன் ஊகிக்கக்கூடாது. பூர்வஜன்மத்தை நீங்கள் நம்பாதுபோனுல் பரமேச்வரன் பட்சபாத முள்ளவராகிறுர். பாபமன்னியில் தரித்திரம் முதலான துக்கங்களையும் பூர்வஜன்மபுண்ணியமன்னியில் பணம் செல்வாக்கு புத்தி முதலானவைகளையும் ஏன் அளிக்கவேண்டும். முன் ஜன்ம பாபபுண்ணியங்களுக்கேற்றவாறு சுகதுக்கங்களை அளிப்பதினுல் பரமேசுவரன் நியாயவாளுயும் சரியானவனுயுமாகிறுர்.

வினு:—ஒரே ஜன்மம் இருப்பதினுலேயே பரமேசுவரன் நியாயமுள்ளவனுகின்றுன். எனெனில் எல்லாம் வல்ல அரசன் செய்வதெல்லாம் நியாயமே? பாருங்கள்! தோட்டக்காரன் இஷ்டப்பிரகாரம் தன்தோட்டத்தில் சின்னமரம் பெரியமரம் ஆகியவைகளைப் பயிர்செய்து சிலவைகளைக்களைந்து மற்றுஞ் சிலவற்றை வெட்டுகிறுன். வேறுசிலதை வளர்த்து மற்றவைகளைக் காப்பாற்றுகிறுன். தன் சொந்தவஸ்துவில் ஒருவன் தன்னிஷ்டப் பிரகாரம்செய்துகொள்ளக்கூடும். அவருக்கு மேல் நியாயஞ் சொல்லுகிறவன் எவனுங்கிடையாது. அவரைத்தண்டிக்கிறவரும்யாருமில்லை. ஈசுவரன்யாருக்கும் பயப்படவும் வேண்டியதில்லை.

விடை:—பரமாத்மா எப்பொழுதும் நியாயத்தையேகோரி அதையே செய்கிறுர். அநியாயத்தை ஒரு பொழுதும் செய்கிறதில்லை. ஆகையினுலேயே அவர் பூஜிக்கத்தகுந்தவர். தலைவர் நியாயவிரோதமாய் நடந்தால் அவர் ஈசுவரனுகமாட்டார். தோட்டக்காரன் யோசனையன்னியில் வழியிலாவது அல்லது வேறு யிடங்களிலாவது செடிகளை வைத்து, வெட்டவேண்டாததை வெட்டி வேண்டியதை விருத்திசெய்யாமல் வேண்டாததை விருத்தி செய்வானயோனுல் தூஷிக்கத்தகுந்தவனுகிறுன். இம்மாதிரி காரணமன்னியில் காரியங்களைச்செய்தால் பரமேசுவரன் தூஷணைக்குள்ளாகிறுர். நியாயத்துடன் கூடின காரியங்களைச் செய்வதே பரமேசுவரனுக்கு முக்கியம், ஏனெனில் அவர் இயற்கையாகவே பரிசுத்தமானவர். காரியத்தைச் செய்கிறவர். பைத்தியக்காரனைப்போல் காரியஞ்செய்வாரேயானுல் பூமியிலுள்ள நல்லநியா

யாதிபதியைவிட குறைந்து மதிக்கப்படாதவனாகிறான். கெட்டகாரியஞ் செய்தவனுக்குத் தண்டனையை யளித்து யோக்கியதையற்றவனுக்கு நல்லதைச்செய்கிறவன் இவ்வுலகில் நிந்தனைக்காளாகி மரியாதை இழக்கவில்லையா? அநியாயம் ஒன்றும் செய்யாததினாலேயே அவர் யாருக்கும் பயப்படுகிறதில்லை.

வினா:—முதலிலிருந்தே எவ்வளவு கொடுக்க எண்ணினாரோ அவ்வளவை பரமாத்மா அளித்து எவ்வளவு காரியஞ்செய்யவேண்டுமோ அவ்வளவைச் செய்கிறார்.

விடை:—அவருடைய நோக்கங்களெல்லாம் ஜீவனுடைய கர்மாநுசாரப் பிரகாரம் இருக்கின்றன. அதுவேறு விதமாயிருந்தால் அவர் தப்பு செய்கிறவனாயும் அநியாய வாதியாயுமாகிறார்.

வினா:—சிறியது. பெரியது. ஒரே விதமான இரண்டு சுகதுக்கங்களுக்காளாகின்றன. பெரியோர்களுக்குப் பெரும் விசாரமும் சிறியோர்களுக்குக் கொஞ்சகவலையுமேயாம். ஒரு சாவகாரிக்கு நியாயஸ்தலத்தில் ஒரு லக்ஷம் ரூபாயிற்குக் கேஸ் இருப்பதாக எடுத்துக்கொள்ளுவோம். அவன் வீட்டிலிருந்து வெயிற்காலத்தில் பல்லக்கிலுட்கார்ந்து கச்சேரிக்குப் போகின்றான். கடைத்தெருவின் வழியாய் போகும் பொழுது பார்த்து ஞானமற்ற ஜனங்கள் சொல்லுவார்கள் "புண்ய பாப பலனைப் பாருங்கள். ஒருவன் ஆனந்தமாய் பல்லக்கில் உட்கார்ந்துகொண்டிருக்கிறான். மற்றவர்களோ காலுக்குச்செருப்பும் வெப்பபத்தைத் தடுக்கத்தலைக்குக் குடையும் இல்லாமல் வெய்யிலில் பாதையில் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்" ஆனால் புத்திமான்கள் சச்சேரி சமீபிக்கவே சாவகாரிக்குச் சோகமும் சந்தேகமும் அதிகரித்து தூக்குகிறவர்களுக்கு ஆனந்தம் அதிகரிக்கும் என்பதை அதில் அறிவார்கள். கச்சேரியை அடைந்தவுடன் எஜமானன் இங்குமங்கும் போக யோசனை செய்து வக்கீலிடம் செல்லுவதும் சிரஸ்ததாரைக்கண்டு தன் கக்ஷி ஜயிக்குமா, ஜயிக்காதா என்பதுமாகக்கேட்டு மனக்கவலையிலிருக்கிறார். பல்லக்கைத் தூக்கிவந்தவர்களோ சுருட்டுபிடித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் சல்லாபித்துக்கொண்டும் பிரசன்னமடைந்து ஆனந்தத்தில் தூங்குகிறார்கள். கேஸ் ஜயித்தால் கொஞ்சம் சந்தோஷத்தை அடைகிறார். ஜயிக்காவிடில் எஜமானனவர் துக்கக்கடலில் முழுகுகின்றார். பல்லக்குத் தூக்குகிறவர்களோ இருந்தவண்ணமே இருக்கிறார்கள். இதேமாதிரி இன்னுமொன்று எடுத்துக்கொள்ளுவோம். மிருதுவாயும் அழகாயும் உள்ள படுக்கையில் படுத்துக்கொண்டும் அரசனுக்குச் சீக்கிரம் தூக்கம் பிடிக்கிறதில்லை, ஆனால் கற்களிலேயும் மண்களிலேயும கடினமான தரைகளிலேயும் படுத்துக்கொள்ளும் வேலையாட்களுக்கு உடனே தூக்கம் வந்துவிடுகிறது. எங்கும் இவ்விதமே என்று தெரிந்துக்கொள்ளுங்கள்.

விடை:—இது அஞ்ஞானிகளினுடைய வாதமாகும். பல்லக்குத்தூக்குகிறவனைச் சாவகாரியாகவும் சாவகாரியைப் பல்லக்குத்தூக்கியாகவும் திரும்பச் சொன்னால் சாவகாரியால் தூக்குகிறவனாக முடியாது. அதற்குச் சம்மதமும் படான். தூக்குகிறவனே சாவகாரி ஆவான். இஷ்டமும் படுவான். சுகதுக்கங்

கள் சரியாயிருக்குமேயானால் தன் ஸ்திதியை விட்டு நல்லதிற்கும் கெடுதலுக்கும் இருவரும் மாற்றிக்கொள்ளவிரும்பமாட்டார்கள். வித்வான், புண்ணியாத்மா, சீமான், அரசன் இவர்களினுடைய ராணியின் கர்ப்பத்தில் ஒரு ஜீவன் கூடுகிறது. மற்றொன்றோ சாதாரணமான பில் அறுக்கிறவனுடைய மனைவி கர்ப்பத்தில் கூடுகின்றது. கர்ப்பத்திலிருந்தே ஒன்றுக்குச் சுகமும் மற்றொன்றுக்குத் துக்கமும் உண்டாகின்றன. ஒன்றுக்குப் பிறப்பின்பொழுது வாசனையுடன் கலந்த நல்ல ஜலத்தில் ஸ்நானம் செய்வித்து தொப்பூழ் நாடிகளை யுக்தியுடன் அறுக்கப்படுகின்றன. அதற்குத்தாகமுண்டாகும் பொழுதெல்லாம் கற்கண்டுகளுடன் கலந்தபால் வேண்டிய வரையில் அளிக்கப்படுகின்றன. அதைச் சந்தோஷமாய் வைத்துக்கொள்ள தாதி, சவாரிசெய்ய வண்டி, நல்ல இடங்களுக்கு அழைத்துச்செல்ல வேலைக்காரன், முதலானவர்கள் அமைக்கப்படுகிறார்கள். அதுவும் ஆனந்தத்துடனிருக்கிறது. மற்றொன்றோ காட்டில் பிறக்கிறது. அதற்குக் குளிக்கத்தண்ணீருங் கிடையாது. பால் வேண்டும் என்று கேழ்க்கும்பொழுது அதற்குப் பதிலாகத் தாடையில் அடிக்கப்பட்டு அழுகிறது. இம்மாதிரி உபத்திரவங்களை யடைகிறது. ஏனென்று வினவுவோருங் கிடையாது. இம்மாதிரி ஜீவன்களினுடைய புண்ணிய பாபங்களன்னியில் சுகதுக்கங்களைக் கொடுப்பதினால் பரமேசுவரன் மேல் குற்றம் ஏற்படும். (2) கர்மங்களொன்றுஞ் செய்யாமல் சுகதுக்கங்கள் விளையுமேயானால் நரகம், சுவர்க்கம், இவைகள் வேண்டியதே இல்லை. இச்சமயத்தில் கர்மங்களன்னியில் பரமேசுவரன் சுகதுக்கங்களை யளிக்கின்றபடியினால் இறந்த பிறகும் அவரிஷ்டப்பிரகாரமே வேண்டியவர்களைச் சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் அனுப்பிவிக்கலாம். சகல ஜீவன்களும் அதர்மத்துடன் கூடினவார்களாய் தர்மத்தை ஏன் செய்வார்கள். ஏனெனில் தர்மத்தினுடைய பலன் கிடைப்பது சந்தேகமாய்விடும். அது பரமேச்வரனுடைய வசத்திலிருக்கிறது. அவருடைய இஷ்டப்பிரகாரம் செய்வார். பாபகர்மங்களினுடைய பயமன்னியில் உலகில் பாபிகளுடைய விருத்தியும் தர்மஞ்செய்கிறவர்களுடைய குறைவும் ஏற்பட்டுவிடும். ஆகையினால் முன்ஜன்ம புண்ணிய பாபப் பிரகாரம் இஜ்ஜன்மத்திலும் இஜ்ஜன்மம் முன் ஜன்மம் இவைகளின் பிரகாரம் வரும் ஜன்மத்திலும் அனுபவிக்கிறான்.

வினா :—மானிட சரீரத்திலும் விலங்குகளினுடைய சரீரத்திலுமுள்ள ஜீவன்கள் ஒரே இனத்தைச் சேர்ந்ததா அல்லது வெவ்வேறானதா ?

விடை: —ஜீவன் ஒன்றுதான். ஆனால் பாப புண்ணியங்களினுடைய சேர்க்கையினால் கெடுதலாயும் நல்லதாயுமாகின்றன.

வினா :—மானிட ஜீவன் விலங்குகளிலும் விலங்குகளினுடைய ஜீவன் மானிடசரீரத்திலும் ஸ்திரீகளுடையது புருஷர்களுடையதிலும் புருஷனுடையது ஸ்த்ரீகளிடத்திலும் போய் வருகிறதுண்டா?

விடை :—உண்டு. போய் வந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் பாபம் அதிகரித்தால் புண்ணியம் குறையும். அப்பொழுது மானிட ஜீவன் விலங்கு

முதலான குறைவான சரீரத்தையும் தர்மம் அதிகரித்து அதர்மம் குறையும் பொழுது தேவ அதாவது வித்வான்களுடைய சரீரத்தையும் அடைகின்றன. புண்ணியம் பாபம் இரண்டும் சரியாகுங்கால் சாதாரண மனிதப் பிறப்பு கிடைக்கின்றன. இதிலேயும் பாபம் புண்ணியம் சிரேஷ்டமானது, சரியானது, குறைவானது என்பது போலவே மனிதன் முதலானவர்களும் மூன்று விதமான சரீரசாமக்கிரியைகளுள்ளவர்களாகிறார்கள். அதிகபாபத்தினுடைய பலனாக விலங்குகளினுடைய சரீரத்தலனுபவிக்கிறது. மறுபடியும் பாபம் புண்ணியம் சரியாக விருப்பதினாலே மனித சரீரத்தில் வந்து புண்ணியத்தினுடைய பலத்தை யனுபவித்துவிட்டு பிறகு நடுத்தன்மையான மனித சரீரத்தில் வருகிறது. சரீரத்தை விட்டு வெளியே செல்வதற்கு மிருத்யு வென்றும் சரீரத்துடன் கூட சேருவதற்கு ஜன்மமென்றும் பெயர். சரீரத்தை விட்டு *எமாலயம் அதாவது ஆகாசத்திலுள்ள வாயுவில் வசிக்கின்றது. "யமேன வாயுனா" என்று வேதங்கள் கூறுகின்றது போல வாயுவிற்கு எமன் என்ற பெயருண்டு. கருடபுராணத்திலுள்ள எமன் அல்ல.

பிறகு பரமேச்வரன் அச்சீவனுடைய பாபபுண்ணியப் பிரகாரம் பிறப்பை யளிக்கிறார். அது வாயு, அன்னம், ஜலம், அல்லது சரீரத்துவாரம் வழியாய் ஈச்வரனுடைய பிரேரணையினால் செல்லுகின்றது. சென்று கிரமமாய் வீரியத்துடன் கலந்து கர்ப்பத்தில் சரீரத்தை எடுத்து வெளியில் வருகிறது. ஸ்திரீ சரீரத்தையடைய தகுதியானால் அப்பொழுது ஸ்திரீயாகவும் புருஷசரீரத்தையடையத் தகுதியானால் புருஷசரீரத்தையும் அடைகின்றன. கர்ப்பசமயத்தில் ஸ்திரீ புருஷர்களினுடைய சரீர சம்பந்தகாலத்தில் ரஜவீரியம் சரியாயிருந்தால் பேடியாகப்பிறக்கிறது. இம்மாதிரி பலவாறாக ஜனன மரணத்தை ஜீவன் அடைகிறது. உத்தம கர்மோபாசனையின் ஞான மன்னியில் முக்தியை அடைகிறதில்லை. ஏனெனில் உத்தம கர்மங்களைச் செய்வதினால் மனிதர்களுக்கும் உத்தம ஜன்மம் கிடைக்கிறது. மகாகல்ப பரியந்தம் ஜனன மரண துக்கமன்னியில் ஆனந்தத்திலிருக்கிறது.

வினா:—முக்தி ஒரே பிறப்பிலுண்டாகின்றதா அல்லது அநேக ஜன்மங்களிலா?

விடை:—அநேக ஜன்மங்களில். ஏனெனில்

भिद्यन्ते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे पराऽवरे ॥ முண்டகோ. 2. 8.

இச்சீவனின் மனதினுடைய அவித்தை குன்றி அஞ்ஞானம் அறுபட்டு போகும் பொழுது சகல சந்தேகங்களும் மறைகின்றன. கர்மங்களும் நாசமடைகின்றன. அப்பொழுது ஆத்மாவின் உள்ளேயும் வெளியுலேயும் பரமாத்மா பரவுகிறார். அதிலேயே ஜீவன் வசிக்கின்றது.

வினா:—முக்தியில் பரமேச்வரனுடன் ஜீவன் கலக்குகின்றதா அல்லது வேறாகவே யிருக்கின்றதா?

* இதைக்குறித்து பதினொன்றாவது அத்தியாயத்தில் விளக்கிக் கூறுவோம்.

விடை :—தனியாகவே இருக்கின்றது. ஏனெனில் கலந்து ஒன்று சேர்ந்தால் முக்தியின் சுகத்தை யார் அனுபவிப்பார்கள்? முக்திக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் பிரயோசன மற்றதாய் விடும், அது முக்தியாகாது. ஜீவனுடைய பிரளயமேயாகும். பரமேச்வரனுடைய ஆக்ஞையைக் காப்பாற்றி உத்தம கர்மம், சற்சங்கம், யோகாப்பியாசம் முதலான முன் சொன்ன வழிகளைக் கைக்கொள்ளும் பொழுதே முக்தியை அடைகிறது.

सत्यं ज्ञानमनन्तं ब्रह्म यो वेद निहितं गुहायां परमे व्योमन् ।
सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चितेति॥ தைத்ரே. ஆனந்த.

ஜீவாத்மா தன்னுடை புத்தி ஆத்மா இவைகளிலிருக்கும் சத்தியம், ஞானம், அனந்தஸ்வரூபம் இவைகளுடன் கூடின பரமாத்மாவை அறிகிறபொழுதே வியாபக ரூபமான பிரம்மத்தில் நின்று அந்த "விபஸ்சித்" அனந்த வித்தையுடன்கூடின பிரம்மாவுடன் சகலகாரியங்களையும் அடைகிறான். இதையே முக்தி என்கிறார்கள்

வினா:—ஆத்மாவிற்கு உலகானந்தத்தை அனுபவிக்க எங்ஙனம் தேகம் தேவையோ அங்ஙனமே முக்தி இன்பத்தை நுகர தேகத்தின் துணை வேண்டுமல்லவா?

விடை:—இதற்குச் சமாதானம் முன்னரே கூறியுள்ளோம். என்றாலும் மீண்டும் சந்தேக நிவர்த்தி செய்வோம். உலக இன்பத்தை ஆத்மா தேகமூலம் நுகருகிறது உண்மையே. முக்தி யின்பத்தை ஆத்மா கடவுளின் மூலம் நுகருகிறது. ஜீவன் முக்தி பெற்ற ஆத்மா எங்கும் பரவியிருக்கும் பரமாத்மாவுடன் அலைகிறது. எனவே முக்தி பெற்ற ஆத்மா இயற்கையின் தர்மத்தில் அதாவது கடவுளின் தர்மத்தில் கலந்து எங்கும் இறைவனைக் காண்கிறது. தோற்றத்திலுள்ள உலகத்தையும், தோற்றத்தை விட்டு மறைந்த உலகத்தையும், முக்தி வயப்பட்ட பிற ஆத்மாக்களையும் சுருங்கச் சொல்லின் சிருஷ்டியின் தத்துவத்தையும் கண்டு களிப்பை எய்துகிறது. இதுதான் சுவர்க்கநிலை. உலகத்தில் உழன்று வாழ்க்கையின் இன்பதுன்பங்களை நுகர்வதே நரகம். சுவர்க்கம் என்பதின் பொருள் ஆனந்தமென்பதே. ஒருவன் உலக வாழ்க்கையினின்று மீளாது, கடவுளது தர்மத்தைப் பெறாது, சுகத்துக்கம் என்கிற பாப நிலையினின்று விலக முடியாது. பாபத்தைக் கடந்தோனே இன்பநிலை பெறுகிறான். அதாவது முக்தி பெறுகிறான்.

छिन्ने मूले वृक्षो नश्यति तथा पापे क्षीणे दुःखं नश्यति ॥

வேரை வெட்டுவதினால் மரம் நாசமடைவதுபோல் பாபங்களை விடுவதினால் துக்கங்கள் நாசமடைகின்றன. மனுஸ்மிருதியில் பாபபுண்ணியத்தின் பலனைப்பலவாறாக சொல்லப்பட்டிருக்கின்றன.

मानसं मनसैवायमुपभुङ्क्ते शुभाऽशुभम् ।
वाचा वाचा कृतं कर्म कायेनैव च कायिकम् ॥ மனு. 12. 8

உத்தமம், மத்திமம், அதமம் இச்சுபாவங்களை மனிதன் அறிந்து கொண்டு உத்தம சுபாவத்தைக் கைப்பற்றி மத்திமமானதையும் அதமமானது, அதாவது தள்ளப்பட்டதையும் விடட்டும். ஜீவன் மனது, வாக்கு, சரீரம் இவைகளினால் செய்யப்பட்ட சுகதுக்கங்களின் பலனை முறையே இவைகள் அனுபவிக்கிறதென்று அறியட்டும்.

शरीरजैः कर्मदोषैर्याति स्थावरतां नरः ।
वाचिकैः पक्षिमृगतां मानसैरन्त्यजातिताम् ॥ மனு. 12. 9.

மனிதசரீரத்தினால் செய்யப்படும் திருடுதல் பரஸ்திரீயை அடைதல் சிரேஷ்டமானவர்களைக் கொல்லுதல், முதலான துஷ்டகர்மங்களினால் மரம் செடி முதலான ஸ்தாவரவர்க்கங்களின் பிறப்பையும், வாக்கினால் செய்யப்படும் பாபகர்மங்களினால் பக்ஷிகள் விலங்குகள் முதலானவைகளின் பிறப்பையும், மனதினால் செய்யப்படும், துஷ்டகர்மங்களினால் சண்டாளன் முதலியவர்களுடைய சரீரத்தையுமடைகிறான்.

यो यदेषां गुणो देहे साकल्येनातिरिच्यते ।
स तदा तद्गुणप्रायं तं करोति शरीरिणम् ॥ மனு. 12. 25.

எக்குணங்கள் இச்ஜீவன்களுடைய சரீரத்தில் அதிகமாகக்காணப்படுகிறதோ அக்குணங்கள் ஜீவனிலேயும் சரியாய் காணப்படுகின்றன.

सत्त्वं ज्ञानं तमोऽज्ञानं रागद्वेषौ रजः स्मृतम् ।
एतद् व्याप्तिमदेतेषां सर्वभूताश्रितं वपुः ॥ மனு. 12. 26.

ஆத்மாவில் ஞானமிருக்கும்பொழுது சத்வகுணம், அஞ்ஞானம் இருக்கும் பொழுது தமோகுணம் ராகதுவேஷங்களிருக்கும் பொழுது ரஜோ குணம் ஆகியமூன்று குணங்களையும் அறிய வேண்டியது. இம்மூன்று பிரகிருதி குணங்களும் உலகிலிருக்கிற சகல பொருள்களிலும் பரவியிருக்கின்றன.

तत्र यत्प्रीतिसंयुक्तं किञ्चिदात्मनि लक्षयेत् ।
प्रशान्तमिव शुद्धाभं सत्त्वं तदुपधारयेत् ॥ மனு. 12. 27.

• ஆத்மா மகிழ்ச்சியுள்ளதாயும் மனது நிலையுள்ளதாயும் சந்துஷ்டியாயும் சுத்தமாயுமிருக்கும் பொழுது சத்வகுணம் மேலிட்டும் ரஜோகுணம் தமோ குணம் கீழ்ப்படிந்தும் இருக்கிறதென்று அறியவேண்டியது.

यत्तु दुःखसमायुक्तमप्रीतिकरमात्मनः ।
तद्राजोऽप्रतिपं विद्यात्सततं हारि देहिनाम् ॥ மனு. 12. 28.

ஆத்மாவும் மனதும் துக்கத்துடன் சந்தோஷமற்று விஷயசுகங்களில் ஈடுபட்டு இங்குமங்கும் அலைந்து கொண்டிருக்கும்பொழுது ரஜோகுணம் மேலிட்டு தமோகுணம் சத்வகுணம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதாக் அறியவும்

यत्तु स्यान्मोहसंयुक्तमव्यक्तं विषयात्मकम् ।
अप्रतर्क्यमविज्ञेयं तमस्तदुपधारयेत् ॥ மனு. 12. 29

மோகம் அதாவது உலகப்பொருள்களில் ஆத்மாவும் மனதும் ஈடுபட்டு விவேகமன்னியில் விஷயசுகங்களில் அமிழ்ந்தும், தர்க்கம் குதர்க்கம் இவைகளை அறியவும் முடியாமலிருக்கும்பொழுது தமோகுணம் பிரதானமாயும் சத்வகுணம் ரஜோகுணம் பின்னலேயுமிருக்கிறது.

त्रयाणामपि चैतेषां गुणानां यः फलोदयः ।
अग्र्यो मध्यो जघन्यश्च तं प्रवक्ष्याम्यशेषतः ॥ மனு. 12. 30.

இப்பொழுது இம்மூன்றுகுணங்களின் உத்தம, மத்திம, அதம பலனை விவரமாகச் சொல்வோம்.

वेदाभ्यासस्तपो ज्ञानं शौचमिन्द्रियनिग्रहः ।
धर्मक्रियात्मचिन्ता च सात्त्विकं गुणलक्षणम् ॥ மனு. 12. 31.

வேதாப்பியாசம், தர்மானுஷ்டானம், ஞானவிருத்தி, பரிசுத்தத்தில் ஆசை, இந்திரியங்களின் அடக்கம், தர்மக்கிரியை, ஆத்மசிந்தனை ஆகியவைகளெல்லாம் சத்வகுணத்தினுடைய இலக்ஷணங்களாகும்.

आरम्भरुचिताऽधैर्यमसत्कार्यपरिग्रहः ।
विषयोपसेवा चाजस्रं राजसं गुणलक्षणम् ॥ மனு. 12. 32.

ரஜோகுணம் தோன்றி சத்வத மோகுணங்கள் மறைந்திருக்கும் பொழுது ஆரம்பத்தில் ஆசை தைரியத்தைக் கைவிடுதல் தப்புகாரியங்களை ஒத்துக்கொள்ளுதல் எப்பொழுதும் விஷயசுகங்களை அநுபவிப்பதில் ஆசை, இவைகளெல்லாம் மனிதனிடத்தில் வெளியாகின்றன.

लोभः स्वप्नो धृतिः क्रौर्यं नास्तिक्यं भिन्नवृत्तिता ।
याचिष्णुता प्रमादश्च तामसं गुणलक्षणम् ॥ மனு. 12. 33.

यत्कर्म कृत्वा कुर्वंश्च करिष्यंश्चैव लज्जति ।
तज्ज्ञेयं विदुषा सर्वं तामसं गुणलक्षणम् ॥ மனு. 12. 35.

தமோகுணம் தோன்றி இதர இரண்டுகுணங்களும் மறைந்திருக்கும் பொழுது அதிகப்பேராசை அதாவது சகலபாபத்தின் மூலகாரணம், அதிகச் சோம்பு, துக்கம், தைரியநாசம், குரூரத்தன்மை, நாஸ்திகவாதம், அதாவது வேதங்களிலும் ஈசுவரனிடத்திலும் நம்பிக்கையற்றிருத்தல், பிளவுப்பட்ட அந்தக்கரணங்களில் ஈடுபடுதல், கவனக்குறைவு உணர்ச்சியினால் ஏற்படும் விஷயசுகங்களுக்கு இடங்கொடுத்தல், இவைகளெல்லாம் காணப்படுகின்றன. இன்னும் தன்னுடைய ஆத்மா செய்துகொண்டிருந்தவும் செய்கிறதற்கும் இச்சையுள்ள காரியங்களில் வெட்கம் சந்தேகம் பயமடைதல் இதெல்லாம் தமோகுணத்தினுடைய இலக்ஷணங்களாகும்.

येनास्मिन्कर्मणा लोके ख्यातिमिच्छति पुष्कलाम् ।
न च शोचत्यसम्पत्तौ तद्विज्ञेयं तु राजसम् ॥ மனு. 12. 36.

எக்காரியங்களிலிருந்து இவ்வுலகில் ஜீவாத்மா கீர்த்தியைக் கோருகிறதோ ஏழ்மைத்தனத்தில் கூட வம்சாவளிக்காரன், புலவன், முதலானவர்களுக்குத்

தானங்கொடுப்பதை நிறுத்துகிறதில்லையோ, அப்பொழுது ரஜோகுணம் அதிகரித்து இருப்பதாக அறியவும்.

यत्सर्वेणेच्छति ज्ञातुं यन्न लज्जति चाचरन् ।
येन तुष्यति चात्मास्य तत्सत्त्वगुणलक्षणम् ॥ மனு. 12. 37.

மனிதனுடைய யாவற்றையும் அறிய இஷ்டப்படுகிறதோ, குணங்களைக் கைப்பற்றி நல்லகாரியங்களில் வெட்கமடைகிறதில்லையோ, ஏக்காரியங்களிலிருந்து ஆத்மா சந்தோஷத்தை யடையுமோ அதாவது தர்மத்தின் ஆசரணையிலேயே ஈடுபட்டு இருக்கிறதோ அப்பொழுது சத்வகுணம் முன்னிருப்பதாக அறியுங்கள்.

तमसो लक्षणं कामो रजसस्त्वर्थ उच्यते ।
सत्त्वस्य लक्षणं धर्मः श्रैष्ठ्यमेषां यथोत्तरम् ॥ மனு. 12. 38.

தமோகுணத்திற்குக் காமமும், ரஜோகுணத்திற்குப் பணஞ்சேர்க்க வாசையும், சத்வகுணத்திற்குத் தர்மசேவையுமே இலக்ஷணங்களாகும். தமோகுணத்தைவிட ரஜோகுணமும் ரஜோகுணத்தைவிட சத்வகுணமும் சிரேஷ்டமானது.

எக்குணங்களினால் எக்கதியை ஜீவன் அடைகிறதென்று மேலே சொல்லுவோம்.

देवत्वं सात्त्विका यान्ति मनुष्यत्वञ्च राजसाः ।
तिर्यक्त्वं तामसा नित्यमित्येषा त्रिविधा गतिः ॥ மனு. 12. 40.

சாத்வீகமனிதன் வித்வானாகவும். ரஜோகுணத்தை யுடையவன் சாமானிய மனிதனாகவும் தமோகுணத்தை யுடையவன் தாழ்ந்தவனாகவும் முறையே ஆகிறான்.

स्थावराः कृमिकीटाश्च मत्स्याः सर्पाश्च कच्छपाः ।
पशवश्च मृगाश्चैव जघन्या तामसी गतिः ॥ மனு. 12. 42.

அதிகமாகத் தமோகுணத்தை யுடையவர்கள் மரம், பூச்சி, புழு மீன், பாம்பு, ஆமை, ஆடுமாடுகள், மிருகம், முதலானவைகளினுடையகதியை அடைகிறார்கள்.

हस्तिनश्च तुरङ्गाश्च शूद्रा म्लेच्छाश्च गर्हिताः ।
सिंहा व्याघ्रा वराहाश्च मध्यमा तामसी गतिः ॥ மனு. 12. 43.

மத்தியம தமோகுணத்தை யுடையவர்கள் யானை, குதிரை, சூத்திரன் மிலேச்சன், நிந்தனைக்குட்பட்ட கர்மங்களைச் செய்கிறவன். சிங்கம், புலி, பன்றி முதலானவைகளாகப் பிறக்கிறார்கள்.

चारणाश्च सुपर्णाश्च पुरुषाश्चैव दाम्भिकाः ।
रक्षांसि च पिशाचाश्च तामसीषूत्तमा गतिः ॥ மனு. 12. 44

உத்தம தமோகுணத்தை யுடையவர்கள் கவிஞர், (ஸ்துதிக்காகப்பாக்கள் செய்கிறவர்கள்) அழகான பக்ஷி, தன்சுகத்தைநாடித் தன்னைத்தானே தூற்றிக் கொள்ளுகிறவன் பிசாசு "அநாசாரி" அதாவது மாமிசம் முதலான ஆகாரஞ் செய்கிறவர்களாயும் ஆகிறார்கள்.

झल्ला मल्ला नटाश्चैव पुरुषाः शस्त्रवृत्तयः ।

द्यूतपानप्रसक्ताश्च जघन्या राजसी गतिः ॥ மனு. 12. 45.

உத்தம ரஜோகுணம் உடையவர்கள் கத்தி வேலைக்காரன், மாலுமி, நடிகர், ஆயுதம்பூண்ட சேவகர் குடிகாரர்களாகவும் பிறக்கிறார்கள்.

राजानः क्षत्रियाश्चैव राज्ञां चैव पुरोहिताः ।

वादयुद्धप्रधानाश्च मध्यमा राजसी गतिः ॥ மனு. 12. 46.

மத்தியம ரஜோகுணத்தை யுடையவர்கள் அரசன், க்ஷத்திரிய குல அரசர்களின் புரோகிதன் வாதவிவாதஞ்செய்கிறவன், வக்கீல், நியாயவாதி, தூதன், சைனியாதிகாரிகளாக ஆகிறார்கள்.

गन्धर्वा गुह्यका यक्षा विबुधानुचराश्च ये ।

तथैवाप्सरसः सर्वा राजसीषूत्तमा गतिः ॥ மனு. 12. 47.

உத்தம ரஜோகுணத்தை யுடையவர்கள் கந்தர்வ (பாடகன்) குஹ்யக (சுரவாத்தியக்காரன்) யக்ஷ (பணமுள்ளவன்) வித்வான்களினுடைய சேவகன் அப்ஸரன் அதாவது உத்தமமான அழகையுடையவர்களாவும் ஆகிறார்கள்.

तापसा यतयो विप्रा ये च वैमानिका गणाः ।

नक्षत्राणि च दैत्याश्च प्रथमा सात्त्विकी गतिः ॥ மனு. 12. 48.

தபஸ்விகள், யதிகள், சந்நியாசிகள், வேதம் ஓதினவர்கள், விமானத்தை விடுவோர்கள், ஜோசியர்கள், தைத்யர்கள், அதாவது சரீரத்தை ப்போஷித்துக் கொள்ளுகிறவர்கள், இவைகளெல்லாம் சத்வகுணத்தினுடைய பலன் என்று அறியுங்கள்.

यज्वान ऋषयो देवा वेदा ज्योतींषि वत्सराः ।

पितरश्चैव साध्याश्च द्वितीया सात्त्विकी गतिः ॥ மனு. 12. 49.

மத்தியம சத்வகுணத்துடன் காரியத்தைச் செய்கிறவன் உயிர்யாகஞ் செய்கிறவன், வேதார்த்தத்தையறிந்தவன், வித்வான் வேதம் காந்தம் காலநிருபணம் இவைகளை யறிந்தவன், காப்பாற்றுகிறவன், ஞானி, பெரியகாரியங்களைச் செய்யவல்ல ஆசிரியன், ஆகியவர்களினுடைய பிறப்பை யடைகிறான்.

ब्रह्मा विश्वसृजो धर्मो महानव्यक्तमेव च ।

उत्तमां सात्त्विकीमेतां गतिमाहुर्मनीषिणः ॥ மனு. 12. 50.

உத்தம சத்வகுணத்துடன் காரியஞ்செய்கிறவர்கள் பிரம்மா, சகல வேதங்களை யறிகிறவர் சிருஷ்டியினுடை வழியை யறிந்து பல விமானம முதலான

இயந்திரங்களைச் செய்கிறவர், தார்மிகர், சர்வோத்தமமான புத்தியையுடைய வர் கட்டுக்காரர் முதலானவர்களாகப் பிறக்கிறார்கள்.

इन्द्रियाणां प्रसङ्गेन धर्मस्यासेवनेन च।
पापान्संयान्ति संसारानविद्वांसो नराधमाः ॥ மனு. 12. 52.

இந்திரியங்களின் வசமாய் விஷயசுகங்களிலிருந்து விட்டு அதர்மத்தைச் செய்கிறவர்கள் நீச ஜன்மத்தைவிடத்தாழ்ந்த துக்கரூபமான பிறப்பை யடைகிறார்கள். சத்வ ரஜ தமோகுணங்களை உடையமனிதர்கள் எம்மாதிரி கர்மங்களைச் செய்கிறார்களோ அதற்கேற்ற பலனை முறையே அடைகிறார்கள். முக்தியை யடைந்தவன் குணாதீதன் அதாவது சகல குணங்களினுடைய சுவபாவங்களிலிருந்தும் மீறினவன். ஏனெனில்

योगश्चित्तवृत्तिनिरोधः ॥
तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम् ॥ யோக 1. 3.

இது யோக சாஸ்திரபாதஞ்சலி சூத்திரத்திலிருக்கிறது.

ரஜ தமோ குணங்களிலிருந்து மனதைக்கட்டி சுத்தசத்வ கர்மங்களிலிருந்தும் கட்டி சுத்தசத்வகுணத்தை யுடையவனாய்ப் பிறகு அதிலிருந்து நிரோதஞ் செய்து அதாவது மீறி ஒரே பரமாத்மாவையும் தர்மத்துடன் கூடின கர்மத்தையும் தன்முன்னால் வைத்துக்கொண்டுமனதை எதிலும் செல்லாது கட்டுபடுத்தவேண்டும். எப்பொழுது அது ஒரு மனப்பட்டு ஈசனிடம் தன்னை இழந்திருக்கிறதோ அப்பொழுது ஈசனது சுயரூபத்துடன் ஜீவாத்மா கலக்கிறது.

अथ त्रिविधदुःखात्यन्तनिवृत्तिरत्यन्तपुरुषार्थः ॥ சாங்கிய 1. 1.

ஆத்யாத்மிகம் அதாவது சரீரத்தைச் சார்ந்த உபத்திரவங்கள் ஆதிபௌதிகம் பிறரால் ஏற்படும் உபத்திரவங்கள், ஆதிதைவிகம் அதிகமழை அதிக வெயில் அதிகக்குளிர் மனது இந்திரியங்களுடைய சஞ்சலம் இவைகளால் உண்டாகும் உபத்திரவங்கள் இம்மூன்று வகையான துக்கங்களிலிருந்தும் மீறி முக்தியையடைவது பெரும் புருஷார்த்த பிரயத்தனமாகும்.

அடுத்த அத்தியாயத்தில் ஆசாரம் விரும்பத்தகுந்தது தகாதது. ஆசாரம் வேண்டியது விலக்கப்படவேண்டியது இவைகளைப்பற்றி எழுதுவோம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

ஆசாரம்—விரும்பத்தகுந்தது—தகாதது.

ஆகாரம்—வேண்டியது—விலக்கப்பட வேண்டியது.

இவைகளைப்பற்றினது.

தர்மகாரியங்களைச்செய்தல், நன்னடத்தை வணக்கம் நல்லோர்களுடைய சேர்க்கை, நல்ல வித்தையை அறிவதிலாசை, இவைகளுக்கெல்லாம் ஆசாரமென்றும், இவைகளிலிருந்து மாறுபட்டவைகளுக்கு அநாசாரம் எனறும் பெயர்.

विद्वद्भिः सेवितः सद्भिर्नित्यमद्वेषरागिभिः ।
हृदयेनाभ्यनुज्ञातो यो धर्मस्तन्निबोधत ॥ மனு 2. 1.

ஆசை, விருப்பு, வெறுப்பு, இவைகளைக்கடந்த ஞானிகள் செய்யும் கர்மங்களும் உலகவாழ்க்கையில் நிகழும் கர்மங்களும், மனச்சாட்சி என்னும் தெய்விகக்கருவி உண்மை என்று காட்டும் கர்மங்களும் நற்கர்மங்களாகும். அக்கர்மங்களையே மனிதன் உண்மை என்று கொண்டு அவ்வழி நடக்க வேண்டும்.

कामात्मता न प्रशस्ता न चैवेहास्त्यकामता ।
काम्यो हि वेदाधिगमः कर्मयोगश्च वैदिकः ॥ மனு 2. 2.

மனிதவாழ்க்கையில் பேராசையுங்கூடாது. ஆசையற்று இருத்தலும் முறையல்ல. ஏனென்றால் பேராசையுள்ளவன் வேத வரம்புகடந்த துஷ்கர்மங்களைச்செய்யவேண்டியவனாவான். ஆசையற்றவன் வேதமார்க்கத்தையும், வேதவரம்பிற்கேற்பட்ட தர்மங்களையும் அறியமுடியாதவனாவான்.

सङ्कल्पमूलः कामो वै यज्ञाः सङ्कल्पसम्भवाः ।
व्रतानि यमधर्माश्च सर्वे सङ्कल्पजाः स्मृताः ॥ மனு 2. 3.

ஒருவன் ஆசையற்றவனாய் இருத்தல் முடியாதகாரியமாகும். பிறருக்குப் பணிசெய்தல், கொடுத்தல், யமம், நியமம் முதலிய நற்கர்மங்களைச் செய்வதற்கு ஆசையே தூண்டுகோல். ஆதலால் நியாயமானதும், தர்மவழி பிறழாததுமான ஆசை தேவையானதே.

अकामस्य क्रिया काचिद् दृश्यते नेह कर्हिचित् ।
यद्यद्धि कुरुते किञ्चित् तत्तत्कामस्य चेष्टितम् ॥ மனு 2. 4.

ஒருவன் நடப்பதும், பேசுவதும், பார்ப்பதும், நடக்கவேண்டும், பேசவேண்டும், பார்க்கவேண்டும் என்பதும் ஆசையினுலேதான். ஆசையற்றவிடத்தில் சொல் இல்லை.

वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम् ।
आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ॥ மனு 2. 6.

வேதாதி நூற்களைத்தழுவியும், மனுஸ்மிருதியில் கூறியுள்ள தர்மத்தையும் மகரிஷிகளால் செய்யப்பட்ட சத்திய நூல்களின் வழியும், பெரியோர்களால் கையாளப்பட்ட அறவழியை அனுசரித்தும், தனது உள்ளத்தில் நெறியற்ற தனத் தள்ளப்படும் கர்மங்களை விலக்கியும் ஒருவன்தனது வாழ்க்கை நடத்தல் வேண்டும். அச்சத்தையும் வெட்கத்தையும் தரும் காரியங்களை ஒருவன் எப்பொழுதும் செய்யலாகாது. களவாடல், பொய் மொழிதல், பிறரை வஞ்சித்தல் முதலியகர்மங்கள், அச்சத்தையும் அவமானத்தையும் தருகின்றன. அத்தகைய காரியங்களை ஒருவன் விலக்க வேண்டும். வேதாதி நூல்களும் இதைத்தான் கூறுகின்றன.

सर्वन्तु समवेक्ष्येदं निखिलं ज्ञानचक्षुषा ।
श्रुतिप्रामाण्यतो विद्वान् स्वधर्मे निविशेत वै ॥ மனு 2. 7.

வேதம் ஸ்மிருதி, சுருதி முதலிய நூல்களிலிருந்து ஒருவன் கொள்ள வேண்டிய தர்மங்களையும் தள்ளவேண்டிய துஷ்கிருத்தியங்களையும் அறிதல் வேண்டும்.

श्रुतिस्मृत्युदितं धर्ममनुतिष्ठन् हि मानवः ।
इह कीर्त्तिमवाप्नोति प्रेत्य चानुत्तम सुखम् ॥ மனு 2. 9.

வேதம், அவைகளுக்கு அனுகூலமான ஸ்மிருதி இவைகள் போதிக்கும் அறவழிபிரகாரம் நடப்போன் இம்மையில் அழியாக் கீர்த்தியைப்பெறுகிறான். மறுமையிலும் நித்திய இன்பத்தைப்பெறுகிறான். எனவே சத்திய வாழ்க்கையை நடத்த விரும்பும் ஒருவன், வேதாதி நூற்களாலும் மனுவந்தாதிகளாலும் ரிஷிகளாலும் ஞானிகளாலும் வகுக்கப்பட்ட நீதி நூற்களின் ஆணைக்கு அடங்கியும், தனது மனது வாக்கு காயம் இவைகளின் ஆதரிப்பைப்பெறும் காரியங்களைத் தழுவியும் வாழ்க்கையை நடத்தட்டும்.

योऽवमन्येत ते मूले हेतुशास्त्राश्रयाद् द्विजः ।
स साधुभिर्बहिष्कार्यो नास्तिको वेदनिन्दकः ॥ மனு 2. 11.

சுருதி, வேதம், ஸ்மிருதி, தர்ம சாஸ்திரங்களின் உதவி, ஆகியவைகளைக் கொண்டு செய்ய வேண்டியவைகளையும் வேண்டாதவைகளையும் நிர்ணயஞ் செய்துக்கொள்ளவேண்டும். வேதங்களையும் அதற்கு அநுகூலமான கிரந்தங்களையும் அவமதிக்கிறவனை ப்பெரியோர்கள் ஜாதிப்பிரஷ்டஞ்செய்தல் அவசியம். வேதங்களைத் தூஷிக்கிறவன் நாஸ்திகனாகிறான்.

वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥ மனு 2. 12.

ஆகையினால் வேதம் ஸ்மிருதி, சத்புருஷர்களை ஆசரியத்தில், ஆத்ம ஞான வளர்ச்சியால் நல்லது கெட்டது என்பதை அறிதல், இவையே தர்

யத்தை அறியும் வழிகள். மேற்கூறிய வழிகளின் மூலமே தர்மம் வெளியா கிறது.

अर्थकामेष्वसक्तानां धर्मज्ञानं विधीयते ।

धर्मं जिज्ञासमानानां प्रमाणं परमं श्रुतिः மனு 2. 13.

சுகங்களிலாசை இல்லாதவருக்கே, தர்மத்தின் ஞானமுண்டாகும். தர்மத்தினுடைய ஞானத்தை அடைய விரும்புகிறவர்களுக்கு வேதங்களே முக்கிய ப்பிரமாணங்கள்.

वैदिकैः कर्मभिः पुण्यैर्निषेकादिर्द्विजन्मनाम् ।

कार्य्यः शरीरसंस्कारः पावनः प्रेत्य चेह च ॥ மனு 2. 16.

வேதத்தில் கூறப்பட்ட புண்ணியபாபரூபமான கர்மங்களினாலே பிராம் மண க்ஷத்திரிய வைசியர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு இஜ்ஜன்மத்திலும் மறு ஜன்மத்திலும் சுகத்தையளிக்கிற நிஷேகம் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்ய வேண்டியது உசிதமானது.

केशान्तः षोडशे वर्षे ब्राह्मणस्य विधीयते ।

राजन्यबन्धोर्द्वाविंशे वैश्यस्य द्व्यधिके ततः ॥ மனு 2. 65.

பிராமணனுக்குப்பதினாறுவயதிலேயும், க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டு வயதிலேயும், வைசியனுக்கு இருபத்தினன்கிலேயும் கேசாந்த கலியாணம் அதா வது குடுமிவைக்கவேண்டும். இவைகளுக்குப்பிறகு கேவலம் தலையில் குடு மியைமாத்திரம் வைத்துக்கொண்டு தாடிமீசை தலையோடுஇவைகளைக்ஷவரம் செய்து கொள்ளவேண்டும். மறுபடியும் வைத்துக் கொள்ளவே கூடாது. குளிர்பிரதேசங்களில் உள்ளவர்கள் தங்கள் சௌகரியப்பிரகாரம் குடுமிவைத் துக்கொள்ளலாம். மிகவும் உஷ்ணப் பிரதேசங்களில் சிகையையுங்கூட வெட்டி விடுவதுநலம். ஏனென்றால் சிரசில் முடிவைத்துக் கொள்வதினால் சரீரவெப் பத்தை அதிகமாக்குகிறது. அதனால் புத்தியும் குறைகிறது. தாடிமீசை வைத்துக்கொள்வதினால் அன்னபானங்கள் சரியாக உட்செல்வதற்கில்லை, தள்ளுபடியானவைகளும் வெளியிலேயே தங்குகின்றன.

इन्द्रियाणां विचरतां विषयेष्वपहारिषु ।

संयमे यत्नमातिष्ठेद्विद्वान् यन्तेव वाजिनाम् । மனு 2. 88.

எவ்விந்திரியங்கள் புத்தியை மயக்கி விஷயசுகங்களில் பிரவேசிக்கச் செய்கின்றனவோ அவ்விந்திரியங்களை அடக்கவேண்டும். குதிரைசவாரிசெய் வோன் குதிரையை யடக்கிச் சரியான வழியில் செல்லச்செய்வதுபோல் மனி தன், அவைகளைத்தன் வசமாக்கிக்கொண்டு அதர்ம வழிகளில் செலுத்தாமல் தர்மவழிகளிலேயே எப்பொழுதும் போகச் செய்யவேண்டும். இதுவே மனித னுடைய முதல் தர்மமாகும்.

इन्द्रियाणां प्रसङ्गेन दोषमृच्छत्यसंशयम् ।

सन्नियम्य तु तान्येव ततः सिद्धिं नियच्छति ॥ மனு 2. 93

ஏனெனில் விஷயசுகங்களிலும் அதர்மங்களிலும் செல்வதினால் மனிதன் குற்றங்களுக்கு ஆளாகிறான். இவைகளை ஜயித்து தர்மத்தில் திருப்புவதினால் அபீஷ்டசித்தியைப் பெறுகிறான்.

न जातु कामः कामानामुपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्द्धते ॥ மனு 2. 94.

கட்டையும் நெருப்பும் சேருவதினால் அக்கினிஜ்வாலை அதிகரிப்பது போலவே, அனுபவிப்பதினால் சிற்றின்ப போகங்கள் குறைவடைகிறதில்லை. விருத்தியேயாகின்றன. ஆகவே சிற்றின்ப சுகங்களுக்கு மனிதன் ஆளாகக் கூடாது.

वेदास्त्यागश्च यज्ञाश्च नियमाश्च तपांसि च ।
न विप्रदुष्टभावस्य सिद्धिं गच्छन्ति कर्हिचित् ॥ மனு 2. 97.

அடக்கப்படாத ஐம்புலன்களை உடையவனுக்கு வேத ஞானம் தியாகம், யாகம், நியமம், தர்மாசரணை இவைளுடைய சித்தி உண்டாகிறதில்லை. இவைகளெல்லாம் அடக்கப்பட்ட ஐம்புலன்களை உடையவர்களுக்குப்பலனைத் தருகின்றன.

वशे कृत्वेन्द्रियग्रामं संयम्य च मनस्तथा ।
सर्वान् संसाधयेदर्थानाक्षिण्वन् योगतस्तनुम् ॥ மனு 2. 100.

ஆகையினால் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து ஞானேந்திரியங்கள், பதினொன்றாவதாகிய மனம் இவைகளைத் தன்வசமாக்கிக்கொண்டு சரியான ஆகாரம் தூக்கம் யோகம் இவைகளினால் சரீரத்தைக்காப்பாற்றிக் கொண்டு இருக்கிறவர்கள் காரியசித்தியை அடைகிறார்கள்.

श्रुत्वा स्पृष्ट्वा च दृष्ट्वा च भुक्त्वा घ्रात्वा च यो नरः ।
न हृष्यति ग्लायति वा स विज्ञेयो जितेन्द्रियः ॥ மனு 2. 98.

தன்னுடைய ஸ்துதியில் சந்தோஷம், நிந்தனையில் துக்கம், நல்லதிசையில் ஆனந்தம், துர் திசையில் சோகம், சுத்தமானவைகளைக் காணுங்கால் மனக்களிப்பு, கெட்டரூபத்தைக்காணுங்கால்அருவருப்பு இவைகளன்னியிலும் நல்ல சாப்பாட்டில் ஆனந்தம் கெட்ட ஆகாரத்தில் துக்கம், சுகந்தத்தில் ஆசை துர்க்கந்தத்தில் வெறுப்பு இவைகளும் அன்னியிலிருப்பவருக்கே அடக்கப்பட்ட இந்திரியத்தையுடையவர் என்று பெயர்.

नापृष्टः कस्यचिद् ब्रूयान्न चान्यायेन पृच्छतः ।
जानन्नपि हि मेधावी जडवल्लोक आचरेत् ॥ மனு 2. 110.

கேழ்க்காமலும், கபடமாய் கேட்டாலும் பதிலளிக்கிறதில்லை என்றும் புத்திமான்கள் நிச்சயஞ்செய்துகொண்டு சட்டத்திற்குச் சமானமாயிருக்க வேண்டும். வஞ்சனையன்னியில் ஆசையுடன் கேழ்க்கிறவர்களுக்கு க்கோராமலே உபதேசஞ் செய்யவேண்டும்.

वित्तं बन्धुर्वयः कर्म विद्या भवति पञ्चमी ।
एतानि मान्यस्थानानि गरीयो यद्यदुत्तरम् ॥ மனு 2. 136.

ஐசுவரியம், சுற்றத்தார்கள், குடும்பம் குலம், காலம் சிறந்த செய்கை சிறந்தகல்வி, இவ்வைந்தும் மரியாதைக்குக்காரணமாகின்றன. ஐசுவரியத்தை விட உறவினர்களும் உறவினர்களைவிட க்காலமும், காலத்தை விடச்செய்கையும் சிறந்தவைகள். கர்மத்தைவிட பரிசுத்த வித்தையையுடையவர்கள் சாலச்சிறந்தவர்கள்.

अज्ञो भवति वै बालः पिता भवति मन्त्रदः ।
अज्ञं हि बालमित्याहुः पितेत्येव तु मन्त्रदम् ॥ மனு 2. 153.

நூறுவருடம் ஆனபோதிலும் வித்தையும் விஞ்ஞானமும் இல்லாதவர்கள் குழந்தையே. வித்தையும் விஞ்ஞானத்தையும் அளிக்கிறவனைக் குழந்தை யாயிருந்தபோதிலும் பெரியவனாகவே எண்ணவேண்டியது. ஏனென்றால் சகலசாஸ்திரங்களினுடைய ஞானம் இல்லாதவனைக் குழந்தையென்றும் ஞானமுள்ளவனைத் (பிதா) தகப்பனென்றும் சொல்லுகின்றது.

न हायनैर्न पलितैर्न वित्तेन न बन्धुभिः ।
ऋषयश्चक्रिरे धर्मं योऽनूचानः स नो महान् ॥ மனு 2. 154.

மிகவயதாகியும் தலை நரைத்தும் அதிகப் பொருளிருந்தும் பெரியகுடும்பத்காரனாயிருந்தும் ஒரு மனிதன் விருத்தனாகிறதில்லை. நம்முடையகலை வித்தைகளிலும் விஞ்ஞானத்திலும் எவன் பெரியவனோ அவனையே பெரியவிருத்த புருஷனென்று ரிஷிகளும் மகாத்மாக்களும் சொல்லுகிறார்கள்.

विप्राणां ज्ञानतो ज्येष्ठ्यं क्षत्रियाणान्तु वीर्यतः ।
वैश्यानां धान्यधनतः शूद्राणामेव जन्मतः ॥ மனு 2. 155

பிராமணன் ஞானத்தினாலும் க்ஷத்திரியன் பலத்தினாலும் வைசியன் தனதான்னியத்தினாலும் சூத்திரன் ஜன்மம் அதாவது வயதினாலும் முறையே விருத்தர்களாகின்றனர்.

न तेन वृद्धो भवति येनास्य पलितं शिरः ।
यो वै युवाप्यधीयानस्तं देवाः स्थविरं विदुः ॥ மனு 2. 157.

தலைமயிர் நிறைப்பதினாலே ஒருவன் பெரிவன் ஆகமாட்டான். கற்றிருக்கிறவனைச் சிறுவனாயிருந்த போதிலும் வித்வான்கள் பெரியவனாகக்கருதுகிறார்கள்,

यथा काष्ठमयो हस्ती यथा चर्ममयो मृगः ।
यश्च विप्रोऽनधीयानस्त्रयस्ते नाम बिभ्रति ॥ மனு 2. 159.

வித்தையைக் கற்காதவர்கள் மரயானையைப்போலவும் தோல் மிருகங்களைப்போலவும் ஆகிறார்கள். அதுபோலவே அறிவு ஒளிபெறாத மனிதர்கள் உலகில் பேருக்குமாத்திரம் மனிதன் என்று அழைக்கப்படுகிறார்கள்.

अहिंसयैव भूतानां कार्यं श्रेयोऽनुशासनम् ।
वाक् चैव मधुरा श्लक्ष्णा प्रयोज्या धर्ममिच्छता ॥ மனு 2. 159.

ஆகையினால் வித்தையைக்கற்று தர்மாத்மாக்களாய் விரோதமன்னியில் சகல ஜீவன்களுக்கும் நல்ல உபதேசம் செய்யட்டும். இனிமையான வார்த்தை பேச்சு, இவைகளினால் உபதேசம்செய்ய வேண்டும். சத்தியோபதேசத்தினால் தர்மத்தினுடைய விருத்தியையும் அதர்மநாசத்தையும் செய்கிறவர்களே மேலோர்கள். பிரதிதினம் ஸ்நானம்செய்து வஸ்திரம் அன்னபானம் இடங்களை சுத்தமாய் வைத்துக்கொள்ளட்டும். ஏனெனில் இவைகள் சுத்தமாய் இருப்பதினாலேயே சித்தசுத்தியும் ஆரோக்கியமும் விருத்தியடைந்து புருஷப் பிரயத்தனமும் அதிகமாகிறது. மல மூத்திர நாற்றங்கள் போகவேண்டிய தூரம் சுத்தம் செய்யவேண்டியது.

आचारः प्रथमो धर्मः श्रुत्युक्तः स्मार्त्त एव च ॥ மனு 1. 180.

உண்மைபேசுதல் முதலான கர்டங்களை ஆசரியப்படுதே வேதம் சுருதிகளால் கோஷிக்கப்படும் ஆசாரம்.

मा नो वधीः पितरं मोत मातरम् ॥ யஜுர் 16. 15
आचार्यो ब्रह्मचर्येण ब्रह्मचारिणमिच्छते ॥ அதர்வ. 11. 15.
मातृदेवो भव । पितृदेवो भव ।आचार्यदेवो भव । अतिथि देवो भव ॥ தை 7. 11.

மாதா, பிதா, ஆசாரியன், அதிதி, இவர்களுடைய சேவையே தேவ பூஜை என்று அறியப்படுகிறது. எக்காரியங்களினால் உலகிற்கு உபகாரம் உண்டாகுமோ, அந்தகாரியத்தைச் செய்யவேண்டும். கெடுதியை விளைவிக்கக்கூடியதைவிட்டுவிடுவதே மனிதர்கள் முக்கியமாய் செய்யவேண்டிய காரியமாகும். நாஸ்திகன், மோசக்காரன, விசுவாசமோசஞ்செய்கிறவன் தன்னலத்தைக் கோருகிறவன், வஞ்சகன் இன்னும் முதலான துஷ்டர்களுடைய சேர்க்கைக் கூடாது. சத்தியவாதி, தர்மாத்மா, பரோபகாரப்பிரியன் இவர்களுடைய சேர்க்கை செய்வதற்கே சிரேஷ்டாசாரம் என்று பெயர்.

வி௯:— ஆரியவர்த்தத்தேசத்தவர்கள் வெளிநாடுகளுக்குப் போவதினால் ஆசாரம்குன்றி விடுகின்றதா இல்லையா ?

விடை:—இல்லை இது பொய்யே. உள்ளும் புறமும் சுத்தமாயிருந்து எங்கு போனபொழுதிலும் ஒருவன் நல்லவனாயிருக்கலாம். இவைகளை எங்கு செய்தபோதிலும் தர்மப்பிரஷ்டனாக ஒருபொழுதுமாகமாட்டான். இந்தியாவிலேயே இருந்துதுராசாரங்களைச் செய்கிறவன் தர்மப்பிரஷ்டனும் ஆசார பிரஷ்டனுமாகிறான்.

मेरोर्हरेश्च द्वे वर्षे वर्षं हैमवतं ततः ।
क्रमेणैव व्यतिक्रम्य भारतं वर्षमासदत् ॥
स देशान् विविधान् पश्यंश्चीनहूणनिषेवितान् ॥

இச்சுலோகம் மகாபாரதம் சாந்திபர்வம் மோட்சதர்மத்தில் வியாசசுக ருடைய சம்வாதத்திலிருக்கிறது:—ஒரு காலத்தில் வியாசர் தன்னுடைய புத்திரனும் சிஷ்யனுமான சுகனுடன் இப்பொழுது அமெரிக்கா என்றும் சொல்லப்படும்படியான பாதாளத்தில் தங்கியிருந்தார். ஆத்மவித்தை இவ்வளவுதானு அல்லது இன்னும் அதிகம் உண்டாவென்று சுக்கிராசாரியர் ஒருகேழ்வி கேட்டார். வியாசர் அதற்குப்பதில் என்றும் சொல்லவில்லை. ஏனெனில் அதற்குப்பதில்முன்னமேயே சொல்லிவிட்டார். வேறு பிரமாணங் கொடுப்பதற்காகத் தன் பிள்ளையுடன் நீ மிதிலாபுரிக்குச்சென்று ஜனகராஜனுடன் இக்கேள்வியைக் கேட்டால் சரியான விடையளிப்பார் என்று சொன்னர். தகப்பனர் வார்த்தையைக்கேட்டு பாதாளத்தைவிட்டு மிதிலாபுரிபக்கமாய்ச்சென்ருர். முதலில் ஹிமாலயத்திற்கு வடக்கேயும் வடமேற்கிலேயுமுள்ள ஹரிவர்ஷத்திற்கு-ஹரி என்ருல் குரங்கு. குரங்கிற்குச்சரியானமனிதர்களுள்ள அதாவது இரத்தமுகத்தையும் பச்சைக் கண்களையுமுடைய மனிதர்களுள்ள தேசங்கள். இப்பொழுது ஐரோப்பா என்று பெயர்.— தேசங்களுக்குச் சென்ருர். இத்தேசங்களைப் பார்த்துக் கொண்டு யூதர்களினுடைய தேயமாகிய 'ஹூண' தேசத்தையும் (சிறிய ஆசியா முதலானது) கண்டு, சீனதேசத்திற்கும் சீனுவிலிருந்து இமாலயத்திற்கும் இமாலயத்திலிருந்து மிதிலாபுரிக்கும் வந்தார். கிருஷ்ணனும் அர்ச்சுனனும் அசுவதரி (காந்தத்திளுல் தள்ளப்பட்டது. அதாபுகைக்கப்பலில்) யில் உட்கார்ந்துகொண்டு அமெரிக்காவெனப்படும் பாதாளத்திற்குச்சென்று யுதிஷ்டிர சக்கரவர்த்தியின் இராஜசூய யாகத்திற்கு உத்தாளக ரிஷியைத்திரும்பவும் கொண்டுவந்தார்கள். மேலும் காண்டஹார் எனப்படும்படியான காந்தாரதேயத்து ராஜபுத்திரிக்கே திருதராஷ்டிரனுடைய விவாகம் நடந்தது. பாண்டுமனைவியான மாத்ரி ஈரான் தேச (பாரசீக)த்து ராஜப்பெண். பாதாளராஜபுத்திரியான உலோபியையே அர்ச்சுனன் விவாகம் செய்துகொண்டான். அயல் நாடுகளுக்கும் தீவுகளுக்கும் போகாமல் இவ்வார்த்தைகளெல்லாம் எவ்விதம் வந்திருக்கக்கூடும். இந்தியதுறைமுகங்களை விட்டுப்போகும் கப்பல்களின்மேல் வாங்கினவரியின் விவரமொன்று மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மகாராஜ யுதிஷ்டிரருடைய ராஜசூய யாகத்திற்குச் சகல பூலோக அரசர்களுக்கும் அழைப்புக்கடிதம கொடுக்க பீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் ஆகியவர்கள் நான்கு திசைக்கும் சென்ருர்கள். அயல் நாட்டு யாத்திரையையும், தீண்டுதலையும் தோஷமாகக் கருதியிருந்தால் அவர்கள் சென்று இருப்பார்களா?

ஆரியர்கள் ஆதியிலிருந்தே வியாபாரம் அரசியல், யாத்திரை முதலிய வைகளைக்கடைப்பிடித்துள்ளார். சகல உலகத்தையும் சுற்றிவந்துளார். அயல் நாட்டுயாத்திரையினுல் தர்மம் நாசமடையும் என்கிற எண்ணமானது மூடர்களினுடைய உபதேசத்தினுலும் அஞ்ஞான விருத்தியினுலுமே பரவிற்று. பலதேசங்களுக்கும் தீவுகளுக்கும் போய் வருவதில் பயங்காதவர்கள் பலர்களினுடைய ஒழுக்கவழக்கங்களுடன் பழகி தன்னுடைய இராஜ்யத்தையும் வியாபாரத்தையும் விருத்திக்குக் கொண்டுவருவதில் வல்லவர்களாகிருர்கள். நற்

பழக்கங்களைக்கைப்பற்றி கெட்டவைகளை விடுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்கிறவர்கள் நிறைந்த செல்வத்தைப்பெறுகிறார்கள். கேவலம் தாழ்ந்தவர்களானவும் மிலேச்ச குலத்தும் உதித்த விலைமாதர் முதலானவர்களுடன் கூடுவதைத் தீண்டக்கூடாததாக நினைக்காமலிருப்பது விந்தையே! பல தேசங்களிலுள்ள சிரேஷ்ட மனிதர்களுடன் சேருவதைத் தீண்டலாகவும் தோஷமாகவும் நினைப்பது ஆச்சரியமே!! இவைமடத்தனமில்லாவிடில்வேறுயாது? மாம்சாகாரம் மதுபானம் செய்கிறவர்களினுடைய சரீரம் வீரியம் முதலியவைகள் துர்நாற்றத்துடன் கூடினதாகின்றதென்பது உண்மையே. ஆகையினால் அவர்களுடன் சேருவது ஆரியர்களையும்கெடுத்துவிடும். ஆனால் அவர்களிடமிருந்து விஷயங்களையும் குணங்களையும் தெரிந்து கொள்வதினால் கொஞ்சமேனும் கெடுதலாவது பாபமாவது கிடையாது. அவர்களினுடைய மதுபானம் முதலான கெடுதல்களை விட்டு விட்டு குணங்களைக்கிரகித்துக் கொள்வதினால் தீங்கு ஒன்றும் உண்டாகாது. அவர்களைத் தொடுவதினாலும் பார்ப்பதினாலும் பாபம் உண்டாகிறதென்று நம்பும் இம்மூடர்கள் அவர்களுடன் சண்டை செய்யவும் முடியாது. ஏனென்றால் யுத்தத்தில் அவர்களைப் பார்ப்பதும் தொடுவதும் அவசியமாகும். பட்சபாதம், துவேஷம், அநியாயம், பொய் பேசுதல் முதலான குற்றங்களைவிட்டு வீம்பு வைராக்கியமும் இல்லாது பரோபகார சிந்தனை அடைவது உத்தமமான ஆசாரம் என்று நல்லவர்கள் அறியட்டும். ஆத்மாவையும் கடமையுமே நம்முடைய தர்மம் என்றும் அறியட்டும். நற் காரியங்களைச்செய்து வெறு தேயங்களுக்கும் தீவுகளுக்கும் போவதினால் நமக்குக் கெடுதல் ஒன்றுமே இல்லை. பாபம் செய்வதினாலேயே தீங்குவிளைகிறது. வேதோக்த தர்மத்தை நிச்சயஞ்செய்யத்தெரிந்து கொள்ளவும் பொய்மதங்களால் வேறெவ்வரும் நம்மை ஏமாற்றாமல் இருக்கும் வண்ணம் கண்டனஞ்செய்யவும் தெரியவேண்டும். பல நாடுகளிலும் தீவுகளிலும் வியாபாரஞ்செய்யாமல் சுதேசத்தினுடைய உயர்வு ஒருபொழுதும் உண்டாகாது. உள்ளூர் வியாபாரம் செய்துகொண்டிருக்க பர தேசத்தவர்கள் வர்த்தகத்தை அடக்கி ஆண்டு கொண்டிருந்தால் தரித்திரம் துக்கத்தைத் தவிரவேறென்ன ஏற்படும். வேஷதாரிகள் இவர்களுக்கு வித்தையையளித்து அயல்நாடுகளுக்குச்செல்ல அனுமதியளித்தால் அவர்கள் புத்திமான்களாகி தங்களுடைய ஒப்பாசாரங்களில் விழமாட்டார்களென நன்கறிவார்கள். அப்பொழுது அவர்களுடைய பிழைப்பும் போய் மரியாதையும் இழக்க நேரிடுமே. இதைக்கொண்டேதான் உண்பதிலும் உட்கொள்ளுவதிலும் இவ்வளவு அட்டகாசஞ்செய்கிறார்கள். வெளிநாடுகளுக்குப்போகாமல் தடுப்பதே அவர்களினுடைய எண்ணம். பிசகினால்கூட மாம்சாகாரம் மதுபானஞ் செய்யக்கூடாது யுத்தகாலத்தில் கூட *சௌகா பிரகாரம் பாகஞ்செய்து சாப்பிடுவதினாலேயே இராஜ புருஷர் தோல்வியை யடைந்திருக்கிறார்களென்று புத்திமான்

* சௌகா என்றால் மண்ணையும் பசுஞ்சாணத்தையும் கலந்து மெழுகி, உயர் குலப்பிராம்மணரைக்கொண்டு பாகஞ்செய்யச்சொல்லி அவர்களைக்கொண்டேகுறிப்பிட்ட இடத்திற்குள் பரிமாறச்சொல்லுவது முதலானவைகள்.

கள் அறியவில்லையா? யுத்தத்தில்யானை குதிரை ரதம் இவைகளின் மேலிரு ந்து கொண்டே ஒருகையினால் ரொட்டியைச் சாப்பிட்டுக்கொண்டும் தண் ணீரைக்குடித்துக்கொண்டும் மற்றொருகையினால் சத்துருவை ஜெயிப்பதுமே ஆசாரமாகும். தன்னைச்ஜயிக்கவிடுதிவது துராசாரமேயாம். இம்மாதிரி மூட த்தன்மையான சௌகாவை உண்ணுவதிலும் உட்கொள்ளுவதிலும் கைகொ ண்டு, இவர்கள் சகல சுயேச்சை, ஆனந்தம், திரவியம், ராஜ்யம் வித்தை புருஷபிரயத்தனம் முதலானவைகளை இழந்தார்கள். இப்பொழுதுகையோடு கையைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்து, கஷ்டத்திலிருந்து காப்பாற்ற உதவி எவரேனும் செய்வார்களாவென்றும் நினைத்து கிடைக்கும் கொஞ்சம் பொரு ள்களைக்கொண்டு பாகஞ்செய்து சாப்பிட்டுகொண்டிருக்கிறார்கள். உதவிசெய்ய எவரும் இல்லாமையினால் ஆரியவர்த்த நாட்டை நாசம்பண்ணிவிட்டார்கள். சமயலறையை நன்றாய்ப்பெருக்கி கழுவி சுத்தமாகவைத்துக்கொள்ளுதல் அவசியம். மகம்மதியர் கிறுஸ்துவர் களுடையதைப்போல் அழுக்கான பாக சாலைகளை வைத்துக்கொள்ளுதல் கூடாது.

வினா:—சகரி–நிகரி என்றாலென்ன?

விடை:—ஜலம் முதலானவைகளில் செய்யும் சமையலுக்குச் சகரியென் றும் நெய் பால் முதலானவைகளில் பாகம் செய்பவைகளுக்கு நிகரி என்றும் பெயர். ஒப்பாசாரபாதகர்களால் செய்யப்பட்டவைகளில் இதுவும் ஒன்று. நெய்யும் பாலும் அதிகமாயிருப்பதினால் அதைச் சாப்பிடுவதில் உருசி யிருப்பதினாலும், வயிற்றிற்கு அதிக பதார்த்தங்கள் செல்வதினாலும் இப்பொ ய்யைக்கட்டினார்கள். அக்கினியில் பாகம் செய்யப்பட்டு காலத்தில் பக்குவம டைந்ததிற்கு "பக்கா" வென்றும் (பழுத்தது—நிகரியின் மற்றொரு பெயர்) பக்குவமடையாததிற்குக் கச்சா (சகரியின் மற்றொரு பெயர்) என்றும் பெயர் களுண்டு பக்கா சாப்பிடக்கூடியது. கச்சா சாப்பிடக்கூடாதது இதுவும் எல்லா சமயங்களிலும் உண்மையாகாது. ஏனெனில் கொள்ளு முதலானவைகள் கச்சைகளான பொழுதிலுங் கூட சாப்பிடப்படுகிறது.

வினா:—துவிஜன் தன் கைகளினாலேயே சமையல்செய்து சாப்பிட வேண் டுமா அல்லது சூத்திரனால் செய்யப்பட்டதைச் சாப்பிடலாமா?

விடை:—சூத்திரன் கையினால் செய்ததைச் சாப்பிடலாம். ஏனெனில் துவிஜர்கள்—பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள்— (ஸ்திரீ புருஷர்கள் இருவரும்) வித்தையை ஓதுவிப்பதிலேயும் இராஜ்யபாலனத்திலும் மிருகபால னத்திலும் வியாபாரத்திலும் முறையே இருக்கவேண்டியது. (சமையல் செய்தல் முதலானவைகளில் கால நாசஞ் செய்யக்கூடாது) ஆனால் சூத்திர னுடைய பாத்திரத்திலிருந்தும் அவன் வீட்டில் பாகம் செய்யப்பட்டதி லிருந்தும் ஆபத்துக்காலங்களில் தவிர சாப்பிடக்கூடாது. இப்பிரமாணத் தைப் பாருங்கள்.

आर्याधिष्ठिताः वा शूद्राः संस्कर्त्तारः स्युः ॥ ஆபஸ்த. 22. 2. 4.

ஆரியர்களினுடைய வீட்டில் சூத்திரன் அதாவது படிப்பில்லாத ஸ்திரீ புருஷர்கள் சமையல் முதலான வேலைகளைச் செய்யட்டும். ஆனால் அவர்கள்

தங்களுடைய சரீரம்வஸ்திரம் முதலியவைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஆரியர்களுடைய வீட்டில் பாகஞ் செய்யும் சமயங்களில் வாயிலிருந்து எச்சிலும் மூச்சுக் காற்றும் கலவாதபடி (துணியைக் கொண்டு) வாயை மூடிக்கொள்ளவேண்டும். வாரம் ஒரு முறை கை நகத்தைச் சீவிக்கொள்ள வேண்டும். சமையலுக்கு முந்தி ஸ்நாநஞ் செய்யவேண்டும். ஆரியர்களுக்குப் பிறகு சாப்பிடவேண்டும்.

வினு:—சூத்திரனுல் தொடப்பட்ட ஆகாரத்தைச் சாப்பிடுவது குற்றமானுல் அவனுல் பாகஞ் செய்யப்பட்டதைச் சாப்பிடுவது எவ்விதம் கூடும்?

விடை:—இது வெறுங்கட்டுரையே. ஏனெனில் சர்க்கரை (வெள்ளை—பழுப்பு) நெய், பால், தயிர், காய் கறிகள் பழம் கிழங்குகளெல்லாம் அவர்களாலேயே செய்யப்பட்டு சாப்பிடுகிறேம். உதாரணமாக வயலில் கருப்பங்கழிகளை வெட்டிப் பிழிந்து ரசம் எடுக்கும்படியான சூத்திரன், செக்கிலியன், பெருக்குகிறவன், மகம்மதியன், கிறுஸ்துவன் இவர்களை எடுத்துக் கொள்வோம். கருப்புங் கழிகளைக் கொண்டுபோய் இவர்களே ஆலையிலிடுகிறுர்கள், சாதாரணமாய்ப்பாதியைக் கடித்து மிகுதி பாதியை ஆலையிலிடுகிறுர்கள். சாரைக்காய்ச்சுங் காலத்தில் தங்கள் சமையலையும் அதிலேயே செய்து கொள்ளுகிறுர்கள். மலம் மூத்திரம் சேர் மண் இவைகளினுல் பூசப் பட்டிருக்கும்படியான உள்ளடிகளையுடைய பழைய செருப்பு முதலியவைகளினுல் அதைக்கலக்குகிறுர்கள். தங்கள் வீடுகளில் தயிருக்கு உபயோகப் படும்படியான அழுக்குப் பானைகளிலிருந்து ஜலமெடுத்து பாலுடன் சிலர் கலக்குகிறுர்கள். மாவரைத்த பிறகு அழுக்கு கைகளினுல் அதைக் கூட்டுகிறுர்கள். இவ்விதமே வேறுசாமான்கள் செய்வதிலேயும் அசுத்தங்கள் சேருகின்றன. கந்தமூலபழங்களிலுமிப்படியே. இம்மாதிரி சாமான்களை உட்கொள்வது அவர்களுடைய கையிலிருந்தே சாப்பிடுவதுபோலாகும்.

வினு:—கண் மறைவில் கந்தமூல பழங்களையும் ரசம் முதலியவைகளையும் சாப்பிடுவது குற்றமாகாதே?

விடை:—மகம்மதியர்களாலும் பெருக்குகிறவர்களாலும் தனியாகச் செய்யப்பட்டவைகளை நீ சாப்பிடுவாயா? இல்லை என்பாயானுல் கண் மறைவில் செய்யப்பட்டதும் சாப்பிடச் சந்தேகமுள்ளதாகின்றது. மகம்மதியர்கள் கிறுஸ்துவர்கள் முதலானவர்கள் மதுபானம் மாம்சாகாரம் செய்வதினுல் அவர்களிடம் சாப்பிடுவதினுல் ஆரியர்களும் மாம் சாகாரம் மதுபானம் முதலான தீயக்குணங்களுக்கு ஆளாவார்கள். ஆரியர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் சாப்பிடுவதில் தீமை ஒன்றுமில்லை. மதம் சுகதுக்கம் இவைகளில் ஒத்துமையன்னியில் முன்னேற்ற மடைவது மிகவும் கஷ்டமானது. சாப்பிட்டுக் குடிப்பதினுல் மாத்திரம் முன்னேற்றம் உண்டாய் விடாது. தீயவழக்கங்களை விட்டு நல்லவைகளைக் கைக்கொண்டாலொழிய முன்னேற்றம் கிடைக்காது. கெடுதல்களும் விளையும். விதேசிகளினுடைய இராஜ்யம் ஆரியவர்த்தத்திலிருப்பதற்குக் காரணம்:—உள் ஒற்றுமையில்லாமை, மதபேதம், பிரம்மசரிய சேவையற்றிருப்

பது, வித்தையை ஓதுதலும் ஓதுவிக்காமலுமிருப்பது, சிறு வயதில் இஷ்டமில்லாத விவாகம், விஷய சுகங்கள், பொய் சொல்லுதல் முதலான கெடுதல்கள். வேதவித்தையினுடைய பிரசார மன்னியிலிருப்பது ஆகிய தீயவழக்கங்களே. சகோதரர்களே சண்டை செய்து கொண்டால் மூன்ருவது விதேசத்தவர் வந்து பஞ்சாயத்தாக அமருகிருர். ஐயாயிரம் வருடங்களுக்கு முந்தி நடந்த மகாபாரத யுத்த சம்பவங்களை மறந்து விட்டீர்கள் போலும். பாருங்கள் மகா பாரத யுத்தத்தில் சகல ஜனங்களும் சவாரி செய்து கொண்டே அன்னபானம் செய்தார்கள். தமக்குள் சண்டையினுலே கௌரவ பாண்டவ யாதவர்களினுடைய நாசமேற்பட்டது. போனதுபோகட்டுமென்ருலும் அவ்வியாதி இன்னும் இருந்துகொண்டேவருகிறது. இக்கோரராக்ஷசன் எப்பொழுதாவதுவிடுமா அல்லது ஆரியர்களுடைய சகல சுகங்களையும் போக்கடித்து துக்கச்சமுத்திரத்தில் மூழ்க்கடித்து மரணத்தை விளைவிக்குமா? உறவினர்களைக் கொன்று சுதேச நாசத்தைவிளைவித்த துரியோதனனுடைய நீசமான வழிகளையே இன்னும் ஆரியர்கள் கைப்பற்றிக்கொண்டு துக்கத்தை யடைகிருர்கள். இவ்ராஜரோகம் ஆரியர்களில் நாசமாய் விடும்படி ஓ பரமேச்வரனே! நீர் கிருபை கூர்தல் வேண்டும்.

ஆகாரம்

வேண்டியது விலக்கப்படவேண்டியது என்று ஆகாரங்கள் இருவகைப்படும். முதலாவது தர்மசாஸ்திரத்தினுல் கூறப்பட்டது. இரண்டாவது வைத்தியசாஸ்திரத்தினுல் கூறப்பட்டது.

अभक्ष्याणि द्विजातीनाममेध्यप्रभवाणि ॥ மனு. 5. 5.

वर्जयेन्मधुमांसं च ॥ மனு, 1. 177.

துவிஜன் அதாவது பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் இவர்கள் மலம் மூத்திரம் முதலானவைகளினுடைய சேர்க்கையினுலுண்டாகும் கிழங்கு வேர் பழங்களைச் சாப்பிடக்கூடாது

बुद्धिं लुम्पति यद् द्रव्यं मदकारी तदुच्यते ॥ சாரங்கதர. 4. 21.

புத்தியை மழுக்கி நாசஞ் செய்யும் படியான பலவித மாம்சம் கஞ்சா அபினி முதலானவைகளை உபயோகப்படுத்தக் கூடாது. நாறுகிறதும் கெட்டுப் போனதும் அறுவருப்பானதும் நன்ருய் பக்குவஞ் செய்யப்படாததுமான ஆகாரத்தை உட்கொள்ளுதல் கூடாது. மது மாமிசம் முதலானவைகளினுடைய அணுக்களினுல் நிறைந்திருக்கும்சரீரத்தையுடைய மதுபானம் மாமிசாகாரம் செய்கிறவர்களிடமிருந்தும் மிலேச்சர்களிடமிருந்தும் சாப்பிடக்கூடாது.

பிரயோசனமுள்ள மிருகங்களைக் கொலைசெய்யவும் செய்யப்படுவதுங் கூடாது. உதாரணமாக ஒருபசுவானது பால் நெய் தயிர் கன்றுக்குட்டி முதலியவைகளினுல் (ஆண், பெண் இரண்டும்) தன்னுடைய ஒரே தலை முறையில் 475, 600 நபர்களைக் காப்பாற்றவல்லது. பிரதி தினம் சிலபசுக்கள் 20 அல்லது

40 சேரும், வேறு சிலவைகள் 2 அல்லது 4 சேரும் பால், முதலானவைகள் கொடுக்கின்றன. ஆகையினால் ஒரு பசு ஒரே சமயத்தில் சராசரியாகப் பதினொன்று சேர் கொடுக்கிறது. சில பசுக்கள் 18 மாசமும் வேறு சிலவைகள் 6 மாசமும் கறக்கின்றன. சராசரி 12 மாசத்திற்குக் கொடுக்கும். ஆகையினால் ஒரே தடவையில் 241 960 நபர்களுக்குப் பாலை தன்னுடைய வாழ்நாளில் ஒரு பசு கொடுக்கிறது. அதற்கு ஆறு கடாரிகளும் ஆறு கன்றுக்குட்டிகளுமுண்டாகும். அவைகளில் இரண்டுஇறந்தாலுங்கூட பத்துமீதியிருக்கும். ஆகையினால் ஐந்து பசுங்குட்டிகளினுடைய பால் ஒரே தடவையில் 124, 800 பெயர்களைக்காப்பாற்றும். ஒவ்வொருவரும் சராசரியாகப்பிரதிதினம் முக்கால் சேர் அல்லது ஒன்றேகால் சேர் சாப்பிட்டாலும் ஒரேதடவையில் 25000 பெயர்கள் சாப்பிடக்கூடிய 5000 மணங்கு தானியங்களை 5 காளைகளும் உண்டுபண்ணும். ஆகையினால் காளையினாலும் பசுவினாலும் கொடுக்கப்பட்ட பாலையும் தானியத்தையும் சேர்த்தால் 374, 800 பெயர்களுக்குவேண்டிய அளவு ஆகின்றது. எனவே அதே காலத்தில் 475, 600 நபர்களை ஒரு பசு தன் வாழ் நாளில் காப்பாற்றும். இவைகளை விருத்தி செய்து காப்பாற்றிக் கொண்டே வந்தால் கணக்கற்ற மனிதர்களைக் காப்பாற்றும். நிலங்களை உழுவதுடன் கூட காளைகள் வண்டிகளிழுப்பதினாலும் பாரங்களைச் சுமப்பதினாலும் மனிதனுக்கு உபகாரமாகின்றன. பால் கொடுப்பதினால் பசு மிகவும் உபயோகமாகின்றது. எருதுகளும் அப்படியே உபயோகமாகின்றன. எருமைகளின் பாலைவிட பசுவின் பால் புத்தியை விருத்தி பண்ணும். இதனாலேயே ஆரியர்கள் அதிக உபகாரமுள்ளதாக ப்பசுவை எண்ணினார்கள். இதர வித்வான்களும் இதையே கருதினார்கள். தன்வாழ்வில் ஒரு ஆட்டின் பால் 25, 920 ஜனங்களுக்கு உபயோகமாகும். இம்மாதிரியே யானை குதிரை ஒட்டகை ஆடு கழுதை முதலியவைகள் மனிதனுக்கு உபயோகமாகின்றன. இவைகளைக் கொலை செய்கிறவர்கள் சகலத்தையும் வதைத்த கொலைபாதகர்களாக வாகிறார்கள். ஆரியர்களுடைய இராஜ்யத்தில் இவைகளெல்லாம் கொலை செய்யப்படவில்லை. ஆரியவர்தத்திலேயும் இதர பூகோள தேசத்திலேயும் அப்பொழுது ஜனங்கள் ரொம்ப சந்தோஷத்துடனிருந்தார்கள். ஏனெனில் பால் நெய் நிறைய விருந்து காளைமுதலானவைகள் அதிகமாயிருந்தபடியினால் சகலருடைய சுகத்திற்கு வேண்டிய தானியம் முதலானவைகளிருந்தன. மாம்சாகாரக்காரர்கள் வந்து பசு முதலானவைகளை அடிக்கிறவர்களும் மதுபானத் செய்கிறவர்களும் இராச்சியாதிகாரியாக வந்த பிறகு ஆரியர்களுடைய துக்கங்கள் கிரமமாக விருத்தியாய்க் கொண்டே வருகிறது.

नष्टे मूले नैव फलं न पुष्पम् ॥ சாணக்ய. 10. 13.

மரங்களினுடைய வேர் வெட்டுண்டுபோய் விட்டால் பழங்களும் புஷ்பங்களும் எங்கிருந்துவரும்?

வினா:—எக்காலமும் அஹிம்சையுள்ளவர்களாய் விட்டால் புலிமுதலிய காட்டு மிருகங்கள் விருத்தியாகிப் பசுமுதலானவைகளை அடித்து உங்களுடைய பிரயத்தனங்களையும் பிரயோசனமன்னியில் செய்துவிடுமே ?

விடை:—கெடுதல் விளைவிக்கும் மிருகங்களைத் தண்டனை செய்வது அதிகாரிகளுடைய கடமை. வேண்டுமானால் அவைகளினுடைய பிராணனையும் போக்கடிக்கவேண்டும்.

வினா:—அவைகளினுடைய மாமிசத்தை எறிந்துவிட வேண்டியதுதானா?

விடை:—எறிந்துவிட்டாலும் எறியலாம் அல்லது மாம்சாகாரம் செய்யும் மிருகங்களுக்கு அளிக்கலாம். அல்லது தீயிட்டு விடலாம். மாம்சாகாரிகள் சாப்பிடுவதினால் உலகிற்குக்கெடுதல் ஒன்றும் விளையாது. ஆனால் அதைச் சாப்பிடுகிறவன் மாம்சாகாரியாய உபத்திரவத்தைச் செய்கிறவனாகிறான். நம்பிக்கை மோசம், வஞ்சகம், கபடம், திருட்டுத்தனம் முதலானவழிகளினால் கிடைக்கும் பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது. அஹிம்சை தர்மகாரியம் இவைகளினால் கிடைக்கும் ஆகாரத்தையே சாப்பிடவேண்டும். எப்பதார்த்தங்களினால் சுகம், அடைந்து வியாதி நசித்து புத்திபலம் பராக்கிரமம் ஆயுசு ஆகியவைகள் விருத்தி யடைகிறதோ அவ்வரிசி, கோதுமை, பழம், கிழங்கு, பால், நெய்சர்க்கரை, முதலானவைகளைச்சரிவரப்பாகஞ்செய்து சமயத்திற் கேற்றவாறுகாலாகாலங்களில் மித ஆகாரம் செய்யவேண்டும். தன்னுடைய பிரகிருதிக்கு விரோதஞ் செய்வதைவிட்டு எது ஒத்துவருகிறதோ அதைச் சாப்பிடுவதேவேண்டிய ஆகாரமாகும்.

வினா:—ஒரேதட்டிலிருந்து சாப்பிடுவதினால்கெடுதலுண்டா? இல்லையா?

விடை:—ஆமாம். கெடுதலுண்டு. ஒருவனுடைய குணம் பிரகிருதியைப் போல் மற்றொருவனுடையது இருக்கிறதில்லை. குஷ்டரோகி முதலானவர்களுடன்சாப்பிடுவதினால் நல்லமனிதர்களுக்குக்கூட இரத்தங்கெட்டுபோகிறது. கலந்து சாப்பிடுவதினால் தீமைவிளைகிறதே தவிர நன்மை கிடையாது. இதனாலேதான் மனுவும்

नोच्छिष्टं कस्याचिद्दद्यान्नाद्याच्चैव तथान्तरा ।
न चैवात्यशनं कुर्यान्नचोच्छिष्टः क्वचिद्व्रजेत् ॥ மனு. 2. 50.

சொல்லுவதாவது. சாப்பிட்டு மீதின பதார்த்தங்களை எவருக்குங்கொடுக்கக்கூடாது. ஒரேதட்டிலிருந்து ஒருவர் மற்றொருவருடன் போஜனஞ் செய்யக்கூடாது. அதிகமாகவும் சாப்பிடக்கூடாது. சாப்பிட்டவுடன் கையையும முகத்தையும் கழுவாமல் இருக்கக்கூடாது.

வினா:— **गुरोच्छिष्टभोजनम्** இதன் பொருள் என்ன?

விடை:—குரு சாப்பிட்டபிறகு தனியாயும் சுத்தமாயுமிருக்கிறதைச் சாப்பிடவேண்டும் அதாவது குருமுதலில் சாப்பிட பிறகு சீடன் சாப்பிட வேண்டும்.

வினா:—மீதியிருப்பது தள்ளுபடியானால் வண்டுகளினால் மீதிவைக்கப்பட்ட ஆகாரமான தேன்: கன்றுகுட்டிகள் குடித்து மீதிவைத்த பால், ஒரு கவளம் சாப்பிட்டு மீதியிருக்கும்படியான அன்னம் இவைகளைச் சாப்பிடக் கூடாதா?

விடை:—பெயருக்கு மாத்திரம் தேன் மீதியிருக்கிறதே தவிர பல வேர்களினுடைய இரசமாதலால் அதைச்சாப்பிடலாம். வெளியில்வரும் பாலே மாத்திரம் கன்றுக்குட்டிக்குடிக்கிறதே தவிர உள்ளேயிருப்பதைக்குடிப்பதில்லை ஆகையினுல் மீதியிருப்பதாக ஆகாது. ஆனுல் கன்றுக்குட்டிகுடித்தான பிறகு தண்ணீரைக்கொண்டுத் தாயின் முலேகளைக்கழுவி சுத்தமான பாத்திரத்தில் கறக்கவேண்டும். தன்னுல் மீதிவைக்கப்பட்டது தனக்கேஎப்பொழுதும் கெடுதலே உண்டுபண்ணுது. இதரர்களினுடைய தள்ளுபடியையும் மீதியையும் சாப்பிடுவதும் தொடுவதும் ஆகாதகாரியம். தன்னுடைய முகம் காது மூக்கு கண் உபஸ்த இந்திரியங்கள் இரகசிய இந்திரியங்கள் மலம் மூத்திரம் முதலானவைகளைத்தொடுவதில் ஒருவனுக்கு அருவருப்பு உண்டாகிறது இல்லே. ஆனுல் வேறு ஒருவனுடையதைத் தொடுவதில் அஞ்சுகிறுன். இதிலிருந்து இக்குணம் சிருஷ்டிக்கிரமத்திற்கு விரோதமான தென்று ஏற்படவில்லே. இதரர்களினுடைய சாப்பாட்டுத்தள்ளுபடியை ஒருபொழுதும் உட்கொள்ளக் கூடாது.

வினு:—புருஷன் மனேவிகளினுடைய மீதியை ஒருவருக்கொருவர் உண்ணுதல் வேண்டாமா?

விடை:—கூடாது. ஏனெனில் அவர்களினுடைய சரீர சுபாவங்களும் வேறுனது.

வினு:—மனிதர்களினுல் செய்யப்பட்டதைச் சாப்பிடுவதில் என்ன தீங்கு இருக்கிறது பிராமணன் முதல சண்டாளன் வரையில் சரீரம், எலும்பு, சதை, தோல், முதலானவைகளெல்லாம் ஒன்றே. பிராம்மாண சரீரத்தில் ரத்தம் எப்படி ஓடுகின்றதோ அப்படியே சண்டாளனுடைய சரீரத்திலும் ஓடுகின்றது. இரத்தமும் அதுவே. ஆகையினுல் மனிதவர்க்கம் எல்லோராலும் செய்யப்பட்டதைச்சாப்பிடுவதில் என்னகெடுதலுண்டாகிறது.

விடை:—தோஷமிருக்கிறது. உத்தம பதார்த்தங்களைச்சாப்பிட்டு அருந்துவதினுல் பிராமணன் பிராமணத்தி சரீரத்திலுள்ள துர்க்கந்தம் தோஷம் இவைகளில்லாத ரஜவீரியத்தைப்போல் சண்டாளன் சண்டாளத்தி சரீரத்தில்லே. ஏனெனில் சண்டாளனுடைய சரீரம் துர்க்கந்தமுள்ளபரம அணுக்களினுல் நிறைந்திருக்கின்றது. அம்மாதிரி பிராமணன் முதலானவைகளில்லே. இதனுலேயே பிராமணன் முதலான உத்தமவர்ணங்களிலிருந்து சாப்பிடலாம். நீசன் செக்கிலியன் முதலானவர்களிடமிருந்து சாப்பிடக்கூடாது. நல்லது! உன்தாய் தமக்கை பெண் நாட்டுப்பெண் மாமியார் முதலானவர்களினுடைய சரீரத்தின் தோல் உன்மனேவியுடையது போலிருப்பதினுல் அவர்களிடம் நீ உன் மனேவியிடம் போலிருப்பாயா என்று கேட்டால் வெட்கமடைந்து தலேயைக்குனிந்து பேசாமலிருப்பாய். எப்படி கை வாயினுல் உத்தம அன்னத்தைச் சாப்பிடுகிறுயோ அப்படியே துர்க்கந்தத்தையும் சாப்பிட முடியுமானுல்மலத்தையும் ஏன் சாப்பிடக் கூடாது ? இம்மாதிரி இழிவானவர்களுமுண்டோ ?

வினு:—சாப்பாட்டு இடத்தை பசுஞ்சாணிகொண்டு மெழுகுவதுபோல் உன்மலத்தைக்கொண்டுஏன்செய்கிறதில்லே? பசுஞ்சாணி சமையலறையிலிருப்பதினுல் அது ஏன் சுத்தமாகிறதில்லே?

விடை:—பசுஞ்சாணி மனிதர்களுடைய மலத்தைப்போல் நாற்றமெடுக்கிறதில்லை. கோமயத்தின வாசனை சீக்கிரமாக மறைகிறதில்லை. துணியைக் கெடுப்பது மில்லை. அதில் படுகிறதுமில்லை, மண்ணைப்போல் நாசஞ் செய்வது மில்லை. மண், சாணம் இவைகளினால் மெழுகப்பட்டவிடம் பார்வைக்கு வெகு அழகாயிருக்கிறது. சமைக்கிறவிடத்தில் சாப்பிடுதல் முதலானவைகளைச் செய்வதினால் நெய் வெண்ணெய் மீதியானவைகள் கீழே விழுகின்றன. ஆகையினால் எறும்பு பூச்சி புழுக்கள் வந்து அவைகளிடத்தில் சேருகின்றன. தினந்தோறும் இடத்தைமெழுகிப்பெருக்கிச்சுத்தஞ்செய்யாவிடில் கக்கூசைப்போல் காணும். ஆகையினால் பிரதிதினமும் சமையலறையை மண்சாணங்கொண்டு மெழுகிப்பெருக்கி சுத்தஞ் செய்யவேண்டும். பக்காவீடானால் ஜலத்தினால் கழுவினால் போதுமானது. இவைகளினால் முன்சொன்ன கெடுதல்கள் நிவர்த்தியாகும். மகம்மதியருடைய சமைலறையில் சரியன்னியில் நாலாப்பக்கமும் சாம்பல், சுள்ளி, உடைந்தபானையோடுகள் எலும்புகள் அவயவங்கள் முதலானவைகள் சிதறிப்போய் அவைகளில் கூட்டமாக ஈக்கள் சேர்ந்திருப்பதைப் போலிருக்கக்கூடாது. உள்ளே உட்காரவேண்டுமென்று போகிறவர்கள் அங்கே வாந்தியெடுக்கும்படியான கெடுதல்களையும் அழுக்கையும் உடையதாயிருக்கிறது. பசுஞ்சாணியைக்கொண்டு மெழுகுவது கெடுதலென்றால் வரட்டியைக்கொண்டு எரிப்பதும் நெருப்பு சாம்பலினால் பிடியைக் கொளுத்துவதும் அவைகளினால் மெழுகுவதும் தப்பாவென்று கேழ்க்கிறோம். இவைகளெல்லாம் சரியில்லை யென்பதில் கொஞ்சமேனும் தப்பில்லை.

வினா:—சாப்பாட்டு அறையிலேயேசாப்பிடுவதா நல்லது அல்லது வெளியிலா ?

விடை:—நன்றாயும் ரம்யமாயும் அழகாயும் இடம் எங்கே காணப்படுகிறதோ அங்கே போஜனம் செய்யவேண்டும். ஆனால் அவசரகாலங்களிலும் யுத்தசமயங்களிலும் யானை குதிரை முதலான வாகனங்களின்பேரிலும் உட்கார்ந்துகொண்டே அன்னபானம் செய்யலாம்.

வினா:—சொந்தக்கைகளினாலே சமைத்துச்சாப்பிடவேண்டுமா ?

விடை:—சுத்தமாகப்பாகஞ்செய்தால் சகல ஆரியர்களும் ஒன்று சேர்ந்து சாப்பிடுவதில் கொஞ்சமேனும் கெடுதலில்லை. பிரம்ம க்ஷத்திரிய வைசியர்கள் சமையல்செய்யும் தொந்திரவிலேயும் சமையலறையைப் பெருக்குவதிலேயும் சாமான்களைக்கழுவதிலேயுமிருந்தால் வித்தைமுதலான சுபகுணங்களினுடைய விருத்தி ஒரு பொழுதும் உண்டாகாது. பாருங்கள்! மகாராஜாயுதிஷ்டிரரின் ராஜசூயயாகத்திற்கு வந்திருந்த பூகோளத்தரசர்கள், ரிஷிகள், மகரிஷிகள் எல்லோரும் ஒரே பாகசாலையில் சாப்பிட்டார்கள். கிறுஸ்துவர்கள் மகம்மதியர்கள் முதலானபலஜாதியினர் வந்தபின்னர் உள் நாட்டு விரோதம் உண்டாச்சுது. அவர்கள் மதுபானம் பசுமாம்சாகாரம் சாப்பிடவாரம்பித்தார்கள். அச்சமயத்திலிருந்து போஜனாதிகளினுடைய் துன்பம் ஏற்பட்டது. பாருங்கள்! காபூல் காண்டகார் பர்சியா அமெரிக்கா, ஐரோப்பா முதலான தேசத்திய

ராஜப்பெண்களான காந்தாரி மாத்ரி உலோபி முதலானவர்களை ஆரியதேசத் தரசர்கள் மணம்புரிந்து கொண்டார்கள். சகுனி முதலானவர்கள் கௌரவ பாண்டவர்களுடன் கூட அன்னபானஞ்செய்து கொண்டிருந்தார்கள். கொஞ்ச மேனும் விரோதங்கிடையாது. ஏனெனில் அப்பொழுது பூகோளம்முழுவதும் ஒரு வேத மதமே பரவியிருந்தது, அதில் எல்லோரும் கவனமாயிருந்தார்கள் பிறருடையசுகதுக்கங்களைத்தன்னுடையது போலவே கருதிவந்தார்கள். அப் பொழுது உலகத்தில் சுகமிருந்தது. இப்பொழுது பலவேறுமதங்களினுலே துக்கமும் விரோதமும் விருத்தியாகின்றன. இதை நிவாரணஞ்செய்வது புத்திமான்களினுடைய வேலையாகும். பரமாத்மா எல்லோருடைய மனதிலும் சத்தியசமத்தினுடைய சிறிய விதையை விதைக்கட்டும். எதனுல் பொய்மதம் சீக்கிரம் மூழ்கிப் போகுமோ அதில் சகல புத்திமான்களும் கலந்து விரோத பாவத்தை விட்டு ஆனந்தத்தை விருத்திசெய்யட்டும்.

ஆசாரம்—விரும்பத்தகுந்தது தகாதது. ஆகாரம் வேண்டியது விலக்கப் படவேண்டியது இவைகளைப்பற்றி இவ்வளவோடு நிறுத்திக்கொள்வோம்.

இப்பத்தாவது அத்தியாயத்துடன் இந்நூலின் முதற்பாகம் முடிவைப் பெறுகிறது. இதுவரை நாம் பிறமதங்களையும், அவைகளின் பொய்யான கொள்கைகளையும் பற்றி விவகரிக்கவில்லை. ஏனென்ருல் சத்திய சாத்திரங் களின் உட்பொருள்களைச்சரியே அறியாதவர்கள், பிறமத வாதங்களைப்பற்றின கண்டனங்களைப்போதியவாறு அறிந்து அனுபவிக்க முடியாதவர்களாவார்கள். எனவே இம் முதல்புத்தகத்தில் சத்திய சாத்திரங்களின் உண்மைகளை எடுத்து விரித்து வந்தோம். இம்முதல் புத்தகத்தைச் சரியே படித்து உட் கருத்தை அறிந்த பின்னரே இனி அடுத்த புத்தகத்தில் எடுத்துக்கொள்ளும் பிறமதவாதங்களை நன்கு அறியக்கூடும்.

இனி வெளியிடப்படும் இரண்டாவது புத்தகத்தில் இந்தியாவின் கண் உள்ள புத்தமதம், ஜயினமதம் இவைகளைப்பற்றியும், பிறகு இஸ்லாம் மதம் கிறுஸ்துவமதம் இவைகளைப்பற்றியும் எடுத்துக் கொண்டுபேசுவோம். கடைசி அத்தியாயத்தில் பொதுவுரையாகச் சில வார்த்தைகள் சொல்லப்படும். விருப்பு, வெறுப்பு என்னும் பேய்களின் வயப்படாது மனதை நிஷ்களங்கமாய் வைத்துக்கொண்டு ஒருவன் இப்புத்தகத்தைப் படித்து உண்மையை அறிய விரும்புவானேயானுல் அவனது உள்ளத்தில் உண்மை ஒளிவீசத்துவக்கும். இல்லையேல் உண்மைப் புலனுகாது. ஒளியினிடத்தை இருளே கொள்ளும். உண்மைப்பொருளைத்தேடி அடைவதும், உண்மையற்றதை தள்ளுவதுமே பெரியோரின் கடமையாகும். உண்மைப்பொருள் அறிந்தோரே அமரநிலை பெறுகின்றனர். அவர்களது உள்ளத்தில் பரிபூரண இன்பம் மலருகிறது.

அவ்வின்பத்தை அடைதலே மனிதஜாதியின் கடமை. அக்கடமையை செலுத்துபவனே அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நான்கு பெறுதற்கரிய பொருள்களைப்பெற்று ஜென்மவிடுதலைப் பெறுகின்றான்.

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று

முதற்பாகம் முற்றிற்று.